பி. இரயாகரன்



# ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும்

www.tamilarangam.net

# ஆணாதிக்கமும் சக ஒடுக்குமுறைகளும்

(ஆணாதிக்கமும் பெண்ணியமும் என்ற நூலின் இரண்டாம் பாகம்)

## பி. இரயாகரன்

**கீழைக்காற்று வெளியீட்டகம்**
10, அவுலியா சாகிபு தெரு
எல்லீசு சாலை
சென்னை - 600 002
தொ.பே. 044 - 8412367.

கீழைக்காற்று வெளியீட்டு எண் : 19

நூல் : ஆணாதிக்கமும் சக ஒடுக்குமுறைகளும்

ஆசிரியர் : பி. இரயாகரன்

உரிமை : ம பி. இரயாகரன்

விமர்சனங்களுக்கு : P. RAYAKARAN
32, RUE TROUILLET DEREL
92600 ASNIERES SUR - SEINE
FRANCE.
Website: www.tamilcircle.net
email: rayakaran@aol.com

முதல் பதிப்பு : ஆகஸ்டு -2002

அச்சாக்கம் : எழில் பிரிண்ட்ஸ்
சென்னை - 600 024
✆ : 044-4835887.

விலை : ரூ. 120.00

நூலாக்க விபரம் : 1/8 டெம்மி
368 பக்கங்கள்
23 பாரங்கள்
10 புள்ளி எழுத்து
21 கி.கி. மேப் லித்தோ

வெளியிடுவோர் : கீழைக்காற்று வெளியீட்டகம்
10, ஔலியா சாகிபு தெரு
எல்லீசு சாலை
சென்னை - 600 002
✆ : 044-8412367
email: keezhaikatru@hotmail.com.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| வ. எண் | தலைப்புகள் | ப. எண் |
|---|---|---|
| 1. | உலகமயமாதலில் பெண்களின் நிலைகள் | 005 |
| 2. | மேற்கில் பெண்கள் | |
| 3. | மேற்கு அல்லாத பெண்கள் | |
| 4. | இயற்கையும் ஆணாதிக்கமும் | |
| 5. | பெண்ணின் அதிகரிக்கும் வேலைப் பளுவுடன் கூடிய வறுமை | |
| 6. | ஆணாதிக்கச் சாமத்தியச் சடங்கும் - மனிதனின் அறியாமைகளும் | |
| 7. | பெண்களின் கற்புரிமையைப் பாதுகாக்கும் போராட்டத்தில் உருவகமான ஆணாதிக்கக் கற்பு என்ற அடித்தளத்தைத் தகர்ப்பது எப்படி? | |
| 8. | இலங்கைப் பெண்களின் துயரங்களும் - போராட்டங்களும் | |
| 9. | விடுதலைப் புலிகளில் ஆயுதமேந்திய பெண்கள் - பெண் விடுதலையைச் சாதிப்பார்களா? | |
| 10. | பொழுது போக்கு ஊடகங்களின் வழியில் ஆணாதிக்கம் | |
| 11. | ஓரினச் சேர்க்கை - பெண் விடுதலைத் தத்துவமா? | |
| 12. | பெண்கள் கோருவது வரைமுறையற்ற புணர்ச்சியை அல்ல... வாழும் உரிமை மீதான சுயநிர்ணயத்தையே! | |
| 13. | ஆணாதிக்கத்துக்கு எதிராகக் கிராமியப் பெண்கள் | |
| 14. | கிழக்கு இலங்கை நாட்டுப்புறப் பாடல்களில் ஆணாதிக்கம் | |
| 15. | உலகளாவிய ரீதியில் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளும் - ஆணாதிக்கக் கொடூரத்தின் விளைவுகளும்: புள்ளி விபரங்களுடன் | |
| 16. | ஆணாதிக்க ஜனநாயகத்தில் கற்பழிப்புகள் | |
| 17. | பெண்கள் மீதான ஆணாதிக்க வன்முறைகள் | |
| 18. | வியாபாரமாக நடக்கும் திருமணங்களில் வரதட்சணைக் கொலைகள் | |
| 19. | நுகர்வுகளுக்காகத் தொடரும் சுதந்திரப் பாலியல் விற்பனைகள் | |
| 20. | விபச்சாரங்களாகும் அழகுகள் | |
| 21. | சந்தைப் பொருள்களாகும் விந்துக்களும் - குழந்தைகளும் | |
| 22. | கடத்திச் செல்லப்படும் பெண்கள் | |
| 23. | பெண்களின் கற்புரிமைகளை ஏமாற்றி நுகர்வது | |
| 24. | ஆண்களின் பலதார மணத்தைப் பூர்த்தி செய்ய உருவான விபச்சாரங்கள் | |
| 25. | சாமத்திய சடங்கு ஊடான கலாச்சாரங்களும் - விபச்சாரங்களும் | |
| 26. | பாலியல் தெரிவுகளும் - வாழ்க்கையும் | |
| 27. | இயல்பான புணர்ச்சித் தெரிவுகள் | |
| 28. | பாலியல் நெருக்கடிகள் | |
| 29. | கர்ப்பத் தடைகள் | |
| 30. | கரு அழிப்புகள் | |
| 31. | சிறுமிகளின் கரு அழிப்புகள் | |
| 32. | சிசுக் கொலைகள் | |
| 33. | விவாகரத்துகள் | |
| 34. | திருமணங்கள் | |
| 35. | திருமணங்களுக்கு வெளியில் வாழ்தலும் - குழந்தைகளின் பிறப்புகளும் | |
| 36. | அலிகள் | |
| 37. | தத்தெடுப்புகள் | |
| 38. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைகள் | |


## பதிப்பாளர் குறிப்பு

www.tamilarangam.net







# 1. உலகமயமாதலில் பெண்களின் நிலைகள்

இன்றைய உலகில் பெண்கள் எப்படி உள்ளனர்? என்ற விவாதம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. மனிதனின் ஒவ்வொரு மாற்றமும் இயற்கையைச் சார்ந்து இருந்த போக்கில், மனிதனின் உழைப்பை ஒட்டி இயற்கையும் பாரிய மாற்றத்தைக் கண்டது. இம் மாற்றம் என்பது மாறிவந்த ஒவ்வொரு பொருளாதார மாற்றத்துடனும் தீவிரப்பட்டது. உடலியல் கூறுகளின் செயற்பாடுகள் ஒருபுறம் நிகழ்ந்தன. இயற்கையும், இயற்கை மீது மனித உழைப்பைத் தொடங்கிய போதும் மாற்றம் மேலும் தீவிரமடைந்தது.

இது மனிதனின் உழைப்பை மேலும் உயர்ந்த கட்டத்துக்கு வளர்த்த போது, அதையொட்டிய சிந்தனைகள் மாறிச் சென்றன. பொருள் உற்பத்தியில் புதிய உழைப்பு மீதான வளர்ச்சியை ஒட்டி உபரி அதிகரிக்க, உபரியானது மனிதச் சிந்தனையையும், மனிதனையும் அடிமைப்படுத்தியது. உற்பத்தியில் உபரியானது மனிதனுக்கு அதிகாரத்தையும, சொகுசு வாழ்க்கையையும ஏற்படுத்தியது. உபரியை அதிகமாகக் கொண்டவன் அதிகமான சொகுசுக்கும், அதிகாரத்துக்கும் உள்ளாகி மற்றவனைச் சிறுமைப்படுத்தினான். பொருளை உற்பத்தி செய்த மனித உழைப்பினை அடிமைப்படுத்தும் வடிவம் உற்பத்தி உறவில் தோற்றம் கண்டது. இதன் வளர்ச்சியில் அந்தச் சொகுசை, அதிகாரத்தை வழங்கிய உபரி உழைப்பின் உரிமையை உழைப்பில் பங்கு பற்றியவனுக்கு (உழைத்தவனுக்கு) மறுக்க, தனிச் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்ட சிந்தனை தோற்றம் கண்டது. இதுதான் பெண்ணை அடிமையாக்கி, தனக்குரிய வாரிசுகளை உருவாக்க இணைமணத்தைச் சிதைத்து, ஒருதாரமணத்தைப் பெண்ணுக்கு மட்டும் திணித்தது.

இந்த ஒருதாரமணம் சார்ந்த குடும்ப அமைப்பு கூட்டுக் குடும்பத்துக்குள் கொண்டிருந்த காலத்தில் நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பு ஆதாரமாகயிருந்தது. நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு எதிரான முதலாளித்துவ அமைப்பு, கூட்டுக்குடும்ப அமைப்பைத் தகர்த்து ஒற்றைக் குடும்ப அமைப்பை உருவாக்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலாளித்துவப் புரட்சி நடக்காத நாடுகளிலும் இதன் பாதிப்புகள் ஏற்பட்டதுடன் இரட்டை வடிவக் குடும்பங்கள் நீடித்தன, நீடிக்கின்றன.

இந்த நிலையில் தான் உலகமயமாதல் தீவிரமடைந்துள்ளது. இந்த **உலகமயமாதல் பொருளாதார அமைப்பில் என்ன செய்கின்றது?** எனப் பார்ப்போம். ஆரம்பத்தில், வரையறைக்குட்பட்ட தொடர்ச்சியில் தனக்குச் சேவை செய்யும் தரகு முதலாளித்துவ வர்க்கத்தை இந்தியா போன்ற காலனிய, அரைக்காலனிய நாடுகளில் உருவாக்கியது. இந்த வர்க்கம் தேசிய முதலாளித்துவத்தை நசுக்கிய அதே நேரம், தேசிய உற்பத்தியை விபச்சாரம் செய்யத் தூண்டியது. இதற்குத் துணையாக நிலப்பிரபுத்துவ வர்க்கத்தைத் துணைக்கு வைத்திருந்தது. ஏனெனின் தேசிய உற்பத்தியானது எல்லை கடந்த ஏகாதிபத்திய உற்பத்திக்கும், சுரண்டலுக்கும் எதிராக இருந்தது. (இதைத்தான் ஏகாதிபத்தியக் கோட்பாட்டாளர்கள் கற்பிதம் என்கின்றனர்.) மேலும்தேசிய உற்பத்தியானது ஏகாதிபத்திய வருகையைத் தடைசெய்யத் தேவையான பலத்தைக் கொடுப்பதற்குத் தடையாக இருந்த நிலப்பிரபுத்துவத்துடன் முரண்பட்டது. இந்த வகையில் தேசிய முதலாளித்துவத்துக்கு எதிரான இரு கூட்டாளிகளும்(ஏகாதிபத்தியமும், நிலப்பிரத்துவமும்) கைகோர்த்துக் கொண்டு ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை மேலும் ஒடுக்கினர்.

இந்தப் பொருளாதாரக் கட்டமைப்பு குடும்ப அமைப்பையும் பாதித்தது,பாதிக்கிறது. எல்லை கடந்த தலையீட்டையும், தேசிய பாதுகாப்புக்கு எதிரான உள்ளூர் வடிவத்தையும் எதிர்த்து தேசிய முதலாளித்துவ வர்க்கம் போராடியது. ஏகாதிபத்தியம் எல்லை கடந்த சுரண்டல் பண்பாட்டைப் பின்பற்றி, தனிக் குடும்ப வடிவத்தில் இருந்து சீரழிந்த பண்பாட்டுச் சிதைவில் மற்ற குடும்பத்துக்குள் அத்து மீறுகின்றது. அதே நேரம் கூட்டுக் குடும்பம் பாலியல் சுதந்திரத்துக்குத் (மூலதனத் திரட்டலுக்குரிய தேசியக் கண்ணோட்டத்தில்) தடையான குடும்ப ஜனநாயக மறுப்பை அடிப்படையாகக் கொண்ட தனிக் குடும்பங்கள், தனிக்குடித்தனத்தை அடிப்படையாகக் கொண்டு உருவானது, உருவாகின்றது. இது சொந்தக் காலில் நிற்கமுடியாது (தேசிய முதலாளித்துவம் போல்) சிதைகின்றது.

உலகமயமாதல் தீவிரமடைந்துள்ள நிலையில் தரகு முதலாளித்துவ வர்க்கம் அவசியமற்றதாகின்றது. மாறாகத் தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் நேரடியான தலையீடுகளின் மூலம் தேசங்களைச் சிதைக்கின்றது. இதனால் நிலப்பிரபுத்துவ வர்க்கம் அவசியமற்றதாகின்றது. இதற்குப் பதிலாகத் தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்களும், பண்ணை விவசாயமும் ஆக்கிரமித்தது, ஆக்கிரமிக்கின்றது.

இதன் போது குடும்பமும் புதிய சிதைவுகளைச் சந்திக்கின்றது. ஊசலாடிக் கொண்டிருந்த தனிக் குடும்பமும், கூட்டுக் குடும்பமும் நீடிக்க முடியாத நிலையை அடைந்துள்ளது.





ஏகாதிபத்திய நாடுகளில் குடும்பம் என்பது ஒருதாரமண எல்லைக்குள் பலதாரமணம் என்பதாக உருவாகியுள்ளது. அதாவது ஓர் ஆணும் ஒரு பெண்ணும் வாழும் எல்லைக்குள் ஒரு தாரமணமும், அடுத்து, பிற உறவுகள் அனுமதிக்கப்பட்டுப் (விபச்சார எல்லையில்) பலதாரமணமாகவும் பால் வேறுபாடின்றி தொடர்கின்றது. திருமணம் செய்தாலும், செய்யா விட்டாலும் இதுவே பொதுவான தன்மையாக இருக்கிறது. இது ஏற்பட ஏகாதிபத்தியம் எல்லை கடந்த சூறையாடலைப் பலாத்காரத்துடனும், மூலதன ஆதிக்க ஜனநாயக வடிவிலும் தொடருகின்றது. பொதுவான அங்கீகாரத்தை மக்கள் அனுமதிக்கும் போக்கில் ஐரோப்பியக் குடும்பங்கள் தம்மைத் தாம் மீள ஒழுங்கமைத்துக் கொண்டபோது பலதாரமணம் ஒருதாரமணத்துக்குள் ஜனநாயக வடிவில் (இந்த ஜனநாயகம் வர்க்கப் போராட்டம் தீவிரமடையும் போது எப்படி பாசிசத்தை அடிப்படையாகக் கொண்டதோ அதுபோல்) அங்கீகாரமாகியது. இது மறுகோணத்தில் ஜனநாயகத்தின் கடைக்கோடியான ஊழல், காடைத்தனம்... போன்ற சாக்கடையாக விபச்சாரம் செய்கின்றதுபோல் பாலியலில் விபச்சாரத்தை ஜனநாயகமாக்குகின்றது. அதேநேரம் சொந்த நாட்டின் தேசியத் தன்மையைப் பாதுகாப்பதும் ஒருதாரமணத்தின் எல்லையாக உள்ளது.

ஒருதாரமணம் ஏகாதிபத்திய வடிவமாகவும், தேசிய வடிவமாகவும் பொருளாதார எல்லைக்குள் கட்டமைக்கப்படுகின்றது. ஏகாதிபத்தியம் எல்லை கடந்து சூறையாடும் போது தனக்குள் தேசிய வடிவத்தையும், சூறையாடும் எல்லை கடந்த வடிவத்தையும் (பாலியலில் குடும்பத்துக்குள்ளான பாலியலும், விபச்சாரப் பாலியலும்) கொண்டு உள்ளது. இதற்கு ஆதாரமாக இவை ஏகாதிபத்தியக் குடும்பத்திலும் பிரதிபலிக்கின்றது. பன்னாட்டு நிறுவனங்கள் எல்லை கடந்து இணையும் போது புதிய சுரண்டும் குடும்ப இணைவும் (விபச்சாரவழி நுகர்வுப் பாலியல்), மரபான குடும்பச் சிதைவையும் அடிப்படையாகக் கொள்கின்றது. இது குடும்பமல்லாத பாலியலை அடிப்படையாக்குகின்றது. இதில் இருந்து பாட்டாளி வர்க்கக் குடும்பம், குடும்பம் அல்லாத கண்ணோட்டத்திலும் இருந்து மீளத் தகவமைகின்றது.

ஏகாதிபத்தியமல்லாத நாடுகளில் தேசியம் குடும்பத்தை, கூட்டுக் குடும்பம் மற்றும் பலதாரக் (விபச்சாரக்) குடும்பத்துக்கு மாற்றாக முன்நிறுத்துகின்றது. இது தேசிய முதலாளித்துவத்தின் நீடிப்பு வரை தனிக் குடும்பங்கள் ஆதாரமாகின்றது. இதில் இருந்தும் பாட்டாளி வர்க்கக் குடும்பம் தகவமைகின்றது.

பாட்டாளிவர்க்கம் மட்டுமே தேசிய முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் பொருளாதார வர்க்கப் போராட்ட வடிவமாக இருப்பதால், குடும்பத்தின் பாதுகாப்புக்குக் குரல் கொடுக்கின்றது. கூட்டுக் குடும்பத்திலும், தனிக் குடும்பத்திலும் ஜனநாயகத்தைக் கோரியும், விபச்சார வடிவில் பாலியல் அன்பு, காதல் ஆகியவற்றைச் சிதைப்பதை எதிர்த்தும், குடும்பத்தை மாற்றியமைப்பதன் ஊடாக நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்தியப் பாலியல் வடிவத்துக்கு மாற்றாகக் குடும்பத்தை முன்நிறுத்துகின்றது. இங்கு குடும்பத்தில் கோரும் **ஜனநாயகம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆண் பெண்ணின் இணைமணத்தை அடிப்படையாகக் கொண்டும், ஒருதாரமணத்தில் ஏற்படும் முரண்பாட்டில் சுயநிர்ணயத்தை அடிப்படையாகக் கொண்டும் விவாகரத்தை முன் வைக்கின்றது. இந்தக் குடும்பம் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பைத் தனது பாலியலில் கொண்டு ஆதாரமாகின்றது. மேற்கில் திருமணத்துக்குள்ளும், வெளியிலும் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட இணைமணத்தைப் பாட்டாளி வர்க்கம் ஆதாரமாகக் கொள்கின்றது. இங்கு ஜனநாயக விபச்சாரத்தை எதிர்த்து ஐக்கியத்தை முன்நிறுத்துகின்றது. இங்கு **சுயநிர்ணயம்** என்பது ஐக்கியத்தை ஆதாரமாகக் கொள்கின்றது.

**எப்போதும் பாட்டாளி வர்க்கம் இணைமணத்தை முன்நிறுத்துகின்றது.** இந்த இணைமணத்தில் மறுக்கப்படும் ஜனநாயகத்தை எதிர்த்து விவாகரத்தையும், இணைமணத்தில் ஜனநாயகம் விபச்சாரத்தைச் செய்யும் போது ஐக்கியத்தையும் முன்நிறுத்துகின்றது.

ஏகாதிபத்தியமல்லாத நாடுகள் மீதான ஏகாதிபத்தியப் பொருளாதார ஊடுருவல் ஆக்கிரமிப்பு என்பது, தேசம் என்ற வடிவத்துக்குள் ஊடுருவிய போது மறுதளத்தில் எதிர்ப்பற்ற விபச்சாரத்தை அனுமதித்தது.

இந்தப் போக்கு குடும்ப அமைப்பிலும் உருவாகியுள்ளது, உருவாகின்றது. இதில் இருந்தே தனிக் குடும்பம், கூட்டுக் குடும்பம் ஆகியவை தனது ஒருதாரமண எல்லைக்குள் இருந்தபடி சிதைந்து வருகின்றது. இது ஏகாதிபத்தியக் குடும்ப வடிவங்களில் இருந்து வேறுபட்டுள்ளது. ஏகாதிபத்தியக் குடும்பத்தில் ஒருதாரமணம் என்பது பலதாரமணமாகச் சூறையாடும் அங்கீகாரத்தில் இருந்து உருவானது. இது மற்ற நாடுகளில் சூறையாட அனுமதிக்கும் விபச்சாரத்தில் இருந்து உருவானது. இதன் பொதுப் பண்பும், விளைவும் ஒன்றாக இருந்த போதும், குடும்ப வடிவத் தெரிவுகள் ஒன்றாக இருந்த போதும், இதன் வேறுபட்ட பொருளாதாரத் தன்மைகள் வேறுபட்ட சீரழிவுகளுக்கு இட்டுச் செல்கின்றது.

ஏகாதிபத்திய நாடுகளின் சீரழிவு பொதுவாக நாடு தழுவிய வடிவில் இருக்கும் போது, மற்ற நாடுகளில் மேல் மட்டத்தில் இது காணப்படுகின்றது. கீழ் மட்டம் அதை நோக்கி எதிர்ப்பு இன்றி இருக்கும் போது விபச்சார நிலைக்கு மேலும் சீரழிகின்றது. ஏகாதிபத்திய நாட்டில் நுகர்வு அடிப்படையில் பரந்துபட்ட மக்களிடம் தேவையை ஒட்டிப் பொதுவானதாக இருக்கும் போது, ஆண் பெண்ணை நோக்கிய நுகர்வு பொதுத் தன்மையில் கோருகின்றது. ஆனால் மற்ற நாடுகளில் நுகர்வு பரந்துபட்ட மக்களின் தேவையை மறுத்து நுகரும் போது, ஆண் பெண்ணை நோக்கிய நுகர்வு ஏமாற்று, மோசடி ஊடாகச் சூறையாடுவதன் மூலம் நிகழ்கின்றது. அதாவது ஏகாதிபத்தியம் மற்ற நாடுகளைச் சுரண்டி, சொந்தத் தொழிலாளர் வர்க்கத்துக்குச் சலுகைகள் வழங்கி தன்னைப் பாதுகாக்கின்றது. இதனால் மற்ற நாட்டுத் தொழிலாளர் வர்க்கம் நசிவுறுகின்றது. இது பாலியலில் அதையொட்டிய வடிவில் தேவைக்குள்ளும், தேவை மறுப்பிலும் ஊடுருவும் போது பாலியல் விளைவுகள் வேறுபடுகின்றது.





இந்தப் பொருளாதார வடிவம் என்பது பண்பாட்டுக் கலாச்சார வடிவத்தில் ஆழமாக ஊடுருவுகின்றது. ஏகாதிபத்தியப் பொருளாதாரப் பலம் என்பது, அதன் பண்பாட்டுக் கலாச்சாரம் என்பது ஆழமாக எல்லை கடந்து செல்லுகின்றது. இந்தப் பண்பாட்டுக் கலாச்சாரம் என்பது மற்ற நாடுகளின் எல்லையைக் கடந்து, தனிமனிதனைச் சுரண்டவும், அந்த உரிமையைக் கோரும் வகையிலும் ஏகாதிபத்தியம் நியாயப்படுத்தி ஊடுருவுகின்றது.

இந்தப் பண்பாட்டுக் கலாச்சார அம்சங்கள் பெண்ணையும் உள்ளடக்கி வரும் அதே நேரம், ஆண் பெண்ணை அனுபவிக்கும் ஒருதாரமணத்தில் பலதாரமணத்தையும், அதில் விபச்சாரத்தையும் உள்ளடக்கியே நியாயப்படுத்தப்படுகின்றது. இதை ஏற்றுக் கொள்ளும் நிலையில் உலகமயமாதல் உள்ள போது பெண்ணின் நிலை மேலும் தரம் தாழ்ந்துள்ளது. ஒருதாரமணத்தில் பலதாரமணத்தைப் பெண் அடைகின்ற அதே நேரம், இது விபச்சாரக் கட்டத்துக்குத் தரம் தாழ்ந்தும் பெண் மேலும் நுகர்வுப் பண்டமாக மாறி விடுகின்றாள், மாறிவிட்டாள்.

ஏகாதிபத்திய உலகமயமாதல் உற்பத்தியைத் தேவையில் இருந்து மேலும் அன்னியப்படுத்தி நுகர்வுக்குள் பொருட்களை நகர்த்தி பண்பாட்டுக் கலாச்சாரத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், ஆண் பெண் உறவும் தேவைக்குப் பதில் நுகர்வுக்குள் மாறிவிட்டது. ஒருதாரமணத்தில் தேவைக்குள் இருந்த கொஞ்ச நஞ்ச உணர்வுகளையும் பலதாரமணம் நுகர்வுக்குள் சீரழித்துள்ளது.

நுகர்வின் எல்லை என்பது முடிவற்ற வேட்கையால் உந்தப்படுவது போல், பாலியல் நுகர்வு மனிதனை அலைக்கழிக்கின்றது. தேவையின் உறவுக்குள் இருந்த திருப்தி என்பது அழிக்கப்பட்டு, நுகர்வுக்குள் திருப்தியற்ற அதிருப்திகளை உருவாக்கியுள்ளது. இது குடும்பச் சிதைவுகளைச் சீரழிவின் வழிகளில் எல்லையின்றி வழிகாட்டுகின்றது. தேவை அதையொட்டிய திருப்தி என்பது உலகமயமாதலில் வரையறுக்க முடியாதது போல், குடும்பத்தின் பாலியல் சிதைந்துள்ளது. இது மனித உளவியலைச் சிதைத்துள்ளது. உளவியல் ரீதியாகச் சிதைந்து போன, போகின்ற மனிதனின் பண்பாடுகள், கலாச்சாரங்கள், முடிவுகள், சிந்தனைகள் விகாரமாகின்றது. சமூகத்தின் இயற்கையின் தன்மையை ஆராய மறுக்கும் போது இதை ஆதாரமாகக் கொண்டு கோட்பாடுகள் உருவாகின்றன. விடுதலையை இதில் இருந்து தேடுவது அதிகரிக்கின்றது. இன்று பெண்ணிய விடுதலையை இதற்குள் தீர்த்துக் கொள்ள பெண்ணை ஆணாதிக்க மயமாக்குவது அதிகரிக்கின்றது. இது பாட்டாளி வர்க்கத்தை எதிர்த்து தன்னை நிலைநிறுத்துகின்றது. இதை எதிர்த்த வர்க்கப் போராட்டத்தில் இக்கோட்பாடுகள், நடைமுறைகள் அனைத்தும் ஆணாதிக்கத்துக்கு எதிரானது என்ற வகையில் பாட்டாளி வர்க்கம் மட்டுமே பெண்ணியமாகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 2. மேற்கில் பெண்கள்

நவீனத்துவத்தின் வேகமான வளர்ச்சி பெண்ணின் மீதான நிலப்பிரபுத்துவ அடிமைத்தனத்தை விடுவித்தது. நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கம் பெண்ணைப் பொருளாதார ரீதியில் ஆணை எதிர்பார்த்து உருவாக்கிய பண்பாட்டுக் கலாச்சார அடிமைத்தனத்தை முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சியில் தகர்ப்பது அவசியமாக்கியது. முதலாளித்துவ வளர்ச்சி நிலப்பிரபுத்துவச் சிதைவுகள் மீது கட்டப்பட்டது. பெண் வீட்டுக்கு வெளியில் சென்று பொருளாதார ரீதியில் கூலி பெறும் உழைப்பாளியாக மாறிய வரலாற்று வளர்ச்சி என்பது, ஆணின் பொருளாதாரத்தை ஒட்டிப் பெண் சிந்திக்கும் போக்குக்கு முடிவு கட்டியது.

திருமணத்தில் ஆணைச் சார்ந்து பெண் பொருளாதார ரீதியில் நீடித்த குடும்ப வடிவம் மாற்றம் கண்டது. இங்கும் ஓர் அடிப்படைத் திரிபு இன்று விதிவிலக்கின்றி உலவுகின்றது. அதாவது பொருளாதார ரீதியில் பெண் சுதந்திரமடைந்தால் அவள் விடுதலை அடைந்து விடுவாள் என்று **மார்க்சியம்** விதிந்துரைத்ததாகவும், பெண் பொருளாதார ரீதியில் சுதந்திரம் அடைந்தும் விடுதலை அடையவில்லை என எல்லா மார்க்சிய எதிர் பெண்ணியல்வாதிகள் தங்களை நியாயப்படுத்துகின்றனர். இது அப்பட்டமாக மார்க்சியத்தைத் திரித்த **பொருளாதார வாதம்** ஆகும். அத்துடன் **அராஜகவாதம்** ஆகும்.

மார்க்சியம் பெண்ணின் சுதந்திரமான சிந்தனைக்கும், ஆணில் இருந்து வெளிவர பெண்ணின் உழைப்பு பொருளாதார ரீதியில் அங்கீகாரம் பெறுவதையும், பெண் வீட்டுக்கு வெளியில் வருவதையும் முன் நிபந்தனையாக வைத்தது. இதுவே பெண்ணை விடுவிக்கும் என்று வைத்ததில்லை. இவற்றையே பெண்ணின் விடுதலைக்கு முன்நிபந்தனையாக்கியது என்று திரித்துக் காட்டப்படும் எல்லாக் கருத்துகளின் பின்பும் மார்க்சிய எதிர்ப்பு வெளிப்படுவதைக் காணமுடியும். இதை முன்னிறுத்தும் சில பிரிவுகள் வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டவராகவும் இருக்கின்றனர். மார்க்சியம் இதை எல்லாத் துறையிலும் காலாகாலமாக எதிர்த்துப் போராடி வந்தது, வருகின்றது.

பொருளாதார ரீதியில் நவீனத்துவ உற்பத்திமுறை பெண்ணை வீட்டுக்கு வெளியில் இட்டுச் சென்று கூலி பெறும் உழைப்பாளியாக மாற்றியது என்பது பெண் விடுதலையின் அக்கறையின்பால் அல்ல.





மாறாக முதலாளித்துவ உற்பத்திக்கும், அதன் வளர்ச்சிக்கும் **பெண்களின் மலிவு உழைப்பு** சார்ந்த பங்களிப்பு அவசியமாகியது. இன்றைய நவீனச் சமுதாயத்தின் வளர்ச்சியில் பெண்ணின் பங்களிப்பு என்பது நிபந்தனையாகி, வளர்ச்சியின் ஆதாரமாக்கியது. இவை பண்பாட்டு ரீதியில், கலாச்சார ரீதியில் ஏற்றுக் கொள்ள இன்றைய மேற்குச் சமூகங்கள் மறுத்த போதும், இதுவே எதார்த்தமாக இருந்தது.

பெண்ணின் கூலி பொருளாதார ரீதியாக ஆணைச் சார்ந்து இருப்பதை முடிவுக்குக் கொண்டு வந்தது. ஆணின் பொருளாதார ரீதியான ஆதிக்கம் என்பது தகரத் தொடங்கியது. இது பல வேதனையான இழுபறியுடனும், போராட்டத்துடனும்தான் வளர்ச்சி பெற்றது. ஆரம்பத்தில் பெண்ணின் கூலி என்பது ஆணுக்குச் சொந்தமாக இருந்தது. அதை ஆண் தீர்மானிப்பவனாக இருந்தான். பின்னால் பெண் தனது கூலி மீதான உரிமையைக் கோரியபோது, ஆணும் பெண்ணும் சேர்ந்து அல்லது ஆணின் வரையறுக்கப்பட்ட அதிகாரத்துக்குள் தனது கூலியின் உரிமையைப் பெற முடிந்தது.

பிரான்சில் ஒரு பெண் தனது சொந்த உழைப்பு சார்ந்த கூலியை வங்கியில் போட, தனக்காகத் தனித்து வங்கிக் கணக்கைப் பெண் திறக்க முடியாமல் இருந்தது. கி.பி.1970-களில்தான் பெண் தனித்து வங்கியில் கணக்கு வைத்திருக்கும் உரிமையைப் பெற்றாள். பெண்ணின் உழைப்பையும், கூலியையும் கூட நவீன முதலாளித்துவ ஜனநாயகம் அங்கீகரிப்பதில் தயாராக இருக்கவில்லை பெண்ணின் போராட்டம்தான், தனது கூலிக்குக் கூட ஆணாதிக்கத்திடமிருந்து விடுதலையைப் பெற்றுத் தந்தது. ஆனால் பெண் கூலியைத் தனது சொந்தக் கட்டுபாட்டுக்குள் கொண்டுவந்த அதே நேரம், அதைப் பயன்படுத்துவதில் ஆணாதிக்க எல்லைக்குள் நீடிக்கின்றாள். இங்கு தனிப்பட்ட ஆண் இதைத் தீர்மானிக்கவில்லை. மாறாக ஆணாதிக்கச் சமூக அமைப்பு தனக்குள், அதன் பண்பாட்டுக்குள் செலவு செய்ய கட்டாயப்படுத்துகின்றது. இது ஒருபுறம் இருக்க மறுதளத்தில் பெண் தனது கூலியின் உரிமையைக் கொண்டு பண்பாட்டு ரீதியாக, ஆணாதிக்கச் சீரழிவில் இறங்குவது அதிகரிக்கின்றது.

நிலப்பிரபுத்துவ வடிவத்தில் நிலவிவந்த ஆணாதிக்கத் தொடர்ச்சி, முதலாளித்துவச் சமுதாயத்தில் பண்பாட்டுக் கலாச்சார வடிவில் பெண்ணை அடிமைப்படுத்தியது. பெண்ணின் கூலியைக் கூட அவள் அனுபவிக்க அனுமதிப்பது, தனிப்பட்ட ஆண்களை விட முதலாளித்துவ அமைப்பின் அதிகாரத்துக்குச் சவால் விடுபவையாக இருந்தது.

ஆணாதிக்க வரலாற்றில் பெண்ணின் உழைப்பு கூலியற்ற இலவசமான உழைப்பாக இருந்த சமூகக் கண்ணோட்டத்தில், ஆண் சார்ந்த சுரண்டல் வடிவமும் அதையொட்டிய அமைப்பும் தகர்கின்ற போக்கு சுரண்டல் அமைப்பையே தகர்த்துவிடும் என்பது எதார்த்தமாக இருந்தது. பெண் உழைப்பும், அதன் கூலிக்குப் பெண் பெறும் உரிமை என்பது ஆணாதிக்கச் சுரண்டல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமுதாயத்திடம் ஆணைப் போல் கூலி உயர்வும், ஆணைப் போல் உழைப்பில் சமக் கூலி கேட்பதும், ஆணைப்போல் புரட்சியைச் சிந்திப்பதும் இந்தச் சுரண்டல் முதலாளித்துவ அமைப்புக்கு ஆபத்தானதாக இருந்தது. பெண்ணின் சுயேட்சையான அங்கீகாரம் தனிப்பட்ட ஆணைவிட ஆணாதிக்கச் சுரண்டல் சமுதாயத்தையே பீதிக்குள்ளாக்கியது.

இந்த நிலையில் பெண்ணின் உழைப்புக்கும், கூலிக்கும் உரிமை கோரிய போராட்டம், தனிப்பட்ட ஆண் குடும்பத்துக்குள் இதை விட்டுக் கொடுத்த போது, இந்தப் போராட்டம் சமூக அமைப்பில் மேலும் தீவிரம் கண்டது. சட்டப்படியான உரிமையாகப் பெண்ணுக்கு முதலாளித்துவ அமைப்பு படிப்படியாகத் தன்னைப் பலப்படுத்தியபடி சலுகையாக ஆணாதிக்கத்திடம் விடுதலையாகக் கூறிக் கொடுத்த போது, அதை ஈடுகட்ட மற்ற நாடுகளை அதிகமாகச் சுரண்டுவதை முதலாளித்துவம் ஆதாரமாகக் கொண்டது.

பெண்ணின் உழைப்புக்குக் கிடைத்த கூலி இந்த முதலாளித்துவ அமைப்பில் பெண்ணின் உரிமையான போது, ஆணைப் போல் தனிச் சொத்துரிமையின் எல்லைக்குள் புதிய நெருக்கடியைக் கொண்டுவந்தது. **தனிச்சொத்துரிமை கூட்டு வாழ்க்கையின் எதிரி** என்பதால் ஆணும் - பெண்ணும் தனிச் சொத்துரிமையைத் தனித்தனியாகப் பெற்ற போது ஒருதாரமணக் குடும்பத்தின் வடிவம் தீவிரமான நெருக்கடியைச் சந்தித்தது. மரபான குடும்பத்தில் ஆணாதிக்கப் பொருளாதாரம் சார்ந்த தீர்மானகரமான ஆணின் பங்கை மறுத்து, பெண்ணும் தீர்மானகரமான பங்கைக் கோருவது தொடங்கியது. இது குடும்பத்தைச் சிதைப்பது அல்லது மீள அமைப்பது என இரு வடிவங்களையும் தீவிரமாக்கியது.

கி.பி.1970-களுக்குப் பின்னால் தீவிரமாகிய விவாகரத்தும், குடும்பத்துக்கு வெளியில் சேர்ந்து வாழ்தலும் (பகுதி இரண்டில் பார்க்கவும்: புள்ளிவிபரத்தை) பெண்ணின் கூலி மீதான உரிமையிலும், பெண்ணின் உழைப்பு மீதான மதிப்பிலும் உருவானது. அத்துடன் ஏகாதிபத்திய ஜனநாயக வடிவம் மேலும் ஆழப்படுத்தியது. இது எல்லை கடந்த சூறையாடலைச் சட்டவடிவமாக்கியது. கி.பி.1970-களுக்குப் பின்னால் தனிமனிதப் பொருளாதாரப் பண்பாட்டில் இந்த ஜனநாயகத்தைக் கோருவதும், அமுல்படுத்துவதும் அதிகரித்தபோது, குடும்பச் சிதைவுகள் அதன் விளைவாகி உற்பத்தியானது.

பெண்ணின் உழைப்புக்கு மதிப்பும், உரிமையும் தனிச்சொத்துரிமையின் வடிவில் கிடைத்த போது, அதற்கே உரிய குணாம்சத்துடன் இது சீரழிவுக்கு வழிவிட்டது. இந்தச் சீரழிவு காதல், அன்பு.... போன்றவற்றைக் கூட வியாபாரமாக்கிவிட்டது. குறைந்தபட்சம் நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தில் நீடித்த மனித விழுமியங்களைக் கூட தனிச் சொத்துரிமை பெண்ணிடம் இருந்து சூறையாடிவிட்டது. ஒருதாரமணத்தில் பெண் காதலிக்கவும், அன்பு செலுத்தவும் செய்த மனித விழுமியத்தை, நவீனத்துவம் தனிச்சொத்துரிமை வழியில் பெண்ணுக்குத் தவிர்க்கமுடியாது கூலி வழங்கிய போது, பெண் ஆணாதிக்கத்தின்





நிலைக்குள் தாழ்ந்து அன்பு, காதல் ஆகியவற்றைத் துறந்து ஆணைப்போல் சீரழிந்து போனாள்,போகின்றாள். ஆணாதிக்கம் எதை எல்லாம் மனிதனின் உன்னதமானவை எனப் பிரகடனம் செய்து இயற்கையையும், மனிதனையும் சூறையாடியதோ, அதை எல்லாம் பெண்ணினக் கோரிக்கையாகவும், உரிமையாகவும் அங்கீகரிப்பதன் மூலம், பெண்ணும் ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை பண்பாட்டுத் தளத்தில் ஆணைப் போல் சீரழிந்தாள்.

இது ஒருபுறம் நிகழ, மேற்கத்தியச் சமூகத்தில் உழைக்கும் மக்களுக்கிடையில் உள்ள இடைவெளி குறைந்து செல்வதன் மூலம், மக்கள் பொதுவாகவே சொத்துரிமையற்ற பரந்த வக்கற்ற கூட்டமாக மாறிவிட்டனர். சமூகத்தின் மிகக்குறைந்த ஒட்டுண்ணி வர்க்கமே சொத்துரிமை வர்க்கமாக மாறியதும், பரந்துபட்ட மக்கள் தமது சொத்துக்களை இழந்து போனதும் குடும்ப அமைப்பில் தீவிரமான மாற்றத்தை ஏற்படுத்தியது. சொத்துக்களின் வாரிசுகளை உருவாக்கிய ஒருதாரமணங்கள் சொத்தற்ற வர்க்கம் முன் அர்த்தமற்றதாகியது. இது பாரம்பரியக் குடும்ப அமைப்பை மறுதளத்தில் சிதைத்தது. இங்கும் கூட பாரம்பரியத் திருமணத்துக்கு வெளியில் சேர்ந்து வாழ்வதும், பிரிவதும் என்ற போக்கு உருவானது.

தனிச்சொத்துரிமை வடிவில் இருந்து பிளவும், வாழ்வும் ஏகாதிபத்தியப் பண்பாட்டால் நடக்க, சொத்துரிமை இழந்த வடிவின் கீழ் இருந்து உருவான பிளவும், வாழ்வும் எதிர் எதிர் தன்மையில் முரண்பட்ட சமூகப் பிளவை ஏற்படுத்தியுள்ளது. தனிச் சொத்துரிமையிலான குடும்பப் பிளவு மூலதனக் குவிப்பில் பிளவாகவும், சொத்துரிமையற்ற குடும்ப பிளவு மூலதனத்துக்கு எதிரான ஐக்கியத்திலும் வளர்ச்சி பெறுகின்றது. இங்கு தனிச்சொத்துரிமை ஆதிக்கக் கருத்தியலாக உள்ள நிலையில் குடும்பச் சீரழிவு என்பது விபச்சாரக் கட்டத்தில் வளர்ச்சி பெறுகின்றது.

ஆண் - பெண் இயற்கையின் தேர்வையும், கூடி வாழ்வதையும் மறுக்கும் தனிச்சொத்துரிமையால் விளையும் ஆணாதிக்கப் பண்பை, ஜனநாயகமாகப் பெண் கோரியபோது, பெண் ஆணாகத் தரம் தாழ்ந்து போகின்றாள்.இதனால் ஆண் - பெண் இருவரும் கூட்டுவாழ்க்கையில் இருந்து மேலும் தனிக்கட்டையாகியுள்ளனர்.

குறைந்த பட்சம் ஒருதாரமணத்தில் ஆண் - பெண்ணுக்கு இடையில் நீடித்த உறவு என்பது கூட நிகழமுடியாத பிளவை, நவீனத்துவ நுகர்வுப் பொருளாதாரம் தனிச் சொத்துரிமையைப் பெண்ணுக்கு அங்கீகரித்ததன் வடிவில் ஏற்படுத்திவிட்டது. இந்த ஆண் - பெண் உணர்வுகள் முன்பைவிட மோசமாக நலமடிக்கப்பட்ட நிலையில் தனிக்கட்டையாகியுள்ளனர். இங்கு இதனால் ஏற்பட்ட ஒருதாரமணத்துக்குள்ளான பலதாரமணம் விபச்சாரமாகப் பரிணாமம் அடைந்துள்ளது. இது பல பக்கவிளைவுகளை உற்பத்தி செய்கின்றது.

பிரான்சில் 50 இலட்சம் பேர் மோசமாகக் குடிப்பவர்களாக உள்ளனர். இதில் 20 இலட்சம் பேர் குடிக்கு அடிமையாகி உள்ளனர். இதனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வருடாவருடம் 50,000 பேர் இறக்கின்றனர். இதில் 3,000 பேர் போதையால் வீதி விபத்தில் இறக்கின்றனர். மது மூலம் ஏற்படும் நோய்க்கான மருத்துவச் செலவாக வருடம் 8,000 கோடி பிராங் (இது இலங்கைப் பணத்தில் 92,000 கோடி ரூபாயாகும். இது இலங்கை மக்களின் தேசிய வருமானத்தை விட அதிகமாகும்.) செலவாகின்றது.

ஐரோப்பாவில், முதல் குடிகாரர்கள் நாடாகப் பிரான்ஸ் இருக்க, ஐரோப்பியர் வருடம் வருடம் ஒவ்வொரு நபரும் 119 லிட்டர் (litre) மது குடிக்கின்றனர். பிரான்சின் மதுபானத் தொழிலில் 5 இலட்சம் பேர் ஈடுபடுகின்றனர். 15 இலட்சம் பெண்கள் குடிகாரிகளாக ஆக உள்ளனர். இது கி.பி. 1981-இல், 8 இலட்சம் மட்டுமேயாகும். இதில் பெருமளவில் பாதிக்கப்படுவது திருமணம் செய்யாத பெண்களே. பொதுவாக ஆண்கள் பகிரங்கமாகக் கடைகளில் சமூக அங்கீகாரத்துடன் குடிக்க, 92 சதவீதமான பெண்கள் மறைவிடங்களில் ஒளிந்து குடிக்கின்றனர். இளம் சமுதாயத்தில் நான்கு பேருக்கு ஒருவர், 12வயது முதல்19 வயதுக்கு இடைப்பட்ட வயதில் குடிக்கின்றனர். 15 வயது இளம் சமுதாயத்தினர் நிரந்தரக் குடிகாரர்களாகவும், புகைப்போர்களாகவும், போதைவஸ்து பாவிப்போர்களாகவும் உள்ளனர்.(15/16.4.1999)[1]

தனிமனிதச் சோகங்களைப் போதையில் மறப்பதும், தீர்க்க முனைவதும் இச்சமூகத்தில் பாதையாக மாறியுள்ளது. தனிமனித அவலங்களின் வெடிப்பு அதற்குள்ளேயே சீழாகின்றது. இந்தச் சீழ் மாற்றமுடியாத நாற்றத்தால் புழுப்பிடித்துப் போகின்றது. திருமணம் செய்யாத பெண்கள் அல்லது தனித்து வாழும் பெண்கள் தமது தனிமை மற்றும் பாலியல் நெருக்கடிகளைப் போதை மூலம் தீர்ப்பது, மறப்பது மனித அவலமாகின்றது. இந்தத் திசையை நோக்கி மனித நாகரிகம் நாலுகால் பாய்ச்சலில் குதித்துச் செல்லுகின்றது.

இது ஒருபுறம் நிகழ்கின்ற போது, மறுதளத்தில் டிஸ்கோ கலாச்சாரம் பாலியல் தீர்வை விபச்சார எல்லைக்குள் நுகர்வு வடிவில் அள்ளித் தெளிக்கின்றது. டிஸ்கோவுக்குள் பாலியல் வக்கிரம் பார்க்க - செய்ய பணம் கொடுத்து, போதைக்குப் பணம் வாரி வழங்கி, பணம் கொடுக்காத விபச்சாரமாக, பரஸ்பரம் நுகர்வை அடிப்படையாகக் கொண்டு மிதமிஞ்சிய போதையில் நடக்கும் பாலியல், அல்லது போதையின்றி நடக்கும் காம இசையின் விபச்சாரம், ஆண் - பெண் உறவை மிகவும் கீழ்நிலைக்குள் தாழ்த்தியுள்ளது.

அன்பு, காதல் எல்லாம் நுகர்வுப் பண்பாட்டில், டிஸ்கோவுக்குள் ஆணும் பெண்ணும் இழந்து பாலியல் பண்டமாக, இயந்திரமாக மாறிய சோகம் கட்டுடைத்த பண்பாடான ஏகாதிபத்தியத்தின் (பின்நவீனத்துவத்தின்) கொடையாகும்.

இன்னுமொரு கூட்டம் பணம் கொடுத்து பாலியல் தேவையைப் பூர்த்தி செய்வதைத் தீர்வாக்கியது. மேற்கு நாடுகளில் இரண்டு பேருக்கு ஓர் ஆண் என்ற வீதத்தில் பாலுறவுக்காகச் சொந்த நாட்டிலேயே பணம் செலுத்தி இருக்கின்றான். 15 முதல் 20 சதவீதமான ஆண்கள் தொடர்ச்சியாகப்





பாலுறவுக்குப் பணம் செலுத்துகின்றனர். இந்தப் பிரிவில் உள்ளோரில் 5 முதல் 10 சதவீதம் பேர் தொடர்ச்சியான பாலியல் வன்முறையில் ஈடுபடுபவர்கள்.[2]

சமூகத்தை விட தனிமனித உரிமைகளை அதிகமாகக் கோரும் போதும், தனிச் சொத்துரிமை சமூகத்தின் பண்பாட்டுக் கலாச்சார வாழ்வியலைத் தீர்மானிக்கும் போதும், ஆணின் தலைமையிலான குடும்ப அமைப்பில் பெண் சொத்துரிமையைச் சார்ந்து தனிச் சொத்துரிமை எல்லைக்குள் உரிமை பெறுகின்றபோது, ஆண்-பெண்ணின் பிளவு மேலும் அகலமாக அதிகரித்த அவலங்களும், இயல்பற்ற பாலியல் நெருக்கடிகளும் சமூகத்துக்கு முன் தோன்றியுள்ளது.

பாலியல் பூர்த்தியை விபச்சாரம் கணிசமான அளவுக்குத் திருப்தி செய்கின்றது. இதனால் விபச்சாரம் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்படுகின்றது. இதைவிட இதைக் கோரிக்கையாகவும், உரிமையாகவும் கோருவது பெண்ணியல் நடைமுறையாகின்றது. பாலியலின் இயற்கைத் தேர்வைத் தேவையில் இருந்து அன்னியப்படுத்திய கட்டற்ற சுதந்திரத்தில் 50 சதவீதமான ஆண்கள் விபச்சாரத்துக்காகப் பணம் கொடுத்தனர் என்பது இந்த ஜனநாயகத்தைக் கேள்விக்குள்ளாக்கும் நடைமுறையாக எம்முன் உள்ளது. ஆனால் இதை விட இந்தச் சமுதாயத்தின் வக்கிரத்தை நோக்கி தாமும் மாற நினைக்கும் போக்கு, எதார்த்த நடைமுறையில் இருந்து சமுதாயச் சிந்தனை அன்னியப்பட்டுப் போவதன் கிறுக்குத்தனம் தான் இதன் ஆதாரமாகின்றது. எதார்த்தத்தை மறுத்து, கற்பனையான சொர்க்கத்தில் சமுதாயம் கட்டிப் பாதுகாக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு ஆளும் வர்க்கங்கள் தமது சொந்த நலன்களுடன் ஈடுபட, சமுதாயம் அதன் பின் இழுபட்டுச் செல்ல, விடுதலை பற்றிய மனிதப் பிதற்றல் கோட்பாடுகள் இதற்குள் மார்க்சியத்தை மறுத்தபடி உருப்பெறுகின்றது.

இதன் விளைவை மேலும் பிரான்சில் ஆதாரமாகப் பார்ப்போம். கி.பி.1998 இல், சிறுவர் சிறுமிகளின் மீதான வன்முறையைப் பற்றி அறிக்கையில் காணலாம் (14.9.1999)[3]

அட்டவணை - 1

| வகை | எண்ணிக்கை | ஆண்கள்-சதவீதம் | பெண்கள்-சதவீதம் |
|---|---|---|---|
| பாலியல்வதைக்கு உட்பட்டோர் | 6,800 | 25% | 75% |
| உடல் ரீதியான வன்முறைகள் | 7,000 | 55% | 45% |
| உடல் ரீதியற்ற வன்முறைகள் | 1,800 | 50% | 50% |
| மிகமோசமான புறக்கணிப்புகள் | 5,400 | 55% | 45% |

பிரான்சில் பாலியல் துன்புறுத்தலுக்குக் கி.பி.1998-இல்,83,000 பிள்ளைகள் பாதிக்கப்பட்ட நிலையில், இது கி.பி.1994-இல், 60,000 பேர் மட்டுமேயாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கி.பி.1998-இல், இதனால் நீதி கோரி 49,000 பேர் நீதிமன்றம் சென்றனர்.ஆனால் கி.பி.1994-இல், 30,000 பேரே நீதிமன்றம் சென்றுள்ளனர்.

இவை பாடசாலைக்குள் நடப்பவை என்பதை ஒத்துக் கொண்ட ஆய்வுகள் வெளியில் நடப்பவற்றை முழுமையாகக் கொண்டு வரமுடியவில்லை என்பதையும் ஒத்துக் கொண்டுள்ளது. சமுதாயம் என்பது முதலாளித்துவத் தனிமனித ஜனநாயகத்தின் சூறையாடலால் எல்லாத் தளமுமே வன்முறைக்குள்ளாகி சீரழிகின்றது.

மேற்குச் சமுதாயத்தின் அவலத்தையும், அதன் கட்டற்ற சுதந்திர அதிகரிப்பையும் இவை தெளிவாகவே காட்டுகின்றது. அத்துடன் ஆண்-பெண் வேறுபாடற்ற வகையில் பாலியல் துன்புறுத்தலை இச்சமூகம் உற்பத்தி செய்கின்றது. முன்பு பெண் மட்டும் பாதிக்கப்படல் என்பது மாறி,இன்று ஆண்களும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இதன் மூலம் பெண் ஆணாதிக்கமயமாகிய வக்கிரத்தைக் காட்டுகின்றது. பெண்ணின் விடுதலை என்பதை எதிர்திசையில் (ஆணாதிக்கப் பாதையில்) வக்கிரப்படுத்தியதில் பெண்ணியல் அமைப்புகளின் தவறான கோரிக்கைகள், போராட்டங்கள் உதவிசெய்தன. ஆணில் இருந்து பெண்ணை அன்னியப்படுத்தும் அனைத்துக் கோரிக்கைகளும், சமுதாயக் கூட்டு நலனுக்கு எதிராக முன்நிறுத்திய போது, பெண் வன்முறையாளினியாக மாறினாள், மாற்றப்பட்டாள்.

சிறுவர்-சிறுமி மீது ஏவும் பாலியல் வன்முறைகள் தனிப்பட்ட ஆண், பெண்ணின் நடத்தைகளின் விளைவுகள் அல்ல. மாறாகப் பொருளாதார அமைப்பின் பண்பாடு அற்ற சமூகத்தின் விளைவுகளாகின்றது. பெண் தனது தனிமனிதச் சுதந்திரத்தைத் தனிச் சொத்துரிமையில் பெற்றதைத் தொடர்ந்து புதிய வடிவில் பாலியல் நெருக்கடியைச் சந்திக்கத் தொடங்கினாள். அவள் முன்பு கிடைத்த ஆணின் ஒருதாரமண இயந்திரப் பாலியலைக் கூட இழந்து போனபோது, பெண்ணும் பாலியல் வன்முறையில் ஈடுபடுவது எதார்த்தமாகியது. பெண்ணினால் வன்முறைக்குள்ளாகிய 25 சதவீதமான ஆண்குழந்தைகள்.[3] 1,700 பேர் மீதான பாலியல் அத்துமீறல்கள் துல்லியமாகப் பெண்ணின் சீரழிவை வெட்டவெளிச்சமாக்குகின்றது.

பொருளாதாரச் சுதந்திரத்தையும், பண்பாட்டுக் கலாச்சாரச் சுதந்திரத்தையும் விபச்சாரச் சீரழிவில் பெற்ற போது, ஆண்-பெண்ணின் பாலியல் நடத்தைகள் நெருக்கடியைச் சந்தித்தது. இதனால் பாலியல் வன்முறை எதிர் திசையில் வேகமாக அதிகரித்துச் செல்கின்றது. கி.பி.1975-இல், பிரெஞ்சுச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டோரில் 5 சதவீதமே பாலியல் சார்ந்த குற்றத்தைச் செய்திருந்தனர். இது கி.பி.1999-இல், 21 சதவீதமாக அதிகரித்துள்ளதுடன் தண்டனைக்காலம் பொதுவில் 4 மாதத்தில் இருந்து 9 மாதமாக அதிகரித்துள்ளது.[4] இந்தக் குற்றங்கள் பாலியலின் பின்னாலான போலி ஜனநாயகச் சுதந்திரத்தின் நெருக்கடியை அப்பட்டமாக





நிர்வாணமாக்குகின்றது. இதன் போக்கில் பாலியல் குற்றவாளிகளாகப் பெண்களும் உருவாகத் தொடங்கி உள்ளனர்.

இந்த ஆணாதிக்க ஜனநாயகத்தில், பெண் பெற்ற தனிச் சொத்துரிமை, ஜனநாயகச் சுதந்திரம் என்பது பெண்ணின் ஆணாதிக்கமயமாதலும், ஆணைப் போல் பெண்ணும் வன்முறையில் ஈடுபடுவது நிதர்சனமான எதார்த்தமாகியுள்ளது.

இதை மேலும் ஆராய மற்றுமொரு புள்ளி விபரத்தை (அட்டவணை:2) ஆராய்வோம். மேற்கு நாடுகளின் கோட்பாட்டு மையமான பிரான்சில் வெளிவந்த **லிபரேசன்** என்ற பத்திரிக்கை 26-02-1998 வெளியிட்டுள்ள கட்டுரையில் இருந்து பார்ப்போம்.

சிறுவர், சிறுமியர் ஓரினச் சேர்க்கைக்கு எப்படி பல்கலைக்கழகப் பகிடிவதைப் (ராக்கிங்) போன்று பயன்படுத்தப்படுகின்றனர் எனப் பார்ப்போம்.

அட்டவணை - 2

| ஆண்டு ⇒<br>யாருடன் ⇓ | கி.பி.1985<br>சதவீதம் | கி.பி.1991<br>சதவீதம் | கி.பி.1993<br>சதவீதம் |
|---|---|---|---|
| தகப்பன் | 15 | 23 | 27 |
| தாய் | 27 | 37 | 43 |
| சகோதரன்-சகோதரி | 32 | 44 | 49 |
| பாடசாலை | 35 | 43 | 45 |
| நண்பர்கள் | 41 | 56 | 62 |

பொருளாதார ரீதியில் வயது வந்த ஆண் பெண்ணுக்கு இடையில் ஏற்படும் பாலியல் நெருக்கடி, பொருளாதார ரீதியில் பலமற்ற, பலவீனமான சிறுவர் சிறுமி மீதான ஓரினச் சேர்க்கையாக மாறிவிட்டது,மாறிவிடுகின்றது. இதில் ஆண், பெண் வேறுபாடு இன்றி சிறுவர் மீது நடத்தும் பாலியல் வேட்டைகள், சிறுவர், சிறுமிகளின் உளவியல் பிரச்சினைகளும், இதனால் உருவாகும் புதிய பண்பாடுகள், கலாச்சாரங்கள் மேலும் மேலும் சீரழிவின் வழியில் வெதும்புகின்றது. இந்த வன்முறையில் அதிகளவில் பெண்கள் ஈடுபடுவது எப்படி சாத்தியமானது? ஆண்-பெண் உறவில் பொருளாதார நுகர்வில் ஏற்பட்ட நெருக்கடி விரிசலாகிவிடும் போது பலவீனமான பிரிவு சுயத்தியாகம் செய்யக் கோருகின்றது. இதற்குப் பண்பட்ட, கலாச்சார அடிப்படைகள் இசைவாக்கமடைகின்றது.

ஆண்-பெண்ணின் தனிமனிதச் சுதந்திரங்கள் பாலியல் தேவைக்கு முரண்நிலையாக, இந்த முதலாளித்துவச் சமூகம் கொடுக்கும் கொடையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனிச்சொத்துரிமை மீதான பெண்ணின் சுதந்திரம் தனிச்சொத்துரிமை அமைப்பான ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் ஆணையும்,பெண்ணையும் பிளக்கின்றது.

இந்தப் பிளவு என்பது பாலியலைப் பண்டமாக்குகின்றது. இந்தப் பண்டம் என்பது நுகர்வைத் தீவிரமாக்குகின்றது. இது பாலியலில் திருப்தி இன்மையையும், அதிக நுகர்வை தேடி அலைவதையும் பண்பாடாக்கியுள்ளது. இந்தப் பாலியல் உறவு தேவையை நிராகரித்து, நுகர்வாக்கி அலைய வைத்த போது அது விபச்சாரமாகச் சீரழிகின்றது. இந்த விபச்சார நுகர்வையும், திருப்தியின்மையையும் அனுபவிக்க முடியாத நிலையில் அல்லது அதற்குள்ளும் புழுத்துப் போன சமூகம் பாலியல் வன்முறையை எல்லாத் தளத்திலும் கையாள்வதைத் தொடர்ச்சியாக வெளிவரும் புள்ளிவிபரங்கள் எதார்த்தத்துடனும், மார்க்சியப் பாலியல் கோட்பாட்டு விளக்கத்துடனும் பொருந்திப் போகின்றன.

இந்தச் சமூகத்தில் பெண்ணுக்குக் கிடைத்த தனிச் சொத்துரிமையிலான உழைப்பின் மதிப்பையும், ஆணுக்குக் கிடைத்த உழைப்பின் மதிப்பையும் தமக்கிடையில் முதன்மைப்படுத்தாத ஆண்-பெண் சுயநிர்ணயமான குடும்ப அமைப்பைப் பேணுவதிலும், அதற்காகச் சமூகத்துக்கு எதிராகப் போராடுவதிலும் இந்தச் சமூகத்தில் ஒரு பகுதியினர் முன் நிற்கின்றனர். நுகர்வு பற்றி, திருப்தியின்மை பற்றி கனவு இன்றி பாலியலைத் தேவைக்குட்படுத்தி வாழும் குடும்பங்கள் மேற்கில் சுயநிர்ணயத்தை அடிப்படையாகக் கொண்ட முன்னுதாரணக் குடும்பமாக உள்ளனர். இந்தச் சமூக வடிவமும் மேற்கில் பலமான நிலையில் இருப்பதைக் காணமுடிகின்றது. ஆனால் பலமற்ற பொருளாதாரப் பிரிவைப் பிரதிபலிப்பதால் இவர்களின் கருத்துகள் போராடும் எல்லைக்குள் உள்ளன.

ஏகாதிபத்திய நுகர்வு தனியுரிமையிலான சொத்துரிமை பண்பாட்டுக் கலாச்சாரத்தால் ஆணின் சமூக ஆதிக்கம், இந்தச் சமூகத்தின் பொதுவடிவமாக எல்லாத் தளத்திலும் காணப்படுகின்றது. அதே நேரம் ஆணின் சமூக ஆதிக்கம் கட்டியமைக்கவும் படுகின்றது. இதற்கு எதிரான பரந்துபட்ட மக்களின் உண்மையான சுயநிர்ணயக் குடும்ப ஒப்பந்தங்கள், பாசங்கள் மறைக்கப்படுகின்றன அல்லது அதைப் பழைய ஆணாதிக்க ஒருதாரக் குடும்ப வடிவத்துக்குள் வைப்பதும் அல்லது சேறடிப்பதும் நிகழ்கின்றது.

இந்தக் கயமைத்தனத்தைப் பல மேற்கத்திய மற்றும் கீழைத்தேசப் பெண்ணியம் பேசும் மார்க்சியம் அல்லாத குழுக்களின் சலுகைகளுக்குப் பின்னாலும், ஆணாதிக்கமயமாதலின் பின்னாலும் நிகழ்வது எதார்த்தமாகியுள்ளது. இந்தவகையில் மார்க்சியம் பெண்ணின் உரிமையை ஆணாதிக்கமயமாதல் அல்லாத வழியில் இன்று வழிகாட்டும் பணியைத் துணையின்றி முன்னெடுப்பது அவசியமாகி உள்ளது.





## 3. மேற்கு அல்லாத பெண்கள்

முதலாளித்துவப் புரட்சி நடைபெறாத இந்நாடுகளில் பெயரளவிலான ஜனநாயகம் கூட கிடையாது. இதன் வெளிப்பாடாகப் பெண்களின் நிலை என்பது ஐயத்துக்கு இடமின்றி நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கத்துக்குள் சிறை வைக்கப்பட்டுள்ளாள். இருந்த போதும் இப்பெண்கள் இயற்கையையொட்டியும், ஒருதாரமணத்துக்குள் காதலிக்கவும், அன்பு செலுத்தவும் முடிவதால் மேற்கைவிட தன்னளவில் நிம்மதியாகக் கூட்டு வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்கின்றாள்.

நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கம் பெண்ணின் சுயச்சிந்தனையை விலங்கிடுவதால் பெண்ணின் தெரிவுகள் முதல் அனைத்தும் வளர்ப்பு மிருகத்தின் நிலைக்குத் தாழ்ந்துள்ளது. வளர்ப்புப் பண்ணைகளில் மிருகத்தின் பாலியல் பூர்த்தியை எப்படி வளர்ப்பவன் தீர்மானிக்கின்றானோ, அதேபோல் பெண்ணின் பாலியலை ஆணாதிக்கச் சிந்தனை கட்டுப்படுத்தித் தீர்மானிக்கின்றது.

பிறந்தது முதல் அது பெண்ணா? ஆணா? என்ற தெரிவிலேயே இவை தீர்மானமாகிவிடுகின்றது. பண்ணையின் தேவையை ஒட்டிச் சினைப்படுத்தும் மனிதன், பெண்ணையும் தனது தேர்வுக்குட்படுத்தி பிள்ளையைப் பெற ஆணாதிக்கம் வழிகாட்டுகின்றது. அடக்கமான, ஒடுக்கமான, நாணம் கொண்ட (நானாம் (மூக்குச்சரடு) பூட்டிய மாடுபோல) நிலப்பிரபுத்துவப் பெண் கணவனுக்குத் தலைகுனிந்து சேவகம் செய்யவும், அதேநேரம் ஆணின் பாலியலைப் பூர்த்தி செய்யவும், ஒருதலைப்பட்சமான, ஒரு பக்கமான காதலை, அன்பைச் சொரியவும், ஒருதாரமணத்தைப் பேணவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளாள். அதே நேரம் ஆணின் உழைப்பைச் சார்ந்து வாழவும் கோரப்பட்டாள். சொந்த உழைப்பை நல்குவது அடங்காப்பிடாரித்தனமாகவும், அதில் வாழ நினைப்பது குடும்பப் பெண்ணின் பண்பு அல்ல என்றும் பலவகையான விளக்கத்துக்குள் நிறுத்தப்பட்டுள்ளாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விவசாயத்தைச் சார்ந்த கூட்டுக் குடும்பம், நிலப்பிரபுத்துவத்தால் நிலத்தில் இருந்து நிலமற்ற கூலியாக மாற்றிய போது, கூட்டுக் குடும்பம் பண்பியல் மாற்றத்தைச் சந்தித்தது. இக்குடும்பத்தில் பெண்ணின் உழைப்பு பெறுமதி வாய்ந்த கூலியைப் பெற்ற போது, ஆணைச் சார்ந்த பொருளாதாரக் குடும்பக் கண்ணோட்டம் மாற்றம் கண்டது. பெண்ணின் ஆளுமை என்பது வளர்ச்சி பெற்றது. இருந்தபோதும் பற்றாக்குறை, குடும்பத்தில் குழந்தைகளைப் பராமரிக்க போதுமான கூலியின்மை ஆகியவை அப்பெண்ணை ஆணைச் சார்ந்திருக்க நிர்ப்பந்தித்தது. இதைப் பாதுகாக்க ஆதிக்கம் பெற்ற நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கக் கூட்டுக் குடும்ப அமைப்பு, பெண்ணின் உரிமை பற்றி சிறுமைப்படுத்தியது. இந்தப் பண்பாடு அடிமட்டக் கூலிப் பெண்களை இரட்டைத் தளத்துக்குள் வாழ நிர்ப்பந்தித்தது.

இதற்குள் இந்தியா போன்ற நாடுகளின் சாதிக்கட்டமைப்பை ஆராயின் பார்ப்பனிய ஆணாதிக்கப் பண்பாடுகள் தாழ்த்தப்பட்ட மக்களிடம் இருந்ததில்லை. ஆதிக்கப் பார்ப்பனியத்துக்கு எதிரான போராட்டமும், முரண்பாடுகளும் கூர்மையாக இருந்த போதும், ஆதிக்கம் பெற்ற சாதியின் பண்பாடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குள் பல்வேறு தளத்தில் எப்படி புகுந்ததோ, அதுவே அடிமட்ட பெண்ணுக்கும் நிகழ்ந்தது. இப்பெண்கள் அதிகளவுக்குச் சுதந்திரமாக மற்ற பெண்களைவிட வாழ்ந்த போதும், ஆதிக்கம் பெற்ற நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கப் பொருளாதாரப் பலம், அடிமட்டப் பெண்களை விடுவிக்காது ஆணாதிக்கச் சிறையில் நிறுத்தி வைத்துள்ளது.

இந்த அடிமட்டப் பெண்களின் சுயமான முடிவுகள், விவாகரத்துகள், மறுமணம், சுயமான உழைப்பு, சுயமான ஆணைத் தெரிவது என்பது மிக இலகுவாக நிகழ்கின்றது. பொருளாதாரப் பற்றாக்குறையும், குழந்தைகளின் பராமரிப்பும் இப்பெண்களின் கைகளை விலங்கிடுகின்றது. ஆதிக்கம் பெற்ற வர்க்கங்களின் நேரடி ஆதிக்கமும், அடக்குமுறையும் தனிப்பட்ட வாழ்வில் தலையிடுவது என்பது மிகக்கடினமானதாக உள்ளது. ஆனால் அது பண்பியல் கலாச்சார வழிகளில் புகுகின்ற போதும், அவை தீவிர முரண்பாட்டின் போது தகர்கின்றது. இதில் நாட்டுக்கு நாடு பல வேறுபாடுகள் உள்ளன. ஆப்பிரிக்கப் பெண்களில் பலதாரமணம், இலகுவான முறையில் விவாகரத்து, பெண்ணைச் சார்ந்து பொருளாதார ரீதியில் ஆண் வாழ்தல் (ஆண்கள் வேலையின்றி ஊர் சுற்றும் போது பெண்கள் சிறு விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபட்டு குடும்பத்தைப் பராமரிக்கின்றனர்.) போன்றன அடிமட்டப் பெண்களின் உரிமையாக உள்ளது. இது தென் அமெரிக்காவிலும் உள்ளது. தந்தை யாரெனத் தெரியாத குழந்தைகளைப் பெறுவது குற்றமாகப் பார்க்கப்படுவதில்லை.

இதன் எச்சச் சொச்சத்துடன் புதிதாகக் காலனித்துவமும், நவகாலனித்துவமும் முதலாளித்துவப் புரட்சி நடக்காத நாடுகளில் புகுந்த





போது மாற்றங்கள் பல ஏற்படுத்த நிர்ப்பந்தித்தது, நிர்ப்பந்திக்கின்றது. காலனித்துவ ஆட்சிகளின் போது பல நாடுகளில் போலி ஜனநாயகத்தில் சில கூறுகளை எதிர்ப்பின்றி சுரண்டுவதுக்குச் சலுகையாகச் சமுதாயத்தில் புகுத்தினர். இது மேல்த்தட்டு வர்க்கத்தின் ஜனநாயகப் பிரிவுகளின் குடும்பத்துக்குள்ளும், வெளியிலும் பெண்ணின் ஜனநாயகக் கோரிக்கைகளை எழுப்பத் தூண்டுகோலாகியது.

இந்தக் கோரிக்கை தமக்கு மட்டுமானதாக மேல்மட்ட பெண்கள் எல்லைப்படுத்திக் கோரியதன் மூலம், காலனித்துவ வாதிகளின் விசுவாசமான ஒரு வர்க்கமாக மாறி அதிகாரத்தில் பங்கு கொண்டனர். இந்த ஜனநாயக அதிகார வர்க்கத்தின் ஆதிக்கப் பண்பாடுகள் அடிமட்ட பெண்களிடையே பாதிப்பை ஏற்படுத்தியது. பின்னால் காலனித்துவ ஆட்சிகள் வர்க்கப் புரட்சியைத் தடுக்க, பெயரளவிலான போலி பாராளுமன்ற ஆட்சியைச் சுதந்திரத்தின் பெயரில் பரிசளித்து சென்ற போதும் பெண்ணின் நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. இந்தப் போலி சுதந்திரத்தைப் பெறுமுன் நிகழ்ந்த சுதந்திரப் போராட்டங்களின் போது, பெண்ணுக்குச் சுதந்திரத்தின் சார்பாக வழங்கிய வாக்குறுதிகள் கூட, போலிச் சுதந்திரத்தின் பாதுகாவலராக மாறிய முன்னாள் சுதந்திர வீரர்கள் வழங்க மறுத்தனர்.

காலனித்துவவாதிகளுடன் மோத, சமரசம் செய்து கொள்ள தமது சொந்த ஆணாதிக்க வர்க்க நலனுக்குப் பயன்படுத்திய ஜனநாயகக் கோஷங்களைக் கைவிட்ட இவர்கள், நிலப்பிரபுத்துவத்தின் ஆணாதிக்கக் கூறுகளைப் பாதுகாப்பதையும், தீவிரப்படுத்துவதையும் தமது கடமையாகக் கவனமாகத் தேர்ந்தெடுத்தனர்.

குறைந்தது தேசிய முதலாளித்துவப் புரட்சியையும், தேசிய முதலாளித்துவ நாட்டையும் உருவாக்குவதற்குப் பதில் காலனித்துவத்தின் பொம்மை அரசாக நீடித்தனர். ஏகாதிபத்தியக் காலனித்துவம் நிலப்பிரபுத்துவத்துடன் செய்து கொண்ட அதே சமரசத்தை இவர்களும் செய்து கொண்ட போது பெண்ணின் உரிமைகள் மறுக்கப்பட்டன.

காலனித்துவத் தேவையைப் பூர்த்தி செய்ய தரகு முதலாளித்துவ வர்க்கம் ஒன்றை ஏகாதிபத்தியம் தனது காலனித்துவத்தின் போதே உருவாக்கி அதனிடம் ஆட்சியைக் கைமாற்றியது என்பதும், அந்த வர்க்கம் நிலப்பிரபுத்துவத்துடன் செய்த கூட்டின் மூலம் இரு பண்பாட்டு ஆணாதிக்க வழிகளில் பெண்ணை அணுகியது. ஏகாதிபத்தியத் தரகு முதலாளித்துவம் தமது பொருளாதார ஆதிக்கத்துக்கு எதிரான தேசிய முதலாளித்துவத்தையும் அதன் ஜனநாயகத்தையும் மறுப்பது, ஒடுக்குவது நிபந்தனையானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதனால் பெண் மீதான நிலப்பிரபுத்துவப் பண்பாட்டையும், ஏகாதிபத்தியப் பண்பாட்டையும் பொருளாதாரப் பண்பாட்டுடன் மாற்றியமைத்தது. இந்த மாறுதல் என்பது நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் கிராமத்தையும், ஏகாதிபத்திய ஆதிக்கம் நகரத்தையும் சார்ந்து பெண்ணின் இரு பண்பாட்டுத் தளத்தை ஒன்றுடன் ஒன்று ஊடுருவியபடி உருவாக்கியது. கிராமத்தில் நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கக் காட்டுமிராண்டித்தனமும், நகரத்தில் ஏகாதிபத்தியத் தரகு ஆணாதிக்கச் சீரழிவும் என சமுதாயத்தின் இரு பண்பாட்டு வடிவங்களை ஒன்றை ஒன்று சார்ந்தும் விலகியபடியும் உருவாக்கியது.

ஏகாதிபத்திய (பின்நவீனத்துவ) உலகமயமாதல் என்பது தரகு முதலாளித்துவத்தை ஒதுக்கிய படி நேரடியான தேசம் கடந்த தலையீட்டைத் தொடங்கி, மறுகாலனியாதிக்கத்தை நிதி மூலதனத்தை ஆதாரமாகக் கொண்டு நிறுவி வரும் நிலையில், இந்த இரு ஆணாதிக்கப் பண்பாட்டு நிலைகளும் தீவிரமான ஐக்கியத்தையும், முரண்பாட்டையும் உருவாக்கியுள்ளது.

தரகு மற்றும் நிலப்பிரபுத்துவ ஆதிக்கச் சக்திகள் பாசிசமாக ஆணாதிக்கப் பண்பாடுகளை முன்வைத்து, ஆட்சிகளை முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயக வழிகளிலும், இராணுவ வழிகளிலும், புரட்சி வழிகளிலும் கைப்பற்றுவதும், அதே நேரம் ஏகாதிபத்திய ஆணாதிக்கப் பண்பாட்டை மறைமுகமாகப் புகுத்துவதும் என்ற இரட்டைத் தன்மை எல்லா நாடுகளின் பொது விதியாகியுள்ளது.

இன்று நகரங்களின் நுகர்வுப் பண்பாட்டுக்குள் செல்லும் நடுத்தரவர்க்கமும், அதற்கு மேற்பட்ட பிரிவின் மக்கள் கூட்டமும், அந்த மக்களின் பின்னால் நீடிக்கும் நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க ஒழுக்கமும், முரண்பாட்டுடன் சிலவேளைகளில் ஐக்கியத்துடன் புதிய குடும்ப வடிவங்கள் கட்டமைக்கப்படுகின்றன. இந்த வடிவங்கள் விபச்சார வடிவிலும், இயந்திரத்தனத்திலும் இணைந்து விலகுகின்றன. பின்னால் சிலவற்றை ஆதாரத்துடன் விவாதித்துள்ளேன் பார்க்கவும்.

நுகர்வுப் பண்பாட்டில் சிக்கும் இம்மக்களின் பெண்கள் பாலியலில் அதீதமான நுகர்வுக்குள் செல்வது தவிர்க்கமுடியாதது ஆகியது. இதனால் நிலப்பிரபுத்துவப் பாலியல் ஒழுக்கத்தை மீறத் தொடங்கியது. திருமணத்துக்கு முன் உறவு, திருமணம் அற்ற பாலியல் வாழ்க்கை, மறுமணம், விவாகரத்து, பகிரங்கமாகவும், களவாகவும் வேறு ஆண்கள் உடன் தொடர்பு, டிஸ்கோ பாலியல்.... என ஏகாதிபத்திய எல்லை வரைக்கும் இது வளர்ச்சி பெற்றுவிட்டது.

ஏகாதிபத்திய நாட்டில் இது ஏற்படும் போது பெண் பொருளாதார ரீதியில், ஆணாதிக்கத்திடம் இருந்து பெற்ற முதலாளித்துவச் சீர்திருத்தச்





சுதந்திரம், அப்பெண்ணின் ஒரு பகுதியைச் சுயநிர்ணயக் குடும்ப அமைப்புக்குள் இட்டுச் சென்றது.

ஆனால் முதலாளித்துவச் சுதந்திரம் அற்ற, சமுதாய ரீதியில் பொருளாதார ரீதியில் ஆதிக்கம் அற்ற, அன்னியனின் ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு இன்றி விபச்சாரம் செய்யும் சமுதாய நடைமுறைகள், பெண்ணையும், பெண்ணியத்தையும், பாலியலையும் விபச்சார எல்லைக்குள் வாழ வழிகாட்டியுள்ளது. பெண்ணை ஆண் பயன்படுத்துவதும், அதில் பெண், தானும் நுகர்வதாகப் பாசாங்கு செய்வதும் பொதுப் பண்பாகியுள்ளது.

சமுதாயம் தனது முதலாளித்துவ வழிகளில் முற்றி ஏகாதிபத்திய வழியில் பண்பாட்டைப் பெறுவதற்குத் தவறி, அதைப் பெறுகின்ற போது அது வெம்பி பழுத்துவிடுவது என்பது வெள்ளிடைமலை. இந்த வெம்பலைக் கடைவிரித்து உள்ள சமூக நிலையில் ஆணாதிக்கம் பற்றிய பெண்ணியக் கோட்பாடுகள், இலக்கியங்கள் இந்த வெம்பலில் இருந்தும், ஏகாதிபத்திய அழுகலில் இருந்தும் கூட்டுப் பழரசமாக வெளிவருகின்றது.

இது ஒருபுறம் இருக்க, நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கமும் அதில் வாழும் பெண்களும், இந்த ஆதிக்கம் பெற்ற வெம்பல் ஏகாதிபத்தியச் சீரழிவின் பண்பாட்டுக் கலாச்சாரத்தின் பிடிகளில் ஆதிக்கத்துக்குள் பாதிக்கப்படுகின்றனர். திரைப்படத்தை எடுத்தால் இந்த இரண்டு கூட்டுக் கலவை கலை விபச்சாரக் குணாம்சத்துடன் வெளிப்படுவதும், அதை இரசிக்கும் நிலப்பிரபுத்துவப் பண்பாடும் ஏகாதிபத்தியத்தால் ஒருமையாக்கி ஜனநாயக வடிவம் கொடுக்கப்படுகின்றது. நடனங்கள், பாடல்கள், காட்சிகள், கருவின் உள்ளடக்கம், அழகியல் என எல்லாம் இந்தக் கலை விபச்சாரத்தில் உருவாக்குவதன் ஊடாக ஏகாதிபத்திய வெம்பல் சீரழிவுப் பண்பாடு உலகமயமாக்கப்படுகின்றது.

பெண்ணின் ஒருதலைப்பட்சமான காதல், அன்பு, ஒருதாரத் திருமணம் என்பன இதனால் பந்தாடப்பட்டுச் சமுதாயத்தை, விபச்சாரம் மட்டும் கொண்ட சமுதாயமாக மாற்ற நாலுகால் பாய்ச்சலில் எம்பிப் பாய்கின்றனர். இதனால் பெண்ணின் எஞ்சிய உரிமைகள் கூடப் பறிபோகின்றது. வாழுகின்ற சமுதாயத்தில் சொத்துரிமை எப்படி தனிமனிதனிடம் இருந்து அவனை அறியாமலேயே இழந்து போகின்றதோ, அதுவே பாலியலிலும் நிகழ்கின்றது. ஆதி மனிதன் இயற்கையின் சொந்தக்காரனாக இருந்தான். இதுவே அவனின் சொத்தாக இருந்தது. பின்னால் இன்று சொத்து அற்ற வர்க்கம், சொத்துடைய சுரண்டும் வர்க்கத்துக்கு உழைக்க மட்டும் பிறந்த ஜடமாகிவிட்டது. அவனின் உரிமை, சொத்தென்பது பிறருக்கு உழைக்கும் எல்லைக்குள் தான். இது போல் பாலியலில் இருந்த வரைமுறையற்ற புணர்ச்சி என்பது பின்னால் நிபந்தனையாகி இன்று நுகர்வதுக்கு மட்டும் பயன்படும் சீரழிவாகியுள்ளது. இயந்திரமான புணர்ச்சியை உருவாக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதே நேரம், மனிதப் பண்புகளைச் சூறையாடி அழிவுக்கு உள்ளாக்குகின்றது. இந்த இயந்திரமான புணர்ச்சியை முன்பு ஆண் மட்டும் கொண்டிருந்ததை இன்று பெண்ணுக்கும் சேர்த்து உலகமயமாக்கியுள்ளது. இந்தப் புணர்ச்சியில் வக்கிரத்தை விகாரப்படுத்துவது பாலியலின் ஆதாரமாகியுள்ளது.

இது மேற்கு அல்லாத சமுதாயத்தில் வெம்புகின்றபோது ஆணும் பெண்ணும் மேற்கைவிட மேலும் மோசமான குடும்பச் சீரழிவையும், பாலியல் சிதைவையும் ஏற்படுத்தி மனநோயாளிகளை இதன் தளத்தில் உருவாக்குகின்றது. மேற்கு அல்லாத பெண்களின் இந்த அவலம் என்பது மேற்குச் சூறையாடலின் வெட்டுமுகம் தான்.

இந்த இடத்தில் மேற்கு அல்லாத ஆணாதிக்க எதிர்ப்பு பெண்ணியக் கோட்பாடுகள் இந்த எல்லைக்குள் வெம்பக் கோருவது அதிகரித்துள்ளது. ஏகாதிபத்திய வெம்பல் சீரழிவுகளைப் பெண்ணின் விடுதலையாகவும், நிலப்பிரபுத்துவத்தின் காட்டுமிராண்டித்தனத்தை ஆணாதிக்கமாகவும் காட்டுவது இலகுவானதாகி விடுகின்றது. அதாவது உற்பத்தியில் ஏகாதிபத்தியத்தின் மிகையான உற்பத்தியை நிலப்பிரபுத்துவத்தின் சிறு உற்பத்திக்கு எதிராக நிறுத்தி எப்படி வெற்றி பெறுகின்றனரோ, அதையே ஆணாதிக்கத்துக்கு எதிராகப் பெண்ணியத்தால் முன்நிறுத்தப்படுகின்றது.

இயற்கையின் தேர்வை மறுத்த ஆணாதிக்க விளைவுகளை எல்லாம் பெண்ணுக்கும் அங்கீகரிக்கக் கோரும் பெண்ணியக் கோட்பாடுகள், இதையே ஜனநாயகமாக முன்நிறுத்துவது பொதுவான வெம்பலுக்குச் சாதகமானதாக உள்ளது. பெண்ணின் இக்கோரிக்கையை வரைமுறையற்ற புணர்ச்சிக்குள் நிறுத்துவதும், சுயநிர்ணயத்தை மறுப்பதும் சாத்தியமாகின்றது. இதைத் தேசியத்தில் இன்று தேசிய முதலாளித்துவத்துக்குப் பதில், ஏகாதிபத்தியத் தேசியத் தரகாகப் போராடுவது போல் பெண்ணின் சுயநிர்ணயத்துக்குப் பதில் வரைமுறையற்ற விபச்சாரத்தை வெம்பலின் போக்கில், இன்றைய ஏகாதிபத்தியப் பெண்ணியம் முன் நிறுத்துகின்றது. இதை அதற்குள் ஆராய்வோம்.





# 4. இயற்கையும் ஆணாதிக்கமும்

இயற்கையை மறுப்பதிலேயே ஆணாதிக்கம் கருக்கொள்கின்றது. இன்று உலக மயமாதல் தனது சந்தைப்படுத்தலைத் தீவிரமாக்க இயற்கை அழிப்பைப் பிரதானப்படுத்துகின்றது. பெண்களை இயற்கைக்கு மாறாக அடிமைப்படுத்திய நிலையில், ஆண்கள் இயற்கையில் இருந்து அன்னியமயமாதல் அதிகரித்தது. பெண் இயற்கையைச் சார்ந்திருத்தல் நெருக்கமானது. மனிதத் தேவையை மீறி இயற்கையை ஆண், அடிமைப்படுத்தியும், கட்டுப்படுத்தியும், அழித்தும், சூறையாடியும், சொத்துரிமையை, அதிக உபரியை இயற்கைக்கு விரோதமாகச் செயற்கையாகக் கட்டுப்படுத்தினான்.

இந்த நிலையில் பெண் இயற்கை மீது சார்ந்து வாழ்தல் இயல்பானதாக இருந்தது. பெண்ணின் தனிச் சொத்துரிமை மறுக்கப்பட்டு, வீட்டுவேலைகளுடன் கட்டுப்படுத்தி இயற்கையின் மறு உற்பத்தியுடன் அடிமையாக்கிய நிலையில் பெண் இயற்கை மீது வாழ்தல், சார்ந்திருத்தல்தான் அவளின் ஒரே ஆதாரமான வாழ்வாகியது.

ஆண் வேட்டைக்குச் சென்று இயற்கையை மிதமிஞ்சி அழித்த போது, பெண் வீட்டில் இயற்கையைச் சார்ந்து உற்பத்தியில் ஈடுபட்டாள். ஆணின் அறிவியல் கண்டு பிடிப்புகள் பெண்ணைப் பிச்சைக்காரி ஆக்கியது.

மேற்கத்தியக் காலனி ஆதிக்கம் பெண்ணின் இயற்கையைச் சார்ந்த உணவு, நீர் போன்றவற்றைக் கிடைத்தற்கரிய பொருளாக்கியது. நவீனக் கண்டுபிடிப்புகள் உலகமயமாதலாகப் பெண்ணிடம் மேலும் கடின உழைப்பைக் கோருகின்றது.

பழைய தந்தை வழிச் சமூகத்தில் ஆணின் உழைப்பில் வாழ்ந்த பெண் இன்று கூலியாகவும், வீட்டு வேலைக்காரியாகவும் இரட்டைச் சுமைக்குள் தள்ளியுள்ளது இன்றைய சமூகம். மூன்றாம் உலக நாடுகளில் பெண் இயற்கையான காடுகளில் விறகு சேகரிப்பு, இயற்கையான நீர்த் தேக்கத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீர் சேகரிப்பு எல்லாம் நவீன ஆணாதிக்கத்தின் இயற்கை அழிப்பால் பெண்ணின் இயற்கை உழைப்பைக் கடுமையாக்கியுள்ளது.

பணம் தான் எல்லாம் என்ற நிலையில் இயற்கையைச் சார்ந்த பெண்ணின் வாழ்க்கை பெறுமதியற்றதாகக் கேவலமாக ஆக்கிவிட்டது. இயற்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் உபரி பெறுமதியை உற்பத்தி செய்வதில்லை என்ற வகையில் சமூகக் கருத்தும், விளக்கமும் கொடுக்கப்படுகின்றது. இயற்கையைச் சார்ந்த ஆயுர்வேத மருத்துவம் எதுவுமற்ற ஒன்றாகக் காட்டப்படுகின்றது. இயற்கையைப் பெண்ணுக்கு ஒப்பிடக் கூடிய தாய் என்பதால், இயற்கையை மறுக்கும் அதே காரணத்தால் பெண் மறுக்கப்படுகின்றாள்.

நவீனத்துவம் (முதலாளித்துவம்), பின்நவீனத்துவம் (ஏகாதிபத்திய உலக மயமாதல்) வளர்ச்சியின் வெற்றி என்பது இயற்கையையும், பெண்ணையும் சூறையாடிய ஆணாதிக்கச் சுரண்டல் சமூகமாகும்.

**நவீன அறிவியலின் தந்தையான** பேக்கனின் (கி.பி. 1561-1626) திட்டம் இயற்கையை அழித்து, பெண்ணைச் சூறையாடி உருவானதே, இந்த ஏகாதிபத்திய ஆணாதிக்கச் சமூகம். கி.பி.1951-இல், **பாரிங்டன்** என்பவரால் மொழி பெயர்க்கப்பட்ட பேக்கன் புத்தகத்தின் பெயர் **“காலத்தின் ஆண்மை உதயம்”**[5] ஆகும். நவீனத்துவம் வரை “பெண்மைத் தத்துவத்தோடுத் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டிருந்த பழைய அறிவியலில் இருந்து இந்த ஆணாதிக்க அறிவியல் வெகுவாக வேறுபட்டிருந்தது”[5] என்பது தெளிவான எதார்த்தமாகும். “உற்பத்தியைக் கைக்கொள்ளுவதற்காக இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த, **பேக்கன் கொண்டிருந்த கனவு”**[5] நனவாகியுள்ளது. மேலும் அவரின் கொள்கை **“இயற்கை இனியும் அன்னை இயற்கையல்ல”** என்பதாகும்.

இயற்கை சார்ந்து வாழ்ந்த மக்களின் வாழ்வைச் சிதைத்ததால், உலகில் 40 கோடி பெண்கள் சிறிய மூடிய குடிசைக்குள் விறகு அடுப்புகளை பயன்படுத்துவதால், அவர்கள் சுவாசிக்கும் புகை மூலம், ஆபத்தான நிலையில் வாழ்வதுடன், இதற்குட்பட்டுத் தமது ஆயுளையும் குறைத்துக் கொள்கின்றனர். பெண்களின் வீட்டுக் கடமை ஆணாதிக்கத்தால் புறக்கணிக்கப்பட்டதன் விளைவு, அவர்களின் வாழ்க்கையை நோய்க்குள்ளும், மரணத்தினுள்ளும் தள்ளிச் செல்லுகின்றது. வறுமையும் இதனுடன் இணைகின்ற போது, மூடிய குடும்ப அமைப்பு போல், சுற்றுச் சூழல் பெண்ணை மேலும் இறுக்குகின்றது. இயற்கையை அழித்து உலகமயமாதல் வேகம் பெற, பெண் மேலும் ஒடுங்கி சிறுத்து வாழ வேண்டிய நிலைமையால், அவளின் இயற்கை சார்ந்த சுகாதாரம் சிதைந்து போகின்றது.

இயற்கையைச் சார்ந்து மனிதன் நீடித்த காலத்திலும், பின் பெண் அதன் மீது சார்ந்திருந்த எல்லா நிலையிலும், அது சார்ந்த பொருளாதாரமும், கலாச்சாரப் பண்பாடுகளும் இயற்கை மீது மனிதனின் பிடிப்பைப் பாதுகாத்தது.





இந்தப் பண்பாடு, கலாச்சாரங்கள் சுரண்டலுக்குத் தடையாக இருந்த நிலையில் நவீனத்துவம் இதற்கு எதிராகப் பாய்ந்தது. இது நீடித்த ஆணாதிக்கத்தில் பெண்ணுக்கு இருந்த சில இயற்கை ஆதாரங்களையும் பறித்து கூலியாகவும், எதுவுமற்ற பிச்சைக்காரியாகவும் ஆக்கியது.

இந்த இடத்தில் **செவ்விந்தியத் தலைவர் சுமோகலா**வின் இயற்கையையும், பெண்ணையும் ஒப்பிட்டுப் பேசியது முக்கியத்துவம் வாய்ந்தது. “நிலத்தை உழுமாறு என்னைக் கூறினீர்: ஒரு கத்தியை எடுத்து எப்படி என்னால் என் தாயின் மார்பகத்தை அறுக்க முடியும்? புல்லை வெட்டிக் காயவைத்து, வைக்கோலை விற்று காசாக்கி, வெள்ளை மனிதனைப் போல பணக்காரனாகச் சொன்னீர்கள்: என் தாயின் தலைமுடியை நான் எங்ஙனம் வெட்டிச் சாய்ப்பேன்”[5] என்று கேட்டான் சுமோகலா.

மற்றொரு செவ்விந்தியத் தலைவனின் கடித வரிகளைப் பார்ப்போம். “எங்களுக்கு இதுவரை தெரியும்: பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல. மனிதன் தான் பூமிக்குச் சொந்தமானவன். ஒரு குடும்பத்தின் இரத்தத்தைப் போல அனைத்துப் பொருட்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. பூமியிலுள்ள உயிரினச் சங்கிலி வலையை மனிதன் நெய்யவில்லை. அவன் அதில் ஒரு நூல் அவ்வளவே”[5] என்பதன் பின் இந்த ஆணாதிக்க உலகம் இயற்கையை மறுத்துச் சூறையாடிய போது பெண்ணின் இயக்கம் பெறுமதியற்றதாக ஆக்கப்பட்டது. இந்த வரிகளின் பின்னால் உள்ள ஆழ்ந்த கருத்துகளை எந்த நவீன, பின்நவீனத்துவக் கோட்பாடும் உள்வாங்கியதில்லை. இதை மறுத்து அழித்தன. ஆனால் மார்க்சியத்தின் அடிப்படையையே **மார்க்ஸ்** இதில் இருந்துதான் ஆரம்பிக்கின்றார் என்பதே இதன் ஆழமான சிறப்பாகும்.

இந்தியா சட்டக் கழகத்தின் சத்ரபதி சிங் “கடந்த (19-ஆம்) நூற்றாண்டின் இறுதி வரையிலும் அதற்கு முந்தைய வரலாற்றுக் காலங்களிலும் இந்தியாவின் 80 சதவீதம் இயற்கை வளங்கள் பொதுச் சொத்தாகவும் 20 சதவீதம் மட்டுமே தனிச்சொத்தாகவும் பயன்படுத்தப்பட்டது”[5] என்ற கருத்துக்கள் ஆணாதிக்கச் சமூகத்தில் பெண் இயற்கையைத் தற்பாதுகாப்பாகக் கொண்டு வாழ்ந்த வாழ்வைக் காட்டுகின்றது. இன்று இயற்கையை, தனியார்மயமாகிய இயற்கையை நலம் அடித்த ஆணாதிக்கத்தின் அழிப்பால் பெண் மேலும் ஒடுக்கப்படுகின்றாள்.

இந்தியாவின் இந்து மதவெறி ஆட்சியாளர்கள் (B.J.P.) உலக வர்த்தகக் கழகத்துடன் இரகசியமாகச் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அண்மையில் அதாவது 31.3.2001-இல் 1,429 பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாட்டை நீக்கியுள்ளது. இது அண்மையில் அமெரிக்கப் பத்திரிக்கையில் வெளியானதைத் தொடர்ந்து அம்பலமானது. ஜனநாயகப் பாராளுமன்றம் என்று கூறிக் கொள்வதில் கூட விவாதிக்காத இந்த ஒப்பந்தம், மக்களின் அடிப்படை பொருட்கள் மீதான உரிமையை, உற்பத்தியைப் பறித்துள்ளது. இதில் ஒன்று, பால் இறக்குமதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்ய ஒத்துக் கொண்டதன் மூலம் அதையொட்டிய பொருட்கள் மீதான அனைத்து சுய உற்பத்தியையும் முடிவுக்கு வரவுள்ளது. இது இந்திய ஏழைப் பெண்களின் ஆதார வறுமையைத் தீவிரமாக்க உள்ளது.

இந்தியாவில் உள்ள “8 கோடி பெண்கள் ஓரிரு மாடுகளை வைத்து 7,500 கோடி டன் பாலை உற்பத்தி செய்து”(16.3.2000)[6], தமது ஏழ்மையைப் போக்க முயலும் பெண்களை மேலும் வறுமைக்குள் இந்த ஏகாதிபத்திய நலன்கள் மூலம் தள்ளிவிட்டுள்ளனர். இந்து சுயராஜ்ஜியம் பெண்ணுக்கு எதிரானது என்பதையும், அது ஏகாதிபத்தியத்தின் தரகுகள் தான் என்பதையும்மீள நிறுவியுள்ள அதேநேரம், இயற்கையாகப் பெண் கண்டுபிடித்த மிருக வளர்ப்பின் ஊடாக, ஆணாதிக்கத்துக்கு வெளியில் பொருளாதார ரீதியாக இருந்த கொஞ்ச நஞ்ச சுதந்திரமான வாழ்க்கையையும் கேவலமாக்கி, ஏகாதிபத்தியப் பிச்சையைச் சார்ந்து வாழ மொத்தக் குடும்பத்தையே அடிமைப்படுத்தியுள்ளனர்.

பெண் இயற்கையைச் சார்ந்து குழந்தையைப் பெற்று வளர்த்தது முதல், அதையொட்டி இயற்கையில் சார்ந்து உணவைத் தேடிய போதும், பாரம்பரியமாக விதைகளைச் சேகரித்த போதும், அவளின் உழைப்பு தனியுடைமைச் சந்தையில் பெறுமதியற்றதாக இருந்த நிலையில், அவ்வுழைப்பு சமூக மதிப்பற்றதாகியது. தனியுடைமை பெண்ணின் உழைப்பைப் பெறுமதியற்றதாக்கிய நிலையில், தனியுடைமையின் உற்பத்தியில் சுரண்டும் வர்க்கத்தால் ஆணின் உழைப்பு பெறுமதியாக்கப்பட்டதால், ஆண் பெண்ணுக்கு இடையில் ஆணின் உழைப்பு தனியுடைமையின் ஆதிக்கத்தால் பெண்ணின் முன் மதிப்புக்குள்ளாகியது. இந்த நிலையில் பெண்ணின் இயற்கை சார்ந்த உழைப்பு தனியுடமை சமுதாயத்தில் பெறுமதியற்றதாகக் காணப்பட்ட சமுதாயப் போக்கில், அதன் சமூகப் பிரதிநிதியாக மாறிய ஆண் முன் பெண்ணின் உழைப்பு மதிப்பற்றதாகியது.

ஆண்கள் வேட்டையில் கழிக்க, பெண்கள் நிலைத்த இடத்தில் தங்கியிருந்த போது சுற்றுப்புறத்தை முற்றாகத் தமக்கு இசைவாக மாற்றியமைக்க தொடங்கினர். சொந்த வாழ்விடத்தை மெருகுவூட்டுவதில் பல கண்டுபிடிப்புகளைத் தொடர்ச்சியாக நிகழ்த்தினர். இந்த வகையில் கட்டிடக் கலையை மனிதச் சமுதாயத்துக்கு வழங்கியது பெண்களேயாவர். **மனைவி என்ற பெயரில் உள்ள மனை என்ற வீட்டைக் குறிக்கும் சொல், பெண்ணின் குடியிருப்புக்குரிய கட்டிடக் கலையின் கண்டுபிடிப்பைப் பறைசாற்றுகின்றது.** ஆணாதிக்கம் பெண்ணை வீட்டில் பூட்டிய போது மனைவி என்ற கருத்துறையூடாகப் பெண் இழிவுபடுத்தப்பட்டாள். இதே அடிப்படையில் தான் பல்வேறு பெண்ணிலைவாதிகளும் கருதி எதிர்க்கின்றனர். ஆனால் வீடு என்பதன் பின்னுள்ள பெண்ணின் உரிமை, கண்டுபிடிப்பை ஆணாதிக்கம் கொச்சைப்படுத்தி சிதைத்த வரலாற்றை எதிர்க்காத பெண்ணியம், ஆணாதிக்கத்தைத் தனது அரியணையாகவே கொள்கின்றது.





சிவப்பு இந்தியர்களிடையே ஆதிக்க மதமான கிறித்துவ ஆக்கிரமிப்பு மதவாதி ஒருவர், ஐரோப்பிய நண்பருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தமது கோயில்களைக் கட்டியது பெண்களே எனக் குறிப்பிட்டுள்ளார். அதில் “இங்கு கட்டடிங்களெல்லாம் பெண்களாலேயே கட்டப்படுகின்றது. ...நாங்கள் ஒருமுறை எமது வீட்டு வெளிச் சுவரினைக் கட்டுவதற்கென கற்களை அடுக்க ஓர் ஆணினை வேலைக்கு அமர்த்திய போது பாவம், அவனைச் சுற்றிப் பெண்களும், சிறுவர்களுமாய் ஒரே கேலியும், கலாட்டாவுமாகப் போய்விட்டது. ஓர் ஆண் கட்டிடவேலை ஏதாவதொன்றில் ஈடுபடுவது அவ்வளவு அபத்தமாகத் தோன்றியதால் அவனைப் பரிகாசம் பண்ணிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்”[83] இது போன்ற வேறு பல உதாரணங்களை இந்நூல் கொண்டுள்ளது.

**ஆண் கட்டிடக் கலையின் தந்தை அல்ல.** பெண் கட்டிடக் கலையின் தாய் என்பது நவீன அறிவுலகுக்கு முன்னால் ஏற்றுக் கொள்ள முடியாத அபத்தங்கள்தான். கடினமான உழைப்புகளில் பெண்கள் ஈடுபட்டது மட்டுமின்றி, ஆண்களைவிட உடல் வலிமையில் மேம்பட்டும் இருந்தனர். பெண் வீட்டைச் சுற்றிய பணிகளில் அதிகமாக ஈடுபட்ட போது ஆண்கள் வெளியில் அதிகமாக உழைத்தனர். வெளிவேலை இலகுவான வழியில் இருக்கின்ற நிலைகளில் ஆணின் வலிமை குறைவானதாக இருக்கின்றது. இது மிகவும் செழிப்புள்ள நிலங்களில் பெண்ணின் உழைப்பு இலகுவாகின்றது. அந்த நிலையில் அவர்கள் அடுத்த கட்டச் சமுதாய வளர்ச்சிக்கான புற நிலையை அடைகின்றனர். பெண்கள் கட்டிட வேலைகளில் ஈடுபட்டதுடன் அதில் நிகழ்த்திய கண்டு பிடிப்புகள் பெண்ணின் கடின உழைப்பைக் கோருகின்ற போது, ஆணை விட உடல் வலிமையைப் பெறுவது இயல்பாகின்றது. அங்கு வாழும் ஆண், இப்படி ஈடுபடாத நிலையில் பெண்ணை விட உடல் வலிமையற்றவனாக மாறுகின்றான்.

பெண் வீட்டையும், சுற்றுப்புறத்தையும் அறிவியலால் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளையும், அறிவியலையும் ஆணினால் அலைந்து திரிந்த நடைமுறையால் பயன்படுத்தவோ, தெரிந்து கொள்ளவோ முடியாததாக இருந்தது. ஆனால் ஆண் இயற்கையாக நீண்ட தூரம் சென்றதால் புதிய பொருட்களைப் பெற முடிந்தது. புதிய உயிரினங்களை அறிய முடிந்தது. ஆனால் தாவரங்கள் பற்றி அறிவின்மையால் அதை விருத்தி செய்ய முடியவில்லை. நீண்ட தூரம் செல்லாததால் பெண்ணின் தாவரக் கண்டுபிடிப்புகள் எப்போதும், ஓரிரு தாவர வகையாக மட்டுமே இருந்தது. இதனால் தொடர்ந்து தாவரவியல் வளர்ச்சி பெறவில்லை. ஆனால் குறித்த தாவரத்துக்குள் மட்டும் வளர்ச்சியையும், அதே நேரம் உணவில் குறித்த உணவு மட்டும் கிடைத்ததாலும் உடல் வலிமையை மந்தப்படுத்தியது. ஆனால் ஆண் போகுமிடம் எல்லாம் இறைச்சி முதல் கிடைக்கும் உணவுகளை உண்டதால் வலிமையானவனாகப் பலம் பெற்றான்.

தனிச் சொத்துரிமையிலான சமுதாயமும் அதற்கு முந்திய வளர்ச்சியில் பெண்ணின் கண்டுபிடிப்புகளை ஆண் தெரிந்து கொள்ள தொடங்கியது முதல்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதை ஆண் விரிந்த பரப்பில் பயன்படுத்தக் கூடிய ஆணின் இயக்கம், பெண்ணுக்கு இயற்கையாகவே தடையாகியது. ஆண் இவைகளை விரிந்த தளத்தில் பயன்படுத்திய போது, அவனால் புதிய கண்டுபிடிப்புகளை நடத்த முடிந்தது. தனிச் சொத்துரிமை மற்றும் உபரி இதன் வாயிலாக ஆணுக்கு அதிக பலத்தைப் பொருளாதாரத் துறையில் முதன் முதலாக வழங்குகின்றது. பெண்ணின் நீடித்த இயற்கையான தரித்த வாழ்வும் சுற்றுப்புறமும் இதற்கு எதிரானதாக இருந்தது. அத்துடன் பெண்ணின் கண்டுபிடிப்புகள் மீதான அறிவியல் காரணங்களைப் படிப்படியாகத் தெரிந்து கொள்கின்ற போது, பெண் பற்றி மதிப்பு ஏற்பட்ட காரணக் காரியத் தொடர்புகள், புதிய அறிவியல் விளக்கத்தால் சிதைகின்றது.

உலகமயமாதல் இயற்கையாக மனிதர்கள் பாவிக்கும் பலவிதமான பொருட்களை, நவீன ஆய்வுக் கூடத்தில் பரிசோதித்து அதன் உள்ளடக்கத்தை விளக்கி, அதைத் தனது அறிவியல் கண்டுபிடிப்பாக்கி மக்களிடம் இருந்து அன்னியப்படுத்தி, அதற்கு வரிகட்ட நிர்ப்பந்திக்கும் இன்றைய போக்கு, அன்றைய ஆணாதிக்கம் பெண்ணின் அறிவியலைப் பறித்ததன் தொடர்ச்சியான வளர்ச்சிதான். அன்று விளக்கங்கள் ஆண்களால் ஏற்பட்ட போது (இங்கு ஆண்களுக்கு விரிந்த வட்டத்தில் அலைந்து திரிந்த இயக்கம் இதைச் சாதகமாக்குகின்றது) பெண்ணின் அறியாமை மீது அடிமை முத்திரை குத்தப்பட்டது. இதில் இருந்து தான் பெண்ணைச் சமூக உழைப்பில் ஈடுபடுத்துவது, பெண்ணின் விடுதலைக்கு அவசியமாகவும், நிபந்தனையாகவும் உள்ளது. சமூக உழைப்பு தனிச் சொத்துரிமையால் விபச்சாரம் செய்யப்படும் நிலையில் அதை எதிர்த்து போராட வேண்டிய பணி இங்கு அடிப்படையாகின்றது.

புதியவைகளைக் கண்டுபிடித்ததிலும் பெண்களின் பங்கு தீர்க்கமானதாக அனைத்து மனித முன்னேற்றத்திலும் இருந்துள்ளது. நீயூகினி மக்களின் மொழியில், "இரு குச்சியினால் நெருப்பை மூட்டும் செயலுக்கு வழங்கப்படும் சொல் 'தாய் நெருப்பு தருகின்றாள்' எனப் பொருள் படவுள்ளது. கிடைக் குச்சியைத் 'தாய்' என்றும், செங்குத்துக் குச்சியைப் 'பிள்ளை' என்றும்"[83] குறிப்பிடுகின்றனர். அது போல் "பெண்கள் நெருப்பினைத் தமது தோண்டுகழியினைக் கை நகங்கள், கை விரல்கள் போன்ற பலவிடத்திலும் ஒளித்து வைத்திருக்கின்றனர் என்ற பல கட்டுக் கதைகள் உண்டு."[83] இப்படி இன்னும் பல கதைகள் உண்டு.

காட்டுமிராண்டி கால இடைக்காலத்தில் நீர் வாழ் உணவுகளை உண்ண அடிப்படையாக இருந்த நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்பு பெண்ணினதாக இருக்க விசேடமான, தனித்துவமான காரணங்களைக் கண்டறிய முடியவில்லை. அப்படி எதுவும் இருக்கவில்லை. ஏனெனின் ஆண், பெண்ணுக்கிடையில் இனவிருத்தியைத் தவிர, எந்த வேலைப் பங்கீடும் இருக்கவில்லை. மரங்களிலும், நிலத்திலுமாக வாழ்ந்த மனிதன் இறைச்சியையும், தாவரத்தையும் சார்ந்து வாழ்ந்த நிலையில் நெருப்பு பற்றிய அறிவு பெண்ணின்





தனித்த சொத்தாக இருக்கும் என்ற வாய்ப்பும், விளக்கமும் கற்பனையானது. இயற்கையாகக் கிடைத்த நெருப்பைப் பாதுகாப்பதன் மூலமும், இடம் மாற்றிக் கொண்டு செல்வதன் மூலமே நெருப்புப் பயன்பாடு இருந்திருக்கும்.

பின்னால் நிலைத்து வாழத் தொடங்கிய சமுதாயத்திலேயே வீடு சார்ந்த சுற்றுப்புற உழைப்பில் தான் பெண் நெருப்பைக் கண்டுபிடித்திருக்க முடியும். உராய்வின் மூலம் நெருப்பு உண்டாகும் முறை தற்செயலான இயக்கத்தில் இருந்தே பெறப்பட்டது. அரைதல், உரஞ்சுதல், துளையிடுதல் போன்ற உழைப்பில் தற்செயலான விளைவுகளில் நெருப்பு உருவாகியது. இதைப் பெண் தொடர்ந்து உருவாக்கக் கூடிய சக்தியைப் பெற்றாள். அதை நுட்பமாக அனுபவ வாயிலாகப் புரிந்து கொண்டாள். ஏன்? என்ற காரணத்தைத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் இதைப் பெண்ணின் தனித்துவமான ஆற்றல் என்பதன் ஊடாகப் பெண்ணின் மதிப்பு உயர்ந்தது. அதிக காலம் வேட்டையில் கழித்த ஆணுக்கு இது புதிராகவே இருந்திருக்கும். ஆண் நினைத்த மாத்திரத்தில் பெண் போல் நெருப்பை உருவாக்க முடியாத அனுபவ இன்மை பெண்ணை நெருப்பின் பிம்பமாக்குகின்றது. இதனால் வெளி ஆதிக்கம் பெறாத இயற்கை சார்ந்த மொழிகளில், நெருப்பைப் பெண்ணின் பெயரில் அழைக்கப்படுவது இயல்பானதாக இருக்கின்றது. ஆணாதிக்கம் அற்ற இயற்கை மொழிகளில் இவைகளைக் காணமுடியும்.

வீட்டில் தங்கியிருந்த பெண் நெருப்பைப் பாதுகாக்க தனது இருப்பிடத்தில் ஓர் இடத்தை உருவாக்கினாள். இதைத் தொடர்ந்து ஊரில் பொதுவான இடத்தில் அதைப் பாதுகாக்க தொடங்கிய போதும் பெண்ணே அதற்குப் பொறுப்பாக இருந்தாள். கடந்து சென்ற வரலாற்றில், "விளைச்சலின் கடவுளான **சாட்டேனின் மகளே வெஸ்டா** (இங்கு வெஸ்டா என்பது தீயின் கடவுள்) என்று ரோமானியர்கள் நம்பினர். இவள் மணமாகாதவள் என்றும், குடும்பங்களைப் பாதுகாப்பவள் என்றும் அவர்கள் சங்கல்பித்தனர்.

ரோமானிய நகரங்களிலும், கிராமங்களிலும் வெஸ்டாவின் கோயில்களும், அவற்றோடு இணைந்து பொது நெருப்புக் குண்டங்களும் இருந்தன. கன்னிப் பெண்களே தீயைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டனர். ரோமானியர்களுடைய வெஸ்டாவைக் கிரேக்கர்கள் **ஹெஸ்டியா** என்ற பெயரில் வழிபட்டனர். ஒலிம்பஸ் மலையில் பிற தேவதைகளுடன் இருக்கும் ஹெஸ்டியாவுக்கு யாகத்தின் ஒரு முக்கிய பங்கைக் கிரேக்கர்கள் அளித்தனர். கன்னி மாதாவான இந்தத் தேவதையை வழிபடுபவர்களான பெண்கள் திருமணம் செய்யாமல் கோயில்களில் தங்கினர்."[7]

பெண்ணினால் தீ கண்டுபிடிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்த வரலாற்றில் பெண்களே தொடர்ந்து அதன் பொறுப்பாளர்களாக இருந்துள்ளனர். இந்த நெருப்பைச் சொந்த வீடு சார்ந்த உழைப்பிலும், உணவைப் பதப்படுத்துவதிலும் உள்ள அறிவைக் கண்டுபிடித்ததும் பெண்ணே. எதிரி விலங்குக்கு எதிராகவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விவசாய நிலத்தை உருவாக்கவும் என எல்லாப் பயன்பாட்டையும் கண்டுபிடித்தனர். இதைப் புனிதமான மனித வளர்ச்சியின் முக்கியக் கண்டுபிடிப்பாகக் கருதி, அதைப் பாதுகாக்க திறமைமிக்க கன்னிப் பெண்களைத் தெரிவு செய்து நியமித்தனர். அப்பெண்கள் அதைப் புனிதமாகக் கருதித் திருமணம் செய்யாது வாழ்ந்தனர். அதில் இருந்து திருமணம் செய்யாத கடவுள்களை உருவாக்கினர்.

ஆனால் ஆணாதிக்கம் உருவான போதே, நெருப்பு ஆண் அதிகாரத்தின் சின்னமாகியது. நெருப்புக்குப் பெண்கள், குழந்தைகள் பலியிடப்பட்டனர். ஆணாதிக்க ஒழுக்கத்தை மீறிய பெண்கள் சிலுவையில் இட்டு நெருப்பிடுவது முதல் உடன் கட்டை ஏற்றுவது வரை (இங்கு ஏறுவது அல்லது ஏற்றுவது) தீயில் ஆணாதிக்கம் கோலோச்சியது. இன்று இந்தியாவில் வரதட்சணைக் கொலைகள் பொதுவாக நெருப்பின் மூலம் அரங்கேற்றப்படுகின்றது. முந்திய வரலாற்றுத் தொடர்ச்சியில் இருந்து, ஆணாதிக்கம் பெண்களிடம் கைப்பற்றிய நெருப்பை ஒலிம்பிக் பந்தயத்தில் (போட்டியில்) ஆண் மட்டும் ஏற்றும் நிலைக்கு உலகச் சமூகம் தரம் தாழ்ந்தது. பெண்ணின் கண்டுபிடிப்பு மற்றும் நீண்ட பாதுகாப்பிற்கு உட்பட்ட நெருப்பு பெண்ணிடம் இருந்து விலக்கப்பட்டது. பெண் ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொள்ள இருந்த தடை மற்றும் தீபம் ஏற்ற இருந்த தடை ஆகியவை பெண்ணடிமைத்தனத்தின் மீது உருவான ஆணாதிக்க நாகரிகத்தின் வெளிப்பாடாகும். இந்த வெளிப்பாடுகளைத் தொடர்ந்து ஆராய்வோம்.

காட்டு மனிதனாகக் காட்டில் வேட்டையாடி மனிதன் வாழ்ந்த காலத்தில், பெண் வீட்டில் குழந்தையின் தற்காப்பு கருதி பராமரிக்க நின்ற போது ஆண் வேட்டையில் ஈடுபட்டான். வீட்டில் இருந்த பெண், குழந்தை பராமரிப்புடன் சேகரித்த தானியங்களை மறு உற்பத்தியில் பயன்படுத்திய புதிய கண்டு பிடிப்புகளைப் பின்னால், ஆண்கள் பெண்ணின் அறிவியலைத் திருடித் தனது தனியுடைமைச் சொத்துக்கு உரம் ஆக்கினான். ஆணின் வேட்டைப் பொருளை விட அந்தச் சமூகத்தின் தேவையில் "80 சதவீதத்தை"[5] பெண் உற்பத்தி செய்வதை இன்றைய ஆய்வுகளின் மூலம் ஆதாரமாக **லீயும், டிவோரும்** சுட்டிக் காட்டியுள்ளனர்.

தென்அமெரிக்க ஒரினோகோ இந்தியர்களிடையே ஆண்கள் விவசாயத்தில் ஈடுபடாமை குறித்து அங்கு ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட மதப்பிரச்சாரகர்கள் ஏன்? என வினாவிய போது, "பெண்கள் ஒரு தினையை விதைத்தால் இரண்டு அல்லது மூன்று காம்புத் தினை விளையும், அவர்கள் ஒரு மரவள்ளியை நட்டால் மூன்று கூடை மரவள்ளிக் கிழங்குகள் கிடைக்கும். அதெப்படியெனில் அவர்களுக்குத் தான் குழந்தைகளை உண்டாக்கவும் தெரியும், பயிர்களை உயிர்ப்பிக்கவும் தெரியும். எங்களுக்கு அவர்கள் அளவு அறிவு இல்லாததினால் இவற்றையெல்லாம் அவர்களே செய்யட்டும்"[83] என்றார்கள். இது எமக்குப் பெண்ணின் உயர்ந்த நிலையைக் காட்டுகின்றது.





**ஏங்கெல்ஸ்** குறிப்பிட்டது போல் "உழைப்பின் வளர்ச்சி எந்தக் கட்டத்தில் இருக்கின்றது என்பதும் மறுபக்கத்தில், குடும்பத்தின் வளர்ச்சி எந்தக் கட்டத்தில் இருக்கின்றது என்பதும் இந்த அமைப்பைக் கட்டுப்படுத்துகின்றது"[8] என்றார். இது பெண்ணின் மதிப்புக்குரிய வாழ்க்கையை ஏற்படுத்தியது. பெண்கள் உணவு மற்றும் இனப் பெருக்கத்தைச் செய்வதில் தலைமை தாங்கியதால் பெண் சமுதாயத்திற்குத் தலைமை தாங்கினாள். ஆண்கள் இதைச் செய்வதில் இருந்து ஒதுங்கிய தன்மையானது அவை "பெண்ணின் கடமை என்பதால் அல்ல, ஆண்களுக்கு அது தெரியாது என்பதால் தான்". இதில் இருந்து தான் அவை பெண்ணின் உரிமையாக இருந்தவைகளை ஆணாதிக்கச் சமுதாயத்தில் கடமையாகின்றது.

குழந்தை பிறப்பு, வளர்ப்பு, வீட்டு வேலை மற்றும் சுற்றுப்புற உழைப்புகள் பெண்ணின் உரிமையாகக் கண்டுபிடிப்பாக இருந்தது. இது ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்ணின் கடமையாகியது. இயற்கையான வரலாறு பற்றி தெரிந்திராத பெண்ணியல்வாதிகள், இதை ஆண்கள் திணித்ததாகவும், இன்றைய நிலையில் அவைகள் பெண்ணின் கடமையாக இருப்பதை வைத்து காண்கின்றனர். ஆணாதிக்கம் கோலோச்சிய போது பெண்ணின் உரிமைகள் ஆணுக்குச் சேவை செய்யும் கடமையாக்கப்பட்டது. மனித உழைப்பு மனிதனின் கண்டுபிடிப்பாக, உரிமையாக இருந்ததைத் தனிச்சொத்துரிமை இன்று இயந்திரத்தின் உறுப்பாக்கி மூலதனத்துக்கு அடிமையாக்கியது போல் தான் இது நிகழ்ந்தது. பெண்ணின் மதிப்பார்ந்த உயர்ந்த வாழ்க்கையில் இன்றைய ஆணாதிக்கப் பெண்ணியம் எதை மறுக்கின்றதோ, அதில் இருந்து புரிந்து போராடாத வரை, ஆணாதிக்க உயர்வை நோக்கிய போராட்டமே பெண்ணியமாகி ஆணாதிக்க மயமாவது நிகழ்கின்றது.

மேலும் லீயும், டிவோரும் பெண்களின் ஆளுமையையும் பெண்ணின் கண்டுபிடிப்புகளை ஒட்டி, "உணவு சேகரிப்பிற்குத் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வளர்ச்சி, வயதடைதல், பயன் தரும் பருவம், இனப்பெருக்கம் பற்றிய மிகத் தெளிவான அறிவு தேவை. தாவரங்களையும், விலங்குகளையும் தேவைக்குத் தக்கனவாகத் தேர்ந்தெடுத்து, வளர்த்தெடுக்கும் அவ்வறிவைப் பெண்கள் பெற்றிருந்தனர். பெண்களின் உணவு சேகரிப்பின் கண்டுபிடிப்புகள் என்பவை கலப்பைக்கு முந்திய **தோண்டுகழி, தூக்குப் பைகள், கதிர் அரிவாள்** மற்றும் **பிற கத்திகள்** ஆகியன ஆகும். உடைப்பு மற்றும் தூளாக்கும் கருவிகள் ஆகியவை உலர்த்த, வறுக்க, அரைக்க, கொதிக்க பயன்பட்ட தொழில் நுட்பங்கள் ஆகும். **கூடைகள், குதிர்கள், சேமிப்புக்குழி** (களிமண் சுவர் கொண்டது) போன்றவை உணவு சேமிப்பு மற்றும் பதப்படுத்தல் ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தினர். இவை இன்னும் கூட தன்னிறைவு பெற்ற சமூகங்களில் பயன்பாட்டில் உள்ளன.

**முர்டதக்கின்** இனவியல் வரைபடங்களின் படி முன்னேறிய 142 தோட்டக்கலைச் சமூகங்களில், விவசாயம் 50 சதவீதம் பெண்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆளுகையிலும், 27 சதவீதம் ஆண்களோடு பகிர்ந்து கொள்ளப்பட்டும் இருந்தது. இச்சமூகங்கள் ஐந்தில் ஒரு பங்கில் மட்டுமே ஆண்கள் வேளாண்மையில் முழு பொறுப்பாளர்களாக இருந்தனர். பெண்களே தாவரங்களையும், விலங்குகளையும் தேவைகளுக்கேற்ப கண்டுபிடித்து, தேர்ந்தெடுப்பூடாக இனக்கலத்தலைச் செய்தனர். பெண்கள் தான் கரணைகள் மற்றும் தாவரப் பகுதிகளை வெட்டி நடல் மூலம் பயிர் வகைகளைப் பரவலாக்கம் செய்தல், விதை சேகரிப்பும், தேர்ந்தெடுப்பும் நாற்றங்கால்களை அமைத்தல் போன்றவற்றைக் கண்டுபிடித்தனர்.**மலைபடுகடாம்328,329-குறிஞ்சி 40-44-** இல் “ஆண்கள் வீட்டை விட்டு வேட்டை மேற்செல்ல பெண்கள் குழுக்களாகச் சேர்ந்து இரவு பகலாக வனவிலங்குகள், பறவைகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாத்தனர்.”[9] இவ்வாறு சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றது. நாட்டுப் புறப்பாடல் பெண் சார்ந்து வேளாண்மை மீது தமது இயற்கை உணர்ச்சியை வெளிப்படுத்துவதைக் காண்போம்

“தானா தன்னை தான தன்னை
தானா தன்னை தான தன்னை
தை பொறந்தா வழி பொறக்கும்
தங்க கையால் கும்மியடி
வயல் வாய்க்கால் செழிக்க வேனும்
வாழ்க்கை வளம் ஆகனும் (தை)
நெல்லு வெளைஞ்சதை பாருங்களேன்
நெல்லு கும்பிடு பாடுது பாருங்களேன்
கதிர் வெளைஞ்சதை பாருங்களேன்
கதிர் கண்ணு சிமிட்டுது பாருங்களேன்..”[10]

இன்று நிலத்துக்கோ, விளைச்சலுக்கோ எந்த விதமான உரிமையற்ற மக்களின், குறிப்பாகப் பெண்களின் வெளிப்பாடுதான் இது. கிராமியப் பெண்கள் எந்தளவுக்குச் சமூகத்தன்மை கொண்டு, தம்மை இயற்கை சார்ந்து வெளிப்படுத்துகின்றார்கள் என்பதை இந்தப் பாடல் காட்டுகின்றது. இந்தச் சமூகத் தன்மையை எந்தப் பூர்சுவா பெண்ணியமும் வெளிப்படுத்த முடியாத உயர்ந்த சுயநலமற்ற வெளிப்பாடாகும்.

**ஸ்பேன்லி** என்பவர் பெண்களின் கண்டுபிடிப்புகளைப் பின்வருமாறு பட்டியலிடுகிறார்: ‘சாம்பலை உரமாகப் பயன்படுத்தியது, சிறு உழவுக் கருவிகளை வடிவமைத்தது, பயிர் சுழற்சி மற்றும் நிலச் சத்துக்களைத் திரும்பப் பெற பயிர் செய்யாமல் நிலத்தைச் சும்மா வைத்திருத்தல், வைக்கோலால் வேர்களை மூடி வைத்தல், உயர்ந்த நிலங்களில் சாகுபடி செய்தல், வளைதளப் பரப்புகளில் பயிரிடுதல், மரங்களை நடுவதன் மூலம் நீர்ப்பாசனம் மற்றும் நிலங்களைப் பாதுகாத்தல், இவை யாவுமே பெண்களால் கண்டறியப்பட்டது தான். மேலும் எட்டு வகைத் தானியங்களையும் உள்ளூர்





தேவைகளுக்காகத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தியவர்கள் பெண்களே எனவும் கூறுகின்றார். (அரிசி, கோதுமை, மக்காச்சோளம், பார்லி, ஓட்ஸ், சோளம், பயிறு வகைகள், ராகி) வேளாண்மையில் 14,000 ஆண்டுகளாகப் பரிணாம வளர்ச்சி பெற்ற பெண்ணிய அறிவு 20 ஆண்டுகளுக்குள் வெகு சில ஆண் விஞ்ஞானிகளால் உலகெங்கும் சிதைக்கப்பட்டது.”[5] தானியச் சேகரிப்பு மற்றும் தானியப் பாதுகாப்பில் பெண்களே இயற்கை விஞ்ஞானியாக விளங்கினர். பெண்கள் பற்றிய ஓர் ஆய்வில் விதை தேர்ந்தெடுப்பது நேபாளப் பெண்களின் பொறுப்பாக இருந்துள்ளது என்ற உண்மையை நாம் இன்று காணத் தவறி, போராட மறுப்போமாயின் இருக்கும் பெண்ணின் எச்சச் சொச்சக் கண்டுபிடிப்புகளும் அழிக்கப்பட்டுவிடும்.

பெண்ணின் சொத்துரிமை மறுக்கப்பட்ட அதேநேரம், ஆணின் தனிச் சொத்துரிமை பெண்ணை அடிமையாக்கிய நிகழ்வு தான், பெண்ணின் அடிமைக்கான முதல் நிகழ்வாகும். அதன் தொடர்ச்சியில் பெண் தனிமையில் ஆணாதிக்கச் சமூக அமைப்புக்குள் வீட்டிலும், வீட்டுச் சுற்றுப்புறத்திலும் சொந்த அறிவியலைத் தக்கவைக்கவும், தன் வயிற்றையும், குழந்தைகளின் வயிற்றையும் பசியாற்ற ஆணைச் சாராது வாழ இயற்கையைச் சார்ந்து,பெண்கள்மனித உணவுத் தேவைக்கான முக்கியமான கண்டுபிடிப்புகளை நடத்தினர். இந்தக் கண்டுபிடிப்புகள் குடும்ப அமைப்பில் பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்ததால் ஆண் மௌனமாக அதை ஏற்றுக் கொண்ட போதும், சிலவேளைகளில் அபகரித்தபோதும், பெண் தனது கண்டுபிடிப்புகளையும், அதன் பொருளாதாரப் பலத்தையும் தொடர்ச்சியாகத் தக்கவைத்திருந்தாள்.

சமுதாயத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெண்ணின் பங்கை நாம் ரிக்வேதத்தில் காணமுடியும். “பணிவுள்ள யுவதிகள், தருணனைப் பணிய அருகில் நிற்கிறார்கள். அவனை நீராட்ட ஊக்கமாகிறார்கள்...மூன்று ஸ்திரிகளான தேவிகள் துன்மாகாத தேவனுக்குச் சலப் பேரனுக்கு உணவை ஏந்துகிறார்கள்.”[7] உலகத்தைப் படைத்ததாக ரிக்வேதத்தில் கூறப்படும் **அயாம்நபாத்** என்ற கடவுள் பற்றிய உவமை வருணணையில் வரும் இவ்வரிகள், உணவை வழங்கியது பெண் என்பதையும், அவள் வீட்டு வேலைக்காரியாகப் பணிவான அடிமையாக இருந்ததையும் காட்டுகின்றது. ஆணாதிக்கச் சமுதாயம் கோலோச்சியதையும், அதே நேரம் பெண்ணுக்கு உணவு வழங்கும் ஆற்றல் இருந்ததையும் காட்டுகின்றது.

இன்று நவீனத்துவத்துக்குப் பிந்திய பின்நவீனத்துவ ஏகாதிபத்தியம் பெண்ணிடம் எஞ்சியிருந்த சொத்துரிமையைப் பறித்தெடுத்து, அவளின் கண்டு பிடிப்புகளைத் தனதாக்கியும், அழித்தும் வரும் புதிய போக்கை எத்தனை சமூகவியலாளர்கள், புரட்சிக்காரர்கள், பெண்ணியல்வாதிகள் அடையாளம் காண்கின்றன. பெண்ணியம் பேசும் பிரிவுகள் பெண்ணின் அறிவியல் கண்டுபிடிப்புகள் பறிக்கப்படும் போதோ, எஞ்சிக் கிடந்த அரை வயிற்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கஞ்சிக்கான பெண்ணின் சொத்தாக நீடித்த பொருள் வளங்களைக் களவாடிச் சூறையாடும் போதோ கண்டு கொள்வதில்லை.

உதாரணமாக இந்தியாவில் பெண்களின் கைகளில் இயற்கை விஞ்ஞானத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தில் 4 இலட்சம் நெல் வகைகள் இருந்தன. கடந்த 50 வருடத்தில் 30,000 இத்திற்க்கும் மேற்பட்ட நெல் வகைகள்[5] இருந்தன. இதை இன்று ஏகாதிபத்தியம் தனது பரிசோதனை மையங்களில் அழித்து இயற்கை பரிணாமத்தையும், இயற்கையையும் எதிர்த்து நிற்க முடியாத ஓரினப் பயிராகவும், ஓரின விலங்காகவும் மாற்றி உருவாக்கி வருகின்றனர். இதைப் பிலிப்பைன்ஸ் மக்கள் **ஏகாதிபத்திய விதை** எனச் சரியாக அழைக்கின்றனர். பெண்ணின் அறிவியல், இயற்கைப் பாதுகாப்பு என அனைத்தையும் பறித்தெடுப்பதைப் பெண்ணியம் பேசுவோர் கண்டு கொள்வதில்லை. உச்சத்தொனியில் பூர்சுவா கோரிக்கைகளை உயர்த்தவும், கூச்சல் இடவும் தயாரானவர்கள், பெண் பின்நவீனத்துவப் பொருளாதார வழியில் மேலும் அடக்கப்படும் போது, அதே பின்நவீனத்துவ வழியில் அதற்குச் சார்பாகப் புலம்புகின்றனர்.

இன்று மூன்றாம் உலக நாடுகளில் பெண்ணின் சொத்தாக இயற்கை வளமும், அதன் மீதான அறிவியலும், விவசாயம் சார்ந்த அறிவியல், பொருளாதார ஆதாரங்கள் இன்னமும் நீடிக்கின்றன. இதற்கு எதிராக ஏகாதிபத்திய உலகமயமாதல் நாலு கால் பாய்ச்சலில் முரணின்றி அழிக்க முற்படும் நிலையில், பெண்ணியத்தைப் பாதுகாக்கப் போராடுவதும்,இன்றைய பெண்ணியத்தின் தற்காப்பைப் பலப்படுத்தவும், ஆணாதிக்கத்தை ஒழிக்கவும் உள்ள மிக முக்கியமான அரசியல் வழியாகும். பெண்ணிடம் இருந்து உரிமைகள் மேலும் பறிக்கப்படுவதை எதிர்த்து, அதை ஆதாரமாகக் கொண்டு போராடாத அனைத்துப் பெண்ணியமும், அனைத்துப் போராட்ட அரசியலும் ஆணாதிக்கத்தைப் பாதுகாப்பவை தான்.

இயற்கையை அழிக்கும் முதலாளித்துவச் சூறையாடல் ஆணின் உற்பத்திக்குச் சந்தைப் பெறுமானத்தைக் கொடுக்கும் வகையில் சமூக நுகர்வு வேட்டை கொண்டிருப்பதால், பெண்ணின் உழைப்பு உற்பத்தியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இது சமுதாயத்தின் பல மாற்றத்தைச் சந்தித்த நிலையில், பெண்ணை வீட்டு வேலைக்கு வெளியில் சுரண்டும் வர்க்கம் கூலி உழைப்புக்குள் சுரண்டிக் கொழுக்க கொண்டு வந்த போதும், பெண் உழைப்பு பெறுமதியற்ற எல்லைக்கு உட்பட்ட வகையில் ஆணை விட பெறுமதியற்றதாகச் சுரண்டும் சமுதாயம் வரையறுத்துக் கொண்டது.

**மனிதச் சமுதாயத்தில் அனைத்து உற்பத்தியும் இயற்கையில் உள்ள பொருட்கள் மீதான மனித உழைப்பால் உருவாக்கப்படுகின்றன.**





பொருட்கள் மதிப்பற்றதாக இயற்கையில் இருக்கின்றது. அவை எல்லா மனிதர்களும் உழைப்பில் ஈடுபட்டு, தேவைக்கு ஏற்ப பொருட்கள் பயன்பட்டுப் பெண்ணின் உழைப்பும், ஆணின் உழைப்பும் இணைந்து உழைப்பு எல்லையால் பெறுமதிப்புடையதாக மாற்றுவது, பெண்ணின் விடுதலைக்கு அடிப்படையானதும், மிக முக்கியமானதுமாகும்.

இந்த வகையில் இந்த ஆணாதிக்கச் சுரண்டல் சமுதாயத்தில் பெண்ணின் உழைப்பை ஆணின் உழைப்புக்கு ஈடாகப் பெறுமதியாக்குவதும், அதேநேரம் பெண்ணின் இயற்கையைச் சார்ந்த உற்பத்தியின் மதிப்பற்ற நிலைக்கு ஆணின் உழைப்பைத் தரம் இறக்க வேண்டும். இது நீண்ட நெடிய பாதையூடாக மாறிச் செல்லும். அதாவது ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் பெண்ணியக் கோரிக்கைகள் ஆணாதிக்க இயற்கை மறுப்பு பெறுமதியைக் கோருவதுக்குப் பதில், ஆணின் ஆணாதிக்க உழைப்பின் மதிப்பைப் பெண்ணின் பெறுமதியற்ற இயற்கை நிலைக்கு மாற்றக் கோரி, போராட வேண்டும். இது அல்லாது பெண்ணின் உழைப்பை ஆணின் மதிப்புக்குக் குறைக்கக் (இங்கு கூலியைக் குறித்தல்ல) கோரும் (ஆணாதிக்கக் கண்ணோட்டத்தில் உயர்த்தக் கோருவது) கோரிக்கைகள் ஆணாதிக்கத்தைத் தக்க வைத்த பூர்சுவாக் கோரிக்கையாகும். இது இயற்கைக்கு எதிரானது.

ஆணின் நிலையைப் பெண்ணின் இயற்கை நிலைக்குத் தரம் உயர்த்த வேண்டும். அதாவது ஆணாதிக்கத்தால் பெண்ணிற்கு ஏற்பட்ட சில தவறான, இயற்கைக்குப் புறம்பான அம்சங்களைக் களைந்த படி, ஆணின் சில நல்ல இயற்கை சார்ந்து, பெண் சார்ந்து உள்ள அம்சங்களை உள்வாங்கிய படி ஆணைத் தரம் உயர்த்தி பெண் -ஆண் ஒன்று இணைய வேண்டும். எப்போதும் பெண்ணில் பெரும்பான்மையான அம்சங்களும், ஆணில் சிறுபான்மையான அம்சங்களும் இயற்கை சார்ந்து உள்ளதால் பெண் சார்ந்து ஆண் நிலையை மாற்றப் போராட வேண்டும். ஆனால் எதார்த்தத்தில் பல பெண்ணிலைவாத அமைப்புகள் எதிர் நிலையில் ஆணாதிக்கம் சார்ந்து, ஏகாதிபத்தியத் தனிச்சொத்துரிமை சார்ந்த முன்னேற்றத்தை அனைத்துத் துறையிலும் முன்வைக்கின்றனர்.

பொதுவாகப் பெண்ணின் இயற்கை சார்ந்த அம்சங்கள் அடிநிலையில் சுரண்டலுக்கு உள்ளாகும் மக்களிடையேயும் நீடிக்கின்றன. மத்தியதர மற்றும் மேற்பட்ட பிரிவு பெண்களிடம் இயற்கையை மறுத்த ஆணாதிக்க அம்சம் ஆண்களை விட சற்று குறைவாக உள்ளதுடன், இதைக் குறைபாடாக உணர்ந்து ஆணாதிக்கத்தை நோக்கி முன்னேறுவதிலும், போராடுவதிலும் போட்டி போடுகின்றனர்.

உதாரணமாக அடிநிலைப் பெண்கள் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்த பின் உண்ணும் பழக்கம், பகிர்ந்து உண்ணும் பழக்கம் ஆணாதிக்கத்துக்கு எதிரானது. ஆணை அந்த நிலைக்கு, அதாவது பகிர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உண்ணும் நிலைக்குத் தரம் உயர்த்துவதன் மூலம் தான் பெண்ணை மதிக்கும் பண்பாடும், மற்றவர்களை மதித்து வாழும் பண்பாடும் உருவாகும். இதுதான் இயற்கை. ஆனால் இந்தப் போக்கு மேல்தட்டுப் பெண்களிடம் கிடையாது. அவர்களும் ஆணாதிக்கவாதிகள் போல் தனியுடைமைக் கண்ணோட்டத்தில், பெண்களிடம் நீடித்த சமூகப் பகிர்வுக் கண்ணோட்டத்தைக் கைவிட்டு,ஆணைப் போல் பெண்ணும் ஆணாதிக்க உலக நோக்கில் சீரழிந்துள்ளனர்.

இது போன்று ஒவ்வொன்றிலும் இயற்கை சார்ந்த சமூகப் பெண்ணியத்தைப் பாதுகாக்கப் போராடும் அதேநேரம், சமூக இயக்கம் ஆண் - பெண் வேற்றுமையில் இயற்கை சார்ந்து அடையாளம் கண்டு கொள்வது அவசியம். ஆணாதிக்கத்தின் பக்க விளைவுகளினால் இயற்கைக்கு மாறானதை இனம் கண்டு கொள்வதும், அதை எதிர்த்து இயற்கையைக் கோரிப் போராடுவதும் பெண்ணியத்தின் மிக கூர்மையான அடிப்படையான விசயமாகும். இவை அல்லாத அனைத்தும், இந்த ஆணாதிக்க எல்லைக்குள் சரணடைவை அல்லது சலுகையைக் கோரும் ஆணாதிக்க வரையறைகளேயாகும்.

பெண்ணின் அறிவியல் விழிப்புகள் இயற்கை சார்ந்தது. ஆணாதிக்கத்தை எதிர்த்து இயற்கை உற்பத்தியில் இருந்து பெண்ணின் கோரிக்கைகள் இயற்கையாக வந்ததால், பெண்ணின் விழிப்புணர்ச்சி தனியுடைமை சமுதாய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிட்டன. இதனால் பெண்ணின் விழிப்புணர்ச்சி ஏற்படாது இருக்க பெண்ணுக்குக் கல்வி மறுக்கப்பட்டது.

இந்த நிலையில் பெண்ணின் அறிவு வளர்ச்சி பெற்ற அனைத்து முயற்சிகளுக்கும் எதிராக, அவர்களைச் **சூனியக்காரி** என்றும், வேறு வகையிலும் அழித்து ஒழிக்கப்பட்டனர். இங்கிலாந்தில் வியாதியைக் குணப்படுத்தும் இயற்கை சார்ந்த பெண்கள் சூனியக்காரிகளாகப் பலியிடப்பட்டனர். இந்த நிலையில் அறிவைப் பெற்ற பெண்கள் தம்மை வெளிக்காட்ட பயந்து மௌனம் சாதித்தனர். நாலு விசயத்தைத் தெரிந்து பேசும் பெண்களையும், கேட்கும் பெண்களையும் அடங்காப்பிடாரிகளாக, வாய்ச்சாலக்காரிகளாகக் காட்டுவதெல்லாம் இன்றும் தொடர்கின்றது.

இன்று **சுரண்டும் கல்வி**யைப் பெண்ணுக்கு அனுமதித்த **சுரண்டும் வர்க்கம்** இதற்குள்ளான சிந்தனையையும், எல்லையையும் வரையறுக்கின்றது. நாலு விசயம் சுரண்டும் அமைப்புக்கு வெளியில் தெரிந்தாலும், அவள் இந்தச் சமூகத்தின் முன் கேவலத்துக்குரிய பிறவி தான். கல்வியில் இன்றும் சுரண்டல் எல்லையைத் தாண்டிச் சிந்திப்பதை மறுக்கின்றது, இந்த ஆணாதிக்கச் சமூகம்.

அடிமட்டப் பெண்ணின் இயற்கை சார்ந்த அறிவியல் என்பது இன்றும் இயற்கையைச் சார்ந்து உள்ளது என்பது மிக முக்கியமானதாகும். ஒரு





கிராமத்திலோ அல்லது காட்டிலோ வாழும் கிராம அல்லது காட்டு வாழ் மக்களின் தேவைகள், அறிவுகள் இயற்கை சார்ந்து உள்ளதால் இவை பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. இந்தியாவில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினர் ஒரு வருடத்தில் 27 வகையான இலைத் தாவரத்தை உண்டு வருகின்றனர்.

ஏகாதிபத்தியச் சுரண்டல் கல்வி அறிவற்ற இருளர் சமூகத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் 37 வகையான தாவரங்களின் பெயரை இருளப் பெயர் கூறி அடையாளம் காட்டியதோடு, அதன் பயன்பாடுகளையும் விளக்கினான்.[11] இந்த வகையில் **கல்வி இயற்கையை நோக்கியா? செயற்கையை நோக்கியா?** என்பது பற்றிய அடிப்படை கேள்வி பெண்ணியத்தின் முன் எழுப்பப்பட வேண்டியுள்ள நிலையில் ஆணாதிக்கம் கோலோச்சுகின்றது. பெண்ணிடம் காணப்படும் இயற்கை சார்ந்த மருத்துவத்தை எடுத்தால், பாரம்பரியமாகத் தெரிந்து வரும் மருத்துவக் கல்வி, ஆணாதிக்கத் தனியுடைமைச் சமுதாயத்தில் மதிப்பற்றதால் அக்கல்வியும் கூட மதிப்பற்றதாகின்றது. வைத்தியராகும் கனவுடன் பூர்சுவா வர்க்கம் அலையும் போது, அடிமட்டப் பெண்களிடம் காணப்படும் இயற்கை மருத்துவம் பண மதிப்பற்றதால் அது ஆணாதிக்கத் தனியுடைமை மருத்துவத்தால் அழிக்கப்படுகின்றது.

மிருக வளர்ப்பில் பெண்கள், தாயை இழந்த குட்டிகளுக்குத் தன் சொந்த முலையில் பால் கொடுப்பது சர்வ சாதாரணமாக இருந்தது. அத்துடன் மருத்துவ அறிவையும் பெற்று இருந்தனர். தாவரங்களின் ஒன்றுக்கு மேற்பட்ட இணைப்புகளின் விளைவுகளைக் கொண்டு, கண்டறிந்த விளைவுகள் மாற்றத்தை ஏற்படுத்திய போது, அவை சூனியமாக விளக்கப்பட்டது. இது பற்றி ஆப்பிரிக்க வாசிகளிடம் கேட்ட போது "சில விளைவுகளை ஏற்படுத்தும் மூலிகைகளைப் பற்றி அறிதலும், அவற்றைக் கலந்து தேவையான விளைவைப் பெறுதலும்"[83] என்று விளக்கினர். ஆனால் இன்று **சூனியம் முற்றாகத் திரிபடைந்து போனது ஏன்?** ஆணாதிக்கம் கோலோச்சிய போது பெண்ணின் அரிய சமுதாய நோக்கம் கொண்ட கண்டு பிடிப்புகள், தனிச் சொத்துரிமைக் கண்ணோட்டத்தில் இலாபத்தைத் தரக் கூடியவைகளை ஆண் படிப்படியாகக் கைப்பற்றிக் கொள்கின்றான். ஆண் அதை ஆணாதிக்க நவீனக் கண்டுபிடிப்பின் ஊடாக மேலும் மேம்படுத்தி மருத்துவமாக மாற்றிய அதே நேரம், பெண்ணின் மருத்துவச் சக்தியைச் சூனியமாக்கி அன்னியப்படுத்தினான்.

நாட்டு வைத்தியம் நவீன மருத்துவத்தின் முன் இன்று உதைக்கப்படுவது போல், பெண்ணின் மருத்துவமான சூனியம் சிறுமைப்படுத்தப்பட்டது. குழந்தை பராமரிப்பு, பிரசவம் போன்றதில் இருந்து மிருக வளர்ப்பு, பயிர் செய்வது வரையில் சந்தித்த அநேகமான நெருக்கடிகளுக்கு, இயற்கை சார்ந்து கண்டறிந்த மருத்துவம் ஆணின் சொந்தம் அல்ல. அவை பெண்ணின் உயிராதாரமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாதுகாப்பை வழங்கிய வளர்ச்சியின் கண்டுபிடிப்புக்கு ஊடாகப் பெண்ணின் உரிமையாக இருந்தது. இன்று ஆணாதிக்கச் சமுதாயத்தில் அதுவும் களவாடப்பட்டது. சூனியம் என்ற பெயரில் கொச்சைப்படுத்தி இன்று அடித்துக் கொல்லும் அளவுக்குச் சிறுமைப்படுத்தப்பட்ட வரலாற்றில் இருந்து பெண்கள் மீளவும், இயற்கை சார்ந்து போராடவும் வேண்டியுள்ளது.

''மெக்ஸிகோ மக்கள் மத்தியில் **பெண்களே மிகச் சிறந்த அகராதிகள்** என்னும் பழமொழி இன்றும் வழக்கில் இருக்கின்றது.''[83] இதன் மூலம் சமுதாய அறிவினைப் பெண்கள் திரட்டி வைத்திருந்ததைக் காட்டுகின்றது. ஆண்கள் அலைந்து திரிந்து கண்டவற்றைப் பெண்களுக்குக் கூறிய போது, அவைகளையும், தனது உற்பத்தி மற்றும் சுற்றுப்புறத்தில் பெற்ற அறிவையும் இணைத்து, சந்ததி சந்ததியாய் எடுத்துச் சென்ற ஓர் உன்னதமான தகவல் மையமாக, தகவல் கடத்தியாகப் பெண்கள் திகழ்ந்தனர். இன்று வரை கூட இயற்கை சார்ந்து வாழும் பெண்களிடம் மட்டும் அவ்வறிவு எஞ்சிக் கிடக்கின்றது. வரலாற்றில் இன்று சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட ஆணாதிக்கக் கல்வி, இயற்கையான அனைத்துக் கல்வியையும் தனக்கு அடிமைப்படுத்திச் சிதைத்து தனக்குச் சேவகம் செய்யவும் அல்லது அழித்து நாசமாக்கியும் உள்ளது. இயற்கை அறிவு மற்றும் வரலாற்றுத் தொடர்ச்சியான அறிவுகளை இழிவுபடுத்தி பார்க்கும் பண்பும், அவைகள் மீதான அழிவை வேகப்படுத்தியுள்ளது. பெண்களின் தொடர்ச்சியான அறிவைப் பல்வேறு பண்பாட்டுக் கலாச்சாரத் தொடர்ச்சியில் இருந்து மீளப் புனரமைப்பதே புரட்சியின் அடிப்படையான வர்க்க நலனை உறுதி செய்யும் மார்க்கமாகும்.

இன்று ஆணாதிக்கத் தனியுடைமைச் சமூகம் பெண்ணை ஒடுக்கிய நிலையில் பெண் தன்னிடம் தக்க வைத்துள்ள இயற்கை சார்ந்த கல்வியைப் பாதுகாக்கவும், ஆணின் இயற்கை மறுப்பு ஆணாதிக்கக் கல்வியை இயற்கை சார்ந்த பெண்ணிய நிலைக்கு மாற்றப் போராட வேண்டும். இன்று ஆணாதிக்க அறிவியலில் 80 சதவீதம்[5] உலகை ஆளும் ஆணாதிக்கத் தனியுடைமைச் சுரண்டல் சமூகத்தைப் பாதுகாக்க தேவையான ஆயுதக் கண்டுபிடிப்புக்குப் பயன்படுகின்றது. இதே நேரம் இலாப நோக்கம் கருதி ஆணாதிக்கம், பெண்ணின் அடிப்படை வாழ்வு சார்ந்த அறிவியல் இயற்கைகளை, மையங்களைச் சூறையாடி அழித்த காடுகளினால் மண் அரிப்பு, நீர் அரிப்பு, சூறையாடல்... போன்றவற்றால் உலகில் 150 கோடி மக்கள் பட்டினிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அடிமட்டப் பெண்ணின் அறிவியல் என்பது சமூக அடித்தளத்தைப் பாதுகாக்க, வாழ்வை மேம்படுத்த இயற்கை சார்ந்து உள்ளது. அறிவியல் ரீதியில் அடிமட்டப் பெண்ணின் இயற்கை சார்ந்த அறிவியல் நிலைக்கு, ஆணாதிக்க அறிவியல் மாற்ற வேண்டிய நிலையில் பெண்ணியம் தன்னை அடையாளம் காட்டிப் போராட வேண்டும்.





இன்று இயற்கையில் இருந்து உருவான பயிர்கள் இயற்கையில் பரிணாமத்தினைச் சுயப் பாதுகாப்பு கொண்டு, தனது இயற்கையின் உயிர் வாழ்தலைக் கொண்டிருந்தன. இது மற்ற உயிரினத்துடன் அக்கம் பக்கமாகக் கூடி வாழ்ந்தன. இதன் மீது இலாப நோக்கம் கொண்டு நடத்திய தாக்குதல் ஊடாகக் கலப்புப் பயிரினத்துக்குப் பதில் ஒற்றைப் பயிரினத்தைச் செயற்கை முறையில் உருவாக்கி இயற்கை அனைத்தையும் அழித்தனர். இது இயற்கையை எதிர்த்து நிற்க முடியாது பலதத அழிவுகளையும், பஞ்சத்தையும் விளைவாக்கியது.

இதையே மனிதனின் மீது கையாளும் ஏகாதிபத்தியச் சுரண்டல் பெண்ணையும், ஆணையும் பிளந்து ஒற்றைத் துருவம் ஆக்கி வருகின்றது. கூட்டு வாழ்வுக்குப் பதில், தனி மனிதர்கள் வரலாற்றின் ஓட்டமாக மாற்றிய பண்பாடு பெண்ணை வறுமையிலும், தனிமையிலும் சிதைக்கின்றது. பெண்ணிடம் இருந்த தற்காப்பு குடும்பத் தெரிவை ஆணாதிக்கம் அடக்கி ஆள்வதில் இருந்து மீட்சியாகக் காட்டிப் பெண்களை விபச்சாரச் சமூக அமைப்புக்குள் இயற்கைக்கு மாறாக வழிநடத்துகின்றன, ஏகாதிபத்திய ஒற்றைத் துருவச் சுரண்டல்கள்.

இயற்கையில் இருந்து மனிதன் பிரித்து எடுக்கப்பட்டான். காட்டில் இருந்த மிருகங்கள், ஆறுகள் பிரிக்கப்பட்டன. சமூகத்திலும், இயற்கையிலும் இருந்து ஆண் பிரிக்கப்பட்டான். ஒவ்வொன்றையும் இயற்கையில் இருந்து செயற்கையாக, அதாவது அனைத்தையும், குறிப்பாக ஆண்-பெண்ணைக் கூடத் தனித்தனியாக வளர்க்கப்பட்டனர். இயற்கையில் இருந்து பணம் உருவாக்கப்பட்டது. அது தனிநபர்களின் கைக்கு மாற்றப்பட்டது. அது தனிநபரின் சொத்தாக இயற்கை, பெண் என அனைத்தும் தனிச் சொத்துரிமை சார்ந்து மனித உளவியலால் சிதைக்கப்படுகின்றது. இதன் நீட்சியில் இந்த ஜனநாயக அமைப்பு பாதுகாக்கப்படுகின்றது. இந்தச் செயற்கை ஒழுங்கை இயற்கை சார்ந்து புரிதல் கொண்டு சமூக விடுதலையின் உயிர்மூச்சாக அரசியல் மயமாக்கிப் போராட வேண்டும். இதை மறுப்பது ஆணாதிக்கத்தைப் பாதுகாப்பதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 5. பெண்ணின் அதிகரிக்கும் வேலைப் பளுவுடன் கூடிய வறுமை

ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பு சார்ந்து இந்தியாவில் நிகழ்த்தப்பட்ட பசுமைப் புரட்சியானது இங்கு வாழ்ந்து வந்த பெண்ணின் வீட்டு வேலையையும், வறுமையையும், கூலி உழைப்பையும் கடுமையாக்கி உள்ளது. நிலத்தில் ஏகாதிபத்தியத் தேவைக்கான உணவு தயாரிப்பு, மிருகத்தில் ஏகாதிபத்திய நுகர்வு, காட்டில் ஏகாதிபத்தியத் தேவைக்கான காடழிப்பு ஆகியவை பெண்களின் சுமையைப் பல மடங்காக்கியது. ஆனால் இது மறைமுகமான ஏகாதிபத்தியத் தாக்குதல் என்பதால் வெறும் ஆண்களாக அல்லது உள்ளூர் ஆட்சியாளராகக் காட்டுவது இன்றைய பல பெண்ணியல்வாதிகள் போல் அல்லது பின்நவீனத்துவவாதிகள் போல் காட்டுவதும், திசை திருப்புவதும் நிகழ்கின்றது. இது எல்லா மூன்றாம் உலக நாடுகளின் பொதுப் பண்பாகவும் உள்ளது.

காடழிப்பு என்பது காட்டை நோக்கி பெண்கள் விறகுக்காக நீண்ட தூரம் அலைவதை நிபந்தனையாகக் கோருகின்றது. ஆப்பிரிக்கப் பெண்கள் தண்ணீர் மற்றும் உணவைத் தங்களின் நிறையை விட 20 சதவீதம் அதிகமாகத் தலையில் வைத்து நீண்ட தூரம் சுமந்து செல்கின்றனர். “கிழக்காப்பிரிக்காவிலுள்ள குடிகளில் தன் நிறையை விட இருபது கிலோ ஓர் ஆணினால் சுமக்கக் கூடிய அதிகப் பட்ச எடையாக இருந்தது. ஆனால் அவர்களின் பெண்களோ 5, 10 மைல் தொலைவிற்குத் தன் நிறையை விட ஐம்பது கிலோ எடை விறகு சுமந்து வருவது காணப்படுகின்றது. இந்தியாவில் இவ்வாறு 10 மைல் தொலைவிலிருந்து நீரும், விறகும் சுமந்து வருவதை இன்றும் காணலாம். அஸ்ஸாமிலிருக்கும் காசி பெண்கள் இதற்கு குறிப்பிடத்தக்க உதாரணமாகும்”[83]

இவ்வுதாரணம் பெண்ணின் உடல் வலிமைக்கு எடுத்துக்காட்டானதாக இருந்த போதும், சிறுவயதில் இருந்தே பெண்ணின் கடின உழைப்பு இதற்கு வித்திடுவதையும், பெண்ணின் வாழ்க்கைச் சுமையையும் எமக்குக் காட்டுகின்றது.





பூர்சுவா பெண்ணியல்வாதிகள் உடல் வலிமையைக் காட்டிப் பெருமைப்படும் அளவுக்கு (நிறைய உடல் வலிமை சார்ந்த உதாரணங்களை இந்நூல் தருகின்றது), இவை அவர்களின் நலனுக்குரிய விசயமாக இருக்கலாம். ஆனால் பாட்டாளி பெண்ணுக்கு இது வேறு விசயம். பெண்ணால் எல்லாம் முடியும் என்று நிறுவப் போதுமானதாக இருந்த போதும், இதன் பின்னான வாழ்க்கை அவலமானது. சமுதாயச் சுமைகள் எப்படி பூர்சுவா அல்லாத பெண்கள் மீது திணிக்கப்படுகின்றது என்பதை எமக்குத் துல்லியமாகக் காட்டுகின்றது. ஒரு பகுதி பெண்களின் வாழ்க்கை என்பது நீண்ட தூரம் அலையக் கோருகின்றது. இந்தப் பெண்களின் கோரிக்கையைப் பற்றி எந்தப் பூர்சுவா பெண்ணியமும் கவலைப்படப் போவதில்லை.

ஒவ்வொரு வர்க்கப் பெண்ணும் தனது சொந்த நலனில் இருந்தே சமூகத்துக்கான கோரிக்கைகளைக் கோருகின்ற போது, அவை மக்கள் விரோதத் தன்மையாகி மற்ற பெண்ணுக்கு எதிராகி விடுகின்றது. பெண்களின் பொதுவான வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்யாத பொதுக் கோரிக்கைகள், சமூகக் கோரிக்கையாகி விட முடியாது என்பதை நாம் காணமுடியும். பெண்களின் வாழ்க்கைத் தரம் என்பது ஒன்றுபட்ட நிலைக்கு நகர்த்தக் கோருவதே முதன்மையானதும்,அடிப்படையானதுமாகும். இது தான் பெண்களை ஒன்று இணைக்கும் மையமாகும்.

ஐரோப்பாவில் வரைமுறையற்ற விபச்சாரத்தைக் கோரும் பெண்ணுக்கும், அடிப்படை தேவையான நீர் மற்றும் விறகைக் கோரும் பெண்ணுக்கும் இடையில் ஒன்றுபட்ட சமுதாயப் பார்வை எப்போதும் அபத்தமாகவே இருக்கும். சமுதாயத்தின் அடிமட்டப் பெண்களின் வாழ்க்கையை உயர்த்தக் கோரும் கோரிக்கை தான் பெண்ணியத்தின் அடிப்படையான விடுதலைக்கு வழிகாட்டும். ஒவ்வொரு பெண்ணும் பெற்ற உரிமையை, அடுத்தப் பெண்ணுக்கு மறுக்கின்ற எல்லை வரை ஆணாதிக்கமே கோலோச்சும். அடிமட்டப் பெண்ணின் கோரிக்கையை உயர்த்தும் போதே சொந்த விடுதலையைச் சாத்தியமாக்கும்.

ஐரோப்பியப் பெண்ணும், பூர்சுவா பெண்ணும் (மூன்றாம் உலகத்தில் உள்ள பூர்சுவா பெண்) மூன்றாம் உலகப் பெண்ணுக்காகச் சொந்த நாட்டை எதிர்த்து போராடும் போதே, அது சாராம்சத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பாகின்றது. அது மூன்றாம் உலக நாட்டுப் பெண்களை மட்டுமல்ல, சொந்த நாட்டுப் பெண்களையும் விடுவிக்கும். ஆனால் எதார்த்தத்தில் ஐரோப்பியப் பெண்ணும், பூர்சுவா பெண்ணும் மூன்றாம் உலகப் பெண்ணின் கோரிக்கையை மறைமுகமாக மறுத்தபடி தான், சொந்த நாட்டுக் கோரிக்கையை (இதைக் கூட மூன்றாம் உலகப் பெண் மீது ஏகாதிபத்திய நாட்டுப் பெண்ணியம் மறைமுகமாகத் தனது பொருளாதாரப் பலத்தில் இருந்து திணிக்கின்றது.), மூன்றாம் உலகப் பெண்ணின் சுமையினால் கிடைத்த அடிமை நலனில் இருந்தே எழுப்பப்படுகின்றது. மூன்றாம் உலக நாடுகளில் பெண்களின் மீதான சுமை மற்றும் சுரண்டல்தான், ஐரோப்பியப் பெண்ணின் இன்றைய நிலையைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோற்றுவித்தது. இந்த உண்மையைக் கண்டு போராடாத பெண்ணியம் ஏகாதிபத்திய ஆணாதிக்கமாகும்.

ஐக்கிய நாட்டு நிதி நிறுவனத்தின் பத்திரிக்கையாகிய **போப்பூலை** குறிப்பொன்றின் படி, ஆப்பிரிக்க-ஆசிய-பசுபிக் பிராந்தியப் தொழிலாளர் வர்க்கப் பெண்கள் வாரம் ஒன்றுக்கு ஆண்களை விட அதிகமாக 12 மணி நேரம் கடுமையாக உழைப்பதாகவும், இப்பெண்கள் கடந்த பத்து வருடத்துக்கு முந்திய வாழ்க்கைத் தரத்தைப் பேண, வாரம் ஒன்றுக்கு 60 முதல் 90 மணிநேரம் உழைக்க வேண்டிய அளவுக்கு வறுமை விதியாகி, கடந்த கால வாழ்வையும் இழந்து போய் உள்ளனர். பூதமாக வளர்ந்து வரும் ஜனநாயக உலகமயமாதல் செல்வத்தின் விளைவுதான் இது.

இன்று இந்தியாவில் பசுமைப் புரட்சியின் பின் பெண்கள் நீருக்காகப் பல மைல் தூரம் நடந்து சென்றே நீரைச் சேகரிக்க வேண்டிய அளவுக்கு நிலத்தடி நீரைப் பாலைவனமாக்கியது ஏகாதிபத்தியம். மேலும் அது ஏகாதிபத்தியப் பணப்பயிர்களின் ஊடாக அடிப்படை உணவுத் தேவையை மறுத்து பட்டினிக்குள் நகர்த்தி வருகின்றனர்.

"இந்தியாவில் உத்திரப் பிரதேசத்தில் 57 மாவட்டங்களில் 43 மாவட்டங்கள் கடினமான நீர்ப் பற்றாக்குறையில் சிக்கி உள்ளது. கி.பி.1960-இல், நீர்ப் பற்றாக்குறையில் இருந்த கிராமங்கள் கி.பி.1972-இல், இரு மடங்கானது. ஹமீர்பூரில் முதலில் மாட்டு வண்டியில் நீர் கொண்டு வரப்பட்டது.பின் அது நிறுத்தப்பட்ட நிலையில், இன்று பெண்கள் 15 முதல் 20 மைல் தூரம் நடந்து சென்றே நீரைச் சேகரிக்கின்றனர். தார்குலா மாவட்டத்தில் நீர்ப் பற்றாக்குறையால் அங்கு உள்ள எந்த ஆணையும் பெண் திருமணம் செய்ய தயாராக இல்லை. திருமணம் செய்தால் நீரின் தேடுதல் எண்ணிக்கைக்கு ஏற்ப இரட்டிப்பாகத் தேவைப்படுவதுடன், அதைப் பெண்களே சேகரிக்க வேண்டிய வேலைச் சுமையையும், வாழ்க்கைத் தியாகத்தையும் செய்கின்றனர்.

மத்தியப் பிரதேசத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நீர்ப் பற்றாக்குறையில் சிக்கியுள்ளது. இது ஏற்பட்ட கி.பி.1975-இக்கும் கி.பி.1982-இக்கும் இடையில் 18 இலட்சம் ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டன. சில இடத்தில் ஒரு குடம் தண்ணீர் 10 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. தண்ணீர் கொள்ளையடிப்பைத் தடுக்க பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது அவசியமாகின்றது. ஏன் நாகரிகமான கி.பி.2000 ஆம் ஆண்டில் கூட இந்து வானரங்களின் ஏகாதிபத்தியத் தரகு ஆட்சியில், "குஜராத் மாநிலத்தின் 26 மாவட்டங்களில் 17-இலும், இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள 32 மாவட்டங்களில் 27-இலும், ஆந்திராவில் 18 மாவட்டங்களிலும் பஞ்சமும்,வறட்சியும் தலைவிரித்தாடுகின்றது."[6] அண்ணளவாக 9 கோடி மக்கள் நீர் இன்றி நீருக்காக அலையவைத்துள்ளது சூறையாடும் உலகமயமாதல். ஏகாதிபத்தியக் கொள்ளைக்காகக் காடுகளை அழித்தும், ஆறுகளின் போக்கைச் சிதைத்தும்,





பணப்பயிருக்காக நிலத்து நீரை உறிஞ்சிய வறண்ட பூமியில், மக்களை நீர் இன்றியே கொன்று போடும் ஜனநாயகத்தை இட்டு கம்யூனிஸ்ட்டுகளைத் தவிர, யாரும் புலம்புவது கூட இல்லை

இந்தியாவில் இன்றைய காலத்தை மிக துல்லியமாக நாட்டுப்புறப் பாடல்கள் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன.

"ஓலகம் அப்ப இருந்தது மாதிரி
இப்ப இருக்கா
ஆத்திலே தண்ணி மோந்து
ஆகாசம் தீர்ந்தது அந்தக்காலம் - இப்ப
குழாயடி தண்ணி வேண்டி
குடுமிச் சண்டை போடுறோம் இந்தக்காலம்"[12]

தண்ணீர்ப் பற்றாக்குறை இயற்கை அழிப்பில் தொடங்கி சூறையாடும் போது, பெண்களிடையே புதிய சண்டையை ஏற்படுத்துகின்றது. அத்துடன் குழாயடி நீண்ட நேரம் இதற்காகக் காத்துக் கிடந்து, போராட வைக்கின்றது. இது சுற்றுவட்டார உறவையே சிதைக்கின்றது.

ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தைக் கட்டியமைக்க, உலகவங்கி கட்டளைப்படி செயல்பட்ட எத்தியோப்பிய என்ற ஆப்பிரிக்க நாடு பஞ்சத்தால் 10 இலட்சம் மக்களைக் கொன்றது. மேலும் 80 இலட்சம் மக்களைப் பாதித்தது. இதற்கு முக்கிய காரணம் **ஆவாஷ் நதியின் குறுக்கே கட்டப்பட்ட அணைகள்** ஆகும். பணக்கார எத்தியோப்பியர்கள், டச்சுக்காரர்கள், இத்தாலியர்கள், இஸ்ரேலியர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் கம்பெனிகள் கரும்பு, பருத்தி மற்றும் வாழைப்பழச் சாகுபடிகளில் கொள்ளை லாபம் பெற, இவ்வணைகள் நீரை வழங்கின."[5] (சுருக்கப்பட்ட என் குறிப்பு)

உலகில் 280 கோடி மக்கள் குடிக்கச் சுத்தமான தண்ணீர் இன்றி தவிக்கின்றனர். இப்படியிருக்க உலகில் மனித உரிமைக்காக வீணாகக் கண்ணீர் வடிய அழுபவர்களும் சரி, பின்நவீனத்துவ எடுபிடிகளும் சரி உலகவங்கியின் ஏகாதிபத்திய நுகர்வுக்கும், கொழுத்தப் பணத் திரட்டலுக்கும், எத்தியோப்பியாவில் பத்து இலட்சம் மக்கள் பட்டினியால் கொல்லப்பட்டதையிட்டு ஒரு சொட்டுக் கண்ணீரும் வடித்ததில்லை. மாறாக ஒடுக்கும் வர்க்கங்களை எதிர்த்து ஒடுக்கப்பட்ட உழைக்கும் வர்க்கம் போராடும் போது, அதை மனித உரிமை மீறலாக ஜோடித்து சேறடிப்பதில் கண்ணும் கருத்துமாக ஏகாதிபத்தியத்துக்காகச் சேவை செய்ய வெட்கப்பட்டதில்லை.

உலகில் வறுமைக்குக் காரணம் அதிக ஜனத்தொகையும், உணவு இன்மையுமே என திரித்துக் காட்டுகின்றனர். ஆனால் உண்மை நிலை என்ன?[13]

அட்டவணை: 3-இல் காணலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அட்டவணை - 3

| | மொத்த உற்பத்தி | உலகில் தனிநபருக்கான வருடப் பங்கு |
|---|---|---|
| முக்கியமான கிழங்கு நான்கு வகைகள் (உருளைக் கிழங்கு..) | 49.68 கோடி டன் | 82.8 கிலோ |
| முக்கியமான உணவு மூன்று வகைகள் (அரிசி, சோளம், கோதுமை) | 171.69 கோடி டன் | 286.15 கிலோ |
| முக்கியமான குடி பானம் மூன்று வகைகள் | 1,88,05,000 | 1.8 கிலோ |
| (கோப்பி, தேநீர், கொக்கோ) | டன் | |
| எண்ணெய் விதை நான்கு வகைகள் | 10.41 கோடி டன் | 17.35 கிலோ |
| மீன் | 9.62 கோடி டன் | 16 கிலோ |
| சீனி | 12.12 கோடி டன் | 20.2 கிலோ |
| துணி | 161.64 | 269.4 |

முதல் மூன்று முக்கிய உணவு மற்றும் கிழங்கு சராசரியாக ஒரு நாளைக்கு வயது வேறுபாடு இன்றி ஒரு கிலோவை வழங்குகின்றது. இதைவிட மற்ற உணவுகள் எல்லாம் சேர்கின்ற போது உணவுப் பற்றாக்குறை என்பது கற்பனையானது. ஆனால் எதார்த்த வாழ்க்கையில் உணவு மக்களுக்குக் கிடைப்பது கற்பனையாக உள்ளது.

மேலும் இறைச்சி, பழம், மரக்கறி, மீன் போன்றவற்றின் உற்பத்தி எப்படிப் பட்டினியைக் கோரும்? **இங்கு ஜனத்தொகையல்ல வறுமைக்குக் காரணம். மாறாக ஒரு பகுதி மக்கள் கூட்டத்தினர் மிகையான நுகர்வும், அதன் மீதான ஊதாரித்தனமும் தான் வறுமைக்குக் காரணம்.** அத்துடன் சுரண்டும் வர்க்கம், பதுக்கல் வர்த்தகம் போல் கடலில் கொட்டியும், நிலத்தில் புதைத்தும், எரித்தும், பதுக்கியும் சந்தைவிலையை உயர்த்த முயல்கின்றன. இதன் மூலம் உணவை மக்களுக்குப் பற்றாக்குறையாக்கி, விலையை உயர்த்தி





பட்டினிக்குள் தள்ளுகின்றனர். வறுமையை உற்பத்தி செய்வது என்பது சுரண்டும் வர்க்க நலன்களுடன் தொடர்புடையது. இது மூலதனத்தைத் திரட்டிக் கொடுக்கின்றது.

ஒரு நாளைக்கு உலகில் உண்ணப்படும் சில பொருட்களின் அளவை ஆராய்வதன் மூலம் இந்த வறுமையின் மூலத்தை அறிய முடியும். ஒரு நாளைக்கு 200 கோடி முட்டைகள் உண்ணப்படுகின்றன. 16 இலட்சம் டன் சோளத்தையும், 7.27 இலட்சம் டன் உருளைக் கிழங்கும், 15 இலட்சம் டன் அரிசியும், 300 கோடி டன் தேநீரையும் உட்கொள்கின்றனர். செல்வந்தர்கள் பதப்படுத்தப்பட்ட 2.7 டன் மீனை ஒரு நாள் உணவாக உட்கொள்கின்றனர். மனிதன் சராசரியாக **2,000 கலோரி** உணவை உண்ண வேண்டியிருக்க, மேற்கு நாட்டவன் **4,000 கலோரி** உணவை உணணுகின்றான் அதேநேரம் ஆப்பிரிக்கன் சராசரி **1,800 கலோரி** உணவையே உண்ணுகின்றான். இது அடி, மேல் என வர்க்கத் தளத்தில் பிரியும் போது இதன் அளவு மேலும் அகலமாகும். வறுமையைப் போக்க உணவு இருந்தும், அவை அளவுக்கு மீறி மிதமிஞ்சி நுகரப்பட்டு அழிக்கப்படுகின்றது.

வறுமை ஒழிப்பு என்பது உலக உற்பத்தியைச் சமமாகப் பகிர்தலில் தொடங்கி, தேவைக்கு ஏற்ப எடுப்பதை நோக்கிப் போராடவேண்டும். இதுமட்டுமே பெண்ணின் வறுமைக்கு முடிவுகட்டும்.

ஒரு நாட்டில், ஒரு மக்கள் கூட்டத்தில், ஒரு குடும்பத்தில் பசியும் பட்டினியும் ஏற்படின் அது பெண்களையும், குழந்தைகளையுமே அதிகமாகப் பாதிக்கின்றது. ஆணாதிக்கப் பண்பாடு, கலாச்சாரம் இதன் ஊன்று கோலாக ஆணை விட பெண்ணையும், குழந்தையையும் கூர்மையாக நிர்ப்பந்திக்கின்றது. இன்று மூன்றாம் உலக நாடுகளில் நீடிக்கும் பட்டினிக்கு ஏகாதிபத்தியப் பொருளாதார நலன்களே காரணமாகும். தனது தேவைக்கும், தனது மூலதனக் குவிப்புக்கும் மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை ஆதாரங்கள் சிதைக்கப்பட்டு ,அதையொட்டி வாழ்ந்து வந்த மக்கள் கூட்டம், குறிப்பாகப் பெண்களின் ஆதாரமான எஞ்சிய இயற்கை சார்ந்த சமூகச் சொத்துகளை ஏகாதிபத்தியங்கள் கைப்பற்றியுள்ளன. அதாவது வறிய மக்கள் பிரிவுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் அடிப்படை உணவை வழங்கிய இயற்கை மற்றும் அது சார்ந்த அறிவியல் எல்லாம் சூறையாடப்படுகின்ற இக்காலத்தில் அது பெண்களுக்குப் பட்டினியையும், கலாச்சாரச் சிதைவையும் வழங்குகின்றது. அத்துடன் பல மடங்கு வேலைச் சுமையையும் ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பு ஏற்படுத்தி ஆணாதிக்கக் கொடூரத்தைப் பெண்கள் மீது தீவிரமாக்கியுள்ளது.

வளமான நிலங்கள், நீரின் செறிவான வாழ்விடங்கள் சார்ந்து பெண் சொந்தத்தில் தனது தேவையையும், குழந்தைகளின் தேவையையும் சுயமாகத் தீர்த்துக் கொள்ள கூடி, பொருளாதாரக் கலாச்சாரச் சமூகத் தன்மையை, ஏகாதிபத்தியப் பொருளாதார உலகமயமாதல் சூறையாடி வருவதையிட்டு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எந்தப் பெண்ணிலைவாதமும் அந்தப் பெண்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீரும் விட்டதில்லை. பூர்சுவா பெண்கள் தமது நுகர்வுப் பண்பாட்டு, கலாச்சாரத்தில் இருந்தபடி ஆணாதிக்கமாகத் தம்மை மாற்றக் கோரி ஆணாதிக்கத்துடன் அதன் பொருளாதாரப் பண்பாட்டுக் கலாச்சாரத்துடன் முரண்படுகின்றார்களே ஒழிய, இவர்களுடன் ஒப்பிடும் போது அடிமட்டப் பெண்களின் இயற்கை சார்ந்த குறைவான ஆணாதிக்கத்துக்கு உட்பட்டுள்ள இயற்கை சார்ந்த பெண்ணியத்தைப் பாதுகாக்கப் போராடுவதில்லை.

இந்த இயற்கை சார்ந்த பெண்ணிய வாழ்வுகள் என்பது முதலாளித்துவப் பெண்ணிலைவாதிகள் முன் அர்த்தமற்ற, பெறுமதியற்ற விசயங்களே. அதாவது சுரண்டும் வர்க்கம் பணம் பண்ணமுடியாத அனைத்தையும் பெறுமதியற்றவை என எப்படி மதிப்பிட்டு, அதைப் பண்பாட்டுக் கலாச்சாரமாக்குகின்றனரோ, அதையே இன்றைய பெண்ணியல்வாதிகள் அடிமட்ட மக்களின் அடிப்படை ஆதாரங்களைப் பெறுமதியற்றவையாகக் கண்டு ஏகாதிபத்திய வழியில் எட்டி உதைக்கின்றனர்.

ஏகாதிபத்தியங்கள் உலக வறுமையை மதிப்பிடும் போது தமது நுகர்வுப் பொருட்களை வாங்க முடியாத மக்கள் கூட்டத்தையே வறுமைக்குள் உள்ளவராக மதிப்பிட்டு, அந்த மக்களின் இயல்பான, இயற்கையைச் சார்ந்த நிறைவான அடிப்படை நுகர்வைப் பூர்த்தி செய்யும் வாழ்வு ஆதாரங்களை மறுத்து, இவை உபரியைத் திரட்டித் தரமுடியாத ஏகாதிபத்திய வறுமையின் மதிப்பீட்டுக்குள் அழிக்கப்படுவது வேகமாகியுள்ளது. இதே போன்று இன்றைய பெண்ணியல்வாதிகள் தமது பூர்சுவா பொருளாதாரப் பண்பாட்டுக் கலாச்சாரத்தில் நின்றபடி, அடிமட்ட மக்களின் இயற்கையான, இயற்கையைச் சார்ந்த ஆணாதிக்கமல்லாத பெண்ணியத்தை, பெண்ணியம் அல்லாத ஆணாதிக்கம் என்று அடையாளம் காட்டி, அப்பெண்களின் மீதான ஏகாதிபத்திய அழிப்பை அங்கீகரிக்கின்றனர். அதாவது செயற்கையாகக் கட்டியமைக்கப்பட்ட ஆணாதிக்க உலகமயமாதலின் பண்பாட்டில், அதற்குள் பெண்ணின் உரிமையை அடையாளம் காட்டியும், கோரியும் போராடக் கோரும் பெண்ணியம், உலகமயமாதலுக்கு எதிரான இயற்கையை ஆதாரமாகக் கொண்ட மக்களின் பெண்ணியத்தை மார்க்சியம் அல்லாத எந்தப் பெண்ணியமும் அடையாளம் காணவுமில்லை, காட்டியதுமில்லை, போராடவுமில்லை,போராடியதுமில்லை. மாறாக இதை அழிப்பதில் இந்த ஆணாதிக்க உலகமயமாதல் செயற்கையான இயற்கை மறுப்பு பொருளாதாரப் பண்பாட்டில் இருந்தபடி, பூர்சுவா பெண்ணியல் கோரிக்கையை முன்வைத்து ஆணாதிக்கத்திடம் பங்கு கேட்டுத் தம்மை இணைத்துக் கொள்ளக் கோருகின்றனர். இதை மறுத்து மார்க்சியப் பெண்ணியம் போராடுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. இயற்கையின் மீது, அது சார்ந்த மனித வளர்ச்சிக்கும், தமது வாழ்வு ஆதாரங்களைப் பாதுகாக்கவும் இயற்கை சார்ந்து போராடிக் கொண்டு இருக்கும் அந்தப் பெண்களின் விடுதலைக்கான பாதை மட்டுமே, பெண்ணியத்தின் சரியான அரசியல் மார்க்கமாகும்.





## 6. ஆணாதிக்கச் சாமத்தியச் சடங்கும் மனிதனின் அறியாமைகளும்

இயற்கையில் மனிதன் தனது வாழ்வுக்கான போராட்டத்தை எதிர் கொண்ட போது அவனுக்கு இயற்கையே புதிராக இருந்தது. இயற்கையின் எழுச்சிகள், அழிவுகள் எல்லாம் மனிதனுக்கு அழிவையும், ஆக்கத்தையும் கொடுத்த போது, அதன் மீதான கட்டுப்பாட்டைச் செலுத்தமுடியாத நிலைக்குள் தள்ளப்பட்டான். இது போல், தனது உடல் சார்ந்த மாற்றங்கள் எப்படி? எதனால்? ஏற்படுகின்றன என்பதை அறிய முடியாத மனிதனாகப் புதிர்களின் முன் வெறுமையாக நின்றான்.

எல்லா உயிரினங்களையும் போல் மனிதனும் இயற்கையைச் சார்ந்து இருந்த நிலையில் இருந்து மாறி, உழைப்பை இயற்கையின் மீது பயன்படுத்தத் தொடங்கியவுடன், அது சார்ந்து சிந்தனையும் அதன் மேல் உருவாகத் தொடங்கியது. உழைப்பு மூலம் இயற்கையை மனிதன் தனது தேவைக்கு ஏற்ப மாற்றத் தொடங்கியபோது, இயற்கை மற்றும் மனித உடலியல் புதிர்களைப் பற்றிய தேடுதலும் ஆரம்பமாகியது. இந்தக் கேள்விகளை ஒட்டி இயற்கைச் சீற்றங்களின் போதும், அழிவுகளின் போதும் மனித உழைப்பால் எதையும் செய்ய முடியாத போக்கில், இந்த இயற்கை நெருக்கடி மனித அழிவுகளை ஏற்படுத்தியது. இதை மனிதனால் புரிந்து கொள்ள முடியாத நிலையில், அதை மாற்ற முடியாத நிலையில், அதை அன்னியமான சக்தி ஒன்றின் செயலாக எண்ணத் தொடங்கினான். இதனால் இயற்கை சார்ந்து அழிவுகளை ஏற்படுத்தும் ஊடகங்களை நோக்கி அஞ்சத் தொடங்கினான். இது போல் போராடி வெல்ல முடியாத மிருகங்களையும் கண்டு அஞ்சுவதன் மூலமும், மனித ஆற்றலால் முடியாத விசயங்களை நோக்கி கெஞ்சுவதன் மூலமும் அதைத் தடுக்க முயன்றான். இந்தக் கெஞ்சுவதும், அஞ்சுவதும் மனிதன் இயற்கையில் இருந்து வெளிவந்து, செயற்கையில் இயற்கையை மாற்றத் தொடங்கிய மனித வரலாற்றில் நடந்தது. மனித உழைப்புக்கு அன்னியப்பட்டுக் கட்டுப்பட மறுத்த இயற்கையின் மீதும், அது சார்ந்த விசயங்கள் மீதும் இவை நிகழ்ந்தன. பின்னால் அதைத் தொடர்ந்து விளக்குவதும் மனிதப் போக்காகியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமுதாயத்தின் உழைப்பைச் சார்ந்த அறிவார்ந்த பிரிவுகள் உழைப்பில் இருந்து விலகிய வேலைப்பிரிவினையுடன், அதாவது மக்கள் கூட்டத்தின் முக்கியமான ஆலோசனை வழங்கிய மற்றும் மருத்துவ ரீதியாக அறிவை பெற்றுக் கொண்டவர்கள், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட விசயங்களை மற்றொரு சக்தியின் செயலாக வருணிக்கத் தொடங்கினர். பின்னால் மனித உழைப்பில் இருந்து அன்னியப்பட்ட கூட்டம் உழைப்புக்கு முன் தடுக்கமுடியாத அழிவுகள், இயற்கையின் எழுச்சி, இயற்கையின் அழிவையிட்டுக் கற்பனையான காரணத்தை முன்வைத்தது. இதன் மூலம் முந்திய போக்கான விளக்கங்கள் ,அஞ்சுவது மற்றும் கெஞ்சுவதை விட்டு அதை நோக்கி வழிபடுவது என்ற நிலைக்கு மனிதன் மாறினான். இந்த வழிபாட்டை ஒழுங்குபடுத்த ஒரு புரோகிதர் கூட்டம் உழைப்பில் இருந்து அன்னியப்பட்ட பிரிவில் இருந்து உருவானது. மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட, மனிதக் கற்பனையாக உருவான சக்திக்கு, தனது உணவில் ஒரு பகுதியைப் படைப்பதன் மூலம் இயற்கையின் எழுச்சியையும், அழிவையும் தணிக்க சடங்குகள் வளர்ச்சி பெற்றன.

இவை இயற்கை மீது வளர்ச்சி பெற, இயற்கை பற்றி கற்பனைப் புனைவுகள் இயற்கையின் இயங்கியல் அறியாமைக்குள் வளர்ச்சி பெறுவது திரிபடைந்தது. இந்த இயற்கையின் ஆற்றலை வைத்து உருவான உழைப்பில் இருந்து, அன்னியமான ஒரு புல்லுருவிக் கூட்டத்தின் வாழ்நிலைக்கும், நலனுக்கும், சுரண்டலுக்கும் ஏற்ப, இயற்கை பற்றிய புனைவுகள் சடங்குகளாக உருவாக்கப்பட்டன.

இதுபோல், இயற்கையின் பரிணாமத் தேர்வான மனித உடல்களின் செயல்பாடுகள், நோய்கள் (இங்கு மனிதன் அல்லாத மற்ற பிரிவுகளின் பரிணாமம்) மனிதன் முன் புதிராகவே, இயற்கையின் இயங்கியல் மனித உழைப்புக்கும் அது சார்ந்த அறிவுக்கும் முன்னால் நீண்டு கிடந்தது. இந்தப் புதிர்கள் மனிதனின் வாழ்வு மீதான அச்சத்துடன் கூடிய மாற்றங்களையும், புரோகிதர் கூட்டம் தமது நலன்சார்ந்த விளக்கங்களுடன் கூடிய அறிவு, மற்றும் புல்லுருவியாக வாழத் தொடங்கிய வாழ்நிலையுடனான விளக்கங்கள் சடங்குகளைச் செய்ய வழிகாட்டியது.

மனிதக் குழந்தைகளைப் பெண் உருவாக்கிய போக்கில் ஆண் செயலற்றவனாக இருந்தான். எப்படி குழந்தை உருவாகின்றது என்பது நீண்ட வரலாற்றில் புதிராகவே இருந்தது.

**கி.பி. 1827-ஆம் ஆண்டு வரை பெண்ணுக்குள் கருமுட்டை உருவாகின்றது என்பது கண்டுபிடிக்கப்படவில்லை. கி.பி. 1875-ஆம் ஆண்டு வரை கருவுயிர்க்கும் முறை கண்டுபிடிக்கப்படவில்லை.** இந்த நிலையில்தான் மனிதன் இவைகளையொட்டித் தனது கற்பனை மற்றும் வாழ்நிலைக்கு ஏற்ப தொடர்பு கொண்ட விசயங்களை விளக்கவும், அதையொட்டிச் சடங்குகளை உருவாக்கவும் பழகிக் கொண்டான். சடங்குகள்





புரியாத புதிர்களின் மீதான அறிவியல் தேடுதல்களை நிகழ்த்துவதை மறுத்தும், அதைச் செய்வதைக் குற்றமாக்கியும், மீறிச் செய்தால் தண்டிக்கும் முறைகளையும் கூட இச்சடங்குகள், பண்பாடுகள், கலாச்சாரங்கள் அமுல் செய்தன. இதைப் பயன்படுத்தி புரோகிதர் கூட்டம் தனது சொந்தப் புல்லுருவித்தனத்தில் இருந்து தமது நலன் சார்ந்து, தவிர்க்கமுடியாத ஆதிக்கப் பண்பாட்டுக் கலாச்சாரத்தை மக்கள் மேல் திணித்தனர்.

பெண்ணின் மாதவிடாய் என்பதும் மனிதனுக்குப் புதிராகவே இருந்தது. திடீர் என இரத்தம் பெண் உறுப்பில் இருந்து வருவதும், தொடர்ந்து மாதமொருமுறை வெளிவரும் இரத்தமும், அது திடீர் என நின்று போவதும், பின் மீள வருவதும் புதிராகவே இருந்தது. குழந்தை தரிக்கும் போது பெண்ணின் மாதவிடாய் நின்று போவது மேலும் புதிராக இருந்தது. அத்துடன் வயது போன பெண்களின் மாதவிடாய் நிற்பது எல்லாம் மனிதனுக்குப் புதிராக நீடித்தன.

இந்தப் போக்கில்தான் தமது வாழ்வு அனுபவங்களை ஒட்டி இவற்றுக்குப் பற்பல விளக்கங்களைப் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டு மனிதன் கொடுத்தான்.

“பல சமுதாயங்களில், மாதவிடாயின் ஒரு பகுதி குருதியானது கருவறையில் தங்கி குழந்தை உருவாகின்றது” என்று நம்பினர். **அரிஸ்டாட்டில்** கருப்பையில் தங்கிய குருதிக்கு ஓர் ‘அசைவுக்கான தூண்டுதலை’ ஆண்களின் விந்து வழங்குகிறது என விளக்கினர். இதை அவர் பாலை உறைய வைக்கும் ‘உறைமோரோடு’ ஒப்பிட்டுப் பேசினார். ஹீப்ரு மொழியில் இப்படி விளக்கம் உண்டு. அதில், கருப்பையில் நிறைந்துள்ள குருதியில், ஒரு துளி வெள்ளை விழுந்தவுடன் குழந்தை உருவாகின்றது. இதைப் பாலில் இருந்து தயிர் உருவாவதோடு ஒப்பிட்டு விளக்கியுள்ளது. மாதவிடாய்க் குருதி, ஆண் விந்தை அடைகாப்பதன் மூலம், ஆண் விந்தில் இருந்து குழந்தை உருவாகின்றது என்ற இன்னொரு விளக்கமும் உண்டு. சில பழங்குடி சமூகத்தினர் கருவுயிர்த்தலுக்கு ஆண் தேவையில்லை. ஏதோ ஓர் ஆவி பெண்ணின் கருப்பைக்குள் புகுந்து குழந்தையாகப் பிறக்கிறது என நம்பினர். சிலர், கருவுயிர்த்தலுக்கு ஆண் துணைக் கருவிதான். கடவுள் செயல் கட்டாயம் உண்டு என நம்பினர். மெக்ஸிக்கோவிலுள்ள பியூப்னேளா இந்தியப் பழங்குடியினர் கோடைக் காலக் கனத்த மழையினால் ‘கன்னிகள்’ கருவுயிர்ப்பதாக நம்பினர். இதை விட புராணங்களில், பற்பல பிற சக்திகள் பற்றிய புனைவுகள் உண்டு”[14]

300 ஆண்டுகளுக்கு முன், “உயிர் தானாகவே தோன்றுகிறது என்பதில் ஆதி காலத்தவர் நம்பிக்கை வைத்திருந்தனர். ஈக்கள் அழுகிய இறைச்சியினாலும், சுண்டெலிகள் அழுக்குத் துணிகளாலும் உண்டாகின்றது என நம்பினான். மிகச் சிறிய மனிதர்களைச் செய்வதற்கான வழி தங்களுக்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெரியுமென்று இரசவாதிகள் கூறினார்கள். பைபிளில், தேனீக்கள் இறந்த சிங்கத்தின் குடலில் இருந்து பிறக்கின்றன என்று கூறப்பட்டுள்ளது..... அரிஸ்டாடில் சுயப் பிறப்பில் நம்பிக்கை வைத்திருந்தார்."[15]

கிரேக்கத்தின் பழமையான புனைக் கதைகளில், "கருவுறுவதற்கு ஆண் தேவையில்லையென்றும் காற்று மட்டும் போதும் என்றும், அக்கால மக்கள் நம்பினர்."[16] பகவத் கீதையில் உயிர்த்தல் பற்றிய விளக்கத்தைப் பார்ப்போம்.

"அன்னால் பவந்தி பூதானி பாஜ்ஜன் யாதன்ன ஸம்பவ
யஜ்ஞால் பவந்தி பர்ஜ்ஜன்யோயஜ்ஞ - கர்மஸமுத்பவ
கர்மப்ரஹ்மோத்பவம் வித்திப்ரஹ்மா கஷரஸமுத்பவம்
தஸ்மால் ஸர்வகதம் ப்ரஹும் நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம்" [17]

இதன் அர்த்தம் **"அன்னத்திலிருந்து உயிர்களும், மழையிலிருந்து அன்னமும், யாகத்திலிருந்து மழையும், கர்மத்திலிருந்து யாகமும், வேதத்திலிருந்து கர்மமும்.."[17]** என்று இந்துப் பார்ப்பனியம் உயிர் உயிர்த்தலைப் பற்றி அறிவற்ற விளக்கத்தைப் புனைந்தது. பார்ப்பனரின் ரிக் வேதத்தில், தியவுஸ் என்ற கடவுள் பற்றிய குறிப்பில், "தியுவுஸின் மனைவியாகப் பிருதிவி சித்தரிக்கப்பட்டது. தந்தையான தியவுஸ் மழையாகப் பிருதிவியில் பொழியும் பொழுது, பூமி கருவுற்றுப் பிரசவிக்கும் என்பதும்... செடிகளும், கொடிகளும், மரங்களும் பூமியிலிருந்தல்லவா முளைத்தெழுகின்றன"[7] என்ற உவமை விளக்கத்தில், ஆணின் துணையின்றி கருவுறுவது சாத்தியமில்லை என்ற காரணத்தை அனுபவ ரீதியாகப் புரிந்து கொள்கின்றனர். இறுக்கமான நாடோடி ஆணாதிக்கச் சமூகத்தில் இந்த அனுபவவாதம் தெளிவாகத் தெரிந்து கொள்ளப்படுகின்றது. இதில் இருந்தே தந்தையின் பாத்திரம் வெளிவருகின்றது. ஆனால், தந்தையின் விந்து பற்றியோ, எப்படி கரு உருவாகின்றது என்பது பற்றியோ தெரிந்திருக்கவில்லை. **"ரிக் வேதத்தில்,** மற்றோரிடத்தில், சமுத்திரத்திலுள்ள தண்ணீர் கர்ப்பமடைந்தாகக் கூறப்படுகின்றது. இந்தக் கர்ப்பத்திலிருந்தே உயிர்களும்,உலகின் தத்துவமும், உலகின் முதல் முதலாகப் பிறந்தவனும், பூமியைப் படைத்தவனும், உருவாக்கியவனுமான **'விசுவ கர்மா'** தோன்றியதாகவும்"[18] புனையப்பட்டுள்ளது.

"கர்ப்பத்திலிருக்கின்ற குழந்தையை அழிக்கும் இராட்சதன் பச்சை மாமிசத்தை உண்பவன் என்றும், அந்த இராட்சதனுக்கு இரண்டு முகங்களும், நான்கு கண்களும், ஐந்து பாதங்களும் உண்டென்றும், முகம் கீழ் நோக்கி இருக்குமென்றும்"[18] **அதர்வண வேதத்தில்** கூறப்படுகின்றது.

"பார்ப்பனர் கடவுளின் வாயிலிருந்து பிறந்தனர். சத்திரியர் கைகளிலிருந்து வந்தனர். தொடைகளிலிருந்து வைசியரும், பாதங்களிலிருந்து சூத்திரரும் பிறந்தனர்."[18]

இப்படியான விளக்கங்கள் எல்லாம் மனிதன், கற்பனை, மற்றும் இயற்கையின் வெவ்வேறு நிகழ்ச்சிகள் செயல்களுடன் ஒப்பிட்டு வருணித்தனர்.





இயற்கையில் உணவுக்காகப் போராடிய மனிதன் இரத்தத்தை இழக்கும் போது மரணம் அடைவது கண்டு பயந்தான். அதையொட்டி, மாதவிடாயைப் பார்க்க, விளக்க முற்பட்டான். இதனால், பெண்ணின் உடலில் இருந்து வெளியேறும் இரத்தத்தை இட்டும், குழந்தை பற்றிய தொடர்புகளும் இயற்கை மீதான அறியாமையில் இருந்து, பொதுவாக இரத்தம் மீதான அச்சத்தில் இருந்து சிந்தித்தான். இதனால் இந்த முதல் நிகழ்வை அச்சத்தின் மீதான ஒரு சடங்காக மனிதன் மாற்றினான். இதை அச்சத்துடன் கூடிய புனிதத்திற்குரிய நிகழ்வாகப் பரிணாமித்தது. சாமத்தியச் சடங்கானது ஆணாதிக்கத்தின் வளர்ச்சியுடன், பெண் தாழ்ந்த நிலைக்குத் தள்ளியது. இது பெண்ணின் மீதான அடக்குமுறையை நிறுவுவதற்கான ஊடகமாக மாதவிடாய் வெளியேற்றம் 'தீட்டாக' மாற்றம் கண்டது.

சடங்கின் போக்கில் அப்பெண் மீதான ஆணாதிக்கக் கட்டுப்பாடுகள், ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை மீதானதாக, அச்சமூக அமைப்புக்கு ஏற்ப உருவானது.

மனிதன், விலங்கான குரங்கு நிலையில் இருந்த போது நான்கு கால்கள் கொண்டு நடமாடினான். பின், குரங்கு மனிதன் இயற்கை மீதான உழைப்பை, முன் இரு கால்களால்(இரு கைகளால்) படிப்படியாகச் செய்யத் தொடங்கினான். பின்னர், மனிதன் இந்த உழைப்பைச் செய்ய சிறு பொருட்களான கல், தடி, எலும்பு... போன்றவற்றைக் கண்டுபிடித்தான். இந்த உழைப்பால் சேகரித்த உணவை இடம் மாற்ற, இரு கைகளையும் பயன்படுத்திய போது தவழ்ந்து செல்வது இலகுவானதாக இருந்ததில்லை. இதனால் சேகரித்த உணவை இடம்மாற்ற, சேகரிப்புக் கருவியைத் தொடர்ந்து கண்டுபிடித்தான் மனிதன். சேகரிப்பு கருவியையும், சேகரித்த உணவையும் இடம் மாற்ற மனிதன் நிமிர்ந்து நிற்பது அவசியமாகியது. இது நீண்ட பரிணாம வளர்ச்சி ஊடாகவே வளர்ச்சியுற்றது.

இந்த மாற்றம் பாலியல் உறுப்புகளில் தீவிர மாற்றத்தைக் கொண்டுவந்தது. நிமிர்ந்த மனிதனுக்கும், தவழ்ந்த மனிதக் குரங்குக்கும் இடையில் பாலியல் உறுப்பில் பரிணாமத்தின் மாற்றம் முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. தொடக்கத்தில், மனிதக் குரங்கில் பெண்ணின் பாலியல் உறுப்பு வெளிப்படையாகத் தெரிந்ததுடன், மார்பு போன்ற பால் சுரப்பிகள் மறைவுத்தன்மையைக் கொண்டு இருந்தது. ஆணின் பாலியல் உறுப்பு மறைவுத் தன்மையில் இருந்தது.

மனிதக் குரங்கில் இருந்து, 'நிமிர்ந்த மனிதனாக' மாறிய மனிதனில் இவை எதிரிடையாக மாறியது. பெண்ணின் பாலியல் உறுப்பு மறைவாக மாற, ஆணின் பாலியல் உறுப்பு பகிரங்கமாக வெளிப்பட்டது. அத்துடன் பெண்ணின் பால் சுரப்பியும் பகிரங்கமாக மாற்றம் கண்டது. இதனால் பெண்ணின் பால்சுரப்பி மற்றும் ஆணின் பாலியல் உறுப்பு முக்கியத்துவமான உறுப்பாகியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது மனித உளவியலில் தீவிரமான மாற்றம் கண்டது. பெண்ணின் இரகசியமான உறுப்பு மீதான ஆணாதிக்க உளவியல், ஆண் தனது உறுப்பை இரகசியமாக மாற்றவும் செய்தது. பெண்ணின் பால்சுரப்பி மற்றும் பெண் உறுப்பைப் பகிரங்கமாகக் கொண்டுவரும் உளவியல் பண்பானது ஆணாதிக்கத்துடன் இன்று வரை நீடிப்பதைக் காணமுடிகின்றது.

உடலியல் நீண்ட பரிணாம வளர்ச்சியூடாக வளர்ச்சி கண்டது. இக்காலத்தில் வரைமுறையற்ற புணர்ச்சியைத் தமக்கிடையில் கொண்டிருந்த வரை, ஆண் பெண்ணுக்கிடையில் இந்த உளவியல் கண்ணோட்டம் ஏற்பட்டு விடவில்லை. உழைப்பு தனிச்சொத்துரிமையின் ஆதிக்கத்துக்குள் மாறிய போது, பெண் சமூகச் சொத்துரிமையை இழந்தாள். இதனூடாகப் பெண் ஆணின் சொத்துரிமை ஆக்கப்பட்டாள். வரைமுறையற்ற புணர்ச்சி, வேறுபட்ட கட்டத்தின் ஊடாக ஓர் ஆணைத் திருப்தி செய்யும் புதிய பாலியல் வடிவத்தைத் தேர்ந்து கொண்டது. அதாவது வரைமுறையற்ற புணர்ச்சியின் மீதான மறுப்பு, ஒருதார மணத்தால் ஈடுசெய்யப்பட்டது. பெண்ணின் சொத்துரிமை பறிப்பால் கட்டாயமான ஒருதாரமணத்தைப் பெண்ணுக்கு நிபந்தனையாக்கி, பெண்ணை ஆணாதிக்கத்துக்கு உள்ளாக்கியது. ஆனால் ஆண் இதை மீறுவது பலவழிகளில் சாத்தியமானது. இதன் ஒரு பாகமாகவே பெண்ணின் உறுப்பு மீதான நிர்வாணப்படுத்தல் உளவியலாகின்றது. பலதாரமணத்தின் பிரதிநிதியான ஆண் பழைய பலதார மணத்தின் வெளிப்பாடாகப் பெண் உறுப்பு மீதான பகிரங்கத்தைக் கோரினான். மேலும் பெண்ணின் பால் சுரப்பி முக்கிய பாலியல் உறுப்பாக ஆணாதிக்க உளவியலில் இடம் பெற்றது. இதை இன்றைய சமூக வெளிப்பாடுகளில் வெளிப்படுவதுடன், ஆணாதிக்கத்தைத் திருப்தி செய்ய பெண் உந்தித் தள்ளப்படுகின்றாள். பெண்ணின் அழகியல் இதற்குள் சீரழிந்துள்ள இன்றைய நிலையில், ஆணாதிக்க உளவியல் இதை ஊக்குவிக்கின்றது.

இந்த உறுப்புகளில் ஏற்பட்ட பரிணாம மாற்றம் மாதவிடாய் தோன்றுவதற்கான முக்கியமான ஒரு மாற்றத்தைக் கண்டது. மனிதக் குரங்கிலும், (இங்கு இவை தீவிரமான மாற்றத்தைக் கொண்ட காலம்), அதற்கு முந்திய குரங்கிலும் பெண் உறுப்பில் இருந்து வெளிப்படும் ஒரு பாலியல் தேவையைத் தூண்டும் திரவம் மற்றும் தீவிரப் பாலியல் நாட்டம் ஆகியவை ஆண் குரங்கைத் தூண்டி கலவியின் ஊடாக இனவிருத்தி செய்தன. இது வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் குறிப்பிட்ட காலத்தில், மட்டும் கலவியை இனவிருத்தி சார்ந்து இன்ப நாட்டத்தைத் தூண்டியது.

ஆனால் நிமிர்ந்த மனிதனில் பெண் உறுப்பு மறைந்த போது, பாலியல் உறுப்பில் மாற்றங்கள் உள்ளேயே ஏற்பட்டது. இதனால் பெண்ணுக்குக் குறித்த காலத்தில் உந்தித் தள்ளும் இனவிருத்தி சார்ந்த இன்பநாட்டத்தை, ஆண் இலகுவில் புரிந்து கொள்ளமுடியாத வகையில் பெண்ணால் இயற்கையின் வெளிப்படுத்தலும் மாறுபடத் தொடங்கியது.





பெண்ணின் இயற்கை சார்ந்த பரிணாம மாற்றம் சிந்தனைத்துறையில் தூண்டுதலுக்குள்ளாகி, உடலியல் ரீதியில் மாற்றத்தை இசைவாக்கத் தூண்டியது. இயற்கை இதில் தீவிர மாற்றத்தை மனித உழைப்பு சார்ந்து மாற்றத் தொடங்கியது. மற்ற எல்லா விலங்கினங்கள் போல் அல்லாது, பெண்ணுக்கு மாறிய மனிதனின் உழைக்கும் ஆற்றல், இதனால் ஏற்பட்ட உடலியல் மாற்றம் மனிதனுக்கு இனவிருத்தி சார்ந்த மாதவிடாய் தோற்றம் கண்டது. இதனால் பெண்ணின் பாலியல் நாட்டத்தைத் தூண்டுவது இனவிருத்தியின் அடிப்படையாக இருந்தது. இதனால் பெண் பாலியல் இன்பத்தை எல்லா நேரமும் அடையக் கூடிய பரிணாமத்தை மற்ற விலங்கில் இருந்து சிறப்பான வகையில் வேறுபாடு அடைந்தாள். இந்த வளர்ச்சியை ஒட்டி ஆணின் பாலியல் இன்பமும் எல்லா நேரமும் ஈடுபடக் கூடிய வகையில் வளர்ச்சி பெற்றது. இது மனித இனத்தின் சில குறிப்பான வளர்ச்சியாக மிருகங்களில் இருந்து வேறுபட்டு உள்ளது.

பருவநிலைக்குக் கருக்கட்டும் விலங்குகளில் இருந்து மாறுபட்ட வகையில் பருவ எல்லை தாண்டி இனவிருத்தி செய்யும் நிலைக்கு மனிதன் வந்து அடைந்தான். பெண்ணின் கருக்கட்டும் தன்மையை உருவாக்கும் வகையில் கருக்கட்டும் முட்டையின் உருவாக்கத்தைப் புதுப்பிக்கும் போக்கில் பழைய கரு முட்டைகளை வெளியேற்றுவதை இயற்கை தேர்ந்த போது, அது மாதவிடாயாக மாற்றம் கண்டது.

**ஒரு பெண் 3.5 இலட்சம் கரு முட்டைகள் உடன் பிறக்கின்றாள்.** 12 முதல் 13 வயது வரை கரு முட்டை முதிராமல் இருந்து முதிரத் தொடங்கியவுடன் மாதம் ஒன்று (அண்ணளவாக) வீதம் முட்டை முதிர்ந்து கருப்பைக்குள் வருகின்றது. இப்படி ஒரு பெண்ணின் ஆயுளில் 375 கரு முட்டை மட்டுமே முதிர்ந்து கருப்பைக்குள் மாதம் ஒன்று என்ற விகிதத்தில் வருகின்றது. இதன் **ஆயுள் 24 மணி நேரம்** மட்டுமே. இதே நேரம் ஆணின் விந்து ஒரே நேரத்தில் **30 கோடி உயிரணுக்கள்** உடன் வெளிவருகின்றது. இதில் ஒன்று மட்டுமே பெண்ணின் கரு முட்டையுடன் இணைந்து உயிர் உருவாகின்றது. மனிதன் நிமிர்ந்த போது பெண்ணின் பாலியல் அங்கத்தில் ஏற்பட்ட மாற்றத்தால், பாலியல் மீது புதிய ஆர்வத்தைத் தூண்டுவதற்கான இயற்கையின் தேர்வாக, **இறந்த கரு முட்டையினை வெளியேற்றும் இரத்தக் கழிவே மாதவிடாயாகும்.** மனித உழைப்பின் தேர்வால் ஏற்பட்ட உடலியல் மாற்றமே மாதவிடாய் தோன்றுவதற்கான காரணமாகவும், பெண்ணுக்குத் தவிர்க்க முடியாத உடலியல் கூறாகவும் ஆகியது.

கருத்தரித்தலுக்கான கரு முட்டை முதிரத் தொடங்கி, அது கருவாக (குழந்தையாக) உருவாக முடியாத கருக்கட்டாத கரு முட்டையும், கருப்பைச் சுவரில் இருந்து அதை அகற்ற வெளிவரும் இரத்தமும் சேர்ந்த நிலையில் வெளியேறும் இறந்த கரு முட்டைகளே மாதவிடாயாகும். இந்த வகையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதன்முதலில் வெளியேறும் கரு முட்டைகள் கருக்கட்டும் முதிர்ந்த நிலையில் இருந்து வெளிவருவதில்லை. முதல் மாதவிடாய் ஏற்பட்டு இரண்டு வருடத்திற்குப் பின்பே பெண்ணின் கரு முட்டை கருக்கட்டும் நிலைக்கு முதிர்கின்றது.

பெண்ணும் சரி, ஆணும் சரி உடலியல் ரீதியான பாலியல் புணர்ச்சிக்கான இயற்கையின் உந்துதலை ஒட்டி, எல்லா ஆண் - பெண்ணுக்கும் மூளையின் தூண்டுதலால் ஏற்படும் ஹார்மோன்களின் சுரப்பால் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்த மாற்றம் வெளிப்புறத்தில் தெரியக் கூடியதாக ஆண் - பெண் இருபாலினருக்கும் பொதுவாக வெளி உடலில் நிகழ்கின்றது. இந்த மாற்றம் ஒரே நாளில் நடப்பதில்லை. அது மனித வளர்ச்சியுடன் படிப்படியாக நிகழ்வதுடன், இவை காலத்துடன் தொடர்புடைய வயதுடன் திடீரென ஒருசில (உதாரணமாக மாதவிடாய்) மாற்றங்கள் வெளிப்படுகின்றது. ஆனால் மாற்றம் தொடர்ச்சியாகப் பிறந்தது முதல் நிகழ்வதுடன், வயதுடன் தொடர்புடைய வகையில் தீவிர மாற்றத்தையும் உடல் சந்திக்கின்றது. இந்த மாற்றம் உடலின் உள் நிகழ்வதுடன் இது வெளிப்புறத்துக்கு வயது மாற்றத்துடன் தெரியத் தொடங்குகின்றது. இவை வெளிப்புறத்தில் மாற்றமாகத் தெரியும். அதே நேரம் உடலின் உள் அங்கத்திலும் இவை நடக்கின்றது. இதன் செயல்பாடுகளில் ஒன்றாகப் பெண்ணுக்கு மாதவிடாய் நிகழ்கின்றது.

**மாதவிடாய் என்பது தனித்த ஒரு பெண்ணின் உடல் சார்ந்த செயல்பாடே ஒழிய சமூகம் சார்ந்த செயல் அல்ல.** ஆனால் சமூகம் அதைச் சமூகம் சார்ந்த செயல்பாடாகக் கருதியது. இது வரலாற்று இயங்கியலின் அறியாமையுடன் கருத்து சார்ந்து உருவாக்கிய புனைவுகளின் விளைவு. இதன் மீதான அறிவியல் விளக்கத்தின் பின்பும் இது தொடர்வது அறிவீனத்தில் இருந்து வளர்ச்சி பெற்ற தனிச் சொத்துரிமையின் வளர்ச்சியுடன் கூடிய ஆணாதிக்கப் பண்பாடாக உள்ளது. இலங்கையில் "70 சதவீதமான"[19] பருவமடைந்த பெண் குழந்தைகளுக்கும், அதன் பெற்றோர்களுக்கும் இந்த மாதவிடாயை ஒட்டிய விளக்கம் அறிவியல் பூர்வமாகத் தெரியாது.

பெண் குழந்தைக்கு ஏற்படும் முதல் மாதவிடாயை ஒட்டி குழந்தைக்கு முன்கூட்டியோ, பின்னாலோ விளக்குவதற்குப் பெற்றோரிடம் அறிவியல் பூர்வமாக எந்த விளக்கமும் இருப்பதில்லை. பாரம்பரியக் கலாச்சாரப் பண்பாடான ஆணாதிக்க வெளிப்பாடுகளின் தொடர்ச்சியில் பெண்ணின் கற்பு பற்றிய விளக்கமானது திருமணத்துக்கு, அதாவது பெண் குழந்தையைப் பெறத் தயாராகி விட்டாள் என்ற விளக்கத்தையே பெற்றோரும், சமூகமும் அடையாளம் காட்டுகின்றனர். இதில் இருந்து ஆணாதிக்க ஒழுக்கத்தை வன்முறையில் திணிக்கத் தொடங்குகின்றனர். பெண் குழந்தை, இரத்தத்தையிட்டு உளவியல் ரீதியாக அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடையும் அதே நேரம், பின்னால் சமூகமும், பெற்றோரும் பெண் மீது திணிக்கும் கற்பு பற்றிய ஒருதலைபட்சமான கட்டுப்பாடும், மூடத்தனங்கள் மீதும் பயந்து வாழக் கோரும் உளவியல் நிர்ப்பந்தத்தைச் சந்திக்கின்றாள்.





மாதவிடாய்க்கான காரணங்கள், விளக்கங்கள், காரணக் காரியத் தொடர்புகள் பற்றி அறிவியலுக்குப் புறம்பாக விளக்கிய இந்து மதத்தின் தொடர்ச்சிகள் பல இன்றும் தொடர்வதால் அதைப் பார்ப்போம். இந்துக்களான பார்ப்பனர்களின் கிருஷ்ண **யஜீர் வேதத்தில்,** இந்திரன் தனது பருவத்தை, பெண்களுடன் பகிர்ந்து கொள்ளக் கோரிய போது, "என்னுடைய பிரம்மஹத்தி பாவத்தில் மூன்றிலொரு பங்கை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று இந்திரன் பெண்களுடைய சபையில் சென்று சொன்னான். பெண்களோ, நாங்கள் ஒரு வரம் கேட்கின்றோம். ருது சம்பந்தமான வீரியத்தினால் குழந்தை கிடைக்க வேண்டும். கர்ப்பத்திற்குக் கேடு வராத வகையில் ஆணின் தாம்பத்திய உறவு கிடைக்க வேண்டும் என்றனர். அதனால் பெண்களுக்கு ருது சம்பந்தமான வீரியத்தால் குழந்தை கிடைத்தது (கருவுற்றனர்). கருவுற்றபின் பிரசவம் வரை அவர்களுடைய கர்ப்பத்திற்குக் கேடு வராத வண்ணம் ஆணின் தாம்பத்திய உறவு கிடைத்தது. இந்திரனுடைய பிரம்மஹத்தி தோஷத்தின் மூன்றிலொரு பாகத்தை ஏற்பதற்காகப் பெண்கள் இந்த வரத்தை வேண்டினர். பிரம்மஹத்தியின் ஒரு பாகத்தை ஏற்ற பெண் பூப்படைந்தாள். அதனால்தான் மாதவிடாய் ஆன பெண்களுடன் பேசக் கூடாது. சேர்ந்து அமரக்கூடாது. அவள் தரும் உணவை உண்ணக்கூடாது. மாதவிடாய் ஆன பெண் பிரம்மஹத்தி வடிவை அணிந்து கொண்டிருப்பவள் என்று சொல்லப்பட்டது. எண்ணெய் முதலியவையும் அன்னத்திற்கு ஒப்பானது. அதனால் எண்ணெய் முதலியவற்றையும் மாதவிடாய் ஆன பெண்ணிடமிருந்து ஏற்றுக் கொள்ளக்கூடாது." மாதவிடாயைப் பாவத்தின் தொடர்ச்சியாக ஆணிடம் இருந்து பெண் ஏற்று வந்ததாக விளக்கம் சொல்லிவிடுகின்றனர். கர்ப்பமான பெண்ணுடனான ஆணின் உறவு பாதுகாப்பை வரத்தின் மூலம் பெற்றதாகவும், பாவத்தை ஏற்றதால் மாதவிடாய் ஏற்பட்டதாகவும் கூறி அப்பெண் ஒதுக்கப்படுகின்றாள். கேவலப்படுத்தப்படுகின்றாள்.

இந்த மாதவிடாய் விளக்கத்தை மீறி நடக்கும் பெண்ணின் குழந்தைகளுக்கான சாபத்தையும் இந்து மதம் வழங்குகின்றது. மனித அவலங்களை இப்படி விளக்கும் இந்துமதத்தின் நுனிக்கொம்பைப் பிடித்தே, இன்றைய சமுதாயத்தின் அவலங்களைப் பலவிதமாக விளக்குகின்றனர். அந்த நுனிக்கொம்பைப் பார்ப்போம்.

"மாதவிடாய் ஆன பெண்ணில் பிறப்பவன், இல்லாமையில் உழல்பவனாக இருப்பான்.

காட்டில் மாதவிடாய் ஆன பெண்ணில் பிறப்பவன் திருடனாவான்.

நாணத்தால் பாராமுகமாய் ஆன பெண்ணில் பிறப்பவன் சபையில் பேச திறமையற்றவனாவான்.

மாதவிடாயாக இருக்கும்போது குளிப்பவளின் மகன் மரணமடைய விரும்புவான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாதவிடாயின் போது எண்ணெய் தேய்த்துக் குளிப்பவளின் மகன் தோல் வியாதிக்கு உள்ளவனாவான்.

மாதவிடாய் வேளையில் ஓவியம் முதலியவை வரைபவளின் மகன் வழுக்கைத் தலையனாகவும், துர்மரணத்தை அடைபவனாகவும் இருப்பான்.

மாதவிடாயின் போது பல் தேய்ப்பவளின் மகன், பலங்குன்றிய பற்களைப் பெறுவான்.

மாதவிடாய் சமயத்தில் கயிறு திரிப்பவளின் மகன் தூக்குப் போட்டு இறக்க விரும்புவான்.

மாதவிடாய் வேளையில் இலையில் தண்ணீர்விட்டு குடிப்பவளுடைய மகன் பைத்தியக்காரன் ஆவான்.

மாதவிடாயின் போது உணவைப் பக்குவப்படுத்தும் பாத்திரத்தில் தண்ணீர் குடிப்பவளின் மகன் வாமனன் (குள்ளன்) ஆவான் என்று குழந்தைகளின் மீது சாபங்களை அள்ளி வீசுகின்றது.

மேலும் மாதவிடாய் ஆன பெண் மூன்று நாட்கள் விரதம் இருக்க வேண்டும், இரண்டு கைகளையும் சேர்த்து தண்ணீர் மொண்டு குடிக்க வேண்டும் அல்லது உணவைப் பக்குவப்படுத்த பயன்படுத்தாத பாத்திரத்தில் தண்ணீரைக் குடிக்க வேண்டும் இவ்வாறு விரதம் இருப்பது பிறக்கப் போகின்ற வாரிசுகளுடைய பாதுகாப்புக்காகத்தான்"[7] என்று விளக்கிச் செல்லும் ஆணாதிக்கப் பண்பாடுகள் பெண்ணை அடிமைப்படுத்தி, சிறுமைப்படுத்தியது. அன்றைய மாதவிடாய் விளக்கங்கள் காலம் கடந்த மாற்றத்தில் தன்னையும் மாற்றிக் கொண்ட அதே நேரம், பழைய தொடர்ச்சியின் உள்ளடக்கத்தை அடிப்படையாகத் தனக்குள் கொள்கின்றது. அறிவியலுக்குப் புறம்பாக மனிதனின் விளைவுகளை விளக்கிச் செல்ல, அதை இன்றைய அறிவுக்குப் புறம்பாகக் கடைப்பிடித்து விளக்க முற்படும் சமுதாயத்தின் பின்னால், ஆணாதிக்க அமைப்பு உறுதியாக இருப்பது கண்கூடு. இவைகளின் இன்றைய விளைவுகளைக் கீழே பார்ப்போம்.

சங்கக் காலத்தின் இறுதியில் முதல் மாதவிடாய் மற்றும் குழந்தை பிறப்புக்குப் பின் 30-40 நாட்கள் தனிமைப்படுத்தி வைப்பது நடந்துள்ளது. இது **'புனிறு'**[9] என்று அழைக்கப்பட்டுள்ளது. பெண் குழந்தை தனது முதல் மாதவிடாயின் போது, சாமத்தியச் சடங்கில் பெற்றோர்கள் அறியாமை மற்றும் ஆணாதிக்கப் பண்பாட்டுக் கலாச்சாரத்தின் போக்கிலும், நுகர்வு மற்றும் விளம்பரக் கண்ணோட்டத்திலும் செய்வதை ஆராய்வோம்.

1. சிறுமியை வீட்டில் தனி அறையில் தனிமையில் விடுதல். ஆணின் கண்படாத வகையில் தனிக்கொட்டில் (தனிக்கட்டில்) முதல் பலவிதத்தில் தனிமைப்படுத்துதல்.
2. குளிக்கும் வரை ஒரு சிறுமியைத் துணைக்கு விடுதல்.





3. குளிக்கும் வரை தேங்காய்ப்பால் கலவாத உணவு மற்றும் மீன், இறைச்சி, முட்டை கொடுப்பதைத் தடுத்தல்.
4. மாதவிடாய் வந்த நேரத்தைக் குறித்து பலன் கேட்டல். சுபநேரமும் குறித்தல்.
5. சிறுமியின் அருகில் இரும்பு ஆயுதம் வைத்தல்.
6. சிறுமி மலசலகூடம் செல்லும் போது அவ்விரும்பு ஆயுதத்தைப் பேய் பிசாசிடம இருந்து தப்புவதற்கு என்று கூறிக் கொண்டு செல்லல்.
7. சுபநேரத்தில் வண்ணாரப் பெண்ணைக் (சாதிக் கடமையாகக் கூட இது உள்ளது.) கொண்டு குளிப்பாட்டுதல். அப்பெண் அணிந்திருந்த பொருட்களை அப்பெண்ணுக்குக் கொடுத்தல்.
8. குளிப்பாட்டும் நாளில் பலகாரம் மற்றும் விசேட உணவுகள் செய்தல்.
9. குளிப்பாட்டிய பெண்ணுக்குப் புத்தாடை அணிவித்தல்.
10. குழந்தைக்கு மூன்று மாதத்துக்கு வண்ணாரப் பெண் கொண்டுவரும் உடுப்புகளை உடுத்தல்.
11. குளிப்பாட்டிய பின் சடங்குகள் பல்வேறுபட்ட வகையில் செய்தல்.
12. உறவினர்களையும், நண்பர்களையும் அழைத்தல்.
13. இதை விளம்பரம் செய்தல், கோலாகலமாக ஊர் தெரிய சத்தம் போட்டுச் செய்தல்.
14. சிறுமி படுத்த பாயைச் சுற்றிக் கரியினால் கோடு போடுதல்.
15. சிறுமியைத் தீட்டுக் கழிக்கும் வரை அவ்வீட்டுக்கு யாரும் போக மாட்டார்கள். போனாலும் வெளியில் நின்றே பேசுவர். அங்கு குடிக்கவோ, சாப்பிடவோ செல்பவர்கள் குளித்து, மஞ்சள் தண்ணீர் தெளித்துதான், அதாவது செத்த வீட்டுக்குச் செய்வது போல் செய்துதான் குடிப்பர் அல்லது சாப்பிடுவர்.
16. இதே போல் அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் வேறு வீட்டுக்குச் செல்லமாட்டார்கள்.
17. ஆண்வழிக் குடும்பம் அனைத்துக்கும் துடக்கு உண்டு. தங்கை சாமத்தியப்பட்டால் அக்கா திருமணம் ஆனவள் என்றால் அவளுக்கு துடக்கில்லை. அண்ணன் திருமணம் ஆனவன் என்றால் அண்ணிக்குத் துடக்கு.
18. கிணறு, சமையல்அறை, சாமியறை, கோயில் என புனிதமான இடத்துக்குச் சமாத்தியப்பட்ட குழந்தை செல்ல முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



19. சடங்கு அன்று வீடு முழுவதும் கழுவி மஞ்சள் தெளித்து பார்ப்பான் என்ற பூசாரி கொண்டு தீட்டுக் கழிப்பர்.

20. புரோகிதர் தரும் தீர்த்தத்தைக் கொண்டு புனித இடங்களில் தெளித்து தீட்டுக் கழிப்பர்.

21. தொடர்ந்து ஏற்படும் மாதவிடாயின் போது கோவிலுக்குப் போகவோ, திருநீறு பூசவோ, சாமி கும்பிடவோ முடியாது.

22. தொடர்ந்து ஏற்படும் மாதவிடாயின் போது கிணற்றில் தண்ணீர் அள்ளவோ, வயலில் இறங்கி வேலை செய்யவோ கூடாது.

23. இந்த நாட்களில் தனியான பாய், தலையணி (சமையலுக்குத் தனியான சைவ மற்றும் அசைவப் பாத்திரம் உள்ளது போல்) பாவிப்பதுடன், குளித்து விட்டே சமைக்க வேண்டும்.

24. பரிசுப் பொருட்கள், பணம் ஆகியவற்றை எதிர்பார்த்துச் சடங்கைத் தொடங்குதல்.

25. ஆண் குழந்தையுடன் சேர்தலைத் தடுத்தல் மற்றும் ஆண் பற்றிய புதிய விளக்கங்களைக் கொடுத்தல்.

26. பெண்ணுக்குப் புதிதான ஒழுக்கவியலைக் கற்று கொடுத்தல். அதாவது கற்பு, அடக்கம், பணிவு... போன்றவற்றைப் பண்பாடாக்குதல்

27. பெண்ணுக்குச் சமையல் கற்றுக் கொடுத்தல்.

28. உடுத்தும் உடையின் வடிவத்தை மாற்றல்.

29. குனிந்து நடக்க கற்றுக் கொடுத்தல்.

30. அழகுபடுத்தக் கற்றுக் கொடுத்தல். இதன் மூலம் அழகியல் பற்றிய பிரமைகளை ஏற்படுத்தல்.

31. கல்வி கற்பதை நிறுத்தல்.

32. ஆணுக்கு அடங்கிப் போவதை நிபந்தனையாக்குதல்.

33. தாய்மாமனுக்குத் (இவர்தான் பெண்ணின் கணவனாக இன்றும் சில பிரதேசத்தில் நீடிக்கின்றது.) தலைவணங்குதல்.

இது போன்று சமுதாயத்தின் ஏற்ற இறக்க வளர்ச்சியை ஒட்டிப் பற்பல பண்பாட்டுப் பழக்க வழக்கத்தை ஒட்டி ஆணாதிக்கக் கண்ணோட்டங்கள் வேறுபட்டுக் காணப்படுவதுடன் சில மருவியும், சில புதிதாகவும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இது எப்போதும் பண்பாட்டுக் கலாச்சார வடிவத்தில் நியாயப்படுத்தப்படுவது எதார்த்தமாகியுள்ளது.





இச்சடங்கே பெண்ணின் தனிப்பட்ட உடல் சார்ந்த மாற்றத்தைச் சமூகமயமாக்குகின்றது. இந்தச் சமூகமயமாக்கல் என்பது பெண்ணின் தனிப்பட்ட உரிமைக்கு எதிரானதாக ஆணாதிக்கம் சார்ந்து பெண் அடிமைத்தனத்தைக் கட்டியமைக்கின்றனர். பெண் மீதான ஆணின் மேலாதிக்கத்தை ஏற்படுத்துவதும், பெண்ணின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதும், பெண்ணின் நுகர்வு எல்லையை ஆணுக்குக் கீழாகக் கட்டுப்படுத்துவதும், பெண்ணை அசுத்தமானவளாக உருவகப்படுத்துவதும், பெண்ணை விளம்பரம் செய்வதும், பெண்ணை விற்று விபச்சாரம் செய்வதும், பெண்ணை மூலதனமாக்குவதும் என சாமத்தியச் சடங்கு ஆணாதிக்கப் பண்பாட்டுக் கலாச்சாரமாகவும், பொருள் திரட்டும் சடங்காகவும் மாறிவிட்டது. பெண்ணின் உடல் சார்ந்த தனிப்பட்ட நிகழ்வைப் பெண்ணுக்கு மறுத்து, பெண் மீதான ஆதிக்கத்தை இச்சடங்கு கோருகின்றது.

இயற்கை மீதான அறிவியலில் பின் தங்கியிருந்த ஆதி மனிதன், பெண் மாதவிடாய் ஊடாக வெளியேற்றிய இரத்தத்தைப் பயந்த நிலையில் இருந்தான். மாதவிடாய் மீதான புனித மதிப்பீடுகளில் உருவாக்கப்பட்ட சாமத்தியச் சடங்குகள், மாறிவந்த பொருளாதாரச் சமூக மாற்றத்துடன் இச்சடங்குகளும் மாற்றத்தையும், புதிய விசயங்களையும் உள்ளடக்கி இன்று வெளிப்படுகின்றது.

இரத்தம் வெளியேறும் நாள் மலம் சிறுநீர் கழிப்பது போல், இயற்கையில் இவ்வெளியேற்றம் ஆரோக்கியமான போக்கில் இருந்தது. இந்தச் சமயத்தில் மனிதன் ஊட்டச்சத்தான உணவு கொடுத்தல் என்பது ஆணைவிட குறைந்த உணவைப் பெறும் பெண்ணின் வாழ்வில், சிறப்பான உணவு பெண்ணுக்குப் பலத்தைக் கொடுப்பதாக இருக்கின்றது. இது போல் மிகவும் வறிய குடும்பங்களில் இன்றளவில் கூட இச்சடங்குகள் மூலம் அப்பெண் தனது எதிர்கால வாழ்வுக்குச் சிறு ஆதாரப் பொருட்களைப் பரிசாகப் பெறவோ அல்லது மாற்று உடுப்பைக் கூடப் பெறும் வகையிலோ பெண்ணுக்கு உதவுவதாக இருக்கின்றது.

இது போன்ற அடிப்படை தேவையை ஒட்டியும், ஆடம்பர நுகர்வுக் கண்ணோட்டத்திலும் வேறுபட்ட சூழலில், பெண்கூட சாமத்தியச் சடங்கு செய்வதைக் குறித்தப் பொருளாதார சூழலுக்கு இசைவாகப் போராடுவதும், எதார்த்தமாக உள்ளது. இதன் பின்னால் சாமத்தியச் சடங்கு அதன் ஆணாதிக்கத் தன்மை பற்றிய அறிவு இன்மையும், குறித்தப் பொருளாதார நிலைமைகளும் இதற்குக் காரணமாக உள்ளது. எமது சமுதாயங்களில் கோலோச்சிப் போயுள்ள ஆணாதிக்கக் காட்டுமிராண்டித்தனமும், நிலப்பிரபுத்துவப் பண்பாடும் இதன் எல்லைக் கோடுகளாக உள்ளன.

இன்று புலம் பெயர்ந்த சமூகம் மற்றும் மத்திய தர வர்க்கத்திற்கு மேற்பட்ட பிரிவுகளிடையே இந்தச் சடங்கின் வடிவங்கள் நிலப்பிரபுத்துவத்துடன் கூடி ஏகாதிபத்தியப் பண்பாட்டுடன் மேலும் சீரழிகின்றது. ஏகாதிபத்தியச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சூறையாடலை ஊக்குவிக்கும் நுகர்வு மோகத்தை ஏற்படுத்த பெண்ணை விளம்பரம் செய்வது போல், சாமத்தியச் சடங்கில் பெண்ணை அழகுபடுத்துவதும், விளம்பரம் செய்வதும், திரைப்படம் போல் கவர்ச்சிப் படங்கள் எடுப்பதும், வீடியோ பிடிப்பதும், பணத்தைக் குறிவைத்து பெண்ணைச் சந்தைப்படுத்துவதும், தமது போலிக் கௌரவம்-அந்தஸ்தை இதற்கு ஊடாக நிறுவுவதும் என எல்லையற்ற வகையில் சீரழிந்து விட்டது. இந்தியாவில் உத்திரப் பிரதேசத்தில் வடமேற்குப் பகுதியில் ஜவுன்சர்பவர் பகுதியில் மனைவிமாரை விற்பதும், அடகுவைப்பதும் சர்வசாதாரணமாக நடக்கிறது. இதில் பெண் 100 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை பெறுமதியாகி ஆணின் சொத்தாகின்றாள். (8.6.2000)[20] பெண் வெறும் சந்தைப் பண்டமாக ஆணின் சொத்தாகின்றாள்.

மறுபுறம் பெண் பற்றிய ஆணின் பார்வைகள் நிலப்பிரபுத்துவப் பண்பாட்டில் இருந்து, ஏகாதிபத்தியப் பண்பாட்டுக் கட்டமைவின் எல்லைக்குள் விரிந்துள்ளது. பெண்ணை நுகர்வுக்குரிய பொருளாகப் பார்ப்பதும் (பெண் பிள்ளை பெறும் ஊடகம் என்ற பழைய நிலப்பிரபுத்துவப் பார்வையை மறுத்து), பெண்ணைப் பாலியல் நுகர்வுப் பண்டமாகக் காண்பதும், பெண் உடலின் ஒவ்வொரு உறுப்பையும் ஆணின் உணர்வைத் தீர்க்கும் ஊடகமாகப் பார்ப்பதும், பணத்தின் முன் பெண்ணின் உறுப்புகளை நுகரும் தனிமனித உரிமையாகப் பார்ப்பதும், கோருவதுமே வாழ்வு என்ற நிலையில் அனைத்து மனித விழுமியங்களும் மறுக்கப்படுகின்றன.

இந்த நிலையில், சாமத்தியச் சடங்கானது ஆணாதிக்க ஆண் முன்பு பெண்ணை ஊடறுத்த அங்கங்களின் மீதும், பாலியல் தேவைக்குத் தயாராகிவிட்ட சரக்காகவும் (இதற்கு இரண்டு அர்த்தமும் பொருந்தும். சந்தைப் பொருளாகவும், வழக்கமான பெண்ணைக் குறிக்கும் சொல்லாகவும்), ஆண்களின் கனவுக்கன்னியாகவும் மாறிவிடுகின்றாள். இதற்கு அப்பால் சாமத்தியச்சடங்கு அப்பெண்ணுக்கு எந்தப் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் புரிய வைத்து விடுவதில்லை.

இந்தப் போக்கில்தான் பெண் மீதான சாமத்தியச் சடங்கானது அப்பெண்ணை விளம்பரக் கன்னியாக (மொடலாக) மாற்றுகின்றது. இதை மூலதனம் ஆக்கிப் பணம் பண்ணும் போக்கும் அரங்கேறுகின்றது. ஒரு மேற்கத்திய விபச்சாரி அதிகமான நுகர்வுப் போட்டியில், ஏகாதிபத்திய நுகர்வுப் பண்பாட்டில் தனது உடலை காட்ட, தொட, புணர பணம் வாங்குவது போல் (இது மூன்றாம் உலக விபச்சாரிகள் பொதுவாகப் புணருவதுக்கே பணம் பெறுகின்றனர்.), நடுத்தர வர்க்கத்துக்கு மேற்பட்ட பிரிவுகளின் ஏகாதிபத்தியக் கனவுப் பண்பாட்டில் பெண்ணின் மாதவிடாயை விளம்பரம் செய்து ஊடறுத்து பார்க்கவும், இரசிக்கவும் அழைப்பதன் மூலம் பணத்துக்காக விளம்பரம் செய்து சம்பாதிக்கின்றனர். அனைத்து வர்க்கத்தின் சாமத்தியச் சடங்கும், தமது சொந்தக் கௌரவம் மற்றும் ஆணாதிக்க ஒழுக்கப் பண்பாட்டையும், அதன் வக்கிரத்தையும், இரசிக்கும் நிலைக்குள்தான் சாமத்தியச் சடங்கு நீடிக்கின்றது.





இந்தச் சமூகத் தன்மை என்பது பொதுவாகவே சமூகத்தில் இருந்த போதும், சாமத்தியச் சடங்கு மூலம்விளம்பரம் செய்து அதை மூலதனமாக்குகின்றனர். மனிதனின் அறியாமையில் உருவாகி வளர்ந்து வந்த ஆணாதிக்கம், பெண்ணின் பாலியல் உறுப்புகள் வளர்ச்சியின் தொடர்ச்சியில் பெண் பிள்ளை பெறத் தகுதி அடைந்ததை முன்வைத்து, இச்சடங்கு திருமணத்துக்கான தெரிவுகளைச் செய்யும் போக்கில் வரலாற்றில் இருந்துள்ளது. ஆனால் இன்று பெண்ணின் கரு உருவாக்கம் மற்றும் மாதவிடாய்க்கான காரணங்கள் அறிவியல் ரீதியாகத் தெரிகின்ற போது, இதைத் தொடர்வது முட்டாள்த்தனமாகும். இச்சடங்கின் மூலம் ஆணாதிக்கத்தினுடைய, ஏகாதிபத்தியத்தினுடைய நுகர்வு வேட்டைக்குள் பெண் அடிமைப்படுத்தப்படுகின்றாள்.

அச்சிறுமியின் உளவியல் பாதிப்பு பற்றிய எந்தவிதமான அறிவுப்பூர்வமான மனிதாபிமானமும் இன்றி, முரட்டுத்தனமான பெற்றோரினதும், ஆணாதிக்கத்தினதும் வன்முறையைப் பண்பாட்டுக் கலாச்சாரத்தின் பின்புலத்தில் இருந்து அமைதியாகத் திணிக்கின்றனர். ஒரு குழந்தைக்கு ஏன் இச்சடங்கு செய்யப்படுகின்றது? என்பதோ, ஏன் தொடர்ந்து தான் ஆண் குழந்தைகளுடன் விளையாடக் கூடாது? என்பதோ, ஏன் முன்போல் வாழ முடியாது? என்பதோ புரிவதில்லை. மாறாக இவற்றிற்கு விளக்கங்கள் கூட இன்றி, வன்முறை மூலம் பெற்றோரால் எழுதப்படாத ஆணாதிக்கச் சட்டமாக இறுக்கப்படுகின்றது.

அப்பெண் குழந்தையுடன் விளையாடிய மற்ற ஆண் குழந்தைகள், என்ன நடந்தது? எனக் கேட்டால், நாக்கைப் பிடுங்கிச் சாகும் அளவுக்கு வேதனையும், சொந்தச் சகோதர--சகோதரிகளின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத அவமானமும், முன்பு பழகிய ஆண்களின் வேறுபட்ட பார்வையும், அச்சிறுமியின் முன் பாரிய உளவியல் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சாமத்தியச் சடங்கு பற்றி புரியாத சமூகத்தின் (இதைச் செய்யாத மற்ற சமூகங்கள்) கேள்விக்குப் பதில் தெரியாத அனாதையாக அவமானத்தால் சிறுமிகள் செத்துப் பிழைக்கின்றனர்.

சிறுமியின் உடலில் ஏற்படும் உள்-வெளி மாற்றங்கள் இயற்கையானவை. இது தனது சொந்த உடல் சார்ந்தது. இதை மற்றவர்கள் கூர்ந்து அவதானிப்பதும், ஆணாதிக்கச் சமூகத்தில் மானத்தை மறைக்கும் சட்டைக்குள் புகுந்து ஒழுக்கத்தை நிலைநாட்ட தேடும் பண்பாட்டுக் கலாச்சார வீரர்களின் செய்கையும், நடத்தையும், இதை மற்றவர்கள் முன் விளக்கி அறிமுகம் செய்வதும், தனது வாயால் இதை விளக்கக் கோரும் அவமானங்களும் சிறுமியின் உடல் மற்றும் உளவியல் பாதிப்பையும் ஏற்படுத்தி, நாக்கைப் பிடுங்கி சாகக் கோருவதாகவும் உள்ளது.

பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலைகளில் நடைபெறும் (இராக்கிங்) பகிடி வதையில் பெண்ணின் உள்ளாடை, அதன் அளவு, நிறம் என பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வண்ண(வகையான) ஆணாதிக்கக் கேள்விகளின் போது, ஒரு பெண் எந்த வகையான உளவியல் சிக்கல்களையும், அவமானத்தையும் சந்திக்கின்றாளோ, அதைவிட மோசமான நிலையைச் சமாத்தியச் சடங்கில் சிறுமி சந்திக்கின்றாள்.

பெற்றோரும், அதைச் சுற்றியுள்ள ஆணாதிக்கச் சமூகமும் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தின் பின்னால் பெண்ணின் மீது புதிய அடக்குமுறைகளை நிறுவுகின்றன. அதன் மூலம், சாதிக்கின்ற பணச் சேகரிப்பும், தனிப்பட்ட சுயக் கௌரவப் போலித் திமிர்த்தனமும், பெண்களின் இரும்புத் திரையாகின்றன.

பண்பாடு மற்றும் கலாச்சாரம் மீது இதைப் பாதுகாக்கும் பிரிவு எப்போதும் காலாகாலமாக இருந்து வந்தது என்றும், இது சீரழிவுக்கு எதிரான வேலிகள் என்றும் மேற்கின் சீரழிவுக்கு எதிரான உயர்ந்த பண்பாடு என்கின்றனர். இது போன்ற பிற்போக்குத்தனத்தை ஒட்டி, இந்தியாவில் சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் (கி.பி.1925-களில்) சிறுமிகளின் திருமண வயதை 12 ஆகவும் பின்பு 14 ஆகவும் உயர்த்த நடவடிக்கை எடுத்த போது நடந்த விவாதத்தின் சிலபகுதிகளையும், அதையொட்டிய ஆய்வுகளையும் பார்ப்போம்.

"...ஓர் இந்தியச் சிறுமியை எடுத்துக் கொள்வோம். அவள் ருதுவான (சாமத்தியப்பட்ட) ஒன்பது மாதக் காலத்திற்குள் ஒரு குழந்தையைப் பெற்றுவிட வேண்டுமென்று எண்ணுகிறாள். ...... கணவன் என்ன சொல்லுகிறானோ அதன்படி ஆடவேண்டியதே அவளுடைய பாடம்.... வீட்டிலுள்ள பெரியோர்களோ ஒன்றுமறியாதவர்கள். மூடப் பழக்கவழக்கங்களில் நம்பிக்கையுள்ளவர்கள்.."

ஆபாசமான படங்களை எழுதுவதையோ, பிரசுரிப்பதையோ தடுக்க கி.பி.1912-ஆம் வருடம் செப்டெம்பர் மாதம் 12-ஆம் தேதி ஜெனிவாவில் கூடிய மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஒட்டி, இந்தியப் பாராளுமன்றத்திலும் சீர்திருத்தினார்கள்.

"ஆபாசமான புத்தகங்களோ, படங்களோ, சிற்பங்களோ மதச்சம்பந்தமான கோயில்களிலோ, வேறு இடங்களிலோ, கோயில் இரதத்திலோ காணப்படுமாயின் அதை இச்சட்டம் பாதிக்காது...."

பெண்களுக்கு 12 வயது வந்தபின் தான் மணம் செய்விக்க வேண்டுமென்று அரசு ஒரு சட்டம் கொண்டுவந்தது.... இதை மறுத்து சட்டச்சபையில் பழக்கத்திற்கு விரோதமாகப் போகக் கூடாது என்றும்..... புருஷனையும், மனைவியையும் பிரித்து வைப்பதற்கு உனக்கென்ன அதிகாரமிருக்கிறது என்றும்..... பெண்ணுக்கு வயது வரும்வரை அவளைத் தகப்பனார் வீட்டில் வைத்திருந்தால் அவளுடைய நடத்தை கெட்டுவிடுமென தகப்பனார் அஞ்சி அவளைக் கூடிய சீக்கிரம் மணம் செய்வித்துத் தன் கையைக் கழுவிவிட வேண்டுமென்றும் நினைக்கிறான்.... என்று பல்வேறு கருத்துக்கள் பேசப்பட்டன.

**எம். ஹரிவிலாச சர்தா** என்ற சட்டச்சபை உறுப்பினர் மூன்று வயதிலும் நான்கு வயதிலும் பெண்களுக்குக் கல்யாணம் செய்வதைவிட, ஒன்பது





அல்லது பத்து வயதுள்ள சிறுமிகளை மணந்து அவர்களிடம் புணருவதைவிட மானம் கெட்ட செய்கை உலகில் வேறு ஒன்றுமிருக்காது என்றார்....

ஒரு பெண் பக்குவமடைந்த (சாமத்தியப்பட்ட) சில நாட்களுக்குள் அவளுடன் புருஷன் சம்போகம் செய்து விடுகிறான்.... இதனால் ஒரு மனிதனின் ஆயுட்காலத்துக்குள் (இந்திய மக்களின் சராசரி ஆயுள் 22 வயதாகும்) 32,00,000 (32 இலட்சம்) பெண்கள் பிரசவ வேதனையால் இறந்து விடுகின்றனர். தங்களுக்குப் பிறக்கும் அடுத்த குழந்தை பெண் குழந்தையாயிருக்குமாயின், அதைக் கோயிலுக்குக் கடவுளின் பொருட்டுக் கொடுத்து விடுகிறோமென ஒரு பிராத்தனை செய்து கொள்வதுமுண்டு....அப்பெண்ணுக்கு வயது ஐந்து ஆன உடனே, கோயில் குருக்கள் அவளிடம் விபசாரம் செய்ய ஆரம்பித்து விடுகிறான்...

மருத்துவமனைக்கு வந்த சிறுமிகளின் வியாதிகள் என்ன? என்ற ஆய்வில் 9 வயது சிறுமி கல்யாணமான மறுநாளே இடதுகால் எலும்பு பிசகி கருப்பை கவிழ்ந்து விட்டது. 10 வயது பெண் நிற்க முடியாது பெண் குறியில் புண் உண்டாகி இரத்தம் பெருகி ஒழுகிறது. 9 வயது பெண்ணுக்கு அவயத்தில் அதிக ரணம். இவள் புருஷனுக்கு வேறு இரு மனைவிகளும் உண்டு. 7 வயது குழந்தை புருஷன் கொடுமையால் தற்கொலை செய்தாள். 10 வயது குழந்தை திருமணம் செய்ததில் இருந்து எழுந்து நிற்க சக்தி அற்றுப் போனாள்... தொடர்ச்சியாக **இந்தியாவில் 2,68,34,838 (இரண்டு கோடியே 68 லட்சம்) விதவைகள் இருப்பதை அரசு புள்ளிவிபரம் காட்டியது..."[21]**

ஒருசிறுமி தனது முதல் மாதவிடாயைத் தொடர்ந்து பிள்ளை பெறவும், உடலுறவுக்கும் உள்ளாக்கப்பட்ட நடைமுறைகள் இந்திய இந்துப் பண்பாடுகளின் கேவலமான காட்டுமிராண்டித்தனமான ஆணாதிக்கம் என்பதை இவை ஆதாரமாகக் காட்டுகின்றது. ஆண்களின் பாலியல் தேவைக்குப் பெண்ணின் மீதான ஒழுக்கம் ஆணாதிக்கப் பண்பாட்டால் வரையறுக்கப்பட்டது. சிறுவயது திருமணம் அவளின் ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் என்ற வாதங்களைத்தான் இன்று சமாத்தியச் சடங்கைச் சீரழிவுக்குப் பின்னால் முன்வைத்து பாதுகாக்கின்றனர்.

**மார்க்ஸ் இந்தியச் சமுதாயத்தை, இது போன்ற வக்கிரத்தைக் குறித்து தான், காட்டுமிராண்டிச் சமூகம் என வருணித்தார்.** இதை மார்க்சிய விரோதிகள் இன்று மார்க்ஸ்சுக்கு எதிராகக் கையாள்வதன் பின் இந்த ஆணாதிக்கக் காட்டுமிராண்டித்தனத்தின் தொடர்ச்சியைப் பாதுகாக்கத்தான்.

இளம் சிறுமிகள் மீதான இந்துப் பண்பாடு, கலாச்சார ஆணாதிக்கம் சிறுமியில் புணர்ந்து குழந்தைகளைப் பெறவும், அதுவும் பெண் குழந்தைகளை வேள்விக்குக் கிடாய் (ஆண்ஆடு) வளர்ப்பது போல், நாட்டின் உயர்ந்த மனிதர்களின் விபச்சாரத்துக்குக் கோயிலில் விட்டும் தமது காட்டுமிராண்டிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பண்பாட்டைக் கலாச்சாரத்தை இன்று போல் அன்றும் பாதுகாத்தனர். அதே நேரம் இவை இளம் வயது விதவைகளை உற்பத்தி செய்து அவர்களின் பாலியல் தேவையைக் காயடித்தும், ஆயுளை மிகக் கீழ்நிலைக்குத் தாழ்த்திய பண்பாட்டின் வாரிசுகள் தான் சில மாற்றத்துடன் இன்றைய பண்பாட்டைக் கலாச்சாரத்தை முன்தள்ளுகின்றனர்.

இந்தப் பண்பாட்டில் உருவான ஆபாசமான எழுத்துகளை, சிற்பங்களை.... பாதுகாக்கவும், அதை ஆணாதிக்கப் பண்பாட்டால் நிலைநிறுத்தவும் போர்க்கொடி தூக்குகின்றனர். ஓரினச் சேர்க்கை போன்றவற்றின் அடிப்படைகள் கூட காயடிக்கப்பட்ட இந்தியப் பண்பாட்டின் கொடையாக அச்சமூகத்தில் இருப்பதால் ஆணாதிக்கச் சிற்பங்கள் அதைப் பிரதிபலிக்கின்றன. நவீன ஆணாதிக்கம் இந்தச் சிற்பத்தைக் காட்டி ஓரினச் சேர்க்கைக்குச் சட்ட அங்கீகாரத்தைக் கோருவதன் மூலம், உண்மையில் இந்தக் காயடிப்புகளை நிரந்தரமாக்கவும், அதை நுகரவும் துடிக்கும் போக்கு இன்றைய புதிய ஏகாதிபத்தியப் பண்பாடாகியது. சிறுமிகள் சிறுவயதில் திருமணம் செய்து அவர்களைச் சிறுவயதிலேயே விதவையாக்கிவிட்ட இந்து ஆணாதிக்கப் பண்பாட்டைப் பார்ப்போம்.[22]

**அட்டவணை-4**

| கி.பி 1921 | மொத்தப் பெண்கள் தொகை | திருமணம் செய்யாதோர் | 30 வயதாகியும் திருமணம் செய்யாதோர் | திருமணம் செய்தோர் | இதில் மொத்த விதவைகள் | இதில் மொத்த 15 வயது விதவைகள் |
|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 15,49,46,926 | 5,48,41,195 | 7,83,136 | 10,01,05,731 | 2,68,34,838 | 3,96,556 |
| இந்துக்கள் | 10,58,29,124 | 3,50,63,817 | 4,46,056 | 7,07,65,307 | 2,02,18,780 | 3,29,076 |
| மற்றவர்கள் | 4,91,17,801 | 1,97,77,373 | 3,37,080 | 2,93,40,424 | 66,16,058 | 67,480 |

**குழந்தைத் திருமணம் விதவைகளை உற்பத்தி செய்கின்றன.** அத்துடன் மறுமணம் மறுப்பு பெண்களின் கண்ணீரை ஓடவைத்து. இந்தியாவின் இந்து ஆணாதிக்கப் பண்பாட்டிலும், மற்ற மதங்களில் இந்து ஆதிக்கமும் இணைந்து நான்கு பெண்ணுக்கு ஒரு பெண்ணை விதவையாக்கியது. மேலும் ஒருதார மணத்தின் சொத்து வடிவத்தை இந்து வானரங்கள் சிதைவின்றி பேணிக் கொண்டது. பிறந்த குழந்தையைக் கூட விதவையாக்கிய ஆணாதிக்க இந்து தர்மம் தனது காட்டுமிராண்டித்தனமான வக்கிரங்கள் அனைத்தையும் கையாண்டது. கி.பி.1921-இல், பதினைந்து வயதுக்குள் நான்கு இலட்சம் குழந்தைகளை விதவையாக்கியதன் பின், ஒருதார மணத்தைப் பற்றியும்





குடும்பத்தின் சுபிட்சம் பற்றியும், இந்து வானர நாய்கள் உபதேசம் பண்ணுவதில் என்றுமே பின்நிற்கவில்லை.

பெண்ணின் ஒழுக்கம், கற்பு பற்றிய பித்தலாட்டங்கள் பெண்ணின் கண்ணீரில் சுகம் கண்டன. 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களின் கண்ணீர் இதைவிடக் கேவலமானது. திருமணம் இன்றியே வாழ்க்கையை நகர்த்த நிர்ப்பந்தித்தப் பெண்களின் பாலியல் உணர்ச்சிகளை எந்த இந்து வானரங்களும் புரிந்து கொள்ளும் தகுதியற்ற மரமண்டைகளே. இந்து இராஜ்ஜியம், இந்து சட்டத் தொகுப்பைக் கோரும் இந்து பாசிஸ்டுகளின் ஆட்சி, மீண்டும் பழையதை நோக்கி கனவு காண்கின்றது. இதுமட்டுமே, வயிறு முட்ட சும்மா இருந்து தின்று கொழுக்கும் பார்ப்பனிய மீட்சியாக இருக்கும். இதுதான் இந்து இராஜ்ஜியத்தின் நிஜமான முகமும், கனவுமாகும்.

சாமத்தியச் சடங்கு மூலம் சிறுமி மீதான நிலப்பிரபுத்துவ நவீன விளக்கங்கள் ஆணாதிக்க ஒழுக்கங்கள் மீது கட்டமைக்கப்படுகின்றது. சிரிக்காதே, மற்ற ஆண்கள் உடன் கதையாதே, தலை குனிந்து செல், வாய் காட்டாதே, அடக்கமாக இரு, ஆண்கள் சாப்பிட்ட பின் சாப்பிடு, ஆண்கள் உடன் போட்டியிடாதே, பெற்றோருக்கும், மூத்தவர்களுக்கும், தம்பிக்கும் அடங்கி சொல் கேட்டு நட, பெரியவர்கள் நிச்சயிக்கும் புருசனை எதிர்பார்த்து மதித்து நட, உடுப்பை அடக்க ஒடுக்கமாகப் போடு, அழகு செய்யாதே என்று நிலப்பிரபுத்துவப் பண்பாட்டை, பெற்றோர்கள் ஏகாதிபத்திய நுகர்வின் மேல் நின்று மாறுபட்ட சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுக் கலாச்சாரத்தை ஒட்டி ஆணாதிக்கக் கட்டமைவின் எல்லைக்குள் எழுதப்படாத சட்டமாக, பண்பாடாக இச்சாமத்தியச் சடங்கு மூலம் பெண் மீது திணிக்கின்றனர்.

ஒரு பெண் ஆணைப் போல் எல்லா உரிமையும், கடமையும், தெரிவையும் கொண்ட சுய ஆற்றல் உள்ளவள் என்பதை அனைத்துச் செய்கையும் மறுக்கின்றது. ஒரு பெண் தனது சுயக்கட்டுப்பாட்டையும், மனித வாழ்வியலில் சமூக நோக்கத்தையும், ஒழுக்கத்தையும் ஆணைப் போல் பெண்ணும் கடைப்பிடிக்க முடியும் என்பது எதார்த்தமாகும். இந்த இயல்பான மனிதச் சமுதாயத்தின் வளர்ச்சியுடன் ஆண் உடன் பெண் சேர்ந்து கடைப்பிடிக்கும் இயல்பான இயற்கையின் இயங்கியல் தன்மையை மறுக்கும் ஆணாதிக்கம், பெண்ணைத் தனக்கு உட்பட்ட தனது அடிமையாக, பிள்ளை பெறும் இயந்திரமாக, நுகர்வுப் பண்டமாக மாறுபட்ட சமூக எல்லைக்குள் பெண்ணை வழிநடத்தக் கோரும் வடிவங்களின் ஒன்றே சாமத்தியச் சடங்கு ஆகும்.

உன்னதமான மனிதச் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றால் பெண்-ஆண் பரஸ்பரம் மதிப்பைக் கொண்ட, யாருக்கும் யாரும் அடிமையற்ற சமூகத்தைப் போராடிப் பெற, நாம் சாமத்தியச் சடங்கின் வடிவத்தையும், அதன் ஆணாதிக்கப் போக்கையும், இந்தப் பண்பாட்டுக் கலாச்சாரப் பொருளாதார அமைப்பையும் தகர்க்க அறை கூவுவதும், போராடுவதும் மனிதச் சமுதாயத்தை நேசிக்கும் ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 7. பெண்களின் கற்புரிமையைப் பாதுகாக்கும் போராட்டத்தில், உருவகமான ஆணாதிக்கக் ""கற்பு"" என்ற அடித்தளத்தைத் தகர்ப்பது எப்படி?

“கற்பு” என்ற சொல்லைக் கைவிடாமல் பாவிப்பவர்கள் என “கேள்வி” கடந்து கோட்பாடு அற்று விவாதிக்கின்றனர். இங்கு “கேள்வி”யல்ல முடிவாகக் கூறும் போதுதான் இதன் அரசியல் வெட்ட வெளிச்சமாகப் புரிகின்றது. “கற்பு” என்பதைக் கருத்துமுதல்வாதமாகப் புரிகின்ற போது கருத்தால் மறுப்பது நிகழ்கின்றது. நேரடியாகப் பொருள் அல்லாத விளைவுகளில் கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் தொடர்பான விவாதத்தை இது கோருகின்றது. தேசியம், வர்க்கப்போராட்டம் போன்றன பொருள்முதல்வாதம் சார்ந்ததா? அல்லது கருத்துமுதல்வாதம் சார்ந்ததா? என்ற கேள்வி எழுகின்றது. சமுதாயத்தில் உடன்பாடற்றவைகளைக் கருத்துமுதல்வாதமாகக் காட்டி விளக்குவது பொருள்முதல்வாதத்தை மறுப்பதாகும்.

மக்களிடம் அன்னியப்பட்ட புத்திஜீவிகள், மக்களுக்கு அன்னியமான கோட்பாடு கொண்டோர் “கற்பழிப்பு”க்கு எதிராகக் “கற்பு” என்ற கோட்பாட்டை எதிர்த்து போராடுவதற்குப் பதில் மொழியில் ஒளித்து (என்னதான் சொல்லை மாற்றினாலும் ஆணாதிக்கச் சமூக அமைப்பில் அச்சொல்லுக்குரிய அர்த்தங்கள் மாறிவிடுவதில்லை. மாறுவதாயின் சமூக அமைப்பு மாறவேண்டும்.) விளையாடுகின்றனர். ‘‘கற்பழிப்பில்’’ ஈடுபடும் ஒருவன் பெண்ணுக்குக் “கற்பு”உரிமை உண்டு என்ற ஆணாதிக்க நிலையில் நின்று, அதை அழித்துச் சூறையாடும் போது, அதற்கு எதிரான ஆணாதிக்க நோக்கத்தை வெளிப்படுத்தும் குற்றத்தை (எப்போதும் சர்ச்சைக்கு உள்ளாவது கற்பழிப்பு குற்றத்துக்கு எதிராக எழுதும் போதே) வேறு எந்தச் சொல்லும் மாற்றீடு செய்யமுடியாது. இப்படி மாற்றீடுவது என்பது ஆணாதிக்க வெளிப்பாடான ‘‘கற்பழிப்பின்’’ நோக்கத்தை அதன் வக்கிரத்தை மழுங்கடித்து, “கற்பு” மீதானஆணாதிக்கப் பொருள் சார்ந்த செயல் தளத்தைத் ‘‘தேசியம் கற்பிதம்’’ என்று கூறித் (இங்கு ‘‘தேசியம்’’ முதலாளித்துவக் கோரிக்கை. “கற்பு” இன்று ஆணின்





கோரிக்கை. ஆனால் பாட்டாளி வர்க்கம் தேசியத்தின் ஜனநாயகக் கோரிக்கையை ஆதரிக்கின்றது. இது போல் பெண்ணின் ஜனநாயக உரிமையாகப் பெண் உருவாக்கிய “கற்புரிமையை” ஆணாதிக்கத்திடம் இருந்து பாதுகாக்கப் பெண் போராட வேண்டியுள்ளது. அதாவது இங்கு கற்புரிமை என்பது ஆணுக்கு எதிரான ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்ணின் தற்பாதுகாப்பு வடிவமாக உள்ளது. இதைத்தான் எல்லா ஆணாதிக்கமும் சூறையாட விரும்புவதும் பெண்ணின் எதிர்ப்பும் ஆகும்.) தேசத்தை ஏகாதிபத்தியம் சூறையாடுவதை மூடிமறைப்பது போல், இன்று ஆண் உருவாக்கிய பெண்ணின் “கற்பைப்” கற்பிதமாக்கி ஆணாதிக்கம் சூறையாடுவதைப் பூசி மெழுக விரும்புகின்றனர். அதாவது ஒரு பெண் தனது சொந்த உடல் மீதும், உணர்வு மீதும் பாதுகாக்கும் தனித்துவத்தை ஆணாதிக்கம் சூறையாடும் போது அது பெண்ணின் கற்புரிமையாகப் பெண் முன் உள்ளது. ஆதி சமூகங்களில் ஆண் - பெண் வரைமுறையற்ற புணர்ச்சியில் இருந்த போது பெண்தான் ஆணைத் தெரிவு செய்யும் தாய்வழிச் சமூகம் இருந்தது.

பின்னால் தனிச் சொத்துரிமையூடாக ஆண் சொத்துரிமையைப் பெற்று, சமூகம் மீது ஆதிக்கத்தை நிலை நிறுத்தத் தொடங்கிய போது, பெண்ணின் உரிமை படிப்படியாகப் பறிக்கப்பட்டு, பெண் மீது ஆணின் வரைமுறையற்ற சூறையாடல் சமூகத்தில் உருவானது. இந்த வளர்ச்சியில் பெண் தற்காப்பு நிலையெடுத்து குறித்த ஆணைச் சார்ந்திருக்க நிர்ப்பந்திக்கப்பட்டாள். இது பெண்ணின் கற்பாக இருந்தது. பெண் தான் விரும்பும் ஓர் ஆணுடன் மட்டும் உறவு கொள்ளும் எல்லைக்குள் இது இருந்தது. இந்தத் தற்காப்பைப் படிப்படியாகப் பெண்ணிடம் இருந்து ஓர் ஆண் தனது சலுகைக்குரிய, தனக்குரிய சொத்தாக மாற்றினான். பரஸ்பரம் இணைமணத்தில் ஆணைத் தெரிந்தெடுக்கும் தெரிவை, பெண் ஆணாதிக்கச் சூறையாடலுக்கு எதிராகத் தற்காப்பு நிலையில் பெற்றாள். இதன் தொடர்ச்சியில் ஆண் சார்ந்த தனிச்சொத்துரிமை பெண்ணைத் தனது சொத்துரிமையாக்கியது என்பது, வர்க்கப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கியமான புதிய ஒடுக்குமுறையாகும். இந்த எல்லைக்குள் கூட கற்பு என்பது பெண்ணின் தற்காப்பு அரண்களைப் பிரதி செய்கின்றது. இன்று ஆணாதிக்கச் சமூகத்தில் வரைமுறையற்ற புணர்ச்சியை, ஒழுக்கத்தை மீளக் கோருவது ஆணாதிக்கமே ஒழிய பெண்ணியமல்ல. பெண் விளம்பரப் பதுமையாக்கப்பட்டு, அனைத்துத் துறையிலும் சூறையாட அலைவதை நாம் காணமுடியும். இங்கும் பெண் தொடர்ந்து தற்காப்பு நிலையெடுப்பதும், உலகமயமாதல் பெண்ணை மேலும் மேலும் நிர்வாணமாக்குவதும் கண்கூடு.

விபச்சாரத்தில் பெண் எதைக் காசுக்கு விற்கின்றாள்? உடலை மட்டுமல்ல...சொந்தக் கற்புரிமையை என்பது பல பெண்ணியல்வாதிகளுக்குப் புரிவதில்லை. ஆண் மட்டுமே இங்கு உடலை அனுபவிக்கின்றான். பெண் சொந்தக் கற்புரிமையைத் தன்மானம் கடந்து விற்க நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். ஆணாதிக்கம் பெண்ணை உடல் சார்ந்து அணுகுவதால் ஆணாதிக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழியில் தான் பெண் உடலை விற்கின்றாள் என்ற கருத்தமைவு புனையப்படுகின்றது.

இதைப் பற்றி **ஏங்கெல்ஸ்** என்ன கூறுகின்றார் எனப் பார்ப்போம். ‘‘பொதுமகளிர் முறை நேரடியாகக் குழு மணத்திலிருந்து வந்ததாக, கற்புரிமையை வாங்குவதற்குச் செலுத்தும் காணிக்கை என்ற முறையில் பெண்கள் உடலுறவுக்குத் தம்மை ஒப்படைத்ததிலிருந்து வந்ததாக அடையாளம் கண்டு கொள்ளமுடியும். பணத்துக்காக உடலுறவுக்குத் தம்மை ஒப்படைத்ததிலிருந்து வந்ததாக அடையாளம் கண்டு கொள்ளமுடியும். பணத்துக்காக உடலுறவுக்கு உடன்படுதல் முதலில் ஒரு மதச் சடங்காக இருந்தது. அந்தச் சடங்கு காதல் தெய்வத்தின் ஆலயத்தில் நடைபெற்றது.’’[8] முதல் விபச்சாரம் பணத்தைக் கொடுத்து தொடங்கிய போது பெண்ணின் கற்புரிமையைக் கடவுளின் பெயரில் ஆணாதிக்கம் வாங்கிக் கொண்டது. பெண்ணின் சுதந்திரத்தை விலை பேசிய அந்த நிமிடமே, பெண்ணின் கற்புரிமையைப் பெண் உடல் உரிமையில் இருந்து இழந்து விடுகின்றாள். பெண் தனது தெரிவைவிட பணத்தைப் பெற்று இழப்பது உடல் உரிமையையல்ல கற்புரிமையையே என்பதே இங்கு அடிப்படையான உள்ளடக்கமாகும்.

உடல் என்பது மனிதனில் வெறும் உறுப்புகளின் பிம்பமல்ல. மாறாக ஒவ்வொரு மனிதனிலும் உடல் என்பது உள்ளார்ந்த தனித்துவமிக்க புற உலகைப் புரிந்து வெளிப்படுத்தும் தன்மைதான் மனிதனின் உள்ளடக்கமாக உருவாகின்றது. அதாவது உடல் எல்லா மனிதனுக்கும் பொதுவானதாக உறுப்புகளின் தொகுதியாக இருக்கும் அதே நேரம், வெளிப்படுத்தும் வடிவம்தான் வேறுபடுகின்றது. ஒரு விபச்சாரிக்கும், விபச்சாரி அல்லாத பெண்ணுக்கும் உள்ள வேறுபாடு உடலுரிமையை விற்பதில் அல்ல... கற்புரிமையை விற்பதில் தொடங்குகின்றது. இது பெண்ணின் நிலையில் ஆணாதிக்கம் விதிந்துரைக்கும் கற்பையல்ல, மாறாக அப்பெண்ணால் தீர்மானிக்க முடியாமல் சூறையாடப்படும் கற்புரிமையைத்தான். இதை அவள் விரும்பி அல்ல, சமூக நிலைமையால் அவளை மீறி இது செயல்படுகின்றது.

**அ.மார்க்ஸ்** தேசியத்தைக் கற்பிதம் என்கின்றார். தேசியவிடுதலைப் போராட்டம் தான் தேசத்தை உருவாக்குகின்றது என்றார். ஆனால் தேசம் முன்கூட்டியே இருப்பதை மறுத்து, அதில் இருந்தே போராட்டம் தொடங்குகின்றது என்பதை மறுப்பது அடிப்படையிலேயே கருத்துமுதல்வாதமாகும். இது இயங்கியலின் வரலாற்று வளர்ச்சி விதிகளை மறுக்கின்றது. பொருள் முன்கூட்டியே தோன்றுவதும், அதில் இருந்தே அடுத்த கட்டப் பாய்ச்சல் நிகழ்வதும்தான் இயங்கியல் ஒழுங்காகும். இதை மீறமுடியாது. இதை மறுத்து தேசியத்தைக் கற்பிதமாகக் கூறுவது, ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பை ஏற்றுக் கொள்வதில் இருந்து உதிக்கின்றது. பூ வரும் முன்பு விதை பெறமுடியாது. மக்கள் பேசும் முன் வசனம் மொழியில் வரமுடியாது. ஆனால்





அது பினனால் ஒழுங்கமைக்கப்படுகின்றது. அது முந்திய வடிவிலும், திரிந்த வடிவிலும் கூட மாற முடியும். பூ விதையாக மாறும்போது இயங்கியல் ஒழுங்கிலும், பூ பிய்த்தெறியும்போது திரிந்த வடிவிலும் மாறுகின்றது, மாற்றப்படுகின்றது. தேசிய விடுதலைப் போராட்டம் இருக்கும் தேசத்தில் இருந்து அரசை உருவாக்குகின்றது அல்லது திரிந்த வடிவில் தரகாகத் துரோகம் செய்வதில் முடிகின்றது. இதுபோல்தான் கற்புரிமை பற்றிய வாதங்களும்.

பெண் தனது பாலியல் நடத்தை மீதான சொந்தத் தெரிவைத் தெரிந்த போதே கற்புரிமை பொருள் வடிவம் பெறுகின்றது. ஆனால் அது ஆணாதிக்கத்தால் முதிர்ச்சி பெற்ற போது கற்புரிமையின் அர்த்தம் திரிகின்றது. இதனால் பொருளில் திரிபடைந்து மாற்றம் காண்கின்றது. அதே நேரம் பழையது தொடர்ந்து இருப்பதை மறுக்கின்ற போது, பெண்ணின் சுதந்திரத் தெரிவை மறுப்பதை அடிப்படையாக்குகின்றது. கற்புரிமை மொழிக்கு முன்னமே எதார்த்தத்தில் இருக்கின்றது. அதன் பின்புதான் மொழி வருகின்றது. இந்த மொழி திரிபடைவது பின்னால் நிகழ்கின்றது. ஆனால் பலர் இயங்கியலின் உட்கூறைக் கண்டு கொள்ள முடியாத இயங்கியல் மறுப்பாளராக இருக்கின்றனர்.

**ஏங்கெல்ஸ்** இயங்கியல் வளர்ச்சியை மறுப்பது பற்றி கூறிய கருத்துகள் இந்த இடத்தில் சிறப்பாகப் பொருந்துகின்றது. ‘‘வசனம் என்ற சொல் தோன்றுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே அவர்கள் வசனம் பேசியது போன்று.’’[23] எனக் குறிப்பிட்ட போதே வசனம் முன் கூட்டியே மக்களால் பேசப்பட்டது. வசனம் மொழியில் வந்த பின்பு, அதன் அர்த்தம் மாறிவிடுவதில்லை. அது எந்த மொழியில் இருந்தாலும் இது பொருந்தும். உண்மையில் இந்தச் சொல் என்பது கற்பனையானவையல்ல. சொல் என்பது பொருளைக் குறித்து அடையாளப்படுத்துவதுதான். பொருளை அடையாளப்படுத்துவது என்பது மக்களிடையே இருந்த தூரம், காலம், சூழல்... போன்ற இயற்கையின் விளைவாலும், செயற்கையான உழைப்பின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியாலும் ஒரு பொருளைக் குறித்து அடையாளப்படுத்துதல், மொழியின் உச்சரிப்பில் வேறுபட்டாலும் அதன் அடையாளப்படுத்துதல் ஒன்றையே குறிக்கின்றது. இந்த ஒன்றைக் குறித்து அடையாளப்படுத்தலை வந்தடைந்த பாதை வேறுபட்டு, அதன் விரிவான அர்த்தம் மற்றும் பயன்பாட்டின் தன்மை வேறுபாடுகள் இருந்த போதும் பொருள் குறித்த அடையாளப்படுத்துதல் பொது சாராம்சத்தில் ஒன்றையே குறிக்கின்றது. இது உலகில் காணப்படும் பல்வேறு ஒரே பொருளுக்கும் பொருந்தும்.

உதாரணமாக நெல் இனத்தை எடுத்தால் அதில் பலவகையானவை, பலதன்மையுடன் இருந்த போதும் அது ஒன்றைக் குறித்து நெல்லாகின்றது. இதன் பொது சாராம்சம் இதைத் தெளிவாக நிர்ணயிக்கின்றது. **ஏங்கெல்ஸ்** இந்த வளர்ச்சி விதியை விளக்கும் போது ‘‘எனவே நிலைமறுப்பு நிலைமறுக்கப்படல் என்பது யாது? மிகவும் பொதுவான, இந்தக் காரணத்தால் மிகவும் பரந்த செயல்விளைவுடைய மற்றும் முக்கியமான இயற்கை, வரலாறு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிந்தனை ஆகியவற்றினுடைய வளர்ச்சியின் விதியாகும். இயங்கியல் என்பது இயற்கை, மனிதச் சமுதாயம், சிந்தனை ஆகியவற்றினுடைய இயக்கம் மற்றும் வளர்ச்சியின் பொது விதிகளைப் பற்றிய விஞ்ஞானமே தவிர வேறு எதுவுமன்று..... இயங்கியல் விதிகளை மூன்றாகச் சுருக்கலாம்.

1. அளவுநிலை பண்புநிலையாகவும், பண்புநிலை அளவுநிலையாகவும் மாறுபாடு அடைவது என்னும் விதி.

2. எதிர்நிலைகள் பரஸ்பரம் ஊடுருவல் என்னும் விதி.

3. நிலைமறுப்பு நிலைமறுக்கப்படல் என்னும் விதி"[23]

இவ்விதிகளை மறுத்தே சொல்லின் பொது சாராம்சத்தைக் கொச்சைப்படுத்த முடிகின்றது.

பல சிக்கலான செயல்களின் தொகுப்பில் தான் பொருள் உண்டாகின்றது, நிலைக்கின்றது, நீடிக்கின்றது, மாறுகின்றது, சிதைகின்றது, மீளவும் உருவாகின்றது. ஒரு பொருள் ஒரு இயக்கம் என அனைத்தும் சிக்கலான பல இயக்கங்களின் விளைவுகளாகத் தான் நடந்தன, நடந்து கொண்டிருக்கின்றன. இது தொடர்ந்து மாறிக் கொண்டு வருகின்றது. இது பொருளின் பொதுத் தன்மையைக் குறித்த அக்கணத்துக்கே உரிய வகையில் எந்த நிலையிலும் (அது வினாடியாக இருந்தாலும் நீடித்த பல கோடி வருடங்கள் ஆனாலும்) கொடுக்கின்றது. வளிமண்டலத்தை எடுத்தால் ஆக்ஸிஜன்($O_2$), நைட்ரஜன்($N_2$), கார்பன்-டை-ஆக்ஸைடு($CO_2$) போன்ற வாயுக்கள் ஊடான ஒரு பொது உண்மையை, அது சார்ந்த சாராம்சத்தைப் பூமி எங்கும் கொண்டு உள்ளது. சுரண்டலை எடுத்தால் உழைப்பைச் சுரண்டும் பொது சாராம்ச உண்மை உலகெங்கும் பொதுவாக உள்ளது. பெண்ணை எடுத்தால் ஆணாதிக்கச் சுரண்டல் சாராம்ச உண்மை உலகளவில் பொதுவாக உள்ளது. சாதியை எடுத்தால் சாதி ஒடுக்குமுறையுடன் கூடிய சுரண்டல், சாதி உள்ள நாடுகளில் பொதுவாக உள்ளது. இது எல்லா இயக்கத்திற்கும், பொருளிற்கும், சிந்தனைக்கும் பொதுவான உண்மையானதாக உள்ளது. இது மாற்றத்துடன் புதிய சாராம்சத்தைத் தொடர்ந்து பிரதிபலிக்கின்றது. தொடர்ந்து மாற்றத்துக்கும் உள்ளாகின்றது.

**மாற்றம் என்பது வெற்றிடத்தில் நிகழமுடியாது.** ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களுக்கிடையில்தான் மாற்றம் நிகழமுடியும். கற்பு என்ற சொல் வெற்றிடத்தில் இருந்து உருவாகியதல்ல. அது போல் மாற்றமும் வெற்றிடத்தில் நிகழமுடியாது. நிகழமுடியும் எனின் அது கருத்துமுதல்வாதமாகும். கற்பு என்பது கற்பிதமல்ல. அப்படி இருக்கவும் முடியாது. சொல்லுக்குரிய அர்த்தத்தில் கற்பு பற்றிய எதிர்க் கண்ணோட்டத்தில் கற்பிதம் எனக் கூறுவது அல்லது அதை மறுத்து எழுதுவது இலகுவானதாகும், இது புரட்சிகர வாய் வீச்சாகின்றது. கற்புக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. வரலாற்று ரீதியாக இயற்கையில்





மாறிவந்த மனிதச் சமூகச் சாரம் கற்பைப் பற்றிய வரையறைக்கு, மாறுபட்ட வரலாற்று வளர்ச்சியுடன் விளக்கத்தைக் கொண்டிருந்தது. இது பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட வரலாற்று வளர்ச்சி விதியுடன் ஒன்றி ஆளுமை பெற்றது. மற்றது உள்ளூராக நீடித்ததுடன் முரண்பட்டுப் போராடியது. கற்பு பற்றிய ஆணாதிக்க ஒழுக்கம் ஏகாதிபத்தியத்தால் மறுப்புக்குள்ளாகும் போது, அங்கு கற்புரிமை பற்றிய பெண்ணின் நியாயமான உரிமை அரங்குக்கு வருகின்றது.

"கற்பு", "கற்பழிப்பு" என்பவை எல்லாம் மொழியியல் ரீதியில் திரிக்கப்பட்டவை. **தமிழ் லெக்சிக்கன்** கற்பு என்பதைக் "களவுக் கூட்டத்துக்குப் பின் தலைவன் தலைவியை விதிப்படி மணந்து இல்லறம் புரியும் ஒழுக்கம்"[9] என்று வரையறுத்துள்ளது. கற்பு பற்றித் **தொல்காப்பியர்** தொல்-பொருள்-142-இல், கூறுவதைப் பார்ப்போம்.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைத்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"[9]

அன்று திருமணத்துக்கு முந்திய களவுக் காதல் அனுமதிக்கப்பட்டிருந்த எல்லையில், கற்புபானது திருமணத்துக்குப் பின் ஆண் பெண் விசுவாசத்திற்குக் கோரப்பட்டது. அதாவது வாரிசுரிமை ஒருதார மணத்தை வரையறுத்த போது, திருமணத்துக்கு முந்திய உறவு நிபந்தனையாவதைத் தடுக்கின்றது. ஏனெனின் ஆண் தனது குழந்தை என்பதை உறுதி செய்யும் திருமணத்தினூடாகக் கோரிய கற்பு மட்டுமே நிபந்தனையாக இருந்தது. ஆனால் திருமணத்துக்கு முந்திய கன்னியில் உடலுறவு மூலம் கருத்தரிக்கின்ற போதும் அல்லது திருமணம் முடிந்தவுடன் முந்திய உறவால் குழந்தை உருவாகின்ற நிலைமையில் இருக்கும் போதும், அப்பெண் பெறும் குழந்தை மீதான வாரிசுரிமையை ஆண் ஏற்க மறுக்கின்ற போதும் அல்லது திருமணமே நடக்காத போதும் 'கற்பு' என்பது கன்னியிலும் பாதுகாக்கப்படுவதை நிபந்தனையாகப் படிப்படியாகக் கோருகின்றது. கன்னியில் உடலுறவுச் சுதந்திரம் இருந்ததையும், இது மாறிவந்த சமுதாயத்தையும் துல்லியமாகச் **சங்க இலக்கியம்** கோடு இட்டுக் காட்டுகின்றது. மேலும் தொல்காப்பியர் தொல்-பொருள்-99-இல், "அச்சமும் நாணும் மடனும் முத்துற நிச்சமும் பெண்பாற்குரிய என்ப"[9] என்கின்ற போது பெண்ணின் அடிமைத்தனத்தை உறுதி செய்கின்றார். ஆணுக்கு விதிவிலக்காக்கியதன் மூலம் ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமையை உறுதி செய்கின்றார்.

மேலும் அவர் தொல்-பொருள்-111-இல், "நாணம் உயிரினும் சிறந்தது"[9] என்றும், "நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தது."[9] என்றும் கூறி, கற்பின் தன்மையை மூன்று வகையாகப் பிரிக்கின்றார். "**மூதானந்தம்** (கணவன் இறந்ததை அறிந்தவுடன் இறக்கும் பெண்), **புறக்காடு** (உடன் கட்டை ஏறும் பெண்), **தாபநிலை** (நோன்பை வழுவாது பேணும் பெண்)"[9] என வகுத்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புறம்-196-இல், "சாந்தம், அமைதி, மென்சொல், பேச்சில் துடுக்கை தவிர்த்தல் போன்ற பண்புகள் கற்புடைய பெண்ணின் குணங்களாக அமைந்தன"[9] என்று மாறிவந்த சமுதாய விளக்கம் போதித்தது. வாரிசுரிமையில் ஆணின் இரத்த வழியில் உறுதி செய்ய பெண்ணைக் கட்டுப்படுத்த, அடக்கி ஆளவேண்டிய வடிவில் இந்த நிபந்தனைகள் கற்பு வடிவில் முன்வைக்கப்பட்டுக் கோரப்படுகின்றது. இதில் இருந்தே மேலும் உடல் சார்ந்து கோருவதுடன், மற்றவை பெண்ணின் பொதுவான இயல்பாக நடைமுறைக்கு வந்துவிடுகின்றது. புறம்-198-இல், "கடவுள் சான்ற கற்பு"[9] என்று மேலும் விளக்கம் கொடுத்த போது கற்பு கோலோச்சிப் பெண்ணை அடக்கி ஆள்வதைக் காட்டுகின்றது.

ஆணாதிக்கம் பெண்ணின் கற்புரிமையை உள்வாங்கி பெண் மீது திரித்து, திணித்த போது, இதன் சமூகப் பெறுமானம் பெண்ணை இழிவு படுத்தியது. இது போல் **பறை, பறையன்** என்ற சொல்லையும் எடுக்க முடியும். பறை என்ற இசைக் கருவி பற்றிய கருத்தைத் திரித்து, அந்த இசையையும், அந்தக் கருவியையும் சாதிப் பண்பாட்டுப் பொருளாக்கப்பட்டுப் பறை தீட்டுப்படுத்தப்பட்டது. இங்கு இவ்விசைக் கருவி இழிவுக்குள்ளானது. பறை, பறையன் சாதி ரீதியாக இழிவுக்குள்ளாகும் போது அவ்விசைக்கருவியினை நாம் மறுக்கமுடியுமா? பார்ப்பனியம் அதைத்தான் கோருகின்றது. ஆனால் இசைக் கருவியான பறையைப் பாதுகாக்கவும், அதன் மீதான சாதிக் கறையை அகற்றவும் போராட வேண்டியுள்ளது. பறை மீது கறைபடிந்திருக்கும் சமூக மதிப்பீடுகளை மீளவும் புரட்சியூடாகப் புரட்டி எடுப்பதன் மூலம் அதன் இயல்பான, இயற்கையான நிலைக்கு மாற்றீடு செய்யப்படவேண்டும். இது போல் நடைமுறை சார்ந்து பல சொற்கள் திரிபடைந்துள்ளது.

"கற்பு", "கற்பழிப்பு" இது போன்றவையே, தனிமனிதன் முதல் மக்கள் மீதான அத்துமீறல்களின் போது அதை எதிர்த்த போராட்டத்தில் கற்புரிமை என்ற பதம் அடிப்படையான போராட்டத்தைக் குறித்து நின்றது. சமூகத்தின் வாழ்வு பண்பாட்டைப் பாதுகாக்கும் இந்தக் கற்புரிமை என்ற வரைமுறை எல்லாக் காலத்திலும் அடிப்படையானதாக இருந்தது. ஒரு தேசம் கற்பழிக்கப்பட்டது என்று குறிப்பிடும் போது அதன் அர்த்தம் ஒடுக்கு முறைக்கு எதிரான குரலாக ஓங்கி ஒழிக்கின்றது. தனிச் சொத்துரிமை சமுதாய விழுமியங்களையும், தனிமனித உரிமைகளையும் பறித்த போது, பறிகொடுத்தவன் தனது உரிமையைக் கற்புரிமையாக அடையாளம் காண்பதும், போராடுவதும் வழக்கில் வந்தது. மொழியியல் ரீதியில் இதன் அர்த்தம் ஒடுக்கப்பட்டவனின் குரலாகவும், சொந்த உரிமைக்கு ஆதரவான குரலாகவும் பரிணாமித்தது.

சொத்துரிமைச் சமூகம் சொத்துக் குவிப்பதைப் பொதுப் பண்பாடாக, உரிமையாக ஆக்கிய போது இந்தச் சொல்லின் இயற்கையான அர்த்தத்தைத் தனது சொத்துரிமை மீதான "கற்பாக"க் கண்டது. பெண்ணை அடிமையாக்கித் தனது சொத்துரிமையாக்கிய சுரண்டும் வர்க்கம், பெண்ணின் உரிமை மீது





கற்பை நிலை நாட்டிக் கொண்டனர். பெண் மீதான ஆணின் உரிமை பெண்ணின் மீதான வேலியாகக் "கற்பு" சிறையிட்டது. சொத்துரிமையை வாரிசாக்கும் ஒரே பாதுகாப்பு வேலி இந்தக் கற்புதான் என்பதை ஆணாதிக்கம் கண்டது.

ஆனால் கற்புரிமை தனிச் சொத்துரிமை வளர்ச்சியூடாகப் பெண் மீதான ஆணின் பொருளாதார மேலாதிக்கப் பாலியல் ஆதிக்க நாட்டத்தைத் தடுக்க, பெண்ணின் தற்காப்பின் உரிமையாக இருந்தது. பெண் தான் தெரிவு செய்யும் ஆணுடன் உறவு கொள்ளும் உரிமையைப் பாதுகாக்க, பெண்ணின் உரிமை கற்புரிமையாகப் பெண்ணுக்கு இருந்தது. ஒருதார மணத்தை முதலில் தனது தற்காப்பில் பெண் தெரிவு செய்த போது, ஒருதாரமணம் இன்று இருப்பதில் இருந்து வேறுபட்டு, அன்று ஒருதார மணம் பெண்ணின் இணை மணமாகவே இருந்தது. ஆனால் தனிச் சொத்துரிமை வளர்ச்சி பெற்று வளர்ந்த போது பெண்ணின் தற்காப்பு ஒருதாரமணத் தெரிவை, ஆணாதிக்கம் தனது பொருளாதார ஆதிக்கத்துடன் குறித்த ஆணுக்கு மட்டுமானதாகத் திரித்து, இறுக்கிய போது கற்புரிமையும் அதற்குள் சிக்கிக் கொண்டது.

**ஏங்கெல்ஸ்** ஆய்வுகளில் மிகவும் குறிப்பிடத்தக்க முக்கியமான விடயத்தைப் பார்ப்போம்.. "பொதுமகளிர் முறையிலிருந்து ஒருதார மணத்துக்கு மாற்றமடைந்த காலம் நெடுகிலும் அந்த மாற்றத்தைக் கொண்டு வந்தவர்கள் பெண்களே என்று **பாஹா.ஃ.பென்** கூறுவது மீண்டும் முற்றிலும் சரியானதே. பொருளாதார நிலைமைகளில் வளர்ச்சியின் விளைவாக, அதாவது பழைய பொதுவுடைமை முறை பலவீனமடைந்து மக்கள்தொகையின் அடர்த்தி அதிகரித்ததன் விளைவாகப் பழைய சம்பிரதாயப் பாலியல் உறவுகள் தமது வெகுளித்தனமான, பூர்வீகமான காட்டுத் தன்மையை இழந்து வர வர அந்த உறவுகள் மேன்மேலும் தரக்குறைவாக, ஒடுக்குபவையாகப் பெண்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும். அவர்கள் கற்புரிமைக்கு, விடுதலை என்ற முறையில் குறிப்பிட்ட ஒரு நபரைத் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகத் திருமணம் செய்து கொள்வதில் வேட்கை கொண்டிருந்திருக்க வேண்டும். இந்த முன்னேற்றம் ஆண்களிடமிருந்து தோன்றியிருக்க முடியாது. அவர்கள் நடைமுறைக் குழுமணத்தின் இன்பங்களைக் கைவிடுவதற்கு ஒருபோதும்-இன்றைய நாள் வரையிலும் கூட- கனவு கூடக் கண்டதில்லை என்ற காரணமே இதற்குப் போதும். பெண்கள் முயன்று இணை மண முறை நோக்கி மாற்றம் கண்ட பிறகுதான் ஆண்கள் கண்டிப்பான ஒருதார மணத்தைப் (அது பெண்களுக்கு மட்டுமே என்பதைச் சொல்ல வேண்டியதில்லை) புகுத்த முடிந்தது."[8] **ஏங்கெல்ஸ்சின்** இந்த ஆய்வுகளை இன்று பலர் மறுக்கின்றனர்.

அதுவும் ஏகாதிபத்தியப் பெண்ணியவாதிகளும், அராஜகவாதிகளும் இதை மறுப்பதில் மிகுந்த அக்கறையாக இருக்கின்றனர். ஒருதார மணத்தை ஏன் பெண் தெரிவு செய்தாள்? என்ற அடிப்படையான காரணத்தை மறுப்பதும், அதே நேரம் கற்புரிமையை, அதாவது பெண்ணின் சுதந்திரமான செயல்பாட்டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மறுத்துச் சூறையாடுவதை மூடிமறைப்பதும், இன்றைய பெண்ணியத்தின் ஆணாதிக்கமாக உள்ளது. கட்டற்ற விபச்சாரத்தை அதாவது ஆணைப் போல் ஈடுபடும் உரிமையைப் பெண்ணியமாகக் காண்போர் ஏங்கெல்ஸ்சின் குறித்த ஆய்வுகளை மூடி மறைத்தபடி விபச்சாரத்தை சமூகமயமாக்கத் துடிதுடிக்கின்றனர்.

இந்த இடத்தில் **ஏங்கெல்ஸ்சின்** குறிப்பு ஒன்றைப் பார்ப்போம். “ஆண்களுடைய வழக்கமான ஒழுக்கக் கேட்டைப் பெண்கள் சகித்துக் கொண்டிருக்கும் படி கட்டாயப்படுத்துகின்ற பொருளாதார நோக்கங்கள் - தமது வாழ்க்கையைப் பற்றிய கவலை அதற்கும் மேலாக, தமது குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை - மறைகின்ற பொழுது ஏற்படுகின்ற ஆண் - பெண் சமத்துவம், பெண்கள் பல கணவர் முறைக்குப் போய் விடுவதை விட ஆண்கள் உண்மையிலேயே ஒருதார மணத்தைக் கடைப்பிடிப்பதற்குப் பேருதவி செய்யும்...”[8] என்ற கூற்றில் இன்றைய பெண்ணியச் சிதைவைக் காணமுடியும்.

ஆண்-பெண் சமத்துவத்தை அடையாது ஆணாதிக்கச் சலுகையில் வெம்பிய விடுதலைகள், பெண்களைப் பல கணவர் முறைக்குள் ஆணாதிக்க வழியில் சிதைவதைக் காட்டுகின்றது. ஆண் பெண் சமத்துவத்தைச் சொத்துரிமை ஒழிப்பில் சாதிக்காத நிலையில், கிடைக்கும் சலுகைகள் மூலம் ஆணாதிக்க வழியில் பல கணவர் முறைக்குள் சென்று விபச்சாரத்தைப் பெண்களுக்குப் பொது சாராம்சமாக்குகின்றது. சுதந்திரமான விபச்சாரம் பெண்ணின் கற்புரிமையை மறுக்கின்றது. அது ஒருதார மணத்தையும், இணை மணத்தையும் மறுத்து, விபச்சாரத்தை வரைமுறையற்ற புணர்ச்சியில் வைக்கின்றது. எனவே மொழியில் கற்புரிமையை முதலில் மூடி மறைக்கின்றது. அதை ஆணாதிக்கப் புரிதலின் அடிப்படையில் பார்க்கின்றனரே ஒழிய, பெண்ணிய நோக்கில், அதன் தெரிவில், அதன் வரலாற்றுக் காரணத்தில் காண்பதில்லை.

பறை இசைக் கருவிக்கு எது நடந்ததோ அதுவே கற்புரிமைக்கும் நடந்தது. சமூகத்தை, இருக்கும் (ஏகாதிபத்திய) ஜனநாயக வடிவில் புரிவதும், அதன் அடிப்படையைப் பார்க்க மறுப்பதும், ஏகாதிபத்திய எல்லைக்குள் பொத்தென கவிழ்ந்து விழுவதேயாகும். இன்று தேசத்தின் பொருளாதாரத்தைச் சூறையாடும் போது தேசத்தின் கற்புரிமையை எப்படி அர்த்தமற்றதாக மாற்றுகின்றனரோ, அதுபோல் பெண்ணின் கற்புரிமைக்கும் இது நிகழ்கின்றது.

கற்புரிமையைச் சமூகமும், பெண்ணும் தெரிவு செய்த போது இருந்த அர்த்தம் திரிபடைந்து ஆணாதிக்கப் பொருளாதார மொழிக் கொள்கைக்குள் புதிய வடிவத்தைப் பெற்றது. இதுதான் பறைக்கும் நிகழ்ந்தது. வரலாற்றில் எத்தனையோ திரிபுகள் இயற்கைக்குப் புறம்பாகப் பொருளாதார மாற்றங்களுடன் தோன்றி உறுதிப்பட்டுள்ளது. இதை அது மாறிவந்த வழியாக அடையாளம் கண்டு, அந்தப் பொருளாதார வடிவத்தைத் தகர்ப்பதன் மூலமே இதன்





தோற்றத்தை ஒழிக்கவும், சிலதை மீளவும், பழைய இயற்கை வடிவில் மீட்டெடுக்கவும் முடியும். கற்புரிமையானது வாரிசுரிமையூடாகத் திரிபடைந்து கற்பான போது, அங்கு அதன் நோக்கம் தனிச் சொத்துரிமையை இரத்த வழியில் ஆண் உறுதி செய்வதை நிபந்தனையாக்கியது. ஆண் தனது குழந்தை என்பதை உறுதி செய்ய 'கற்பு' அவசியமாக இருந்தது. இந்த ஆணாதிக்கக் ‘கற்பு’ தனிச் சொத்துரிமையிலான வாரிசுரிமையில் உருவாகின்றது. அதை ஒழிக்காமல் ‘கற்பு’ ஒழிக்கப்படுகின்ற போது, அங்கு விபச்சாரமே கற்பை அழிக்கின்றது.

ஆனால் இன்று “கற்பு” சொற்பிரயோகத்தைப் பாவிப்பதை எதிர்த்து குரல் கொடுப்பவர்கள் எதற்காக இதைக் கையாளுகின்றனர்? அராஜகவாதக் கோட்பாட்டில் சிக்கிக் கொண்டவர்கள்தான் இதைக் கோருகின்றனர். **ஏங்கெல்ஸ்** அராஜகவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் எப்படி எதிர்த்துப் போராடுகின்றார்? எனப் பார்ப்போம். “விஷயங்களின் பெயர்களை மாற்றிவிட்டால் விஷயங்களையே மாற்றி விட்டதாக இந்தக் கனவான்கள் நினைக்கிறார்கள். மிகவும் ஆழமான இச்சிந்தனையாளர்கள் இப்படி மொத்த உலகத்தையுமே கேலி செய்கிறார்கள்”[24] இந்த மாதிரி மொழியில் ஒளித்து புரட்சி செய்பவர்களை மார்க்ஸ், ஏங்கெல்ஸ் உள்ளிட்டோர் எப்படி அடையாளம் காண்கின்றனர் எனப் பார்ப்போம். “பிரிவுகளின் சுயாட்சி, சுயாட்சி உடைய கோஷ்டிகளின் சுதந்திரமான சம்மேளனம், எதேச்சாதிகார-எதிர்ப்பு, அராஜகவாதம்- இவை அனைத்துமே ‘வர்க்கத்தினின்று இழிந்தவர்கள்’, ‘கதியற்றவர்கள்’, ‘பதவி முன்னேற்றமோ வாய்ப்புகளோ இல்லாதவர்கள்’........’’[24] இவர்கள்தான் அராஜகவாதக் கோட்பாடுகளின் அடிப்படையானவர்கள். **லெனின் ‘அரசும் புரட்சியும்’** என்ற நூலில் ஏங்கெல்ஸ்சின் மேற்கோளைப் பயன்படுத்தும் போது, அரசு அதிகாரம் தொடர்பாக **‘அதிகாரம்’** என்ற சொற்றொடர் மீது அராஜகவாதிகளின், வாய் வீச்சை அம்பலப்படுத்த பயன்படுத்திய வாதங்களைப் பார்ப்போம். “...ஒரு பொருளின் பெயரை மாற்றுவதன் மூலம் அப்பொருளையே மாற்றி விடுவதாய் நினைத்துக் கொள்கின்றார்கள்... உண்மைகளை எல்லாம் பார்க்காமலே கண்களைக் கெட்டியாய் மூடிக் கொண்டு ஆவேசமாய் இச்சொல்லை எதிர்த்துப் போராடுகிறார்கள்... என்ன என்பது தெரியாமலே பேசிக் கொண்டிருக்கிறார்கள் - அப்படியானால் அவர்கள் குழப்பம் உண்டாக்குவதைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை அல்லது அவர்கள் தெரிந்தே பேசுகிறார்கள் என்றால், பாட்டாளி வர்க்கத்தின் இலட்சியத்துக்குத் துரோகம் புரிகின்றனர். இரண்டில் எதுவாயினும் , அவர்கள் பிற்போக்குக்குப் பணியாற்றுவோரே ஆவர்.’’[25]

சிங்களத் தேசிய இனப் பாசிசம் தமிழ்த் தேசியத்தைச் சிதைத்த போது உருவான தேசியவிடுதலைப் போராட்டம், மறுதளத்தில் எந்தளவுக்குப் பாசிசமாக வளர்ச்சி பெற்றதோ, அந்தளவுக்குச் சமூகத்தை விட்டோடும் ஓடுகாலிகளையும் உருவாக்கியது. சமூக அவலங்களுக்குரிய மாற்றத்தை மக்களைத் திரட்டி போராட முடியாதவர்கள், அராஜகவாதத்தைத் தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சியாகப் பிரகடனம் செய்கின்றனர். அதை உயர்ந்தபட்சப் புரட்சியாகக் காட்டி மாற்றுகின்றனர். மக்களின் பிரச்சினைக்காக அணிதிரட்டிப் போராட முடியாத விடுதலைப்புலிகளும் மற்ற இயக்கங்களும், **ஒரு குண்டு வெடிப்பு மூலம் புரட்சி செய்வதைப் பிரகடனம் செய்கின்றனர்.** இதன் மூலம் மக்களின் மேல் ஏறி உட்கார்ந்து கொள்கின்றனர். இது இன்றுவரை பொது அரசியலாக, பூர்சுவா வர்க்கத்தின் இயல்பான ஆதரவுக் கண்ணோட்டமாக உள்ளது.

இதில் தோற்றுப்போனவர்கள், இதற்குள் பதவியைப் பிடிக்க முடியாதவர்கள், வர்க்கத்தில் இருந்து அன்னியமானவர்கள், வர்க்கக் கோட்பாட்டில் இருந்து விலகியவர்கள், தன்னார்வக் குழுவின் கோட்பாட்டாளர்கள் ஆகியோர்கள் சமுதாயத்தில் மக்களை அணிதிரட்டிச் சமூகத்தை மாற்றுவதைக் கைவிட்டவர்கள் ஆவர். இந்த இழிந்து போன பிரிவுகளின் சமூகத் தளமே, அராஜகவாதத்தின் ஊற்று மூலமாகின்றது. இது ஒரு வெடி குண்டு போல் புரட்சி கற்பனையில் மூழ்கிப் போகின்றது. இது பல்வேறு துறையில் புரட்சி பற்றி சொற்களின் ஊடாக, சில வரிகளூடாக வாயடித்தல் செய்கின்றது. இதையொட்டி **மார்க்ஸ்-ஏங்கெல்ஸ்** "...ஒரு தத்துவஞானி ஏதாவதொரு வகையில் விமர்சனம் செய்த உடனே அது செத்துவிட்டதாகக் கருதப்படும், வரலாற்றின் பக்கங்களிலிருந்து அகற்றப்படும். அதோடு எல்லா செய்முறைக் காரியங்களும் கூட ஒழிக்கப்பட்டுவிடும்''[24] என்று புரட்சி பேசத் தயங்குவதில்லை என்று கூறுகிறார்கள். இந்த வகையில் ஒன்றுதான் "கற்பு" என்ற சொல்லை மாற்றி வேறு சொற்களைப் போடுவது. சொற்களில் உலகத்தையும், சொந்த மக்களையும் ஏமாற்ற முயன்று, அராஜகவாத அரசியல் ஆதரவுடன் தன்னை மக்களுக்கு மேல் நிலைநிறுத்துகின்றது. "கற்பு"க்கு எதிராக, நடைமுறையில் மக்களை அணிதிரட்டிப் போராடுவதற்குத் தயாரற்ற பிரிவுகள், சொற்களில் புரட்சியைச் செய்துவிட கனவு காண்கின்றது. இதை மறுத்து மக்களை அணிதிரட்டிப் போராடி ஒழிக்கக் கோரும் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராகப் புரட்சிகர வசனம் பேசுகின்றது. இது எப்படி மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தும்? என்று கேட்டால் பதில் அளிக்க யாரும் இருப்பதில்லை. ஆனால் மொழியில் தன்னைப் புரட்சியாளனாக நிலைநிறுத்தி பிழைக்க முயல்கின்றது.

மொழி என்பது பொருளாதார வடிவத்துக்கு உட்பட்டது என்ற இயங்கியல் வளர்ச்சியை மறுக்கும் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அராஜகத்தை, இயங்கியல் மறுப்பில் கோருகின்றனர். சொற்கள் பொருளில் இருந்து தோன்றுகின்றது என்பதை மறுக்கும் இயங்கியல் மறுப்பு, அடிப்படையில் மொழியில் கருத்துமுதல்வாதத்தைத் திணிக்கின்றது. ''எதார்த்தமான உறவுகளுக்குப் பதிலாகச் சித்தம் (விருப்பம்) புரட்சியின் முக்கியமாகச் சித்தரிக்கப்படுகின்றது."[24] அதனால் சமூகத்தில் பொருள் உறவு எப்படி உள்ளது? என்பதை ஆராய மறுக்கின்றது.





பொருளாதார உறவே சமூக உறவாகப் பரிணாமிக்கின்றது. பெண் ஓர் ஆணுடன் வாழும் போது அதைத் தாண்டி,(இங்கு தாண்டல் என்பது பரஸ்பர விசுவாசத்திற்குத் துரோகம் செய்வதாகும். இது ஆண் செய்தாலும் பொருந்தும்.) கள்ள உறவு கொள்ளும் போது அல்லது திருமணத்துக்கு முன் உறவு கொண்டு ஏமாற்றப்படும்போது(இங்கு எப்போதும் ஆணாதிக்கம் பெண்ணை ஏமாற்றியும், விருப்பத்துடனும் பெண்ணின் தற்காப்பு கற்புரிமையைக் கற்பழிக்கின்றனர்.) ஆணாதிக்கம் இது போன்றவைகளைக் கற்பாக வேறு விளக்கம் கொடுத்து பெண்ணின் மீது மட்டும் நிபந்தனையாக்குகின்றது. திருமணம் செய்து வாழ்வை இழந்த அல்லது விவாகரத்து பெற்ற பெண் மீளத் திருமணம் செய்யும் போது கற்பிழந்தவளாகச் சமூகம் அடையாளப்படுத்துவதில்லை. ஆனால் மறைமுகமான வகையில் மறு திருமணம் இதை எல்லைப்படுத்துகின்றது. அடையாளப்படுத்துதல் எல்லாம் சமூக ஒழுக்க விழுமியத்துக்குள் உட்பட்ட பொருளாதார வடிவத்தால் மட்டும் வரையறுக்கின்றது. எனவே "கற்பு" என்பது எல்லா நேரமும் இரண்டாவது ஆணுடன் கொள்ளும் பெண்ணின் புணர்ச்சிக்குள் வரையறுப்பதில்லை. மாறாக நிலப்பிரபுத்துவப் பண்பாட்டு மீறலின் போதே வரையறுக்கப்படுகின்றது. இது ஒரு நிலையில் பெண்ணுக்குத் தற்காப்பு ஆயுதமாகவும், மறுதளத்தில் ஆணாதிக்கத்தின் சூறையாடலாகவும் வழக்கில் நீடிக்கின்றது.

பெண்ணின் "கற்பு"க்கு இலட்சணமாகப் பெண் மீதான ஒழுக்கம் எதைக் கோருகின்றது? இந்து மதப் புராணங்களில் நளாயினியின் புருஷன் குஷ்டரோகியாக இருந்தான். அவன் தாசி வீட்டுக்குப் போக வேண்டும் என்று சொன்னவுடன் அவனைக் கழுவி, கூடையில் வைத்து தலையில் தூக்கிச் சென்று தாசி வீட்டில் விட்டாள். இதைப் போல் தாசி வீட்டில் இருந்து மீண்டும் தன் கணவனை வீட்டிற்குத் தூக்கி வந்தாள். இதுதான் பெண்ணின் "கற்பு"க்கு ஆணாதிக்கம் கொடுத்த விளக்கம். பெண் இதைச் செய்ய மறுக்கும் போது "கற்பு" இழந்தவளாகக் கருதப்பட்டாள். "கற்பு" பற்றிய விளக்கங்கள் ஆணின் தேவையைப் பூர்த்தி செய்வதில் கோரப்பட்டது. இது மறுக்கப்படும் போது பெண்ணின் கற்புரிமையாகக் கற்பு இருக்கின்றது. அது இன்று குறிப்பாகப் பெண்ணின் உடல் சார்ந்ததாக மட்டும் எஞ்சிப் போயுள்ளது.

பெண் மீதான வன்முறையூடாக அல்லது ஏமாற்றிக் கைவிடப்படும் போதும் அல்லது இரண்டாவது உறவு கொள்ளும் போதும் "கற்பிழ"ந்தவளாக ஆணாதிக்கம் விளக்கம் கொடுக்கின்றது. "கற்பு" ஆண்களால் பெண்கள் மீது மட்டும் நிபந்தனையாக்கிய சமூக அமைப்பு, பொருளாதார அமைப்பால் ஒரு சமூக இயக்கமாக, கற்பை ஒரு பொருளாக மாற்றிய நிலையில் இது கற்பிதமல்ல. மாறாக இது ஒரு சமூகப் பொருளாதார அமைப்பால் இறுகக் கட்டப்பட்டுள்ளது. இந்தச் சமூகப் பொருளாதார அமைப்பு நிலப்பிரபுத்துவத்தின் வடிவமாக உள்ளது. இந்த நிலப்பிரபுத்துவம் பாட்டாளி வர்க்க ஆட்சியால் அல்லது ஏகாதிபத்திய உலகமயமாதல் மூலம் என இரண்டு சமூகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொருளாதார நிலைகளில் மட்டும் தகரும் போது “கற்பு” கோட்பாடும் தகர்ந்துபோகும். இதில் ஏகாதிபத்தியம் சார்ந்து கற்புரிமையை ஆணாதிக்கம் சார்ந்த ஆண் வேட்கையிலும், பாட்டாளிவர்க்கம் பெண் சார்ந்த ஆணாதிக்கக் “கற்பைப்” பெண்-ஆண் சார்ந்து கற்பிதமாக்கும்.

ஏகாதிபத்தியம் பெண்ணின் கற்புரிமையை ஒழிக்கும் போது பெண்ணை விபச்சாரத்தளத்துக்குள் விட்டுக் கற்பை ஒழிக்கின்றது. பாட்டாளி வர்க்கம் “கற்பை” ஒழிக்கும் போது பரஸ்பரம் சேர்ந்து வாழும் சுயேட்சையான சுயநிர்ணய எல்லைக்குள் ஒழிக்கின்றது. இது இரண்டுக்கிடையிலான அடிப்படை வேறுபாடு. ஏகாதிபத்தியம் கற்புரிமையை ஒழிக்கும் போது அனைத்துச் சமூகப் பொருளாதாரத் துறையிலும் மனிதனின் கற்புரிமைத் தனத்தை ஒழித்து தனது சூறையாடலுக்கு ஏற்ற விபச்சாரத் தனத்தை ஏற்படுத்துகின்றது. பாட்டாளிவர்க்கம் மனித வாழ்வின் அடிப்படையான மனிதப் பண்பாட்டை, ஆணாதிக்கக் “கற்பை” ஒழிப்பதன் ஊடாக மனிதனின் கற்புரிமையை, அதாவது தன்மானத்தைப் பாதுகாத்து நிலைநிறுத்துகின்றது.

எப்போதும் “கற்பு” மீதான போராட்டம் என்பது பெண்ணுக்குக் கற்பு உண்டு என்கின்ற ஆணாதிக்கம் மீது, “கற்பு”க்கு எதிரான போராட்டத்தைக் கோருவதும், கற்பு என்ற ஒன்று இல்லை என்பதை நிறுவுவதன் ஊடாக அமைய வேண்டும். இது பொதுவாகக் “கற்பு இழந்தவள்” என்ற பொருளின் ஊடாக வருவதால் “கற்பைக்” கற்பிதமாக்கச் சமூகத்தை மாற்றப் போராட வேண்டும். கற்பழிப்பு போன்ற குற்றத்தில் கற்புரிமை அழிப்புக்கு எதிரான எழுத்துக்களை, போராட்டங்களைக் கற்பழிப்பு (இங்கு கற்பிழந்தவளாகப் பொதுவில் கருதாமல் இந்த வன்முறைக்கு எதிரான, கற்பழிப்புக்கு எதிரான பெண்ணின் கற்புரிமையின் குரலாக உள்ளது) மீது எழுதியும், போராடியும் பெண்ணின் கற்புரிமை மீது கற்பிதமாக்க வேண்டும். இது மட்டுமே நடைமுறை சார்ந்த மக்கள் சார்ந்த ஒரே செயல்தள நடைமுறையாகும். இதை மறுத்து, சரிநிகரில் (தன்னார்வ நிதியில் வரும் பத்திரிக்கை அல்லவா?) தொடக்கிய இச்செயல், எதார்த்தத்தில் மக்களால் ஆணாதிக்கக் கண்ணோட்டத்தில் பொருளாக்கப்பட்டுள்ள, “கற்பு”க்கு எதிரான போராட்டத்தை மறுதலிக்கும் செயலாக இது மாறியுள்ளது.

“கற்பு”, “கற்பழிப்பு” போன்ற சொற்கள் ஆணாதிக்கப் பொருளாதாரக் கட்டமைப்பால் அதிகாரம் பெற்றுள்ளதால், அது மக்களுக்குள் உருவகம் சார்ந்து, பொருள் சார்ந்து போயுள்ளது. இதற்கு எதிரான போராட்டத்தை மறுதலித்து, சொற்களை மாற்றிய விளையாட்டுகள் அதற்கு எதிரான போராட்டத்தை மழுங்கடிக்கவே செய்கின்றது. முன்பு காந்தி தாழ்ந்த சாதிகளை **“அரிஜன்”** என அழைத்து சொற்களில் மறைத்தது போல், இன்று **“தலித்”** என்று சொற்களில் மறைத்தபடி சாதிகளின் ஒழிப்புக்குப் பதில் நீடிப்பைச் சொற்களுக்குள் எப்படி பாதுகாக்கின்றனர். அதேபோல்தான் “கற்பு”, “கற்பழிப்பு” போன்ற சொற்களுக்கும் நிகழ்கின்றது. அரிஜன் என்று காந்தி அழைத்த





போது எப்படி சமூகம் தன்னளவில் சோடை போனதோ, அதேதான் தலித் என்று சொன்னதின் பின்னும் நிகழ்கின்றது. இதில் தாழ்ந்த சாதிகள் அதன் அடையாளத்துடன் புதுப் பெயர் பெற்று விளங்கியதே எஞ்சியது.

இதே போன்று இந்தியா மற்றும் இலங்கையில் சேரி எல்லாவற்றையும் காலனியாக்கிப் புது வாசனை (சென்ட்) காட்டிய போதும், சேரி சேரியாகவே தொடர்கின்றது. காலனி அதே அர்த்தத்தைப் பெற்று புதிய சேரியானது. இதுபோல்தான் கற்பும் புதுவாசனை பெற்று, அதன் அர்த்தத்தில் மயக்கத்தை ஏற்படுத்தி, போராட்டத்தை மட்டுப்படுத்திச் சிதைக்கின்றது. இதை எல்லாம் எதிர்த்து நடைமுறையில் ஈடுபட, மாற்ற தயாரற்றவர்களின் வாயடிப்புதான் இந்த மொழியில் சொற்கள் மாற்றும் விளையாட்டுகள். மக்களுக்குள் இதன் அர்த்தங்கள் இச்சமூக அமைப்பின் அதே வழியில் தொடர்ந்து உயிர்வாழ்கின்றன. சொற்களின் அர்த்தங்கள் மாறுவது என்பது மாறுகின்ற பொருளாதார வடிவங்கள் மீதான போராட்டத்தால் மட்டுமே நிகழ்கின்றது.

ஒடுக்கும் வர்க்கத்தால் “கற்பிக்கப்பட்ட” கற்பனைப் புனைவுகள், ஒரு பொருளாதார அமைப்பால் உருவகம் பெற்று பாதுகாக்கப்படும் போது அதற்கு எதிரான போராட்டத்தால் மட்டுமே இல்லாது ஒழிக்கமுடியும். இவை அல்லாது சமூகத்தில் இருந்து அன்னியப்பட்ட, நடைமுறையில் செயல்பட தயாரற்றவர்கள், அதற்கு தெளிவான கோட்பாடு இன்றி **“நடுநிலை”**, **“கேள்வி”**, **“பரிசீலனை”** என்ற சொற்களின் பின் அரசியல் பேசுவோர், தம்மை எழுத்தாளராகக் காட்டிக் கொள்ள விரும்பும் புத்திஜீவிகளின் கோட்பாடுகள் ஒடுக்குபவன் சார்ந்து சொற்களை ஒளித்துக் காட்டுவதன் மூலம் பாதுகாக்கின்றனர்.

இது இன்று மட்டுமல்ல அன்றும் இருந்தன என்பதற்கு **மார்க்ஸ்சின் மூலதனம் பாகம் 1.2-இல், பக்கம்-722-இல், “தத்துவத்தின் வறுமை”** என்ற நூலில் எழுதியதைப் பாப்போம். “ஓர் உருவக வழக்குதான் அடித்தளம் என்றாகிறது. சமுதாயம் தன்னைப் பீடித்துள்ள கேடுகளை எல்லாம் ஒழித்துக் கட்ட விரும்புகிறதா? சரி, ஓசைக்கேடான சொற்களை எல்லாம் ஒழித்துக் கட்ட வேண்டியதுதான், மொழியை மாற்ற வேண்டியதுதான். சமுதாயம் இதற்காக வேண்டி அறிஞர் பேரவைக்கு விண்ணப்பம் செய்து அதன் அகராதிக்கு ஒரு புதிய பதிப்பை வெளியிடுமாறு கேட்டால் போதும்” என புரட்சியை மழுங்கடிக்க, பிரச்சினையைத் திசைதிருப்ப சொற்களை மாற்றி வித்தை காட்டிய அறிஞர்களுக்கு-புத்திஜீவிகளுக்கு அன்று மார்க்ஸ் பதிலளித்தது இன்றும் மாறாமல் அப்படியே பொருந்துகின்றது.

## “கற்பு” என்பதை நாம் எப்படி அணுகுகின்றோம்?

1. நிலப்பிரபுத்துவ மற்றும் மதவாதக் கோட்பாடுகளில் “கற்பு” பற்றிய அனைத்து ஒழுக்கங்களையும் எதிர்ப்பதிலும், அதைக் கண்டித்து போராடுவதிலும் பாட்டாளி வர்க்கம் தன்னை முன்நிறுத்துகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2. ஏகாதிபத்திய உலகமயமாதலின் வளர்ச்சியில் நிலப்பிரபுத்துவம் தகர்கின்ற போது கற்புரிமைக் கோட்பாடும் தகர்ந்து விபச்சாரமாக மாறுகின்றது.

பாட்டாளி வர்க்கம் பெண்ணின் நிலையை இவ்விரண்டிலும் இருந்து வேறுபடுத்துகின்றது. காட்டுமிராண்டித்தனமான ‘‘கற்பு’’ கோட்பாட்டு நடைமுறையை எதிர்த்தும், விபச்சார வாழ்முறையை எதிர்த்தும் என இரு தளத்தில் போராடுகின்றது. முதலாவது தளத்தில் நிலப்பிரபுத்துவக் கற்பை எதிர்த்து போராடும் போது பெண்ணின் சுயநிர்ணயத்தை முன்நிறுத்துகின்றது. ஒரு பெண் ஓர் ஆணுடன் சேர்ந்து வாழ்வது அல்லது பிரிந்து வாழ்வது அவளின் உரிமையாகக் கற்புரிமையை முன்வைக்கின்றது. இது சமுதாயத்தின் சுதந்திரத்தில் எல்லைப்படுத்துகின்றது. மறுதளத்தில் பெண் சமுதாயச் சுதந்திரத்துக்கு எதிரான தனிமனிதச் சுதந்திரத்தில் தனது தனித்துவத்தை விபச்சார நிலைக்கு நகர்த்தும், ஏகாதிபத்தியக் கற்புரிமை அழிப்பு கோட்பாட்டை எதிர்த்துப் பெண்ணின் தனித்துவத்தை, உரிமையைத் தற்காப்பாகக் கோருகின்றது.

பெண் மீதான ஆணாதிக்கச் சூறையாடலைத் தற்காப்பதிலும், பெண் ஆணாதிக்கத்துக்கு எதிராகத் தான் தெரிவு செய்த கற்புரிமையைப் பாதுகாக்க, (உதாரணமாக டிஸ்கோ பாலியல், ஒரே நேரத்தில் பலரைக் காதலித்து உறவு கொள்வது, திருமணத்துக்குள் இருந்தபடி வெளியில் பலருடன் உறவு கொள்வது, கணவன் மனைவியை மாற்றி உறவு கொள்வது, காதலைக் கைவிட்டு நுகர்வை அடிப்படையாகக் கொண்ட பல கணவன் உறவுகள்... போன்றன.) இந்த ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம் தலைமையில் முன்நிறுத்துகின்றது. பெண்ணுக்கு மட்டும் இருக்கின்ற ஒருதார மணத்தை மறுத்து, பெண் சுயமான வகையில் பிரிந்தும், சேர்ந்தும் வாழும் எல்லையால் பெண் தன்னைத் தற்காத்து கொள்ளும் கற்புரிமையைக் கோருவதாகும். மறுதளத்தில் பெண் மீதான ஆணாதிக்கக் கட்டுப்பாட்டுக் கற்பை எதிர்த்து (உதாரணமாக மறுமணம், குடும்பத்தில் இருந்து விலகி மீளத் திருமணம் செய்தல், காதலித்துத் தோல்வி பெறும் பட்சத்தில் மீளக் காதலித்தல், காதலில் ஏமாற்றப்படும் போது மீளவும் காதலித்து வாழும் உரிமை, பலாத்காரம் செய்யப்பட்ட நிலையில் சாதாரணமாக வாழும் உரிமை... போன்றவற்றில் காணப்படும் ஆணாதிக்க ஒருதார மணத்தில் உள்ள கற்புக் கோட்பாட்டை எதிர்த்து போராடுதல்.) பெண்ணின் சுயநிர்ணயத்தைக் கற்புரிமையில் முன்வைக்கின்றது. அதாவது தேசியத்தில் நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்தும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் சொந்தத் தேசியத்தைக் கோருவது போல், பாட்டாளி வர்க்கம் கற்புரிமை மீது தன்னை நிலை நிறுத்துகின்றது. இதை மறுக்கின்ற இரண்டையும் எதிர்த்து தன்னை அரசியல்மயமாக்கி ஆயுதபாணியாக்குகின்றது.





# 8. இலங்கைப் பெண்களின் துயரங்களும் - போராட்டங்களும்

கடந்த 30 வருடங்களாக இலங்கைப் பெண்களை உலுக்கிய உலுக்கு, இலங்கை வரலாற்றுக்குப் புதியதாகும். நிலைமைகள் திடீர்திடீரென அதிர்வலைகளை ஏற்படுத்தும் வண்ணம் மாறியது, மாறிய வண்ணம் இருக்கின்றது. இவை பல முரண்பட்ட வெவ்வேறு சூழ்நிலைகளில், வேறுபட்ட பிரதேசம் சார்ந்து தன்னை வெளிப்படுத்திய வண்ணம் இருக்கின்றது.

இந்த வகையில் பெண்களின் நிலைமையை ஆராய உலகளாவிய மாற்றங்கள் பற்றிய பார்வை மிக முக்கியமானதாகும். கி.பி.1970-களில் சர்வதேச ரீதியாக ஏகாதிபத்தியங்கள் தமது சுரண்டலைத் தீவிரப்படுத்த, அரைக்காலனிகளை நவகாலனியாக்கி நேரடிக் காலனியாக்கத்தை நடைமுறைப்படுத்தும் கட்டமைப்புகளைத் தீவிரமாக்கினர். இலங்கை இந்தக் கட்டத்தின் ஊடாகத் தன்னை மாற்றியமைப்பதுக்கு உள்ளூர் அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பு இசைவாக்கமடைந்தது. சில நாடுகளில் இடைக்கட்டமின்றி நகர்வதும் சாத்தியமாகக் கூடியதாக இருக்கின்றது. அதாவது காலனிகள் முன்பைவிட தெளிவாகப் பண்பு ரீதியாக, அரசியல் பொருளாதாரக் காரணங்களால் வேறுபட்டே இருக்கும் என்பதை உலகமயமாதல் தெளிவாக்குகின்றது.

நேரடியான ஆக்கிரமிப்பு என்பது விதிவிலக்கான ஒரு வடிவமாக ஏகாதிபத்திய முரண்பாட்டின் தீவிரத்தில் மட்டும் நிகழும் ஒரு வடிவமாகியுள்ளது. ஆனால் அதற்கு முன்பே நாடுகள் காலனிகளாக மாறிவிடுவது சாத்தியமானது என்றளவுக்கு, உள்ளூர் அமைப்பு வடிவமே நேரடியாக ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியாகி வருகின்றது. காலனியாக்கத்தைக் கட்டியாள்வது உள்நாட்டவனா? அல்லது வெளி நாட்டவனா? என்பதே வேறுபாடாகக் கொண்ட இந்தப் பண்பு மாற்றம், அடிப்படையில் வேறுபாடற்ற ஒரே ஏகாதிபத்தியத்துக்கு அல்லது தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனத்துக்கு ஒரே மாதிரி காலனியாக்கச் சேவையைச் செய்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இங்கு அன்னிய நாட்டவன் ஆக்கிரமித்து ஆள்வதை மட்டும் கொண்டு காலனியாக்கத்தை வரையறுப்பது தவறானதாகி விடுகின்றது. ஏனெனின் தேசங்கள் தமது சுயஅடையாளத்தைத் தமது பொருளாதார அமைப்பு சார்ந்து இழந்து விடுகின்றன. இவை அன்னிய ஏகாதிபத்தியம் அல்லது தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் பொருளாதார அமைப்பு சார்ந்து, தேசங்களின் சமூகப் பொருளாதார வடிவங்கள் சிதைக்கப்படுகின்றன. இந்தச் சிதைவில் மேலும் மேலும் பரந்த தளத்தில் முரண்பட்ட ஏகாதிபத்தியம் மற்றும் தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்களைச் சார்ந்து நிற்பதைக் கைவிட்டு, குறித்த அதீதச் சூறையாடலைச் சார்ந்து காலனியாக்கம் வேகம் பெறுகின்றது.

உலகப் பொருளாதார அமைப்பு உலகமயமாதலால், பொருளாதாரக் கட்டமைப்பு தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்களுக்கு இசைவான வகையில் திட்டமிடப்படுகின்றது. இது நேரடியாக ஏகாதிபத்தியத்தின் குறித்த நலனைப் பிரதிநிதித்துவம் செய்வதில்லை. மாறாகத் தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் ஊடாகவே ஏகாதிபத்திய நலனைப் பூர்த்தி செய்கின்றது. இது ஏகாதிபத்திய நலனை இரண்டாம் பட்சமாக்கித் தேசத்தின் நலனைத் தூக்கியெறிகின்றது. இதனால் நேரடியான காலனியாக்கத்தை நோக்கி வேக நடைபோடுகின்றது. அதாவது உலகப் பொருளாதாரம் விரல் விட்டு எண்ணக்கூடிய சில பன்னாட்டு நிறுவனங்களை மையமாக வைத்து நகர்வதால், ஏகாதிபத்திய முரண்பாடுகளைத் தாண்டி, சில பன்னாட்டு நிறுவனங்களின் தேவையுடன் உலகம் தன்னை உருட்டுகின்றது. தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்களுக்கும், ஏகாதிபத்தியத் தேசிய நலன்களுக்கும் இடையிலான முரண்பாடு, ஏகாதிபத்தியத் தேசிய நலனைச் சிதைக்கின்ற வழியில் காலனியாக்கம் உள்ளூராக வேகம் காண்கின்றது. முரண்பாடுகள் தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்களுக்குள் தீவிரம் காண்கின்றது. இது ஏகாதிபத்தியத்தின் நலன்களை ஏகாதிபத்திய எல்லை கடந்து தனதாக்குகின்றது.

கடந்து வந்த ஏகாதிபத்தியப் பொருளாதாரக் கட்டமைவால், தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாடு ஏகாதிபத்திய நாடுகளைப் பிரதிபலிக்கின்ற வரைதான், நேரடி ஆக்கிரமிப்பு இன்றி காலனியாக இருப்பதைத் தடுக்கின்றது. இந்த முரண்பாடு ஏகாதிபத்தியத் தேசத்தைக் கடந்து, தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்களிடையினதாக மாறிவிடும் போது, நாடுகளின் மொத்தப் பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்தும் போது, காலனியாக்கம் புதியவடிவில் உருவாகி விடுகின்றது. இந்த இரு போக்கில் எது முதன்மையான பாத்திரத்தை வகிக்கின்றதோ, அந்த வளர்ச்சி தான் காலனியா? அல்லது நவகாலனியா? அல்லது அரைக்காலனியா? என்பதை இன்று தீர்க்கமாகத் தீர்மானிக்கின்றது. ஏகாதிபத்திய முரண்பாடுகள் தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் சார்ந்து தீவிரமாக இருக்கின்ற போது, தேசங்களின் நலன்கள் ஊசலாடுவதும் ஏகாதிபத்திய முரண்பாட்டால் ஏற்படுகின்றது. இது நவகாலனித்துவ, அரைக்காலனித்துவ எல்லைக்குள் தேசிய





நலனைத் தக்கவைக்கின்றது. இதனால் இங்கு காலனியாக்கல் நேரடி ஆக்கிரமிப்பினூடாக வெளிப்படும். இது முந்திய காலனிய வகைக்கு ஒப்பானது.

பன்னாட்டுத் தேசம் கடந்த நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாடு மூலதனத்தின் குவிப்பால் சந்தையை முழுமையாக எல்லாத் துறையிலும் கைப்பற்ற மோதும் போது, தமக்குள் குடும்பமாகக் கூட்டுச் சேர்ந்து மற்றவற்றை விழுங்குகின்றன. அதே நேரம் தனக்குள்ளும் அவை ஆணாதிக்க வழியில் செரித்து விடுகின்றன. இது ஒற்றைத் தளத்தில் வளர்ச்சி பெறுகின்ற போது, அதை நோக்கி தேசங்கள் சிதைந்து கைக்கூலியமைப்பாக மாறுகின்ற போது, அந்நாடுகள் உள்ளூர் ஆட்சியாளர்களினால் ஆளப்படும் புதிய வகையான காலனியாக மாறிவிடுகின்றது.

உலகவங்கி முதல் உலகமயமாதல் அமைப்புகள் எல்லாம், ஏகாதிபத்தியத் தேசிய அமைப்பைத் தாண்டித் தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் நலனைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. இங்கு தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் ஏகாதிபத்தியத் தேசிய நலனைப் பிரதிபலிக்கும் எல்லையில் மட்டும் தான், உலகமயமாதல் அமைப்புகள் ஏகாதிபத்தியத் தேசிய நலனைப் பிரதிபலிக்கின்றன. இதைத் தாண்டி நிற்கும் போது உலகப் பொருளாதாரக் கட்டமைப்பை, தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் நலன்களின் அடிப்படையில் மாற்றியமைக்கப்படுகின்றன. எந்தளவுக்குச் சுய ஆற்றலை நாடுகள் இழக்கின்றதோ அந்தளவுக்கு, அவை காலனியாக்கத்தை, நாடுகளைக் கைப்பற்றாமலே உருவாக்கி வருகின்றன. இங்கு அரைக் காலனிய, நவகாலனியக் கட்டத்திய தேசிய நலன்கள் முற்றாகச் சிதைக்கப்பட்டு, காலனியப் பொருளாதார நலன்கள் சுரண்டும் வர்க்கத்துக்குச் சார்பாகத் தீவிரப்படுத்தப்படுகின்றன. இந்தக் காலனியாக்கத்தை அடையாளம் கண்டு கொள்ளாதவரை, போராட்டத்தில் சிதைவுகள் ஏற்பட்டு, பிற்போக்குத் தேசியங்கள் அடிப்படை மதவாதங்கள் புரட்சியின் அடிப்படையில் முதன்மை பெறுகின்றன.

இலங்கையில் பொருளாதார நெருக்கடிகளில் எழுந்த வர்க்கப் போராட்டத்தின் திசைவிலகல், பாரிய நெருக்கடிகளைத் தொடரலையாக மாற்றியுள்ளது. கி.பி.1960-களில் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட திரிபுவாதத்தை எதிர்த்து, இலங்கையில் திரிபுவாதக் கம்யூனிஸ்டு கட்சியில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து, புரட்சிகரமான போராட்டப் பாதை உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்து இறுகிய சாதியமைப்பைத் தகர்ப்பது முதல் மலையகத் தோட்டத் தொழிலாளரை அணிதிரட்டுவது வரை என போராட்டப்பாதை உருவாக்கப்பட்டது. இந்தப் போராட்டப்பாதை இலங்கைச் சமூகத்திலுள்ள பல்வேறு சமூக ஒடுக்குமுறையிலும் தனது தீர்க்கமான தலைமையைக் கட்சி நிறுவியது. இது இலக்கியம் முதல் சமூகத்தின் பல்வேறு துறைகளில் வீச்சாகத் தன்னை அடையாளம் காட்டியது.

எவ்வளவுக்கு அவை புரட்சிகரமாக இருந்த போதும், அரசியலை ஆணையில் வைத்து, பாட்டாளிவர்க்க ஆயுதம் ஏந்திய புரட்சிகரமான மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சர்வாதிகாரப் பாதையைக் கட்டியமைப்பதைத் தனது அரசியல் பணியாக்கத் தவறியது. அதாவது வீரம் செறிந்த பொருளாதாரப் போராட்டங்கள் அரசியல் புரட்சியாகி விடாது என்ற வரலாற்றுப் பாடத்தைக் கற்றுக் கொண்டு முன்னேற தவறியது. மிகவும் முன்னேறிய புரட்சிகரமான பல பகுதிப் போராட்டங்களை முன்னெடுத்த கட்சி, அதன் அரசியல் வழியை உறுதி செய்யும் தலைமையை நிறுவத் தவறியது.

இதன் விளைவாகக் குட்டிப் பூர்சுவா தீவிரவாதப் புரட்சிகர வீச்சு எழுந்தது. இந்தவகையில் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற நபர்கள் சேர்ந்து மக்கள் விடுதலை முன்னணி (J.V.P.) உருவானது. சண்முகதாசன் தலைமையில் இருந்து விலகிச் சென்ற பிரிவால் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, எதைக் கட்சி செய்யத் தவறியதோ, அதை முதன்மைப்படுத்தித் தனது பூர்சுவா அரசியல் மீது ஆயுதபாணியாக்கியது. இந்த அமைப்பு இந்திய விஸ்தரிப்பு வாதம் பற்றிய தனது நிலைப்பாட்டைத் தமிழ் என்ற மொழி எதிர்ப்பாக உள்ளடக்கி வெளிப்படுத்திய நிலையில், மெதுவாக இனவாத அடிப்படையை உள்ளடக்கி, சிங்கள இளைஞர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு உருவானது.

இந்த அமைப்பு கிராமப்புற விவசாய இளைஞர்களையும், மத்தியதர வர்க்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு வேகமாக, உடனடிப் புரட்சி பற்றிய கனவுகள் உடன் **சேகுவாராவின் திடீர்ப் புரட்சித் தத்துவத்துடன் தன்னை ஆயுதபாணியாக்கியது.** இந்த நிலையில் இலங்கையில் ஆட்சிக்கு வந்த திரிபுவாதக் கம்யூனிஸ்டு கட்சிகள் உள்ளடக்கிய கூட்டுஅரசு, சுயத் தேசியம் பற்றிய கொள்கைகளை அமுலுக்கு வெம்பிப் போன வழிகளில் கொண்டு வந்தது. சுரண்டும் வர்க்கங்களை ஒழிக்காமல், அவர்களின் தயவில் இருந்தபடி உருவாக்கப்பட்ட சில சுயப்பொருளாதாரத் திட்டங்கள், சில குட்டிப்பூர்சுவா மற்றும் நிலப்பிரபுத்துவப் பிரிவுகளின் நலனை மேம்படுத்திய அதே நேரம், அடிமட்ட மக்களின் வாழ்வைச் சிதைத்தது. அத்துடன் தரகு மற்றும் அன்னிய நிலப்பிரபுத்துவப் பிரிவுகளின் எதிர்ப்பையும் சந்தித்தது.

இலங்கையில் இடைநிலையில் இருந்த பிரிவுகளின் ஆதரவையும், பணப்பயிர் மற்றும் அடிப்படையான உணவு உற்பத்தியில் ஈடுபட்ட சில பிரிவுகளின் ஆதரவையும் பெற்ற அரசு, நாட்டில் உணவுத் தட்டுப்பாட்டையும், வறுமையையும் விதைத்தனர். இதனால் சில அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. சிங்களக் கிராமப்புற விவசாயிகளின் வறுமை அதிகரிக்க, யாழ்குடா நாடு மற்றும் வன்னி சார்ந்த பணப்பயிர் விவசாயம் புதிய பணக்காரர்களை உருவாக்கியது. அதாவது அடிமட்ட மக்களின் பொருளாதாரத்தைப் பட்டினியில் இட்டு, இடைமட்டச் சக்திகளில் சில பிரிவுகளின் நலன்கள் பூர்த்தி செய்யப்பட்டன. அடிமட்ட மக்களிடம் அதி உயர்விலைக்குப் பொருட்களின் இறக்குமதியற்ற தட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பொருட்களை விற்றதன் மூலம், இடைத்தட்டின் சிலபகுதிகள் தம்மைப் புதிய பணக்காரர்களாக உறுதி செய்தனர்.





இந்த வளர்ச்சியில் தான் அரசு பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தது. வறுமை மற்றும் பொருளாதார மந்தத்தினால் ஏற்பட்ட வேலையின்மை மக்கள் விடுதலை முன்னணி (J.V.P.) போன்ற குட்டிப் பூர்சுவா கட்சிகள் புரட்சியை நோக்கி கவரப்பண்ணியது. இதைத் தடுக்க, இளைஞர்களைத் திசை திருப்ப பல்கலைக்கழக அனுமதியில் இனவாத அடிப்படையைப் புகுத்தியது. அதே நேரம் மக்கள் விடுதலை முன்னணி (J.V.P.) சொந்தப் பூர்சுவாத்தனத்தில் தனிமைப்பட்டு வீரச் சாகசத்தில் ஈடுபட, அதை இலங்கை அரசு ஆயுத முனையில் அழித்தொழித்தது. அதில் 20,000 இளைஞர்கள் பலியிடப்பட்டனர். இதில் கணிசமானோர் பெண்கள் ஆவர். இலங்கையில் ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு, அவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தியது. இந்த அழித்தொழிப்பின் போது தமது பிள்ளைகளை இழந்தும், சிறைகளை நோக்கியும் சென்ற தாய்மையின் சிந்தனை, போராட்டம் பெண்களை வீட்டுக்கு வெளியில் கொண்டு வந்தது. அரசு சார்ந்த அதிகார வர்க்கத்தினை நேரடியாக முதன் முதலாகச் சந்தித்த பெண்கள், அதன் சுவடுகளில் இருந்து தம்மை விடுவித்துவிட முடியவில்லை. இதற்கு எதிரான தொடர் சூழ்நிலைமைகள் தொடர்ச்சியாக மாறிமாறி வந்த வண்ணம் நீடிக்கின்றது.

சிங்கள இளைஞர்களைத் திருப்தி செய்ய உருவாக்கப்பட்ட பல்கலைக் கழக இனவாத அனுமதி முறை, தமிழ் இளைஞர்களைப் புதிய போராட்டத்தில் இறக்கியது. நீண்ட காலமாகத் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இனவாதக் குடியேற்றங்கள் மீது எந்தவிதமான எதிர்ப்பையும் முன்னெடுக்காத பூர்சுவா பிரிவு, தனது நலன்கள் மீது பாதிப்பு ஏற்பட்ட போது அதன் வீச்சு பரந்த ஆதரவுத் தளத்தைக் கைப்பற்றியது. யாழ்குடா சார்ந்து எழுந்த இந்த எழுச்சியின் ஆதரவு, யாழ் மக்களின் கல்வி பற்றிய அரசு தொழில் சார்ந்த படித்த அதிகார வர்க்கப் பிரிவு கண்ணோட்டத்தில் இப்போராட்டம் வெளிப்பட்டது.

இந்த நிலையில் தான் இலங்கையின் மாறிவந்த நிலைகள் மீது கட்சி தனது கவனத்தைக் குவிக்கத் தவறியது. அதன் மீதான போராட்ட அரசியல் திசை வழியில் தலைமை தாங்கி முன்னெடுக்கத் தவறியது. இதனால் தமிழ் இனவாதமும் (இயக்கங்கள்), சிங்கள இனவாதமும் (மக்கள் விடுதலை முன்னணி (J.V.P.)) இலங்கையின் புரட்சிகரமான பாத்திரத்தைக் கைப்பற்றி, பூர்சுவா எல்லைக்குள் சீரழித்தது. இவை நீண்ட 30 வருடத்தில் பல மாற்றத்தை, அழிவுகளைச் சந்தித்த போதும், அவர்கள் தான் இலங்கையின் அரசுக்கு மாற்றான புரட்சிகர வேடத்தை வழங்குகின்றனர். இது இனவாத அரசு சார்ந்து இனவாத எல்லைக்குள் தன்னை நிலை நிறுத்தி நிற்கின்றது.

இந்தப் பூர்சுவா புரட்சி பற்றிய மாயையின் பின் எழுந்த மாயையுடன் கூடிய ஆயுதப் போராட்டம் என்றுமில்லாத வகையில் பெண்களைத் தனக்குள் உள்வாங்கியது. அதே நேரம் தேசம் தனது தேசியப் பொருளாதாரத்தை ஏகாதிபத்தியத்திடம் அடகு வைத்து, பெண்களை அதீதமான வகையில் சுரண்டுவதன் மூலம் உழைப்பை விபச்சாரமாக்கியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த நிலையில் அரசு சாராத 3,000 தன்னார்வ அமைப்புகள் இனம், மொழி, சாதி, யுத்த எல்லை கடந்து ஊடுருவியுள்ளது. ஒரு புறம் பூர்சுவா இயக்கச் சிதைவுகள், மறுபுறம் ஏகாதிபத்தியக் கைக்கூலி அரசு சாராத தன்னார்வ அமைப்புகள் இலங்கையின் மொத்தப் புரட்சிகரச் சூழ்நிலைமைகளையும் ஏகாதிபத்தியத்துக்கு இசைவாக்கி, தேசத்தின் தேசியத்தைச் சிதைத்து அழிக்கின்றனர். இந்த வகையில் தன்னார்வக் குழுக்கள், பெண்கள் அமைப்புகள் பலவற்றை உள்ளடக்கிப் பெண்ணியம் பேசத் தயங்கவில்லை. இதன் விளைவை ஆராய்வோம்.

கி.பி.1971-இல், மக்கள் விடுதலை முன்னணி (J.V.P.)யின் கிளர்ச்சிக்கு முன்பே அரசின் அழித்தொழிப்பு தொடங்கியதைத் தொடர்ந்து, 20,000 பேர் கொல்லப்பட்டனர். பல ஆயிரம் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். பல ஆயிரம் பெண்கள் தம் குழந்தைகளை, கணவனை இழந்து தவித்தனர். ஆனால் சமுதாய ரீதியாக இலங்கைச் சமூகம் எதையும் குறைந்த பட்சத் தீர்வைக் கூடப் பெறவில்லை. இந்தக் கிளர்ச்சியையொட்டி நடந்த கைதுகள், படுகொலைகளை ஒட்டி, சண்முகதாசன் தலைமையிலான கட்சி தடைசெய்யப்பட்டது. சிலர் கைது செய்யப்பட்டனர். இந்த அரசு பயங்கரவாதத்தைத் தொடர்ந்து கட்சி தனது கடந்த புரட்சிகரப் போராட்ட வரலாற்றைக் கைவிட்டுச் சிதையத் தொடங்கியது. இந்தச் சிதைவு சமுதாயத்தில் புதிதாக எழுந்து வந்த முரண்பாடுகளை இனம் கண்டு தலைமை தாங்க முடியாத சூழ்நிலையுடன் வேகம் கண்டது.

மக்கள் விடுதலை முன்னணி (J.V.P.) இயக்கமானது கைது மற்றும் சிறை வாழ்க்கையில் இருந்து மீண்டு, புதிதாகத் தன்னை மீளக் கட்டியமைத்தது. இம்முறை அதீதமான தீவிர இனவாதத்துடன், அதீதமான தனிநபர் பயங்கரவாதத்துடன் தன்னை மீள ஒழுங்கமைத்தது. அண்ணளவாகக் கி.பி.1971-இல், ஒரு கிளர்ச்சியைத் தொடர்ந்து 15 ஆண்டுகளில் பலமான ஓர் அமைப்பாகத் தன்னை ஒழுங்கமைத்தது. பல கிராமங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். தமிழ் ஈழப் பகுதியில் இனவாத அரசுக்கு எதிராகத் தீவிரம் பெற்றிருந்த யுத்தத்தை அரசு ஒடுக்க ஆயுதப் படைகளை வடக்கு மற்றும் கிழக்கில் குவித்திருந்த நிலைமையைத் தனக்குச் சாதகமாகக் கொண்டு, மக்கள் விடுதலை முன்னணி (J.V.P.) ஆயுதபாணியாவதில் முழுமூச்சாக இருந்தது. இந்த ஆயுதபாணி வடிவம் முன்பைவிட தனிநபர் தாக்குதலில் அதிக கவனம் செலுத்தியது. மக்களை அணிதிரட்டுவதைக் கைவிட்டுக் கொரில்லா தாக்குதலூடான தனிநபர் அழித்தொழிப்பு பாதையைத் தெளிவாக முன்வைத்து ஒரு பயங்கரமான நிலைமையை வடக்கு மற்றும் கிழக்கு அல்லாத இடங்களில் தோற்றுவித்தது.

இதைச் சாதகமாகக் கொண்டு அரசு பயங்கரவாதம் அதே பாணியிலான தனிநபர் அழித்தொழிப்பைக் கையாளத் தொடங்கியது. இந்தத் தனிநபர் அழித்தொழிப்பை யார் செய்கின்றனர்? என்பதை அடையாளம் காணமுடியாத





அராஜகவாத வன்முறையில் நாட்டை இட்டுச் சென்ற முழுப் பொறுப்பும் அரசியல் ரீதியாக மக்கள் விடுதலை முன்னணி (J.V.P.)யையே சாரும். மக்கள் விடுதலை முன்னணி (J.V.P.) தன்னுடன் முரண்பட்ட நபர்களைக் கூட படுகொலை மூலம் அழித்தொழித்தது. இவை எல்லாவற்றையும் அரசும் பயன்படுத்தி, தனது எதிரிகளைக் கொன்று ஒழித்தது. இந்த அழித்தொழிப்பு யுத்தம் இரண்டு ஆண்டுகளாகக் கி.பி.1988-1989-இக்கும் இடையில் தீவிரம் கண்டது. இதற்குச் சாதகமாக இந்தியப் படைகளின் வருகை சாத்தியமாகியது.

இந்தியப் படைகள் வடக்கு மற்றும் கிழக்கு யுத்தமுனையில் யுத்தத்தில் ஈடுபட, இலங்கைப் படை தென்பகுதியில் தனது அழித்தொழிப்பைத் தீவிரமாக்கியது. இந்த அழித்தொழிப்பில் சுமார் 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரையிலானோர் கொல்லப்பட்டனர். இதன் மூலம் மக்கள் விடுதலை முன்னணி (J.V.P.).யின் முக்கிய தலைவர்கள் முதல், பலர் கொல்லப்பட்டனர். இந்த யுத்தம் தென்பகுதி சமூகத்தில் பரந்த தளத்தில் பெண்கள் மீதான சுமையை அதிகரித்தது. இளம் தந்தையை இழந்த அனாதைகளின் சமூகப்பிரிவையும், கணவனை இழந்த விதவைகளின் சமூகப் பிரிவையும் தென்பகுதியில் தோற்றுவித்தது. இந்த யுத்தத்திலும் எண்ணிக்கையில் மதிப்பிட முடியாத பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். அதே நேரம் பலரைச் சிறையில் அடைத்ததன் மூலம் இன்னுமொரு பெண்கள் கூட்டம் சிறையை நோக்கிய வாழ்க்கைக்குள்ளாகியது.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் யுத்தம் ஆரம்பம் முதலே தனிநபர் அழித்தொழிப்பை ஆணையில் வைத்தது. பல்வேறு குழுக்கள் தமது பூர்சுவா கண்ணோட்டத்தில் வேகமான புரட்சி பற்றிய பிரமையுடன், தாக்குதலை அரசியலாக்கித் தம்மைக் கட்டமைத்தனர். கி.பி.1983-இல், இனக் கலவரத்தைத் தொடர்ந்து எழுந்த எழுச்சியை இந்தியரசின் ஆயுதப்பயிற்சியூடான விஸ்தரிப்புவாத அணுகுமுறை, இயங்கங்களைத் திடீர் வெம்பிய வீக்கத்துக்கு உள்ளாக்கியது. இந்த நிலையில் யாழ் போராட்டமாக, யாழ் தலைமையாக வளர்ச்சி பெற்ற போராட்டம், ஆயுதக் கவர்ச்சிவாத இராணுவ நடவடிக்கையூடான அழித்தொழிப்பில் நிலைநிறுத்தும் அரசியல் வடிவத்தில், அதிகாரத்தைப் பெறுவதற்கான ஆதரவுத் தளம் கட்டமைக்கப்பட்டிருந்தது. இந்தப் போராட்டம் பூர்சுவா வர்க்கத்தின் வெளிப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் சாதிக் கண்ணோட்டம் கொண்ட (இங்கு தீவிரமான போக்கு இருக்கவில்லை. மாறாகப் பொதுவான சாதி மேலாண்மையை அடிப்படையாகக் கொண்டு இது இருந்தது.) ஆணாதிக்க இயக்கமாக எழுச்சி பெற்றது. இந்தியாவின் ஒருதலைப்பட்சமான தனது ஆதரவு குழுவுக்கான ஆயுதப் பயிற்சியை எதிர்த்து, ஆயுதபாணியாவதை விடுதலைப்புலிகள் தனியாக அதே பாணியில் மேற்கொண்டனர்.

இதன் போது சில இயக்கங்கள் பெண்களை உள்வாங்கிய போதும் அங்கு பெண்களைச் சமுதாயத்தின் பொதுவான ஆணாதிக்க மேலாண்மையிலே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கையாண்டனர். இப்படி இயக்கத்தில் இணைந்த பெண்களை இயக்கத் தலைமை தனது பாலியல் தேவைக்குப் பயன்படுத்தியது முதல் இழிவாகப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்தே இருக்கின்றன. விடுதலைப்புலிகள் பெண்களை இயக்கத்தில் இணைப்பது போராட்டத்துக்குப் பாதகமானதாக இருக்குமென விளக்கம் கொடுத்தனர். பெண்கள் பாலியல் அடிப்படையில் போராட்டத்தைச் சிதைக்கும் கண்ணோட்டம் கொண்டவர்கள் என்ற அடிப்படையில் பெண்களை இயக்கத்தில் வைத்திருக்க முனையவில்லை. ஆதலால் வெளிவட்ட ஆதரவுத் தளத்தில் மட்டும் வைத்திருந்தனர். கி.பி.1985-களில் யாழ்ப் பல்கலைக்கழகத்திலும், மற்ற இடங்களிலும் வழக்கம் போல் தமிழ் மக்களின் பெயரில் வெளியிடப்பட்ட துண்டு பிரசுரம் ஒன்றில், பெண்கள் மீதான ஒழுக்கக் கோவை ஒன்றை எச்சரிக்கையின் அடிப்படையில் வெளியிடப்பட்டிருந்தது. அதில் வடமராச்சியில் பெண்கள் அணியும் நீண்ட பாவாடையை (புடவை) அனைத்துப் பெண்களும் அணியக் கோரியதுடன், பெண்கள் சைக்கிள் ஓட்டுவது தடை செய்யப்பட்டது. இவை ஆணாதிக்கப் பண்பாடு, கற்பு கோட்பாட்டைப் பாதுகாக்கும் அடிப்படையில் எச்சரித்து பல விசயத்தை உள்ளடக்கியிருந்தது. இதற்கு எதிராகப் பல எதிர்ப்புகள் எழுந்ததைத் தொடர்ந்து மௌனமாகிப் போனது.

இக்காலத்தில் பெண்கள் கூட்டம், கூட்டமாக நிர்வாணமாகப் புதைக்கப்பட்ட புதைக்குழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. யார் என அடையாளம் கண்டுபிடிக்கப்படாத இவர்கள் இயக்கத்தில் சேர்ந்த பெண்கள் அல்லது சிங்களப் பெண்களாக இருக்கும் வாய்ப்பைக் கொண்டிருந்தது. இவர்கள் பாலியல் ரீதியாக முன்கூட்டியே சிதைக்கப்பட்ட பின்பே புதைக்குழிக்கு அனுப்பப்பட்டதை, உடல்களின் நிலைமை உறுதி செய்தது. இதன் பின்னணியில் இயக்கங்கள் இருந்தது திட்டவட்டமாகத் தெரிந்ததே. அக்காலக்கட்டம் இயக்கங்களின் கட்டுப்பாட்டில் யாழ் குடாநாடு என்பது இருந்தது குறிப்பிடத்தக்கது. எந்தவிதமான மருத்துவப் பரிசோதனைக்கும் அந்த உடல்கள் உள்ளாக்கப்படாமலும், அடையாளம் காணப்படாமலும், மீளவும் இயக்கங்களால் அழிக்கப்பட்டன.

இயக்க மோதல்கள் அதிகாரத்தைக் கோரித் தீவிரமானதைத் தொடர்ந்து, இந்த உட்போராட்டத்தில் மற்ற இயக்கங்களை விடுதலைப்புலிகள் அழித்த போது, ஆட்சேர்ப்பில் புதிய நெருக்கடியை விடுதலைப்புலிகள் சந்திக்க வேண்டியிருந்தது. **அறிவியல் பூர்வமாகச் சமூகத்தைப் புரிந்து கொள்ளும் வயது வந்த இளைஞர்கள் முன்புபோல் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சுயமாக இணைவதைத் தவிர்த்தனர். இதனால் வயது குறைந்த இளைஞர்கள் இணையும் தன்மையால் விடுதலைப்புலிகளில் ஆட்பற்றாக்குறை ஏற்பட்டது. இந்த நிலையில் பெண்களை இணைத்துக் கொள்வது இலகுவான விசயமாக இருந்தது.** ஆணாதிக்கச் சமூகம் பெண்களுக்கு வழங்க மறுத்த புரிந்து கொள்ளும் அறிவியல் இன்மை மற்றும் ஆணாதிக்கக் குடும்பக் கட்டுப்பாட்டை மீறி வீட்டுக்கும், சமூகத்துக்கும் வெளியில்





வாழத் துடிக்கும் பெண்ணின் இயல்பான தன்மையைக் கொண்டு விடுதலைப்புலிகள் பெண்களை உள்வாங்குவது இலகுவான விசயமாகியது.

கி.பி.1986-1987-ஆம் ஆண்டுகளின் இயக்க அழிப்புகளும், அதன் பின்னால் இந்திய இராணுவத்தின் வருகையுடன் நிகழ்ந்த மாற்றங்களையும் தொடர்ந்தே, விடுதலைப்புலிகள் பெண்களை அதிகளவில் தம்முடன் இணைக்கத் தொடங்கினர். இவைபற்றி தனியாக இந்தப் பகுதியைத் தொடர்ந்து ஆராய்வோம். யுத்தத்தின் மிகப் பெரிய பங்களிப்பைப் பெண் விடுதலைப்புலிகள் வழங்கும் வகையில் பெண்களின் சக்தி பலமானதாக விடுதலைப்புலிகளுக்குள் மாறியது. தமிழ் மண்ணில் ஆயுதம் ஏந்திய பெண்கள் வேறு சில இயக்கத்தில் இருந்த போதும், விடுதலைப்புலிகளில் தான் ஒழுங்கமைந்த வகையில் தனியான தலைமையில் தனியான படைகளாக உருவாகினர். இந்த மாற்றம் யாழ் குடாநாட்டு ஆணாதிக்க மரபில் பாரிய ஒரு சிதைவைக் கொடுப்பதுக்குப் பதில், குறித்த பெண்களுக்குள் மட்டும் இந்தச் சிதைவை எல்லைப்படுத்தியே ஏற்படுத்தியது. போராட்டம் மக்களிடம் இருந்து அன்னியப்பட்ட இளைஞர்களிடம் இருப்பதால், மாற்றங்களில் இருந்து சமூகம் எட்டவே(தூரமாகப்) பழைய பாணியில் தன்னை ஒழுங்கமைத்தது. இயக்கங்களில் இருந்து விலகி சாதாரண வாழ்வை வாழ விரும்பும் பெண்ணை, சமூகம் மற்ற பெண்ணின் கற்பு பண்பாட்டில் இருந்து வேறுபடுத்தியே பார்த்தது. அதே நேரம் அப்பெண், எல்லா இயக்க ஆண்களும் இயக்கத்தை விட்டு விலகிய போது எது நடந்ததோ, அதே போன்று பெண்களும், ஆணுக்கு அடிமைப்பட்ட வாழ்க்கையை இயல்பாக ஏற்றுக் கொள்வதும் நிகழ்கின்றது.

இந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது இயக்க எல்லை கடந்து 20,000 பேருக்கும் மேற்பட்ட சொந்தப் போராளிகளை யுத்தத்திலும், உள்முரண்பாட்டிலும் (இயக்கங்களுக்கிடையிலும், இயக்கத்துக்குள்ளும்) கொல்லப்பட்டனர். இதில் கணிசமான பகுதியினர் பெண்கள் ஆவர். இந்த இழப்புக்குப் பின்னால் தாய்மை, பாரிய கண்ணீர் கொண்ட சோகம் ஒன்றையே வாழ்வாக்கியது. இங்கு கணிசமான பகுதி இயக்கங்களின் அழித்தொழிப்பிலும், இயக்கங்களின் கைதுகளையும் தொடர்ந்து சொந்தக் குழந்தையை மீட்க அலையும் நிகழ்வே வாழ்வாகியது. இந்த அழித்தொழிப்பு 10 முதல் 15 வருடங்கள் வரை கடந்தும் முடிவுக்கு வந்துவிடவில்லை. யாழ் பூர்சுவா கண்ணோட்டம் கொண்ட சுயநலம் பிடித்த சமுதாயத்தில், இயக்கத்தை நோக்கி செல்லும் குழந்தைகளை மீட்கும் வழியிலும், பெண்கள் தம்மைப் பரிதாபத்துக்குரிய ஜீவனாக்கி விடுகின்றனர்.

பொதுவாகச் சிங்கள இனவாத யுத்தம் இலங்கையில் 50,000-இத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களைப் பலியிட்டுள்ளது. இதனால் பெண்கள் தம் குழந்தைகளையும், கணவர்களையும் இழந்து நடுவீதிக்கு வந்துள்ளனர். விதவைகளின் எண்ணிக்கை சமூகமயமாகி வருகின்றது. உதாரணமாக **“மட்டக்களப்பு மாவட்டத்தில் 10,000 விதவைகள்”**[26] வாழ்வதாகச் சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆய்வுகள் நிறுவுகின்றன. இதில் பெரும்பகுதி 29 வயதுக்கு உட்பட்ட பெண்கள் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதைத் தாண்டி மேற்கு நோக்கி 5 இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் புலம் பெயர்ந்துள்ளனர். இதைவிட கொழும்பை நோக்கியும், இந்தியாவை நோக்கியும் நடந்த புலம் பெயர்வில் ஆண்கள் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படுகின்றது. இதனால் வடக்கு மற்றும் கிழக்கில் ஆண்கள்-பெண்கள் எண்ணிக்கையில் இயற்கை சமநிலை குலைந்து, பெண்கள் அதிகரித்து காணப்படுகின்றது. பொதுவாக யுத்தம் ஆண்களை அதிகமாகப் பலியிடுவதாலும், யுத்தத்தில் ஆண்கள் அதிகமாகப் பங்களிப்பதாலும், புலம்பெயர்வில் ஆண்கள் அதிகமாகப் புலம்பெயர்வதாலும் வடக்கு மற்றும் கிழக்கு நிலைமையைத் தலைகீழாக்கியுள்ளது.

பெண்களை அதிகமாகக் கொண்ட ஒரு சமூகமாகத் தமிழ் மக்கள் மாறியுள்ளனர். அத்துடன் யுத்தம் சார்ந்த வறுமை மேலும் சமூக அவலத்தைத் தீவிரமாக்கியுள்ளது. பெண்கள் வடக்கு மற்றும் கிழக்கில் தீர்மானகரமான சக்தியாக இன்று மாறியுள்ளனர். இது விடுதலைப்புலிகளின் போராட்டத்திலும் சரி, மக்கள் வாழ்விலும் சரி பொதுவான நிலைமையாகும். குடும்பத்தின் பொறுப்பை ஆண் துணையின்றி பெண்ணே பொறுப்பெடுப்பது தவிர்க்க முடியாத விளைவாகியது. இதனால் பெண்கள் வீட்டுக்கு வெளியில் வருவதை நிபந்தனையாக்கியது. புலம்பெயர்வில் கூட பொருளாதார ரீதியாகப் பலமான பிரிவு முதலில் வெளியேறுவதால், பொருளாதார ரீதியாகப் பலவீனமான பிரிவு வடக்கு மற்றும் கிழக்கில் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு நிலைமையில் பெண்கள் அதிகமான சமூக இயக்க நடவடிக்கையில் ஈடுபட்ட போதும், ஆணாதிக்க மரபை மாற்றிவிடவில்லை. விடுதலைப்புலிகளின் அரசியல் இதைச் செய்யும் வகையில் இல்லாததுதான் இதன் பிரதான அம்சமாகும். இதை விடுதலைப்புலிகளின் கட்டுரையில் ஆராய்வோம்.

பெண்கள் சமூகத்தின் பெரும் சக்தியாக மாறியதால் சில மரபான ஆணாதிக்கப் பண்பாடுகளைச் செயலிழக்க வைத்துள்ளது. ஆணின் பொருளாதாரப் பலம் சார்ந்து குடும்பம் என்ற கண்ணோட்டம் சிதைந்துள்ளது. பெண்ணே குடும்பத்தைப் பொருளாதார ரீதியில் பாதுகாக்க முடியும் என்ற அளவுக்கு நிலைமை மாறியுள்ளது. ஆண்கள் பாரம்பரியமாகச் செய்து வந்த பல விசயங்களைப் பெண்கள் செய்வது என்ற நிலைக்குப் பொதுப் புறநிலைமை மாற்றியுள்ளது. அதே நேரம் மேற்கு நோக்கி புலம் பெயர்ந்த யாழ் சார்ந்த கணிசமான மேட்டுக்குடிக் குடும்பங்கள், வெளிநாட்டுப் பணத்தில் ஆடம்பரமாக வாழ்தல் என்ற நிலையில் யாழ் பகுதியில் புதிய வடிவமும் வழக்கில் வந்துள்ளது.

மொத்தத்தில் பெண்கள், சமூகத்தின் பொருளாதார நெருக்கடி, ஆண் துணையற்ற ஆணாதிக்கச் சமூகத் தனிமை, யுத்த அவலங்கள் என்ற நீண்ட





துயரத்தில் சிக்கிவிடுகின்றனர். இதில் இருந்து மீண்டுவரும் பாதை எதையும் இந்தப் பெண்கள் கொண்டிருக்கவில்லை. இதற்குள் இயற்கையான பாலியல் தேவை மிகக் கடினமான ஆணாதிக்க ஒழுக்கக் கட்டமைப்புக்குள் நெருக்கடிகளைச் சந்திக்கின்றது. இளம் வயது விதவைக் கோலம், புலம் பெயர்ந்த கணவனைப் பிரிந்து வாழும் வாழ்க்கை, பிரதேசத்துக்கிடையிலான போக்குவரத்துத் தடை, திருமணம் செய்ய ஆண் இன்மை, வறுமை ஆகியவை பாலியல் நெருக்கடியை உச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இவை எந்தச் சமூக ஆய்வுக்கும் இதுவரை உட்படாத விடயமாகவே இன்னமும் உள்ளது. இதற்குத் தீர்வு அற்ற நிலைமை பொதுவாக இருக்கின்றது. இதில் இருந்து பாரம்பரியமான ஒருவனுக்கு ஒருத்தி மற்றும் கற்புக் கோட்பாட்டை மீறுவது நிகழ்கின்றது. இது கணிசமான பிரிவை இரகசியமான வகையில் பாலியலில் ஆணாதிக்கக் கற்புக் கோட்பாட்டை மீறுவது பொதுவான நிலைமையாக உள்ளது. இதற்கு எதிராகக் கடுமையான சமூகத் தண்டனைகளையும், இயக்கத் தண்டனைகளையும் நியாயப்படுத்தி பத்திரிக்கைகளில் சில செய்திகள் வெளிவந்த போதும், இது தீர்க்கப்பட முடியாத சமூகப் பிரச்சினையாகியுள்ளது.

உழைப்பதுக்கு உழைப்பு மறுக்கப்பட்டு, பசிக்கும்போது உணவைக் களவு எடுத்து உண்பதுக்குத் தண்டனை வழங்கின் எப்படி அநீதியாகுமோ, அப்படித்தான் இயற்கையான பாலியல் தேவையைப் பூர்த்தி செய்வதும் நிகழ்கின்றது. இதையொட்டி, விடுதலைப்புலிகளின் எதிர்ப்பாளர்கள் விடுதலைப்புலிகளை நேரடியாகக் குற்றம் சாட்டுவது தவறாகும். இரகசிய உறவுகள் ஆணாதிக்க மரபில் இருந்து வந்ததாகும். யுத்தத்தில் இது ஒரு பொதுவான பிரச்சினையாக முன்னிலைக்கு வந்துள்ளது அவ்வளவே. விடுதலைப்புலிகள் இதை ஒரு பிரச்சினையாகக் கருதாததும், இந்த நிலைமையைத் தீவிரமாக்க போராட்டம் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்காத காரணமே, புலிகளின் மீதான அடிப்படையான விமர்சனமாகின்றது. இங்கு மையமான பிரச்சினை ஆணாதிக்க அமைப்பு வடிவமே. இது காலாகாலமாக இருந்து வருகின்றது. இதுவே இரகசிய உறவுகளை உற்பத்தியாக்குகின்றது. இதை மாற்ற போராடாததுதான் விடுதலைப்புலிகள் மீதான விமர்சனமாகின்றது.

இது ஒருபுறம் நிகழ, மறுதளத்தில் மேற்கில் இருந்து வரும் பணம் சார்ந்த சமூகச் சீரழிவும் பாலியலில் நிகழ்கின்றது. பகட்டான வாழ்வு, அது சார்ந்த விபச்சார அத்துமீறல்கள் சமூகத்தைச் சீரழிக்கின்றன. கொழும்பு சார்ந்து புலம்பெயர்ந்த பெரும்பாலானோரும், இந்தியா சார்ந்து புலம்பெயர்ந்த கணிசமான பிரிவினரும் இந்தப் பகட்டு வாழ்வில் சமூகச் சீரழிவைப் பொதுத் தன்மையாக்குகின்றனர். கொழும்பைச் சுற்றிலும் நவீன விபச்சார விடுதிகள், மஜாஜ் மையங்கள் வெளிநாட்டுப் பணம் சார்ந்து, ஆயிரக்கணக்கான இளம் சிங்களப் பெண்களை வைத்து தமிழ் இளைஞர்களின் பாலியல் வக்கிரத்தைத் தீர்ப்பதில் மையமிட்டுள்ளது. **இன்று இலங்கையில் நாள் ஒன்றுக்கு "1000**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கரு அழிப்புகள்"(28.5.2000)**[27] சட்டப்பூர்வமாகவும், சட்டவிரோதமாகவும் நிகழ்கின்றது. இதில் திருமணம் செய்யாதவர்களின் கரு அழிப்பு 50 சதவீதமாகும். அந்தளவுக்குச் சமூகச் சீரழிவுகள் விரிவாகியுள்ளது.

கொழும்பில் புலம் பெயர்ந்த கணவனிடம் போய் சேரும் கனவுடன், பெண்கள் நீண்ட காலமாகத் தங்கி நிற்பதும், இங்கும் பாலியல் அத்து மீறல்கள் நடைபெறுவதும் காணப்படுகின்றது. இதில் இருந்தே புலம் பெயர்ந்த தமிழன் தான் திருமணம் செய்யும் பெண்ணைத் தன் சொந்தத் தாயுடன் விட்டு வந்ததைப் பெருமைப்பட பீற்றுகின்றான். சட்ட விரோதமாகப் புலம் பெயரும் கணிசமான பெண்கள் விரும்பியும், கட்டாயப்படுத்தியும்,பாலியல் ரீதியில் சிதைவதும் தொடர்ந்து நிகழ்கின்றது. இதனால் தான் புலம்பெயர்ந்த தமிழன் சட்ட விரோதமாகப் புலம்பெயர்ந்த பெண்ணைத் திருமணம் செய்ய மறுக்கின்றான். இதைச் சொல்லியே பெண் தேடுகின்றான். இங்கு பெண்களைப் பொதுமைப்படுத்தி இழிவாக்குவது புலம்பெயர்ந்த ஆணாதிக்கப் போக்காக மாறியுள்ளது.

இந்தியாவில் அரசின் அகதி முகாம் சார்ந்து பெண்கள் வறுமை காரணமாக, இந்திய அதிகார வர்க்கத்தாலும், நிலப்பிரபுத்துவ வர்க்கத்தாலும் பலாத்காரம் செய்யப்படுவது பொதுத் தன்மையாக உள்ளது. சிங்கள இனவெறி ஆணாதிக்க இராணுவக் கற்பழிப்புகள் ஒருபுறம் நிகழ, மறுதளத்தில் பெண்களின் சகலவிதமான கற்புரிமையையும் கொச்சைப்படுத்தி இரசிக்க முனைகின்றது. இந்திய இராணுவமும் இதைச் செய்ய பின்நின்றதில்லை. சில பகிரங்கமாக, பொதுவான அரசியல் போராட்டமாக மாறிய போதும், எண்ணிக்கைக்கு வராத பெண்கள் கற்பழிக்கப்பட்டு மௌனமாகியுள்ள அதே நேரம், கணிசமான பகுதியினர் உடல் ரீதியாகவே அழிக்கப்பட்டனர். போராட்டத்தையும் சொந்தச் சுயத்தையும் இழந்து இந்திய, இலங்கை அரசுகளின் கைக்கூலியான இயக்கங்கள் உதிரியாகவும், இயக்கமாகவும் பெண்களைக் கற்பழிப்பதும், உடலை அழிப்பதும் என பெண்களைத் தொடர் அச்சுறுத்தலில் வைத்துள்ளனர். விடுதலைப்புலிகளில் சேர்ந்த பெண்கள் காதல் செய்வது, திருமணம் செய்வது போன்றவற்றில் உள்ள கடினமான போக்கு பெண்களின் இயற்கையான உணர்வுகளைத் தகர்க்கின்றது.

தமிழ்ப் பெண்களின் நிலைமை எல்லையில்லாத துன்பத்தில் ஆழ்த்தி, அழுந்தி வாழ வைக்கின்றது. இந்த இடைவெளிகளில் **நிவாரணம் என்ற பெயரில் புகுந்து கொள்ளும் ஏகாதிபத்திய நிதி ஆதாரத்தில் இயங்கும் கைக்கூலி அமைப்புகளான தன்னார்வக் குழுக்கள் பெண்கள் மத்தியில் கடைவிரித்துள்ளது.** இவர்கள் பெண்களின் பிரச்சனைகளைத் திசை திருப்பி ஏகாதிபத்தியத் தேசியச் சிதைப்புக்கு வழிகாட்டுகின்றனர்.

தென்பகுதிகளில் வாழும் சிங்களப் பெண்கள் மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) அழித்தொழிப்பு ஊடாகச் சந்தித்த நெருக்கடிகளைத் தாண்டி,





சிங்கள இனவாத யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கி, பெண்கள் மனநோயாளிகளாக மாறுகின்றனர். **விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் 30 முதல் 50 ஆயிரம் சிங்கள இளைஞர்களைப் பலி கொடுத்த தாய்மைக்கு, எந்த இனவாதமும் பரிகாரம் வழங்கி விடவில்லை.** யுத்தமுனையில் சிக்கியுள்ள இரண்டு இலட்சம் இளைஞர்களின் தாய்மை மற்றும் மனைவியின் சோகம் எல்லையில்லாத மனித அவலத்தைச் சமூகமயமாக்கியுள்ளது. பாலியல் நெருக்கடி முதல் நாள்தோறும் வரும் யுத்தத் தோல்விகள், வெற்றிகள் ஆகியவை தாய்மையின் கண்ணீருக்கிடையிலான அவலத்தின் பிறப்பாகின்றது. இந்தப் புத்திரச் சோகத்தைச் சிங்களக் கூலிப்படை இனவாதம் தீர்த்து விடவில்லை. இதைவிட சிங்களப் பொதுமக்கள் மீதான எல்லைப்புற இயக்க அழித்தொழிப்புகள் ஈவிரக்கமற்ற மனிதப்பண்பாட்டைக் கொண்டவை. இது பெண்களைச் சமூக அகதியாககுகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து விடுதலைப்புலிகளால் கட்டாயப்படுத்திப் புலம்பெயர வைத்த முஸ்லிம் மக்களின் அவலம், பெண்களைச் சமூக வறுமைக்குள் தள்ளிச் சென்றுள்ளது. இது தமிழ், சிங்களப் புலம்பெயர்வுகளிலில் பொதுவாக இருந்த போதும், அவர்களைப் பாதுகாக்க பலமான அரசு வடிவமாக விடுதலைப்புலிகளும், இலங்கை அரசும் இருந்தளவுக்கு, முஸ்லிம் மக்களிடத்தில் அது இல்லை. பொதுவாகவே வேறுபட்ட தன்மையில் நடந்த புலம் பெயர்வுகள் பெண்களின் வறுமையைத் துல்லியமாகத் தீவிரப்படுத்தியதன் ஊடாக, பாலியல் ரீதியாக ஆண்களுக்கு இசைந்து அடிபணிந்து போகும் தன்மை அதிகரித்துள்ளது. யுத்தத்தில் ஈடுபடும் கூலிப்பட்டாளமான இனவாத இராணுவத்தின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்ய, எல்லைப்புறச் சிங்களப் பெண்களையும், இதற்காக அரசே உருவாக்கி விடும் பெண்களையும் தாண்டி, இராணுவத்தில் பெண்களையும் இணைத்து, பாலியல் விபச்சாரத்தை இராணுவம் சார்ந்து உருவாக்கிச் சமூகத் தன்மையாக்குகின்றனர்.

இன்று மொத்தத்தில் விபச்சாரம் பல்துறை சார்ந்து விரிவாகியுள்ளது. **நிலங்கா ஜயசூரியா** செய்த ஆய்வில், (இதற்காக அவர் மிரட்டப்படுகின்றார்.) "இலங்கையில் 10 இலட்சத்துக்கும் அதிகமான பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதை"(இலக்கம்-168)[11] உறுதி செய்துள்ளார். வெளிநாட்டில் கடின உழைப்பில் உருவாகிச் சொந்த நாட்டுக்குள் சொகுசாகச் செல்லும் பணம், உலகமயமாதலால் தீவிரமாகும் வறுமை, யுத்தச் சீரழிவுகள் விபச்சாரத்தைச் சமூகத்தன்மையாக்குகின்றது.

மறுதளத்தில் பெண்களின் சமூக வறுமையைப் பயன்படுத்தி உழைப்பை அற்பமாகச் சுரண்டுவதில் இலங்கை அரசு யுத்தத்தின் இனவாத முகமூடியின் பின்னால் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. ஏகாதிபத்தியப் பன்னாட்டு நிறுவனங்கள் எல்லையற்ற சுதந்திரமான, ஜனநாயகச் சுரண்டலை நடத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உருவாக்கப்பட்டவையே **சுதந்திர வர்த்தக வளையம்** ஆகும். கி.பி.1998-இல், கைத்தொழில் அமைச்சின்(அமைச்சகத்தின்) அறிக்கையின்படி, கி.பி.1997-ஆம் ஆண்டில்,890 தொழிற்சாலைகளில் 2,80,000 பேர்களைத் தொழிலாளிகளாகக் கொண்டு இயங்கியது, சுதந்திர வர்த்தக வளையம். அது இன்று கி.பி.1997-ஐப் போல் ஆறு மடங்காக (அண்ணளவாக 13 இலட்சம் தொழிலாளர்களாக)அதிகரித்துள்ளது. 80 சதவீதம் திருமணம் செய்யாத உடல் வலுவுள்ள இளைய தலைமுறையினரின் உழைப்பைச் சுரண்டி, இலங்கையின் ஆடையேற்றுமதியில் 52 சதவீதத்தை இவை ஈடுசெய்கின்றன. இன்று மொத்த ஏற்றுமதியின் அளவு 245 கோடி அமெரிக்க டொலராகும் (19.3.2000)[18] (அண்ணளவாக 17,150 கோடி இலங்கை ரூபாயாகும்). இப்பணம் தேசம் கடந்து பன்னாட்டு மூலதனத்தில் போய்ச் சேருகின்றது. இங்கு வேலை செய்யும் பெண்களைப் பொது விபச்சாரக் கண்ணோட்டத்தில் பார்க்கும் சமூகக் கண்ணோட்டத்துக்கு இட்டுச் சென்று, சுரண்டலை இலங்கைச் சமூகத் தளத்தில் இருந்து அன்னியமான வகையில் கோரமாக்கியுள்ளது.

இங்கு கிராமப்புற விவசாயச் சிங்களப் பெண்கள் தமது வாழ்வின் வறுமையைப் போக்க, அற்பக் கூலிக்கு மாரடிக்கக் கொண்டு வரப்பட்ட அவர்களை, மேற்கத்திய மிருகப் பண்ணைகள் போன்று வாழும் வாழ்க்கையில் சிக்க வைத்து பாலியல் ரீதியாகவும், உழைப்பு ரீதியாகவும் சுரண்டுவதை எந்த மனித உரிமையும் கண்டு கொள்ளவில்லை. இலங்கையின் சட்டத்துக்குப் புறம்பான ஒழுங்கில் இங்கு இலட்சக்கணக்கில் சுரண்டப்படும் பெண்கள், திருமணம் செய்ய முடியாத அவலத்தில் சிக்கிவிடுகின்றனர். திருமண விளம்பரமே, சுதந்திர வர்த்தக வளையத்தில் வேலை செய்யாத பெண்ணைக் கோரி விண்ணப்பிக்கும் அளவுக்கு, ஆணாதிக்கக் கற்புக் கோட்பாட்டில் அப்பெண்களின் கற்புரிமை பலாத்காரமான சுரண்டல் வழிகளில் சிதைக்கப்பட்டிருப்பதை நிர்வாணமாக்குகின்றது.

இந்தச் "சுதந்திர வர்த்தக வளையத்தில் தொழில் புரியும் பெண்களில் 92 சதவீதமானோர் சொந்த இடத்தை விட்டுப் புலம் பெயர்ந்து சிறைக் கொட்டகைகள் போல் இருக்கும் நெரிச்சல்களில் எந்தவிதமான அடிப்படை வசதிகளுமற்ற இழிந்து போன மக்களாக வாழ்கின்றனர். இங்கு தொழில் புரிவோரில் 52.7 சதவீதத்தினர் ஏதோ ஒரு விதத்தில் மனப்பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். (இலக்கம்-174)[11] உலகமயமாதலின் குறியீட்டுச் சின்னமாக, அழுகல் பிடித்த சீழ்களாக இந்தப் பிரதேசமே மாறிவிட்டது. மக்கள் மனநோயாளிகளாக, ஆணாதிக்க வக்கிரங்களைத் தேய்த்துக் கொள்ளவும், வக்கரித்து பார்க்கவும், இரசிக்கவும் ஏற்ற இடமாக, பண்பாட்டுக் கலாச்சார ரீதியாக இங்கு தொழில் புரியும் பெண்கள் இழிவுபடுத்தப்பட்டுவிட்டனர்.

மலையகப் பெண்களின் நிலைமையோ சகிக்கமுடியாத தொடர்ச்சியான வாழ்க்கை முறைக்குள் வாழ்கின்றனர். **மலையக மக்கள் சார்ந்து**





**ஆட்சியைப் பிடிக்கும் எச்சில் நக்கிகள்** அந்த மக்களின் போர்க் குணமிக்க போராட்டத்தை அன்னிய ஏகாதிபத்தியத்துக்கும், இனவாத அரசுக்கும் காட்டிக் கொடுத்து நக்கிப் பிழைக்கின்றனர். இதனால் எந்தவிதமான மாற்றத்தையும் சொந்தக் குடியிருப்பு வசதியில் இருந்து, தமது அன்றாட வாழ்வின் சிறிய முன்னேற்றத்தைக் கூடப் பெற்றுவிடவில்லை. கூலிப் பெண்களை வேலை வாங்கும் அதிகாரிகளின் பாலியல் தேவைக்குக் கட்டாயப்படுத்துவதும், வேலை செய்யும் இடத்தில் குழந்தைக்கு நிம்மதியாகப் பால் கூட கொடுக்க முடியாத ஆணாதிக்க வக்கிரத்தை எதிர் கொண்டும் வாழும் பெண்கள், குடும்பத்தின் வறுமையுடன் கூடிய கடின உழைப்பின் மீதான சுமை காரணமாக, ஆண்களின் போதைக்குள் நெரிந்து அடிவாங்கி வாழ்கின்றனர். ஆனால் இனவாதக் கண்ணோட்டத்தில் நடத்தப்படும் கீழ்த்தரமான நிரந்தரமான கருத்தடை அறுவைச் சிகிச்சை என்றுமில்லாத வேகத்தில் அவர்களை வந்தடைகின்றது.

கி.பி.1998-இல், 4,880 பேர் வாழ்ந்த ஒரு தோட்டத்தில் செய்யப்பட்ட ஆய்வை அட்டவணை-5-இல், பார்ப்போம். (7.5.2000)[27]

அட்டவணை - 5

| | தோட்டத்தில் மொத்தக் குடும்பம் | 15-49 வயது குடும்பம் | பெண்சத்திரச்(கருத்தடை) சிகிச்சை | ஆண்சத்திரச்(கருத்தடை) சிகிச்சை | தற்காலிகக் குடும்பத் திட்டம் |
|---|---|---|---|---|---|
| பிள்ளைகள் இல்லாதோர் | 124 | 99 | - | - | - |
| 01 பிள்ளை உடையோர் | 208 | 190 | - | - | 16 |
| 02 பிள்ளை உடையோர் | 350 | 282 | 149 | 3 | 9 |
| 03 பிள்ளை உடையோர் | 319 | 233 | 191 | 8 | 4 |
| 04 பிள்ளை உடையோர் | 140 | 89 | 58 | 2 | - |
| 05 பிள்ளை உடையோர் | 94 | 23 | 19 | - | - |
| மொத்தம் | 1,235 | 916 | 424 | 13 | 29 |

ஒரு குழந்தையுடனேயே சத்திரச்(கருத்தடை) சிகிச்சை செய்யும் அளவுக்கு நிலைமை மோசமாகக் காணப்படுகின்றது. இலங்கையில் மிகமோசமான வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட ஒரு மக்கள் கூட்டத்தில் இவை தீவிரமாகக் கையாளப்படுகின்றது. இனவாதத்துடன் கூடிய ஏகாதிபத்தியக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்ணோட்டத்தில் நடத்தப்படும் குடும்பக் கட்டுப்பாட்டு என்ற பண்பாடு அவர்களிடையே நாகரிகப் பண்பாட்டு வழியில் குழந்தை சார்ந்து திணிக்கப்படுகின்றது. வறுமைக்கும், இயற்கைக்கும் உள்ள நேர்விகிதப் பிறப்புவிதி மறுக்கப்பட்டுள்ளது. இங்கு இயற்கையின் கருவளம் அழிக்கப்படுகின்றது.

ஏகாதிபத்தியம் உலகளவில் சொந்த நாட்டில் குழந்தை பிறப்பை ஊக்குவித்து பண உதவிகளை விரிவாக்கிய படி, மற்ற நாடுகளில் குறிப்பாக ஏழைகள் இடையே அறிவியலுக்குப் புறம்பாக நிரந்தரமாகக் கருத்தடை செய்கின்றனர். இதற்கு ஏகாதிபத்தியக் கைக்கூலி அமைப்புகளான தன்னார்வக் குழுக்கள் தீவிரமாக இயங்குகின்றன. அதைவிட அரசு இதைத் திட்டமிட்டு அமுல் செய்கின்றது. உலகமயமாதலின் உலக வங்கி சிறப்பு நிதி ஆதாரங்களை உருவாக்கி, கைக்கூலி தேசிய அரசுகளைக் கட்டளையிட்டு அமுல்படுத்துகின்றது.நாட்டில் தற்போது இருக்கும் கைக்கூலி அரசுகள் மதம், இனம், வர்க்கம் சார்ந்து இதைத் தீவிரமாக்கி அமுல் செய்கின்றன. அதேநேரம் உலகமயமாதல் பண்பாட்டில் குழந்தை பெறுவது அநாகரிகமானது என்ற பொதுக் கண்ணோட்டம் பண்பாட்டு ரீதியாகப் புகுந்து விடுகின்றது. ஒரு குழந்தை அல்லது இரண்டை மீறி குழந்தையைப் பெற்றெடுக்கும் பெண் கேவலமாகப் பார்க்கப்படுகின்றாள். இது காட்டுமிராண்டித்தனமான நடத்தையாக நோக்கப்படுகின்றது.

அதாவது ஒட்டுமொத்தத்தில் குழந்தை என்பது தனிப்பட்ட நபர்களின், ஆடம்பரப் பொழுதுபோக்கு வாழ்க்கையை ஒட்டிய நாகரிகத்தின் எல்லைக்குட்பட்ட விடயமாக மாறிவிடுகின்றது. இந்த உலகமயமாதல் பண்பாடு இலங்கையில் ஊடுருவி, சமுதாயத்தைப் பண்பாட்டு வழியில் சிதைக்கின்றது. மறுதளத்தில் பலாத்காரம், ஆசை காட்டுதல், ஏமாற்றுதல், மோசடி, பணத்தைக் கொடுத்தல் போன்ற பல வழிகளில், மறைமுகமான கட்டாயப்படுத்தல் ஊடான வன்முறையின் ஊடாகக் கருவளம் சிதைக்கப்படுகின்றது.

ஏகாதிபத்தியத்துக்குத் தேசிய (இலங்கை) வளத்தைத் தாரை வார்த்து கொடுப்பதால் சொந்த நாட்டில் ஏற்படும் வறுமையால் பிழைக்க வழியற்ற மக்கள் கூட்டம் தொழில் தேடி மத்தியக் கிழக்கை நோக்கி ஓடுகின்றனர். மிக கடினமான உழைப்புக்கும், சர்வதேச உழைப்புக்கும் எந்தவிதமான சட்டப் பாதுகாப்பையும் பெற முடியாத கொத்தடிமைகளாக நாட்டைவிட்டு, மேற்கைத் தவிர்ந்த நாடுகளுக்குச் செல்லுகின்றனர். இந்த வகையில் புலம்பெயர்ந்து தொழில் புரிவோர் எண்ணிக்கை “10 இலட்சமாக” (இலக்கம்-177)[11] இன்று உள்ளது. இதில் பெரும்பகுதி பெண்களாக இருக்கின்றனர். இவர்கள் மத்திய கிழக்கிலும், சிங்கப்பூரிலும் தொழில் செய்கின்றனர். கி.பி.1997-1998-இல், “3 இலட்சத்துக்கும் அதிகமானோர்”[11] தொழிலுக்காகப் புலம் பெயர்ந்துள்ளனர்.





இந்தப் புலம்பெயர்வுகள் பாரம்பரியமான குடும்ப அமைப்புகளைச் சின்னாபின்னமாக்குகின்றன. ஒரு பெற்றோர் புலம் பெயர்வதன் மூலம், புலம்பெயர் நாட்டுக்குப் பெண்கள் போகும்போது பாலியல் ரீதியாக அதிகமான அச்சுறுத்தலுக்கும், வன்முறைக்கும் உள்ளாகின்றனர். பெண்கள் புலம் பெயரும் போது குடும்பச் சிறுமிகள் பாலியல் ரீதியாகச் சொந்தக் குடும்பத்தின் கணிசமான அங்கத்தவராலேயே சிதைக்கப்படுவதும், சிறுவர்கள் ஓரினச் சேர்க்கைக்குள் அழிக்கப்படுவதும் நிகழ்கின்றது. அத்துடன் கணிசமான ஆண்கள் அன்னியப் பெண்களை நாடிச் செல்வதும் அல்லது கற்பழிப்பதும் அதிகரிக்க, விபச்சாரம் ஒரு தொழிலாக மாறிவிடுகின்றது.

ஆண்கள் புலம் பெயர்கின்ற போது கணிசமான பெண்கள், வேறு ஆண்களுடன் தொடர்பு கொள்வதென பல தளத்தில் சமூகம் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. பெண்ணின் ஒழுக்கம் இங்கு அடிப்படையான கேள்வியாக மாறிவிடுகின்றது. பெண்கள் மீதான கற்பு பற்றிய ஆணாதிக்கக் கண்காணிப்பு சந்தேகத்தைச் சமூகத் தன்மையாக்கி, பெண்களுக்கு விபச்சாரப் பட்டம் கட்டுகின்றது. அதாவது சமூகத்தின் பல்வேறு கூறுகளில் காணப்படும் நெருக்கடிகளில் நடக்கும் சம்பவங்கள், பொதுவான சமூகப் பார்வையாகி விடுகின்றது.

புலம் பெயர்ந்த சமூகத்தின் புதிய தலைமுறை இரண்டு முக்கியமான விடயத்தைக் கைவிட்டுள்ளது. பாரம்பரியமாகச் சாதியை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்ட திருமணத்தையும், ஆணாதிக்கக் கற்புக் கண்ணோட்டத்தையும் அலட்சியப்படுத்துகின்றது. இது பாரிய முரண்பாட்டை ஆணாதிக்கத் திருமண முறையில் ஏற்படுத்தியுள்ளது. இந்த முரண்பாடு பெற்றோருக்கும், பிள்ளைக்குள்ளும் தீவிரமாகிப் போவதால் குழந்தைகள் வேகமாகச் சுய முடிவை எடுக்கின்றனர். இது அறிவியல் பூர்வமாகவும், சீரழிவு ரீதியாகவும் என இரண்டு நேர் எதிரான பண்பாட்டுக் கண்ணோட்டத்தை உருவாக்குகின்றது. ஆணாதிக்கக் கற்பு என்பது நொறுங்கிப் போகின்றது. முரண்பாட்டின் தீவிரம் பெண்களை வீட்டை விட்டே ஓட வைக்கின்றது. அநேகமாக நடைபெறும் இது போன்ற சம்பவங்கள் சீரழிவு வாழ்க்கைக்குள் பெண்களைத் தள்ளிவிடுகின்றது.

போராட்டத்தில் பங்கு பெற்றாது ஒதுங்கி, பின் கொழும்பு போன்ற பிரதேசத்தில் சுயமாக வெளிநாட்டுப் பணத்தில் ஆடம்பரமாக வாழ்ந்த பெண்கள் இங்கு திருமணம் முடித்து வருகின்ற போது, இங்கு உள்ள வாழ்க்கையைச் சகித்துக் கொள்வது மிக கடினமாக மாறிவிடுகின்றது. அங்கிருந்த சொகுசு ஆடம்பரத்துடன் கூடிய சுகபோக வாழ்க்கை, இங்கு மிக இறுக்கமான, கடின உழைப்புடன் கூடிய நீண்ட நேர வேலைகள் காரணமாகவும், மரபாக வாழும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆணாதிக்கக் கண்ணோட்டம் கொண்ட இறுக்கமான ஆணின் பார்வைக்கிடையிலும் ஏற்படும் முரண்பாடு, குடும்பத்தை விட்டே பெண்கள் ஓடுவது சர்வசாதாரண சம்பவமாகின்றன. இலங்கையில் யுத்தப் பிரதேசத்திலும், யுத்தமற்ற பிரதேசத்திலும் ஏற்பட்ட வெவ்வேறு விதமான பெண்களின் சுயேட்சைத் தன்மை, புலம்பெயர் ஆண் சமூகத்துக்கு எட்டாத, புரியாத விடயமாகின்ற போது, அங்கு இருந்து வரும் பெண்ணின் நடவடிக்கைகள் ஆணின் பார்வையில் அத்துமீறலாகின்றது. இதனால் குடும்பங்கள் இறுக்கமான தீவிரமான முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்றது. ஆணின் பார்வையில் வளர்ச்சி ஏற்படாத அதே நேரம், பெண்ணின் சீரழிவு என்ற இரு நேர் எதிரான தன்மை எதிரும் புதிருமான நெருக்கடியைத் தோற்றுவிக்கின்றது.

இலங்கையில் பெண்கள் சந்திக்கும் நெருக்கடி பல தளங்களில் சமூகச் சீரழிவுகளைக் கொண்டு வருகின்றது. பாலியல் பற்றி வீங்கி வெம்பிய கண்ணோட்டம், சமூகத்தின் இயற்கையான உணர்வுகளின் பாதிப்புகள், தவிர்க்க முடியாமல் கருஅழிப்பைச் சமூகமயமாக்குகின்றது. சமூகச் சிதைவால் கொழும்பை அண்டிய ஓரிரு பகுதியில் மட்டும் “சட்டவிரோதமாக நாள் ஒன்றுக்கு 500 முதல் 700 கருஅழிப்பு”(இலக்கம்-145)[11] நடைபெறுகின்றது. இது ஒட்டுமொத்த இலங்கையில் பார்ப்பின் இதன் தாற்பரியம் மிகப்பெரியது. ஒட்டுமொத்தச் சமூகச் சிதைவு மீளமுடியாத நாட்டின் அவலமாகின்றது.

பிரிட்டீஸ் வாராந்தர மருத்துவ அறிக்கை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு, 10.6.2000 தி இலன்செட் (THE LANCET) பத்திரிக்கை தகவல் ஒன்றின் படி, சிங்கள இனவாதச் சிறையில் அடைக்கப்பட்ட தமிழ் இனக் கைதிகளில், ஆண்-பெண் வேறுபாடின்றி 20 சதவீதம் பேர் பாலியல் ரீதியாக (கற்பழிப்பு உட்பட) வன்முறைக்கு உள்ளாகியுள்ளதாக 17 பேர் கொண்ட மருத்துவர் குழு நேரடியாகச் செய்த ஆய்வு ஒன்றின் மூலம் அம்பலப்படுத்தியுள்ளது. ஏகாதிபத்தியக் கொள்கைக்காக இனவாதத்தைச் சமூக மயமாக்குகின்றனர். இந்த யுத்தத்தின் திரைக்குப் பின்னால், மக்கள் பண்பாட்டுக் கலாச்சார ரீதியாகச் சிதைக்கப்படுகின்றனர்.

இந்த இனவாத யுத்த முகமூடியின் பினனால் இலங்கை அரசு உலக வங்கியின் உத்தரவுப்படி, தொழிலாளர் வர்க்கத்தின் வேலை நாட்கள் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. தமிழ்-சிங்கள இன முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, மதவாத அடிப்படையில், அவரவர் மத, இனக் கொண்டாட்டத்தை, இனம், மதம் சார்ந்து மட்டும் வேலையற்றதாக மாற்றியதை, எந்தவகையான எதிர்ப்புமின்றி அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது. இந்த உதாரணம் போன்று கல்வியில் மாணவர்களுக்கான ஆசிரியர்களின் எண்ணிக்கையை உலக வங்கி குறைக்க கோரிய போது, இன ரீதியாக





இரண்டு மடங்கு இடைவெளியில், தமிழ் ஆசிரியர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. இப்படி பல செயல்களை உலக வங்கி உத்தரவுக்கேற்ப இலங்கை இனவாத அரசு இனவாத யுத்த முகமூடியின் பின்னால் செய்து வருகின்றது.

இலங்கையில் உலகமயமாதலைத் தீவிரப்படுத்த இனவாத யுத்தம் அடிப்படையான உள்ளடக்கமாகின்றது. இது சிங்களத் தேசியத்தையும், தமிழ்த் தேசியத்தையும் இனவாத எல்லைக்குள் முடக்கிவிடுவதன் மூலம், சொந்தத் தேசியம் ஏகாதிபத்தியத்துக்கு இனம் கடந்து தாரை வார்க்கப்படுகின்றது. இதை எந்த வெட்கமும், மானமும் இன்றி விடுதலைப்புலிகளும், மக்கள் விடுதலை முன்னணி(J.V.P.)யும் நடைமுறைப்படுத்துவதில் முரண்பாடு கொள்ளவில்லை. ஆள்பவன் யார் என்பதைத் தாண்டி, தேசத்தின் தேசியப் பொருளாதாரம் ஏகாதிபத்தியத் தேசம் கடந்த பன்னாட்டுச் சூறையாடலுக்கு எதிரானதாக இல்லாத வகையில், தேசியப் பொருளாதாரம் அழிக்கத் துணைபோகின்றனர்.

பெண்கள், தேசியச் சிதைவில் தமது கற்புரிமையை விபச்சாரத் தளத்தில் சிதைக்க ஆணாதிக்கச் சுரண்டல் அமைப்பால் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். எல்லையில்லாத வகையில் பெண்களின் அவலம் சமூக அவலமாகியுள்ளது. எங்கும் பெண்கள் பண்பாடு மற்றும் கலாச்சார ரீதியாகச் சுயத்தை இழந்து அன்னியப்படுகின்றனர். மற்றவரின் தயவு, அண்டி வாழும் வாழ்க்கை என பெண்கள் இழிநிலைக்கு மேலும் மேலும் தாழ்ந்துள்ளனர், தாழ்ந்து செல்லுகின்றனர். இலங்கையில் பெண்கள் மூச்சுவிட முடியாத சுமையில் சிக்க, அதை ஏகாதிபத்தியத் தன்னார்வக் குழுக்கள், ஏகாதிபத்தியம் கழிக்கும் மலத்தைக் கொண்டு, அதை மூலதனமாக்கி அதற்குச் சேவை செய்ய, பெண்களை அடுத்த கட்டத்துக்குச் சிதைத்துச் செல்லுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 9. விடுதலைப்புலிகளில் ஆயுதம் ஏந்திய பெண்கள்- பெண் விடுதலையைச் சாதிப்பார்களா?

**ஆ**சியா கண்டத்தில் நடந்த பல்வேறு வர்க்கப் போராட்டங்களில் பெண்களின் பங்களிப்பு பல வீரம் செறிந்த வரலாறுகள் பலவற்றை எமக்கு விட்டுச் சென்றுள்ளது. ஆனால் பலர் விடுதலைப்புலிகளில் உள்ள பெண்களின் பங்களிப்பே ஆசியாவிலேயே முதல் ஆயுதப் போராட்டம் என்று காட்டுவதும், இதை இதன் அடிப்படையில் இருந்து விமர்சிப்பதும் என அண்மைக் காலத்தில் பலர் குறிப்பாகப் பெண்ணியல்வாதிகள் களம் இறங்கியுள்ளனர்.

பெண்கள் ஆயுதம் ஏந்திய வரலாறு இலக்கியத்திலேயே கிடையாது என்றும், பெண்கள் ஆயுதம் ஏந்துவது பெண்ணின் இயல்புகளைச் சிதைப்பவை என்றும் பல்வேறு கருத்துகளைப் பெண்ணியல்வாதிகள் முன்வைத்து வருகின்றனர்.

தனிச்சொத்துரிமை அமைப்பில் உருவான சொத்துரிமையைக் கையாள்வதில் உருவாகும் வர்க்க யுத்தங்கள் ஆணாதிக்கத் தன்மை கொண்டவை என்பதும், அதன் அனைத்து உள்ளடக்கத்தையும் தனக்குள் ஆழமாகக் கையாள்பவை என்பதும் அடிப்படையான யுத்த உள்ளடக்கமாகும். ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை நீடிக்கும் வரை யுத்தங்கள் அதன் உள்ளடக்கமாக இருப்பது மனித வரலாற்றின் பொதுவிதியாகும். **இந்த யுத்தத்தையும், ஆணாதிக்கத்தையும், தனிச் சொத்துரிமையையும் மனித வரலாற்றில் இருந்து அகற்ற முடியாதா? மனித வரலாற்றில் இது என்றுமே இருந்தது கிடையாதா?**

கடந்த மூவாயிரம் வருடத்துக்கு முந்திய வரலாற்றில் இவை வெறும் கற்பிதங்கள் தான். மிருகத்துடன் உயிர் வாழும் போராட்டம் இருந்த போதும் சரி, மனிதனுக்கு இடையில் ஏற்பட்ட போதும் சரி-போராட்டத்தில் மனிதனை மற்றொரு குழு மிருகமாகவே அடையாளம் கண்டு போராடினர். ஆனால் மனிதனை மனிதன் அடையாளம் கண்டு அவனை அடக்கி, அவன் உழைப்பைச்





சுரண்ட அடிமைப்படுத்த தொடங்கிய போதுதான் யுத்தம் அதற்கிடையிலான வர்க்க யுத்தங்களாக மாறின. அதாவது மனிதனுக்கிடையிலான ஏற்றத்தாழ்வை ஏற்படுத்திய சுரண்டல், தவிர்க்க முடியாமல் வர்க்க யுத்தத்துக்கு வித்திட்டது. இந்த யுத்தங்கள் உலகம் தழுவிய விரிந்த தளத்தில் உலகக் சொத்துரிமையைக் கைப்பற்றும் எல்லை வரை இன்று விரிந்து விட்டது.

இங்கு அடிமைப்படுத்திய வரலாற்றில் பெண்ணடிமைத்தனம் அதன் சாரமாகின்றது. யுத்தங்களையும், ஆணாதிக்கத்தையும், தனிச் சொத்துரிமையையும், சாதியத்தையும் ஒழிக்க வேண்டுமாயின், நாம் மனிதனின் இயற்கையான வாழ்வை நோக்கி அதாவது கடந்த மூவாயிரம் வருடத்துக்கு முந்திய மனிதனின் வாழ்வில் இருந்த சமூகத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு போராட வேண்டும்.

ஆணாதிக்கம் தனிச்சொத்துரிமையின் விளைவு என்பதை வரலாற்று ரீதியாகப் புரிந்து கொள்வதன் ஊடாக, அதை(தனிச்சொத்துரிமையை) ஒழிப்பதில் மட்டுமே ஆணாதிக்கத்தை ஒழிக்க முடியும். இந்தத் தனிச்சொத்துரிமை அமைப்பு வன்முறை ஊடாகவே சமூகச் சொத்துரிமையைக் கைப்பற்றி வருவதுடன், அதை வன்முறையூடாகவே பாதுகாக்கின்றது. அதாவது இன்றைய சமூக அமைப்பின் பாதுகாப்பு என்பதை வன்முறை நிறுவனங்களே கட்டிப் பாதுகாக்கின்றன. இது அமைதியாக இருப்பதாகப் பாசாங்கு செய்யும் ஜனநாயக அமைப்பாக இருந்தாலும் சரி, வர்க்க நெருக்கடியால் நேரடியாக வன்முறையைக் கையாளும் ஜனநாயக அமைப்பாக இருந்தாலும சரி வன்முறை வடிவம் பொதுவிதியாக இருக்கின்றது. வர்க்க ரீதியான போராட்டம் மட்டுமே இதன் பண்பின் தன்மையை வேறுபடுத்துகின்றது. கடந்த மனித வரலாற்றின் அனைத்து யுத்தங்களும் வர்க்க யுத்தமாக இருந்தாலும், அவை எவ்வளவு புரட்சிகரமாக இருந்தாலும், அனைத்தும் தனிச்சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்டு தன்னை மீள மீள பழைய முரண்பாட்டைப் புதுப்பித்துக் கொண்டது. ஆதலால் அது மீள மீள யுத்தம் தொடர்வது தவிர்க்க முடியாத விதியாகின்றது.

இந்த வரலாற்றில் தான் சொத்துரிமையை ஒழிப்பதை அடிப்படையாகக் கொண்ட வர்க்க யுத்தத்தை, முதன் முதலாக யுத்தங்கள் மீது கோருவது புதிய மனித வரலாறாகின்றது. இது அடிப்படையில் ஆணாதிக்கத்தைத் தனிச்சொத்துரிமை வடிவில் ஒழிக்கின்றது. இது சாதியைத் தனிச்சொத்துரிமை மீது ஒழிக்கின்றது. இது சுரண்டலைத் தகர்க்கின்றது. இதனால் யுத்தங்கள் ஒழிந்து போகின்றன. யுத்தங்கள் எதற்காக நடக்கின்றன? என்ற அடிப்படையான ஆழ்ந்த உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டு, அதை மாற்றுவதன் மூலம் யுத்தத்தையே இல்லாது ஆக்க முனைவது புதிய மனித வரலாறாகும். மார்க்சியம் முதன் முதலாக யுத்தங்கள் தனிச்சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்ட வர்க்க யுத்தமாக இருப்பதைத் துல்லியமாக நிறுவியது. எந்தளவுக்கு விரிந்த மேற்தளத்தில் பல்வேறு காரணங்களை முன்வைத்து அணிதிரண்டாலும், உண்மையில் அதன் ஆழ்ந்த நோக்கம் அதன் உள்ளடக்கம் தனிச்சொத்துரிமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சார்ந்து கிடப்பதை மார்க்சியம் எடுத்துக் காட்டியது, காட்டுகின்றது. உலகத்தில் நடந்த யுத்தங்கள் அனைத்துமே இதைத் தாண்டி நடந்து விடவில்லை என்பதை, வரலாற்று எதார்த்தம் நிர்வாணமாக்கியுள்ளது.

வன்முறை மூலமும், யுத்தங்கள் மூலமும் தனிச்சொத்துரிமை அமைப்பைக் கட்டிப் பாதுகாப்பதுடன், சொத்துரிமை குவிக்கப்பட்டு வரும் வரலாற்றில், மக்கள் தமது வாழ்வுக்காகப் போராடுவது என்பது மீள மீள நடப்பது இயங்கியல் வாழ்வு விதியாகும். மக்கள் வாழ்வின் தற்காப்பு சார்ந்து போராடும் போதும், பறிகொடுத்ததைப் போராடிப் பெறுவதிலும் வெளிப்படையான, மேலெழுந்தவாரியான காரணத்தையே எப்போதும் முதன்மையான அம்சமாகக் கொண்டு உள்ளது. இதை எதிர்ப்பது மக்களின் நியாயமான வாழ்வியல் கோரிக்கைகளை மறுப்பதிலும், சுரண்டும் வர்க்கத்தை ஆதரிப்பதிலும் போய் முடிகின்றது. மக்களின் மேலெழுந்தவாரியான ஒவ்வொரு கோரிக்கையையும் தனிச்சொத்துரிமையை ஒழிப்பதை நோக்கி மாற்றுவதன் ஊடாகவே, யுத்தத்தின் உள்ளடக்கத்தைத் தகர்த்து மக்களின் நலனைப் பெற்றெடுக்க முடியும். இது தவறுகின்ற பட்சத்தில் யுத்தம் புதிய வடிவில் மீள வருகின்றது.

இங்கு பெண்கள் ஆயுதம் ஏந்துவது பெண்ணியல் பண்புகளைத் தகர்க்கின்றதா? பண்புகள் என்பது என்ன? **பெண்களின் பண்புகளை ஆணாதிக்கம் வரையறுத்ததே ஒழிய, பெண்களின் இயற்கை குணாம்சம் அல்ல.** பெண்களின் தாய்மை, குழந்தை வளர்ப்பு சார்ந்த இயற்கை உணர்வுகள் எல்லாம் என்றைக்கும் ஒன்றாக இருந்தவையுமல்ல. மாறி மாறி வந்தது மட்டுமின்றி இன்று அதை ஆணாதிக்க வழியில் சிதைப்பதும் நிகழ்கின்றது. பல பெண்ணியல்வாதிகள் ஆணாதிக்க வழியில் இயற்கை சார்ந்த பெண்ணியல் உணர்வுகளைச் சிதைக்க முனைகின்ற போது, பெண்களின் ஆயுதம் ஏந்தும் உரிமையைக் கொச்சைப்படுத்த தயங்கவில்லை.

யுத்தம் என்பது தனித்துவமான மனிதனை விலகி உருவான பண்பு அல்ல. மனிதன் உணவுக்காக மற்ற மிருகத்துடன் போராடி வாழ்ந்த போது, பெண் அதற்காகத் தலைமை தாங்கி போராடினாள். தனிச்சொத்துரிமை அமைப்பு தாய்வழிச் சமூகத்தைச் சிதைத்து ஆண் வழிச் சமூகத்தை உருவாக்கிய போது, பெண்ணின் போராட்டம் இயற்கையாக எழுந்தது. இந்த வாழ்வுக்கான போராட்டங்கள் குடும்பத்தில் இருந்து ஒரு மக்கள் கூட்டத்தைப் பிரதிபலித்த போது, அங்கு பெண்ணின் நலன்களை உள்ளடக்கியபடி இருப்பதால் பெண்ணும் அதற்காகப் போராடவேண்டி இருக்கின்றது. வாழ்வு என்பது போராட்டத்தை உள்ளடக்கியது என்பதால், மனிதர்களுக்கிடையிலான இந்தப் போராட்டத்தில் பெண் பங்களிப்பு ஆண் சார்ந்ததல்ல. சொந்த ஆளுமையிலும், சொந்த நலன் சார்ந்தும் வெளிப்படுவது இயற்கையானது. ஆனால் பெண், ஆணைச் சார்ந்து வாழ வைக்கும் தனிச்சொத்துரிமை சமூக அமைப்பில், பெண்ணின் வாழ்வுக்கான போராட்டத்தை ஆணாதிக்கம் கட்டுப்படுத்திய போது, யுத்தங்கள்





ஆண்களின் யுத்தங்களாக வெளிப்படுகின்றன. ஆனால் அந்த யுத்தத்தின் விளைவுகள் பெண்ணையும் உள்ளடக்கியது. இந்த வகையில் யுத்தத்தின் சாதக, பாதக விளைவுகள் பெண்ணைப் பாதித்தது, பாதிக்கின்றது. எல்லா விதமான மனிதப் பிளவுகளும், அதன் விளைவுகளும் பெண்ணைத் தனித்துவமாக விட்டுவிடுவதில்லை.

உயிரியல் விளைவுகளின் படி மனிதன் எப்படி சுற்றுச் சூழல் உடன் போராட வேண்டியிருக்கின்றதோ, அதே போல் மனிதனுடனும் போராட வேண்டியிருக்கின்றது. உயிர்வாழ்வதற்கான மனித உரிமை போராட்டத்தை நிபந்தனையாக்குகின்றது. இந்த வகையில் போராடுவது பெண்ணின் உரிமையாகின்றது. இது சமுதாயத்தில் சகல விடயங்கள் மீதும், சொந்தப் பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்துப் போராடுவது அவளின் உரிமையாகின்றது. இந்த வகையில் இந்தச் சமுதாயம் எந்த ஆயுதம் மூலம் கட்டமைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றதோ, அந்த ஆயுதத்தை அதற்கு எதிராகக் கையாள்வதன் மூலமே நிலைமையை மாற்ற முடியும். பெண் தனது உரிமையை வென்றெடுக்க, மனிதனின் இயற்கையான வாழ்வை மீட்டெடுக்க, இவை தோன்றிய வடிவத்தைத் தகர்ப்பதில் ஆயுதபாணியாவது நிபந்தனையானது.

இந்த வகையில் போராடாத பெண்கள் மீளவும் புதிய வடிவில் புதிய அடக்குமுறையைத் தனக்குத் தானே ஏற்படுத்த, தியாகம் செய்வதாக இருக்கும். இந்த வகையில் விடுதலைப்புலிகளில் பெண்களின் பங்களிப்பை ஆராய்வோம். தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்கு பெறும் உரிமை எந்த விதத்திலும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டது.

பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் உரிமை முற்போக்கானது. அந்த வகையில் விடுதலைப்புலிகளில் பெண்களின் பங்களிப்பு முற்போக்கான தன்மை கொண்டது. இதை மறுப்பது பிற்போக்கானதும், ஆணாதிக்க இனவாத அரசுக்குச் சார்பானதுமாகும். உள்ளடக்கத்தில் ஏகாதிபத்திய உலகமயமாதல் அமைப்புக்குச் சாதகமானதுமாகும்.

ஆயுதம் ஏந்திய பெண்கள் தமது துயரத்துக்கான இனப் பிரச்சினை முதல் ஆணாதிக்கம் வரையிலான காரணத்தைப் புரிந்து மாற்ற தவறுகின்ற நிலையில், அந்த பங்காற்றல் என்பது பிற்போக்காக உள்ளது. அந்த வகையில் விடுதலைப்புலிகளில் பெண்களின் பங்காற்றல் விளைவுகள் பிற்போக்கான பாத்திரத்தை வகிக்கின்றது. விடுதலைப்புலிகளின் போராட்டம் போராடும் உரிமை சார்ந்து முற்போக்காக இருக்கும் அதே தளத்தில், அதன் விளைவு பிற்போக்காக இருக்கின்றது.

போராடும் உரிமையை முற்போக்காகக் கொண்டு போராடும் போது, அங்கும் இரண்டு தளத்தில் அதன் தன்மை சமூக விளைவைக் கொடுக்கின்றது. போராடும் உரிமையைத் தான் கொண்டிருக்கும் அரசியலை மக்கள் சார்ந்து முன்னெடுக்கும் போது அது முற்போக்காக இருக்கின்றது. அதுவே மக்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்து அன்னியப்பட்டு இருப்பின் அது பிற்போக்காக இருக்கின்றது. இந்த வகையில் விடுதலைப்புலிகளில் இணைந்துள்ள வடிவம் பிற்போக்காக உள்ளது. போராடும் விளைவில் சமூகக் காரணத்தை முழுமையில் புரிந்து மாற்றும் போது முற்போக்காகவும், அதை மறுத்து நிற்கும் போது பிற்போக்காகவும் இருக்கின்றது. பெண் விடுதலைப்புலிகள் இந்த வகையில் பிற்போக்கான பாத்திரத்தை வகிக்கின்றனர். இதை விரிவாக ஆராய்வோம்.

இலங்கையின் சிங்கள இனவாத அரசு ஏகாதிபத்திய உலகமயமாதலைத் தீவிரமாக்க, முன்னெடுத்துச் செல்லும் இனவாத ஆணாதிக்க யுத்தத்தை எதிர்த்து போராடும் உரிமையில், ஆண்களுக்குத் தனிச் சலுகை என்பது ஆணாதிக்கமாகும். பெண்களும் ஆண்களைப் போல் போராடும் உரிமையை மறுப்பது ஆணாதிக்கமாகும். பெண்கள் ஆண்களைப் போல் ஆயுதம் ஏந்தி போராடும் உரிமை, பெண்ணின் அடிப்படையான உயிர் வாழ்தலுடன் தொடர்புடைய உள்ளடக்கமாகும்.

தமிழ் மக்களின் போராட்டம் எழுச்சி பெற்ற போது, இயக்கங்கள் மத்தியில் பல்வேறுபட்ட அப்பிராயங்கள் இது தொடர்பாக இருந்துள்ளது. சில இயக்கங்கள் பெண்ணை இணைத்த போது, சில அதைத் திட்டவட்டமாக எதிர்த்து, பெண்கள் வீட்டுக் கடமைகளைச் செய்தால் போதும் என்ற கண்ணோட்டத்தில், போராட்டத்தை ஆண்களின் கடமையாக வரையறுத்தது. இந்த வகையில் கி.பி.1984-களில், யாழ்ப் பல்கலைக்கழகத்தையும் அதைச் சுற்றியும் விநியோகிக்கப்பட்ட துண்டுப ' பிரசுரத்தில், பெண்களின் ஒழுக்க விதியில் வடமராச்சி (சில இயக்கங்களின் தோற்றம் கள்ளக் கடத்தல் சார்ந்து வடமராச்சி தன்மை கொண்டிருந்தது.) பாணியில் நீண்ட உடுப்புகளைப் பாவிக்கவும் (உடுத்தவும்), சைக்கிள் ஓட்டத் தடை போன்ற ஆணாதிக்கக் கற்பு விதிக்கமைய எச்சரிக்கைகளுடன் வெளிப்பட்டது. இது எந்த இயக்கத்தையும் பிரதிபலிக்காவிட்டாலும், இதன் பின்னால் இயக்கம் இருந்தது தெளிவானது.

விடுதலைப்புலிகள் ஆரம்பம் முதலே பெண்களை இணைப்பதை எதிர்த்து வந்தனர். பெண்கள் ஆண்களின் தியாக உணர்வுகளைச் சிதைக்கும் தன்மை கொண்டவர்கள் என்று கருதினர். விடுதலைப்புலிகளின் ஆரம்பக் கால உறுப்பினரான **உமாமகேஸ்வரன்** (இவர் பின்னால் பிளாட்டில் (PLOT) இது போல் பல உறவுகளைக் கொண்டிருந்ததுடன், பல இயக்கப் பெண்களை மிரட்டியும், இயக்கத் தலைமை செல்வாக்கைக் கொண்டும் பாலியல் ரீதியாகப் பயன்படுத்தியதுடன், பாலியல் நடத்தை அம்பலமாவதைத் தடுக்க, கொன்ற வரலாறும் உண்டு.) ஊர்மிளாவுடனான உறவு, விபச்சார தன்மையில் அமைந்திருந்தது. இந்த வடிவங்கள் கூட, இயல்பான பூர்சுவா ஆணாதிக்க இயக்கத்தை, தூய்மையான வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு தன்னை வெளிப்படுத்தியது. நெருக்கடியில் தலைமறைவான வாழ்க்கையில் இருப்போர், தங்கிய இடங்களில் ஏற்படும் பாலியல் உறவுகள், திருமணங்களூடாகப்





போராட்டத்தைக் கைவிடுதல் போன்றன ஆணாதிக்கப் பூர்சுவா இயக்கக் கண்ணோட்டத்தில் பெண் எதிர்ப்பாக மாறிவிடுகின்றது. இது பெண்களை இயக்கத்துக்குள் நெருங்குவதை முற்றாக மறுத்தது. ஆண், பெண்ணின் இயற்கை உணர்வுகள் மற்றும் சீரழிவுகளுக்கான காரணத்தைக் கண்டறிந்து நிவர்த்தி செய்வதற்குப் பதில், பூர்சுவா இயக்கத்துக்குரிய எதார்த்த ஆணாதிக்க வடிவில் சிந்தித்ததன் விளைவு பெண்களை எட்ட(தூர) நிறுத்தியது.இந்தவகையில் விடுதலைப்புலிகள் பெண் எதிர்ப்பு ஆணாதிக்க இயக்கமாகவே வளர்ச்சி பெற்றது.

மறுதளத்தில் பெண்களை இணைத்துக் கொண்ட இயக்கங்கள் பல்வேறு போக்குகளை உள்ளடக்கி வெளிப்படுத்தின. எல்லா இயக்கங்களும் பூர்சுவா இயக்கங்களாக இருந்ததால், பெண்கள் எப்படி, எந்த நிலையில், எந்தக் கட்டத்தில், என்ன வேலை செய்தனர் என்பதைப் பொறுத்து அவர்களின் நிலைமை வெளிப்பட்டது. பெண்கள் பூர்சுவா சுய ஆளுமையுடன் மக்களிடையே வேலை செய்தவர்கள், தமது சுயத்தை இழந்து விடவில்லை. மற்றபடி பாலியல் தேவைக்கும், கூலி பட்டாளமாகவும், பல்வேறு ஆணாதிக்கப் பண்பாட்டு நடத்தைகளிலும் பயன்படுத்தப்பட்டனர். இயக்கத்தில் இருந்த சொந்த அரசியல் சீரழிவாலும், முரண்பாட்டிலும் விலகிக் கொண்ட பெண்களையும், இயக்க அழிப்பினூடாக ஒதுங்கிய பெண்களையும் சரி, ஆணாதிக்கச் சமுதாயம் இயல்பான வகையில் ஒரு கற்புள்ள பெண்ணாக ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆணாதிக்கச் சமூக விளைவுகளின் அதீதமான கொடூரத்தை, அப்பெண்கள் தமது இயல்பான வாழ்க்கையில் எதிர் கொண்டே வாழ்கின்றனர். இந்த இயக்கங்களில் இணைந்து கொண்ட பெண்களும், இயக்கத்தின் பூர்சுவா எல்லையால் ஆணாதிக்கக் கடமைகளை நிறைவு செய்பவர்களாகவே பங்காற்றினர். இந்த இயக்க அரசியலில் இருந்து வெளியில் வந்து சுய ஆற்றல் உள்ள பெண்களாகத் தம்மை வெளிப்படுத்தியவர்கள் இல்லை என்றளவுக்கு நிலைமை உள்ளது. அதாவது ஆண்கள் எப்படி சுய ஆற்றல் இழந்தவர்களாக, சமூக இயக்கத்தில் இருந்து ஒதுங்கினரோ, அதுவே பெண்ணுக்கும் நடந்தது.

விடுதலைப்புலிகள் இயக்கங்களைத் தடைசெய்த போது தண்டனைகளில் (படுகொலைகளைச் செய்வதில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள்) இருந்து விடுவித்த ஒவ்வொரு இயக்க ஆணையும், விடுதலைப்புலிகள் திருமணம் செய்யவும், வெளிநாடு செல்லவும் கோரிய போது, இங்கு விடுதலைப்புலிகளின் மரபாந்த ஆணாதிக்கக் கண்ணோட்டம், பெண்ணைப் பாலியல் பண்டமாக இழிவுபடுத்தியே வெளிப்பட்டது. இயக்க அழிப்பினால் இயக்கத்தில் இணைவுக்கான ஆட்சேர்ப்பைக் கேள்விக்குள்ளாக்கியது.

தமிழ் மக்களில் பெரிய பகுதி இந்த இயக்க அழிப்பின் விளைவை ஏதோ ஒரு வகையில் நேரடியாக அனுபவித்தது. இதனால் ஏற்பட்ட அதிர்வுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்க இணைவின் சமநிலையைத் தகர்த்து. அத்துடன் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு மேலும் இதைக் கேள்விக்குள்ளாக்கியது. இந்த இடத்தில் தான் விடுதலைப்புலிகள் முதன் முதலாகப் பெண்களை இயக்கத்தில் இணைப்பதை அடிப்படையாகக் கொள்கின்றனர். அத்துடன் கி.பி.1980-களின் நடுப்பகுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் திருமணம் ஊடாக, நீண்ட கால உறுப்பினருக்குத் திருமணம் செய்யும் உரிமை வழங்கப்படுகின்றது.

போராட்டத்தைக் குறுகிய கால வரையறையில் வென்றுவிடும் பூர்சுவா கனவு, அது சார்ந்த தூய்மை அதீதமாகக் கோரியது வெறும் கனவாகி சாத்தியமற்ற ஒன்றாகின்றது. இயக்க பலம் மற்றும் உள்ளார்ந்த தன்மைகளினால் சில நெகிழ்வுத் தன்மையை விடுதலைப்புலிகள் கையாளுகின்றனர். விடுதலைப் புலிகளின் தலைவர் **வே. பிரபாகரன்** பெண்களின் பங்கு, இணைப்பு பற்றிய கருத்தில் “இந்த மண்மீட்புப் போர்க்களத்தில் இன்று தமிழ் இனப் பெண்கள் ஆயுதமேந்தி நிற்கிறார்கள். முழு உலகமுமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புகளைச் செய்து வருகின்றார்கள். விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவின் தோற்றமும், வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூறமுடியும். தமிழீழப் பெண்ணினத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றிலே இது ஒரு புரட்சிகரமான திருப்பத்தைக் குறித்து நிற்கின்றது.”[29]

பெண்களை இயக்கத்தில் இணைத்த போது விடுதலைப்புலிகள் பெரிய விரிந்த இயக்கமாக மாறினர். இதற்குப் புறநிலை சாதகமாக மாறியது. யாழ் மனோபாவம் கொண்ட எம் தேசியவாத இயக்கங்களின் ஆட்சேர்ப்பைச் சுயநலம் பிடித்த பூர்சுவா சமுதாயத்தால் தீர்க்க முடியாது. இந்தப் பூர்சுவா சமுதாய உள்முரண்பாடுகளில் சரியான கண்ணி மட்டுமே ஆட்சேர்ப்பை விரிவாக்கும். ஆட்சேர்ப்பில் ஏற்பட்ட நெருக்கடியைக் கடந்து செல்ல, சிறுவருக்கேயுரிய கவர்ச்சியும், சுதந்திரத்தையும் விரும்பும் வயது குறைந்த இளைஞர்கள், பெண்கள் என சமூக அடிப்படையில் மிக பின்தங்கிய புரிதல் உள்ளவர்களைச் சார்ந்திருப்பதை, இயக்க உள்வெளி அரசியல் நிலைமை நிர்ப்பந்தித்தது.

இது மட்டும் தான் விடுதலைப்புலிகளின் இருப்பையும், தமிழ் மக்களின் தற்காப்பு யுத்தத்தையும் பாதுகாக்கும் எல்லையாகியது. ஆணாதிக்கத் தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் மீது இருந்த கட்டுப்பாட்டை விடுதலைப்புலிகள் தமக்குச் சார்பாக உடைத்த போது, பெண்கள் அலைஅலையாக இயக்கத்தை நோக்கி செல்வது புதிய வடிவமாகியது. அதாவது பூட்டி வைத்திருந்த ஆணாதிக்க அடக்குமுறையில் சிக்கியிருந்த பெண்கள், வீட்டை விட்டு வெளியில் வருவதை விடுதலைப்புலிகளின் ஆயுதம் சார்ந்த அதிகாரத்துடன் கூடிய பலம் துரிதப்படுத்தியது. விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அவர்களின் எண்ணிக்கை சரியாகத் தெரியாவிட்டாலும் சரிக்குச் சரி பெண்களால் ஆனது என்பது மட்டும் உண்மை. இந்திய இராணுவத்தின் கெடுபிடி யுத்தத்தில் ஆண் விடுதலைப்புலிகளை விட, பெண் விடுதலைப்புலிகள் தாக்குதல் இலக்கை





அடைவது சுலபமாக்கியது. இதனால் பெண்கள் சுய ஆற்றல் உள்ள தாக்குதல் இலக்கை அடைவதன் மூலம், புறநிலையாக விடுதலைப்புலிகள் முன்னிலைக்கு வந்தார்கள். விடுதலைப்புலிகளின் இயக்க உள் நிலைமையினூடாக அல்ல, புறநிலை நிர்ப்பந்தம் பெண் விடுதலைப்புலிகளின் முக்கியத்துவத்தை, தனித்துவத்தை வெளிக்காட்டியது.

இதனால் தனியான படைப்பிரிவுகள், தலைமைகள் பெண் சார்ந்து வெளிப்படத் தொடங்கியது. சில தாக்குதலில் தனித்து பெண்களே முன்னிலையான பாத்திரத்தை வகித்தனர். ஆனால் விடுதலைப்புலிகளின் ஆணாதிக்கப் பூர்சுவா இயக்கக் கட்டமைப்பில் பெண்கள் பற்றிய அரசியல் மற்றும் மரபார்ந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்படாததால், (இங்கு சில மாற்றம் பெண்களை இணைப்பது, பெண்களுக்கும் முடியும் போன்றன நிகழ்ந்தன.) புலிகளின் இரண்டாம், மூன்றாம் மட்டத் தலைமையை நோக்கிப் பெண்கள் வருவது அரிதான, விதிவிலக்கான விடயமாக உள்ளது. நீண்ட அனுபவம் கொண்ட யுத்தத் தலைமை பெண்களிடம் வந்துவிடவில்லை. அது இன்னமும் ஆண்களிடமே உள்ளது.

இயக்கத்தில் இணைந்து கொண்ட பெண்கள் முன் ஆணாதிக்கம் பற்றிய கருத்துகள் சென்றதன் மூலம், விடுதலைப்புலிகள் சில நடைமுறை ரீதியாக நடவடிக்கை எடுத்தனர். சீதனத் தடை முக்கியமான ஒன்றாக மாறியது. இது மறைமுகமாக விடுதலைப்புலிகளுக்குப் பணம் திரட்டும் ஊடகமாக மாறியது. இந்தச் சீதனத் தடை எந்தவகையிலும் உயிரோட்டமுள்ள வகையில் முன்னெடுக்க முடியாது போனதுடன், அவை தனிச்சொத்துரிமை அமைப்பின் எல்லையால் மறைமுகமாக அல்லது நேரடியாக மீறப்படுவது நிகழ்ந்துள்ளது.

ஆணாதிக்க அமைப்பைத் தகர்க்க தனிச்சொத்துரிமை வடிவம் மீது தொடுக்க வேண்டிய வர்க்கப் போரை விடுதலைப்புலிகளின் அரசியல் அனுமதிக்காது. ஆணாதிக்கத்துக்கு எதிரான பெண்களின் போராட்டம் வெறும் இனவிடுதலையுடன் தொடர்புடையது என்று நம்புவோமாயின், உலகில் இன விடுதலையடைந்த நாடுகளில் ஆணாதிக்கம் தகர்ந்திருக்கும். ஆனால், ஆணாதிக்கம் தகரவில்லை. ஆதலால் **இன விடுதலை பெண் விடுதலையைப் பெற்றுத் தராது** என்பதை வரலாற்று ரீதியாக உலக வரலாறு காட்டுகின்றது.

இரண்டாவதாகப் பெண்கள் ஆயுதம் ஏந்துவதன் மூலம் ஆணாதிக்கத்தை ஒழிக்க முடியுமா? எனின் இல்லை என்பது உண்மையாகும். உலகில் பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடிய வரலாறுகள் பெண்ணை ஆணாதிக்கத்திடம் இருந்து விடுவித்து விடவில்லை. ஆயுதம் ஏந்துவது ஆணாதிக்கத்தை ஒழிக்கும் எனின் அது கற்பனை என்பது எல்லோருக்கும் தெரியும்.

அப்படியாயின் **ஆணாதிக்கத்தை ஒழிக்கும் வழி என்ன?** ஆணாதிக்கம் எப்படி உலகம் முழுவதிலுமான ஆணாதிக்கச் சமுதாயமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உருவானது என்பதைக் கண்டறிவதும், எப்படி உருவானதோ அதே வழியூடாக ஒழிப்பதைப் புரிந்து கொண்டும் போராடுவதே ஆணாதிக்கத்தை ஒழிக்கும் வழியாகும். ஆணாதிக்கம் தனிச்சொத்துரிமை அமைப்பில், பெண் சொத்துரிமை இழந்ததன் ஊடாக உருவாகின்றது. அதாவது பெண் வீடு சார்ந்த உற்பத்தியில், இனவிருத்தியில் நிலைத்திருக்கவும், ஆண்களின் உழைப்பு சார்ந்த உற்பத்தி உபரியைப் பெற்று தந்த போதும், யுத்தக் கைதிகள் மேலதிக உபரியைப் பெற்றுக் கொடுத்தபோதும், பெண்ணின் கண்டுபிடிப்புகள் மற்றும் உழைப்பைக் ஆண் கைப்பற்றிய தொடர்ச்சியில் பெண் சொத்துரிமையை இழந்தாள். ஆனால் விடுதலைப் புலிகள் எதை விடுதலையாகக் காட்டுகின்றனர் எனப் பார்ப்போம்.

“ஆணும் பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர், ஒருவரின் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும், கௌரவத்தையும் மதித்து குடும்ப வாழ்வில் பொறுப்புகளைப் பகிர்ந்து சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்து, பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக் கொண்டு வாழ்ந்தால், இந்தப் பால் வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும்”[29] என பெண்விடுதலையை விளக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் கூற்றைப் பார்ப்போம். இந்தக் கூற்றை விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கடைப்பிடிப்பின், இது கூட சமுதாய ரீதியாகப் பெண் ஒருபடி மேல் செல்வாள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இது நடைமுறையில் வெறும் கோஷமாக இருப்பதே நிகழ்கின்றது. இனி இந்தக் கூற்றில் சமுதாயத்தில் பரஸ்பர உறவுகள், பகிர்ந்து கொள்ளுதல், பங்களித்தல், மதித்தல் என்ற எல்லைக்குள் ஆணாதிக்கத்தை ஒழிக்க முடியும் என்பதே தெளிவாகின்றது. உலகளவில் எல்லாப் பூர்சுவா பெண்ணியல்வாதிகளும் இதையே தமது அடிப்படை உள்ளடக்கமாகக் கொள்வதையும் காணமுடியும். விடுதலைப்புலிகளுடன் முரண்பட்ட பெண்ணியல் பிரிவுகளும் இதையே தமது நோக்கமாக வரிந்து கொள்வதும் எதார்த்தமாக உள்ளது.

இது ஆணாதிக்கத்தை ஒழிக்குமா? பால் வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகளை ஒழிக்குமா? எனின் இல்லை. மாறாக இவை ஒரு சமூக இயக்கமானால் பெண் சில சலுகைகள் பெற்று, ஆணாதிக்கத்துக்குட்பட்டே வாழ முடியும். ஆணாதிக்கத்தின் தோற்றம் பரஸ்பர உறவுகள், பகிர்ந்து கொள்ளுதல், பங்களித்தல், மதித்தல் போன்றவற்றில் ஏற்பட்ட சமுதாய வேறுபாட்டால், ஆண் பெண் பிளவு ஏற்படவில்லை. மேற்குச் சமூகங்களில் பரஸ்பர உறவுகள், பகிர்ந்து கொள்ளுதல், பங்களித்தல், மதித்தல் போன்றவற்றில் ஆண் பெண் உறவுகள் முழுமையாக இல்லாவிட்டாலும், உயர்ந்த உறவுகளை ஏற்படுத்திய போதும், ஆணாதிக்கம் நிலவுவது காணமுடியும். மிக பின்தங்கிய எம் சமூகத்தில் இதை வந்தடைய குறைந்த பட்சம் எம் பொருளாதார அமைப்பே அதற்குத் தடையாக நிற்கின்றது. அதாவது மேற்கைப் போல் வந்தடைய தேசிய முதலாளித்துவப் புரட்சி அவசியம். இந்தத் தேசியம் தமிழ்த் தேசியமாக இருந்தால், தேசிய முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் கட்டுவதற்கு, குறைந்த பட்சம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து





அணிதிரட்டப்பட வேண்டும். இதை விடுதலைப்புலிகள் திட்டவட்டமாக மறுக்கின்றனர். இதில் இருந்தே பெண் விடுதலையில் பொருளாதார அலகு பற்றி குறிப்பிடுவதைக் கூடத் தவிர்க்கின்றனர்.

பெண் பரஸ்பர உறவுகள், பகிர்ந்து கொள்ளுதல், பங்களித்தல், மதித்தல் போன்ற உரிமைகளைப் பெற, பெண் பொருளாதார ரீதியாக ஆணில் இருந்து சுதந்திரம் அடைவது அவசியம். ஈழத் தமிழ்ச் சமூகத்தில் பெண்வழி உறவுகளின் அடிப்படையில் கிடைக்கும் பொருளாதாரப் பலம் கூட, பெண்ணைப் பொருளாதார ரீதியாகச் சுயேட்சையுள்ள மனித ஜீவியாக்கிவிடவில்லை. ஆணைச் சார்ந்து வாழும் பொருளாதாரக் கட்டமைப்பில் பெண் சிக்கியுள்ளாள். இதைத் தாண்டி பொருளாதார ரீதியாக ஆண் அளவுக்கு, உழைக்கும் பெண் கூட ஆணைச் சார்ந்து நிற்கின்றாள். சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுக் கலாச்சார எல்லையில் அதை மறுத்து, ஒரு புரட்சி வீச்சாகக் கொண்டு பெண்களை அணிதிரட்டிப் போராடாத வரை, பெண் விடுதலையை அடைய முடியாது. சில விடயங்கள் வெறும் கோஷங்களாக, மேற்கோளாக மாறி விடுகின்றது அல்லது இவை மேற்கோளாக நடைமுறையின்றி முன்வைக்கப்படுகின்றது.

இன அழிப்பு நடந்து கொண்டிருக்கின்றபோது, மக்களின் தற்காப்பிற்காகப் போராடும் பெண் விடுதலைப்புலிகள், இனவிடுதலைப் போராட்டத்தில் முற்போக்கான பாத்திரத்தினூடாகப் பங்களிக்க முடியும். ஆனால் அது பெண் விடுதலையைத் தந்து விடுவதில்லை. இந்தக் கோணத்தில் பிற்போக்குப் பாத்திரத்தை வகிக்கின்றது. **ஆயுதம் ஏந்தும் உரிமை ஆணுக்கு மட்டும் உரியது அல்ல..அது பெண்ணுக்கும் உரியதே.** ஆயுதம் ஏந்தும் உரிமையும், போராட்டமும் தியாகமும் பெண் விடுதலையாகி விடுவதில்லை. ஆயுதம் ஏந்திய பெண்கள் உலகெங்கும் இருந்தார்கள். ஆனால் உலகெங்கும் பெண் அடிமையாக இருக்கின்றாள். இது ஏன்? என்ற கேள்வி அடிப்படையானது. இது விடுதலைப் புலிகளை நோக்கி மட்டுமல்ல, எல்லா பூர்சுவா பெண்ணியல்வாதிகளையும் நோக்கிய கேள்வியாகின்றது. பெண் விடுதலைப்புலிகளின் போராட்டம் ஆணைப் போல் ஆண் சமுதாயத்தை வென்று எடுப்பதே அதன் எல்லையாகின்றது. இதைப் புலிகளின் பிரதான கவிஞர் **புதுவை இரத்தினதுரை** பாடல் வரிகளில் இருந்து பார்ப்போம்.

“வீரத்துக்கு எங்கள் மண்ணில்
வித்தியாசங்கள் கிடையாது
ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதங்கள் இல்லை
குஞ்சென்றும் மூப்பென்றும் எல்லைகள் இல்லை”[29]

— என்ற வரிகளில் வீரத்துக்குச் சம உரிமையை வழங்கியதே ஒழிய, பேதங்களை, வித்தியாசங்களை நடைமுறை ரீதியாகச் சமுதாயம் பெற்று விடவில்லை. யுத்தமுனையில், போரிடும் முனையில் பெண் வயது கடந்து பெற்ற வீரத்தை வெளிப்படுத்தும் உரிமையை, சமுதாயத்தின் எல்லாத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துறையிலும், ஏன், விடுதலைப்புலிகளின் மற்ற துறைகளிலும் பெற்றுவிடவில்லை. சமுதாயத்தின் இயக்கம் விடுதலைப்புலிகளைக் கடந்து, இயல்பான ஆணாதிக்கக் கண்ணோட்டத்தில் இயங்குவது இதன் அப்பட்டமான அடிப்படையாகும்.

பெண் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி பொது வாழ்வில் ஈடுபடும் போது அவளை ஆணாதிக்கச் சமூகம் எப்படி அணுகுகின்றது என்பதும், அவள் திருமணம் செய்கின்ற போது அவளின் குடும்ப நிலைமை எல்லாம் எமக்கு ஆணாதிக்கச் சமூகத் தன்மையின் இறுக்கத்தை மாற்றமின்றி காட்டுகின்றது. இராணுவம் ஒரு பெண்ணைக் கற்பழித்துவிடும் போது, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச உணர்வுகள் கொண்டிருக்கும் உள்ளக் கொதிப்பான உணர்வுகள், அவளின் கற்பு மீதான ஆணாதிக்க ஒழுக்கக் கோர்வை சார்ந்து, பெண்ணை இழிவுக்குள்ளாக்கிக் கற்பிழந்தவளாகக் காணும் போது அதை அங்கீகரிக்கின்றது. இதில் தான் விடுதலைப்புலிகளில் ஆயுதம் ஏந்தி நிற்கும் பெண், இனவிடுதலையில் தமிழ் மக்களின் தற்காப்பில் முற்போக்காக இருக்க முடியுமே ஒழிய, ஆணாதிக்கத்துக்கு எதிரான தனது சொந்த விடுதலையில் பிற்போக்கான பாத்திரத்தை வகிக்கின்றாள். விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பெண்ணின் ஆற்றல் பற்றி கூறுவது எதை என்று பார்ப்போம்.

“மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டுக்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கின்றது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது. இந்த மனிதத்தின் ஆற்றல்களை உடற்கூறு நிர்ணயிப்பதல்ல. பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும், அலாதியான பண்புகளையும் பாலியல் அளவு கோலால் நிர்ணயிக்க முடியாது. எதையும் பெண்ணால் சாதிக்க முடியும் என்பதற்கு எம் போராட்டம் ஓர் உன்னதமான உதாரணமாகத் திகழ்கின்றது”[29] என்ற கருத்துகள் எல்லை கொண்டவை. உலகில் ஆயுதம் ஏந்தி போராடிய பல விடுதலைப் போராட்டத்தில் பெண்ணின் பங்கு பலமுறை நிறுவப்பட்டுள்ளது. இது விடுதலைப்புலிகளின் போராட்டத்திலும் மீள நிறுவப்பட்டுள்ளது என்பதில் மறுப்பு இருக்க முடியாது.

ஆனால் பெண்ணின் ஆளுமை, மனிதம் என்பவை ஆண்மைக்கும் — பெண்மைக்கும் அப்பாற்பட்டது என்கின்ற கருத்து, ஆண்மை என்ற ஒன்றும் பெண்மை என்ற ஒன்றும் இருப்பதாக அல்லவா கூறப்படுகின்றது. இது உடற்கூறு நிர்ணயிப்பதில்லை என்கின்ற கருத்து மேலும் உடற்கூறில் ஏதோ ஒன்று இருப்பதாக அர்த்தம் கொடுக்கின்றது. பாலியல் அளவுகோளால் தீர்மானிக்க முடியாது என்கின்ற கருத்து ஏதோ ஒன்று பாலியலில் இருக்கின்றது என்கின்ற அர்த்தத்தையும் கொடுக்கின்றது. அதுவே ஆணாதிக்கமாகும்.

பெண்களின் ஆற்றல், மனிதம் ஆகியவற்றை இன விடுதலைப் போராட்டத்தில் வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால் அது ஆணாதிக்கத்துக்கு எதிராக, சாதியத்துக்கு எதிராக, சுரண்டலுக்கு எதிராகத் தனது ஆளுமையை,





மனிதத்தை வெளிப்படுத்தியதில்லை என்பதையும், புலிகளின் அரசியல் அதை அனுமதிக்காது என்பதையும் எம் இனவிடுதலைப் போராட்டம் நடைமுறை ரீதியாக அம்பலமாக்குகின்றது.

இங்கு இப்போராட்டம் தேசியப் போராட்டமாக அல்லாது இனப் போராட்டமாகவும் இருக்கின்றது. தேசியப் போராட்டமானது பொருளாதாரம், மொழி, பண்பாடு, நிலத்தொடர் மீது தனது தேசியத்தை முதன்மைப்படுத்திப் போராட வேண்டும். விடுதலைப்புலிகளின் போராட்டம் நிலத்தொடர் மீது போராட்டத்தைத் தீவிரப்படுத்தியபோது, மொழியின் மேலடுக்குகள் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால் தேசியப் பொருளாதாரத்தை, பண்பாட்டைக் கட்டமைப்பதில் ஏகாதிபத்திய எதிர்ப்பை அவர்கள் கைக்கொள்ளவில்லை. **விடுதலைப்புலிகளின் பிரதேசத்தில் ஏகாதிபத்தியப் பொருளாதார ஊடுருவலும், பண்பாட்டு ஊடுருவலும் அனுமதிக்கப்படுகின்றது.** இதனால் போராட்டம் சிங்கள இன ஆட்சியாளரிடம் இருந்து விடுதலை என்ற எல்லைக்குள், இன விடுதலைப் போராட்டமாகி விடுகின்றது. இன விடுதலைப் போராட்டம் ஆணாதிக்கத்தை ஒழிக்காது. தேசிய விடுதலைப் போராட்டம் பெண்களின் நலன்களை உயர்த்தும். தேசத்தின் நலன் முழுக்க முழுக்க சொந்தப் பலத்தைச் சார்ந்து போராடும் போதே, அப்போராட்டம் இன விடுதலையில் இருந்து வேறுபட்டுத் தேசிய விடுதலைப் போராட்டமாக வளர்ச்சிபெறும். இது தான் பெண்களின் பிரச்சனையை நனவு பூர்வமாக முன்னெடுக்கும்.

ஆண்மையும், பெண்மையும், பாலியல் அளவு கோலும் எதை நிர்ணயிக்கின்றது? ஆணின் பாலியல் மேலாண்மையை நிர்ணயிக்கின்றது. பெண்ணின் தாழ்ந்த தன்மையை அது கோருகின்றது. இதைத் தாண்டிப் பெண் சமுதாயப் பிரச்சினையில் ஆற்றலுடன் போராட முடியும் என்ற கருத்தைப் பல்வேறு தேச மற்றும் இன விடுதலைப் போராட்டமும், பெண்ணின் உழைப்பாற்றலும் வெளிப்படுத்தி உள்ளதை, விடுதலைப்புலிகள் மீள நடைமுறை ரீதியாகப் பெண்களை தம் போராட்டத்தில் பயன்படுத்துகின்றனர் அவ்வளவே. இதைத் தாண்டி ஆணாதிக்கம் ஒழிந்துவிடாது.

உலகப் புகழ் பெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சி கி.பி.1789-இல், நடந்த போது, அதில் பெண்களின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது. புரட்சிக்குப் பின் அந்தப் புரட்சியில் பங்கு பெற்ற **ஒலிம்பி டி ஜோர்ச்** என்பவர் (OLYMPE DE GOUGES) பெண்களின் உரிமையைக் கோரிய போது கி.பி. 1792-இல், படுகொலை செய்யப்பட்டார். புரட்சியின் முற்போக்கான பங்கு புரட்சிக்குப் பின்னால் மறுத்து படுகொலை செய்யப்படுவதைக் காட்டுகின்றது. இது புரட்சியின் ஊடேயும், புரட்சியின் பின்பும் நிகழ்வது உலகளவில் தொடர்ச்சியாக நிகழ்கின்றது. தியாகங்களும், பங்களிப்புகளையும் சுரண்டும் ஆணாதிக்க அமைப்பு சார்ந்து கொச்சைப்படுத்தி விடுவது நிகழ்ந்து விடுகின்றன.

பெண் விடுதலைப் புலிகள் இன விடுதலையில் காட்டும் தீரம் யுத்தத்தில் ஆட்பலத்தையும், வெற்றியையும் பெற்றுக் கொடுப்பதற்கு அப்பால், தனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சொந்த விடுதலையை நினைத்துப் பார்க்க கூட முடியாது. இந்த இடத்தில் **விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின்** கூற்று ஒன்றைப் பார்ப்போம்.

**"எமது வேதாந்தங்களும், மதச் சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக் காலம் தொட்டே பெண் அடிமைத்துவத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்று பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கின்றது. அவர்களது வாழ்க்கையைச் சிதைத்து வருகின்றது."**[29] இக்கூற்றை புலிகளின் தலைவர் குறிப்பிடும் போது, அதன் உள்ளடக்கத்தை அவ்வமைப்பு என்றைக்கும் ஏற்றுக்கொண்டதில்லை. மூச்சுக்கு மூச்சு தலைவரின் வழிகாட்டல் பற்றி கூறும் புலிகள், தலைவரின் இந்தக் கூற்றைச் சரியான முறையில் முன்னெடுத்து பிரச்சார உத்தியாக, விளக்கமாக மக்களுக்குள் எடுத்துச் சென்று இருந்தால், இதன் விளைவு சமூக ரீதியாக வேறுபட்டிருக்கும். ஆனால் தலைவரின் இக்கூற்றை எந்தத் தளத்திலும் அரசியல்படுத்தியதைக் காண முடியாது.

மாறாக இதற்கு எதிராக இதன் பாதையில் விடுதலைப்புலிகள் தம்மை ஒழுங்கமைப்பதையே காணமுடியும். இங்கு இக்கூற்றுகள் விடுதலைப் புலிகளுக்குள்ளும், அது சார்ந்த சமூகத்துக்குள்ளும் வெறும் கோஷமாக, மேற்கோளாக நடைமுறை எதார்த்தத்துக்குப் புறம்பாக இருப்பது கண்கூடு. தலைவரின் இந்த மேற்கோள் உள்ளடக்கத்தை விடுதலைப்புலிகளுக்கு வெளியில் அரசியல் மையப்படுத்த, முன்னெடுக்க, சமுதாயமயமாக்க முனையும் போது, அதை விடுதலைப்புலிகளுக்கு எதிரானதாகக் காண்பதும், அதற்கு எதிராக விடுதலைப்புலிகளின் வன்முறை வெளிப்படுவதுமே எதார்த்தமாகும். இந்த மேற்கோளில் எந்தக் கட்டத்திலும் தனிச்சொத்துரிமை அமைப்புதான், ஆணாதிக்கத்தின் தோற்றுவாய் என்பதைக் கவனமாகத் தவிர்த்து விடப்பட்டுள்ளது. இதையே, இன்றைய பாட்டாளி வர்க்கமல்லாத எல்லாப் பெண்ணியல்வாதிகளும், பொதுவாகத் தனிச்சொத்துரிமை அமைப்பு ஆணாதிக்கத்தின் உள்ளடக்கமாக இருப்பதைக் காண்பதைத் தவிர்த்தே, ஆணாதிக்கம் பற்றி பேசுகின்றனர்.

ஆணாதிக்க ஒழிப்பு பெண் அடிமைத்தனத்தைத் தோற்றுவித்தத் தனிச்சொத்துரிமை அமைப்பைத் தகர்ப்பதில் சார்ந்துள்ளது. அது வேதாந்தங்களும், மதச் சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்கள் என்று அனைத்துச் சமூகப் பண்பாட்டுத் தளங்கள் மீதும் அரசியல் மையப்படுத்திய புரட்சியாக வேண்டும். இது இல்லாத வரை ஆணாதிக்கம் ஒழியாது. அதுவரை பெண் விடுதலை என்பது கற்பனையாகவே இருக்கும். விடுதலைப்புலிகளின் இன விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்கு பெறல், தற்காப்பில் பங்கு பெறல் என்ற முற்போக்கான பங்காற்றலைத் தாண்டி, ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை அமைப்பைப் பாதுகாத்தலில் பிற்போக்கான பங்காற்ற வகிக்கின்றது.





# 10. பொழுது போக்கு ஊடகங்களின் வழியில் ஆணாதிக்கம்

**பொ**ழுது போக்கு ஊடாகப் பண்பாட்டுக் கலாச்சாரத் தாக்குதல் சமுதாயத்தின் அனைத்துத் தளத்திலும் இன்று வேகமான தாக்குதலை நடத்துகின்றது. இது உலகளாவிய ஒரு பொழுது போக்கு பண்பாடு, கலாச்சாரம் என்ற எல்லையை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் எகிறிக் குதித்தோடும் போது, கண்மண் தெரியாத சீரழிவைச் சமுதாயம் முன் எப்போதையும் விட சந்திப்பது எதார்த்தமாகியுள்ளது. இதில் பெண்ணின் நிலை என்பது நுகர்வுப் பண்பாட்டில் கீழ்நிலைக்குத் தரம் தாழ்த்தப்பட்டுச் சீரழிக்கப்படுகின்றாள்.

அண்மையில், ஜெர்மனியில் செய்த ஆய்வில் 30 இலட்சம் பேர் தமது வாசிக்கும் ஆற்றலையும், எழுதும் ஆற்றலையும் இழந்துபோனார்கள். இது மேலும் அதிகரித்துச் செல்லுகின்றது. தொலைக்காட்சி முதல் அனைத்து மின்னணுவியல் உபகரணங்கள் சமூக வடிவமாகி, மனிதனை இயந்திரப் பார்வையாளனாக மாற்றி, அவனின் சுயஆற்றலை அழிப்பதனால் அடிப்படையான சிந்தனை, வாசிப்பு, எழுத்தாற்றலை இழந்து போகின்றான். உழைப்பு ஆற்றலை இயந்திரத்துக்கு அடிமையாக்கிய மனிதன், தனது சிந்தனைத் திறனையும் இழக்கின்றான்.

இத்தாலியில் செய்த ஆய்வின்படி 80 சதவீதமானோர் புத்தகங்களைப் படிப்பது அவசியமற்ற முட்டாள்த்தனமானது என்று கருதுகின்றனர். புத்தகங்கள் உணர்ச்சியற்றவை என்றும், மனித உறவுகளை ஏற்படுத்த தகுதியற்றது என்றும் கருதுகின்றனர். இது வயது போனவர்களின் வேலையென்றும், நேரத்தை வீணாக்குவது என்றும் கருதி தொலைக்காட்சி, திரைப்படம் (Cinema) போன்ற ஊடகங்களையே சார்ந்து காலத்தைக் கழிக்கின்றனர் என்று **ரிபூப்ளிகா** என்ற பத்திரிக்கைச் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆபத்தான சமூகக் கண்ணோட்டம் மனித வளர்ச்சியின் வீழ்ச்சிக்கு வித்திடுகின்றது. அறிவியல் பூர்வமான சமூகத் தேவையை வாசிப்பு ஏற்படுத்தும். ஆனால் மனித ஆற்றலின் எழுதுதல், வாசித்தல், சிந்தித்தல், வெளிப்படுத்தல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆகிய ஆற்றலை இழிந்து, இயந்திர மனிதனாக மாறி உணர்ச்சிகளை இழந்து போகும் ஜடமாக மாற்றியமைக்கின்றது உலகமயமாதல் பண்பாடு.

இந்தச் சீரழிவு வேகத்தில், "வாரந்தோறும் 10 கோடி மக்கள் டிஸ்னி திரைப்படங்களைப் பார்க்கிறார்கள். 80 கோடி மக்கள் டிஸ்னி புத்தங்களையும், சஞ்சிகைகளையும் வாசிக்கிறார்கள். 5 கோடி மக்கள் டிஸ்னி இசைத் தட்டுக்கள் அல்லது நடன இசையைக் கேட்கிறார்கள். 15 கோடி மக்கள் டிஸ்னி காமிக் வெளியீடுகளைப் கண்டு களிக்கிறார்கள்."[30] இது ஒரு பன்னாட்டு **வால்ட் டிஸ்னி** நிறுவனம், கி.பி. 1985-இல், வெளியிட்டுக் கணக்கே இப்படி எனின் உலகளாவிய ரீதியில் கற்பனைக்கு எட்டமுடியாத வகையில் இவை அழுக்காக மனிதனை அப்பியுள்ளதை இது நிறுவுகின்றது. மெச்சிக்கோ பத்திரிக்கை **எல் யூனிவர்சல்** ஆய்வு ஒன்றின்படி 6 வயது முதல் 12 வயது குழந்தைகள் வாரம் ஒன்றுக்குத் தொலைக்காட்சி பார்க்கும் நேரம் 38 மணி நேரமாக இருக்க, பாடசாலை வகுப்பறையில் 23 மணிநேரங்களையே செலவு செய்வதாகக் கண்டறிந்துள்ளது.

இத்தாலியில் 21,000 குடும்பத்தில் நடத்தப்பட்ட ஆய்வில், மூன்றில் இருந்து பத்து வயதுக்குட்பட்ட 40 லட்சம் குழந்தைகள் தொலைக்காட்சியின் முன் 2.5 மணி நேரம் மெய்மறந்து இருப்பதாகவும், ஆறு முதல் எட்டு மாதக் குழந்தைகளும் இந்தப் பழக்கத்துக்குள்ளாகியிருப்பதை அம்பலப்படுத்துகின்றது.[31] இந்த வகையில் மேலும் கி.பி. 1970-இல், அமெரிக்கச் சிறுவர் சிறுமிகள் தங்களுடைய 14 வயதை அடைவதற்குள் 11,000 கொலைகளைத் திரைப்படத்தில் பார்க்கின்றனர். பிரிட்டனில் ஒரு மணிநேரத்தில் நான்கு வன்முறை காட்சிகளைத் தொலைக்காட்சியில் பார்க்கின்றனர். நடுஇரவில் தொலைக்காட்சியில் மணிக்கு 76 பாலுறவு (Sex) காட்சிகளைப் பார்க்கின்றனர். இந்தப் பண்பாட்டு விளைவுதான் மனிதனின் பொழுது போக்கு பண்பாடாக மாற்றம் காண்கின்றது. இதுவே பின்னால் சமுதாயப் பண்பாட்டுக் கலாச்சாரமாக, சுதந்திரமாக, நவீனப் பாலியலாக உருவாகின்றது. கற்பனை விஞ்ஞானக் கதைகள் எதார்த்தக் கண்டுபிடிப்புகளாக மாறுவதுபோல், பாலியல் வக்கிரங்கள் எதார்த்த வாழ்வின் ஆதாரமாக மாறுகின்றது. ஒவ்வொரு நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்பும் இயற்கையைச் சிதைத்து உபரியைத் திரட்டுவது போல், ஒவ்வொரு பாலியல் வக்கிரமும் சமூக விபச்சாரத்தை ஏற்படுத்துகிறது.

ஒரு வாரத்துக்கு 27 மணி நேரம் தொலைக்காட்சி பார்க்கின்ற குழந்தைகளிடையே அமெரிக்க உளவியல் அமைப்பு செய்த ஆய்வில், மூன்று முதல் 12 வயதிற்கிடையில் 8,000 கொலைகளைப் பார்ப்பதாகவும், ஒரு இலட்சம் வன்முறைகளைக் காண்பதாகவும் அறிக்கை கூறுகின்றது. இவர்கள் வளர்கின்றபோது, சமூக வன்முறை மற்றும் வீட்டு வன்முறையின் பொதுப்பண்பாக மாறி அது பெண்கள் மீதானதாகவும் பரிணாமிக்கின்றது. மற்றோர் ஆய்வை 10 முதல் 16 வயதுடைய 750 குழந்தைகளிடம் செய்த போது, பத்தில் ஆறு பேர் மிக இளம்வயதில் பாலியல் உறவு கொள்ள தொலைக்காட்சி





தூண்டியதாகக் கூறியுள்ளனர். அதாவது தொலைக்காட்சிகளின் ஊடாகச் செல்வாக்கு செலுத்திப் பாலியல், பாலினம் பற்றிய வக்கிரத்தை இளம் குழந்தைகளுக்கு ஊட்டுவதன் மூலம், பண்பாட்டு ரீதியாக ஆணாதிக்கம் வக்கிரம் அடைகின்றது.

**வாஷிங்டன் போஸ்ட்** வெளியிட்ட தகவல் ஒன்றில், தொலைக்காட்சி வன்முறைக் காட்சிகளில், 73 சதவீதம் தனிநபர் வன்முறைகளை வெற்றிகரமான ஒரு நடத்தையாகக் காட்சிப்படுத்துகின்றது. இதேபோல் பிரிட்டீஸ் நிகழ்ச்சிகள் அதிகமான பாலியல் காட்சியை உள்ளடக்கி உள்ளதுடன், 41 சதவீதமான பெண்கள் இதை ஏற்றுக் கொள்கின்றனர். 75 சதவீதமான இளைஞர்கள் இதை ஏற்றுக் கொள்கின்றனர்.[31]

இங்கு பெண்களைக் கவர்ச்சியாகக் காட்டுவது, நிர்வாணமாக மாற்றுவது, அரைகுறை உடையில் காட்சிப்படுத்துவது, பெண்ணின் உறுப்புகளை முதன்மைப்படுத்துவது, காதலைக் கொச்சையாக்குவது, பாலியலை பண்டமாக்குவது, விளம்பரத்தில் பெண்ணின் பாலியல் உறுப்பைப் பொருளுக்கு ஒப்பீடு ஆக்குவது, பெண்ணின் மேல் ஆவலைத் தூண்டுவது, அழகை முதன்மைப் படுத்துவது, அன்பைப் பண்டமாற்றத்தில் குறுக்குவது, பாலியலை டிஸ்கோ வழியில் வக்கிரப்படுத்துவது.... என்று எல்லை இல்லாத வகையில் பெண் நுகர்வுச் சந்தையில் பொருளாக்கப்பட்டு, ஆணாதிக்க நுகர்வால் சிதைக்கப்பட்டு இரசிக்கப்படுகின்றாள். இந்த வகையில்தான் உலகமயமாதல் பெண்ணை அடையாளப்படுத்துகின்றது. இந்த வகையில்தான் உலகச்சந்தை விபச்சார தளத்தில் காலை அகற்றுகின்றது. **இங்கு பெண் அந்தச் சந்தையின் கவர்ச்சி காட்டும் மூலதனமாகும். இதை எதிர்த்துப் போராடாத பெண்ணியம் ஆணாதிக்கமாகும்.**

பொதுவாகச் சிறு பத்திரிக்கைகள் முதல் பெரிய பத்திரிக்கைகள் வரை தொலைக்காட்சி, திரைப்படம், நடனம், சிறு நாவல் முதல் பெரிய நாவல்கள் மர்மக் கதைகள், கவிதைகள், சிறு உரைகள், ஓவியங்கள், பாடல்கள், பெண்ணிய எழுத்துகள், பாலியல் நூல்கள் என எங்கும், எதிலும் பெண் பாலியல் பண்டமாக விவரிக்கப்படுவதுடன், ஒரு பாலியல் பொருளாக வருணிக்கப்படுகின்றாள். அதாவது பெண்ணின் மனிதத்தன்மை பாலியல் அங்கமாகவும் இதன் ஊடாக இரசிக்க, நுகர, வக்கிரத்தை பிரதிபலிக்க, வன்முறைக்கு உள்ளாகக் கூடி நுகரவும், கழிந்து விடக் கூடிய ஒரு பொருள் என்பதைத் தாண்டி மனிதத்துவத்தை மறுத்து உலகின் எல்லா இடமும் இதுவாகிவிட்டது. இதை கேள்வி கேட்காத வேரறுக்காத போராட்டம் பெண்ணை விடுவிப்பதில்லை.

மேற்கில் ஜனரஞ்சகமாக எழுதும் **கொரார்டு டி வில்லியர்ஸ்** இது பற்றி எப்படி நியாயப்படுத்துகின்றார் எனப் பார்ப்போம். **"வாசகனை மகிழ்விப்பதும், அவன் சிறிது நேரம் ஒரு கனவு உலகில் சஞ்சரிக்க**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**உதவுவதுமே எனது நோக்கம்.** இதைத் தவிர நான் வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை. இதில் நான் பெரும் வெற்றி பெற்றுள்ளேன் என்றுதான் சொல்ல வேண்டும். நான் ஏராளமாகச் சம்பாதிக்கிறேன். இது என் வெற்றியின் முதல் அறிகுறி. இரசிகன் எதை விரும்புகின்றானோ அதையே நான் அவனுக்கு வழங்குகிறேன். மக்கள் ஒரு கனவின் பின்னால் ஓடுகிறார்கள். போதை மருந்துப் பழக்கம் என்றால் என்ன என்று நீங்கள் என்றேனும் யோசித்துப் பார்த்திருக்கின்றீர்களா? போதைப் பொருளுக்கு அடிமையானவனும் ஒரு கனவை நாடியே செல்கிறான். சலிப்பும், விரோதமும், குரோதமும் நிறைந்த சுற்றுச் சூழலிலிருந்து தப்பித்துக் கொள்ள முயல்கிறான் என்று கருதுகிறேன். தொழில் வகையில் நான் ஒரு சேர்மானக் குறிப்பை வைத்துள்ளேள். சமையலில் பயன்படுத்துகின்றோமே அத்தகைய குறிப்பு அது. வெற்றிக்கு அது உத்தரவாதம் அளிக்கிறது. இந்தக் குறிப்பில் முதல் கலவைப் பொருள் வன்முறை. இரண்டாவது கலவைப் பொருள் காமவெறியிலிருந்து ஒரு சிட்டிகை. மூன்றாவது கலவைப் பொருள் சிற்றின்ப உலகிலிருந்து சில நறுமணச் சாமான்கள். இந்தச் சேர்மானங்களிலிருந்து உருவாகும் தயாரிப்பைத்தான் ஜனங்கள் என்னிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள்.''[30]

மக்களைப் போதையில், கனவில் முடமாக்குவதன் மூலம் மூலதனம் தன்னைத்தான் மெச்சுகின்றதன் வெளிப்பாடுதான் மேலுள்ளது. மக்கள் மந்தைக் கூட்டமாக இருக்க சில மேய்ப்பாளர்கள் உலகத்தை ஆளவும், நுகரவும் கொடுக்கும் போதையுடன் கூடிய இலக்கியக் கழிசடைகளையே வெற்றியின் பிரகடனமாக்குகின்றனர். மக்கள் இப்படி இருக்கும் வரை இவைதான் உலகின் ஜனநாயகமாகவும், பண்பாடாகவும், கலாச்சாரமாகவும் நீடிப்பது தவிர்க்க முடியாதது. உலகமயமாதல் தனது ஆதிக்கப் பொருளாதாரச் சூறையாடலைத் தீவிரமாக்க சகல பண்பாட்டுக் கலாச்சாரப் பொழுது போக்கு அம்சங்களும் இந்தவகையில் சீரழிவுக்குள் இட்டுச் சென்றுதான், மனித எதிர்ப்புகளை முடமாக்கி முடக்க முடிகின்றது. தம்மை எழுத்தாளர் என்று வேஷம் போட்டு ஆடும் பல எழுத்தாளர்கள் எழுத்து சுதந்திரத்தின் பின் ஆற்றிவரும் கேவலங்கள், மனிதனைக் கீழ்நிலை பாத்திரத்துக்குத் தரம் தாழ்த்தி அதில் குளிர் காய்வதே ஆகும். மறுபுறம் இந்தமாதிரி எழுதுபவர்களைப் பாதுகாத்தும், எழுத்தாளர்களை வர்க்க எல்லைக்குள் பார்க்க மறுத்தும், அவர்கள் மீது பாட்டாளிவர்க்கம் சர்வாதிகாரத்தைக் கையாள்வதை எதிர்த்தும், தம்மையும் தமது வர்க்கத்தையும் சீரழிவுக்குப் பின்னால் குளிர் காய்ந்தபடி முண்டு கொடுக்கின்றனர்.

**பெண்ணும், பெண்ணின் பாலியல் உறுப்பும், அற்பக் காமவெறியும் இல்லை என்றால் 99.99 சதவீதமான மக்கள் தொடர்பு சாதனங்கள் உயிர் வாழ முடியாது. தம்மை இந்தச் சமுதாயத்தின் முன்னணி எழுத்தாளர், முன்னணி கலைஞர்கள் என்றுகூறிப் பிழைக்கவும் முடியாது.** அந்தளவுக்குப் பெண்ணைப் பற்றிய வக்கிர (இது





சுதந்திரத்தின் எழுத்தாகவும், இந்தச் சமுதாயத்தின் ஆதாரமாகவும் உள்ளது.) எழுத்தாக, அதில் ஆணாதிக்கக் கொப்பளங்களில்தான் அசிங்கப்பட்டு உள்ளது.

**மனிதனுக்கு இடையில் வன்முறையும், காமவெறியும், வக்கிர இன்பமும் தான் இந்தச் சமுதாயத்தில் எழுத்தின் சுதந்திரம் ஆகும்.** மனிதனுக்கு இடையிலான வர்க்க வன்முறையை மறுத்து இட்டுக்கட்டப்பட்டுக் காட்டப்படும் வன்முறைகள், அதை நியாயப்படுத்த கவர்ச்சியான பெண், பெண்ணின் உறுப்பு, பெண்ணின் புணர்ச்சி எல்லாம் ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமையைப் பாதுகாக்க, வளர்த்து எடுக்க, பறித்தெடுக்க, அடக்க எனப் பல விடயங்கள் உலகமயமாதலின் மூலதன வெற்றிக்காக அரங்கேற்றப்படுகின்றது. கதாநாயகர்கள் - வில்லன் உறவு என்பது எப்போதும் சுரண்டும் வர்க்கக் கதாநாயகனின் மனிதாபிமானம் மீதும், அவனின் சட்டப் பாதுகாப்பின் மீதும், அதன் நீதியின் மீதும் கட்டியமைக்கப்படுகின்றது. இங்கு நீதி, சட்டம், மனிதாபிமானம் போன்றன மூலதன ஆதிக்க ஆணாதிக்கக் கனவுகளின் பின்னால் சமுதாயம் சுண்டியிழுக்கப்படுகின்றது.

பெண்ணை வீரத்தில் இருந்து பலவீனம் வரை காட்டும் போது, வீரம் பாலியலின் வக்கிரத்திலும், பலவீனம் பாலியல் பதுமையிலும் அரங்கேற்றப்படுகின்றது. இந்த இரு எல்லைக்குள்ளும் தான் அனைத்துப் பொழுதுபோக்கு அம்சங்களும் உலகமயமாகின்றது. இது வேறுபட்ட தலைமுறை, பொருளாதார அமைப்புக்கு ஏற்ப ஆணாதிக்க இரசிப்பு வேறுபட்டு எல்லையாகின்றது. இது காலத்துக்குக் காலம் மாறியே வந்துள்ளது.

பழைய ரோமன் ஆட்சிகளில் உயர்மட்ட ஆண்கள் - பெண்கள் வெளிப்படுத்திய வக்கிரங்களை இன்று மனித நாகரிகம் அவமானமாகப் பார்க்கின்றது. ஆனால் அதை வேறு வடிவில் இரசிக்கின்றது. ரோமன் காலத்தில், "விளையாட்டு அரங்கங்களில் மிருகங்களைப் புணரச் செய்தும், மனிதர்களைக் கலவி பண்ண வைத்தும், அதை ஆண்களும், பெண்களும் ஒன்றாக அமர்ந்து கண்டு - களித்து மகிழ்ந்தார்கள். வகை வகையான உணவுத் தயாரிப்புகளைத் தின்று கொண்டிருக்கின்ற சுவை இன்பத்தை நீண்ட நேரம் அனுபவித்துக் களிப்பதற்காக, வயிறு நிறைந்துவிட்ட போதிலும், வலுக்கட்டாயமாக வாந்தி எடுத்து விட்டு, மீண்டும் வந்து விருந்து மேஜை முன் அமர்ந்து உண்பதில் முனைந்தார்கள். இதற்கு வசதியாக ரோமாபுரி மாளிகைகளில் விருந்து மண்டபங்களை ஒட்டி, வாந்தி எடுப்பதற்கென்றே தனித் தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன. காம உறவுகளில் வக்கிர முறைகளை அனுஷ்டிப்பதில் உற்சாகம் கொண்டிருந்தார்கள்.''[30]

இந்த அளவுக்கு மனித நாகரிகம் ஒருபுறம் உணவுக்கு வழியின்றி வாழவும், மற்றொரு புறத்தில் சுரண்டவும் உருவாக்கிய ஜனநாயக உலகில், ஆடம்பரப் பண்பாட்டுச் சீரழிவு, பொழுது போக்குகள் மக்களைக் கசக்கிப் பிழிந்து திரட்டிய மூலதனத் திரட்சியிலேயே நடத்தமுடிந்தது. மிருகம் முதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனிதன் ஈறாகப் பாலியல் தேவையைக் கட்டுப்படுத்தி, அடக்கிப் பின் அதை வக்கிரமாக்கிப் புணரவிட்டு இரசித்த பண்பாடுகள் முடிவுக்கு வந்துவிடவில்லை, இன்றும் தொடர்வது எதார்த்தமாக உள்ளது. மாறாக அவை மேலும் மேலும் நவீன வகையில் மேம்படுத்தப்பட்டன. ஆண் பெண் இருவரும் அவரவர் இரசனைக்கு ஏற்ப மாற்றப்பட்டுவிட்டது.

ஆண்கள் இருக்கும் இடத்தில் பெண் ஆபாசக்கலை நடனங்கள் ஆண்களுக்கு என்றும், பெண்கள் இருக்கும் இடத்தில் ஆண் ஆபாசக் கலை நடனங்கள் பெண்களுக்கு என்றும் அமர்களப்படுத்தப்படுகிறது. இதைப் பெண் அனுபவிக்கும் சுதந்திரமாகவும், கோரிக்கையாகவும் நியாயப்படுத்திப் பெண்ணியல் அமைப்புகள் தளம் போடுகின்றனர். இந்த மாதிரி சுதந்திரமான பெண்களுக்காக நடத்தப்படும் ஆண் நடனச் சாலை முதலாளி ஒருவரின் கூற்றைப் பார்ப்போம். "பெண்கள் ஏன் இங்கே வருகிறார்கள் என்பதற்கு ஏகப்பட்ட காரணங்கள் உள்ளன. அது இயல்புக்கு மாறானது என நான் எண்ணவில்லை. இங்கே இருக்கின்ற பெண்களில் எவருக்கேனும் ஏதோ ஒருவிதக் கோளாறு ஏற்பட்டுள்ளது என்று நினைக்க மாட்டேன். இதில் ஒன்றிரண்டு விபரீதப் பிறவிகள் இருக்கலாம். ஆனால், முக்கியமாக, இவர்கள் சந்தோஷமாய் பொழுது போக்கவே இங்கு வருகிறார்கள். சிரித்து மகிழலாம் என்பதற்காகவே இங்கே வருகிற சில மூதாட்டிகளை எங்களுக்குத் தெரியும். அவர்கள் 65 வயதும் அதற்கு அதிகமான வயதும் உடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வயதானவர்கள் வழக்கமாக அவர்களுடைய பேரன்மார்களைப் போன்ற இளம் வயதுடைய இந்தப் பையன்களோடு சரசமாடுவதில் அவர்கள் தீங்கில்லாத ஓர் உணர்ச்சிப் பரவசத்தை அடைவதாகத் தோன்றுகின்றது."[30]

இது போல் எதிர்த் தரப்பு ஆண்களைக் கவர பெண் நிலையங்களும் வக்கிரத்தைக் கொட்டுகின்றன. பாலியல் வக்கிரக் கலை ஆட்டங்கள், நிர்வாண ஆட்டங்கள் என்று எல்லையில்லாத போக்கில் உலகமயமாதல் ஆண் - பெண் வேறுபாடு இன்றி தனிமையிலும், வக்கிரத்திலும் பொதுமைப்படுத்தியுள்ளது. பகிரங்கமான உடலுறவுக் காட்சிகள், வீடியோ, தொலைக் காட்சி, திரைப்படம், விசேட மண்டபங்கள் என பலவாகக் குவிந்து போயுள்ளது. ஆண் - பெண் புணர்ச்சியை இரசிக்கவும், வக்கிரப்படுத்தவும் வக்கிரப்படுத்தியதைக் காட்சிப்படுத்தியதன் மூலம் புணர்ச்சி கூட நுகர்வுப் பண்டமாக்கப்பட்டுவிட்டது. இது குடும்பத்தில் புணர்ச்சி மீதான அதிருப்திக்கு வித்திட்டுள்ளது. நுகர்வும், வக்கிரமும் இணைந்து இரசிக்கப்பட்ட பொழுதுபோக்கு என்பது, போலித்தனமான விளம்பரத் தளத்தில் மக்கள் தொடர்பு சாதனங்கள் மக்களின் பண்பாடாக, கலாச்சாரமாகப் புகுத்தியுள்ளது. ஆனால் எதார்த்தத்தில் இவை விளம்பரத்துக்கே உரிய ஏமாற்றும் பொய்மை ஆகும். இன்று எதார்த்தமாகாமல் போகின்ற போது பாலியல் திருப்தியின்மை, அவநம்பிக்கை போன்றன உளவியல் தாக்குதலுக்கு உள்ளாகி மேலும் மேலும் ஆண் - பெண் பிளவைச் சிதைத்து உருவாக்குகின்றது. இதற்கு மாற்றாகப் பாலியல் வக்கிரம் புணர்ச்சி வடிவில் பொழுது போக்காக, பண்பாடாக, கலாச்சாரமாக உருப்பெறுகின்றது.





இந்தியாவில் பாடசாலையில் இவ்வக்கிரங்கள் வெதும்பி நிறைந்து வழிகிறது. இரவு நிகழ்ச்சிகளின் போது திடீர் என மின்விளக்கை (light) அணைத்து (off) பெண்கள் மீது தமது பாலியல் வக்கிரத்தை ஆண்கள் செய்வது அல்லது பெண்கள் பாடசாலை எனின் ஆண்கள் மீது பெண்கள் செய்வது என புழுக்கத் தொடங்கியுள்ளது. இது பற்றிய ஆதாரப்பூர்வமான பதிவுகள் உள்ளன. இந்த அத்துமீறிய பாலியல் வன்முறைக்குக் கடிவாளத்தை உலகமயமாகும் பொதுப் பண்பாட்டுக் கலாச்சாரம் கொடுக்கின்றது. இவை பெற்றோர் முதல் பொலிஸ் மந்திரி ஈறாகப் பெண்கள் முதல் ஆண்கள் வரை பலாத்காரமாக அல்லது அதிகாரம், பணம், செல்வாக்கு ஊடாக மறுப்பு இன்றி நிர்ப்பந்தித்து அனுபவிப்பது, நாட்டுக்கு நாடு வேறுபட்டவகையில் ஒரேமாதிரி நிகழ்வது தொடர்கின்றது. ஒரு தலைவர் இறந்தால் மதக் கலவரம், சாதிக் கலவரம், ஓர் அதிகாரியின் விசாரணை, ஆசிரியரின் குருத் தன்மை, பெற்றோரின் உரிமை, மேல் அதிகாரி, அரசியல் வாதியின் செல்வாக்கு என எங்கும், எதிலும் பெண் மீதான பாலியல் வக்கிர வன்முறை பொழுது போக்காக, பண்பாடாக, கலாச்சாரமாக மாறிவிட்டது. இது இன்று பெண்ணால் ஆண்கள் மீதும் நடத்துவது என்ற புதிய வடிவத்துக்கும் சிதைந்துள்ளது. அத்துடன் ஓரினச் சேர்க்கை ஆண் - பெண் வேறுபாடின்றி இது பரந்த தளத்துக்கு விரிந்துள்ளது.

இவை எல்லாவற்றிலும் பொருளாதார அடிக்கட்டுமானம் மீது அதிக ஆளுமை செலுத்தியது திரைப்படங்கள் தான். திரைப்படப் பொழுதுபோக்குக் காட்சிகள் பல நியாயமான உலகில் எதார்த்தத்தில் மனிதப் பண்பாடாகி விடுகின்றது. உலகத்தை உலுக்கும் அளவுக்கு நடந்த பல நிகழ்ச்சிகள் திரைப்படம் கற்றுக் கொடுத்த போதும் பின்னால் அதைச் செய்த குற்றவாளிகள் திரைப்படம் மூலம் தான் என்பதை ஒத்துக் கொண்ட போதும், தயாரிப்பாளர்களைத் தண்டனைக்கு உள்ளாக்காத ஜனநாயகம் தான் உலகமயமாதலாகும்.

கி.பி. 1985-இல், 1,200 முதல் 1,300 கோடி முறைகள் மக்கள் வருடம் தோறும் திரைப்படத்துக்குச் செல்வதைப் புள்ளிவிபரம் காட்டியது. எந்தளவுக்குத் திரைப்படம் செல்வாக்குள்ள பொழுதுபோக்கு அம்சமாக மாறி, மனிதப் பண்பாட்டைத் தீர்மானிக்கின்றது என்பதை இது காட்டுகின்றது. இதை மேலும் ஆதாரமாகக் காண்போம்.

1985-இல், ஓர் ஆங்கிலேயனின் 70 வருட ஆயுளில் 12 வருடத்தைத் தொலைக்காட்சி பார்ப்பதில் செலவு செய்கின்றான். அமெரிக்கன் நாள் ஒன்றுக்கு 6.2 மணிநேரத்தைத் தொலைக்காட்சி பார்ப்பதில் செலவு செய்கின்றான். 95 சதவீதமான ஜப்பானியன் தினசரி தொலைக்காட்சி பார்க்கின்றான். பிரான்சில் 87.4 சதவீதம் பேர் தமது ஓய்வைத் தொலைக்காட்சி பார்ப்பதில் செலவு செய்கின்றார்கள். தொலைக்காட்சி, திரைப்படம் மனிதனின் உளவியல் பாதிப்பை ஏற்படுத்துவதில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதுவே பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பண்பாடுகளையும், கலாச்சாரங்களையும் உற்பத்தி செய்கின்றது. இது இருக்கும் பொருளாதார எல்லைக்குள் தன்னைத் தகவமைக்கின்றது. இந்தப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க சுதந்திரம், ஜனநாயகத்தின் பின் ஒளிந்து கொள்கின்றது. திரைப்படம் மனிதனின் நியாயத்தைப் பேசுவதற்கு எதிராகக் கற்பனைப் புனைவுகளை ஊடறுத்து மனிதனுக்குள் புகுத்துகின்றது. இது மனிதனின் சிந்தனைத் திறனை மழுங்கடிக்கின்றது, போதையாக்குகின்றது.

இந்தப் போதையில் விளையாட்டும் ஒரு முக்கிய பங்களிக்கின்றது. பிரான்சில் உள்ள முக்கிய தொலைக்காட்சிகள் ஐந்திலும் கி.பி. 1996-இல், விளையாட்டுக்கு ஒதுக்கிய நேரமே 2,504 (ஏறக்குறைய நூறு நாட்களைவிட அதிகம்) மணிநேரமாகும்.[32]

இந்தளவுக்கு விளையாட்டுக்குள் வாழ்க்கையை முடக்கி, பார்வையாளன் ஆக்கி, தொலைக்காட்சி முன் மனிதர்களை உட்கார வைத்து பொழுது போக்க வைக்கப்படுகின்றனர். பல தொடர் விளையாட்டுகளைப் பல கோடி செலவில் நடத்த, வாழ்க்கையை உட்கார்ந்து விளையாட்டில் பொழுதைக் கழிப்பவனின் பார்வையைச் சுரண்டி, விளையாடுபவர்கள் கோடீஸ்வரர்களாகவும், இலட்சாதிபதிகளாகவும் சம்பளப் பட்டியலை மாற்றி விளையாட்டு வியாபாரமாகி விட்டது. அத்துடன் இவ்விளையாட்டு என்பது விளம்பரம் என்ற வகையில் நுகர்வைத் தூண்டும் ஓர் இலகுவான ஊடகமாக மாறிவிட்டது. இந்த ஊடகங்களைப் பயன்படுத்தும் சுரண்டும் வர்க்கங்கள் இந்த விளையாட்டின் ஊடாகக் கோடி கோடியாக மூலதனத்தைச் சுருட்டுகின்றன.

பொழுதுபோக்கு என்பது இதற்கு வெளியிலும் உருவாகின்றது. பிரான்சில் 1.05 கோடி பேர் பொதுவான சமூக வேலையில் ஈடுபட, அதற்கான அமைப்புகளை உருவாக்கி அதில் இணைந்துள்ளனர். இது கடந்த இரண்டு வருடத்தில் 15 இலட்சம் பேர் அதிகரித்துள்ளனர். மாதம் 23 மணி நேரத்தை இதற்குச் செலவு செய்கின்றனர். கி.பி. 1990-ஐ விட இது இன்று மூன்று மணி நேரம் அதிகரித்துள்ளது.[33] (28.3.1999)

மேற்கில் சமூக அமைப்புகள் உதிர்த்தெழுவது வடிவமாக மாறிவிட்டது. இங்கு இந்தச் சமூக அமைப்புகள் என்பது பல பிற்போக்கு முதல் முற்போக்கு வரை நீண்டு காணப்படுகின்றது. படு பிற்போக்கான நிறவெறி அமைப்பு முதல் வர்க்க எதிர்ப்பு அமைப்புகள் வரை நீண்ட பலவடிவ அமைப்புகள் உருவாகுவதும், அதன் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதும் அதிகரிக்கின்றது. கூட்டுவாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட குடும்பத்தில் ஏற்பட்ட இடைவெளியும், பிளவும் தமது தனித்தன்மையின் தனித்துவத்தால் தனிமைப்பட்ட மனிதர்கள், தவிர்க்க முடியாமல் வெளியில் சமூக அமைப்பில் இணைவதும் புதிய சமூக அமைப்பைத் தொடங்குவதும் தவிர்க்க முடியாத நியதியாகின்றது. இவைகளில் வக்கிரத்தின் எல்லையில் இருந்து சமூக நோக்கம் வரை விரிந்து கிடக்கின்றது. ஆனால் பெரும்பாலானவை வெறும் பொழுதுபோக்குக்





கண்ணோட்டத்துடன் தமது தனிமையைத் தற்காலிகமாகத் தவிர்க்கவே கூடுகின்றனர். இந்தக் கூடுதலில் அதிகளவுக்குத் தனிச்சொத்துரிமையிலான சமூகக் கண்ணோட்டம், தனிப்பட்ட நலன் அதிகமாகப் புரையோடிப் போய் ஒரு பூர்சுவாத்தனத்தில் கௌரவமான பழகும்முறைகளே பொதுவாக இருக்கின்றது.

அடுத்து மேற்கில் பாடசாலை மாணவர்களின் பொழுதுபோக்கை ஆராய பிரான்சில் பாடசாலை விட்டு வீடு வந்த பின் 11-19 வயது மாணவ மாணவிகளின் பொழுது போக்கு என்ன என்பதை அட்டவணை-6-இல், பார்ப்போம்.[33] (13.2.1999)

அட்டவணை-6

| | |
|---|---|
| தொலைக்காட்சி பார்த்தல் | -72 சதவீதம் |
| பாடம் படித்தல் | -52 சதவீதம் |
| வீடியோ விளையாடுதல் | -23 சதவீதம் |

பொதுவாகத் தொலைக்காட்சி பார்த்தல் ஒரு பெரும் பொழுது போக்காகவே உள்ளது. இந்த நேரத்தில் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நிகழ்ச்சி என்பது இந்த வயதுள்ள சமூகத்தின் மேல்மட்ட மாணவர் மாணவிகளின் காதல் பற்றியதும், பாலியல் கிசுகிசுகளின் வக்கிர மொழிகளையும் உள்ளடக்கிய மேலும் அந்தக் கூட்டத்தின் நுகர்வுகள் எப்படி அரங்கேறுகின்றன? என்பதைக் காட்சிப்படுத்தி பொழுது போக்குகின்றனர். அமெரிக்கத் திரைப்படத்தால் நிரப்பப்படும் இளசுகளின் காட்சியில் பாலியல் ஒழுங்குகளை மீறியமுறையில், பாலியல் சேட்டைகளும் அதன் வக்கிரங்களும் காட்டப்பட்டு உளவியல் ரீதியாக அவர்கள் போல் (அதாவது நடிப்பவர்கள் போல்) பார்ப்பவர்கள் பொம்மைகள் ஆக்கப்படுகின்றனர்.

உலக அழகுராணிப் போட்டிக்குப் போனவர்களும், வெற்றிப் பெற்றவர்களும், தோல்வி அடைந்தவர்களும் ஆடை அவிழ்த்துப் போட்டு நடிக்க முடிந்தவர்களும், மொடலில் தன்னை அரைகுறையாகக் காட்ட முடிந்தவர்களும், விளையாட்டில் முன்னணியாகி மவுசு குறைந்தோர்களும் எனச் சமூகத்தின் இழி நடத்தைகள் எல்லாம், யார் யாரெல்லாம் பணத்துக்கு முன் எதையும் செய்ய துணிந்தார்களோ, அவர்களைக் கொண்டு நடத்தும் தொடர் கூத்தைத் தான் இந்த மாணவ மாணவியர் கூட்டம் கண்ணுற்று, பொழுது போக்கி இரசிக்கின்றனர். இந்தப் பொழுதுபோக்கு சமூகப் பண்பாக, கலாச்சாரமாகப் பின்னால் விருட்சமாகக் கிளம்புகின்றது.

அடுத்து காட்சிப்படுத்தப்படும் கார்ட்டூன்கள் (கேலிச்சித்திரங்கள்) பாலியல், ஆணாதிக்கம், நிறவாதம், ஆதிக்கவாதம், மதவாதம், வன்முறை, சுரண்டல் ஆதிக்கம், பணக்கார அழகியல் கவர்ச்சி.... எனச் சமூகத்தின் ஆதிக்கம் சார்ந்து எதிர்ப்புப் போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் திட்டமிட்டே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன் தள்ளப்படுகின்றது. வன்முறை, பாலியல் இதைவிட்டால் கார்ட்டூன் (கேலிச்சித்திரம்) கிடையாது.

இவ்வளவு வக்கிரத்தைக் கொட்டித் தீர்க்கவும், அதை எதார்த்தத்தில் செய்து பார்க்கவும் வீடியோ விளையாட்டுகள் பொழுது போக்கு அம்சத்தில் புகுந்து கொண்டது. இதில் வியட்நாம் மீதான தாக்குதலை நடத்துவது முதல் கம்யூனிஸ்டுகளை அழிப்பது, முஸ்லிம் மதத் தீவிரவாதத்தை ஒழிப்பது என, நேரடியான வீடியோ விளையாட்டுத் தாக்குதல்கள் முதல் சகல வீடியோ விளையாட்டுகளும் மாணவர்களின் பொழுதுபோக்கின் பின் அரசியலாகின்றது.

பெரியவர்கள் உலகமயமாதல் ஜனநாயகத்தின் பின் ஏகாதிபத்திய உலக ஒழுங்குக்குள் எதைச் செய்கின்றனரோ, அதைச் சிறுவர்கள் விளையாட்டாகச் செய்கின்றனர். இதில் பெண்கள் மீதான ஆடை உரிவுக் காட்சி, நிர்வாணக் கலைக் காட்சி, ஆபாசக் கலை நடனங்கள், பெண்ணைக் கற்பழிப்பது, பெண்ணின் உறுப்புகளை விரும்பியவாறு பயன்படுத்துவது, வக்கரித்த வகையில் கையாள்வது என வீடியோ விளையாட்டுகள் குவிந்து, அதுவே சமுதாயப் பண்பாடாகவும், கலாச்சாரமாகவும் ஆகிவிட்டது. இவை எல்லாம் பொழுது போக்கில் விளையாடியே கற்றுக் கொடுக்கப்படுகின்றது. பெண் ஆணாதிக்கத்தின் பயன்பாட்டுப் பொருள் என்பதை, அதைத் தனிப்பட்ட விளையாட்டுச் சுதந்திரமும் ஜனநாயகம் அமுல்படுத்துவதை, இந்த ஜனநாயகத்தில் மீறமுடியாது என்பதை இவை தெளிவாக்குகின்றது. ஆண்களைப் பெண்கள் பயன்படுத்த கூடிய விளையாட்டுகளையும் உருவாக்கி விடுகின்றனர். பெண்கள் இதை ஒழிக்கப் போராடாதவரை, தனியுடைமை சமூகத்தில் சலுகை கோருகின்ற போது, ஆணாதிக்கம் பெண்களுக்கும் அவைகளைத் தாராளமாக உருவாக்கிச் சந்தைப்படுத்தி விடுவதில் ஆணாதிக்கப் பெண்ணியம் துணையாவதன் மூலம், ஆணாதிக்கச் சுரண்டல் வர்க்கம் கொழுக்கின்றது. இந்தப் பண்பாடுகள் அனைத்துத் துறைக்குள்ளும் புகுத்தப்படுவதுடன் மூன்றாம் உலக நாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். மூன்றாம் உலக மேட்டுக்குடியும் வாலையாட்டியபடி துடித்து பதைத்து, கவ்விக் கொள்வதை விரைவு படுத்துகின்றது.

இந்தியாவில் நாகரிகமானவர்கள் என அழைக்கக் கூடியவர்கள் இரவுக் களியாட்ட விடுதியில் (நைட் கிளப்) ஜோடிக்கு 500 ரூபாய் கொடுத்து "விடியவிடிய ஆட்டம்" போடுகின்றனர். (23.7.1997)[34] இந்த நாகரிகம் சொந்தப் பண்பாட்டை இழிவுபடுத்தி, கேவலப்படுத்தி தூக்கியெறிகின்றது. ஏகாதிபத்திய நாட்டில் எல்லாப் பண்பாட்டுச் சீரழிவுகளை மட்டும் எடுத்துக் கொள்வதும், அதை ஜனநாயகமாகக் காட்டிக் கூத்தடிப்பதும் விதிவிலக்கற்ற வழக்காகிவிட்டது. டிஸ்கோக்கள், கபாரே மண்டபங்கள், நவீன விபச்சார விடுதிகள், நவீன புளூபிலிம் அரங்குகள்.... என எண்ணற்ற வடிவங்கள் முளைத்தெழுகின்றன. இங்கு எல்லாப் பெண்களும் காட்சிப்படுத்தப்படுகின்றனர். பெண் பாலியலின் மையமாக்கப்படுகின்றாள். பெண் நிர்வணமாக்கப்படுகின்றாள். பெண் வக்கிரத்துக்கு உள்ளாக்கப்படுகின்றாள்.





உதாரணமாக ஜரோப்பாவில் நிர்வாணமான பெண் மீது மலம் துடைக்கும் பேப்பர் (மலம் துடைக்கப்படாத பேப்பர்) மூலம் சுற்றப்பட்டு மேடையில் நிறுத்தப்பட்ட நிலையில், பணக்கார ஆண்கள் - பெண்கள் சபையில் உள்ள வாயு அழுத்தம் (காற்று) மூலம் பெண்ணை நிர்வாணமாக்க ஜனநாயகப்பூர்வமாகப் போட்டி போடுகின்றனர். இதில் மூலதனம் உயர்வகை சபையினைப் பல ஆயிரம் பெறுமதியில் சந்தைப்படுத்துகின்றது. இந்தச் சந்தைப்படுத்துதல் கொழுத்த மூலதனமாகின்ற போது, இந்த **ஜனநாயகம்** அதன் எல்லைவரை சட்டப் பாதுகாப்பை சுதந்திரத்தைச் சட்டப்பூர்வமாக்குகின்றது. ஆனால் பெண்ணின் உடல் பெண்ணின் சுதந்திரமான காட்சிப்படுத்தலுக்குள்ளாகி வக்கரிக்கும் போது, மூலதனம் நாகரிகமான பண்பாட்டைப் பரிமாறிக் கொள்கின்றது. இதில் பெண் மீது வீசப்படும் காகிதப் பணம், பின்னால் அவளின் சுதந்திரமான உடல் பற்றி பிதற்றவும், கோட்பாட்டு விளக்கமும் கொடுக்கின்றது. அத்துடன் இது கட்டற்ற தீவிரப் பெண்ணியத்தின் பகுதியாகின்றது. இம்மண்டபங்களில் மேடையமைத்து, கம்பி (இலகுவானது) நட்டு அதில் அரைகுறை நிர்வாணப் பெண் கம்பியுடன் புணர்வதான காட்சிகள், செயல்கள் என பலப்பலவாக, வண்ண வண்ணமாக (வகைவகையாக) மனிதனின் வக்கிரத்தின் எல்லையை விரித்து செல்வதன் மூலம் இது பின்னால் நாகரிகமாகின்றது.

இதில் ஆணை மட்டும் இன்றி பெண்ணையும் ஈடுபடுத்த ஜனநாயகத்தைத் திரித்து, கொச்சைப்படுத்தி வழங்குவதன் மூலம், பெண்ணின் சுதந்திர இரசனைக்காக ஆணை நிர்வாணமாக்கிக் கண்ணுற வைப்பதன் மூலம் வக்கரித்த பாலியல் வக்கிரத்தில் உறைந்து போகின்றது. பெண்ணின் நிலை என்பது ஆண் வக்கிரத்தின் தனிப்பட்ட ஜனநாயகத்தின், சுதந்திரத்தின் கற்பனைக்கு உட்பட்டவைதான் என்று வரையறையாகின்றது. இதுபோல் பெண்கள் ஆண்களை இரசிக்க அனுமதிப்பதை உலகமயமாதல் எந்த எதிர்ப்பும் இன்றி, ஆணாதிக்கச் சுதந்திரச் சுரண்டல் வர்க்கம் ஆவலோடு உருவாக்கிக் கொடுத்தது, கொடுக்கின்றது.

சுரண்டலை எதிர்த்து போராடாத மார்க்சியமல்லாத பெண்ணிலைக் கோட்பாடுகள் **பெண்ணை மட்டுமல்ல ஆணையும் அனுமதித்ததன் மூலம்,** ஆண் பெண் சமத்துவத்தை ஏற்படுத்தியதாகப் பீற்றிக் கொண்டு, இதைப் பாதுகாப்பதன் மூலம், அந்தப் பெண்ணியம் ஆணாதிக்கத்துக்கு விபச்சாரம் செய்து சரணடைகின்றது. பொழுது போக்கில் பெண்ணை மட்டுமல்ல ஆணையும் கூட இழிவுபடுத்த தயங்காத ஆணாதிக்கச் சுரண்டல் நலன்களே உலகமயமாதலின் பண்பாட்டுக் கலாச்சாரம் ஆகின்றது. இதையே ஜனநாயகத்தின் பண்பாடாக வைக்கின்றது. இதுவே சொர்க்கத்தின் புண்ணியப் பூமி என நாலு நாய்கள் கவ்விச் செல்லவும், நியாயப்படுத்தவும் கிடைக்காமலா, முற்போக்கு உலகம் உயிர்வாழ முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆபாசத்தையும், காட்டுக் கூச்சல்களையும், மொழி அர்த்தமின்றியும், தாறுமாறான இசைக் குழப்பத்தையும் உருவாக்கி, அதைப் போதையாக்கி, அதில் மனித உணர்வுகளை அலைக்கழித்து செம்மறியாடாக மக்களைக் கூத்து போடவைக்கும் இசை கசெட்டுகளின் (ஒலிநாடா) விற்பனையை ஆராய்வோம். உலகில் பாட்டு கசெட் (ஒலிநாடா) விற்பனையை அட்டவணை:7 மூலம் காணலாம். (6.1.1991)[34]

அட்டவணை - 7

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | 46.62 | கோடி |
| இந்தியா | 18 | கோடி |
| சீனா | 12.5 | கோடி |
| இங்கிலாந்து | 8.3 | கோடி |
| ஜப்பான் | 5.92 | கோடி |

உலகில் கோடிக்கணக்கில் மூலதனத்தைச் சுரண்டும் வர்க்கத்துக்குத் திரட்டிக் கொடுக்கும் பொழுதுபோக்கு இசை கசெட்டுகள் (ஒலிநாடா) எதை மனிதனுக்குப் பொழுது போக்கின் பின் புகுத்துகின்றது. 99.99 சதவீதமான இசை பெண்களை இழிவுப்படுத்தி அல்லது ஆபாசமாகக் கூச்சல் போட்டு வக்கிரத்தைப் பாலியலில் ஏற்படுத்தியே இந்தப் பொழுது போக்கு நுகர்வு மனித மூளைக்குள் புகுத்தப்படுகின்றது. சாதாரண திரைப்படத்தில் பெண்ணின் காட்சி, அதில் அவளின் ஆபாசத்தைப் (அழகு, கவர்ச்சி, மொழி, உடல், காதல், அன்பு, பாலியல் போன்றவற்றைப்) பண்பாடாக்குவது போல், இசை உலகம் தாறுமாறான கூத்தை இசையாக அரங்கேற்றுகின்றது. அதாவது ஒழுங்கை மறுக்கும் போக்கில் பின்நவீனத்துவ ஏகாதிபத்தியம் புதிய ஒழுங்கை ஏற்படுத்தும் வடிவில் இசை உலகில் இசையின் ஒழுங்கு சிதைக்கப்படுகின்றது. இவை டிஸ்கோ வகை கலவையாக, இசையில் மனித மூளைகளை அதிரடியாகக் குழப்பி, மூளையின் ஒழுங்கான கிரகிக்கும் தன்மையைச் சிதைத்து, ஒரு கிறுக்கத்தை (மயக்கத்தை) ஏற்படுத்தும் இசை உலகமயமாகி, பொழுது போக்கானது கிறுக்கு (மயக்க) நிலைக்குத் தரம் தாழ்த்தப்பட்டுள்ளது. இந்தக் கிறுக்கத்தில் (மயக்கத்தில்) பெண் பற்றிய போலிக் காதல் சொர்க்கங்கள், அழகு பற்றி பெண்ணின் பிம்பங்கள், பாலியல் வக்கிர ஒப்பனைகள்..... என மனித விரோதத்தின் போக்கில் எல்லையற்ற இசை உலகம் விரிந்து போயுள்ளது.

இந்த இசை உலகில் பன்னாட்டு நிறுவனங்கள் முதல் சிறு வியாபாரங்கள் வரை தமது மூலதனத்தை மனிதனின் பொழுது போக்கில் கூட உபரியாகத் திரட்டிக் கொள்கின்றனர். கோடி கோடியாகத் திரளும் மூலதனத்துக்குச் சமூக அக்கறை இருப்பதில்லை. **சமூக அக்கறை என்பது பொழுதுபோக்கில் அர்த்தமற்ற விடயமாக இன்று உள்ளது. இது ஆணாதிக்கத்தின் ஊற்று மூலமாக, அதைப் பாதுகாக்கும் ஊடகமாக உள்ளது.**





மூலதனச் சந்தையைக் குழந்தைகள் மூலம் இந்த ஜனநாயகச் சுதந்திர நாகரிகத்தைக் கட்டமைக்கின்றது. இந்தச் சந்தை மூலதனத்தில் தொடங்கி அதைப் பார்ப்பவர்கள் ஈறாக யாரும் இதைபற்றி பேசுவதில்லை. கி.பி. 1980-களில் உலகு எங்கும் 264 பத்திக்கைகளில் 30 இலட்சம் குழந்தைகள்[30] மாடல்களாக மூலதனக் குவிப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். இது குழந்தைகளுக்கான ஆணாதிக்க ஒழுக்கத்தையும், பாலியல் வக்கிரத்தையும் புகுத்துகின்றது.

சிறுவர்களுக்கு என உருவாக்கும் விளையாட்டுப் பொருட்கள், ஆண் பெண்ணுக்கு எனத் தனித்தனியாக இருவிதமான பொருட்கள் உற்பத்தியாக்கப் படுகின்றன. உதாரணமாகக் கார் மேற்கில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக, சரிக்குச் சரியாக வைத்திருந்த போதும் ஒரு சிறு சிறுமியின் கண்ணோட்டத்தில் அது ஆணின் விளையாட்டுப் பொருளே. இதை எந்த பெற்றோரும் பெரிதாகச் சொல்லிக் கொடுப்பதில்லை. மாறாகச் சமூகம் பொழுது போக்கின் ஆணாதிக்கம் சார்ந்து, பிள்ளைகளின் பொழுது போக்கான தொலைக்காட்சி, சிறு கதைகள், விளம்பரங்கள்.... என பல நிகழ்வுகள் சிறுமிக்குக் காரை ஆணுக்குரியதாக அடையாளப்படுத்துகின்றது. ஆனால் எதார்த்தத்தில் இவை அப்படி இருப்பதில்லை. எதார்த்தத்தை மீறிய ஆணாதிக்கம் கட்டமைக்கப்படுகின்றது. ஆணாதிக்க ஒழிப்பை அதன் அடிப்படையில் மாற்றாத வரை பொருட்கள் பற்றிய எதார்த்தத்துக்குப் புறம்பான ஆணாதிக்கச் சிந்தனை ஊடுருவுவதைக் காட்டுகின்றது.

மறு தளத்தில் பொம்மை சிறுமியின் விளையாட்டுப் பொருளாக இனம் காட்டப்படுகின்றது. இதை மறுத்து எதிர் நிலையில் பெற்றோர் விளையாட கொடுக்கும் போது குழந்தை திட்டவட்டமாக மறுக்கின்றது. இந்த வகையில் ஆணாதிக்கம் என்பது பொருட்களின் பயன்பாட்டிலேயே தீர்மானிக்கும் வகையில் சிறுவர், சிறுமிகளிலேயே தீர்மானகரமாகி விடுகின்றது. குழந்தைச் சிந்தனையை அகலமாக்கும் முன்பே இருக்கும் பொருளாதார எல்லைக்குள் தன்னைப் புரிந்து கொள்கின்றது. தீர்மானகரமாகப் பொருளாதார அமைப்பிலும் அதையொட்டிய ஆணாதிக்கப் போக்கிலும், எந்தக் குழந்தையும் எதிர்த்து நிற்கமுடியாது ஆணாதிக்கத்தின் எல்லைக்குள் சிக்கிக் கொள்கின்றனர். இதில் இருந்து விடுபடுவது என்பது நடைமுறையில் அடக்கு முறைக்கு எதிராகவும், மறு தளத்தில் இந்த ஆணாதிக்கப் பொருளாதார அமைப்பைத் தகர்ப்பதிலும் சார்ந்துள்ளது.

இதைப் புரிந்து கொள்ளும் வடிவில் இருந்தே ஆணாதிக்கத்தை எதிர்த்து போராடும் வடிவமும் மாறுகின்றது. இந்த வடிவத்தை நடைமுறையில் புரிந்தவர்கள் தனி ஆணை எதிரியாகப் பார்ப்பதும், மறுதளத்தில் ஆணாதிக்கச் சமூக அமைப்பை எதிரியாகப் பார்ப்பதும் என போராட்டம் இருதளத்தில் எழுகின்றது. இது போராடும் போது எதிர் நிலையை எடுக்கின்றது. வேறுபட்ட சமூகக் கண்ணோட்டத்தை, போராட்டப் பாதையை ஒன்றில் இருந்து ஒன்றுவிலகி போராடுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தனிமனிதர்களை எதிரியாகக் காண்போர் அராஜகவாதிகளாகத் தம்மை ஒழுங்கமைக்கின்றனர்.** இவர்கள் மக்களின் ஒன்றுபட்ட எழுச்சிகளுக்கு எதிராகத் தம்மை முன்நிறுத்துகின்றனர். ஆண்-பெண் சமூகத்தில் ஆணையும், பெண்ணையும் பிளப்பதன் மூலம் உலகமயமாதலின் கோட்பாட்டுக்குள் இருதிசையில் இருந்து சென்று ஒரு புள்ளியில் சந்திக்கின்றனர்.

இந்தியாவில், "இளைஞர்கள் ப்ளஸ் டூ - டேட்டிங்" என்ற தலைப்பில் "பாய் பிரண்ட்" வைத்திருப்பது, கருக்கலைப்பு, டிஸ்கோ... என தொடரும் பண்பாட்டுக் கலாச்சாரத்தின் வாரிசுகளாக, மேல்த்தட்டுப் பூர்சுவா பெண்கள் மாறியுள்ளனர்.[34] (21.10.19991)

இந்தப் பண்பாடு, உலகமயமாதல் ஊடாகத் தீர்மானகரமான பண்பாடாக வளர்கின்றது. மேற்கில் இழிந்துபோன இந்த நுகர்வு பாலியல் நடத்தைகள் மூன்றாம் உலக நாடுகளின், மேட்டுக் குடிகளின் பண்பாடாக மாறியுள்ளது. நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் வக்கிரமான பாலியல் வடிவத்துடன் ஐக்கியப்பட்ட இந்தப் போக்கு மிகவேகமாக ஊடுருவிச் செல்கின்றது. காதல், அன்பு என்ற நிலப்பிரபுத்துவப் பெண்ணின் உரிமையாக, உயிராக நீடித்த உறவுகள் பண்பாடுகள் எல்லாம் மறுக்கப்பட்டு, நுகர்வு என்ற எல்லையில் மேலும் பெண் நசுங்கி சிதிலமடையும் அளவுக்கு, வெறும் பொழுது போக்குக்குள் பெண்ணைப் பயன்படுத்த சுரண்டும் ஆணாதிக்கம் தயங்கவில்லை. இதிலும் பெண் ஆணாதிக்கமயமாக்கப்படுகின்றாள். பெண் மனிதத்துவத்தைத் தொலைத்து விபச்சார நிலைக்குள் நுகர்வாக ஆண் பயன்படுத்த, பெண் காதலையும் அன்பையும் இழந்து விடுவது நிபந்தனையாகின்றது.

இதில் இருந்து பெண்ணின் நிலையைக் கவர்ச்சியின் சின்னமாக, ஆபாசத்தின் குவியமாக, நுகர்வின் புள்ளியாகக் காட்டி, கற்பனைப் புனைவுகளில் கற்பழிக்கக் கோருகின்றது. இதை எதார்த்தத்தில் கோரி மனிதனை அலைய வைப்பதுடன், பலாத்கார வழியில் அதை அடைய துடிக்கிறது. இதை அணுஅணுவாக அனுபவிக்க அலைவது நடைமுறையாகியுள்ளது.

இந்த திரைப்படங்கள் பற்றி, **"அவளுக்காக"** என்ற நாவலில், **சு. சமுத்திரம்** "சினிமாவுல சம்பாதிக்கிற மாதிரி வேற எதுல சம்பாதிக்க முடியும்? ஒரு ரேப் சீன். சின்னஞ் சிறுசுகளைத் திருப்திப்படுத்திடலாம் அதுக்காக ஓர் அழுகை. பெண்களுக்குத் திருப்தி. ஓர் மழை சீன். கிழடுகளுக்குக் கொண்டாட்டம். ஒரு கும்மாங்குத்து. சண்டியர்களை வரவழைச்சுடலாம். வாலிபர்களைத் திருப்திப்படுத்த ஒரு சில்க் சுமிதா, இல்லன்னா ஒரு அனுராதா. எல்லோருக்கும் திருப்தி. இதுக்குள்ளே கதைபண்ணி இலட்சம் இலட்சமாய்ச் சம்பாதிக்கிற தொழில் வேற எது இருக்கு? மேலும் என் வசனத்துலே படம் கண்டிப்பாய் ஓடும். ஏனென்றால் இரு பொருளிலே அவ்வளவு ஆபாசமாய் வசனம் எழுதியிருக்கேன். மூளையோ, மூலதனமோ அதிகம் இல்லாமல் இலட்சம் இலட்சமாய் சம்பாதிக்கிறதுக்கு வேற என்ன தொழில் இருக்கு?"[30] என்று





அழகாகவே திரைப்படம் வக்கிரத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். மனிதன் மனிதனாக முடியாத காட்டுமிராண்டித்தனத்தைத் திரைப்படம் புகுத்துகின்றது. பெண்களை ஆபாசமாகக் காட்டாத திரைப்படம் எதுவும் இன்று ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அப்படிக் கோரின் அது பிரச்சாரம் எனக் கூக்குரல் இட ஆயிரம் வாய்கள் போலி முற்போக்கின் பின்னால் தயாராகவே உள்ள இலக்கிய எழுத்துப் பண்பாடு இதன் ஆதாரமாகின்றது.

தொழிற்சாலை இயந்திரமயமானபோது தொழிலாளி அந்த இயந்திரத்தின் உதிரி உறுப்பானான். இயந்திரத்தை விட கீழ் நிலைக்குத் தாழ்த்தப்பட்டான். மேலும் நவீனக் கண்டுபிடிப்பாகக் கணினி, மின்னணுயுகம் இயந்திரத்துடன் ஒன்று இணைந்த போது, இயந்திர இராட்சத மிருகங்கள் மனிதனை வேட்டையாடும் திரைப்படங்கள் தொழில் நுட்ப நியாயப்படுத்தல் உடன், இயந்திரத்தின் முன் நெருக்கப்பட்ட பய பீதியில் இயந்திரத்தின் முன் அஞ்ச வைக்கப்படுகின்றான். இந்தச் திரைப்படத் தொழில் நுட்பத்தில் பெண் கூட பாலியல் கவர்ச்சியுடன்தான் இராட்சத இயந்திரம் கவர்ந்து மிரட்டி அழிக்கின்றது. திரைப்படத்தில் வரும் பல தோற்றங்கொண்ட பேய்கள் எப்போதும் கற்பழிப்புகள், உடல் உறவுகள், வக்கிரத்துடன் புணர்வது போன்ற காட்சிகளே திரும்பத் திரும்ப காட்சிப்படுத்தப்படுகின்றது.

மனித வரலாற்றில் யுத்தச் சாதனைகளை ஒட்டி வளர்ச்சி பெற்ற, அதனுள்ளான விளையாட்டுகள் யுத்தமுறை மாறிய போதும் விளையாட்டாகத் தொடர்ந்தன. இன்று நுகர்வுப் பண்டத்தின் மதிப்பைச் சந்தைப்படுத்தும் விளம்பர ஊடகமாக சீரழிந்து போயுள்ளது. மறுபுறம் குறைந்த பட்சம் எஞ்சிய உடல் உறுப்புகளைக் கொண்ட உடற்பயிற்சி மூலம் செய்த விளையாட்டுகள், புதிய யுத்த வழியில் கணினி விளையாட்டாக மாறி உடலில் பலவீனத்தின் அங்கமாக, இயக்கமற்ற நிரந்தர இயந்திரச் சாதன உறுப்பு போல் மூடச் சமூகத்தை உருவாக்கி வருகின்றது. மனிதனை இயந்திரத்தனமான அடிமையாக்கிய மூலதனம், உடல் செயற்பாட்டையும் அதன்வழியில் சிறுவயதிலேயே பழக்கப்படுத்துகின்றது.

சிறுவர் உழைப்பு எப்படி ஒரேமாதிரி தன்னையறியாமல் செயல்பட வைக்கின்றதோ அதேபோல் சிறுவர்கள் விளையாட்டுக் கணினியில் தன்னையறியாமல் ஒரு பாகமாக மாறுகின்றனர். இதன் மூலம் கணினியின் அடிமையாக்கி அதற்குக் கீழ்ப்படுத்துகின்றனர். அதாவது புதிய கணினி யுத்தமுனை கணினி விளையாட்டுகளையும், கணினி பாலியலையும் உருவாக்கியுள்ளது. இன்று இணையப் (internet) பாலியல் என்பது மனித வக்கிரத்தின், அடுத்த உச்சமான தனிமை வாழ்வில் இயந்திரத்தனத்தை அடைகின்றது. ஆண் பெண் உறவில் இந்த இணையப் (Internet) பாலியல் மேலும் பாலியல் பிளவை ஒழுங்கமைக்கின்றது. மனிதனின் கூட்டு வாழ்க்கை அழிக்கப்பட்டு, வீட்டுக்குள் தனிமனித இயந்திர வக்கிர நுகர்வுக்குள் ஆண் பெண் உறவும், நடமாட்டமும் குறுக்கப்பட்டு வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 11. ஓரினச் சேர்க்கை - பெண் விடுதலைத் தத்துவமா?

**ஆ**ணாதிக்கம் மனித இனத்தைச் சிதைத்த போது பாலியல் பல வக்கிரங்களைக் கண்டது. இயற்கையின் பரிணாமத்தையும், இயற்கையின் அழிவையும் ஏற்படுத்தியே மூலதனத்தின் சுதந்திரம் பூத்துக் குலுங்கியது குலுங்குகின்றது. இந்தச் சிதைவுகளில் இருந்து அலங்கோலமான பாலியல் வடிவங்கள் வெடிக்கின்றன. இந்த எதார்த்தத்தில் இருந்து அங்கீகரிக்கக் கோரும் போராட்டமும், இதை ஜனநாயகத்தின் சுதந்திரமாக, தனிமனித உடல் சார்ந்த கூறாகவும் என பலவித விளக்கத்துடன் இன்று கோட்பாட்டு விளக்கங்கள் வருகின்றன. இதில் ஓரினச் சேர்க்கையும் ஒன்று. அதை ஆராய்வோம்

ஓரினச் சேர்க்கையில் உலக அளவில் நூறுக்கு 0.09 சதவீதம் ஆண்கள் ஈடுபடுகின்றனர். அதிகபட்சமாக இஸ்ரேலில் 35 சதவீதம் பேர் ஈடுபடுகின்றனர். பெண்களின் ஓரினச் சேர்க்கையான லெஸ்பியன் என்பது கிரீஸ் நாட்டிலுள்ள லெஸ்போஸ் தீவில் இருந்து அறிமுகமானதால் லெஸ்பியன் என்று அழைக்கப்படுகின்றது. உலகளவில் ஆறு சதவீதமான பெண்கள் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுகின்றனர். (3.8.1998)[28]

"உறைக்குச் சிறை" என்ற தலைப்பில், "ஆணுறைக்குத் தடை" என்ற செய்தியில், தில்லி திகார் ஜெயிலில் சுகாதாரத் தினம் நடத்தச் சென்ற 400-இக்கும் மேற்பட்ட மருத்துவர் குழு பரிசோதனையை நடத்தியது. அங்கு இருந்தோரில் மூன்றில் இரண்டு பங்கு பேர் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டனர் என்பதை ஒப்புக் கொண்டனர். கைதிக்கு ஆணுறைக் கொடுக்கக் கோரி உலகச் சுகாதார நிறுவனம் ஆலோசனை கொடுத்துள்ளது. (21.5.1994)[34]

ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவோரின் உலகளாவிய புள்ளிவிபரம் மேலே உள்ளது. அது போல் இதற்குப் பொதுமக்களின் ஆதரவு பெருகிவருவதும், இதை ஒட்டிய தத்துவ நடைமுறைக் கோட்பாட்டு ஆதரவுக் குரல்களும் கணிசமான அளவு இன்று உள்ளது. இது ஏன்? இதுவே எமக்கு முன் உள்ள அடிப்படையான முக்கியமான கேள்வியாகும்.





ஓரினச் சேர்க்கையில் ஆணைவிட பெண் அதிகமாக ஈடுபடக் காரணம் என்ன? உலகளவில் ஈடுபாடு உடையோரை மிஞ்சும் அளவுக்கு இஸ்ரேலில் ஏன் 35 சதவீதம் பேர் ஈடுபடுகின்றனர்? ஆதரவு-ஈடுபாடு என்று புள்ளிவிபரங்கள் எதார்த்தமானவை. இது எமக்கு உலகைப் புரிந்து கொள்ள உதவுகின்றது.

ஆணாதிக்கச் சமூகத்தில் ஆண்களின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்ய விபச்சாரம், பலதாரமணம், பெண்ணின் ஒருதார மணத்தில் ஆணின் மேலாண்மை மற்றும் ஏகாதிபத்தியச் சீரழிவான பாலியல் வடிவங்கள் ஆகியவை ஆணின் பாலியல் நுகர்வுக்குத் தடையாக இருப்பதில்லை. ஆண் இதில் ஒன்றையோ, பலவற்றைத் தெரிவு செய்வதன் மூலம் தனது பாலியல் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடிகின்றது. ஆணின் பாலியல் நெருக்கடி இதனால் பெண்ணைவிட குறைவாகும். ஆணின் நெருக்கடி என்பது பெண் பற்றிய ஆணாதிக்கப் பார்வையால், ஆணாதிக்க நுகர்வுப் பண்பாட்டால் உண்டாகின்றது. அது பல பெண்களைக் கட்டுக்கடங்காது நுகர, அனுபவிக்கக் கோருகின்றது. இந்த நிலையில் மட்டுமே பாலியல் நெருக்கடி சாதாரண மக்கள் மத்தியில் ஆண் சார்ந்துள்ளது.

ஆணாதிக்க அமைப்பைக் கட்டிக்காக்க உருவான நிரந்தர இராணுவங்கள், இந்த அமைப்பின் சட்டத்தால் கைதாகி நிரம்பும் சிறைக்கூடங்கள் போன்றவற்றில் மேற்கூறிய வழியில் பாலியல் பூர்த்தியின்றி ஆண்வழி சார்ந்து முடமாக்கப்படுகின்றது. இந்த முடமாக்கல் என்பது ஆணின் ஓரினப் புணர்ச்சியைத் தூண்டுகின்றது. மேற்கூறிய சிறையில் ஓரினப் புணர்ச்சியின் 66 சதவீதப் பங்கு தெளிவாகின்றது. வெளி உலகில் 0.09 சதவீதமான ஆணின் ஓரினப்புணர்ச்சி சிறையில் 66 சதவீதமாக இருப்பது அதிர்ச்சி அளிக்க கூடியது மட்டுமின்றி இந்தச் சமூகத்தின் பாலியல் நிர்வாணத்தை துல்லியமாக்குகின்றது. அதே நேரம் இஸ்ரேலில் ஏன் 35 சதவீதமான ஆண்கள் ஓரினப் புணர்ச்சியில் ஈடுபடுகின்றனர்? இது யூத மதத்தின் ஆணாதிக்கக் கொடூரமாகும். யூதமதம் மிகக் கட்டுப்பாடான ஒழுக்கத்தை மதம் சார்ந்து நிற்பதால் அங்கு பாலியல் நெருக்கடி ஆணுக்கு ஏற்படுகின்றது. கிறித்துவ மதத்தில் ஆண் போதகர்களுக்கும்-பெண் கன்னியாஸ்திரிகளுக்கும், பௌத்த மதத்தில் புத்தத் துறவிகளுக்கும் உள்ள பாலியல் தடை அவர்கள் மத்தியில் அதிகளவு ஓரினச் சேர்க்கையையும், பாலியல் வன்முறையையும் தூண்டுவதை அன்றாடச் செய்திகள், கைதுகளில் அம்பலமாகின்றது.

யூத மத்தில் உள்ள காட்டுமிராண்டித்தனமான கட்டுப்பாடுகள் ஆணின் பாலியல் உணர்ச்சியை நலமடிக்கின்ற போது ஓரினச் சேர்க்கையாக அது வெடிக்கின்றது. உதாரணமாக யூத மதத்தை ஆச்சாரமாகக் கடைப்பிடிக்கும் ஒருவன் வானொலி கேட்பது தடை செய்யப்பட்ட ஒன்று. இது போல் பல விடயங்கள் உண்டு. யூத மதத்தில் ஆச்சாரமான பண்பாட்டில் திளைக்கும் ஆணாதிக்கம் அங்கு பாலியல் உறவைச் சிதைக்கின்றது. இது அச்சமூகத்தின் ஓரினச் சேர்க்கையைத் தீர்வாக்குகின்றது. பெண்களுடன் கதைப்பது கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யூத மதத்தில் ஆச்சரியத்துக்குரிய விடயமாக, (பைபிள்:அரு.4.27) தடை செய்யப்பட்ட நிலையில் பெண் அசிங்கப்படுத்தப்பட்டாள். பெண்ணில் இருந்து அன்னியப்பட்ட ஆண் தனக்கிடையில் ஓரினப்புணர்ச்சியைக் கைக்கொள்வது அவனின் தீர்வாக இருந்தது.

பெண்ணைப் பொறுத்தவரையில் ஆணுக்கு இருந்த சலுகை அவளுக்கு எட்டாத விடயமாக இருந்தது. திருமணம் மட்டுமே அவளின் ஒரே பாலியல் தீர்வாக இருந்தது. அங்கும் ஆணின் மேலாண்மை பெற்ற பாலியல் பெண்ணின் பாலியலைப் பூர்த்தி செய்வதை எப்போதும் கேள்விக்குள்ளாக்கியது. ஒருதாரமணத்தைப் பெண்ணுக்கு மட்டும் நிபந்தனையாக்கி, இதை மீறும் அனைத்துக்கும் கடும் தண்டனையைச் சமூகம் வழங்கியது. பெண்ணின் உணர்வுகள் புறக்கணிக்கப்பட்டு அவளை **ஆணின் பாலியல் வேலைக்காரி** ஆக்கியதன் மூலம், பெண்ணின் உணர்ச்சிகள் நலம் அடிக்கப்பட்டது. ஆணில் இருந்து அன்னியப்படுத்தி வீட்டில் சிறைவைத்த ஆணாதிக்கம் பெண்ணைத் தனது போகத்துக்குரிய பொருளாகக் கண்டது. இந்தவகையில் பெண்களை அதிகார வர்க்கம் அந்தப்புரங்களில் ஆயிரக்கணக்கில் அள்ளிச் சென்று சிறைவைத்தது. ஒருநாள் மோகம் அல்லது அதுவுமற்ற பெண்கள் தமது உணர்ச்சிக்கான பாதையைக் கண்ணீரில் நிரப்பினர். ஆணாதிக்க வர்க்க அதிகார மையங்கள் ஆயிரம் ஆயிரமாக வரலாறு முழுக்க பெண்களைத் தமது அந்தப்புரத்தில் நிரப்பிச் சுகம் கண்டது.

இன்று இந்தியாவைப் பாசிசத்தின் இந்து வடிவமான இராமனின் தந்தை மலட்டுத் தசரதன் 60,000 மனைவிகளை வைத்திருந்தான் என்கிறது வரலாறு. மலட்டுத் தசரதனின் அந்தப்புரத்தில் அடைக்கப்பட்ட அந்தப் பெண்களின் உணர்ச்சிக்கான தீர்வு எதுவாக இருந்திருக்கும்? பழைய கிரேக்கச் சாம்ராஜ்ஜியங்கள் முதல் அனைத்து வரலாற்று மன்னர்களினதும், நிலப்பிரபுக்களின், வர்த்தகர்களின் மாடமாளிகைகளில் அந்தப்புரங்கள் எல்லாம் பெண்ணின் கண்ணீரால் உருவானவைகளே. இந்தப் பெண்கள் தமக்கிடையில் ஓரினப்புணர்ச்சியைத் தேர்ந்தெடுப்பது ஒரு மாற்றாக இருந்தது. மன்னர்களின் வக்கிரங்கள் பல பெண்ணை ஒரே நேரத்தில் புணர முற்படுவது போன்ற வக்கிரப் பண்பாட்டில் அப்பெண்களின் உணர்வுகளின் தணிவு தவிர்க்கமுடியாத நிலையில், அவர்களுக்குகிடையிலான ஓரினச் சேர்க்கையாக இருந்தது. அத்துடன் அவர்களின் இந்தப் புணர்ச்சியை இரசிக்கும் ஆணாதிக்க வக்கிரம் இதை ஊக்குவிக்க மேடையேற்றியது. இவைகளை இந்தியச் சிற்பக் கலைமுதல் ஐரோப்பியச் சுவர் ஓவியங்கள் வரை எதார்த்தமாகத் தரிசிக்கமுடியும். பெண்களின் பாலியல் துயரங்கள் அவர்களுக்கிடையான ஓரினப்புணர்ச்சியை ஊக்குவித்தது. அதனால்தான் ஆணைவிட பெண் உலகளவில் அதிகமாக ஓரினப்புணர்ச்சியில் ஈடுபடுகின்றாள்.

இன்று ஆண் பெண்ணின் பிளவுகள் ஆணாதிக்கப் போக்கிலும், தனிச் சொத்துரிமை வடிவிலும் வீங்கி வெடிக்கும் போது அதை ஆணாதிக்கத்துக்கும்,





தனிச் சொத்துரிமை வடிவத்துக்கும் எதிராக மாற்றுவதற்குப் பதில் ஆண் பெண் எதிர்ப்பாகக் காட்டப்படுகின்றது. இதனால் ஆண் எதிர்ப்பும், பெண் எதிர்ப்பும் ஓரினப்புணர்ச்சியின் தூண்டுதல் மையமாக மாற்றம் காண்கின்றது.

உலகைச் சூறையாடும் தனிச் சொத்துரிமையை எதிர்ப்பின்றி ஜனநாயக வடிவமாகக் காண்பதும், விளக்குவதும் பரந்துபட்ட வடிவமாக உள்ளது. இதுபோல் ஓரினப்புணர்ச்சியை அங்கீகரிப்பதும் வடிவமாகின்றது. தனிமனிதனின் சுதந்திரத்தை இந்த ஜனநாயகத்துக்குள் கோரும் போது அனைத்துக்கும் அங்கீகாரம் கிடைத்து விடுகின்றது. இது உலகமயமாதலின் அடிப்படையான விதியும் விடயமுமாகும். உதாரணமாகச் சொத்துரிமை அழிப்புக்கு அங்கீகாரம், அதாவது சிறு சொத்துகளை, தேசியச் சொத்துகளை அழிப்பதுக்கும் அங்கீகாரம். தனிச் சொத்து என்பது சில விரல் விட்டு எண்ணக் கூடியவர் வரை சுருங்கிச் செல்லும் எல்லைவரை இது விரிகின்றது.

ஓரினப்புணர்ச்சி அங்கீகாரம் இந்தவகையில் நியாயப்படுத்தப்படுகின்றது. இன்று சமுதாயத்தில் பாலியல் நெருக்கடியில் சிக்கிக் கொண்ட ஒருவனின் ஓரினப்புணர்ச்சி நடத்தைகளைப் பாட்டாளி வர்க்கம் அனுதாபத்துடன் அணுகுகின்றது. அதே நேரம் இயற்கையின் பாலியல் வடிவத்தை முன்வைக்கின்றது. இதற்கு எதிரான கோட்பாட்டு விவாதத்தில் எதிர்த்து போராடுகின்றது. ஓரினச்சேர்க்கைக்கு எதிராகத் தண்டனை இந்த ஆணாதிக்க அதிகாரச் சட்டவடிவங்கள் வழங்கும் போது எதிர்த்து அம்பலப்படுத்துகின்றது. ஏனெனின் இது ஆணாதிக்கத்தின் கொடையையும், பக்க விளைவுகளையும் நீக்காத தண்டனையின் ஊடாக ஆணாதிக்க அமைப்பு பாதுகாக்கப்படுவதை அம்பலப்படுத்திப் போராடுகின்றது.

அதாவது பாட்டாளிவர்க்கம் ஆணாதிக்க விளைவை அம்பலப்படுத்துகின்றது. அதன் கொடூரத்தை அம்பலப்படுத்துகின்றது. இதனால் ஏற்படும் பக்கவிளைவை அனுதாபத்துடன் அணுகுகின்றது. அங்கு இயற்கையின் வரலாற்றுப் பாலியலை நிலைநிறுத்துகின்றது. கோட்பாட்டில் நியாயப்படுத்தும் எல்லா ஆணாதிக்க ஓரினப்புணர்ச்சி நியாயப்படுத்தல்களையும் அம்பலப்படுத்துகின்றது.

இது மதம் பற்றிய மார்க்சிய அணுகுமுறைக்கு ஒப்பானது. மதம் எப்படி ஓர் அபினாக இருக்கின்றது என்பதை அம்பலப்படுத்துகின்றது. மக்களின் இன்றைய சமூக வடிகாலாகப் போலியான கடவுள் இருக்கின்றார் என்பதை **மார்க்சியம்** அணுகும் போது மக்களின் அறியாமையையிட்டு அனுதாபப்படுகின்றது. அத்துடன் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி கடவுளின் பொய்மையை அம்பலப்படுத்தி ஆயுதபாணியாக்குகின்றது. அதே நேரம் மதத்தை நியாயப்படுத்தும் அனைத்துக் கோட்பாட்டு உருவாக்கத்தையும், நியாயப்படுத்தலையும் வேர் அறுப்பதில் மார்க்சியம் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்றது. சமூக விளைவால் மக்கள் கடவுளை அணுகுவது தொடர்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அணுகும் போக்கில் நிதானம், விளக்கப்படுத்தல், அறியாமையைப் புரியவைத்தல் என நிதானமான சமூக மாற்றத்தின் ஊடான அணுகுமுறையையும், மக்கள் அல்லாத அனைத்து மத வடிவங்கள் மீதும் எதிர்த் தாக்குதலை எதிரிக்கு எதிராகவும் நடத்துகின்றது. இது போல் ஆணாதிக்க விளைவாக ஓரினப்புணர்ச்சியில் ஈடுபடுவோர் மீது ஆணாதிக்க ஒழிப்பின் ஊடான நிதானமான இயற்கை மீதான மனித வரலாற்றைக் கட்டமைக்கும் போராட்ட அணுகுமுறையும், ஆணாதிக்க விளைவை நியாயப்படுத்தும் எல்லா ஆணாதிக்கப் பாதுகாப்பையும், கோட்பாட்டையும் ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்ட எதிரியாகக் கண்டு எதிர்த்துப் போராடுகின்றது. சமூகத்தின் இயற்கையை மறுக்கும் அனைத்துச் சமூகப் பக்கவிளைவுகளையும் இதன் வழியில் அணுகுவது மார்க்சியத்தின் வர்க்க அணுகுமுறை மட்டுமின்றி மக்கள் நலன் சார்ந்தவையாகும். அதேநேரம் அதைக் கோட்பாட்டில் நியாயப்படுத்தும் அல்லது பாதுகாக்கும் அனைத்தையும் எதிர்த்து வர்க்கப் போராட்டத்தை அதன் மீது நடத்துகின்றது.

பழைய காலப் பார்ப்பனியச் சடங்குகளில் சில நிகழ்வுகளை ஆராய்வோம். "அவர்கள் குதிரையைப் புணர்கின்றனர்.... குதிரையைக் கொல்கின்றனர். ... அரசரின் பட்டத்து இராணி குதிரையின் அருகே படுக்கின்றாள். புரோகிதன் குதிரையையும், இராணியையும் ஒரு துணியினால் மூடுகின்றான். குதிரையின் லிங்கத்தால் இராணி யோனி ஸ்பர்சம் செய்கின்றாள். புரோகிதன் தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தி இராணியை மோசமாகப் பேசுகின்றான். இராணியின் ஆதரவாளர்கள் அதே வடிவில் பதிலும் அளிக்கின்றனர்."[18]

''எஜமானன் மனைவியை, எஜமானே கொன்று கிடத்திய குதிரையின்மேலே தள்ளி, கட்டிப் பிடித்து படுக்கும் படி செய்த பின்னர், 'சொர்க்கச் சுகத்தை அனுபவித்துக் கொள்' என்று கூறுகின்றான். தொடர்ந்து துதிப்பாடல்களிடையே எஜமான் மனைவிக்கும் இறந்த குதிரைக்கும் இடையில் சம்போகம் நடைபெறுகின்றது....... குதிரையும் இராஜபதனியும் இவ்விதமாக இருக்கும்போது, எஜமானாகிய அரசன் காம உணர்வுடன் சில ரிக்குகளைச் சொல்லிக் கொண்டேயிருப்பான்."[18]

ரிக்வேதத்தில், "ஏ மனிதர்களே! பெண் ஆட்டுடன் சம்போகத்தில் ஈடுபடுக. அது உங்களுடைய பிராண வாயுவையும், புஷ்டத்திலிருந்து வெளியே போகின்ற வாயுவையும் கட்டுப்படுத்தும். வாக்குவன்மை பெற ஆட்டுக்கிடாவுடன் சம்போகம் செய்க. அய்ஸ்வர்யங்கள் கிடைக்க காளையுடன் சம்போகம் செய்யுங்கள்."[18]

ஐயப்பன் பிறந்த கதையும் ஓரினச்சேர்க்கை வகைப்பட்டது. **இந்துமதம் ஆண் ஓரினச்சேர்க்கையைப் பல கதையூடாக அங்கீகரிக்கின்றது.** மதத்தின் ஊடாகக் கட்டமைக்கப்பட்ட கேவலமான சடங்கு புணர்ச்சிகளும் வக்கிரங்களுமே மேல் உள்ளவை. இந்து மதத்தின் காட்டுமிராண்டித்தனத்தில் பெண் மீதான சடங்குகள் பாலியல் பக்கவிளைவுகளைத் தணிக்கும் மாற்றுப் புணர்ச்சியாக ஓரினப் புணர்ச்சிகள் உருவாக்கப்பட்டன. மிருகங்களுடனான





புணர்ச்சியைப் பலர் பார்த்து இரசித்து நடத்தும் பண்பாட்டுச் சடங்குகளை ரிக்வேதம் மந்திரமாக்கி, ஆண்கள் காமம் கொட்ட ஓதுவதன் மூலம் பாலியல் இன்பத்தை நுகர்ந்தான். அத்துடன் மிருகப் புணர்ச்சியை ஊக்குவித்து அவை நோய்ப் போக்கியாகவும், பொருட்களை அடையும் ஊடகமாகவும் என்று பலவிதமான விளக்கத்துடன் இவை நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சிகளின் போது ஆண்கள் இதைக் கண்டு களிப்பதன் மூலம், தமது பாலியல் வக்கிரத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

இயற்கையின் பாலியல் மீது நடந்த திரிபு, பலவிதமான வக்கிரமான புணர்ச்சிகளையும், இரசனைகளையும் கூட ஏற்படுத்தியது. இவை காலம், அறிவு, பொருளாதார மாற்றம் போன்றவற்றால் கைவிடப்பட, புதியதான அந்த இடத்தில் புகுந்து கொள்வதுமாகப் பாலியல் வக்கிரங்களை ஆணாதிக்கம் தொடர்கின்றது. இது சிலவேளை அங்கீகாரம் பெற்றும், பெறாமலுமாக உள்ளது. அங்கீகாரம் அற்றவை அதை உரிமையாக, சுதந்திரமாக ஆணாதிக்கத்துக்கு மாற்றாகக் காண்பதும், காட்டுவதும் வரலாறாக உள்ளது. இதுதான் ஓரினப்புணர்ச்சிக்கும் நிகழ்ந்தது, நிகழ்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 12. பெண்கள் கோருவது வரைமுறையற்ற புணர்ச்சியை அல்ல! வாழும் உரிமை மீதான சுயநிர்ணயத்தையே!

பெண்ணுரிமை, பாலியல் என இலக்கியங்கள் திடீரென புலம்பத் தொடங்கியுள்ளது. தங்கள் சொந்த வக்கிரங்களையும், அரிப்புகளையும் படைப்பாக்கத் தொடங்கியவர்கள் இன்று உலகமயமாதலில் பெண்ணுரிமை, பாலியல் எதுவோ அதையே எடுத்துப் பாதுகாக்கவும், முன்வைக்கவும் தொடங்கியுள்ளனர். ஏகாதிபத்தியக் கலாச்சாரம், பண்பாடு என எதுவும் இல்லை என மார்தட்டுமளவுக்கு இவர்களின் படைப்புகள் புற்றீசல் போல் வெளிக் கிளம்பத் தொடங்கியுள்ளது.

இந்த வகையில் **ஏங்கெல்ஸ்சைத் திரித்தும், மறுத்தும்** ஆணாதிக்க எழுத்தாகக் காட்டியும் தங்கள் ஏகாதிபத்திய உலகமயமாதல் பெண்ணியத்தை, **ஏங்கெல்ஸ்** பெயரால் ஏகாதிபத்தியப் பாலியலை நியாயப்படுத்த பின்நிற்கவில்லை. **ஏங்கெல்ஸ்** பாட்டாளி வர்க்கப் போராட்டத்தில் மார்க்சியத்தை நிறுவும் தொடர்ச்சியில், பெண்கள் எப்படி வாழ்ந்தனர்? என்பது முதல் சமூகம் எப்படி இருந்தது என்பது வரை நிறுவிய ஆய்வுகளின் தொடர்ச்சியில், கம்யூனிசச் சமூகத்தில், சமூகம் எப்படி இருக்கும் எனக் கோடிட்டுக் காட்டிய விடயத்தைத் திரித்தும், மறுத்தும் தனது ஆணாதிக்க நோக்கத்துக்குப் பயன்படுத்துகின்றனர். உலகமயமாதல் இன்று இரு தளத்தில் நடைபெறுகின்றது. ஏகாதிபத்தியம் தமது சுரண்டலிலும், பாட்டாளி வர்க்கம் சுரண்டலுக்கு எதிரான தளத்திலும் உலகமயமாதலை வேகப்படுத்தியுள்ளது. இந்தத் தளத்தில் கலாச்சாரம், பண்பாடு என அனைத்தும் நேர் எதிர் திசையிலானது. ஆனால் சமூகச் சீரழிவாளர்கள் இன்று பாட்டாளிவர்க்கம் அல்லாத பாதையில் தமது காலை எடுத்து வைத்துள்ளனர்.

ஏங்கெல்ஸ்சைத் திரித்து தனது நோக்கத்துக்குப் பயன்படுத்தும் போதும் சரி, அதற்கு முன்னாலும் சரி, பின்னாலும் சரி ஒருக்காலும்



ஆணாதிக்கமும் சக ஒடுக்குமுறைகளும்

**ஏங்கெல்ஸ்சையோ, மார்க்சியத்தை ஏற்றது கிடையாது.** ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சனைக்கு என எந்தத் தீர்வையும் கொண்டு இராத நிலையில் மக்களின் பிரச்சனைகளில் வம்பளந்து தமது அரிப்புகளுக்குத் தீனிதேடித் திரிகின்றனர். மக்கள் சந்தித்து வரும் துயரத்துக்கு என்ன தீர்வு? எனக் கேட்டால் அதுபற்றி அக்கறை கிடையாது என்பர்.

ஆனால் பெண்ணுரிமையிலும், பாலியலிலும் தீவிர அக்கறை திடீரென முளைத்துள்ளது. பாலியல் வக்கிரத்தைப் புறஉலகம் ஏற்படுத்த, அதற்கு தீனி தேடியதின் தொடர்ச்சியில் இன்று பலர் காமக் கதைகள், காமக் கவிதைகள் காமக் கட்டுரைகள் எழுதத் தொடங்கியுள்ளனர். உதாரணமாக ஐரோப்பாவில் உள்ள தமிழ் ஆண்கள் தொகைக்கு ஏற்ப தமிழ்ப் பெண்கள் இன்மையிலும், தமிழ் விபச்சாரிகள் இன்மையிலும், தொடரும் பொது மகளிர் முறையைத் தேடி பெண்களை வீதியிலும், வீடுகளை நோக்கி ஆபாசத் தொலைப்பேசிச் சேவை எடுத்தும் அரிப்புகளைக் கொட்டித் தீர்க்கின்றனர். இதன் மூலம் விபச்சாரச் சமூகத்தைப் பொதுமகளிர் முறையில் உருவாக்க முடியும் என்ற நப்பாசையில் அலைகின்றனர். இதில் இருந்து வேறுபட்டு, இன்று எழுத்தாளர்களின் பெயரில் அதை எழுத்தில் அதே வக்கிரத்துடன் கையாள்கின்றனர்

**பெண்ணுரிமை என்றால் என்ன? புணர்ச்சியின் நிலை என்ன?** என்ற விடயத்தை ஆராய்ந்து கொண்டு ஏங்கெல்ஸை எப்படி தனது நோக்கத்துக்குப் பயன்படுத்துகின்றனர் என ஆராய்வோம்.

பெண்ணுரிமை என்றால் வரைமுறையற்ற பாலியல் உரிமை என இன்று விளக்கம் கொடுக்கவும், அதை விமர்சித்தால் மார்க்சியவாதிகள் என்று முத்திரை குத்தி தாக்கவும் பின் நிற்கவில்லை. பெண்ணுரிமை என்ற பெயரில் பெண்கள் பாலியல் சுதந்திரம் கோரியா அலைகின்றனர்? இல்லை. மாறாக ஆணாதிக்க ஆண்கள் தான் அதைப் பெண்ணுரிமையின் பின்னால் தமது பாலுறவு (Sex) வேட்கையைத் தீர்த்துக் கொள்ள, எப்படிப் பொது மகளிர் விபச்சாரிகளை உருவாக்கி பாதுகாத்தனரோ, அதே பாணியில் பெண்களை ஒட்டு மொத்தமாக மாற்றிவிட முனைகின்றனர்.

இன்று உள்ள ஒருதாரக் குடும்ப அமைப்பில் பெண் மீதான ஆணின் பாலியல் மேலாதிக்கத்தை முழுப் பெண்கள் மீதும் திணித்து, அதை ஆண்கள் அனுபவிக்கக் கோருவதே இந்த ஏகாதிபத்திய உலகமயமாதல் என்ற காட்டுமிராண்டித்தனம். பெண்ணாதிக்கம் நிலவிய காட்டுமிராண்டிச் சமூகத்தின் தொடர்ச்சியில் தனிச் சொத்துரிமை ஆணாதிக்கத்தை நிறுவிய தொடர்ச்சியில், கட்டுப்பாடற்ற வரையறையின்றி பெண்கள், ஆண்கள் உறவு கொண்ட சமுதாயத்தில், ஆணாதிக்கம் பெண்களின் புணர்ச்சி மீது சூறையாடித் துன்புறுத்திய போக்கில் பெண்கள் ஓர் ஆணைத் தெரிந்தெடுத்து, ஆணாதிக்கச் சொத்துரிமை ஆண்களிடம் இருந்து தப்பித்துக் கொள்ள எடுத்த தற்காப்பு நிலையை, சொத்துரிமை கொண்ட ஆண்கள் தமக்கு உரிமையாக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்ச்சியில் தான் ஒருதார மணம் உருவானது. இங்கும் ஆணாதிக்கம் பெண்களின் தற்காப்புத் தெரிவைப் பறித்தெடுத்துத் தனக்குப் பெண்களைச் சொத்துரிமையாக்கியது.

தனிச் சொத்துரிமை சமூகத்துக்கு வெளியில் சிலரிடம் குவிவது வேகம் பெற்ற போது, பெண்ணின் தற்காப்புரிமை பறிக்கப்பட்டு அடிமைப்படுத்துவது தீவிரமாகியது. இது பெண்களின் மீது ஆண்களின் ஆணாதிக்கம் திணித்த நிகழ்ச்சியில், அதே ஆணாதிக்கம் புதிய சிறைக்குள் பெண்ணை நகர்த்தியது. இந்த வரலாற்று உண்மையை ஏகாதிபத்திய உலகமயமாதல் மறுத்து, பெண்களின் தேர்வைத் திரித்துக் கொச்சைப்படுத்திப் பெண்ணுரிமையின் பெயரில் மீளவும் வரைமுறையற்ற புணர்ச்சிக்கு, அதே ஆணாதிக்கத்திடம் பெண்ணின் கழுத்தைப் பிடித்து தள்ளிச் செல்கின்றது.

பாட்டாளி வர்க்கம் வரைமுறையற்ற ஆணாதிக்க விபச்சாரப் புணர்ச்சியையும், ஒருதாரமணத்தில் உள்ள காட்டுமிராண்டித்தனமான ஆணாதிக்கத்தையும் மறுத்து, மாறாகப் பரஸ்பரம் தெரிவைக் கோரும் ஒரு ஆண் - ஒரு பெண் மணமுறைக்குள் சுயாதீனமான வகையில் வாழவும், பிரியவும் உள்ள உரிமைக்குள் பெண்ணுரிமையிலான புணர்ச்சியை முன்வைக்கின்றது. இங்கு ஒருதாரமணம் என கூறுவது ஆணினால் மட்டும் தீர்மானிக்கப்படும் திருமணம், புணர்ச்சியைத்தான். பாட்டாளித் திருமணம் என்பது ஆண், பெண் என இருவரும் திருமணம் மற்றும் புணர்ச்சியில் ஆணாதிக்கத்துக்கு வெளியில் இணைவதையும், பிரிவதையும் குறிக்கும்.

அடுத்து ஒருதாரமணம் என்பது ஓர் ஆணும், பெண்ணும் ஆயுள் பூராவும் வாழக் கோரும் சமூக அமைப்பில் இது ஆணாதிக்கம் சார்ந்தது மட்டுமின்றி, அங்கு பெண் ஒருதார மணத்தில் சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில் மட்டும்தான் வாழ்கின்றாள்.

இதனால் இந்தச் சமூக அமைப்பு தகரும் போது ஓர் ஆணும் பெண்ணும் நீடித்து வாழும் இன்றைய குடும்பங்கள் இல்லாது போய்விடுமா? போய்விடும் என்கின்றனர் ஏகாதிபத்தியப் பெண்ணிலைவாதிகளும், ஆணாதிக்கவாதிகளும். ஆகவே அதை இன்றே ஏகாதிபத்திய உலகமயமாதல் வழியில் வரைமுறையற்ற புணர்ச்சில் தொடங்குவோம் என எச்சில் வழிய எழுதுகின்றனர்.

இதையே தமிழ் மக்களின் தேசியவிடுதலைப் போர் தொடங்கிய காலத்தில் பிளாட் (PLOT) இயக்கத்தில் மார்க்சியச் சாயம் பூசியவர்கள் ஏங்கெல்ஸ்சின் பெயரிலும், பெண்ணுரிமையின் பெயரிலும் ஆண், பெண் என ஒன்றாக வைத்து நடத்திய பாசறையில் வரைமுறையற்ற புணர்ச்சி பாட்டாளி வர்க்கச் சமுதாயத்தில் நிலவும் என்று ஏமாற்றி, அன்றே பெண்களைத் தமது ஆணாதிக்க வக்கிரத்துக்குப் பயன்படுத்தியவர்கள், இன்று அதே ஆணாதிக்கத்துடன் ஆய்வாளர்களாகவும், இராஜதந்திரிகளாகவும் உயிருடன் நடமாடுகின்றனர்.





கடந்த பத்து வருடத்துக்கு மேலாக ஐரோப்பாவில் இலக்கியம், அரசியல் பேசும் இலக்கியச் சந்திப்புகளின் வாரிசுகள் பெண் விடுதலையை ஒருதாரமணத்துக்கு எதிராகப் பலதாரமணத்தை முன்வைத்து பிரச்சாரம் செய்தனர். சமூக அக்கறை கொண்ட பெண்களை இக்கோட்பாட்டுக்குள் வழி நடத்தி தமது ஆணாதிக்கப் பாலியலுக்குப் பயன்படுத்தி விட்டு முரண்பாடு வருகின்ற போது அப்பெண்களை "வேசை" எனப் பலர் முன்னிலையில் கூறவும் தயங்காத இலக்கிய வாரிசுகளையும், இன்றும் பெண்ணுரிமை பேசும் வாயடிப்புகளையும் இதன் பின் தெளிவாகக் காணமுடியும். அ.மார்க்ஸ் "வெள்ளைத் திமிர்" என்ற நூலில் தமிழ்ப் பெண்ணை "லெஸ்பியன்" என வாய்க் கூசாது தனது நோக்கத்துக்குப் பொய் எழுதியதையும் இதன் பின்னணியில் காணமுடியும்.

ஓர் ஆணும் பெண்ணும் நீடித்து வாழ முடியாதா? அல்லது தனித்தனியாக வாழவும் திடீர்திடீரென கூடும் வரைமுறையற்ற புணர்ச்சியா? மனிதச் சமுதாயத்தின் இலக்காக இருக்கும். இது இன்று அடிப்படையான முக்கியமான கேள்வியாக எம்முன் உள்ளது. கடந்து சென்ற சமுதாய நடைமுறையும் நிகழ்கால வாழ்வும் எதிர்காலத்தை வழிகாட்டுவதில், தீர்க்கமானவை.

இது சமுதாயம் தனக்குத் தேவையான பொருளாதாரத்தை எப்படி எதன் ஊடாக நிவர்த்தி செய்தது என்பதன் ஊடாக மட்டும்தான் ஆண் - பெண் உறவுமுறை தீர்மானிக்கப்படுகின்றது.

காட்டுமிராண்டிச் சமூகமாக மனிதன் இருந்த போது இயற்கை மீது மட்டும் உணவைச் சார்ந்து இருந்த போது, உணவுக்கான போராட்டத்தில் மிருகத்துடன் மனிதன் போராட வேண்டியிருந்தது. இதன் போது அவன் கூட்டமாக வாழ்வதும், போராடுவதுமே வாழ்க்கையாகக் கொண்ட நிலையில், ஆண் பெண் உறவும் எந்தக் கட்டுப்பாடுமின்றி கூட்டத்துக்குள் நீடித்தன. இந்தப் போக்குதான் மனிதத் தோற்றத்தின் மிக நீண்டகாலம் நீடித்த ஆண் - பெண் உறவுமுறையாக இருந்தது.

இங்கு உணவுப் போராட்டம் என்பது மற்றொரு மனிதக் குழுவுக்கிடையிலானதாகவும், மிருகத்துடனானதாகவும் இருந்த காலம் முழுக்கவும் குழுவைத் தாண்டிய ஆண் - பெண் உறவு நிகழவில்லை. இக்காலம் பெண்களை அடிப்படையாகக் கொண்டு மட்டும் குழந்தையை அடையாளம் காணக் கூடியதாக இருந்ததுடன் பெண்களே குடும்பத்துக்குத் தலைமை தாங்கவும் செய்தனர். அத்துடன் **முதல் விவசாயியாகப் பெண் இருந்ததுடன், உயிருடன் பிடிபட்ட மிருகங்களைப் பெண் வளர்க்கவும் கற்றுக் கொண்டாள்.** பெண்ணின் இக் கண்டுபிடிப்பு மனிதக் குலத்தின் முக்கியமான பாய்ச்சலுக்குரிய ஒன்றாக இருந்தது. இதனால் உணவு கிடைக்காத நிலையிலும் பெண் உணவு கொடுக்கும் ஒரு பொருளாதார அடிப்படையைக் கொண்டு இருந்ததால் பெண்ணின் மதிப்பு மேலும் உயர்ந்தது. இதுவே பின்னால் பெண்ணை அடிமைப்படுத்த நெம்புகோலாகவும் மாறியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்னால் கால்நடை வளர்ப்புடன் விரிவுபடத் தொடங்கியது முதல், வேலைப் பிரிவினையும், நிலத்தில் நடந்த உற்பத்தியும் உபரியை (மேலாதிக்கத்தை) உருவாக்கியதால் மனிதன் மேலதிக உற்பத்திக்கான வழிவகைகளைக் காணத் தொடங்கினான். இதில் இருந்தே முதல் வர்க்கப் பிளவு உருவானதுடன், இதுவே பெண்ணை அடிமையாக்கியது.

இதன் தொடர்ச்சியில் மற்ற குழுக்களுக்கிடையிலான யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டவரைக் கொன்று விடும் மரபில் இருந்து அவனை வைத்திருப்பதன் மூலம் மேலதிக உபரியைச் சேகரிக்க முடியும் என கண்டு கொண்ட நிலையில் உபரி ஆணைச் சார்ந்ததால், பெண் தனது அதிகாரத்தைச் சொத்துரிமையின் பின்னால் மேலும் இழந்தாள். யுத்தத்தில் கூடுதலாக ஆண்கள் ஈடுபட்டதால் கைதான மனித அடிமைகள் அவனின் சொத்தாக மாறவும், அதன் மூலம் மேலதிக உபரியை ஆண் பெறத்தொடங்கிய நிகழ்ச்சிப் போக்கில்தான், **ஆண் பெண்ணிடம் இருந்து அதிகாரத்தை நீண்ட பல போராட்டத்தினூடாகப் பொருளாதார ஆதிக்கத்தின் ஊடாகக் கைப்பற்றிக் கொண்டான்.**

இக்காலத்தின் முன் நீடித்து வந்த வரைமுறையற்ற குழுவுக்கிடையிலான புணர்ச்சியில் அன்பு, காதல் என எதுவும் இருந்தது கிடையாது. இங்கு ஜனநாயகம் என எதுவும் இருந்ததில்லை. ஆண் பெண் இனவிருத்தி வேறுபாட்டுக்கு அப்பால் யாரும் அடிமையாக வேறுபட்டு இருக்கவில்லை.

இதன் பின்னான சமுதாயத்தில் பெண்ணாதிக்கம் ஆணின் பொருளாதார மேன்மையுடன் ஆணாதிக்கத்துக்குக் கை மாறிய நிலையில், ஆணாதிக்கம் பெண்கள் மீது பொருளாதார மேலாதிக்கம் மூலம் பாலியல் வன்முறையைக் கையாண்டது, கையாள்கின்றது. பெண்கள் மீதான ஆணாதிக்கமும், பெண்கள் மீதான ஆணின் ஒருதலைபட்சமான பாலியல் வேட்கையும் பெண்களைச் சூறையாட, பெண்கள் இதிலிருந்து தப்பித்துச் செல்ல, குறித்த ஆணைப் பெண் தேர்ந்தெடுப்பதன் மூலம் தற்காப்பைப் பெற்றாள். இந்தப் போக்கில் தனிச் சொத்துரிமைக்குத் துணையாகப் பெருகிய உபரியும் சேர அங்கு காதலும், அன்பும் இணைந்து கொண்டது. அதாவது சொத்துரிமையின் மேலும், ஆணாதிக்கக் கொடூரத்தின் மேலும், காதல் - ஜனநாயகம் - அன்பு என்பன சமுதாயத்துக்குள் புகுந்து கொண்டது.

பெண் ஒரு தலைபட்சமாக ஒருதாரமணத்தைத் தேர்ந்தெடுத்த சமூகப் போக்கிற்கு ஆணின் கொடூரமே காரணமாகும். இங்கு அக்கம்பக்கமாக இணைமணங்கள் கூட இதன் தொடர்ச்சியில் தனிச்சொத்துரிமை ஆதிக்கம் பெறாத நிலைகளில் நீடித்தும் இருந்தது. பெண்கள் மீதான ஆணின் நெருக்குதல்களில் இருந்து பெண் மீள்வதுக்குப் பெண் தெரிவு செய்த ஒருதாரமணம் பாதுகாப்பான வடிவமாக இருந்தது. இதற்கு எதிராக ஆணாதிக்கம் பெண் மீதான அனுபவிக்கும் ஆணாதிக்க உரிமையைக் கோரி நின்றது.





ரிக் வேதத்தில், "ஹே குமாரி! உன்னுடைய முலைகள் பரந்திருக்கின்றன. நீ நினைப்பது போல நீ இப்போது சிறு பெண் இல்லை. உன்னுடைய முலைகள் புருஷனால் பிசையப்பட வேண்டியவையாகும். உன் தாயார் அவரது முலைகளைப் புருஷர்களிடம் கொடுக்காததால் தொங்கிப் போய் விட்டது. தகராறு செய்யாமல் நீ இடத்திற்கு வருவாயோ?"[18] என்ற பார்ப்பனிய ஆணாதிக்க வேதச் சூத்திரங்களின் பின் பெண்களின் போராட்டத்தையும், பெண்ணின் தெரிவையும் துல்லியமாக்குகின்றது. **ஒருதாரமணம் ஆணின் தெரிவல்ல பெண்ணின் தெரிவு என்ற ஏங்கெல்ஸ்சின் சரியான கண்டுபிடிப்பை இது நிறுவுகின்றது.** ஆனால் ஒருதாரமணத்தைப் பெண்ணின் தெரிவாகக் காட்டும்போதே, அதைத் திரித்து பெண் பல கணவன் மணத்தைப் போராடிப் பெற வேண்டியதாகக் காட்டும் வடிவங்கள் ஏகாதிபத்தியப் பெண்ணியச் சீரழிவின் பாதையில் இணைவதாகும்.

பெண்கள் ஆணின் துன்புறுத்தலில் இருந்து ஒதுங்கியதையும், பெண்ணின் ஒரு தலைப்பட்சத் தெரிவையும் காட்டுகின்றது. இதில் தாய், மகள் என்ற இரு தலைமுறையின் போராட்டத்தில் ஆணாதிக்கத்தின் இழுபறியான போராட்டத்தையும், ஆணாதிக்கப் பலதாரமணத்தின் போக்கையும் வெளிப்படுத்துகின்றது. பெண் ஒருதாரமணத்தின் ஊடாக தற்காப்பு பெற்றதையும் காட்டுகின்றது. அத்துடன் பெண்ணின் விபச்சாரத்தைக் கோருவதில் பின் நிற்காத ஆணாதிக்க விளக்கமும் முன்வைக்கப்படுகின்றது.

இன்று உயிரியல் ஆய்வாளர்கள் தமது ஆய்வைக் குரங்கு இனங்களின் வளர்ச்சி பெற்ற இனங்கள் மீது நடத்திய போது பல உண்மைகளைப் படமாக்கி உள்ளனர். பெண் குரங்கு மீது பாலியல் வேட்கையுடன் ஆண் குரங்குகள் போட்டி போடுவதையும், பெண் குரங்கு மறுத்து போராடுவதனூடாகப் பெண் குரங்கு தன்னை ஓர் ஆண் குரங்கிடம் ஒப்படைப்பதையும் காண முடிகின்றது. ஆண் குரங்கு இந்தப் பாலியல் வேட்கையில் சண்டை செய்து வெல்வது அவசியமானதாக இருக்கின்றது. இது மட்டும்தான் பெண் குரங்கின் மீதான மற்ற ஆண் குரங்கினால் ஏற்படும் பாலியல் வன்முறையில் இருந்து தடுக்கின்றது. யுத்தத்தில் வெல்லும் ஆண் குரங்கின் பலம் தான் மற்ற ஆண் குரங்குகளின் வன்முறைக்கு எதிரான தற்காப்பைப் பெண் குரங்கிற்கு வழங்குகின்றது. இங்கு பெண் குரங்கு விரும்பி அனுமதிப்பது நிபந்தனையாகின்றது. வேறு சில இனங்களில் ஆண் குரங்கானது பெண் குரங்கு விரும்பும் அன்பளிப்பை வழங்குவதன் மூலம், பெண் குரங்கு ஏற்றுக் கொண்டால் மட்டுமே உறவு வரையறுக்கப்படுகின்றது. இங்கு பல ஆண் குரங்குகள் ஒரு பெண் குரங்குடன் உறவு கொள்ள போராடும் போது, பெண் குரங்கு ஒன்றை மட்டும் தெரிவு செய்கின்றது. இந்த ஜோடி அந்தப் பாலியல் தேவையின் காலத்துக்குள்ளும், சில குறித்த காலத்துக்கும், சில நீண்ட ஆயுளுக்கும் என பலவாகக் குரங்கு இனத்துக்குள் மாறுபடுகின்றன. இது மனித இனத்துக்குள்ளும் வேறுபாடு இன்றி பல பண்புகள் நீடிக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பழைய காலத்தில் ஆண் தனது வீரத்தைப் பெண்ணுக்கு நிலை நாட்டிய நிலையில்தான் பெண் மாலையிடும் வடிவங்கள் இருந்தன. பல புராணக் கதைகள் இதை வெளிப்படுத்துகின்றன. இதேபோல் பல ஆண்களை நிறுத்தி, அதில் பெண் தேர்ந்து எடுத்து, ஒருவனுக்கு மாலையிடுவது போன்றன பெண் தனது தற்காப்பை நாடி தெரிந்த ஒருதார மணத்தின் எச்சமாகும். இதுபோல் சாமத்தியச் சடங்குகள் ஆரம்பத்தில் பெண் ஆணைத் தெரிவு செய்யும் ஒரு சடங்காகவே இருந்தது. தாய்மாமனுக்கு இருக்கும் உரிமை தாய்வழிச் சமூகத்திலிருந்து பின்னால் மருவியதில் ஏற்பட்டவையே. இவை பெண்ணின் உரிமையாக இருந்தது.

முன்பு யுத்த மூலம் அடைந்தவை வீரவிளையாட்டுகள் மூலம் பெண்ணைத் திருப்தி செய்ய வேண்டியிருந்தது. இவை பின்னால் ஆதிக்கம் பெற்ற தனிச்சொத்துரிமை மூலதனத்தின் பின்னால் மறுக்கப்பட்டது. குறித்த தனிச்சொத்து பலத்தைத் தீர்மானிப்பதாக மாறிய போது பெண்ணின் தெரிவு மறுக்கப்பட்டுச் சொத்து தெரிவு ஒருதாரமணத்தின் மூலமாகியது.

இன்றுவரை கூட காதலை எடுத்தால், பெண்ணுக்கு அதுவே தற்காப்பு வேலியாக உள்ளதுடன், பெண் மட்டுமே ஒருதார மணத்தில் காதலிப்பவளாகவும் உள்ளாள். ஆண்கள் எப்போதும் பலதாரமணத்தின் பிரதிநிதியாக இருந்தபடி பெண்ணிடம் ஒருதாரமணத்தைத் திணிக்கின்றான். பெண்கள் **இந்த வன்முறையை மீற விரும்பும் போது ஒருக்காலும் பல ஆண்களின் ஆணாதிக்கத்தை, ஒரு ஆணுக்குப் பதில் கோரிப் போராடவில்லை**. மாறாக மனமொத்து வாழும் சுயநிர்ணயத்தையே அடிப்படையாகக் கொண்ட, இணைமணமே கோரிக்கையாக எப்போதும் இருந்துள்ளது. ஆனால் இது ஆணாதிக்கத்தின் இருதரப்பால் எப்போதும் கொச்சைப்படுத்தப்பட்டு வருகின்றது.

முதலாவதாகப் பெண்ணுரிமையின் பெயரில் ஆணாதிக்கவாதிகள் தமது பலதாரப் பாலியல் வேட்கைக்குப் பெண்களைப் பயன்படுத்த, பெண்களின் சுயநிர்ணயக் கோரிக்கையைக் கொச்சைப்படுத்தி, அவர்களின் விடுதலைக்கு எதிராகத் தமது ஆணாதிக்கத் தகவமைப்பைப் பாதுகாக்க, பெண்ணுரிமையின் பெயரால் பெண்களைத் தமது விபச்சார வேட்கைக்குள் நகர்த்த வரைமுறையற்ற புணர்ச்சி கோட்பாட்டை வைக்கின்றனர். இவர்கள் இதனடிப்படையில் பெண்ணுக்கு கற்பு இல்லை என்கின்றனர். கற்பு பற்றிய திரிபுக்கூடானக் கொடூரமான ஆணாதிக்க நடத்தையைச் சாதகமாக்கும் ஏகாதிபத்திய ஆணாதிக்கம், இதனூடாக விபச்சாரத்தை முன்மொழிகின்றனர். இது ஏகாதிபத்தியப் பொருளாதார வடிவமாக நீடிக்கின்றது.

இரண்டாவது தரப்பு ஒருதாரமணத்தில் பெண் மட்டும் காதலிக்கவும், ஆண் பலதார மணத்தில் நீடிக்கவும் உள்ள சலுகைகளைத் (வரைமுறையற்ற புணர்ச்சியைத்) தக்கவைக்க, பெண்ணின் சுயநிர்ணயக் கோரிக்கையைக் கொச்சைப்படுத்தி பல கணவன் வாழ்வைக் கோருவதாகச் சேறடிக்கின்றனர்.





இவர்களும் கற்பு உண்டு என்கின்றனர். இதன் மூலம் திரிவுபடுத்திய கற்புக் கோட்பாட்டை விபச்சாரத்துக்கு எதிராக முன்நிறுத்தி நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க ஒருதாரமணத்தில் பெண்ணைச் சிறை வைக்கின்றனர். இது நிலப்பிரபுத்துவப் பொருளாதார வடிவமாக நீடிக்கின்றது.

பெண்ணின் சுயநிர்ணயக் கோரிக்கையான பரஸ்பரம் காதலிக்கவும் சேர்ந்து வாழும் உரிமையைத் திரிபுபட கொச்சைப்படுத்தி, ஒரு தரப்பு பலகணவன் வாழ்வைக் கோருவதாகக் காட்டி எதிர்க்க, மறு தரப்பு பல கணவன் மணத்தைக் கோருவதோடு இருவரும் அச்சொட்டாக ஒரே புள்ளியில் ஒரே நோக்கத்துக்காக இணைகின்றனர். இரண்டையும் பெண் எதிர்க்கின்றாள் என்பதை மூடிமறைப்பதன் மூலம், ஆணாதிக்க நலன்களை மூடி கலர் (வண்ணம்) அடிக்கின்றனர்.

பல கணவன் முறையைக் கோருபவரின் கோட்பாடு ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு இசைவாக இருக்க, கோருவதாகக் காட்டும் (கோருவதாகக் கூறி எதிர்க்கும்) கோட்பாடு நிலப்பிரபுத்துவப் பொருளாதாரப் பண்பாட்டுக்கு இசைவாக உள்ளது. அதனால் தான் இரு பொருளாதார அமைப்பும் ஒன்றில் இருந்து ஒன்று விலகாதவாறு உலகளவில் (ஏகாதிபத்தியத்திய நாடுகளில் தேசிய முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துவிட்டது.) ஆளும் வர்க்கமாக இன்று உள்ளனர். இது பெண் பற்றிய மதிப்பீட்டிலும் ஒன்றாக உள்ளது.

இன்று பண்பாட்டு ரீதியில், கலாச்சார ரீதியில், பொருளாதார ரீதியில் எடுத்தால் ஏகாதிபத்தியப் பொருளாதார அலகு பெண்ணை வெறும் கவர்ச்சிப் பண்டமாக, தன் கூலிப் பட்டாளமாக அடையாளப்படுத்திய சமூக அமைப்பை உலகின் முன் படைத்துள்ளதுடன் அதை உலகம் தழுவிய அளவில் நகர்த்துகின்றது. இன்று ஏகாதிபத்தியப் பொருட்களின் சந்தை ஆணாதிக்க வக்கிரக் கண்முன் (இங்கு ஆண் - பெண் வேறுபாடின்றி) பெண் நிர்வாணக் கோலத்தில் அவளின் பெண் உறுப்புகள் மீது மட்டுமே குவிந்து சாத்தியமாக்கியுள்ளது.

ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள பெண்களும், மூன்றாம் உலகின் மத்தியதர வர்க்கத்துக்கு மேல் உள்ள பிரிவுப் பெண்களும், சர்வதேச வர்த்தக நலனுக்குள் கட்டமைக்கப்படுகின்றாள். பெண்ணின் அழகு, உடல் அங்கங்கள், அவளின் மாறுபட்ட உடைகள், அவளின் அழகு சாதனப் பொருட்கள், அவள் பயன்படுத்தும் சர்வதேசத் தர நிர்ணயம் பெற்ற பொருட்கள், அவள் பயன்படுத்தும் பொருட்கள், அவளின் அணுகுமுறைகள்...... என அனைத்தும் எப்படி, எங்கு, யாருக்கு என தீர்மானகரமான வகையில் வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கு வெளியில் யாரும் சுதந்திரமாக இருக்கவோ, சிந்திக்கவோ, காதல் செய்யவோ முடியாது. இதற்கு எதிரான போராட்டம் கூட இதற்குள்ளானதே ஒழிய வெளியில் அல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தச் சமுதாய அமைப்பில் பலதார மணவாழ்க்கையை ஆண்களுக்கு உள்ளது போல் பெண்களுக்கும் பல கணவன் வாழ்க்கையை ஏகாதிபத்தியம் ஏன் சிபாரிசு செய்கின்றது? என்பதை ஆராய்வோம்.

பெண்கள் தமது தற்காப்புக்காக ஓர் ஆணைத் தேர்ந்து எடுத்த (இந்தப் போராட்டத்தில் பெண்களின் மீதான ஆணின் பலதாரமண வேட்கையை விட்டுக் கொடுக்காத போராட்டத்தில், ஆணாதிக்கத்தின் ஆளும் வர்க்கம் பெண்களிடம் சமரசம் செய்யும் போது தனிச் சொத்துரிமையின் வாரிசு உரிமையூடாகவும், பெண்ணின் திருமணத்துக்கு முன்னால் அப்பெண்ணைப் பொதுவில் அனுபவிக்கவும் அல்லது பூசாரியோ, அச்சமூகத் தலைவனோ தனியாகவும், கூட்டாகவும் திருமணத்துக்கு முன் முன்னுரிமை எடுத்து அப்பெண்ணை அனுபவிக்கும் உரிமையை மிக அண்மைக் காலம் வரை தக்கவைத்த ஆணாதிக்கப் பலதாரமண முறையைப் பெண்ணின் ஒருதாரமணத் தெரிவுக்கு எதிராகத் தக்கவைத்து நீடித்தது. இதன் தொடர்ச்சியால் தான் விபச்சாரமும், பொதுவான மகளிர் பிரிவுகளும் உருவாகின.) ஜனநாயக உரிமையை ஆணாதிக்கம் மறுத்து, தனது தனிச் சொத்துரிமையின் பின்னால் இறுகிய ஒருதாரமணத்தைத் திணித்து, இன்று தனது வாரிசுகளை உருவாக்க நீடித்த குடும்ப அமைப்பு ஏகாதிபத்திய உலகமயமாதலின் பின் அவசியமற்றதாகி உள்ளது.

சொத்துரிமை என்பது பரந்துபட்ட மக்களிடம் இனி நீடிக்க முடியாது பறி போகின்றபோது வாரிசுரிமை என்பது பரந்துபட்ட மக்களிடம் அவசியமற்றதாகின்றது. ஆணாதிக்க ஒருதாரமணம் தனிச் சொத்துரிமையில் மொத்த மக்கள் முன் வாரிசுரிமையின் பெயரில் எப்படி வளர்ச்சி பெற்றதோ, அதே வழியில் சொத்துரிமை பரந்துபட்ட மக்களிடம் இல்லாது போகின்றபோது, ஆணாதிக்க ஒருதாரகுடும்ப அமைப்பு தகர்கின்றது. இந்தத் தகர்வு என்பது இரு தளங்களில் நடக்கின்றது. பாட்டாளி வர்க்க வழிகளிலும், ஏகாதிபத்திய வழிகளிலும் இது வேகம் பெற்றுள்ளது.

சொத்துரிமையில் வாரிசுக்கான குடும்ப அலகு, ஏகாதிபத்திய உலகமயமாதலால் சொத்துரிமை பரந்துபட்ட மக்களிடம் தகர்கின்ற போதும், தொடர்ந்து சமூகம் தனிச் சொத்துரிமை வடிவில் இன்று நீடிப்பதால் ஆணாதிக்கமும் அதன் எல்லைக்குள் நீடிக்கின்றது. தனிச்சொத்துரிமை விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரிடம் நகர்த்திச் செல்லும் போக்கில் சொத்துரிமை அற்றவன், தனிச் சொத்துரிமையைப் பெற்று முன்னேற முடியும் என்ற ஜனநாயகச் சுதந்திர வடிவத்தின் மீதான நம்பிக்கைகள் நீடிக்கின்ற போக்கில், ஆணாதிக்கம் ஏகாதிபத்திய வடிவில் நீடிக்கின்றது.

**மார்க்ஸ் சொத்துரிமை பற்றிய ஆய்வுகளில் கூறும் வரிகள் தான் இதன் அடிப்படையாகும். "ஒவ்வொரு குடிமகனுக்கும் முதற்பெரும் கடமை மூலதனம் திரட்டுதலே என விதிப்பது முதலாளித்துவப்**





**பொருளாதார அறிஞர்களுக்கு மிக முக்கியமானதாய் இருந்தது."**[35] இங்கு ஒரு கேள்வி எழலாம். அந்தச் சிலரிடம் உள்ள சொத்துரிமைக்குப் பின்னால் உள்ள வாரிசுரிமையின் குடும்ப நிலை என்ன?

ஏகாதிபத்தியச் சொத்துரிமை வாரிசுகளான பிரிவுகள் எப்போதும் இக்குடும்ப அமைப்பைப் பாதுகாக்க விடாப்பிடியாக நிற்க முயல்கின்றன. ஆனால் சொத்து குடும்பத்துக்கு இடையில் பிரியாத பெரும் சொத்து வர்க்கத்திற்குத் தேவையான தனிக் குழந்தைகளான குடும்பத்தைப் பெரும் சொத்துடைய வர்க்கம் விரும்புகின்றது. அத்துடன் இன்றைய திருமணங்கள் பெண்களுக்குச் சொத்தில் பங்களிப்பதால், நடைபெறும் விவாகரத்துகள் சொத்தைப் பிளந்துவிடும் என்பதால், சொத்தைப் பிளக்காது குடும்பத்தை உருவாக்க, உயர் சொத்துடைய வர்க்கத்தாலும் குடும்பத்தைப் பாதுகாக்க முடியவில்லை. மாறாகப் பழைய குடும்பத்தை நவீனத்தில் விரும்புகின்றன. ஆனாலும் ஏகாதிபத்தியச் சொத்துரிமை பலம் கொண்டது என்பதால் அதன் வீச்சு பண்பாடு, கலாச்சாரம் என எல்லாவற்றிலும் ஆழப் புதைந்து போயுள்ள போது, இருந்த பாரம்பரியமான குடும்ப முறை பரந்துபட்ட மக்களிடம் சொத்துரிமை என்ற பொருளாதார அடிப்படையின்றி சிதறிவிடுகின்றது. சொத்துரிமையும் வேண்டும், பழைய வாரிசுரிமையிலான குடும்ப அமைப்பும் வேண்டும் என்ற முரண்பாட்டில் இருந்து பெருமளவு சொத்துடைய வர்க்கப் பிரிவு பழைய வரைமுறையற்ற புணர்ச்சியைத் தன்னகத்தே எடுத்துக் கொண்டது. அதாவது சொத்துரிமையின் பின்னால் நீடித்த ஒருதாரக்குடும்ப அமைப்புக்கு வெளியில் பொது மகளிர் முறையான விபச்சாரம், கோயிலுக்கு விடுவது, மன்னர் மாளிகைகள், வணிகர் அந்தப்புரங்கள், பொது களியாட்ட மையங்களில் பெண்களை அனுபவித்த பணக்காரர்கள், இன்று அதைப் பொதுவான சமூக நடைமுறைக்குள் முரண்பாட்டுடன் நகர்த்தியுள்ளனர்.

இன்று சாதாரண திரைப்படத்தில் கூட படுக்கையறைக் காட்சி நீலப் படத்துக்குப் புறம்பாக எங்கும் புகுந்து விட்டது. திரைப்படங்கள், தொலைக்காட்சிப் படங்கள் ஒரு கதாநாயகன் (இவன் இச்சமூக அமைப்பைப் பாதுகாக்கும் நேர்மையுள்ள உதாரண மனிதனாக இச்சமூகம் அங்கீகரிக்கும்.) தொலை நோக்கு கண்ணாடி கொண்டு அடுக்கு மாடிகளில் பெண்களின் நிர்வாணக் காட்சியையோ, புணர்ச்சிக் காட்சியையோ தேடும் சமூக முன்னுதாரணத்தைக் காட்டி இன்று சமூகம் அதை நடைமுறையாகக் கையாள்கின்றது.

அண்மையில் பிரெஞ்சு நீதிமன்றத்தில் நீதி கிடைக்காத ஒரு பெண், பிரான்சு தொலைக்காட்சியில் - பக்கத்து வீட்டுக்காரன் தனது சுவரில் மெல்லிய துளையிட்டு மிக நுண்ணிய கேமரா கொண்டு (உளவு அமைப்புகள் போன்று) தனது புணர்ச்சியைப் பார்த்த வக்கிரத்தை அம்பலப்படுத்தி நீதி கோரினாள். திரைப்படத்தில் சிறைக்குள் ஆய்வு செய்யச் சென்ற பெண்ணை, பொலிசுக்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெரியாமல் கத்தி முனையில் பெண்ணின் உள்ளாடையைப் பறித்த காட்சி இச்சமூகத்துக்கு முன் அதைச் செய்யவும், இது கூட புணர்ச்சிக்கான பாதையாகவும் காட்டுகின்றனர். இப்படி பல.

இன்று ஜப்பான், அமெரிக்கா எங்கும் பாடசாலையைச் சுற்றிலும், வெளியிலும் பெண்கள் அணிந்த உள்ளாடைகள் முதல், வயது, பெண் பற்றிய தரவுகள் வரை படத்துடன் விற்பனைக்கு வந்துள்ளது. இது கூட புணர்ச்சியை அனுபவிக்கும் விடயமாக, தனிப்பட்ட பிரச்சினையாகக் காட்டப்படுகின்றது. இந்தப் பாலியல் (Sex) வடிவத்தை ஓரினச் சேர்க்கையை ஆதரிக்கும் அனைத்து முதலாளித்துவக் கோட்பாட்டு பற்றி சீரழிவாளர்கள் என்ன சொல்வார்களோ தெரியவில்லை.

இன்று நீலப்படங்களில் மட்டும் நீடிக்கும் மிருகங்கள் உடனான பாலியல் உறவும், இன்பமும்(?!) நாளைச் சமூக நடைமுறையாக வர நீண்ட காலம் செல்லாது. ஏனெனின் இன்று ஏகாதிபத்திய நாடுகளில் மனிதனின் அன்புக்குரிய வளர்ப்பு மிருகங்கள் மூலம் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய தயார் நிலையில் உள்ளதால், இதைக் கொண்டே குடும்பத்தைத் தகர்க்க வேகமாகப் பயன்படுத்தமுடியும்.

இன்று வீட்டு மிருகங்களை (நாய், பூனை) மனிதனை விட அன்புக்கு உரியனவாக ஏகாதிபத்திய மக்களால் வளர்க்கப்படும் சதவீதத்தைத்தான் அட்டவணை 8-இல் பார்க்கின்றோம்.

அட்டவணை - 8

புள்ளிவிபரம்[1]

| நாடுகள் | சதவீதம் |
|---|---|
| அமெரிக்கா | 60% |
| இத்தாலி | 41% |
| பிரான்ஸ் | 35% |
| இங்கிலாந்து | 29% |

இந்த மிருகங்கள் மனிதனின் படுக்கையறைக் கட்டிலைப் பகிர்கின்றது. முத்தத்தை வழங்குகின்றது. உழைப்பைப் பகிர்கின்றது. அடிமைத்தனத்தில் அதன் மிருக எல்லைக்குள் உடலுறவுக்கு முந்திய அனைத்தையும் இம்மிருகங்கள் மனிதனுடன் பங்கிட்டுப் பெற்றுக் கொள்கின்றது. இதைத் தொலைக்காட்சிகள் பெருமைப்பட இந்தக் கேவலத்தைக் காட்டுகின்றன. பாலியல் உறவு மட்டும்தான் காட்சிப்படுத்தப்படவில்லை. ஆனால் நீலப்படம் மிருகப் புணர்ச்சியை உள்ளடக்கியே வெளிவருகின்றது.





அண்மையில் சிறைக்கு அனுப்பிய ஒரு வழக்கில், பால்குடி பேரக் குழந்தையின் பால் தேவையைப் பூர்த்தி செய்ய மறுத்து, தனது ஆண் உறுப்பின் வக்கிரத் தேவையை ஈடு செய்ததை அடுத்து, பிரெஞ்சு நீதிமன்றம் வரை சென்றது போன்ற நிகழ்ச்சிகள் இந்தச் சமுதாயத்தின் அவலத்தைக் காட்டுகின்றது. நாய், பூனைகள் தமது செல்வச் சீமான், சீமாட்டிகளின் மார்புகளிலும், மடிகளின் கீழுள்ள வக்கிரங்களைப் பூர்த்தி செய்யும் பணியை மறுப்பதுக்கு எந்தவிதமான மறுவிளக்கமும் அவசியமற்றவை.

நாளைப் பெண்ணியமும், ஜனநாயகச் சுதந்திரமும் மிருகப் புணர்ச்சி இயற்கையென்றும், தனிப்பட்ட உடலுடன் தொடர்புடையது என்று போகிற போக்கில் வாதிடுவர் என்பது அவர்களின் இழிவான சீரழிவுகள் காட்டுகின்றது.

இன்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் பாலியல் இன்பம் அடைய முடியும் என்ற விளம்பரம், திரைப்படங்கள் எல்லாம் ஏகாதிபத்திய விளை பொருளாகி நடைமுறைக்கு வந்துள்ளது.

இன்று புதிய தொழில் நுட்பமான இணையத்தில் (Internet) ஆண் பெண் சந்திக்காமலே பாலியல் நுகர்வை அடைய முடியும் என்ற விளம்பரம் மட்டுமின்றி இது எதார்த்தமாக்கப்பட்டுள்ளது. இதற்கான மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இணையத்தில் (Internet) நேரடியாகப் பெண் தோன்றி கதைத்தபடி (பேசியபடி) ஆடையுரிவு முதல் அனைத்தையும் பாலியல் வக்கிரத்தில் பெறமுடியும்.

ஏகாதிபத்தியச் சீரழிவாளர்கள் ஓரினச் சேர்க்கை, கூட்டுக் கலவி, தொலைபேசிக் கலவி, இணையத்தில் (Internet) கலவி, உள்ளாடைக் கலவி, நீலப்படக் கலவி, மிருகக் கலவி என அனைத்தையும் நியாயப்படுத்தவும், பாதுகாக்கவும் கட்டுரையையும், இலக்கியத்தையும், கலையையும் சுதந்திரத்தின் பின் உருவாக்குகிறது, இது ஊர் உலகத்தில் இல்லாததா எனக் கூறி நியாயப்படுத்தவும் செய்கிறது. இவைகளை ஜனநாயகத்தின் பெயரில் தனிமனிதச் செயலாக, சுதந்திரமாகக் காட்டி இந்த ஏகாதிபத்திய விளைவுகளை நியாயம் கற்பிக்கப் பின்நிற்கவில்லை, அதை முன்னெடுக்கின்றனர்.

அண்மையில் பிரான்சில் ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பைப் பாதுகாத்து முன்னெடுக்கும் சோசலிச, போலி கம்யூனிச, பச்சைக் கட்சிகள் ஓரினச் சேர்க்கையைச் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கக் கொண்டு வந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் முதல் சுற்றில் தோற்றுப் போனது. ஆனாலும் ஜனநாயகத்தின் பெயரில், தனி மனித உரிமையின் பெயரில் உலகைச் சுரண்டும் ஏகாதிபத்திய அரசு, பெண்களை இரண்டாம் தர பிரஜையாக வைத்துள்ள அரசு, சட்டமூலத்தைச் சமர்ப்பித்ததன் பின் ஜனநாயகம் யாருடையது என்பதைத் துல்லியமாக்கியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 13. ஆணாதிக்கத்துக்கு எதிராகக் கிராமியப் பெண்கள்

"வரலாற்று ரீதியான ஆணாதிக்கத்தையும், அதற்கு எதிரான போராட்டத்தையும், அத்துமீறிய வாழ்க்கையையும் மிக சுயேட்சையாக நாம் கண்டறிய வேண்டுமாயின், கிராமியப் பண்பாடுகள், நடத்தைகள், வழக்குகள் என அனைத்திலும் தேட வேண்டும். இங்குதான் அவை எந்தவிதமான போலித்தனமும் இன்றி எதார்த்தத்தைப் பிரதிபலித்த வண்ணம் சமுதாய இயக்கம் நேர்மையாக இயங்குகின்றது. இந்தவகையில் பெண்ணியத்தை ஆராய்வது என்பது அவசியமானதாகவும், நிபந்தனையானதாகவும் உள்ளது. **"தமிழக நாட்டுப் புறவியலில் பெண்கள்"**[36] என்ற தலைப்பில் எழுதியுள்ள நூல் அந்த மக்களைப் போல் இயற்கையாக உள்ளது.

ஆணாதிக்கத்துக்கு எதிரான தூய முதலாளித்துவ ஜனநாயகத்தில் நின்று பெண்ணின் அவலத்தை முன்வைக்கின்ற போது, அங்கு கிராமியப் பெண்ணின் வாழ்க்கையை நிதர்சனமாக வெளிக் கொண்டு வருகின்றார். நாட்டுப்புற நிதர்சன வாழ்க்கையில் இருந்து எழும் அவலத்தின் காரணங்களையும், சமுதாயச் சுரண்டல் வடிவங்களையும் அப்பாடலில் இருந்து மிகக் கவனமாகச் சிலபகுதிகளைத் தேர்ந்துத் திட்டமிட்டு அகற்றியபோது (இது அவர் எழுத எடுத்து கையாண்ட ஆய்வு நூல்கள் வழியால் ஏற்பட்டதா என்பது தெரியவில்லை. இதனால் இந்த நூலை நான் அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரையை எழுதும் போது முழுமையான நாட்டுபுறப் பாடல்கள் இன்மையால், ஆணாதிக்கத்துக்கு எதிரான பெண் வெளிப்பாட்டை வெளிக் கொண்டுவருவதில் தவறு ஏற்படும் வாய்ப்பு அதிகம் இருக்கின்றது. இருந்த போதும் இந்தக் கட்டுரையின் முழுமை ஆணாதிக்கச் சமுதாயத்தைத் தோலுரிப்பதில் தவறு இழைக்கவில்லை.) ஏற்பட்ட திரிபுகளை மீறி, எந்த முதலாளித்துவ வண்ணக் கோட்பாட்டாளர்களையும் விட பெண்ணின் அவலத்தைப் புரிந்து வைப்பதுடன், பல்வேறு கடந்த கால ஆய்வுகளையும் தொகுத்து இணைத்துள்ள இந்நூல், மார்க்சிய விமர்சன நடைமுறை நோக்கில் முரண்பாடுகள் இருந்த போதும், இந்த நூலில் அவை முதன்மையான விமர்னத்துக்குரியவையல்ல.





கிராமியப் பெண்ணை ஓர் ஆயுளில் புரிந்து கொள்வதில் இந்த நூல் முக்கியமான பங்களிப்பைத் தருகின்றது. இதை அரசியல் ரீதியில் புரிந்து கொள்ளவும், மேலதிகமான தரவுகளையும் உள்ளடக்கி, கிராமப் பெண்ணின் ஆயுளையொட்டிய வாழ்க்கையின் நிகழ்ச்சிகள், பண்பாடுகள் என அனைத்தையும் பார்ப்போம். என்னால் படிக்க முடிந்த நாட்டுப்புறப் பாடல் எல்லைக்கு அப்பால் விரிந்த களம் முழுமையாக (இதில் பாடலின் உள்ளும், வெளியும் நீக்கிய நிலையில் படிக்கின்ற போது, முழுமையான கண்ணோட்டம் சிதைந்தே எனக்குக் கிடைக்கின்ற போது அதன் வீச்சு மந்தமாகின்றது.) இக்கட்டுரை கொண்டிருக்கவில்லை. அத்துடன் சுருக்கம் கருதி மிக அதிகமாகச் சுருக்கியே இக்கட்டுரை எழுதியுள்ளேன். விரிவாக எழுதும் போது பாடல்களின் அரசியல் எல்லையைப் பரந்த தளத்தில் விரித்து பார்க்க முடியும் என்பதும், அதன் உள்ளடக்கம் அரசியல் வீச்சைக் கொண்டு ஆயுதபாணியாகும் என்பதையும் மறுக்கவில்லை. பல்வேறு விடயங்களை இந்நூல் கவனத்தில் எடுப்பதால், அரசியலில் முன்னேறிய பிரிவைக் கவனத்தில் கொண்டு இந்த கட்டுரையை ஆழமான செறிவான வகையில் தொகுத்துள்ளேன்.

இந்தக் கட்டுரையில் எடுத்தாளப்பட்ட பாடல்கள் பெரும்பாலானவை மேல் குறித்த நூல் எனக்கு முழுமையாகத் தந்ததுடன், இந்த நூலை எழுத அந்தப் பாடல்களின் ஒழுங்கான தொகுப்பும் கூட உதவியது என்பதையும் குறிப்பிடுவது அவசியமாகும். நாட்டுப்புறப் பாடல்கள் பழைய பல சமுதாயத் தொடர்ச்சியில் தன்னை வெளிப்படுத்தும் போது, பின்தங்கிய சமூகமாக (நாகரிகச் சமூகத்துக்கு வெளியில்) இருந்ததால், இருப்பதால் அவை மனிதத்தன்மையை ஆழமாக வெளிப்படுத்துகின்றது.

**இந்த மொழி தொடர்பாக ஜோசப் ஸ்டாலின் "மொழி ஒரு குறிப்பிட்ட பொருளாதார அடித்தளத்தின் - அது புதிய அடித்தளமாகவோ பழைய அடித்தளமாகவோ இருக்கலாம் - பெறுபேறு அன்று. அது அச்சமுதாயத்தின் வரலாற்றுக் காலம் முழுவதினதும், பல நூற்றாண்டுகள் காலமாகப் (அச்சமுதாயத்தினரிடையே காணப்பட்ட) பல்வேறு பொருளாதார அடித்தளங்களின் வரலாறு முழுவதினதும் பெறுபேறு ஆகும். அது குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தினாலே, தோற்றுவிக்கப்பட்டதன்று. அது முழுச் சமுதாயத்திலுள்ள சகல வர்க்கங்களினாலும் நூற்றுக்கணக்கான பரம்பரைகளின் முயற்சிகளினாலும் தோற்றுவிக்கப்பட்டதாகும்."**[37]

மனிதன் தன்னை ஒழுங்கமைப்பது என்பது சுயேட்சையான கற்பனை இருப்பில் அல்ல. சமுதாயத்தின் இயக்கத்தில் இருந்து அங்கு எப்படி சமுதாயப் பிளவுகள் உள்ளதோ, அதில் இருந்தே அனைத்துச் செயலும் உருவாகின்றன. இந்தத் தளத்தில் தான் சிந்தனைகள் பிரதிபலிக்கின்றன. சிறுவர் சிறுமிகளிடையே தொடக்க விளையாட்டுகள் எல்லாம் பொதுவாக உள்ளது. அது போகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போக சாதி ரீதியாகவும், இன ரீதியாகவும், பால் ரீதியாகவும், வர்க்க ரீதியாகவும்... பிளந்து செல்லுகின்றது. பால் ரீதியாகப் பிளந்து போன விளையாட்டுகள் ஆண், பெண்ணின் கடமையைப் பிரதிபலிக்கின்றது.

**இந்த வகையில் பெண் குழந்தைகளின் விளையாட்டுகள் "பல்லாங்குழி, தாயம், சட்டிப்பானை வைத்து விளையாடுதல், பூப்பறிக்க வாறியா, ஒருகுடம் தண்ணி ஊத்தி...."**[36] போன்றன. பெண்ணின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றது. **ஆண் குழந்தைகளின் விளையாட்டுகள் "கோலிக்குண்டு, பம்பரம், பட்டம்விடுதல், கிட்டிப்புள், பலிஞ்சடுகுடு (கபடி), பச்சக் குதிரை..."**[36] போன்றன ஆணின் சமூக வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றது. ஆண் - பெண் குழந்தைகள் சேர்ந்த விளையாட்டுகள் "கீச்சுக் கீச்சுத் தாம்பாளம், பூசணிக்காய், குலைகுலை முந்திரிக்காய், கல்லாமண்ணா, கொக்கோ, ஜோடியாட்டம், நான்குமூலை..."[36] போன்றன ஆண் - பெண்ணின் குடும்பம் மற்றும் கூட்டுச் சமூகக் கண்ணோட்டத்தில் விளையாட்டுகள் பிரதிபலிக்கின்றன.

இந்த விளையாட்டுகள் படிமுறையாக வளர்ச்சி பெறுகின்ற போது, பால் ரீதியான பிளவு கூட்டு வடிவ விளையாட்டு வடிவங்களையே இல்லாததாக ஆக்குக்கின்றது. இவைத் திட்டவட்டமான சமுதாயத்தைப் பிரதிபலித்து பால் ரீதியாகப் பிளந்து செல்லுகின்றது. ஆணின் பலம், ஆளுமை போன்றவற்றைக் குறித்து விளையாட்டுகள் பிரதிபலிக்க, பெண்ணின் பலவீனம், குறுகிய தளம் என்ற எல்லைக்குள் இவை பிரதிபலிக்கின்றது. பெண்களின் வயது செல்லச் செல்ல சமையல் செய்வது, கழுவுவது, அடுக்குவது, கடவுள் வழிபடல் அதையொட்டிய சடங்குகளை செய்து விளையாடுதல், அப்பா - அம்மா விளையாட்டு, குழந்தைக்குச் (பொம்மை) பால் ஊட்டல், வளர்த்தல், சீராட்டுதல்... என்று பெண்ணின் விளையாட்டுகள் ஆணில் இருந்து விலகிச் செல்லுகின்றது.

இந்த வகையில் தண்ணி ஊத்தி என்ற விளையாட்டில் பெண்கள் இருவர் ஒரு பெண்ணைச் சிறைபிடிக்கின்ற போது, மற்ற பெண்கள் அவளை விடுவிக்க பேரம் பேசுவார்கள். எந்தப் பொருள் சார்ந்த பேரத்திலும் சம்மதிக்காத போது, "உன் கணவன் பெயரைச் சொல்லு"[36] என்று அணியின் தலைவி கோருவாள். இதன் போது சிறுமி தனது முறைப் பையனின் பெயரைக் கூறுவாள். இதையடுத்து அப்பெண் விடுதலை செய்யப்படுவாள்.

இந்த விளையாட்டில் வரும் பாடல் வரிகளைப் பார்ப்போம்.

"இம்புட்டுப் பணம் தாரேன் விடுடா துலுக்கா"

இதற்குச் சிறைவைத்த பெண்கள்

"விடமாட்டேன் மலுக்கா"[36]

—என்று பதில் கூறுவர். இந்த வரிகளைக் கொண்டு முகமதிய அரசர்கள் பெண்களைச் சிறைப் பிடித்ததைக் காட்டுகின்றது என்ற விளக்கம், வெறும்





சொற்களைக் கொண்டு கூறுவதாகும், மேலும் இது தவறாகும். அத்துடன் இந்துப் பெண்கள் என்று குறித்து அவர்கள் கைப்பற்றவில்லை. உலகில் எல்லாப் படையெடுப்புகளிலும் சொந்த மதப் பெண்களையும் சிறைப்பிடித்து அனுபவித்தது போல் சிறைப்பிடித்தல் என்பது பொதுவான நிகழ்ச்சியாகவே இருக்கின்றது. இதைக் காணத் தவறி முன்வைக்கும் பல வாதங்கள் அர்த்தமற்ற வகையில் உள்ளது. இங்கு உள்ள வாதப்படி கைப்பற்றிய பெண்ணைக் கற்பழிக்காது அல்லது திருமணம் செய்யாது முறைப்பையனிடம் (எல்லாப் பெண்ணுக்கும் முறைப்பையன் இருக்கின்றது அல்லவா.) விட்டுவிட, எந்த ஆணாதிக்க அதிகார வர்க்கமும் உடன்பட்டது என்பது கற்பனையானது. ஏனெனின் இங்கு கைப்பற்றும் போதே மனித நாகரிகம் சிதைகின்றது. பின்னால் எப்படி மனிதத்தன்மையுடன் விடுவித்திருக்க கூடிய நாகரிகம் ஏற்பட்டிருக்கும்.

இங்கு துலுக்கா, மலுக்கா போன்ற சொற்கள் இந்து மத ஆதிக்கப் பண்பாட்டில் குடும்பத்திற்கிடையிலான திருமணத்தை வலியுறுத்த, மதம் கடந்த திருமணத்தைத் தடுக்க உருவானதாக இருக்கமுடியும். இதுவும் அத்துமீறிய சம்பவத்தில் நடந்த நிகழ்ச்சிகளை உள்ளடக்கியே இவை பரிணமித்திருக்கும். இது ஒரு முகமதிய மதப்பிரிவிலுள்ள ஒரு மனிதனுடன் சம்பந்தப்பட்ட காதல், சொத்துரிமை, குடும்ப வடிவத்தை அத்துமீறிய சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி ஆதாரமாக இருந்திருக்கும். நிலப்பிரபுத்துவ ஆதிக்கப் பிரிவுகளின் இறுக்கமான திருமணக் கட்டுப்பாடு மீதான நிகழ்ச்சிகள், மீள நடத்திக் காட்டப்படும் விளையாட்டாக மாறியிருக்கும். இந்த விளையாட்டில் இறுதியில், "கடேசில வந்தவளை பூப்போட்டுப்பிடி" என்ற வரிகள் எதைக் காட்டுகின்றன? பாரம்பரியத் திருமண முறையையே பெண்களுக்கு விளக்கப்படுத்தப்படுகின்றது.

பெண்கள் பருவ வயதடைந்த பின் அவர்களின் இடையே நடக்கும் திருமணத்தை அவளையொட்டிய வயதுப் பெண்கள் திருமணம் செய்ய விடாது தடுப்பது போன்ற பாசாங்குகளில், முறைப்பையன் சிறையெடுத்து திருமணம் செய்வது போன்ற விளையாட்டுகள் பெண்ணுக்கு விளக்கிக் காட்டப்படுகின்றது. முறைப்பையன் தான் உன் கணவன் என்பதையும், மற்றவன் அல்ல என்ற ஒழுக்கத்தையும் தனிச் சொத்துரிமை அமைப்பு வடிவம் விளக்குவதே இந்த விளையாட்டின் விதியாகின்றது. இதுவே பெண்ணின் இறுதி முடிவாக எதார்த்தத்தில் இன்று உள்ளது.

சிறுபிள்ளை விளையாட்டில் இருந்து பெண் தனது பருவத்தை அடைகின்ற, அதாவது முதல் மாதவிடாய் வெளியேறும் நிகழ்ச்சியைப் பூப்படையும் நிகழ்ச்சி அல்லது வயதிற்கு வரல் அல்லது சாமத்தியம் அடைதல் என்ற வடிவில் பெண்ணுக்கு முன் வருகின்றது. இது பெற்றோரின் கண்காணிப்பு அக்குழந்தை மீது அதிகரிக்கும் வகையில் மாறுகின்றது. அக்குழந்தைக்குச் சொந்த உடல் ஆணை விட அழுக்கானதாகவும், தீட்டுக் கொண்டதாகவும் புகட்டுகின்றது. இனி வெளியில் செல்லும் காலம், விளையாடும் காலம், ஆண்கள் உடன் பழகும் காலம் முடிவடைவதைத் தெளிவாகப் புகட்டுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பெண்ணில் இருந்து வெளியேறும் இறந்த கரு முட்டைகளின் கழிவு, பெண்ணை வெளியேற முடியாத சிறைக்குள் தள்ளுகின்றது.** இங்கு அவளைத் தனியறையில் விட்டு ஆவிகளின் பாதுகாப்பு சார்ந்து இரும்பு, துடைப்பான், செருப்பு போன்றவற்றைக் கொண்டு பெண்ணைக் காவல் வைக்கின்றனர். இதன் மூலம் அவளைப் பயந்த வெகுளித்தனத்துக்குள் அடிமைப்படுத்துகின்றனர். தனது சொந்த வயதையுடைய பெண் குழந்தைகளுடன் கூட உறவைத் துண்டிக்கும் வகையில் தனிமைப்படுத்தி, வேறுபடுத்தி வைக்கக் கோருகின்றது. அத்துடன் பெண்ணின் கடமைகள் புகட்டப்படுகின்றது. வீட்டுக்கு வெளி, உள் கடமையில் தெளிவாகச் சில வரையறைகள் உருவாகின்றன.

இந்தச் சாமத்தியச் சடங்குகளில் அப்பெண்ணின் அருகில் முறைப்பையனின் சகோதரி அல்லது அது போன்ற முறையுள்ள பெண்ணை அமரச் செய்து நடத்தும் விளையாட்டு போன்ற திருமணம், உண்மையில் பெண்ணின் அடுத்தகட்டக் கனவை அதாவது முறைப்பையனுடன் உடனே திருமணத்தைத் தெளிவாகக் கோர வைக்கின்றது. அத்துடன் யாரைத் திருமணம் செய்ய வேண்டும் என்பதையும் சமுதாயம் தெளிவாக்குகின்றது. இது குழந்தை மணத்தைச் சட்டப்படி ஒழித்ததின் பின் உருவான புதியவகையான குழந்தைத் திருமணமாகும். இது பழைய குழந்தை மணத்தைச் சீர்திருத்தம் செய்து பாதுகாக்கின்றது.

சாமத்தியச் சடங்கு நிகழ்ச்சியின் இறுதியில் நாத்தனார் முறையிலான பெண் விளக்குமாற்றால் (துடைப்பான்) விரட்டியடிப்பது போன்ற நிகழ்ச்சியானது வீட்டில் பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் புகட்டி கண்காணிப்பைத் தெளிவாக்குகின்றது. இந்த நிகழ்ச்சியில் கடைப்பிடிக்கும் பல அம்சங்கள் பெண்ணைக் கொடியஆவி அல்லது கெட்ட நிகழ்ச்சியின் தொடர்ச்சியில் அவள் பீடித்துள்ளாள் போன்ற பிரமையூடாக, அவளை மற்றவரில் சார்ந்து இருக்க புகட்டுகின்றது. இவை எங்கிருந்து வெளிப்படுகின்றன?

பெண்ணின் சொந்தக் கற்புரிமையை ஆணாதிக்கக் கற்பொழுக்கம் கற்பழிப்பாகச் சூறையாடும் போது, பெண்ணின் வாழ்வு சீரழிந்து போகின்றது. மேலும் ஆணாதிக்கச் சமுதாயத்தில், பெண்ணின் பாதுகாப்பு பெற்றோரின் கடமையாக மாறிவிடுகின்றது. இளம் பருவப் பெண்கள் சொந்தக் கற்புரிமைக் கண்ணோட்டத்தில் இயல்பாகப் பழகி கொள்ளும் உறவை, ஆணாதிக்கக் கற்பொழுக்கம் சூறையாடிக் குதறுகின்றது. இந்த ஆணாதிக்கச் சமுதாயத்தில் குழந்தையின் கற்புரிமையைப் புரிய வைப்பதற்குப் பதில், அதைப் புரியாத அடக்குமுறையூடாகப் புகட்டுகின்றனர். அதேநேரம் அதன் கொடூரத்தைப் பெண்ணுக்கு ஆழ்ந்த அர்த்தத்தில் அடி ஆழத்தில் மட்டும் அதைக் கூற விரும்புகின்றனர். இது பாலியல் பற்றி பேசுவதில் உள்ள இயல்பான ஆணாதிக்கத் தடை குறுக்காக வந்துவிடுகின்றது. இதனால் கற்புரிமை குழந்தைக்கு முன் அடக்குமுறையாக மாறுவதுடன், பெற்றோரின் இறுக்கமான





நடத்தைக்கும் இட்டுச் செல்லுகின்றது. இதை எப்படி கிராமிய மக்கள் இயல்பாகக் கையாளுகின்றனர்? எனப் பார்ப்போம்.

"தண்ணிக்குப் போ மகளே
தடம் பாத்து போ மகளே
முட்டாளுப்பையங்கண்டா
முகங்கொடுத்துப் பார்க்காதே
பாசங்கலந்துவரும்
பலபேரும் மோக்கும் தண்ணி
நீரும் கலந்துவரும்
நிண்ணு மோக்க நேரமாகும்"[36]

— என்ற வரிகளில் ஆணாதிக்கக் கற்பு பாதுகாப்பு என்பதை விட, ஆணாதிக்கக் கற்பு சூறையாடும் அச்சமே மேலோங்கி நிற்கின்றது. பாசமாகப் பேசி பெண்ணின் கற்புரிமையைக் குதறும் ஆணாதிக்கக் கற்பு அடக்குமுறையைத் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டுகின்றது. பெண் தனது சொந்தக் கற்புரிமையைக் கையாளுவதற்குப் பின்னால் உள்ள நயவஞ்சகமான சமுதாயத்தைப் புரிந்தே முன் வைக்கின்றனர். ஆனால் எதார்த்தத்தில் இந்தப் பக்கத்தைக் கோட்பாட்டுப் பெண்ணியல்வாதிகள் புரிந்து கொள்ள மறுக்கின்றனர். ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்ணுக்குக் கற்புரிமை உண்டு என்பதை மறுத்து, ஆண் வழியில் ஆணாதிக்க வழியில் மட்டும் புரிந்து பெண்ணுக்கு மறுப்பது நடைமுறையாக உள்ளது. இதை விரிவாகக் கீழே தனியாக ஆராய்வோம்.

பாடல் வரியில் பாச வார்த்தையூடாகப் பெண்ணை அடைய நினைக்கும் ஆணின் போக்கில் உள்ள, இரட்டைத் தன்மையை ஆணாதிக்கச் சமுதாயம் விளக்குவதில்லை. ஏமாற்றுக்கும், மோசடிக்கும் அப்பால் உண்மையான அன்பையும், காதலையும் வேறுபடுத்தி அறியும் தன்மையைப் புகட்டாது பொதுமைப்படுத்தும் போது, இங்கு பெற்றோருக்கும், குழந்தைக்குமிடையில் அடிப்படையான முரண்பாடு எழுகின்றது. இயல்பான உணர்ச்சியில் அன்பை, ஆதரவை, காதலை அணுகும் குழந்தைக்கு இயல்பில் பொதுவாக ஆணைக் குற்றம் சாட்டும் போது, அதை மறுத்த குழந்தை தவறு இழைக்கத் தூண்டுதலாகி மற்றவனால் பயன்படுத்த முடிகின்றது. பெற்றோர் இந்த முரண்பாட்டை வேறுபடுத்தாத போது வன்முறையாளனாக மாறுகின்றனர்.

பெண்களின் திருமணம் மற்றும் தேவைகளை ஆணாதிக்கச் சமுதாயம் பூர்த்தி செய்யாத போது, அதைப் பெண் வாய்விட்டே கேட்க முடியாத நிலையில், அதை நினைத்தே தனக்குள் அழுந்திப் புலம்புவது நிகழ்கின்றது. இது பல்வேறு தேவைகள் குறித்து எழுகின்றன. இது பகிரங்கமாக அவளையறியாமல் வெளிப்படும் போது பேய் பிடித்துவிட்டதாக ஆணாதிக்கச் சமூகம் விளக்கம் கொடுத்து அதற்குப் பேய் ஓட்டுகின்றனர். இந்த வகையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண் தனது திருமணத்தைக் கோருவது அநாகரிகமான செயலாகும். இவை வெளிப்படும் போது பேயின் செயலாக வரிந்து காட்டப்படுகின்றது. பேய் எல்லாம் பெரும்பான்மையாகப் பெண்ணுக்கு வருவதுடன், பேய்ப் பாட்டுகள் எல்லாம் பெண்ணைக் குறித்து இருப்பதும் தற்செயலானவையல்ல. இவை ஆணாதிக்க அமைப்பின் கொடூரத்தினால் ஆனவையாகும். இதைப் பேய்ப்பாடல் மூலம் பார்ப்போம்.

"கன்னி மேல - இந்த
கன்னி மேல வந்த
காரணத்தச் சொல்லோணும்

நாத்து நடப் போனப் பெண்ண - ஒங்
காத்து பட்ட காரணத்தச் சொல்லோணும்
பச்சப் புள்ள பயந்திட - அவ
பாவத்தக் கேக்கணு -ம்
கேப்பியா?

நீ
யாரு பெத்த மகளோ"[12]

"இப்போ - ஒன் தங்கச்ச
ஒன்முன்னால
தலைவிரி கோலமா -ஒ (ன்)
தங்கச்சி ஆடுறாளே
தவிச்சி ஆடுறாளே
பார்க்கப் பரிதாபமடா
பச்சப்புள்ள மயங்குதே

.. .. ..

**பொண்ணு வேணுமன்னு நா (ன்)**
**பொலம்பித் திரிய வில்லே**
**பொழப்பு கெட்ட போக்கிரிக்கு**
**பொண்ணு எங்கு வெதச்சிருக்கு**
**ஆத்தா திட்டிப்புட்டா - நா(ன்)**
**ஆத்தாம அரளிக் கொட்ட தின்னு**
**அவிஞ்சு போயிட்டேன் (அழுகை)**

**.. .. ..**
**பேயா அலையுரேன் ஒரு**
**பேச்சுத் து(ன்)ணைவேணுமின்னு - எனக்கு**
**பொண்ணு வேணும்!"**[12]





இதைத் தொடர்ந்து மற்றொரு பேயோட்டும் பாடலையும் காணலாம்.

"இந்த
பொண்ணு மேலே - இந்த
பூவரச பொட்டு மேலே
வந்தது யாரப்பா?
எந்த ஊரு
.. .. ..
கன்னிய கடிச்சக்
காரணத்தை கவனமா சொல்லோணும்

.. .. ..
**பொண்ணா பொறந்து - ஒரு**
**புரோசனுமில்லாமப் போயிட்டேன்**

**.. .. ..**
**அஞ்சாறு நாளில**
**அவரப் பாக்கணும்**

**.. .. ..**
**ஆவியா அலையுறேனே!**
**அவரைத் தேடுறேனே**
**பட்டு சேல உடுத்தி - நெத்தியிலே**
**பொட்டு வச்சு நேரே வாரேன்**
**அவர வரச்சொல்லு - நா(ன்)**
**அவசரமாக பார்க்கணும்**
**பார்க்கணும்**

அம்மா தாயே
அரச்சுனரு பெத்த மகளே
அழுகாம இருந்தியன்னா
அவரு வந்திருவாரு - சேதி
சொல்லியிருக்கு சீக்கிரமா
வந்திருவாரு

வெட்கப் படாம
வெளியே போயிரு தாயே
இன்னக்கி இருந்து
ஒன்பதாம் நாள்
ஊரு எல்லையில் ஒனக்கு
கண்ணாளம்
பந்தியில பிறந்தாம - நா(ன்)
பட்டுச் சேல கொண்டாரேன்
பொட்ட வேணுமின்னா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பூவும் வேணுமென்னா
.. .. ..
மஞ்சள் எடுத்துக்கிட்டு
மடி நெறைய அரிசியெடுத்து
.. .. ..
நல்ல பொண்ணெண்ணு ஒன்ன
நாலு பக்கமும் சொல்லேணும்
தெய்வப் பொண்ண்ணு
திசை யெல்லாம் சொல்லணும்”[12]

மேலும் தொடர்ந்து மற்றொரு பேயோட்டும் பாடலையும் காணலாம்.

“அழகு நட
அன்ன நட
மயிலு நட
பாக்கணுமா - நீ
பொண்ணாயிருந்தா
சீர்வரிசை தாரேனம்மா
.. .. ..
தங்கச்சிக்கு
தெம்மாங்கு பாட்டுவேணுமா”[12]

மேலும் ஒரு பேயோட்டும் பாடலைக் காணலாம்.

“பச்சபுள்ள - இப்ப
பாவடா கட்டுது
அம்மான்னு சொல்லுது
அழகு ரதமா நடக்குது
இப்ப நீ
பொண்ண விட்டுட்டு
புறப்படணும் - இந்த
கண்ணாள விட்டுட்டு
கரையேறி போகணும்
ஒரு பாவம் செய்யாத
உத்தமி பொண்ணுமா
சின்ன பொண்ணுமா- ஒன்
சினமெல்லாம் தாங்காது”[12]

— என்று பேயோட்டும் பாடல்கள் பெண்ணின் நசுங்கடிக்கப்பட்ட மனித அவலத்தில் இருந்து பிறப்பதைக் காட்டுகின்றது. **பெண்ணின் இயற்கை உணர்வுகள் ஆணாதிக்கச் சமூகத்தால் நலமடிக்கப்படும் போது, எல்லையற்ற உளறலாகப் பீறிட்டு வெடிக்கின்றது.** இது சொல்ல முடியாததைச் சொல்லும் மொழியாக வெளிப்படுகின்றது. பேயோட்டுபவர்கள் இதைப் பரம்பரை பரம்பரையாக அனுபவரீதியாகச் சமுதாயத்தின் அவலத்தைப் புரிந்து பேயோட்டும் போது, பெண்ணின் பிரச்சினைக்குத் தீர்வாகத் தற்காலிகமான வாக்குறுதியைக் கொடுத்து அதை ஓட்டுகின்றனர்.





இங்கு மந்திரத் தந்திர வாதங்களைத் தாண்டிப் பேயோட்டுபவர் மனநோயைத் தீர்க்கும் மருத்துவராக இருக்கின்றார். ஆனால் சமுதாயத்தில் இதன் உள்ளடக்கம் பேயோட்டுவதாக நிகழ்வதால், ஆணாதிக்க அமைப்பு தனது குற்றத்தைக் கண்டுகொள்ள முடியாத அவலத்தில் பிரதிபலிக்கின்றது. இதனால் பேய் பிடிப்பது ஆணாதிக்கச் சமூக அவலத்தின் தோற்றமாகத் தொடர்கின்றது. தீர்வு அடையப்படாமல் பேயோட்டும் சடங்கு சீரழிவாகின்றது. பேயோட்டுபவர்கள் மனநோய் மருத்துவராக இருப்பதுக்குப் பதில் அதைக் கடந்து செல்கின்றார். பெண்களின் இயற்கையான உணர்ச்சிகள் தீர்க்கப்படாத ஆணாதிக்க அமைப்பில், பேயோட்டுவது தொடரத்தான் செய்யும்.

எல்லைப்புறத்தில நல்ல பொண்ணென்னு ஒன்ன
நாலு பக்கமும் சொல்லோணும்
தெய்வப் பொண்ணு

— இதில் திசையெல்லாம் சொல்லோணும் என்ற பேயோட்டலின் பின், கிராமிய எல்லைப்புறத்தில் காணப்படும் திருமணம் செய்யாத கொடூரத் தெய்வங்களாக்கப்பட்டு வழிபடும் பெண்களின் கதைகள், உண்மையில் ஆணாதிக்க அமைப்பு விளைவுகளின் பிம்பங்கள்தான் என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

பெண்கள் தமது திருமணத்தை எதிர்பார்த்து காத்து இருக்கக் கோருகின்றது. இங்கு இளமையை விரும்பும் ஆணாதிக்கத்தின் தேவைக்குட்பட்டு, இளமையில் பெண் தன்னை ஒருவனிடம் ஒப்படைப்பது நிபந்தனையாக உள்ளது. இந்த இளமை பெண்ணின் எதிர் காலத்தைத் திட்டவட்டமாகத் துல்லியமாக இட்டுச் செல்லும் கட்டமாகும். வயது செல்லச் செல்ல பெண்ணின் கண்ணீர் வாழ்க்கையாகின்றது. பொருளாதார ரீதியில் பலமற்ற பெண் கணவனைச் சார்ந்து வாழ்வதும், பின் மகனைச் சார்ந்து வாழ்வதும் நிபந்தனையாக இருக்கின்ற போது, பொருளாதார ரீதியாக இறந்து போகக் கூடிய பெற்றோரை விட்டுச் செல்வது நிபந்தனையான திருமணமாகின்றது. இந்தத் திருமணம் இளமையில் சாத்தியமாகாவிட்டால் அப்பெண்ணின் வாழ்க்கை சிதைந்து போகின்றது. இப்படி வயது போய் திருமணத்தை எதிர்பார்த்து இருக்கும் கிராமியப் பெண்ணின் புலம்பலைக் கீழ்க்கண்ட பாடலில் இருந்து பார்ப்போம்.

“மரிக்கொழுந்து நாத்துப்பாவி
அறுக்கப்பருவம் தப்பி
இருப்பு இருந்து வாடுறேனே”[36]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



— என்று கண்ணீரின் பின்னால், பெண்கள் மீதான ஆணாதிக்கக் கொடூரம் அவர்களின் வாழ்வைச் சிதைப்பதையே இப்பாடல் வரிகள் காட்டுகின்றன. வாழ்வின் சிதைவுகள் மீதான அச்சம் காரணமாக, இயல்பாகவே பெண்கள் திருமணத்தைக் கோரி சடங்குகளையும், வழிபாடுகளையும் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இச்சடங்குகள் பெண்கள் தம்மைத்தாம் இழிவுபடுத்தியும், தம்மைத்தாம் துன்புறுத்திக் கொள்வதின் ஊடாக நல்ல கணவனை, விரைவான திருமணத்தை அடையமுடியும் என்று நம்பிச் செய்கின்றனர்.

இந்த வகையில் கன்னிப் பெண்கள் தங்கள் வாழ்வில் திருமண மாலையை அணியவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் சில கடவுளுக்கு மாலை வாங்கி அணிவிக்கின்றனர். சிலர் நீராடிய ஈர உடுப்புடன் அரசமரத்தடியில் பிள்ளையாரை நீராட்டி அறுகம் புல்லால் மாலை அணிவிப்பர். சிலர் திருமணத்துக்குச் செல்வது போல் இரண்டு மாலை கொண்டு சென்று, ஒன்றைக் கடவுளுக்கும், மற்றதைத் தாமும் அணிந்து கொண்டு திருமணத்தைப் போலியாக நடத்துவர்.

இது போன்று கடவுளுக்குப் புதுப்புடவையும், தாலியும் கொடுப்பர். சில வழிபாட்டில் அரச மரத்தை ஆணாகவும், வேப்ப மரத்தைப் பெண்ணாகவும் வருணித்து திருமணத்தை நடத்தி தாலி கட்டுவார். இது போன்று சந்திரனைக் கன்னிப் பெண்ணாக வருணித்துத் திருமணம் நடத்துவர். இதுபோல் திருப்பாவை (திருவெம்பாவை) நல்ல கணவனைக் கோரி நடைமுறைப்படுத்துகின்றனர். கோவில்களில் நடைபெறும் கடவுள் திருமணத்துக்குக் கன்னிப் பெண்களை அழைத்து சென்று காண்பிப்பர். திருமணத்தைக் கோரி செய்யும் திருவாதிரை நோன்பில் பெண்கள் வீடுவீடாகச் சென்று பாட்டுப்பாடி கேவலமாகப் பிச்சையெடுத்து அதைச் சமைத்து பகிர்ந்து உண்ணுகின்றனர். ஒரு பெண்ணின் இழிவுத்தனத்தின் பக்கங்கள்தான் இவை.

இது இந்தியாவில் மட்டுமல்ல. நாகரிகமடைந்த இங்கிலாந்திலும் நத்தார் அன்று கன்னிப் பெண்கள் கையில் மெழுகுத்திரியைக் கொழுத்தியபடி ஆழக்கிணற்றை எட்டிப் பார்க்கின்றனர். அப்போது அங்கு நீரில் தெரியும் மெழுகுத்திரியின் பிம்பம் போல் மிகவிரைவில் திருமணமாகிச் சந்தோசமான வாழ்க்கையை அடைய முடியும் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு செய்கின்றனர்.

இதுபோன்ற பெண்களின் இழிந்த வாழ்க்கையை எந்த ஆணும் நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. ஆணாதிக்கம் கொழுசுயேறி கொழுப்பேறி பெண்ணை அடிமையாக்கிச் சொத்துரிமையை மறுத்துபோது, பெண்ணின் வாழ்வுக்கான ஆதாரம் மற்றவனின் தயவாகியது. ஆண் உழைப்பின் சின்னமாக, சொத்துரிமையின் வாரிசாக இருப்பதால், பெண் ஓர் ஆணைச் சார்ந்து இருப்பது நியதியாகிவிட்டது. இது பிறப்பில் இருந்து தந்தையைச் சார்ந்தும், பின்





கணவனைச் சார்ந்தும், இறுதியில் மகனைச் சார்ந்தும் வாழ்வதே பெண்ணின் ஆதாரமாகின்றது. இதில் இருந்துதான் பெண்ணுக்கு திருமணம் முக்கியமான அம்சமாகின்றது.

சீதனம், அழகு, இளமை, தகுதி, சாதி, மதம், குலம், கோத்திரம், வர்க்கம்... என்ற நீண்ட சமூகத் தடைகள் திருமணத்தின் எல்லையைக் கட்டுப்படுத்துகின்றது. இதனால் பெண் சுதந்திரமற்ற நிலையில், இதற்குள் பெண்கள் தம்மை வருத்தி, திருமணத்தை அடைவது விதியாகின்றது. **திருமணத்தின் நோக்கம் என்பது இரண்டு மனிதர்களுக்கிடையில் இணைந்து வாழும் இயற்கையின் தேவை** என்பது மறுக்கப்பட்ட எல்லா நிலையிலும், பெண் கண்ணீர் துயரத்தில் தன்னை வருத்தி, அழுந்திக் கிடக்க ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை உலகம் வழிகாட்டுகின்றது.

மகராஷ்டிரத்தில் சிலபகுதிகளில் திருமணம் என்பது நேரடியாக ஆண் வீட்டுக் கடமைகளைச் செய்வது குறித்தே கோரப்படுகின்றது. முதல் மனைவி வீட்டு வேலைகளைப் பகிர்ந்தளிக்க, அதற்குத் தேவையான பொருத்தமான மனைவிமாரைக் கண்டுபிடித்து ஆணுக்குத் திருமணம் செய்விக்கின்றாள். இங்கு திருமணம் என்பது வீட்டிற்குத் தேவையான வீட்டு மிருக வளர்ப்பு போல், பெண் குடும்பத்தில் இணைக்கப்படுகின்றாள். இங்கு ஆணின் தொழில் மற்றும் வீட்டு வேலையின் தேவையைப் பொறுத்து மனைவியின் எண்ணிக்கை இருக்கும்.

திருமணத்தைச் செய்யும் பெண் பொருளாதார ரீதியாகச் சுயமற்ற நிலையில் ஆண் வீட்டை நோக்கிச் செல்லுதல் நடக்கின்றது. இங்கு இப்பெண் முற்றுமுழுதாகப் புதிய சூழலுக்கு இசைவாகத் தன்னை மாற்றியமைக்காத எல்லா நிலையிலும் அவ்வாழ்க்கை நரகத்துக்குரியதே. ஆனால் சில சமூகத்தில் ஆண் பெண் வீட்டை நோக்கி வரும் போது ஆண் அப்படி மாற வேண்டியதில்லை. காரணம் ஆணின் பொருளாதாரப் பலம் இதைப் பாதுகாக்கின்றது. இந்தக் குடும்பத்தில் பெண் ஓரளவுக்குத் தாய் வீடு சார்ந்து துன்பத்தைக் குறைக்கின்றாள்.

திருமணம் என்பது பெண்ணின் பொருளாதார அடிமைத்தனத்தை அடிப்படையாகக் கொண்டு பூவும் பொட்டுடன் வாழ்வதை வாழ்த்துகின்றனர். வாரிசு பல பெற்று இருக்க வாழ்த்துகின்றனர். இப்படி திருமணத்தில் பாடும் பாட்டைப் போல் வாழும் திருமணமான பெண் வாழ்த்திப் பாடும் பாடல்களைக் கீழே பார்ப்போம்.

> "பூவும் மணமும் பொருந்திய தன்மை போல்
> தேவியும் மன்னவனும் சேமமாய் வாழ்ந்திடுங்கள்
> ...
> மக்கள் பதினாறும் பெற்று மங்கலமாய் வாழ்ந்திடுவீர்
> ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி
> மூங்கில்போல் கிளைத்து முன்னிய புகழடைந்து
> நலமுடனே எந்நாளும் ஞானமுடன் வாழ்ந்திடுவீர்"[36]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



— என்று திருமணத்தின் நோக்கம் தெளிவாக்கப்பட அதை விரிவாக்கி வாழ்ந்திட, இயற்கையின் வனப்பில் செழிப்பாக வாழ்பவைகளை உவமையாக்கிக் காட்டுகின்றனர். இவையனைத்தும் பெண்ணின் சுதந்திரமான தனிப்பட்ட வாழ்க்கையை வாழ்த்திப் பாடவில்லை. மாறாகக் குடும்பம் குடும்பத்தைச் சுற்றிய வடிவில் இதை வாழ்த்துகின்றனர். இங்கு பெண்ணின் கடமை ஆணாதிக்கத் தேவைக்குட்பட்ட வகையில் புகட்டுவதை அடிப்படையாகக் கொள்கின்றது.

இந்தத் திருமணத்தில் மணமகனின் முன் மணமகளை உயர்த்திக் காட்ட மணமகனுக்கு எதிராகக் கேலி செய்து பாடல்கள் பாடப்படுகின்றன. அதைக் கீழே உள்ள பாடலில் காணலாம்.

"கூடம் இருட்டுதையா கொற்றவனே உன்கறுப்பு
மணவிளக்கு இருட்டுதையா மன்னவனே உன்கறுப்பு
ஈச்சம் பழத்திலும் இருண்ட கறுப்பையா
நாகைப்பழத்திலும் நல்ல கறுப்பையா"[36]

— இதில் பெண்ணின் நிறம், அழகு, தகுதி, நடத்தை போன்றவற்றை உயர்த்திப் பாடும் போது மாப்பிள்ளையின் கறுப்பு இப்பாடலில் கேலிக்குள்ளாகின்றது. கறுப்பு பற்றிய இழிவுக் கண்ணோட்டம் விமர்சனத்துக்கு அப்பால் ஆண் பெண் உறவில் இவை ஆரம்பம் தொடங்கியே முரண்பாடான விடயமாக எதார்த்தத்தில் இருப்பதை இப்பாடல் வரிகள் காட்டுகின்றன. தொடர்ந்து கணவன் வீட்டில் பெண் சந்திப்பதைக் கீழே உள்ள பாடலில் பார்ப்போம்.

"பொண்டாட்டி புடவை என்றால் பிரியமாய்த் தோய்ப்பார்
தாயார் சொன்னால் தடியால் அடிப்பார்
தகப்பன் சொன்னால் தார்மார் பேசுவார்
பெண்டாட்டி சொன்னால் பிரியமாய்க் கேட்பார்"[36]

— இந்தப் பாடல் வரிகள் திருமணத்தில் பாடப்படும் போது பொதுவான ஆணாதிக்க வடிவங்களின் விளைவுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. பெண் மீதான வன்முறை, ஏசுதல், தாக்குதல் முதல் பாலியல் நுகர்வில் ஆணின் ஒருதலைப்பட்சமான கண நேர அன்புவரை தெளிவாக்கும் போது வாழ்வின் நடைமுறை கேலி செய்யப்படுவது ஒருபுறம் இருக்க, பெண் அதை இயல்பாகப் புரிந்து நடக்க இந்த வழமை அங்கீகரிக்கின்றது. பெண் முன் கூட்டியே இதை எதிர்பார்த்துச் செல்வதை இது காட்டுகின்றது. ஆனால் இது முதன்மை வடிவமாகத் திருமணத்தின் போது பெண் உணராவிட்டாலும் வாழ்க்கையில் இதுவே முதன்மையான முரண்பாடாகப் பெண்ணுக்கு இருக்கின்றது. ஆனால் இப்பாடலைப் பாடும் பெண் வீட்டைச் சார்ந்தோருக்கு இது தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் அதன் உள்ளார்ந்த அர்த்தம் வழக்கத்தையொட்டிய பண்பாட்டால் இப்படித்தான் என்ற வடிவில் இவை சம்பிரதாயமாக மாறிவிடுகின்றது.





தொடர்ந்து சமுதாயத்தில் பொருளாதார ரீதியில் பெண் உயர் தளத்தில் இருந்து திருமணம் நடந்தால் அங்கு ஆணின் இயல்பைப் பாடல் மூலம் பாடுவதைக் கீழே பார்ப்போம்.

"மொட்டைத்தலை ராவுத்தருக்கு முன்குடுமி உண்டாச்சு
வட்டிலில் உண்டவருக்கு வாழைஇலை உண்டாச்சு
கந்தைகட்டி வாழ்ந்தவருக்கு கரைபட்டு ஜோடாச்சு
மந்தப்பசு மேய்த்தவருக்கு மாமனார் வீடாச்சு"[36]

— இதில் பொருளாதார ரீதியாக ஆண் கேலி செய்யப்பட, எப்படி மாமனார் தயவில் மைனராகின்றார் என்ற கிண்டல் சமுதாயத்தின் எதார்த்த வெளிப்பாடுகளை வெளிப்படுத்துகின்றது. பொருளாதார ரீதியாகப் பெண்ணும், ஆணும் எப்படி தத்தம் பாத்திரத்தைத் திருமணத்திலும், திருமணத்திற்குப் பின்னாலும் கடைப்பிடிக்கின்றனர் என்பது முதல் அதன் பண்புகளையும், விளைவுகளையும் இப்பாடல்கள் மூலம் சமுதாயத்துக்கு முன்கூட்டியே விளக்குகின்றனர்.

பெண் வீட்டில் இருந்து வரும் பாடலுக்கு மாற்றாக ஆண் வீட்டார் பாடும் பாடலைப் பார்ப்போம்.

"கூரைச்சுவர் ஏறி குதித்துவரும் மங்கைக்கு
புண்ணியமாப் போகுதென்று எங்களண்ணா தொட்டுத்தாலி கட்டினாரே
சோளக்கருது போலே எங்களண்ணா ஜோக்கா வளந்ததென்ன - இந்தச்
சோத்துப்பானை தூக்கிமல எங்கிருந்து வாய்ச்சாளோ"[36]

— என்று ஆண் வீட்டார் எதிர்த்த பாடல் ஆணாதிக்கத்தின் வீச்சைக் காட்டுகின்றது. சுவரை ஏறிக் குதித்தவள் என்பது அடக்கமற்று, திமிர் பிடித்து அலைந்தவளைப் புண்ணியமாகக் கருதியே தொட்டு தாலி கட்டியவர் என்று கூறும் போது அண்ணன் தூய்மையானவன் என்ற கருத்தைக் காட்டுகின்றது. பெண் தூய்மையற்ற ஆண் தொடர்பு கொண்டவள் என்றும், ஆண் பெண் தொடர்பற்ற தூய்மை நிலையில் வாழ்ந்தவன் என்ற கருத்துப்பட பாடப்படும் வரிகள் இயல்பான சமுதாயத்தில் எதிர் நிலையில் இருந்த போதும் ஆணாதிக்கம் இதை மாற்றிக் கையாள்வதைக் காணமுடியும். அத்துடன் புண்ணியம் என்பது இரக்கப்பட்டு நடத்துவதால் பெண்ணின் சமமான பங்களிப்பு கீழ்நிலைப்படுத்தப் படுகின்றது. அப்பெண்ணைச் சோத்துப் பானையாக வருணித்ததன் மூலம் அவளை வீட்டு வேலைக்காரியாகவும், தண்டல் சோற்றுக்காரியாகவும் காட்டப்படுகின்றாள். எல்லாப் பாடல்களையும் பெண்கள் பாடுவது என்பது குறிப்பிடத்தக்க முக்கிய அம்சமாகும். ஆண் - பெண் வாழ்க்கையின் உட்சாரத்தை இதைவிட அழகாக யாரும் புரிய வைத்திட முடியாத பெண்களின் வளமையான பாடல்கள், இந்த ஆணாதிக்க உலகத்தைத் தோலுரித்துக் காட்டுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருமணத்தில் பெண்ணின் தாயைக் கேலி செய்து ஆணின் தாய் பாடும் பாடலைக் கீழே பார்ப்போம்.

"அரைத்துட்டு கீரைத்துண்டு அஞ்சாறுவீதம்
புலியஇலை பெருகத்தச்சி கறிசமைச்சி
புளியஞ்சாதம் பிசிறி வச்சி"[36]

"உங்க வீட்டுக் கல்யாணம் நல்லாயில்லை
போட்ட விருந்திலே நெய்யுமில்லை
இட்ட பாயாசத்திலே பாலுமில்லே."[36]

—இதில் ஆண் வீட்டுத் தாய் சமூகத் தகுதிப் பெற்று, பெண் வீட்டைத் தூற்றும் போது, திருமணம் என்பது பொருளாதாரம் என்ற விபச்சார நிலையில் நடப்பதைக் காட்டுகின்றது. பெண் மட்டுமல்ல பெண்ணைப் பெற்ற குடும்பமும் தூற்றப்படுகின்றது. ஆணின் சமூகத் தகுதி, பொருளாதார மேன்மையால் பெண்ணை அண்டி வாழ சமூகப் பொருளாதார அமைப்பு கோரும் போது, பெண் சார்ந்த அனைத்தையும் சிறுமைப்படுத்துவது இலகுவானதாக மாறுகின்றது. பெண் சார்ந்த குடும்பம் இவற்றுக்கு மௌனம் சாதிப்பதன் ஊடாக, ஆண் வீட்டைத் திருப்தி செய்வதில் அதிக முக்கியத்துவத்தை எடுக்கின்றனர். இது பெண் திருமணத்தின் பின் வாழ்க்கை பூராவும் தொடர்வதுடன், இதற்குள் பெண் சார்ந்த குடும்பம் அழுந்தி வாழ்கின்றனர்.

திருமணமான பெண்ணின் முதல் கடமை ஆண் வாரிசைப் பெற்றுக் கொடுப்பதே. இதைப் பெற்றுக் கொடுக்காத எல்லா நிலையிலும் பெண் தொடர்ச்சியாகக் கேவலமாகச் சிறுமைப்படுத்தப்படுகின்றாள். அத்துடன் பாலியலில் ஆண் விந்துதான் பாலினத்தை, அதாவது பிறக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என்று வரையறுப்பதுடன், கருவின் உருவாக்க எல்லையையும் தீர்மானிக்கின்றது என்ற விஞ்ஞான உண்மையை மறுத்து, பெண்ணைக் குற்றஞ்சாட்டி ஒடுக்குவது நிகழ்கின்றது. ஆண் உடலுறவின் போது 1,850 இலட்சம் (18½ கோடி) விந்தணுக்களை வெளியேற்றுகின்றான். இது 800 இலட்சத்துக்கும் (8 கோடிக்கும்) குறைவாக இருந்தால் குழந்தை பிறப்பு கடினமாகின்றது. பெண் உறுப்பில் ஒரே ஒரு கருமுட்டைதான் கருப்பையை வந்தடைகின்றது. இது ஆணைப் போல் ஒவ்வொருமுறையும் வருவதில்லை. மாதம் ஒரேயொருமுறை வெளிவரும் கருமுட்டையுடன் இணையும் ஆணின் ஒரேயொரு விந்து, எந்த வகையானது என்பது மட்டுமே ஆண் அல்லது பெண்ணின் பால் வகையைத் தீர்மானிக்கின்றது. ஆனால் ஆணாதிக்க அமைப்பில் இதைப் பெண்ணை நோக்கி குற்றம் சாட்டுவது நிகழ்கின்றது.

இதனால் பெண்கள் துன்புறுகின்றனர். இதை நிவர்த்தி செய்ய சடங்குகளை, வழிபாடுகளைச் செய்கின்றனர். இதில் தூய்மையாக இருத்தல் அதுவும் மாதவிடாய் அல்லாத நாளாக இருக்க வேண்டும். இந்த நேரத்தில் கணவனுடன் உடலுறவு கொள்ளக் கூடாது. இப்படி தூய்மையாக இருத்தல்





பல விடயத்தில் விரிந்து காணப்படுகின்றது. மாதவிடாய் காலத்தில் தூய்மையாக இருக்கவும், உடலுறவைத் தவிர்த்தும் இருக்க வேண்டிய பெண்ணை, அதேபோல் மற்ற நாளில் இருக்க கோருவது ஆணாதிக்கத்தின் திமிர் பிடித்த பார்ப்பனிய மரபாகும். பார்ப்பனிய வேதம் இதைக் கோருவதைப் பின்னால் ஆராய்வோம்.

அரச மரத்தைச் சுற்றி 108, 1,008 தரம் சுற்றி வரும் பெண் அதனால் கருவுறுகின்றாள் என்ற நம்பிக்கைகள் அவளை நோக்கித் தள்ளுகின்றது. இதையொட்டிய பூசைகளின் போது புரோகிதரின் உதவியுடன் பெண் கருவுறுவது என்பது உண்மையில், அக்குழந்தையின் தந்தை சொந்தக் கணவன் அல்ல என்பதுதான் உண்மையாகும். குழந்தையைக் கோரி ஒரு நாளைக்கு ஒரு சங்கு பால் வீதம் குடித்து உண்ணாவிரதமிருப்பதும் நடக்கின்றது. அக்கம்பக்கத்து வீடுகளில் பிச்சையெடுத்து உண்பதன் மூலம் (ஆண் பிள்ளை) பிள்ளைவரம் கோருகின்றனர். மற்றொரு சடங்கில் நிலத்தில் உணவையிட்டு மிருகம் போல் வாயால் நக்கி உண்பதன் மூலம், தம்மை வருத்தி இழிவுபடுத்தி பிள்ளை வரம் கோருகின்றனர். நாகப்பாம்பு வாழும் புற்றின் அருகில் பால், முட்டை வைத்து பிள்ளை வரம் கோரி, சில நாட்கள் தொடர் சடங்குகளைச் செய்கின்றனர். சிலர் தொட்டில் ஒன்றை மரத்தில் கட்டி விடுவதன் மூலம் குழந்தை கிடைக்கும் என்று நம்புகின்றனர். இதேபோல் சில நோன்புகளின் போது சிறு குழந்தைக்கு உணவளிப்பதன் மூலம் குழந்தை கிடைக்கும் என்று நம்புகின்றனர். ஏழைக் குழந்தையைத் தத்தெடுப்பதன் மூலம் குழந்தை கிடைக்கும் என்று நம்புகின்றனர். குழந்தை இல்லாத பெண், குழந்தை பிறந்த வேறொரு தாய் வீட்டுக்குச் சென்று, அவ்வீட்டு அம்மிக் குழவிக்கு குழந்தையை போல அலங்காரம் செய்து, பின் அதைப் பிறந்த குழந்தைக்கு அருகில் வைத்து, பிறந்த குழந்தையின் தொப்புள் கொடியை எடுத்து உண்ணுகின்றாள். இதன் மூலம் குழந்தை பெறமுடியும் என்று நம்பிக்கைக் கொள்கின்றனர். இது போன்று சடங்குகள் பலவற்றைச் செய்யப் பெண்ணை நிர்ப்பந்திக்கின்றது.

ஆணாதிக்க அமைப்பில் ஆணாதிக்க வாரிசைப் பெற்றுக் கொடுக்கப் பெண் தன்னைத்தான் வருத்தி, கேவலப்படுத்தி, அழுந்திக் கிடக்க வேண்டியுள்ளது. ஆண்கள் இது போன்றவற்றைச் செய்வதில்லை. அப்படி எதுவும் செய்யின் பெண்ணுக்குத் துணைமட்டுமே நிற்கின்றான். கருவின் கருவளம் பெண்ணினால் மட்டுமே தீர்மானிக்கப்படுகின்றது என்ற ஆரம்பக்காலக் கண்ணோட்டம் ஆணின் பங்களிப்பைத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் ஆணின் உதவி தேவை என்பதை அனுபவ ரீதியாகப் புரிந்த போதும் (இதில் தான் ஒருதாரமணம் உறுதிப்படுகின்றது.), ஆணாதிக்கக் கண்ணோட்டம் அதைத் தனக்கு எதிராக ஆண்மை இன்மை மீது வைக்க மறுத்தது. குழந்தை இல்லை என்றால் அது பெண்ணின் குறையாகக் காட்டி, ஆணாதிக்க ஆண்மையைப் பாதுகாத்தது. இதனால் பெண்ணைக் கொண்டு சடங்குகளை, விரதங்களைச் செய்விப்பதன் மூலம் நிவர்த்திக்கக் கோருகின்றது. பெண் இதில் தன்னைத்தான் தரம்தாழ்த்தி வாழவும், ஆணாதிக்கத்தைப் போற்றவும் இவை நிர்ப்பந்திக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழந்தை இல்லாத நிலையில் ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை மலடியாகக் கேவலப்படுத்தும் போது, அப்பெண் அதை எப்படி சந்திக்கின்றாள்? என்பதைக் கீழே உள்ள பாடலில் இருந்து பார்ப்போம்.

"ஐயனால் கோயிலாண்டா ஆடுவெட்டப்போனா இடத்த
ஆட்டுக்கிடா நூறும் சுமந்தேன் - என் அன்னமே
ஆட்டுக்கிடா நூறும் சுமந்தேன்
என்ன என்ன சுமந்தாலும் என் கண்ணம்மா
கன்னரே வர்ணமுள்ள தேவரே
எனக்கு மைந்தன் ஒன்றும் காணமே - என்னன்னமே
எனக்கு மைந்தன் ஒண்ணும் காணமே"[36]

"மாடுபோகும் வழிகளில் மங்கநீரக்கட்டி வச்ச
மங்கையாள் பேரச் சொன்னா மாடுகள்ளுத் தீண்டல்ல"[36]

— இதில் தனக்கு ஒரு குழந்தை கிடைக்கவில்லை என்று பெண் புலம்பும் போது, கடவுளை நோக்கி செய்த சடங்குகளைச் சொல்லிப் புலம்புகின்றாள். தனது வேண்டுகோள்களையும், தானங்களையும் மிருகங்கள் கூட ஏற்கத் தவறி, குழந்தையைத் தரத் தவறுகின்றன என்று புலம்பும் சோகத்தைக் கண்ட ஆணாதிக்க அமைப்பு வெட்கித் தலைகுனிவதில்லை. குழந்தை பெறாமைக்கு ஆண் கூட நேரடிக் காரணமாக இருக்கும் சந்தர்ப்பத்தை நிராகரித்தபடிதான் பெண் வதைக்கப்படுகின்றாள். இந்த ஆணாதிக்க வதைகளில் இருந்து குழந்தையைப் பெற்று விடுபடும் பெண், இதைத் தனது குழந்தையின் தாலாட்டில் எப்படி விரதம் இருந்து பற்பல சடங்குகளைச் செய்ய வேண்டியிருந்தது என்பதைக் குழந்தையிடமே கீழே உள்ள பாடலில் வெளிப்படுத்துகின்றாள்.

"ஆறிரண்டும் காவேரி - என் கண்ணே
அதன் நடுவே சீரங்கம்
ஸ்ரீரெங்கம் ஆடி - என் கண்ணே
திருப்பாற் கடலாடி
மாமங்கம் ஆடி என்கண்ணே
மாசிக் கடலாடி
தைப்பூசம் ஆடி - என் கண்ணே
தவம் செய்ய வந்தவனோ
பட்டினி இருந்து - என் கண்ணே
பகவானைச் சேவித்து
மலைமேல் தவமிருந்து - எனக்கு
மயிலேறி வந்தவனோ"[36]

"அள்ளி மிளகு தின்னு
அறுபது நோன்பிருந்து
எண்ணிமிளகு தின்னு





எட்டுநாள் நோன்பிருந்து
கன்னி குமரியிருந்து
கண்டெடுத்த கண்ணோ"[36]

"பத்தெட்டு காலம் பகவானை சேவித்தோம்
ஈரேழுகாலம் ஈசுவரனை தியானித்தோம்
போன போன கோவிலெல்லாம் புத்திரனே வேண்டுமென்று
போகாத கோவிலுக்கு பொன் முடிஞ்சு போகவிட்டோம்"[36]

— இவைகள் இந்து வழிபாட்டில் இந்துப் பெண்களுக்கு மட்டுமல்ல, கிறித்துவ வழிபாட்டில் கிறிஸ்தவப் பெண்களும் ஆணாதிக்கத்துவ அமைப்பில் வாரிசைப் பெற்றுக் கொடுக்க விரதங்கள், சடங்குகளைச் செய்வதைக் கீழே உள்ள பாடலில் வெளிப்படுத்துகின்றனர்.

"நான் திங்கள் முழுகித் திருக்கோவிலுக்குப் போகையிலே
பவனிவரும் மரியாளும் திருவுள்ளத்தில் கொண்டாரோ
பவனிவரும் ஏசுநாதரும் மனமகிழ்ந்து கொண்டாரோ
மாதம் முழுகி நான் வேளாங்கன்னி போகையிலே
அன்னை கன்னிமரியாளும் மனமகிழ்ந்து கொண்டாரோ
அந்தோனியாரை மன்றாடிச் செபம் செய்து வந்தானோ"[36]

— என்று குழந்தை வாரிசு வேண்டி மதம் கடந்து பெண் துன்பப்படும் சோகத்தையே இது காட்டுகின்றது. பெண் கருவுறும் போதே கணவன் மற்றும் கணவன் வீட்டுக் குடும்பத்திடம் இருந்து முதன் முதலாக அன்பும், ஆதரவும் கிடைக்கின்றது. குடும்ப வாரிசை உருவாக்கும் இப்பணியின் முடிவு வரை பெண்ணுக்குக் கிடைக்கும் காலம்தான், பெண் புகுந்த வீட்டில் நிம்மதியாக வாழ்ந்த காலமாக இருக்கும். இதுவும் ஓர் எல்லைப்பாட்டைக் கொண்டது. பெண் கருவைச் சுமந்தவுடன் தாய் வீட்டை நோக்கிச் செல்லுகின்றாள். அங்கு நிம்மதியான வாழ்க்கை, ஆதரவு, அன்பு போன்றவற்றைப் புகுந்த வீட்டைவிட அதிகமாகப் பெறுவதன் மூலம், குழந்தையை மனச்சுமையின்றி பெறுவதுக்கு உதவுகின்றது. ஆனால் குழந்தையைப் பெற்றவுடன் குழந்தைக்குச் சீர் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தை, பெண்ணைப் பெற்ற குடும்பம் சந்திக்கின்றது.

கருவுறும் பெண்ணுக்கு மாசு அகற்றும் நிகழ்ச்சிக்காகச் **"சீமந்தம்"**[36] என்ற சடங்கு நிகழ்ச்சியைச் செய்வதுடன், பூச்சூடல் மற்றும் வளைக்காப்பு போடுதல் போன்ற சடங்குகளைப் பெண்ணுக்குச் செய்கின்றனர். பெண் கருவுற்று தாய் வீடு சென்று குழந்தை பெற்று திரும்புவது என்பது வேதனையான காலமாகும். வறுமை மற்றும் மருத்துவ வசதியற்ற கிராமப்புறத்தில் குழந்தைப்பேறு என்பது பெண்ணின் இறப்புக்குச் சமமானது. இதனால் தாய் வீட்டை நோக்கி பெண் செல்வது, மரணத்தை நோக்கிச் செல்வது போன்ற மனநிலையைப் பெண் அடைகின்றாள். அதை அவள் எப்படி வெளிப்படுத்துகின்றாள்? எனக் கீழே உள்ள பாடலில் இருந்து பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நான் தேய்க்கும் எண்ணெயெல்லாம்
ஏன் அருந்துரையே
ஆர்தேச்சிப் பார்க்கப்போறா"[36]

— என்ற வரிகள் ஊடாக ஆணின் ஆணாதிக்கத் தன்மையை வெளிப்படுத்துகின்றாள். தான் மட்டும் ஒருதலைப்பட்சமாகக் காதலிப்பதையும், ஆண் காதலிப்பதில்லை என்பதையும் இதன் ஆழ்ந்த அர்த்தத்தில் வெளிப்படுத்துகின்றாள். குழந்தைப் பேற்றில் இறந்தவுடன், தான் பாவித்த பொருட்களை எந்தப் பெண் அனுபவிக்கப் போகிறாளோ என்று புலம்பும் போது, அப்பெண்ணின் எதார்த்தம் நிர்வாணமாகின்றது. ஆண் தன் மனைவி இறந்தால் வேறொரு பெண்ணை அடுத்த கணமே, மீளத் திருமணம் மூலம் நிரப்பும் ஆணாதிக்கப் பண்பாட்டின் கொடூரத்தை இப்பாடல் வரியூடாகப் பெண் வெளிப்படுத்துகின்றாள்.

குழந்தை பெற்ற பெண்ணை மாசு நிறைந்தவளாகக் கருதி தனியறையில் பெண் குடும்பமே ஒதுக்குகின்றனர். மாசு அகற்றும் வரை அப்பெண் எதையும் செய்யமுடியாது. இந்த வீடு மாசு நிறைந்ததாகக் கருதி, சமூகம் தனித்துவமாக அணுகுகின்றது. இதன் போதும் பெண்ணை நோக்கி சடங்குகள் மீள நடத்தப்படுகின்றது.

இதன் அடுத்தக் கட்டமாகப் பெண் பெற்ற குழந்தைக்கு நன்றிக் கடனாகவும், அக்குழந்தையைப் பாதுகாக்கவும் புதிய சடங்குகளைப் பெண் தொடங்குகின்றாள். குழந்தைக்கு வழிபட்ட கடவுளின் பெயரைச் சூட்டிக் கொள்கின்றனர். குழந்தை பிறந்தால், குழந்தையின் கையால் மூன்று பிடி பணத்தைக் கோயிலுக்குக் கொடுக்கின்றனர். சிலர் குழந்தையின் நிறைக்குச் (எடைக்கு எடை) சமமான பொருட்களைக் கொடுக்கின்றனர். சிலர் மணி செய்து கொடுக்கின்றனர். இதன் போது கோயில் எல்லையில் தென்னை மரத்தை நடுவதன் மூலம் குழந்தை செழித்து வாழும் என்று நம்புகின்றனர். கரும்பில் துணியிட்டுக் கணவனும் மனைவியுமாகக் குழந்தையை அதில் இட்டுக் கோயிலைச் சுற்றி பின் அக்கரும்பைக் கோயிலுக்குக் கொடுப்பர். குழந்தையின் தலைமுடியைக் காணிக்கையாக்குவர். குழந்தையும், தாயும் பிச்சையெடுத்து ஒரு நாள் உண்பர். குழந்தைக்குப் பிச்சை என்று பெயரிடுவதன் மூலம் குழந்தையை இழிவுபடுத்தி நாவூறு கழிப்பர்.

சிலர் குழந்தைக்கு மூக்கு குத்தி ஆணாக இருந்தால் மூக்கன் என்றும், பெண்ணாக இருந்தால் மூக்கம்மாள் என்றும் பெயரிடுவர். இதனால் குழந்தைக்கு ஆசைப்பட்டு எமன் கவர்ந்து செல்ல மாட்டான் என்ற நம்பிக்கை. குழந்தையை வேறு ஒரு தாயிடம் கொடுத்துவிட்டுப் பின் தவிட்டைக் கொடுத்து குழந்தையை மீளப் பெறும் சடங்கும் நிகழ்கின்றது. குழந்தையைக் குப்பையில் கிடத்தி, பின் குழந்தைக்குக் குப்பை என்று பெயரிடுவர். இது போன்ற **அனைத்துச் சடங்குகளிலும் பார்ப்பனியச் சொகுசு வாழ்க்கை வாழும் புரோகிதர்**





**கூட்டம் இலாபமடைகின்றது.** ஆணாதிக்க வாரிசுரிமையைக் கோரி அதைப் பாதுகாத்து வளர்க்கும் வழியில், பெண் எல்லா வகையிலும் தன்னை வருத்தவேண்டியுள்ளது. இதில் இயற்கை மற்றும் செயற்கையான அழிவைத் தடுக்க சடங்குகளை, வழிபாடுகளைத் தீர்வாக ஒட்டுண்ணிகள் முன்னிறுத்தியதன் மூலம், பெண் அதற்குள் அடிமையாக்கப்பட்டுள்ளாள். இதன் மூலம் ஆணாதிக்கம் செழித்து வாழ்கின்றது.

பிறந்த குழந்தை மீதான தாலாட்டில் பெண் தனது உள்ளத் துயரங்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தும் அதே நேரம், இசை மற்றும் மொழி ஆளுமையை வெளிப்படுத்தும் இடமாகவும் உள்ளது. ஆணின் வாரிசுரிமையைப் பெற்றுக் கொடுத்ததின் மூலம் மலடி என்ற அவதூறில் இருந்து விடுபட்டதைத் தாலாட்டில் குழந்தைக்குச் சொல்லும் போது பெண்ணின் துயரம் நிர்வாணமாகின்றது.

புகுந்த வீட்டில் இருக்கும் கணவன்மாரின் சகோதரிகள், தமக்குப் போட்டியாக அண்ணன் மனைவி பொருளாதார ரீதியாக வந்ததாகக் கருதும் நிலையில் பெண்களுக்கிடையில் (கணவன் பார்வையில் மனைவி x சகோதரி) மோதல் நீடிக்கின்றது. இதை மீறி குழந்தை பராமரிப்பில் வாரிசுரிமை, தவிர்க்க முடியாமல் அண்ணனைத் திருப்தி செய்யும் வகையில் சகோதரிகள் பராமரிப்பில் பங்கு கொள்கின்றனர். அதைக் குழந்தை பெற்ற தாய் தனது தாலாட்டில் பாடுவதைப் பார்ப்போம்.

"பட்டெடுத்துக்கண்ணே தொட்டிலிடப்
பாஞ்சாலிகண்ணே அத்தையிருக்க
பசியாத்திக்கண்ணே பால்கொடுக்கப்
பத்தினியார் கண்ணே இங்கிருக்க"[36]

அண்ணன் சகோதரிகள் ஆண்வழிக் குடும்பத்தில் தொடர்ந்து வாழமுடியாத நிலையில், குழந்தை பராமரிப்பு தான் புகும் இடத்தில் குழந்தையைப் பெற்று வாழும் ஆணாதிக்கச் செல்வத்தைப் பெற்றுக் கொள்ள அல்லது அதை நோக்கிய கனவில் ஆறுதலைக் கொடுக்கின்றது. இந்தப் பராமரிப்பில் தேவதாசிகள் அமர்த்தப்பட்டதைப் பெண் பெருமையாகப் பாடுகின்றாள்.

"சிலநோம்பு நாளையிலே உனக்குத் தாலாட்டுபவராக
மதுரைத்தாசிமார் எல்லோரும்"[36]

— என்ற பாடல் வரிகள் எமக்குச் சில விளக்கத்தைத் தருகின்றது. பெண் நோன்பு இருக்கும் போது, குழந்தை பராமரிப்பு உட்பட பெண்ணின் ஆணாதிக்கக் கடமைகளைச் செய்வதைத் தவிர்க்கவும், அதைத் தாசிமார் கொண்டு நிறைவு செய்ததையும் இது வெளிப்படுத்துகின்றது. இதற்குள் அத்தாசிமார் கணவனின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்வதும் அங்கீகரிக்கப்பட்ட வடிவமாக இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பார்ப்பனிய இந்து மதம் தாசிமாரை உருவாக்கி விபச்சாரத்தில் ஈடுபடுத்திய போதும் சரி, பார்ப்பன உடலுறவில் மோட்சம் கிடைக்கும் எனப் பெண்ணை நம்ப வைத்த போதும் சரி, ஆணின் பலதாரமணத்தை அங்கீகரித்த போதே இதற்குள் எல்லை அற்றதாகி விடுகின்றது. மனைவி குழந்தைப் பேற்றை நோக்கி தாய் வீட்டை நோக்கிச் செல்லும் போது, மனைவியின் தங்கை (அதாவது கொழுந்தி) கணவனைப் பராமரிக்கும் பணியில் இந்தப் பாலியல் அங்கமும் உள்ளடங்கியே இருந்தது. முன்பு மூத்தப் பெண்ணைத் திருமணம் செய்தால், பெண்ணின் தங்கைமார் அனைவரும் அவ்வாணின் மனைவிமாராக இருந்தது எல்லாம், இன்றும் சில விதிவிலக்குடன் காணமுடியும்.

குழந்தைப் பராமரிப்பில் கடவுள் எப்படி பங்களிக்கின்றார் என்ற வரிகளில் பெண்ணின் நிலையைக் கீழே உள்ள பாடலில் இருந்து பார்ப்போம்.

"ராமர் பசுவளக்க லட்சுமணன் பால்கறக்க
சீதை எளுந்திருச்சித் தீமூட்டிப் பால்காச்சி
சீதையம்மா மோர்கடைய - என்னய்யா
செல்லமகள் நித்திரையோ"[36]

— இங்கு பெண்ணின் கடமை சீதை வழியாக வெளிப்படுத்தப்படுகின்றது. பெண்ணின் கடமை குசினிக்குள் என்பதை எதார்த்தமாக வெளிப்படுத்தும் இந்த வரிகள், பெண்ணின் அடிமைத்தனத்தையும் காட்டுகின்றது. பிறந்த குழந்தைக்கான இத்தாலாட்டுக் கல்வி ஆணாதிக்கக் கடமைகளை இந்த வரிகள் ஊடாக உணர்த்துகின்றது. இதை மேலும் பார்ப்போம். இதில் ஆண் குழந்தையை நோக்கிய தாலாட்டுப் பாடலில் ஆண் படிக்க பிறந்தவன் என்ற கண்ணோட்டத்தில் வெளிப்படுகின்றது. அதைக் கீழே காணலாம்.

"சென்னைப்பட்டணம் ஐக்கோடு - என் ஐயா நீ
செயிக்கப் பொறந்த கண்ணோ
பசுமலை பள்ளிகூடம் - என் ஐயா நீ
படிக்கப் பெறந்த கண்ணோ
எளுமலை பள்ளிகூடம் - என் ஐயா நீ
எளுதப் பொறந்த கண்ணோ"[36]

இதேபோது பெண்ணை நோக்கிய தாலாட்டுப் பாடலில் பெண் அழகுபடுத்தப்பட வேண்டியவள் என்பதைக் குறித்து வெளிவருகின்றது.

"பச்சை வளவி எடு - என் அம்மாளுக்கு
பலவர்ண மஞ்சள் தோடு
நீல வளவி தொடு என் அம்மாளுக்கு
நெளிவர்ணப் பச்சை தோடு"[36]

"நாளி நறுக்கு மஞ்சு - மீனாளுக்கு
நன்னாளி பச்சமஞ்ச





அரச்சு வளிச்சாளோ - மீனா
அஞ்சுவறுக் கிண்ணத்திலே
தேய்ச்சுக் குளிச்சானோ - மீனா
தொப்பமெல்லாம் பூமணக்க
கொத்தோடு சீவக்காயோ - மீனாளுக்கு
கொடத்தோட நல்லெண்ணை
அள்ளிக் குளிப்பாளோ - மீனா
அத்தனையும் பூமணக்க"[36]

— என்று இந்தத் தாலாட்டின் ஊடாக ஆண் - பெண் குழந்தையின் கடமைகள், ஒழுக்கங்கள் புகட்டப்படுகின்றன. சமுதாயத்தின் ஆணாதிக்கப் படிமானங்கள் பிறந்தது முதல் தாலாட்டில் இருந்து வேறுபட்டுப் பிளந்து உருவாக்கப்படுகின்றது. சமுதாயத்தில் பெண்ணின் நிலை, அவளின் கடமையை ஒட்டி வெளிப்படும் தாலாட்டுப் பாடல்கள் தன்னிச்சையான, சுயேட்சையான வெளிப்பாடுகள் அல்ல.

ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை அமைப்பு எப்படி ஆண் பெண்ணின் கடமையைச் சமூகத் தன்மையாக்கியுள்ளதோ, அதைப் பிரதிபலித்தே தாய்மை கற்றுக் கொடுக்கின்றது. இதற்கு வெளியில் தாய்மைக்கு ஓர் உலகம் சுயேட்சையாக இருப்பதில்லை. இதில் இருந்தே, தன்னை அறியாமல் தாய் தனக்கு எதிராகவே குழந்தை வளர்ப்பில் ஆணாதிக்க நஞ்சையூட்டுவது நிகழ்கின்றது. சூறையாடும் பொருளாதார அமைப்பில் உண்ணும் உணவு சுவாசிக்கும் காற்று, குடிக்கும் நீர் மற்றும் நஞ்சையும் உள்ளடக்கி எப்படி உடலினுள் எம்மையறியாமால் உள்வாங்கி நோயைச் சந்திக்கின்றோமோ, அப்படித்தான் தாலாட்டிலும் ஆணாதிக்கம் இணைந்து போயுள்ளது. இது தனிச் சொத்துரிமையில் குழந்தைக்குச் சூறையாட கற்றுக் கொடுப்பதைக் கீழே வரும் பாடலில் இருந்து பார்ப்போம்.

"தங்கத் தொறவால்களாம் - என் கண்ணே
தனித் தாழ்ப்பாள் பூட்டுகளாம்
அதட்டித் தொறக்க நீ
அதிகாரி பொறந்தாயோ
வெள்ளி எழுத்தாணி வெண்கலத்தால் மைக்கூடு
தொட்டக்கணக்கெழுதும் துரைராஜா"[36]

சமுதாயத்தின் இயக்கங்கள், அதில் மேன்மையான வாழ்க்கையைக் கோரி, பாடும் தாலாட்டுப் பாடல்கள் மூலம் கனவுகாணும் தாய்மையின் பின்னால், ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை விளைவுகளை விதியாக்குகின்றது. இது பெண்ணை மட்டுமல்லாமல், மனித அடக்குமுறைகளை எதார்த்த அமைப்பு சார்ந்து, பரம்பரையாகத் தொடர வழிகாட்டுகின்றது.

பெண்கள் தமது பிறந்த வீட்டுப் பெருமையைக் குழந்தைக்குத் தாலாட்டின் ஊடாகச் சொல்வதில் தமது துயரத்தைப் பகிர்ந்து கொள்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"செக்கச்சிவப்பரோ உங்க மாமா
சீமைக்கோர் அதிபதியோ
அழகுசிரிப்பரோடே ஐயா நீ
அருமை மருமகனோ"[36]

"பட்டமரம் பாலூறும்
பாவல்காய் தேனூறும்
உத்தமனார் வாசலிலே
ஏலக்காய் காய்க்கும்"[36]

"இலநாலு பிஞ்சுதிரும்
ஜாதிக்காய் காய்ச்சிருக்கும் - உங்க
தாய்மாமன் வாசலிலே"[36]

"தங்கக் குடை பிடிச்சு
தாசிமாரை முன்னே விட்டு - உன்மாமன்
தாசிக்கே விட்டபணம் - ரெண்டு
தங்க மடம் கட்டலாமே
மே வீடாம் கீ வீடாம்
போகவர ரஸ்தாவாம்
தாசிகள் வந்திறங்க
தாமரைப் பூஞ்சோலை"[36]

இது போன்ற தாலாட்டுகள் மூலம் பிறந்த வீட்டுப் பெருமையையும், பிரிந்த துயரத்தையும் சொந்தக் குழந்தையிடம் ஒப்பு வைக்கின்றாள். பெண்வழிச் சமுதாயத்தில் இருந்து ஆண்வழிச் சமூகத்தின் ஆணாதிக்கக் கொடூரம் பெண்ணை இழிவுபடுத்திய போது, புகுந்த வீட்டை விட பிறந்த வீட்டை நினைத்து ஏங்குவது இயல்பாகின்றது. சொந்தக் கணவன் தாசியிடம் போவதை அல்லது வேறு பெண்ணை வைப்பாட்டியாக வைத்திருப்பதை எதிர்க்கும் அதே நேரம், சொந்த வீட்டுப் பெருமையில் இவைகள் சிறப்பு பெற்றுப் புகழப்படுவதைக் காணமுடிகின்றது.

தாய்மாமனிடமும் ஒரு பெண் தன்னைப் போல் புகுந்த வீட்டு வேதனையை அனுபவிப்பாள் என்ற உணர்வைவிட, குழந்தைக்குப் பெருமைப்படுத்தக் கூடிய தகுதியாக இவைகளைத் தாய்மை போற்றுகின்றது. குழந்தை இந்த ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்ணைக் காதலிப்பதற்குப் பதில், பலதாரமணத்தில் வாழ இந்தத் தாலாட்டுகள் அங்கீகாரத்தை மறைமுகமாகக் கொடுக்கின்றது. தாலாட்டின் எல்லை விரிந்த பாடல்கள் நிறைந்து இருக்கின்றன. பெண் தனது சோகத்தை, தனது துன்பத்தை, தனது ஆத்திரத்தை எப்படி வெளிப்படுத்துகின்றாள் என்பதைக் கீழே வரும் பாடலில் இருந்து பார்ப்போம்.

"மாமனால் காட்டுக்கு உங்களத்தை
அரிப் பிறக்கப் போகையிலே





பெட்டிபிடுங்கி - உங்க மாமன்
பிறகரையே எறிஞ்சிடுவார்"[36]

— இதில் கணவனின் சகோதரி (நாத்தனார்) தனது கணவனிடம் பொருளாதார ரீதியாகத் தனது உரிமையைப் பறித்து பங்கு பெறுவதை எதிர்த்தும், தனது கணவரின் தந்தையை எதிர்த்தும், தனது சகோதரன் தனக்காக நிற்பதாகத் தாலாட்டில் குழந்தையிடம் ஒப்புவிப்பதன் மூலம் அவமதித்த திருப்தி கொள்கின்றாள். புகுந்த வீட்டை வெறுத்துப் பாடும் இந்தத் தாலாட்டுகள் ஒருதாரமணத்தின் வன்முறையை வெளிப்படுத்துகின்றது. இந்தத் திருமணங்கள் ஆணுக்கு மட்டும் சார்பான ஜனநாயக விரோதத்தைப் பெண்ணுக்கு உள்ளடக்கி வக்கரித்துக் கிடப்பதைக் காட்டுகின்றது. இதைப் பெண் புலம்பக் கூடிய நிலை தாலாட்டாக இருப்பதால், அதை அப்பட்டமாகச் சொல்லிவிடுகின்றாள். சொந்தத் தந்தையையிட்டுக் குழந்தைக்குத் தனது தாலாட்டில் கூறுவதையும் காணலாம்.

"சாமத்திலே பூத்த பூவு - மச்சான்
சாமத்திய பூ நானிருக்க
சாறிப்போன பூவுக்குத்தான் -மச்சான்
சந்து சந்தா நீ சுத்தலாமோ"[36]

— என்று பெண் மட்டும் இந்த ஆணாதிக்கச் சமுதாயத்தில் காதலிப்பதையும், ஆண் பலதார மணத்தில் காதலை விபச்சாரம் செய்வதையும், இந்தத் தாலாட்டை விட சிறப்பாக எதுவும் சொல்லிவிடவில்லை. பெண் தனது இயற்கையான பாலியல் தேவையை இழந்து நிற்பதையும், ஆண் விபச்சாரிகளைத் தேடி அலைவதுடன், வீதிவிதியாகப் பெண் வேட்டையில் அலைவதையும், தாய்மை குழந்தையிடம் சொல்லிப் புலம்புவதையும் கண்டு எந்த ஆணாதிக்கச் சமுதாயத்திடமும் இரக்கத்தை ஏற்படுத்திவிடுவதில்லை. ஆண் தனது பாலியல் சுகத்தை இழக்க என்றுமே தயாராக இருந்ததில்லை. ஆனால் பெண் அதை இழக்கவும், சுகத்தைத் தியாகம் செய்யவும், ஆணுக்குச் சேவை செய்யவும் அடிமைப்படுத்தப்படுகின்றாள்.

ஒரு பெண் தனது குழந்தையை ஆணுக்குப் பதில் பெண்ணாகப் பெற்றுவிட்டால் அவள் சந்திக்கும் வேதனையைத் தனது பெண் குழந்தையிடமே தாலாட்டில் சொல்வதைப் பார்ப்போம்.

"என் கண்ணே! நீ
பொண்ணாய் பொறந்தாயல்லோ
ஆணா நீ பொறந்தா
எம் புருசன் அடிப்பானோ
மாமிக்காரி கொடுமையல்லோ
மாமங்காரன் சண்டாளன்
என் கண்ணே என்
துயரமெல்லாம் அதிகமாச்சே"[36]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

— என்று ஆணின் வாரிசான ஆண் குழந்தை பெற்று எடுக்காத பெண் தனது புகுந்த வீட்டில் துயரங்கள் அதிகமாவதை இப்பாடலில் சொல்கிறாள். பெண்ணைப் பெற்ற பெண்ணுக்கு அடி, உதை, கொடுமை, அவமதிப்புடன் கூடிய கடினச் சேவை செய்யும் உழைப்பும் பரிசாகக் கிடைக்கின்றது. இதைத்தான் இந்தத் தாலாட்டின் ஊடாகப் பெண் சொல்லிப் பாடுகின்றாள்.

பெண் சொத்துரிமையின் வாரிசாக அல்லாது சொத்தைக் கொண்டு செல்பவள் என்ற வகையில் வெறுக்கும் ஆணாதிக்க வாரிசு சொத்துடைமைச் சமூகம், இதைக் கொண்டுவரக் கூடிய ஆணைப் பெற்று எடுப்பதில் சார்ந்து நிற்கின்றது. பெண் சீதனமாகச் சொத்தைப் புகுந்த வீட்டுக்குக் கொண்டு செல்பவள். அதே நேரம் ஆண் அதைக் கொண்டு வரப்பண்ணுபவன். இதில் நிலம் போன்ற அசையா சொத்துகள் ஆணைச் சார்ந்து நிலைப்பவையாக உள்ளது. இதில் சம்மந்தப்பட்டவர்களை நேரடியாகக் குற்றவாளியாகக் காண்பதும், குற்றம் சாட்டுவதும் தவறாகும். இது சூறையாடும் தனிச் சொத்துரிமை அமைப்பின் ஜனநாயக வடிவமாகவும், விளைவாகவும் இருக்கின்றது. அதன் அங்கமாகவே பெண்ணுக்கு எதிராக இக்கொடூரம் நிகழ்கின்றது.

ஆண் பெண் பிறப்பின் அடிப்படையைத் தீர்மானிப்பது ஆணில் உள்ள விந்துதான் என்பது விஞ்ஞான உண்மையாகும். கரு உருவாகும் முன் தனித்தனியாகக் காணப்படும் விந்தில் 22 சோடி பண்பின் கீறுகளையும், ஒரு பால் கீற்றையும் கொண்டே இருக்கின்றது. இதில் ஆணுக்கு வேறுபட்ட இரண்டு கூறுகளும், பெண்ணுக்கு ஒரே தன்மையான இரண்டு கூறுகளும் காணப்படுகின்றது. ஆணிடமிருந்து எந்தத் தன்மையான கூறு பெண்ணுடன் இணைகின்றது என்பதே ஆண் பெண்ணை தீர்மானிக்கின்றது. இந்த ஆண் பெண்ணின் இணைவைப் பார்க்க படத்தில்.

சுரண்டும் வர்க்கத்தால் பொருளாதார அமைப்பே சூறையாடப்பட்டுக் கிராமப்புறங்களை வஞ்சிக்கப்பட்டு உருவான வறுமையில் குழந்தை பிறப்பை எண்ணி, தாய்மை தனது தாலாட்டில் பாடுவதைக் கீழே பார்ப்போம்.

“முத்துச்சிரிப்பழகா முல்லைப்பூப் பல்லழகா
வெத்துகுடிசையிலே விளையாட வந்தாயோ
ஏழைக்குடிசையிலே ஈரத்தரைமேலே
தாழம்பாய்போட்டுத் தவழ்ந்தோட வந்தாயோ
தரைஎல்லாம் மேடுபள்ளம் தவழ்ந்தால் உறுத்தாதோ
பளிங்கால் அரண்மனையும் பவளத்தால் மாளிகையும்
பணக்காரன் வீடிருக்கப் பஞ்சனிடம் வந்தது ஏன்
பச்சரிசிச் சோளம் பாதிநாள் பட்டினிதான்
பசும்பால் கொடுத்துந்தன் பசிதீர்க்கப்பாத்தாலும்
பருத்தி விதை இல்லையடா பசும்பாலைத்த ரலையடா





## வரைபடம்







ஶீணுலீ ர்ஏடீநூ X வீஉறீடுஃடுஉஹீடுஈ ரேஸ் □ஏ எலுூஷீலீரலீயூ ர்ஷீக்டீழுடுஜீ ரேஸ் வீக்ஷடீஷீழு ஃஉனுவீஈ.

ஶீணுலீ ர்ஏடீநூ Y வீஉறீடுஃடுஉஹீடுஈ ரேஸ் □ஏ எலுூஷீலீரலீயூ ர்ஷீக்டீழுடுஜீ ஶீஸ் வீக்ஷடீஷீழு ஃஉனுவீஈ.

X X — ரேஸ்

X Y — ஶீஸ்

www.tamilarangam.net



ஆட்டுப்பால் ஊட்டியுனை ஆதரிக்கப் பார்த்தாலும்
ஆடுகடிக்கும் மரம் அத்தனையும் மொட்டையடா
பிள்ளைப்பால் ஊட்டியுனைப் போசனைகள் செய்திட
கொள்ளையுத்தம் பஞ்சங்குரங்காயிப் போனேன்டா
நெல்லைப் பதுக்கி வைத்து நிட்டுரம் பண்ணிடுவார்

கொல்லை வழிப் போகாது குடிசைவழி வந்தாயோ
ஏழைக் குடிசையிலே ஏன் பிறந்தாய் செல்வமுத்தே
எத்தனையோ சீமாட்டி ஏங்கித் தவங்கிடக்க
என் வயிறுதான் தேடி ஏன் பிறந்தாய் செல்வமுத்தே"[38]

— என்று தாய்மையின் மகத்துவத்தை இங்குதான் பெண் வெளிப்படுத்துகின்றாள். இயற்கையாகத் தாய்மை குழந்தைக்கு உணவூட்டும் ஆழ்ந்த மனிதப் பண்பு, ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை சமுதாயத்தில் மறுக்கப்படும் மனித உரிமை மீறலாகிவிட்ட நிலையில் பெண் அதைச் சொல்லித் தாலாட்டுகின்றாள். இயற்கை மனிதனின் தனிப்பட்ட சொத்தானபோதே, அதன் மேலான உழைப்பும் மனிதனிடம் இருந்து அன்னியமானது. இதனால் இங்கு **வறுமை மனித உரிமை மீறலாக இருப்பதை ஜனநாயகம் மறுக்கின்றது.** வறுமையை ஜனநாயகமாகக் காட்டுவதன் ஊடாக, மனிதர்களை மூலதனத்துக்கு அடிமைப்படுத்தி அற்பப் பிறவிகளாக்குகின்றனர்.

குழந்தையின் வறுமை சாதியைப் போல் பிறப்பிலே தீர்மானமாகி விடுகின்றது. ஏழைக் குடிசையின் நிலைமை, அதில் குழந்தையின் வாழ்க்கை, அங்கு நிலவும் பட்டினி, சுற்று வட்டாரம் ஊடாக இந்த ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை உலகத்தைப் புரிந்து வெளிப்படும் தாலாட்டை, எந்தப் பெண்ணியமும் வெளிப்படுத்த முடியாத சொந்த வக்கிரம்தான், இந்தச் சமுதாயம் நீடித்து நிலைநிறுத்தும் வறுமை என்ற ஜனநாயகச் சர்வாதிகாரமாகும். ஜனநாயகத்தின் வடிவம் வறுமையைக் கட்டமைத்துப் பாதுகாத்து வைத்திருக்கும் சர்வாதிகாரமாகும். இந்தச் சர்வாதிகாரத்தில் நபர்கள் மாறுகின்றனர், ஆனால் வடிவம் மாறுவதில்லை.

கிராமப்புறப் பெண் சொந்த ஆணாதிக்கத் துயரத்தை சந்தித்தபடி, குழந்தையின் மீதான தாய்மை பட்டினியின் மீது இரத்தக் கண்ணீரைச் சுரக்கின்றது. சொந்தத் தாய்ப்பால் வற்றி அதில் இரத்தம் கண்டிப்போகும் மனித அவலத்தில் பெண் சிக்கி விடுகின்றாள். குழந்தையினுடைய பசியின் கதறல் தாய்மையைத் தாண்டி, யாரையும் நெஞ்சுருக வைக்கமுடியாத தனிச் சொத்துரிமை கொள்ளை நோயில் பீடிக்கப்பட்டுள்ளனர். தாய்மை சொந்த வயிற்றில் இருந்து பிறந்த பிஞ்சின் கதறலைக் கண்டு, அதைச் சொல்லியே தேற்றிவிட தாலாட்டுகின்றாள். இந்தத் தாலாட்டுக்கு முன் எந்த மனிதாபிமானமும் தன்னை நிலைநிறுத்த முடியாது.

இந்த உலக வறுமையில் ஒரு பெண் குழந்தையைப் பெறுகின்ற போது, அந்தத் தாய்மையின் பால்வற்றி இரத்தம் சுண்டிப் போன நிலையில்,





நெஞ்சுருகி விட்ட கண்ணீர் கொண்டு வளர்த்து எடுக்கும் **பெண்ணின் வாழ்க்கை உலகத்தில் எதற்கும் ஈடு இணையற்றது.** சுகபோகமாகக் குழந்தையைப் பெற்ற சொகுசு பூர்சுவா பெண்ணியம், மற்ற பெண்ணைச் சூறையாடியே இதை ஏற்படுத்துவதால் இந்த அவலத்தை, தாய்மையின் பண்பைப் புரிந்து கொள்ளமுடியாது சீரழிகின்றனர். இதனால் தனிச்சொத்துரிமைக்கு எதிராகப் போராட மறுக்கின்றனர்.

வறுமை மற்றும் சமுதாய நலனை முன்வைத்து, சில கிராமப்புறத்தில் பெண்கள் தமது வாழ்வின் பழைய தொடர்ச்சிகள் பலவற்றைத் தொடர்ந்து சடங்குகளாகச் செய்கின்றனர். இதில் மிருகவளர்ப்பு, விவசாயம், அதை ஒட்டி மழை கோரி நடத்தும் சடங்குகள் பெண்ணின் கண்டுபிடிப்புகளை மட்டுமின்றி, அதன் ஆதி உரிமையையும் இது வெளிப்படுத்துகின்றது.

மழையை வேண்டி ஏழு பெண்கள் நிர்வாணமாகச் சுற்றி நின்று பிட்டத்தைத் தட்டியபடி (கும்மி ஆட்டம்) ஆடுகின்றனர். இச்சடங்கில் ஆண்கள் கலந்து கொள்ளவோ, பங்கு கொள்ளவோ முடியாது. இங்கு பெண்களின் பிறந்த உறுப்பின் வளத்தன்மையை, வானத்துடன் ஒப்பிட்ட சடங்கின் மூலம் மழை பெய்யும் என்ற நம்பிக்கை ஊடாக இச்சடங்கைச் செய்கின்றனர்.

'மழைக்கஞ்சி' காய்ச்சும் நிகழ்ச்சியூடாக மழையைக் கோருகின்றனர். அரிசியைப் பிச்சையெடுத்து, பொதுவாகக் கஞ்சி காய்ச்சி அதைச் சேர்ந்துண்டு, மழை பெய்யாது போகும் துயரத்தைச் சொல்லி, புலம்பி ஒப்பாரி வைக்கின்றனர். இதன் பின்னால் தாம் இறப்பது நிகழும் என்று சொல்லி இடுகாடு நோக்கி செல்வர். இதன் போது ஆறுதல் சொல்லிக் கூட்டி வரும் நிகழ்ச்சி போல், மழை வரும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர். இங்கு எப்போதும் ஆணாதிக்கச் சமுதாயப் பொருளாதாரக் கட்டமைப்பில் எது அங்கீகரிக்கப்பட்ட பெண்ணின் வளமையாக உள்ளதோ, அப்பெண்கள் மட்டுமே இதில் பங்கு கொள்ளமுடியும். அதாவது கன்னிப் பெண்கள், பல குழந்தைகளைப் பெற்ற தாய் போன்றவர்கள் பங்கு கொள்ளும் இந்நிகழ்ச்சியில் விதவை, மலடி போன்றவர்கள் பங்கு கொள்ளமுடியாது. பெண்களின் இயற்கையான வரலாற்றுச் சடங்கில் கூட ஆணாதிக்கப் பண்பாடுகள் புகுந்திருப்பதை இவை காட்டுகின்றது.

"ஊசிபோல் மின்னல் மின்ன
ஊரிக் கிணறு தண்ணிவர
பாசிபோல் மின்னல் மின்ன
பாங்கிணறு தண்ணிவர
சட்டியிலே மாகரைத்து
சந்தையெல்லாம் கோலமிட்டு
கோலம் அழியவில்லை
கொள்ளை மழை பெய்யவில்லை
கிண்ணியிலே மாகரைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கங்கையெல்லாம் கோலமிட்டு
கோலம் அழியவில்லை
கொள்ளை மழை பெய்யவில்லை
மோழி பிடிக்கும் தம்பி
முகம் சோர்ந்து போகுதம்மா
கலப்பை பிடிக்கும் தம்பி கை சோர்ந்து நிக்குதம்மா"[38]

— இதில் மழையைக் கோரி பெண்கள் தமது துயரத்தைச் சொல்லி புலம்புவதைக் காட்டுகின்றது. உழவின் அடிப்படையான வாழ்க்கையைச் சார்ந்து நாட்டுப்புறப் பாடல் நிதர்சனமாக வெளிவருகின்றது.

விவசாயத்தின் விளைவைக் கோரி 'முளைப்பாலி'[36] என்ற திருவிழாவில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பெண் பங்கு கொள்கின்றாள். ஒரு சட்டியில் 18 வகையான தானியத்தை விதைத்து எல்லோரும் ஒரு வீட்டில் அதை வைப்பர். இதை வயது போன மூதாட்டி ஒருவர் தண்ணீர் ஊற்றி வளர்ப்பார். எட்டாம் நாள் அதை மாரியம்மன் கோயிலில் கொண்டு வந்து, அடுத்த நாள் அதை ஊர்வலமாக ஊருக்குள் எடுத்துச் சென்று நீரில் மிதக்க விடுவர். இந்த ஒன்பது நாளும் ஓர் இடத்தில் கூடி செடியின் வளர்ச்சி, அதன் விளைவு பற்றி கும்மியடித்து வருணித்து அதன் வளத்தைப் போற்றிப் பாடுவர்.

'மதுக்குடம்'[36] என்ற சடங்கில் ஐந்து அல்லது ஏழு பெண்கள் கோயிலில் தங்கி நோன்பு இருப்பர். இரண்டு அல்லது மூன்று வாரம் சென்ற பின்பு கள் (மது) நிறைந்த குடத்தை ஊர்வலமாகக் கொண்டு சென்று கோயிலில் படைத்த பின் தொடங்கும் திருவிழா ஆகும். இது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கோரி நிகழ்வனவாகும்.

'அவ்வை நோன்பு'[36] ஆண்களுக்குத் தெரியாமல் இரகசியமாக இரவில் பெண்கள் கூடிச் செய்வதாகும். இது வறுமைப்பட்ட பெண்களின் துயரத்தைப் போக்க செய்யப்படுகின்றது. உப்பில்லாத அரிசி மாவில் சமையல் பாத்திரப் பண்டங்கள், கிழவன் - கிழவியின் உருவங்கள், ஆண் பெண் பாலியல் உறுப்புகள், மண்டை ஓடுகள், பாடை முதலியவற்றைச் செய்து வெந்நீரில் வேகவைத்து, அதைப் பெண்கள் மட்டுமே உண்பர். விடிவதுக்கு முன் நடத்தப்படும் இச்சடங்கில் பெண்கள் தமது பிறப்புறுப்பை இயற்கைக்குக் காட்டுவதாகவும், நிர்வாணமாகச் செய்வதாகவும் கூறப்படுகின்றது. மொத்தத்தில் இவைகள் பெண்ணின் வாழ்விலும், சமுதாய வாழ்விலும் துயரத்தைப் போக்க நடைபெறுகின்றது.

பெண்ணின் பலவிதமான சடங்குகளில் சமுதாய நலன் முதன்மை பெறுகின்றது. இயற்கையை ஒட்டி வாழ்ந்த பெண் அதை வளமாகக் கண்டு சடங்குகளைச் செய்த போது, சொந்தச் சமுதாயத்தின் நலன் முதன்மையான குறிக்கோளாக இருந்தது. அதுமட்டுமேதான் வாழ்வின் ஆதாரமாகப் பெண் முன் இருந்தது. இந்த வகையில் இந்தச் சடங்குகள் தனிச்சொத்துரிமை





வடிவத்துக்கு எதிரானது. ஆணாதிக்க அமைப்புடன் கூடிய ஜனநாயக அமைப்பை இது கேள்விக்குள்ளாக்குகின்றது. பெண்ணின் வளமையுடன் கூடிய இயற்கை அது சார்ந்த வாழ்க்கை தகர்க்கப்படுகின்ற போது, இந்தச் சடங்குகள் அழிக்கப்படுகின்றன. பெண்ணின் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்த வாழ்க்கையைத் தனியாக இந்தத் தலைப்பைத் தொடர்ந்து பார்ப்போம். இந்தச் சடங்கின் பின்னால் அறிவியலுக்குப் புறம்பாகப் பல நிகழ்ந்த போதும், பெண்ணின் உயர்ந்த சமூகக் கண்ணோட்டம் ஈடு இணையற்றது. இதை எந்தப் பூர்சுவா பெண்ணியமும் கூட கொண்டிருப்பதில்லை. அந்தவகையில் இவைகள் பாட்டாளி வர்க்கப் பெண்ணியத்தின் அடிப்படைக் கூறுகளாக இருப்பதைக் காணமுடியும்.

பெண்கள் தமது வாழ்வின் ஆதாரத்தைப் பெருக்க சடங்குகள் பலவற்றை உற்பத்தி மீது சார்ந்து செய்ததுடன், கடுமையான உடல் உழைப்பிலும் ஈடுபட்டனர். அதை அவள் உழைப்பில் ஈடுபடும் போது கூட்டாகப் பாடி உழைப்பது, அவளின் வலிமையை உயர்த்தியது. அதை எப்படி பாடினாள் என்பதைக் கீழே பார்ப்போம்.

"காடுவெட்டி கல்பொறுக்கி
கம்புசோளம் தினைவிதைச்சி
மேடுவெட்டி முள்பொறுக்கி
முத்துச் சோளம் தினைவிதைச்சி
வெள்ளான உழுதுவர
வேடர் மக்கள் தினைவிதைக்க"[36]

— என்று வாழ்க்கைச் சுழற்சியில் வெளிவரும் நாட்டுப்புறப் பாடல்கள், இசைகள் எந்த அங்கீகரிக்கப்பட்ட கலைஞனின் மனித விழுமியத்தையும் விட உயர்ந்து நிற்கின்றது. உழைப்பும், உழைப்பு சார்ந்த பொருள் மீதான கலையும் எதார்த்தத்தில் இயல்பாக வெளிவரும் போதும், அவை மக்கள் கலையாக மாறிவிடுகின்றது. இங்கு எதார்த்தத்தில் துன்பம், துயரம், சந்தோசம். இலாபம், நட்டம் என எதையும் தமது கலையில் தவிர்ப்பதில்லை. தனது மனதில் படுவதை அப்படியே பாடுவதால், நாட்டுப்புற இலக்கியம் நேர்மையான சமூகக் கண்ணாடியாக மிளிர்கின்றது. புத்தக இலக்கியவாதிகள் தமது வர்க்க நலனைக் கொண்டு வெட்டிச் சுருக்கி இலக்கியவாதியாவதால், அது வக்கரித்து ஆளும் வர்க்கத்துக்குச் சேவை செய்வதாக இருக்கின்றது.

பெண்கள் உற்பத்தியில் ஈடுபட்டதும், அதில் ஆணைப் போல் கடுமையாக உழைப்பதையும், பல்வேறு மக்களின் உழைப்பையும் தமது பாடல் வரியின் ஊடாக வெளிக்காட்டுகின்றனர். இதைத் தொடர்ந்து கீழே வரும் பாடலில் இருந்து பார்ப்போம்.

"மூச்சிபிடிச்சி போடடி குட்டி
முத்துமணிக் குத்திச் சோறாக்கணும்
ஆச்சுதா அத்தே சாயங்காலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அள்ளிக்கோ இந்தா சருகுமணி
மச்சான் வருவான் போடடி குட்டி
மாளலியா இன்னும் நெல்லு குத்தி"[36]

— இந்தப் பாடலில் இருந்து பெண்கள் உணவு சமைக்க வீட்டில் நெல் குத்தும் போதுகூட, கூட்டான வகையில் உழைப்பதையே காட்டுகின்றது. அத்துடன் தமது கணவனை எதிர்பார்த்து நிற்கும் தன்மையை மேலோங்கி காட்டி, உழைப்பு இலகுபடுத்தப்படும் போது கிராமப்புறப் பெண்ணின் இணைமணத்தின் ஆழமான அன்பு, காதல் வெளிப்படுகின்றது. வஞ்சகமற்ற, சூதற்ற கிராமப்புறப் பாட்டாளி வர்க்கம், சொந்த உழைப்பில் எந்தச் சுயநலத்தையும் கையாள்வதில்லை. அதுபோல் தமது அன்பு, காதல் என அனைத்திலும் நாகரிக வக்கிரங்களை வெளிப்படுத்துவதில்லை. இவைகளில் இருந்து வெளிவரும் நாட்டுப்புறப் பாடல்கள் மனித மேன்மையை உயர்த்தி நிற்கின்றது.

கூலிக்கு உழைக்கும் போது சுரண்டலின் கோரத்தையும், பச்சைக் குழந்தைக்குப் பால் கொடுக்க அனுமதிக்காது நேரகாலமின்றி உழைப்பின் சுரண்டலையும், இந்த உழைப்பைச் சார்ந்து தண்டிப்பதையும் நாட்டுப்புறப் பாடலூடாகப் பாடுவதில், தமது எதிர்ப்பை அவர்களுக்கு முன்னாலேயே வெளிப்படுத்துவதில் நாட்டுப்புறப் பெண்கள் பின்நிற்கவில்லை.

"இந்திரரை நோக்கியல்லோ எடுத்தோம் சாந்துலக்கை
காலையில் வந்த மக்கள் கால்கடுக்க நிற்கின்றோமே
வெள்ளனவே வந்த மக்கள் விரல் கடுக்க நிக்கின்றோம்."[36]

"நட்டகுறை நட்டு கூலி வாங்கி முடி
கூலியைக் குறைத்துக் குறைமரக்காலிட்டார்"[36]

"தண்ணி கருத்திருச்சி
தவளை சத்தம் கேட்டிருச்சு
புள்ளை அழுதிருச்சு
புண்ணியரே வேலைவிடு"[36]

"கணக்கு குறைந்ததால்
களைக்காட்டு மேஸ்திரி
கட்டிவைத்து அடித்தானம்மா"[36]

"தண்ணி கருத்திருச்சி
தவளை சத்தம் கேட்டிருச்சு
புள்ளை அழுதிருச்சு அம்மாடி அம்மாடி
புண்ணியரே வேலைவிடும் தன்னானே தன்னானே

அடியாதீங்க புடியாதீங்கா
அந்நியரா நெனக்காதீங்க
கங்காணி வந்ததுமே அம்மாடி அம்மாடி
கணக்கை முடிச்சிருங்க தன்னானே தன்னானே





தொட்டிலிலே புள்ள அழுக
தொயந்து நான் வேலை செய்ய
துப்புக் கெட்ட மொதலாளி அம்மாடி அம்மாடி
தொலையாம நிக்குறானே தன்னானே தன்தனனே

கொல்லுறான் வேலையிலே
கொறைக்கிறான் சம்பளத்தை
காணாம ஓடிப்போனா அம்மாடி அம்மாடி
கைவிலங்கு போடுறானே தன்னானே தன்தனனே

அஞ்சுமணி நேரம் வரை
அல்லி நான் வேலை செய்ய
அறிவு கெட்ட மொதலாளி அம்மாடி அம்மாடி
அசையாம நிக்கிறானே தன்னானே தன்தனனே"[10]

— என்று தமது துன்பத்தைப் பாடும் போதும், அதைப் பெண்களிடமே சொல்லுவது இயல்பாக உள்ளது. சமுதாயத்தின் தாய்மை மற்றும் பெண்வழிச் சமூகத்தின் தொடர்ச்சியில் துயரத்தைக் கூட 'அம்மா' என்ற உச்சரிப்பினூடாகக் கூறுவது பல பாடல்களில் காணமுடியும். துயரத்தை உருவாக்க காரணமான ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை அமைப்புக்கு எதிரான, இயல்பான, தன்னியல்பான உணர்வியல் ரீதியில் தமது எதிர்ப்புப் பாடலில் அம்மாவிடம் பொதுவாகக் கூறுவது இயல்பாக உள்ளது.

கடின உழைப்பு சுரண்டப்படுவதும், அதை ஈவிரக்கமின்றி கூலியை வெட்டிச் சுரண்டுவதும் என பாடல் வரிகள் எல்லையில்லாத ஆழ்மையைக் காட்டுகின்றது. முதலாளியின் மனிதாபிமானமற்ற சுரண்டல் குழந்தைக்குப் பால் கொடுப்பதைக் கூட மறுக்கின்றது. எந்தவிதமான மனிதப் பண்பாடும் அற்ற மற்றவனின் உழைப்பைப் பறித்தெடுக்கும் மனித விரோதத்தை ஏற்றுக் கொள்ளும் எந்த மனிதனும், ஒரு மிருகத்தைவிட கேவலமான பாத்திரத்தை இந்தச் சமுதாயத்தில் ஆற்றும் போது, நாட்டுப்புற மக்கள் அதை எதிர்த்துப் போராடுவதைத் தமது பாடல் வரியின் ஊடாக வெளிப்படுத்துகின்றனர். அத்துடன் **உழைப்பை முன்கூட்டியே முதலாளிக்கு கடனாகக் கொடுக்கும் உழைக்கும் வர்க்கம்,** அதை மீளப் பெற்றுக் கொள்வதற்கு போராட வேண்டியிருப்பதையும், அதை வெட்டிக் குறைப்பதைத் தடுப்பதுக்கும் போராட வேண்டியிருப்பதை இந்தப் பாடல் அம்பலப்படுத்துகின்றது. **எந்தப் புத்தக இலக்கியவாதியையும் விட இவ்விலக்கியங்கள் சிறந்த மக்கள் இலக்கியமாக உள்ளது.** ஆனால் இது சுரண்டல் அமைப்பினால் சேறு அடிக்கப்படுகின்றது. பெண்கள் தமது உழைப்பினூடாக இன்பம் துன்பம் என்று அனைத்தையும் பகிர்கின்றனர். தமது காதலைக் கூட உழைப்பில் தனித்தப் பெண் கூட ஒருமுகப்படுத்தி பாடிவிடும் இலக்கிய ஆற்றல், எந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாகரிகக் கலைஞனிடமும் இருக்க முடியாத இலக்கியச் செல்வமாக இருக்கின்றது. அதை பார்ப்போம்.

"நாத்தெடுக்கப் பேரேனின்னு ஏலெலம்பா ஏலெலம்
நாத்தெடுக்கப் பேரேனின்னு ஏலெலம்பா ஏலெலம்
தாளுகத்த கேட்டா ஓடி ஏலெலம்பா ஏலெலம்
நாத்தெடுக்கத் தெரியாத ஏலெலம்பா ஏலெலம்
நாத்தெடுக்கத் தெரியாத ஏலெலம்பா ஏலெலம்
நடுவரப்பச் சுத்துறாடோடி ஏலெலம்பா ஏலெலம்
மச்சான் அழகுக்கும் மான்கொம்பு மீசைக்கும்
ஏலரிசிபல்லுக்கும் நான் என்ன சொல்லிக்
கூப்பிடும்"[36]

— என்று தமது காதலை வெளிப்படுத்திப் பெண்கள் பாடும் பாடல் மூலம், தம்மை அலட்சியப்படுத்தும் ஆணை நெருங்கிவர கோருகின்றது. இந்தக் காதலில் பெண் தனது உறுதியை வெளிப்படுத்தும் போது, கலைநயத்துடன் கூடிய போராட்ட உறுதி வெளிப்படுகின்றது.

"காவல் இருந்தால் என்ன கல்லு வெடி போட்டாலென்ன
இம்சை படுத்திட்டாலும் நான் எசமானிடம் வந்திடுவேன்
பச்சை மயங்குகிறேனே கொடி வாடுறேனே - நான்
இம்சைபட்ட நேரமெல்லாம் ஏங்கி முகம் வாடுறேனே"[36]

— என்று பாடும் போது அந்தக் காதலின் பின்னால் சுயநலம் இருப்பதில்லை. பெண் தனது காதல் மீதான நேர்மையான வடிவத்தை, நாகரிகச் சமுதாயக் காதலில் இருந்து வேறுபடுத்தி வெளிப்படுத்துகின்றாள். இந்தக் காதல் எதையும் விலையாகவோ, பண்ட மாற்றத்தையோ கோருவதில்லை. இக்காதல் உழைப்பை ஒத்த உறுதியுடன் பீறிட்டு வெளிவருவதாகும். பெண்கள் மீது நடத்தும் பாலியல் வன்முறையைக் கூட சொல்லி பாடும் பாடல்களை, பெண்கள் உழைப்பின் போது வெளியிடுகின்றனர்.

"கண்ட கண்ட இடமெல்லாம்
கண்ட கண்ட பெண்ணைக்
கையைப்பிச்சிழுப்பான்"[36]

— என்ற வரிகள் ஆணாதிக்கம் அத்துமீறி பெண்ணைக் கற்பழிப்பதை வெளிப்படுத்துகின்றது. பெண்களைக் கேலி செய்கின்றபோது, அதைச் சொல்லியும் பெண்கள் தமக்குள் அதைப் பகிர்ந்து பாடுவதன் மூலம், இந்த நாட்டுப்புறப் பாடல் எமக்குச் சமுதாயத்தின் ஒருமித்தப் போராட்ட மார்க்கத்தைத் தெளிவாக்குகின்றனர்.

"கடலைப்பருப்பு போல ரெண்டுபெரு வெடலப்பய
பொழுதடஞ்ச நேரமெல்லாம் பொம்பரணி பேசுறானே"[36]





— இதில் பெண் தனது கற்புரிமையைப் பாதுகாக்க ஆணாதிக்கக் கற்பழிப்புக்கு எதிராக அறை கூவுவதைக் காட்டுகின்றது. பெண் தனது நேர்மையான ஒத்துழைத்த காதலையும் சரி, அவளின் அனுமதியற்ற பாலியல் வன்முறையையும் சரி, ஆணின் ஒருதலைப்பட்சமான அத்துமீறல் பெண்ணின் கற்புரிமையைச் சிதைப்பதாக இருக்கின்றது. இதை மேலும் கீழேயுள்ள பாடலில் இருந்து பார்ப்போம்.

"கரும்பு திங்கற நாளையிலே நமக்கு கசப்புவந்து நேர்ந்ததென்ன
கரும்பா வணங்கினேனே கருத்தமத யானையிடம்
துரும்பா உளறுரேனே துன்பம் வச்ச திங்கலையே
தானாவிரும்பினயே என்னத் தலகவுர வச்சுட்டயே"[36]

ஒரு பெண்ணின் தூய்மையான அன்பைக் காதலை ஏமாற்றிச் சுவைக்கும் ஆணாதிக்கம், இங்கு பெண் விரும்பிய உறவாக இருந்த போதும், பெண்ணின் கற்புரிமையைக் கற்பழிக்கின்றது. பெண் இந்த ஆணாதிக்கச் சமுதாயத்தில் தலைகுனிந்து, கூனிக்குறுகி வாழ வேண்டிய அவலத்தை ஏற்படுத்திய ஆணை, தனது நாட்டுப்புறப்பாடல் ஊடாகச் சாபமிட்டுப் பாடவும் பின்நிற்கவில்லை. அந்தச் சாபமிடலைக் கீழே உள்ள பாடலில் காணலாம்.

"என்னைக் கெடுத்தவனை எனக்குமதி சொன்னவனை
சொகுசைக் குழைந்தவனை சுத்தாதோ என்பாவம்
கட்டப்பய குட்டப்பய கட்டமண்ணு தாண்டிப்பய
விசுவாசம் கெட்டப்பய விடானே ஒற்றவழி"[36]

— என்று தான் காதலித்து பெருமைப்பட்ட ஆண், தனது கற்புரிமையை, காதலை நயவஞ்சகத்தால் ஏமாற்றி மோசடி செய்யும்போது, அப்பெண்ணின் ஓர்மம் மிக்க போராட்டம் எழுகின்றது. அவனின் அழகைத் திட்டி அதை இழிவுபடுத்துகின்றாள். இந்த நிலையில் சமுதாயம் தன்னை வழிநடத்த தவறியதைக் கூறிப் புலம்புவதும் வெளிப்படுகின்றது. ஆணாதிக்க உலகத்தின் கோரத்தை, ஏன் தனக்கு முன்கூட்டியே அறிவுறுத்தவில்லை? என்று சமுதாயத்தின் பக்கம் குற்றம் சாட்டுகின்றாள். அந்தக் குற்றச்சாட்டைக் கீழே உள்ள பாடலில் காணலாம்.

"எலுமிச்சம் பழமென்று எடுத்தேனே கைநிறைய
கசக்கும் எட்டி என்று கண்டவங்க சொல்லலையே
காப்புக்கழண்டதையா கைவளையல் கழண்டதையா
கோப்புக் குலஞ்சதய்யா கோலமுழிப் பாவியாலே"[36]

— என்று தனது கற்புரிமையைச் சூறையாடிய வாழ்வின் சிதைவால், இதைச் சமூகத்துக்கு எச்சரிக்கை விட்டுப் பாடுவது இயல்பாகின்றது. ஆணாதிக்கச் சமூகத்தின் சூறையாடும் பாலியல் வேட்கை மற்றும் பெண் மீதான ஆணாதிக்கக் கற்புக் கோட்பாடு என இரண்டையும் எண்ணிப் பாடும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டுப்புறப்பாடல், பெண்ணின் போராட்டம் நீறுபூத்த நெருப்பாக இருப்பதைக் காட்டுகின்றது.

பெண்ணின் தெரிவு இன்றி நடத்தப்படும் கட்டாயத் திருமணங்கள் அல்லது பெண்ணின் அபிப்பிராயம் இன்றி முடித்து வைக்கும் திருமணத்தின் பின்னான வாழ்க்கையில் முரண்பாடு ஏற்படுகின்ற போது அங்கு ஒருதாரத் திருமணத்தினை எதிர்த்து, தனது கணவனுக்கு அப்பால் ஓர் ஆணைச் சொல்லிப் பாடும் பாடலைக் கீழே பார்ப்போம்.

"மாமன் மகனிருக்க மாலையிடும் சாமியிருக்க
பேசும் கிளி நானிருக்க பேயனுக்கு வாழ்க்கைப்பட்டு
பெருங்கஷ்டத்துக்கு ஆளாச்சே"[36]

ஒரு பெண் சொந்த உறவுகள், சுற்றுவட்டாரம், பிறந்த மண் ஆகியவற்றைப் பிரிந்து அன்னியமான ஒருவனுடன் வாழ்க்கைப்படும் போது, நேரும் துன்பத்தை அவள் யாருடனும் பகிர்ந்து கொள்ள முடியாத அன்னியமான சமூகமாக இது இருக்கின்றது. இங்கு அன்னியமான மண் மற்றும் சுற்றுவட்டார இயற்கையுடன் கூட சொல்லிவிட முடியாத முரண்பாட்டை அவளுக்கு ஏற்படுத்துகின்றது.

இந்த நிலையில் வாய் பேசும் பெண்ணாகிய எனக்கு ஒரு பேயனைக் கட்டிவைத்ததை எதிர்த்துப் பாடுகின்றாள். மாமன்மகன் என்பது அறிமுகமான உறவுக்குள் எந்த முரண்பாட்டையும் குடும்பச் சுற்றுவட்டாரத்துக்குள்ளேயே சமூக அங்கீகாரத்துடன் தீர்க்கமுடியும் என்ற ஆவலை வெளிப்படுத்துகின்ற போதே, கணவன் அல்லாத ஆணை முன்நிறுத்தி முதன்மைப்படுத்தி கணவனை இழிவுபடுத்துகின்றாள். இது ஆணாதிக்க ஒருதாரக் குடும்ப அமைப்புக்கு எதிரான இயல்பான தன்னெழுச்சி வகைப்பட்ட போராட்டமாகும். அத்துடன் மாமன்மகன் அல்லது சாமிக்கே மாலையிட்டு இருக்க முடியும் என்பதன் ஊடாக, இந்த வாழ்க்கையின் நரகலை விடவும் திருமணம் இன்றியே வாழ்ந்திருக்க முடியும் என்பதைச் சொல்வதன் மூலம் ஒருதாரமணம் அதிர்வுறுகின்றது. இதை மேலும் கீழே உள்ள பாடல் மூலம் பார்ப்போம்.

"நாடெல்லாம் சுத்தி வந்து
நல்லபிள்ளையில்லை யென்று
கொணங்கெட்ட மாப்பிள்ளைக்குக்
கொண்டி கொடுத்தார் - எங்களண்ணை
கொண்டி கொடுத்தார்"[36]

— இங்கும் கணவனை எதிர்த்து அவமானப்படுத்துவது வெளிப்படுகின்றது. ஆணாதிக்கச் சமுதாயத்தின் விளைவு வாழ்க்கையில் பிரதிபலிக்கின்ற போது, தனிப்பட்ட ஆணில் அதைப் பெண் உணருகின்றாள். இதனால் அந்த ஆணாதிக்க விளைவைத் தனிப்பட்ட இயல்பாகக் கண்டு திருமணத்தை மறுக்கின்றாள். இந்த ஆணாதிக்க அமைப்பின் விளைவில்





இருந்து பெண்கள் யாரும் சுதந்திரமாக இருக்க முடியாது என்பதும், ஆணாதிக்க விளைவைப் பெண் கொடுமையாக உணர்ந்து அதை மறுத்தபடி, ஆணாதிக்கச் சமூக காவியாகவும், விளைவுகளைத் தானும் வெளிப்படுத்துபவளாக இருப்பதில் இருந்து சுதந்திரமாக இருக்க முடியாது என்பதைச் சமூகத் தளம் புரிந்து கொள்வதில்லை. இதனால் நாட்டுப்புறப்பாடல் தனி ஆணைக் குற்றம் சாட்டுகின்றது. ஆனால் இது கூட்டுச் சமூகப் பாடலாகின்ற போது சமூகத்தன்மையைச் சொந்த அனுபவம் ஊடாக வெளிப்படுத்துகின்றது. இதை மேலும் கீழே வரும் பாடலிலிருந்து பார்ப்போம்.

"சோளச்சோறு தின்னமாட்டேன் சொன்னபடி கேக்க மாட்டேன்
நரைச்ச கிழவன் கிட்ட நானிருந்து வாழமாட்டேன்"[36]

— என்று திருமணத்தை எதிர்த்துப் பெண்கள் பாடுகின்றனர். சொத்தற்ற பெண், ஆணாதிக்கக் கற்புக் கோட்பாட்டில் இழிவுபடுத்தப்பட்ட பெண், ஆணாதிக்க இளமையை, அழகை இழந்த பெண்கள் மீது அதிக வயது இடைவெளியுடன் கூடிய திருமணத்தைச் சமூகம் கட்டாயப்படுத்துகின்றது. இங்கு பெற்றோர் **பெண்ணை எப்படியாவது, யாருக்காவது கொடுத்துவிட்டால் நிம்மதி** என்ற ஆணாதிக்கச் சமூக வெளிப்பாட்டில் நடத்தப்படும் திருமணத்தை, அதன் துயரத்தை அனுபவிக்கப் போகும் பெண் எதிர்த்து நிற்பதை இப்பாடல் வரிகள் காட்டுகின்றன. இத்திருமணம் நடந்த பின் நடந்த நிகழ்வுகளை எப்படி பெண் வெளிப்படுத்துகின்றாள் என்பதைக் கீழே பார்ப்போம்.

"மேலண்டத்தெருவுலடி - ஏய் நான்
மேனியாத்தான் பொண்பொறந்தேன் - நான்
மேனியாத்தான் பொண்பொறந்தேன்
கீழண்டத் தெருவுலடி - ஏய்நான்
கிழவனுக்கே வாக்குப்பட்டேன்
கிழவனுக்கே வாக்குப்பட்டேன்
வாக்குப்பட்ட மூணாநாத்து - ஏய் தாத்தாவுக்கு
வவுத்துவலி வந்திடுச்சி

வவுத்துவலி வந்திடுச்சி
வவுத்துவலி வந்த மூணாநாத்துடி - ஏய் தாத்தாவுக்கு
விழுப்புரந்தான் ஏத்துங்கடி
விழுப்புரந்தான் ஏத்துங்கடி
ஏத்துன மூணா நாத்துடி - ஏய் தாத்தா
கால ரெண்டியும் கௌப்பிக்கினான்
கால ரெண்டியும் கௌப்பிக்கினான்"[36]

— இதில் இயற்கை உணர்வுகளுக்குப் புறம்பான கட்டாயத் திருமணத்தை எதிர்க்கின்ற போது, சொந்தக் கணவன் இறப்பதை விரும்பி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடுகின்றாள். சொந்தக் கணவனைத் தாத்தாவாக்கியதுடன், தான் ஒரு பெண் என்பதை உணர்த்துகின்றாள். ஒரு பெண்ணுக்கு இருக்க கூடிய இயற்கையான உணர்வுகளை, இந்தச் சமூக ஒருதாரக் கட்டாய மணங்கள் சிதைக்கின்ற போது, அதன் விளைவுகளின் தனிப்பட்ட நபர்கள் இறந்து போவதைக் கோரி அல்லது இறந்து விட்டதாகக் கற்பனை பண்ணி பாடுகின்றனர். இங்கு கிராமப்புறப் பெண்கள் இந்தத் திருமணத்தை எதிர்க்கின்ற போது, பூர்சுவா வர்க்கத்தில் பணக்காரக் கிழவரைப் பெண்கள் தேடித் திருமணம் செய்து சொத்துக்காகக் கொல்லுவது அல்லது இறப்பதை எதிர்பார்த்து இருப்பது என்ற இரு நேர் முரணான சமுதாயத் தன்மைகள் வெளிப்படுகின்றன. கிராமிய வாழ்க்கையில் இந்தத் திருமணங்கள் நடக்கின்ற போது, ஏழைப் பெண் உழைத்து வாழும், இயற்கை தேவையைப் பூர்த்தி செய்யும் வாழ்க்கையை எண்ணியே போராடுகின்றாள். பெற்றோர் தீர்மானித்து ஏற்படுத்திய திருமணத்தைப் பெண் பின்னால் அறியும் போது, அந்த ஆணைப்பற்றி அறிவதில் முதல் கவனம் எடுக்கின்றாள். இதன்போது அந்த ஆண் நோயாளியாக இருந்தும் தன் தலையில் கட்டிவைக்கும் சமூக அடக்குமுறையைக் கண்டு, இந்தத் திருமணத்தைத் தடுக்க பாடுவதைக் கீழே வரும் பாடலில் பார்ப்போம்.

"கட்டாதேடா கட்டாதேடா
காசங்கொண்ட குட்டரோகி
பாக்காதேடா பாக்காதேடா
பாவங்கொண்ட குட்டரோகி"[36]

ஆணாதிக்கச் சமுதாயத்தில் ஆணின் குறைகளை எல்லாம், பெண்ணைத் திருமணம் செய்வதன் மூலம் நிவர்த்திக்க முடியும் என்ற கண்ணோட்டம் பெண்களைப் பலிக்கடாவாக்குகின்றது. திரைப்படம் முதல் எல்லா இடமும் இதை நம்ப வைப்பதில் புழுத்துப்போயுள்ளது. சமுதாயத்தில் ஒரு மனிதனாக மதிப்பிட முடியாது சீரழிந்த போனவனைக் கூட, பெண்களின் தலையில் கட்டிவைத்து அழவிடும் சமூக நடத்தைகளை இட்டு, தனிப்பட்ட பெண்கள் புலம்பும் போதே இந்தப் பாடல்கள் துயரத்துடனும், கோபத்துடனும் வெளிப்படுகின்றன. இது இந்த ஆணாதிக்கச் சமூகத்தின் மீது விழும் சாட்டையடியாகத் தெறிக்கின்றது. சமுதாயத்தின் ஆணாதிக்க அவலத்தை இனியும் சகிக்க முடியாது என்ற நிலையில் பிரிந்து வாழவும் துணிகின்றாள். அதைப் பார்ப்போம்.

"இந்தத்தாலி கட்டிக்கமாட்டேன்
இனி இருந்து வாழமாட்டேன்"[36]

— என்று கணவனிடமே கூறும் பெண் தனது போராட்டத்தை நேரடியாகவே முன்வைக்கின்றாள். இந்தப் போராட்டத்தின் முன்னும் பின்னுமாகப் பெண் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றாள்.





"பெண் : அட எத்தனையோ புத்திகளை எடுத்துரைத்து சொன்னாலும்
நித்தம் போயி குடிக்கிறியே நீயும் ஒரு ஆம்பளையா

ஆண் : கஷ்டப்பட்டு சம்பாரிச்சு காசுபோட்டு நாங்குடிச்சா
நஷ்டமடி உந்தனுக்கு நாசமத்த சிரிக்கி - அடி
மூடிக் கொள்ளடி வாய சும்மா முனு முனுக்காத வாய

பெண் : அட கையிலொரு காசுமில்லை கடன் கொடுப்பார் யாருமில்லை
நஞ்சக் குடிக்கிறியே நாசமத்த பயமவனே
ஒனக்கு ஒரு பெண்டாட்டி - ஒன்
ஒழுங்குக்கொரு வப்பாட்டி

ஆண் : தாருமாரா பேசினாக்கா தகராறு வந்து சேருமடி
கோபம் வரச் சொன்னாக்கா
கொலை பழி வந்து சேர்ந்திடுமே - அடி
உன்னோடு என்ன பேச்சு இப்ப விலகிப் போடி சீச்..சீ

பெண் : அட கந்தத் துணி பொறக்கி கடைக்குகடை நூல் பொறுக்கி
பீத்தத்துணி பொறக்கி பீத்தாதடா ஒம்பட்ட - அட
ஒனக்கும் எனக்கும் வம்பு ஊர் சிரிக்க போகுது நம்பு

ஆண் : புத்திமதி சொன்னாக்கா போட்டுருவேன் மண்டையிலே
கோபம் வரச் சொன்னாக்கா கொலை பழி வந்து சேர்ந்திடுமே - இப்போ
விலகிப் போயி நில்லு இப்போ ஒடயப் போகுது பல்லு

பெண் : கணக்கு மெத்த கேக்காதடா காரியத்தில் ஒண்ணுமில்லை
எடுத்தாடி வெலக்குமாத்த இவங்கணக்கத் தீர்த்துவிட - அட
ஒனக்கு எதுக்கு மீசை - இப்ப கட்டுத் தீர்வக் காசை"[10]

பெண்ணுக்கும் ஆணுக்கும் நடைபெறும் போராட்டத்தில், ஆண் பெண்ணைப் பெண்மையில் அடங்கி வாழக் கோரும் போது, பெண் ஆணின் ஆண்மையைக் கொச்சைப்படுத்திக் கிண்டல் செய்கின்றாள். இங்கு ஆண் வன்முறையைப் பிரயோகிக்க அறைகூவும் போது, பெண் எதிர் வன்முறையைப் பிரகடனம் செய்கின்றாள். உழைக்கும் அடிமட்டப் பெண்களின் குடும்பங்களில் காணப்படும் இந்த நிலைமை, எந்தப் பூர்சுவா பெண்ணாலும் நினைத்துப் பார்க்க முடியாத போர்க் குணாம்சம் கொண்டவையாகும். ஆணின் ஆண்மையைக் கேலி செய்து குடியைக் கிண்டல் செய்யும் பெண், அதன் விளைவை நுணுக்கமாகப் புரிந்து கொள்கின்றாள். ஆணாதிக்க ஆண், தலித் கோட்பாட்டாளர்கள் எல்லாம் குடிப்பது **தலித்** விடுதலையின் அங்கத்துடன் கூடிய பண்பாடு என்ற மனித விரோதக் கேவலத்தை, கிராமியப் பெண்ணின் இந்த நாட்டுப்புறப் பிரகடனங்கள் சவால் விடுகின்றன. பெண் ஆணின் அனைத்து ஆணாதிக்க வடிவங்களையும் கேவலப்படுத்தும் போது, ஆணாதிக்க அமைப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதிர்ந்து குலுங்குகின்றது. இதை அரசியல்மயப்படுத்தி அமைப்பாக்கும் போது ஆணாதிக்க அஸ்திவாரம் தகர்ந்து போகும். இந்த வன்முறையின் அடுத்தக் கட்டத்தைப் பெண் சமூகத்தளத்தில் எடுத்துச் சொல்லுகின்றாள். அதை அவள் எப்படி முன்னெடுக்கின்றாள் என்பதைக் கீழே வரும் பாடலில் பார்ப்போம்.

**பெண்:** "பாருங்களேன் பாருங்களேன் பஞ்சாயத்துக்காரங்களே
பாய விரிச்சுத் திண்ணையிலே படுத்துக் கெடந்தேனே இந்த
பாவி மனுஷன் அடிக்கறானே பசிவெறியாலே - எனக்கு
பட்ட எடம் வீங்கிப் போச்சு பணியாரம் போலே
கள்ளுலெ பூச்சி கெடந்தா கலக்கிக் கலக்கிக் குடிக்கிறாண்டி
சோத்திலே கல்கெடந்தா சொந்தப் பெண்டாட்டியை அடிக்கறாண்டி"

**ஆண்:** "சட்டிமுட்டி கழுவவில்லை
சமையல் வேலை செய்யவில்லை
வெட்டிப் பயமகளக் கட்டி
வெட்கக் கேடு ஊரக்குள்ளே
வெரட்டப் போறேன்
தாலியறுத்து வெதவையப்போல - நான்
வெகு பணத்தை இழந்துவிட்டேன்
பொண்டாட்டியாலே

**பெண்:** "கேளுங்கய்யா நாயத்தை ஒரு
நையாப்பைசா கொடுப்பதில்லை
பாய விறிச்சுப் போட்டு
படுத்திருந்தேன் திண்ணையிலே
பாவி மனுஷன் அடிக்கறானே
பசிவெறியாலே - இப்ப
பட்டஎடமெல்லாம் வீங்கிப் போச்சு
பணியாரம் போல"[10]

ஆணாதிக்க அமைப்பில் உருவான ஆண்கள் பஞ்சாயத்தில் பெண்கள் தமது கணவன் அடித்ததையும் அதன் விளைவை உவமையூடாக விளக்கிச் சொல்லும் போதும் அங்கு நீதி கிடைக்காது என்பதால் (ஏனெனின் ஆணாதிக்கப் பஞ்சாயத்து அல்லவா) பாடலின் இறுதியில் பெண்களிடமே சொல்லி முறையிட்டு ஆதரவு கோருவது இயல்பாகின்றது. ஆண்களின் மதுப் போதையின் போது எதையும் குடிக்கத் தயாரான சமூகச் சமரசத்தை அம்பலப்படுத்தியும், தனது தனிப்பட்ட ஆளுமைக்கு அப்பாற்பட்ட வறுமை, கலப்படம் போன்றவற்றால் படும் துன்பத்தையும் வெளிப்படுத்துகின்றாள்.

இங்கு ஆணாதிக்கத்தின் நேரடி பிரதிநிதியான ஆண், வறுமை, கலப்படம் போன்றவற்றால் ஏற்படும் விளைவுக்கான தீர்வாகப் பெண்ணை அடிக்கின்றான். **ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை சமுதாயத்தை எதிர்த்துப் போராட**





**வேண்டிய ஆண் சமரசமான தீர்வாகப் பெண்ணை அடிக்கின்றான்.** இது நேரடி சமூக விளைவாக இருக்கும் போது சமூகக் கவனத்தைக் குவிக்கின்றது. ஆனால் முதலாளித்துவப் பெண்ணியல்வாதிகளின் தீர்வுகளும் ஆணாதிக்க ஆண் அடிப்பது போன்றுதான் அவர்களின் தீர்வுகள், சமரசங்கள் எதார்த்தத்தில் இருப்பது நடைமுறையாகும். இது கருஅழிப்பாக இருந்தாலும், ஓரினச்சேர்க்கை அங்கீகரிப்பாக இருந்தாலும், வாக்குரிமையாக இருந்தாலும் விதிவிலக்கு இருப்பதில்லை. இந்த வன்முறையைத் தாங்க முடியாத நிலையில் தப்பியோட நினைக்கும் பெண்ணின் தீர்வின் போது, அவள் எப்படி அதை வெளிப்படுத்துகின்றாள் என்பதைக் கீழே பார்ப்போம்.

"கான மிளக வச்சுக்
கறிக்குமசால் கூட்டி வச்சுக்
கொழும்பு ஒறைக்குதிண்ணு - என்னக்
கதவடைச்சுக் கொல்லுதாரே
அறியாத ஊரிலேயேத்
தெரியாத வாக்கப்பட்டேன்
அடியாதிங்க புடியாதிங்க - நான்
விடியாம ஓடிப்போறேன்"[36]

— இதில் தான் எப்படி உனக்காகக் கஷ்டப்பட்டு கறிவைத்தேன் என்று சொல்லி அடிப்பதையிட்டுக் கணவனிடம் சொல்லிப் புலம்புகின்றாள். உனக்குச் சமைக்கும் வீட்டு வேலைக்காரியாகச் சமைத்துப் போடுவது பிடிக்கா விட்டால், உன்னைவிட்டே ஓடிப் போய்விடுகின்றேன் என்று கூறி அடிப்பதை நிறுத்தக் கோருகின்றாள். பெண்ணின் இயந்திரத்தனத்தையும் அதன் திருப்தியையும் கோரி ஆண் அடையும் கண்ணோட்டம், சுரண்டல் வர்க்கத்தின் நோக்கில் இருந்து இது பிரதிபலிக்கின்றது. வறுமை மனிதனை ஆழ்த்துகின்ற துன்பத்தையும் அதில் பெண் அனுபவிக்கும் துயரத்தையும் எந்தக் கலைஇலக்கியமும், நாட்டுப்புற இலக்கியத்துக்கு நிகரானவையல்ல. அதைத் தொடர்ந்து பார்ப்போம்.

"அம்மா பாவாடை சட்டை கிழிஞ்சு போச்சுதே என்னை
பள்ளிக்கூட பிள்ளையெல்லாம் கேலிபேசுதே
பொள்ளாச்சி சந்தையிலெ வெள்ளாட்டை வித்துபோட்டு
நல்லதுணி வாங்கித்தாம்மா
செல்லகண்ணு சந்திரிகா
சிலுக்குச் சட்டை போட்டுவாரா
சினிமாக்காரி மாடலுன்னு
... ... ..
மத்தியானக் கஞ்சிக்குத்தான்
பள்ளிக்கூடம் போகச்சொன்னேன் ...
ஆடுமாடு மேய்க்கிறதுக்கு
வயசுனக்கு இல்லையுன்னு.."[10]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



— என்று வறுமையைக் கூறும் இப்பாடல் பலவிதமான அவலங்களை உள்ளடக்கி நீண்ட பாடலாக வெளிப்படுகின்றது. ஏழ்மையை, பாடசாலையில் ஆளுமையை வெளிப்படுத்தும் பணக்காரக் குழந்தைகளின் கண்ணோட்டத்தில் இருந்து, திரைப்பட வக்கிரத்தில் ஒப்பிடும் போது வறுமை கூனிக்குறுகுகின்றது. திரைப்படத்தில் அரைகுறை ஆடை ஆணாதிக்க வக்கிரத்தை வெளிப்படுத்த பெண்களை அதற்கு நிர்ப்பந்தித்த போது, அங்கும் அந்தப் பெண்மையும் சமூகப் பெண்மையும் தனது கற்புரிமையை எண்ணிக் கலங்க தவறவில்லை. ஆனால் இன்னுமொருபிரிவு இதை மூலதனம் திரட்டும் ஊடகமாகக் காணும் போது ஆணாதிக்கம் அப்பெண்ணில் கொக்கரிக்கின்றது. ஏழ்மையில் போட உடுப்பின்றி, மாற்ற உடுப்பின்றி, கிழிந்து தொங்கும் ஓட்டையூடாக, நாகரிகச் சமூகம் தேடுவது வக்கிரம் என்பதையும் இப்பாடல் துல்லியமாக வெளிக்காட்டுகின்றது. இப்படி நிறையப் பாடல்களை வறுமையை ஒட்டிக் காணமுடியும்.

திருமணம் செய்த பின் தமது சொந்தக் கணவன்மார் வேறு பெண்ணுடன் பாலியல் உறவு கொள்வதைக் கூட, கூட்டு உழைப்பில் பெண்களுடன் பாடிப் பகிர்ந்து அதை எதிர்ப்பது நாகரிகச் சமுதாயத்துக்கு முரணானது. கீழே அதைப் பார்ப்போம்.

“ஊரநல்லா பொண்ண உறங்கட்டண்டி - ஏலம்மே ஏலம்
உறங்கட்டண்டி - ஏல சிங்காரம்
ஓ புருஷ பொண்ண தூங்கட்டண்டி - ஏலம்மே ஏலம்
ஓ புருஷ பொண்ண தூங்கட்டண்டி - ஏல சிங்காரம்
சன்னலையு பொண்ண திறந்து வைய - ஏலம்மே ஏலம்
திறந்து வைய - ஏல சிங்காரம்
சமுககாளத்த பொண்ண போட்டு வைய - ஏலம்மே ஏலம்
சாரப்பாம்பு பொண்ண ரூபம் கொண்டு - ஏலம்மே ஏலம்
ரூபம் கொண்டு - ஏலசிங்காரம்
சாமத்துல பொண்ண இங்கு வந்துறே - ஏலம்மே ஏலம்”[36]

பெண் தனது ஒருதலைப்பட்சமான ஒருதாரமணத்தில் இருக்கின்ற போது அதைப் பகிரங்கமாகச் சொல்லி, சமூக எதிர்ப்பை ஆதரவைக் கோரும் பாடல்களின் போது அந்த இடத்தில் உழைக்கும் பெண்கள் முழுவதுமாகப் பங்கு கொள்ளுகின்றனர். ஆணாதிக்கப் பாலியல் வேட்கையினுடைய பொதுத் தன்மையின் அனுபவ விளைவால் பெண்களுக்கிடையில் இது முரண்பாட்டை ஏற்படுத்துவதில்லை. இதனால் இப்பாடல்கள் இயல்பான சமூக இசைவடிவத்தையும், உழைப்பின் ஆற்றலையும் பொதுமைப்படுத்தி உழைப்பை வேகப்படுத்துகின்றது. இதை மேலும் கீழுள்ள பாடலில் இருந்து பார்ப்போம்.

“குதிரைவால் கதிரபோல குறிச்சபொண்ணு நானிருக்கேன்
கூறுகெட்ட அந்த மகள் குறத்தியோட சகவாசம்
முள காப்பழம்போல முத்தத்துல வந்து நிக்கான்
மூதேவி அத்தைமகன் மூளியிடம் சகவாசம்”[36]





சொந்த அத்தை மகனே வேறொரு பெண்ணுடன் கூடிக்குலாவும் ஆணாதிக்கப் பண்பாட்டைப் பெண் ஏற்றுக் கொள்வதை மறுத்துப் போராடுகின்றாள். பெண்ணை ஒருதாரமணத்தின் கட்டுக்குள் காவல் காக்கும் ஆண், அதை மீறும் போது பெண்ணால் ஏற்றுக்கொள்ளமுடிவதில்லை. தனிச்சொத்துரிமை அமைப்பில் செல்வம், மனைவி என அனைத்தும் ஆணின் சொத்தாக எப்படி இருக்கின்றதோ, அதையே மனைவி கணவன் மீதான உரிமையிலும் முன்வைப்பதையும், அதைக் கணவன் மீறும் போது எதிர்த்துத் திட்டுவதையும் பாடல் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. இதை மேலும் பார்ப்போம்.

“மதுரைக்குப் போகாதீங்க மாங்கா தேங்கா வாங்காதீங்க
மதுரை கண்ட தேவடியா மறக்க மருந்து தந்திடுவா”[36]

— என்று எச்சரிக்கும் பெண் ஆணைத் தனது நினைவாக வாழக் கோருகின்றாள். இதை மீறி ஆண் சோரம் போகும் போது, சொந்தக் கணவன் இறப்பதே தனது வாழ்க்கையின் நிம்மதியைத் தரும் என்று சொல்லி பாடுகின்றாள்.

“நல்லபாம்புக்குட்டி போல வல்லாரைக் கைப்போட்டா
திண்டுக்கல்லு மூலையிலே திண்ணுப்போட்டேன் கரும்புச்சக்கை
அடிக்கணும் குளிரு காய்ச்சல் ஆறுமாசம் ஒரு வருஷம்
எடுக்கணும் பாடைகட்டி என்மனசு பாலாக”[36]

— இதில் தன்னைக் கைவிட்டு வேறு பெண்ணுடன் சகவாசம் செய்யும் ஆணை நீண்ட காலம் கஷ்டப்பட்டுச் செத்துப் போக வேண்டும் என்று கோருகின்றாள். அப்போதுதான் தனது மனது பாலாக மாறும் என்ற அங்கலாய்ப்பைச் சொந்த மனப்புண்ணில் இருந்து பெண் வெளிப்படுத்துகின்றாள். இங்கு இவை வஞ்சகமாக அல்லது நேர்மையாக மனதில் பட்டதைச் சொல்லி புலம்பும் போது அந்த **ஆண் திருந்தி வரமாட்டானா** என்ற ஏக்கமும் தொங்கி நிற்கின்றது. ஆணாதிக்கப் பலதாரமண எல்லையில் ஆண்கள் பல பெண்ணைச் சொந்த வீட்டிலேயே கொண்டு வந்திடும் போது அங்கு சண்டை சாதாரணமான இயல்பாகின்றது.

“கக்களத்தி சுட்டபுட்டு - ஏலெலம்படி ஏலம் அது
சாக்கடை தான் சேறுபோல - ஏலெலம்படி ஏலம்
அல்லாரும் கட்டபுட்ட - ஏலெலம்மபடி ஏலம் அது
எத்தி எறக்குங்கடி - ஏலெலம்படி ஏலம்
சக்களத்தி சுட்ட புட்டை - ஏலெலம்படி ஏலம்
சாக்கடையில் கொடுங்கடி - ஏலெலம்படி ஏலம்”[36]

கணவன் தனது சுக - போகத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தும் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவி கொண்ட குடும்பம் சண்டைகளில் நிறைந்து நிம்மதியை இழந்து விடுகின்றது. முதல் மனைவி தனது கணவன் மீது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உரிமை கொண்டாட, கணவன் இளைய மனைவியின் இளமை மீது நாட்டம் கொண்டு திரிய இந்தச் சண்டை தீவிரமாகின்றது. தனிச்சொத்துரிமை அமைப்பில் திருமணத்தின் எல்லைக்குள் பரஸ்பரம் உரிமை கொண்டதாக இருக்கின்ற போது, வேறு ஒருத்தி அதில் பங்கு கோரும் போதும், கொள்ளும் போதும் மோதல் வலுக்கின்றது. முதல் மனைவியைப் பொறுத்த வரை கணவனும் சரி, வந்த பெண்ணும் சரி எதிரியாகவே, தன் உரிமை மறுக்கும் வடிவமாகவே கண்டு போராடுவது இயல்பாகின்றது. இங்கு கணவனின் அன்பை, காதலை, உழைப்பின் உரிமையைப் பெறுவதில், முதல் மனைவி, இரண்டாவது மனைவியுடன் போட்டி போடுமளவுக்கு, இந்த ஒன்றுக்கு மேற்பட்ட பலதாரத் திருமண வடிவம் நிர்ப்பந்திக்கின்றது. இதனால் மூத்த மனைவி தனது கணவன் இறந்து போக கோருகின்றாள்.

"என்னெய விட்டுவிட்டு - நீ
இளையதாரம் கட்டுனியே
போறஇடத்திலயே - உன்னை
பூநாகம் தீண்டாதோ"[36]

—என்று மூத்த மனைவி கணவனை இறந்து போகச் சபிக்கும் போது ஆணாதிக்க அமைப்பின் கோரமுகம் நிர்வாணமாகின்றது. ஒரு பெண்ணின் இலட்சியமே கணவனை அடைவது என்ற ஆணாதிக்கப் பண்பாட்டில் சிக்கிய பெண் அதுவும் நொறுங்கும் போது, அவள் எல்லாவற்றையும் இழந்து போராடுவது இயல்பாகின்றது. பெண்ணின் ஒரேயொரு குறிக்கோள் கணவனை அடைவதாகப் பண்படுத்தப்பட்ட நிலையில், அதை இழக்கின்ற போது அனைத்தின் மீதும் அவள் கோபம் இயல்பாகின்றது. இந்த வகையில் தனது கணவன் மீது யார் யாரெல்லாம் கொள்ளும் உரிமைகள் அனைத்தின் மீதும், பெண் போராடுவது அவளது விதியாகி விடுகின்றது. இது குறுகிய வட்டம் கொண்ட பார்வையாக இருந்தாலும், இதற்கான காரணம் ஆணாதிக்க அமைப்பில் பெண்ணின் வரையறுக்கப்பட்ட குறிக்கோளுக்குள் வாழக்கோருவதில் இது வெளிப்படுகின்றது. இந்த வகையில் சொந்த மாமியாரை எதிர்த்து நிற்க வேண்டியுள்ளது.

"அரிசி படியளந்து என்ன அழச்சிவந்த மாமியத்த ஒன்ன ஒரு
அரண புடுங்குமோ நீபெத்தபுள்ளகிட்ட நான்
அச்சமத்து வாழுவனோ"[36]

"அரிசி சிறை எடுப்பான் எங்கள் அண்ணன்
எங்க அண்ணி சோறாக்க நோக்குண்ணாளே"[36]

பெண் சகித்து வாழும் நிலையில் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தனது விடுதலைக்கான பாதையாகக் காண பின்நிற்பதில்லை. மாமியார் இறந்த போது சாபம் இடுகின்றாள். சமையலுக்கான பொருட்களைக் கூட மாமியார் உரிமை கொண்டாடி படி அளக்கின்ற போது, சொந்தக் கணவனின் உழைப்பு மீதான உரிமை பறிபோகின்றது. இங்கே வீட்டுப் பொருட்கள் மீதான





உரிமை இழந்து வீட்டுக்கு வரும் வேலைக்காரியாக, கணவனின் படுக்கையைப் பகிரும் விபச்சாரியாகத் (இங்கு பணம் செலுத்துவதில்லை) தள்ளப்படுகின்றாள். சமுதாயத்தில் வேலைக்காரிக்கோ, விபச்சாரிக்கோ இருக்கும் உரிமை திருமணமான பெண்ணைவிட அதிகமாகும். கணவன் வீட்டில் புகுந்த பெண் ஒவ்வொன்றுக்காகவும் போராடுவது தவிர்க்க முடியாத புதிய சூழலாக இருக்கின்றது. இங்கு அவள் சந்திக்கும் முதல் தடை மாமியாரும், கணவனின் சொந்தச் சகோதரிகளுமே ஆகும். இதனால் அதன் தளத்தில் போராடுவது புகுந்த அந்தக் கணத்திலேயே தொடங்குகின்றது. அன்னியப்பட்ட மண்ணில், சூழலில், ஆதரவற்ற தளத்தில் தொடங்கும் போராட்டத்தில் எப்போதும் தோற்றுப் போவது நிகழ்கின்றது. இதில் இருந்து விலகிச் செல்ல பெண் நினைக்கின்றாள். அப்போது அவள் அதைச் சொல்லி பாடுவதைக் கீழே பார்ப்போம்.

"கொண்டவனால் குத்தமில்லை
மாமி கொடிசியில்ல
மத்தரால் குத்தமில்லை
நாத்தி கொடிசியால
நானிருந்த வாழமாட்டேன்"[36]

இந்தப் பிரிவு என்பது மேலும் அவமானகரமானதாகவே ஆணாதிக்க அமைப்பில் வெளிப்படுகின்றது. சொந்தப் பெற்றோர் ஏற்க மறுக்க, சமூகம் பெண்ணை அடங்கிப் போக கோரும், சமூக அமைப்பில் பெண் எதையும் தாங்கும் சக்தி கொண்டவளாகக் காட்டிச் சகித்து வாழக் கோரும். ஊரில் இல்லாததையா நீ கண்டு விட்டாய் என்று சொல்லி தூற்றும். **எந்த நிலையிலும் பெண் புகுந்த வீட்டுக் கொடுமைகள் அனைத்தையும் தாங்கி வாழ்வதே சமூக ஒழுக்கமாக இருக்கின்றது.** இதில் இருந்து மீள தற்கொலை செய்வது அல்லது அதற்குக் காரணமானவர்களை இரகசியமாகக் கொல்லுவது என்ற இரண்டையுமே, தனிப்பட்ட பெண் தேர்ந்தெடுக்க சமூகம் மறைமுகமாக உந்தித் தள்ளி அங்கீகரிக்கின்றது. பெண் சந்திக்கும் வாழ்க்கைத் துயரத்தை எப்படி பெண் வெளிப்படுத்துகின்றாள்? என்பதைக் கீழே வரும் பாடலில் பார்ப்போம்.

"கடுகு உருண்டுவர - எம்மா
கனத்த மழை பேஞ்சு வர - நான்
கடுகுப் பொறுக்குவேனோ
கனத்த மழையத் தாங்குவேனோ

கருவூரான் சாலையிலே
கட்டிலும் மெத்தையும் போட்டிருக்க - நான்
கருவூரான் பெத்த மக
கஷ்டப் பட்டத யாரறிவார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விசுவூரான் சாலையிலே
வீடும் காடும் இருந்திடவே - நான்
வீமர பெத்த மக
வேதனைப்பட்டத யாறறிவார்"[10]

— என்று பெண்களின் துன்பங்கள் அமுந்தி போவதை இந்த உலகம் அறிந்துவிடவில்லை. ஒவ்வொரு பெண்ணினதும் துன்பங்கள் வெளிவராத உலகத்தில் ஆணாதிக்கம் கொடிகட்டிப் பறப்பதையே இந்தப் பாடல் வெளிப்படுத்துகின்றது. சொந்த வீட்டில் கிடைக்கும் எதிர்ப்பு எப்படிப்பட்டது? எனப் பார்ப்போம்.

"அண்ணன்: உன் கணவன் இல்லாம
ஓடிவந்த வயணம் என்ன?
கூடி வாழமுடியாமா
குறைகள் வந்த வயணமென்ன?

பெண்: கொண்டவனும் சண்டாளனே
கொழுந்தனும் கொடும்பாவி
மாமியாரும் மனக்குரங்கு - அங்க
மாமன் கொஞ்ச ஆதரவு
நாகமலை தூரமண்ணே
நானிருந்து வாழமாட்டேன்
அருமையான அண்ணணிண்ணா - நீயும்
ஆடுமாடவித்துக்கட்டு

அண்ணன்: ஆடுமாடு விக்கமாட்டேன்
அங்கபணம் கட்டமாட்டேன்
அருமையான தங்கையிண்ணா - நீயும்
அருங்கிணத்தைத் தேடி விழு

அவள்: தாயில்லாக் குறையல்ல
தனிமையில வாடுதனே
தங்கிவாழ முடியாம
தவித்துநான் வாடுதனே"[36]

— இதில் பெண் புகுந்த வீட்டுக் கொடுமையுடன் கோரும் சீதனம் போன்றவற்றை முன்வைத்து அண்ணனிடம் சொத்தை விற்று தரும்படி கோருகின்றாள். தனிச்சொத்துரிமை வாரிசான அண்ணன் கிணத்தில் வீழ்ந்து சாவு என்று, சொத்துரிமை மீதான உரிமையில் தனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றான். கணவனும், கணவன் வீட்டுக் குடும்பமும் புகுந்தவள் மூலம் தனிச்சொத்துரிமையைக் கைப்பற்ற விரும்பும் அதே தளத்தில், சொத்தை அண்ணன் கொடுக்க மறுப்பது என்ற போராட்டத்தில், பெண் பந்தையம் வைக்கப்படுகின்றாள். பெண் மூலம் பெறும் சொத்துக்குப் பெண் உரிமை





கொண்டாட முடியாது. அதை அவள், அவளின் விருப்பத்தை மீறிக் கொடுக்கத்தான் முடியும். பெண்ணை வேலைக்காரியாக வீட்டு இயந்திரமாக அடைத்து வைத்திருக்க தண்டப் பணம் கொடுக்கவேண்டும். அதுபோல் பெண்ணை வைத்திருக்கும் பெற்றோர் அதைச் சேர்க்க வேண்டும். பெண் வேண்டத்தகாத பிறவியாக அவளின் பிறப்பிலேயே கருதப்படுகின்றாள். இந்தவகையில் பெண் பிறப்பு முதலே அவமானப்படுத்தி ஒடுக்கப்படுகின்றாள்.

சீதனம் பெண்வழிச் சமூகத்தில் இருந்து ஆண்வழிச் சமூகமாக மாறிவந்த காலக்கட்டத்தில் ஆண் சீதனம் கொடுப்பதே முதலில் இருந்துள்ளது. இதையும் நாட்டுப்புறப் பாடல் தனது எச்சச்சொச்சத் தொடர்ச்சியில் சமுதாய நடைமுறையில் வெளிப்படுத்த தயங்கவில்லை. ஓர் ஆண் தனது மனைவிக்குச் சீதனம் கொடுத்து திருமணம் செய்ததையும், அவளுக்குக் கஞ்சி காய்ச்ச தெரியவில்லை என்று கூறுவதையும் கீழே உள்ள பாடல் வெளிப்படுத்துகின்றது.

"301 வாங்கி முடிஞ்சு வைச்சுக்கிட்டாள்
கஞ்சி காய்ச்ச தெரியயில்லை
உன்கழுத்தை கட்டி நான் அழவா![39]

இதுபோன்று மற்றொரு பாடலும் ஆண் பரிசம் போட்டதை வெளிப்படுத்துகின்றது.

"பெண்களுக்கு பரிசம் கேட்டு
ஆண்கள் வந்து பரிசம் போட்டு
அழகு அழக திருமணங்கள் அப்போ
...
இப்ப ஆம்பிளைக்கு, இப்ப ஆம்பிளைக்கு பரிசம் போட்டு
ஐந்த பவுன் நகைகேட்டு அநியாயம் பண்ணுங்கிறாங்க இப்ப
நாடு சும்மா, நாடு சும்மா கிடந்தாலும் கிடக்கும்"[39]

இன்றைய ஆணாதிக்கச் சமூகத்துக்கு முந்திய சமுதாயத்தில் பெண் கேட்டு ஆண் சென்றதை நாட்டுப்புறப்பாடல்கள் தெளிவாக வெளிக் கொண்டு வருகின்றது. இன்று எதிர் நிலையில் பெண் ஆணைக் கேட்டு செல்வதுமட்டுமின்றி, சீதனக் கொடுமையும் சேர்ந்ததையும் மேலே உள்ள பாடல் காட்டுகின்றது.

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் கணவன் இறக்கின்ற போது பெண் விதவைக் கோலத்தை ஏற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றாள். விதவை என்பதுக்கு ஆண்பாலில் சொல் அற்ற நிலையில், இது தனிச்சொத்துரிமையில் பெண் மட்டும் கடைப்பிடிப்பதன் மூலம், சொத்து ஆண் வழியில் உறுதிப்படுத்த உருவாக்கப்பட்டது. இங்கு பெண் இறந்த கணவனின் வெறும் நுகர்வுப் பொருள் சார்ந்த சொத்துதான். கணவன் இறந்தால் அலங்கரிக்கப்பட்டுப் பின் அலங்கோலப்படுத்தப்படுகின்றாள். **முன்பு கணவனின் சிதையில் ஆயிரம் ஆயிரமாக ஏற்றி எரித்த இந்து மதம் காலத்தால் எதிர்க்கப்பட்டதால்,**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**நவீன அடக்குமுறைகள் பெண் மீது திணிக்கப்பட்டது.** ஆணாதிக்கச் சமூகத்தால் விதவையாக்கப்பட்ட பெண், தனது வாழ்க்கையின் துயரத்தைச் சொல்லிப் பாடும் போது அத்துயரங்கள் எல்லையற்றவையாகும். ஆத்துயரங்களைக் கீழே வரும் பாடலில் காணலாம்.

"காந்தத்துக் கண்ணாடி
கடம்பா மணிவிளக்கு
காத்தடிச்சா மங்காது - என்
கவலைசொன்னா மங்கிவிடும்
...
காச்சமரம் கீழிருந்து என்
கவலையைச் சொல்லிவிட்டால்
காச்ச மரமெல்லாம் - என் ஐயா
காய்மாறிப் போயிருமே"[36]

— என்று சொல்லிப் புலம்பும் போது ஒரு மரத்தின் இயல்பே தனது சோகத்தைக் கேட்டால் மாறி விடும் என்று கூறுமளவுக்கு, ஆணாதிக்கம் வக்கிரம் கொண்டது என்பதை வெளிப்படுத்துகின்றாள். ஆணாதிக்கத்திடம் சொன்னால் எதுவும் நடக்காது, ஆனால் ஒரு மரம் அதைக் கேட்ட சோகம் தாளாது தன்னையே மாற்றிவிடும் என்பதை இப்பாடல் அழகாகவே வெளிப்படுத்துகின்றது.

ஆணாதிக்கத்தை ஒழிக்க வன்முறையைத் தவிர வேறு மார்க்கம் இருப்பதில்லை என்பதை இப்பாடல் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இந்த வன்முறை தனிப்பட்ட ஆணின் மேல் அல்ல ஆணாதிக்கச் சமூகம் மீது என்பது தெளிவானது. இந்த ஆணாதிக்க அமைப்பின் அடிப்படை மீதான வன்முறைதான் பெண்ணை விடுவிக்கும் என்பதும் தெளிவானது. இந்த ஆணாதிக்கச் சமூகத்தின் துயரங்களைச் சொல்லி மரம் போல் மாறிவிட முடியாது என்பதை, பெண் அனுபவ ரீதியாகப் புரிந்து தன்னியல்பாகப் பாடும் போது, வன்முறையின் அவசியத்தை நாம் புரிந்து கொள்ள ஏதுவாகின்றது. இதை அனுபவிக்கும் பெண் சொல்லிப் புலம்பிப் பாடுகிறாள். இது தீர்வைத் தருவதற்குப் பதில் மன ஆறுதலைக் கொடுக்கின்றது. இந்தத் துயரத்தை மாற்ற, மறுத்து போராட எழுகின்ற போது தீர்வும் கிடைத்துவிடும் என்பது எதார்த்தமாகின்றது.

பெண்கள் தமது இயற்கையின் தேவையை ஒருதாரமணத்தில் தீர்த்துக் கொள்ள முடியாத நிலையில் வேறு ஆண்கள் உடன் உடலுறவு கொள்வது நிகழ்கின்றது. இதைத் தாண்டி கணவனின் சகோதரர்களுடன் உடலுறவு கொண்டு வாழும் பழைய சமுதாயத் தொடர்ச்சிகள் மற்றும் குடும்பத்தில் உள்ள மற்ற ஆண்கள், சாதி கடந்த ஆண்கள் என்று பல தளத்தில், உடலுறவுகளைப் பெண்கள் கொண்டிருந்தனர். இதில் நிர்ப்பந்தத்தின் மூலம் ஒருபுறம் நிகழ,





மறுதளத்தில் விரும்பிச் செய்வது என இரு தளத்தில் இவை நிகழ்ந்துள்ளது, நிகழ்கின்றது. தனது கணவன் இறந்தால், தான் அவனின் சகோதரன் மூலம் மகிழ்ச்சியாக வாழமுடியும் என்று சொல்லி பாடுவதைப் பார்ப்போம்.

"கோயிலுக்குப் போகவேனும்
கொண்டவனும் சாக வேணும்
கொழுந்தனார் பையங்கிட்ட - குட்டி கிளியா
கொம்மாளங் கொட்டலாமே போடுகாந்தம்"[36]

— என்று கணவனின் சித்திரவதையில் இருந்து விடுபட நினைக்கின்றாள். எப்போதும் திருமணம் செய்யாத எல்லா நிலையிலும் ஆண் பெண் உறவில் இருக்கும் அன்பும், காதலும், நெருக்கமும் திருமணத்தில் இருப்பதில்லை. ஏனெனின் திருமணத்தில் உருவாகும் குடும்பத்தில் ஆண் பெண்ணுக்கான கடமைகளே முதன்மையாக முன்னிலைக்குக் கொண்டுவருகின்றது. இது ஆண் பெண் என இருவருக்கும் குடும்பம் நெருக்கடியான வாழ்வாக மாறிவிடுகின்றது. இந்த உரிமைகள் கடமைகள் மீது வன்முறையும், நாட்டமின்மையும் ஏற்படுகின்றது.

இந்தக் குடும்ப எல்லைக்குள் சமுதாயப் பொருளாதார அமைப்பே திடீரென புதியவடிவில் பண்பியல் மாற்றமாகப் புகுந்து அனைத்தையும் மாற்றி விடுவதால், ஆண் பெண் பிளவு தீவிரமான பண்பியல் மாற்றத்தைச் சந்திக்கின்றது. ஆண், சமுதாயத்தின் விரிந்த தளத்தில் வாழ்வதுடன் பலதார மணத்தில் இருக்கும் வாய்ப்புகளில் தன்னைச் சமாளித்துக் கொள்ள, பெண் இதில் இருந்து தப்பிச் செல்ல முனைகின்றாள். பெண் தனது முந்திய காதலனுடன் ஓடிவிட நினைத்து அதை வெளிப்படுத்துகின்றாள்.

"வெள்ளமாடு ரெண்டுகட்டி மன்னவா நாம
விருந்தாசலம்போவலாம் மன்னவா
கீழத்தெருவிலேயே கிழவனுக்கே மாலையிட்டேன்
மாலையிட்ட நாள் முதலா மன்னவரைக் கண்டதுண்டோ"[36]

— என்று தனது சுய வாழ்வின் அவலங்களில் இருந்து தனது காதலனுடன் வாழ்வதாகக் கற்பனை செய்து பார்க்கின்றாள். பெண் தான் காதலித்தவனை விட மற்றவனின் தேவையைப் பூர்த்தி செய்ய நிர்ப்பந்திக்கும் திருமணத்தில் பெண் அன்னியமாகி விடுகின்றாள். இதனால் அதைக் கடந்து வாழ நினைத்து பாடும் பாடல், எதார்த்த ஆணாதிக்க வாழ்வில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இங்கு பெண்ணுக்கு நிறைய பட்டங்கள் காத்துக் கிடக்கின்றன. அப்படி வெளிவந்தாலும் அவள் யாரிடம் சரணடைந்தாளோ, அவன் அப்பெண்ணை வைப்பாட்டியாக வைத்திருப்பானே ஒழிய மனைவியாக அல்ல. இங்கு ஆணாதிக்கக் கற்பு சமூக வடிவில் பெண்ணை இழிவுபடுத்துகின்றது. இந்த இரண்டு தளத்திலும் பெண்ணின் கற்புரிமை கேவலப்படுத்தப்படுகின்றது. இந்த நிலையில் கிராமப்புறத்தில் பெண்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருமணத்தில் அதிருப்தியுற்று, புதிய வாழ்க்கையைத் தேடுவது சர்வசாதாரணமாக உள்ளது. எந்தளவுக்குக் கேவலப்படுத்தப்பட்டாலும் அது இயல்பான நடத்தையாக உள்ளது. இதில் இருந்து தனது சொந்த வாழ்க்கை மீதான அவலங்களின் போது, புதிய கணவனைத் தேடப் போவதாகப் பெண்கள் பாடல் மூலம் சூளுரைப்பது நிகழ்கின்றது. அதைக் கீழ்க்கண்ட பாடல் நிர்வாணமாக்குகின்றது.

"ஒன்ன விட்டு நான் வேற பிரிந்து கயித
ஒரு புருஷன் நானு தேடப்போறேன்."[36]

— என்று பெண் கூறும் போது, கிராமப்புறப் பெண்ணின் பொருளாதாரச் சுதந்திரம் பெண்ணின் துணிச்சலான கருத்தை வெளிப்படுத்துகின்றது. ஆனால் பெண் அலட்சியப்படுத்தப்படும் எல்லா நிலையிலும் பெண் தனது வாழ்வை உதறியெறிய முன்வருகின்றாள். இந்த வாழ்க்கையில் இருந்து மீளமுடியாத நிலையில் அல்லது தமது இயற்கையின் தேவையைப் பூர்த்தி செய்யும் போக்கில், திருமணத்துக்கு வெளியில் ஆணாதிக்கச் சாதி கடந்து உடலுறவில் ஈடுபடுவது நிகழ்கின்றது.

"ஜோதி கிட்ட நா பேசினதால
ஜாதிகெட்டவ - ஊர்
வாயி நீள எ(ன்)
உசுரு உப்பு மில்லாம
சப்புன்னு போச்சே
சாவுத் தேடிப் போனே(ன்) - இப்ப
ஆவியா அலையுறேனே"[40]

இந்தப் பேய் ஓட்டும் பாட்டின் மூலம் சாதி கடந்து உடலுறவு கொண்ட பெண் ஊராரின் அவதூற்றால் இறந்து போனதைக் காட்டுகின்றது. இந்த மாதிரியான அவதூறுகளையும் தாண்டி உறவுகள் நீடிப்பதை நாட்டுப்புறப் பாடல்கள் வெளிக் கொண்டு வருகின்றது.

"எழுவதியா லொண்டு
ஏண்டி கொசப்பெண்ணே
எடயண்ட போனே
பாலுவார்ப்பார் என்று
பட்சம் வைத்துப் போனேன்
...
தயிரு வாப்பான் என்று
தயவுசெஞ்சி போனேன்
சொல்லாதீங்க ஆண்ட
செப்பு பண்ணித்தாரேன்
...





ஏறி விளையாட
எருது பண்ணித்தாரன்
...
குந்தி விளையாட திரை பண்ணித்தாரன்
...
பாத்து விளையாட
பதும பண்ணித்தாரன்"[36]

— என்று பெண் பாடும் போது, இயற்கையின் தேவைகள் எதார்த்தத்தில் எல்லை கடந்து நிற்கும் போது சமூகக் கட்டுப்பாடுகளை மீறுவது இயற்கையாகின்றது. இந்தப் பெண்ணின் மீறல் எதார்த்தத்தில் ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமைச் சமூகத்தில் என்பதால், ஆணின் தேவையை அடிப்படையில் பூர்த்தி செய்வதாக மாறுகின்றது. இது பகிரங்கமான பொது விபச்சாரத்துக்குப் பதில், இரகசியமான விபச்சார நிலைக்கு இது தன்னைத் தரம் குறைக்கின்றது. இயற்கை சார்ந்த தேவையை வக்கரிக்கச் சென்று பண்ணி உந்தித் தள்ளும் திரைப்படம் மற்றும் சீரழிவின் பண்பாட்டில் ஏற்படும் கவர்ச்சிகரமான பாலியல் நாட்டம், நீண்டு நீடிப்பதில்லை. பெண் தரப்பிலும் இது அலுத்துப் போகும் போது, ஆண்தளத்தில் பெண் மீதான அதிகாரமாக, அடக்குமுறையாக இந்த உறவு வளர்கின்றது. இதைப் பெண் எதிர்த்து பாடுவது அடுத்தக் கட்டத்தில் நிகழ்கின்றது.

"அடி அம்மட்டச்சி கொழுப்பு - சல
வண்ணாங்கிட்ட போனா
வானாங்கோ லெடுத்து
சாடுறானாம் வண்ணான்
போடுங் கோலெடுத்து
பொளக்குறானாம் வண்ணான்"[36]

இதன் மூலம் ஆணாதிக்கம் சாதி கடந்து, வர்க்கம் கடந்து, இனம் கடந்து, நிறம் கடந்து பெண் மீதான ஆணின் பார்வை பொதுமைப்படுத்துவதையே, பெண் தனது சொந்த எதிர்ப்பினூடாக நிதர்சனமாக எடுத்துக் காட்டுகின்றாள். ஆண் தனது தேவையைப் பூர்த்தி செய்யும் வரை காதலிப்பதும், அன்பு செலுத்துவதும் என்ற நிலையைக் கடந்த பின்பு, ஆணாதிக்க அதிகாரமாகப் பெண் மீது ஏவப்படுவது இயல்பாகின்றது. ஓரினச்சேர்க்கை போன்றவற்றில் கூட இதுதான் நிகழ்கின்றது.

தனிச் சொத்துரிமை அமைப்பில் தனிமனிதச் சுதந்திரம், மற்றவனின் மீதான அடக்குமுறையைக் கோரும் உள்ளார்ந்த அடிப்படை விதி, சமுதாயத்தில் எந்தத் தளத்திலும் அதிகாரத்தைத் திட்டவட்டமாக நிறுவுகின்றது. இது குறித்த விடயம் மீது வன்முறையைக் கையாளுகின்றது. அடுத்து பரந்த தளத்துக்கு மாறிச் செல்லுகின்றது. பெண் வேலைக்குச் செல்லும் வேலைத் தளத்தில்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதிகாரப்பிரிவுகள் முதல் சமுதாயத்தின் அனைத்து ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை அதிகாரப் பிரிவும், பெண் மீதான புணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே அணுகுகின்றது. இதைப் பெண்கள் தமது நாட்டுப்புறப்பாடல் ஊடாக வெளிப்படுத்தத் தவறவில்லை.

> "கண்ட கண்ட இடமெல்லாம் கண்ட பொண்ணெக்
> கையைப்பிடிச்சிழுப்பான்"[36]

— என்று கூறும் போது பெண்ணுக்கு எந்த இடத்திலும் பாதுகாப்பில்லாத இந்த ஆணாதிக்க ஜனநாயகத் தனிச் சொத்துரிமை அமைப்பைக் கேள்விக்குள்ளாக்குகின்றது. பாதுகாப்பு தனது சொந்தத் தற்காப்பில் இருப்பதை எச்சரிக்கின்றது. சமூக அரசு அமைப்பில் நம்பிக்கை இழந்து, சொந்தத் தற்காப்பை முன்நிறுத்தி சமூகப் பாடலாக வெளிப்படும் போது, ஆணாதிக்கத்துக்கு எதிரான ஒன்றுபட்ட கண்ணோட்டம் போராட்டம் இயல்பாக வெளிக் கிளம்புகின்றது.

இந்தச் சமூகம் ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை ஜனநாயகத்தால் உருவாகின்ற போது, இதனால் பாதிக்கப்படும் பெண்கள் தமது சொந்தக் குழந்தைகளின் தந்தை, இந்த ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமையின் அதிகாரிதான் என்பதை ஒப்புக் கொள்கின்றாள். இந்தத் தனிச்சொத்துரிமை அமைப்பில் பாலியல் அத்துமீறல் அதிகார வடிவில், சொத்துரிமை வடிவில் பெண்ணை இருண்ட பொருளாதார வாழ்வியலின் பின் கற்பழிக்கின்றது. இது அநேகமாக வெளியில் பெண் கூற முடியாத தனிச் சொத்துரிமை, வறுமையுடன் கூடிய அவலம் தடுக்கின்றது. இதனால் அதைச் சகித்துக் கொண்டு, அத்துமீறிப் பிள்ளையைப் பெத்துப் போடுகின்றாள். இதை அப்பெண் தனது பாடல் மூலம் வெளிப்படுத்துவதைப் பார்ப்போம்.

> "பேருக்குப் பெரிய எசமான்
> பேர்போன சின்ன எசமான்
> எசமான் கொடுத்தபுள்ள
> சிரிக்குதடி இடுப்புமேலே"[36]

— என்று பெண் தனது குழந்தையைச் சொல்லி ஆணாதிக்க எசமானத் தனத்தை கேலி செய்கின்றாள். ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமைச் சமூகத்தின் மதிப்பும், புகழ் பெற்ற மனிதர்களின் வாழ்க்கையின் பின் இந்த வக்கிரத்துடன் கூடிய ஏதோ ஒரு போக்கு காணப்படுவது இயல்பாக உள்ளது. சமுதாய அடக்குமுறையின் சின்னமாக இருக்கும், அந்தப் புகழுக்குரிய வாழ்வின் பின், அவலமான கண்ணீர் கொண்ட விரிந்த உலகம் வீங்கிக் கிடப்பதே எதார்த்தமான உண்மையாகும். இதைத்தான் இந்த நாட்டுப்புறப்பாடல்கள் தெளிவாக வெளிப்படுத்துகின்றது. நாட்டுப்புறப் பாடல்கள் பெருமளவுக்குப் பெண்களினால் பாடப்படுவது வழக்காக உள்ளது. ஆண்கள் தொழில் தேடி நீண்ட தூரம் சென்றதாலும், செல்வதாலும் பெண்கள் வீட்டில் தங்கி நின்ற இந்தக் குறிப்பான





காரணங்களுடன், மேலும் ஆணாதிக்க அமைப்பின் சொந்தச் சோகத்தைப் பெண்கள் சொல்லிப் புலம்புவதுமாக நாட்டுப்புறப் பாடல் பெண்ணின் வெளிப்பாடாகியது.

பெண் தனது வாழ்வின் சோகத்தைச் சொல்லிப் புலம்பி ஒப்பாரி வைப்பது தன்னியல்பாக இருந்தது. இதைப் பெண் மரண நிகழ்வில் ஒப்பாரிப்பாடல் மூலம் சொல்லி புலம்புவதன் ஊடாகச் சமூக அவலத்தை வெளிப்படுத்துகின்றாள். ஆண்கள் இப்படி ஒப்பாரி வைப்பது ஆண்மைக்கு இழுக்காகக் கருதுவதால், நாட்டுப்புற இசையின் உள்ளடக்கம் பெண்ணை அதிகம் சார்ந்து நிற்கின்றது. ஆண்கள் உழைப்பை ஒட்டி மட்டுமேதான் பாடுவதும், சமூக அவலத்தையிட்டுப் பாடுவதோ, ஒப்பாரி வைப்பதோ சமூக இழுக்காகக் கருதுவதால் நாட்டுப்புற இசையின் மூலம் (அடிப்படை) பெண்ணாக இருக்கின்றாள். ஆண்கள் அண்ட மறுத்து இழிவாகக் காட்டப்படும் ஒப்பாரிப் பாடல் மூலம் இதை மேலும் பார்ப்போம்.

> "அம்மாவும்ஆள் அனுப்ப
> முந்தானை விரித்துப்போட்டு
> முகத்தின் மீது போட்டழுவாள்
> அக்காவுக்கு ஆள் அனுப்ப
> பம்பை தலைவிரிச்சு
> பாடை மீது போட்டழுவாள்
> ...
> வாய்க்கரிசி கொண்டுவந்து
> வழிநெடுக கல்பார்ப்பாள்
> வாய்க்கரிசி தீர்ந்து போக
> வந்தவழி திரும்பிவிடுவாள்"[36]

— என்று பெண் தான் இறந்து போகும் போது என்ன நிகழும் என்பதைக் கற்பனை பண்ணி தனது துயரத்தைப் போட்டுடைக்கின்றாள். தாய்வழிச் சமூகம் தனக்காக எப்படி கண்ணீர் விட்டு அழுகின்றது என்பதையும், தனது தாய் வழி அல்லாதவை எப்படி தன்னைப் புறக்கணிக்கின்றது என்பதையும் இந்த ஒப்பாரியில் சொல்லிப் புலம்ப பெண் தயங்கவில்லை.

இது சமுதாயத்தில் பொதுவாகப் பெண்களின் இயல்பான உணர்ச்சியாக, வெளிப்பாடாக இருப்பதும், இது பெண் வழிப் பெண்ணையும் பொதுமைப்படுத்தும் போது இது முரணாக இருப்பதில்லை. இதில் இருந்துதான் பெண் பெண்ணை ஆணாதிக்க வழியில் ஒடுக்கும் போது, பெண் ஆணாதிக்கச் சமுதாயத்தின் விளைவைத்தான் வெளிப்படுத்துகின்றாளே ஒழிய, உள்ளுணர்வுகளால் உந்தப்பட்டுச் செய்வதில்லை என்பதைக் காட்டுகின்றது. சொந்தத் தாயின் இழப்பின் போது அவள் தாய்மையைப் போற்றி ஒப்பாரி வைத்து புலம்புவது நிகழ்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நெய் ஊட்டி வளர்த்த உன்
நேசத்தை நான் மறவேன்
பால்ஊட்டி வளர்த்த உன்
பாசத்தை நான் மறவேன்
குடத்தோட தண்ணீர் எனக்குக்
குளிர வார்த்தாலும்
தாய் வார்த்த தண்ணீர்போல்
தாகந் தணியா தெணை"[36]

— என்று தாய்மையின் தாய்மைப் பண்பை, அதன் தியாகத்தைச் சமுதாயத்தின் எந்த வடிவமும் முன்நிற்க முடியாது. இந்தத் தாய்மை தன்னியல்பான இயற்கையான உள்ளுணர்வால் உந்தப்பட்டுச் செய்யும் மனிதப்பண்புகள் ஈடு இணையற்றவையாகும். இதை இன்றைய நாகரிகச் சூறையாடல் குழந்தைக்கு மறுத்து, இயந்திரத்தனத்தில் பெண்ணியத்தைப் போதிக்கும் போது, கிராமத்தில் தாய்மை இயற்கை சார்ந்து நிற்பதையே இந்த ஒப்பாரி காட்டுகின்றது. தாயை இழந்த பின் எமது சமுதாய வழிகாட்டியை இழந்து போன துயரத்தைப் பெண்கள் சொல்லிப் புலம்பும் போது, பெண் சமுதாய வழிகாட்டியாக இருக்கும் முன்னணிப் பாத்திரத்தைக் காட்டுகின்றது.

"ஏவினா அன்னியிலே நாங்கள் எழுந்து முடியறியோம்
கல்தூணின் கீழருந்து கல்பிக்க வேண்டாமோ
பொண் தூணின் கீழிருந்து புத்திசொல்ல வேண்டாமோ"[36]

— என்று பாடி தன்னை வளர்த்தெடுத்த மேன்மையைப் போற்றுவதில் பெண்கள் தமது ஒப்பாரியில் பின்நிற்கவில்லை. அதே நேரம் தமது திருமணத்தில் சீதனம் முதல் பல்வேறு திருமணக் கொடுமைகளைக் கூறி, தாய்மை பெற்ற கஷ்டத்தைச் சொல்லிப் புலம்புவதுடன், தான் அந்தத் திருமணம் மூலம் துன்பம் அடைய தாய்தான் காரணம் என்று கூறிக் குற்றம் சாட்டவும் பின்நிற்கவில்லை. இது போல் தந்தை இறக்கும் போதும் சொல்லி அழவும் தயங்கவில்லை.

"மாமன் மகனுக்குன்னு
மச்சிலியும் பொம்பொறந்த
என்னைப் பெத்த அதிகாரி பண்ணுனது
மாமன் கௌயவுட்டு
மறு கொடயா மாலையிட - என்னொட
மனச்சலிப்பும் கொள்ளையடா"[36]

"மட்டஞ்சிறிசிலே நான் மலரையிலே நல்ல பூவு என்னை
மலரவச்சுப் பார்க்காம மங்கவச்சுப் பாத்தீகளே"[36]





"ஆனைகுடிக்காது அகமூடி நல்லதண்ணி - இந்த
அரும்பாவிச் சீமையிலே
என்னைப் பெத்த மாதா - என்னை
அள்ளிக் குடிக்க வச்சு"[36]

தாயார் பொறந்த இடம் தாளாம்பூக்கச்சேரி
தாலி பொருத்தமில்லையே எனக்குத் தாய்மாமன் சொந்தமில்லையே
மாட்டடைக்கும் பட்டியிலே நீ பெத்த மங்கையாள போட்டடைச்சு
மாடுபடும் துன்பமெல்லாம் இந்த மங்கையாள் நிக்குறேனே"[36]

தனது திருமணத்தில் தனக்குத் தேர்ந்தெடுத்த போதே தாய் தவறு இழைத்ததைக் குற்றம் சாட்டிப் புலம்பும் போது, ஆணாதிக்க அமைப்பின் கொடூர முகத்தை எமக்கு வெளிப்படுத்துகின்றது. இந்த ஆணாதிக்கச் சமூக தளத்தில் **திருமணம் என்பது எங்கு நடந்தாலும் எப்படி நடந்தாலும் அது ஆணாதிக்க எல்லைக்குள்தான் நடக்கின்றது, நடக்கமுடியும்.** இதில் தாயை மகள் குற்றம் கூறிப் புலம்பும் போது தனது தாய்மாமன் மீதான திருமணத்தைக் கோருவதன் மூலம் துன்பத்தில் இருந்து மீண்டுவிடமுடியும் என்று நம்புகின்றாள் இது அடிப்படையில் துன்பத்தைக் குறைக்கவும், போராடி வெல்லவும் தாய் மாமன் உறவு வழிவகுக்கின்றது. உறவுக்குள்ளான திருமணம் தாய்வழி சார்ந்து அதிகப் பாசத்தை, நெருக்கத்தை வெளிப்படுத்த முடியுமே ஒழிய ஆணாதிக்க அமைப்பின் பொது ஒடுக்குமுறையை இல்லாததாக ஆக்கிவிடுவதில்லை. திருமணத்தில் ஏற்பட்டத் துன்பத்தை ஒட்டி தாயைக் குற்றம் சாட்டிப் புலம்பும் அதே நேரம், திருமணத்தில் ஏற்பட்ட துன்பத்தைச் சொல்லிப் புலம்பவும், ஆதரவாக வரவேற்கும் தாய் இறந்து போனதையிட்டு, அதனால் தனது துன்பம் பெருகுவதைச் சொல்லியே ஒப்பாரிப் பாடல்கள் எழுகின்றன.

மாமன் மகன் திருமண உறவைப் பெண்கள் தமது ஒப்பாரிப் பாடல் மூலம் கோருவதும், அது மறுக்கப்பட்டு இருப்பதும் தாய் வழிச் சமூகத்துக்கும், தந்தை வழிச் சமூகத்துக்கும் இடையேயான பிளவைக் காட்டுகின்றது. தாய்வழித் திருமணம் பெண்ணுக்கு நிம்மதியை, ஆறுதலை வழங்கும் என்ற நம்பிக்கைகள் ஆணாதிக்கச் சமுதாயத்தில் பிரதிபலிக்கின்றது. இதனால் பெண் தாய்வழித் திருமண உறவைப் பெரிதும் விரும்பிக் கோருவதும், அதைச் செய்ய மறுத்த பெற்றோரைக் குற்றம் சாட்டுவதும் தவிர்க்கமுடியாத இயல்பாகின்றது. சொந்தத் தாய் தந்தையின் இறப்பில் கூட, சோகத்தை விட நிஜ வாழ்க்கையின் எதார்த்தங்களை முன்னிலைப்படுத்தி அதற்கு நேரடி காரணமான பெற்றோரைக் குற்றம் சாட்டுவதற்குப் பின்நிற்கவில்லை.

"பொறந்த மாளிக்குப் போனேன்ண்ண - என்ன பெத்த
மாதா இருந்தாண்ணா
மண்ணு போடும் திண்ணையிலே - என்
மன்னவரக் குந்தவப்பா
மக்களுக்குச் சீரிடுவா"[36]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



— என்று சொல்லி தனது இழப்பை வெளிப்படுத்துகின்றாள். இந்தப் பாடல்கள் ஆணாதிக்க அமைப்பின் மீது எழுகின்ற பெண்ணின் துன்பங்களின் துயரங்களின் எதார்த்த வெளிப்பாடாகும். இனி தனது தாய் வீட்டுக்குச் செல்லும் போது ஏற்படும் புதிய துன்பத்தையும் வெளிப்படுத்த தயங்கவில்லை.

"கும்பிகொதிக்குதுண்ணு - நான் பெத்தவாச
குடிக்கத் தண்ணி கேட்டென்னா
கொடமும் எறவயில்லை - என்னைக்
கொள்ளடமும் போகச்சொன்னா"[36]

— என்று ஆணாதிக்க அமைப்பின் தொடர் துயரத்தின் பிரதிநிதியாகப் பெண் இருப்பதையும், அதில் கிடைத்த ஆதரவை இழந்து போவதைப் பெண்ணால் தாங்கிக் கொள்ளமுடியாத சோகத்தையும் சொல்லித் தனது இழப்பை வெளிப்படுத்துகின்றாள். இந்த நிலையில் தனது சொந்தத் தாயின் உயிரற்ற உடலை எடுத்துச் செல்லும் போது கடைசிமுறையாகவும், சொந்த ஆணாதிக்கத் துயரத்தையும், தாயின் அரவணைப்பையும் சொல்லிப் புலம்புவது மிகுந்தச் சோகத்தை வெளிப்படுத்தக் கூடியவை.

"பச்சபுள்ளேகாரி - என்ன பெத்த அம்மா
பலசோலி காரியம்மா
பாடைநிறுத்தம்மா - என்
பாதரவைச் சொல்லியழ
தேரை நிறுத்தம்மா - உன்
திருமுகத்தை நான் பார்க்க"[36]

— என்று பெண்ணின் இழிநிலையில் இருந்து இவை வெடித்துக் கிளம்புகின்றது. ஆணாதிக்க அமைப்பில் பெண்ணின் உரிமையாக இருப்பவை இழக்கின்ற போது, அவை சோகத்தை ஆணாதிக்க வழியில் பன்மடங்கு ஆக்குபவையாக இருப்பதைப் பெண் தனது சொந்தத் துயரத்திற்கு ஊடாக வெளிப்படுத்த தயங்கவில்லை. இந்த வகையில் கணவனை இழக்கும் போது ஏற்படுகின்றது.

"நீலக்கல்லு வாசப்படி
நின்னழகுமண்டபமாம்
நின்னமுது வூட்டவந்தா
நீசத்தண்ணிபஞ்சமாச்சே"[36]

— என்று பெண் சொல்லிப் புலம்பும் போது, பொருளாதார ரீதியாக மற்றொரு ஆணுக்கு உரிமையற்று, அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டியதை எண்ணி வெம்பி வெடிக்கின்றாள். கணவன் இருந்த காலத்தில் கணவனின் அடிமையாக இருந்த பெண்ணின் திருமண உரிமை சார்ந்த அதிகாரம், கணவன் இறப்புடன் முடிவுக்கு வருவதுடன், கணவன் சார்ந்த சகோதரனின் தயவைச் சார்ந்து நிற்க வேண்டிய புதிய நிலைக்குத் தரம் தாழ்வதை, கணவனின்





இறப்பு பிரகடனம் செய்கின்றது. அத்துடன் அப்பெண் அணிந்திருந்த சகலவிதமான சமுதாய இயல்பான அணிகலன்களையும் இழந்து போகின்றாள். கணவனின் பிணத்தின் முன்பே மனைவியைச் சுமங்கலியாக்கி, உடனே அதை நாசப்படுத்துவதை (அமங்கலியாக்கி) அந்த மரணத்தில் கூட ஆணாதிக்கம் இரசித்து வக்கரித்துச் செய்வதன் மூலம் பெண்ணின் விதவைக் கோலத்தைப் பண்பாடாக்கிச் சிலுவையில் ஆணி அறைந்து சமூக வடிவமாக்குகின்றனர். அப்போதே அதை அப்பெண் கூறிப் புலம்புவதன் மூலம், தனது இன்பத் துன்பங்கள் எப்படி மற்றவனின் தயவில் அழிகின்றது என்பதை ஒப்பாரி மூலம் கூறத் தயங்கவில்லை.

"ஆரங்கிரவுக்கையும்
ஆனைமுகம் தங்கக்காப்பு
அதட்டிக் கட்டயிலே - என்
அங்கம் ஒடுங்கிப்போகுதே
சேலய அவுறுங்கடி - எனக்கு
சித்தாடயத் தாருங்கடி - என்
பட்டை அவுறுங்கடி
பழந்துணியைத் தாருங்கடி"[36]

— இதன் மூலம் பெண்ணின் பாலியல் நடத்தைகள் தீர்மானகரமாகத் தடைசெய்யப்படுகின்றது. ஆணாதிக்க வாரிசுரிமையைப் பெத்துப்போட்ட பெண், அதைத்தாண்டி கணவனின் பின் கூட வாழமுடியாத இருட்டு வாழ்க்கையில் தனிமைப்படுத்தப்படுகின்றாள். சாதாரண வாழ்க்கையில் திருமணம் மற்றும் சுமங்கலி பெண்ணின் பாலியலை அழகுபடுத்துவதன் மூலம், ஆணாதிக்கம் அதை நோக்கிக் கவரப்படுகின்றது. இந்தச் சாதாரண நடைமுறையைத் தம்மையறியாமல் பெண்கள் செய்விக்கப்படும் போது, இதை இதற்காகவே என்பதை எடுத்துக் கூறுவது அபத்தமாக இருக்கலாம். ஆனால் கணவன் இறக்கும் போது மனைவிக்கு இது மறுக்கப்படுவதன் நோக்கம் திட்டவட்டமாகத் தெளிவானது.

இங்கு பெண்ணின் சகலவிதமான இயற்கை மற்றும் செயற்கை அழகு அழிக்கப்படுவதன் மூலம், சாதாரணப் பாலியல் நாட்டம் தடுக்கப்படுகின்றது. பெண்ணின் இயற்கை உணர்வுகள் தனிச்சொத்துரிமை இரத்தத் தந்தையுரிமை வாரிசுகளுக்காக நலமடிக்கப்படுகின்றனர். இதனால் சமுதாயத்தில் விதவைக் கோலம் பூணுகின்ற புதிய பெண் உருவாக்கப்படுகின்றாள். இது ஆணாதிக்கச் சமுதாயத்தின் விளைவாகும். இதனால் இந்தப் பெண் சமுதாய பங்களிப்பில் இருந்து மேலும் தனிமைப்படுத்தப் படுகின்றாள். முதலில் ஆணாதிக்கச் சமுதாயத்தில் அடிமையாகத் தனிமைப்பட்டுக் கிடந்த பெண்ணை, விதவையாக்கியதன் மூலம் தனிமைக்குள் ஒடுங்கிக் கிடக்கச் சபிக்கப்படுகின்றாள். இதையும் அப்பெண் தனது ஒப்பாரியில் சொல்லிப் புலம்பத் தயங்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"வீதிவழிவந்தால் விலகிவர வேண்டுமென்பார்
வீதிவந்தால் வெட்கமல்லோ வீட்டிலிருந்தால் துக்கமல்லோ

வாசல்வழிவந்தால் மறைந்துவர வேண்டுமென்பார்
வாசல் வந்தால் வெட்கமல்லோ மறைந்திருந்தால் துக்கமல்லோ"[36]

பெண் இப்படி சொல்லி ஒப்பாரி பாடும் போது, ஆணாதிக்கச் சமூகம் இதைச் செய்ய கொக்கரித்து நிற்கின்றது. இதைக் கண்டு இரங்க தனிச் சொத்துரிமை அமைப்பு நொறுங்க வேண்டியதன் அடிப்படையான உள்ளடக்கம் தொங்கிக் கிடக்கின்றது. பெண் சமுதாயத்தின் முன் வாழும் தகுதி இழந்து ஒடுங்கி, பொந்தில் ஒழிந்து வாழ ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை அமைப்பு நிர்ப்பந்திக்கின்றது. அந்தளவுக்கு விதவை அலங்கோலமான வகையில் இழிவாக்கப்பட்டுச் சித்தரிக்கப்படுகின்றாள். அதேநேரம் இந்த ஒப்பாரியின் போதே தனது கணவன் தன்னை ஒதுக்கி வேறு பெண்களுடன் வாழ்ந்ததைச் சொல்லிப் புலம்பத் தயங்கவில்லை. ஒப்பாரியின் போதே தனது வாழ்வின் துயரங்கள் எல்லாவற்றையும் சொல்லிப் புலம்புவதன் மூலம் சமூகத்தின் முன் கொட்டிவிடுகின்றாள்.

"வெள்ளிக் குடைபிடிச்சு
விளையாடும் நாளையில
விசனம் தெரியல்லை
வெக்காளம் தோணுலியே - இந்த
வேசிமுள்ளு ராசருக்கு
விரல் கொடுத்த நாள்முதல
விசனம் தெரியுதுங்க
வெக்காளம் தோணுதுங்க"[36]

ஆணின் பலதார மணத்தின் விளைவால், ஒருதார வாழ்வில் வாழும் பெண் தனது துயரத்தை, இழப்பை எண்ணி ஒப்பாரி வைக்கின்றாள். ஆண்கள் பலதாரமணத்தில் இருக்கும் வரை, ஒருதாரமணத்தில் வாழும் பெண் புறக்கணிக்கப்படுவது இயல்பானதாகும். தமது பாலியல் தேவைகள் பலதாரமணவடிவில் பூர்த்தியாவதால், மனைவியின் பாலியல் தேவைகள் மறுக்கப்படுகின்றது. இது ஒருதாரமணத்தின் சிதைவை உள்ளூராகவே வேகப்படுத்துகின்றது. சில சமுதாயத்தில் குடும்பப் புகழை எடுத்துக் காட்ட ஆணின் பலதாரமணத்தைப் புகழும் வழக்கும் இருக்கின்றது. இது நிலப்பிரபுத்துவத் தனிச் சொத்துரிமை அமைப்பின் வீங்கிப் போன அதிகாரத்தைப் பறைசாற்றும் ஆணாதிக்கத்தின் கெக்கலிப்பைப் புகழும் பண்பாடாகின்றது. இது மறு தளத்தில் பெண் மீது கௌரவமாக ஏற்றுப் புகழத் திணிக்கின்றது. இதற்கு மாற்றாக அடிமட்ட உழைக்கும் பெண்கள் மற்றும் கீழ்ச் சாதிப் பெண்கள், சொந்தக் கணவனின் கொடுமையைச் சொல்லி ஒப்பாரியில் தூற்றுவது நிகழ்கின்றது.





"கல்லுமேலே கல்லடுக்கிக்
கல்லுமேலே நின்னழுதா
எங்கப்பன் ஊட்டுக்
கரும்புத்தோட்டம் போய்ப்பாயும்
ஆணாகப்பிறந்திருந்தா
அம்பெடுப்பேன் குண்டெடுப்பென்
பெண்ணாகப் பிறந்தகுறை - தான்
யாரிடம் போயழுவேன்"[36]

— என்று தனது கடின உழைப்பு மற்றும் கணவனின் கொடுமையைச் சொல்லி, ஆணாகப் பிறந்திருந்தால் கணவனைக் கொன்றிருப்பேன் என்று கூறுமளவுக்குப் பெண்ணின் உழைப்பாற்றல் பெண்ணுக்குத் தைரியத்தைக் கொடுக்கின்றது. **உழைப்பு பெண்ணுக்கு வழங்கிய எதிர்க்கும் ஆற்றல் அதிகாரம் இன்மையால் சோர்ந்து போகின்றது.** பெண்ணாக இருப்பதால் அம்பெடுக்கவோ, குண்டு எடுக்கவோ முடியவில்லை என்பது தான் அதன் உள்ளடக்கம். அதிகாரம் ஆணிடம் இருப்பதை நாட்டுப்புற இலக்கியத்தைத் தாண்டி வேறு எந்த இலக்கியமும் தெளிவாகக் கொண்டு வந்துவிடவில்லை. கொடுமையைச் சந்திக்கும் நாட்டுப்புறப் பெண், தனது உழைப்பு ஆற்றலால் அதை எதிர்த்து நிற்கின்றாள். அதை முடிவுகட்ட தன்னிடம் அதிகாரம் இல்லை என்பதைக் கூறுவதன் மூலம், முதலாளித்துவப் பெண்ணியல்வாதிகளின் புரட்டுக்களை, தன்னியல்பான நடைமுறை சார்ந்து அனுபவ ரீதியாக நாட்டுப்புற ஒப்பாரி அம்பலப்படுத்துகின்றது.

**உழைப்பு, அதிகாரம் இரண்டும் இன்றி ஆணாதிக்கத்தை ஒழிக்கமுடியாது** என்பதை ஒப்பாரி வெளிப்படுத்தும் போது, இந்த இயற்கையான உள்ளுணர்வுடன் பாட்டாளி வர்க்கம் ஒன்றி நிற்பதன் அடிப்படைதான், மார்க்சியத்தின் நீடித்த வெற்றியாகும். சமுதாயத்தின் உள்ளடக்கங்களைத் தனது சொந்தச் சோக வாழ்வின் ஊடாக அனுபவரீதியாகத் தன்னியல்பாக வெளிப்படுத்தும் நாட்டுப்புறப்பாடல்களில், நடைமுறைகள் சரியான முறையில் உட்கிரகிப்பதின் மூலம், அதை அரசியல்மயமாக்குவதன் மூலம் மக்கள் ஆயுதபாணியாக்குவது இயல்பான இயற்கையாக அமையும். தொடர்ந்து பெண்ணின் ஒப்பாரிப் பாடல்களைப் பார்ப்போம்.

"ஆரணம் மைதானம்
அகலக்கரை முந்தானை
அண்ணனில்லாத் தங்கைக்கு
ஆடிவந்தா என்னாகும்"[36]

— என்று அண்ணன் இறக்கின்ற போது தனக்கு அண்ணன் செய்த உதவிகளை எண்ணி, அதை இனி யார் செய்யப் போகின்றனர்? என்பதைச் சொல்லிப் புலம்புகின்றாள். ஆணாதிக்க அமைப்பில் பெண் மீது திணித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீதனக் கொடுமையில், அண்ணன் தனக்காகக் கடினமாக உழைத்து வாழ்ந்ததைச் சொல்லி தங்கை புலம்பும் போது, பெண்ணின் மனிதாபிமானமான கண்ணோட்டம் ஆணாதிக்க அமைப்புக்கு எதிரானதாக வெடித்துக் கிளம்புகின்றது. பெண் சொந்தச் சகோதரனை இழக்கின்ற போது, ஆணாதிக்க அமைப்பினால் ஏற்படும் பல்வேறு துயரங்களைச் சொல்லிப் புலம்பும் எதார்த்தத்தைப் பெண், ஒப்பாரி மூலம் பிரதிபலிக்கின்றாள்.

"நான் எட்டுரூபா செப்புக்குடம்
எல்லையிலே வெள்ளிக்குடம் - இன்னைக்கு
எழுதுகிற தம்பி இருந்தா - ஒரு
எதிராளியத் தேடமாட்டேன்
ஏங்கி அழுவமாட்டேன்
நான் பத்துரூபா செப்புக்குடம்
பாதையிலே வெள்ளிக்குடம்
படிக்கிற தம்பியிருந்தா - ஒரு
பங்காளியத் தேடமாட்டேன் - இன்னைக்கு
படிக்கிற தம்பி கண்மறைய - ஒரு
பங்காளியை தேடுறம்மா - இந்த
பாவிகுறை தீரவம்மா"[36]

ஒரு பெண் ஆணாதிக்கச் சமுதாயப் பாதுகாப்பைப் பெற்று வாழ வேண்டியவள் என்று ஆணாதிக்க அமைப்பு பெண்ணுக்குக் கூறிக் கட்டுப்படுத்தும் போது, அங்கு பெண் சுதந்திரமற்ற அடிமையாக இருக்கின்றாள் என்பது தெள்ளத் தெளிவானது. மறுதளத்தில் ஆணாதிக்க அமைப்பின் ஆணாதிக்கக் கொடூரங்களை எதிர் கொண்டு, பெண் ஆணின் உதவி கோருவது என்ற இரு எதிர் நிலைக் கண்ணோட்டம் நீடிக்கின்றது. இரண்டும் பெண்ணிடம் இருந்தே எதிர்ப்பும், ஆதரவும் எழுகின்றது. முதலாளித்துவப் பெண்ணியம் பெண்ணின் பாதுகாப்பை இந்த ஆணாதிக்க அமைப்பில் ஆண் சார்ந்து நிற்பதை, கோருவதைக் கொச்சைப்படுத்துகின்றது. ஆணாதிக்க அமைப்பில் வாழ்ந்தபடி, பெண் பாதுகாப்பை வேறிடத்தில் பெற்றுவிடமுடியாது.

ஆணாதிக்க அமைப்பில் பெண்ணின் பாலியலைச் சூறையாடுவதும், கொடுமைப்படுத்துவதும் இயல்பான எதார்த்தமாக உள்ளது. இந்த நிலையில் பெண்ணின் பாதுகாப்பு பெண் தனது இரத்த உறவினூடாக நாடுவது தவிர்க்க முடியாத நிகழ்வாக உள்ளது. இதைக் கொச்சைப்படுத்துவது பெண்ணியமல்ல. ஆனால் பெண்ணின் பாதுகாப்பு ஆணுக்கு உட்பட்டது என்று இருக்கும் ஆணாதிக்க அடிமைத்தனத்தை இதில் இருந்து வேறுபடுத்தி பார்ப்பது அவசியமாகும். மேல் உள்ள ஒப்பாரியில் ஒரு பெண் தனது பாதுகாப்பில் தனது சகோதரனின் பங்கை மிகவும் துல்லியமாகக் கொண்டு வருகின்றாள். தம்பி இறக்கின்ற போது இந்த ஆணாதிக்க அமைப்பில், தான் விரும்பாத ஓர் எதிராளியின் தயவைச் சார்ந்து பங்காளியாகி வாழ வேண்டிய துயரத்தைச்





சொல்லி புலம்பும் போது, ஆணாதிக்க அமைப்பில் பெண்ணின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்குகின்றாள். இங்கு தான் பெண்ணின் கற்புரிமை ஆணாதிக்கக் கற்பியலில் இருந்து வேறுபடுகின்றது. இவை ஆணாதிக்கச் சமுதாயத்தின் விளைவாக இருக்கின்றதால், அந்தச் சமுதாயத்தின் நீடிப்புவரை இவையிரண்டும் அக்கம்பக்கமாக எல்லாத்துறையிலும் நீடிக்கின்றது.

இதை மார்க்சியம் மிகவும் துல்லியமாக வேறு பிரித்தறிகின்றது. ஆனால் மற்ற பெண்ணியக் கோட்பாடுகள் பெண் சார்ந்து இதை வேறு பிரிப்பதை மறுத்து, ஆணாதிக்கம் சார்ந்து திட்டவட்டமாக உலகமயமாதலின் பண்புக்கு இசைவாக இருக்கின்றனர். **ஆணாதிக்க விளைவுகளை எதிர்த்து பாதுகாப்பைக் கோரும் பெண்ணையும், ஆணாதிக்க விளைவுகளைத் தனதாக்கி அதை உரிமையாகக் கோரும் பெண்ணையும் வேறு பிரித்தறியாத வரை பெண்ணியத்தின் ஆணாதிக்க இயல்புகளையும் வேறு பிரித்தறிய முடியாது.** நாட்டுப்புறப் பெண்ணின் பாடல்கள், ஒப்பாரிகள் இந்த இரண்டு கூறுகளையும் நடைமுறை சார்ந்து, துல்லியமாக வேறுபட்ட வகையில் அணுகி வெளிப்படுத்துகின்றது.

கணவனின் தாய் இறக்கின்ற போது, அதாவது மாமியார் இறக்கின்ற போது பெண் தான் அனுபவித்தத் துன்பத்தைத் தனது வசையுடன் கூடிய கேலியும் நையாண்டியுமாகத் தனது ஒப்பாரியில் வெளிப்படுத்துகின்றாள். அதைக் கீழ்க்கண்ட பாடல் நிறுவுகின்றது.

"உச்சிக்கே எண்ணெய் அறியேன்
உளுந்துவடை தானறியேன்
ஊரார் சிரிப்பாரென்று
ஒப்புக்கு அழுகின்றேன்."[36]

"என்னத்தை பொணத்தை
அப்பாகூடப்பிறந்த
கப்பல் அரிசி அத்தை
நீ செத்தால் நிசமல்லே
தெருக்கோடி கடந்தால்தானே நிசமாகும்
அத்தை செத்தாள் பொத்தையிலே - நான்
அடித்து விழுந்தேன் மெத்தையிலே"[36]

ஆணாதிக்க அமைப்பில் ஆணுக்கு அடிமைப்பட்டுப் பெண் சொத்துரிமையிழந்து நசுங்கி வாழும் நிலையில், கணவனின் தாய் மூலம் மேலும் துன்பமுற்று நசிந்து கிடக்கும் பெண், மாமியாரின் இறப்பை இப்படித்தான் குதூகலித்து வரவேற்பது நிகழ்கின்றது. மாமியாரின் அதிகாரத்தில் தலைக்கு எண்ணெய் வைக்க முடியாது, உழுந்து வடை நாளாந்த உணவில் இருந்தும் கூட கிடைக்காது. அந்த நிலையில் மாமியார் இறந்தது என்பது நடிப்பாகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட இருக்கும் என்பதைச் சொல்லித்தான் புலம்புகின்றாள். புலம்பும் போது ஊரார் சிரிப்பார் என்ற காரணத்தால் ஒப்புக்கு மாரடிக்கின்றாள். ஆனால் அதையும் சொல்லி அழாவிட்டால் உண்மையாகிப் போய்விடுமோ என்று அஞ்சிவிடுகின்றாள். மாமியாரின் மீதான குற்றச்சாட்டாக, அதன் வெளிப்பாடாக இருந்த போதும், மாமியார் ஆணாதிக்க அமைப்பின் தெள்ளத் தெளிவான பிரதிநிதிதான்.

**மாமியார் தனிச்சொத்துரிமை ஆணாதிக்க அமைப்பினால் உருவாக்கப்பட்ட ஒரு பொம்மைப் பாத்திரம்தான்** நடைமுறை ரீதியாக எதார்த்தவாதியாக இருக்கும் பெண் நேரடியாக மாமியாரின் இறப்பின் போது, நேரடியாகக் கொடுமை ஒழிவதைக் கண்டு பூரித்துப் போகின்றாள். ஆனால் மாமியார் இறந்தது கண்டு பூரித்த அதே பெண் மீளவும் தனது மகனின் மனைவிக்கு மாமியாராக வருவது என்பது ஆணாதிக்க அமைப்பின் விளைவாகின்றது. ஆணைச் சார்ந்து பெண் இருப்பதால் பொருளாதார ரீதியாக மாமியார், மருமகள் சொத்துரிமை சார்ந்து போட்டியிடுவதும், அடக்குவதும் தனிச்சொத்துரிமையின் உள்ளடக்கமாகின்றது. இந்தவகையில் பெண்ணின் மீதான பல்வேறு கொடுமைக்கு ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை அமைப்பு காரணமாகும். பெண் தனது பலத்தைப் பிரகடனம் செய்யும் விதம் உயர்ந்த சமூகக் கண்ணோட்டம் கொண்டவை.

“நாவிலொரு சொல்லு வந்தா
நாலாயிரம் பெண் வருவோம்”[41]

பெண் தனது பலத்தை, போராடும் ஆற்றலை எச்சரிக்கையாக விடும்போது அதன் பலம், சமூகத்தின் எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்தமுடியாத தன்மை கொண்டவை. எந்த நாகரிகப் பெண்ணியமும் இயற்கையான எதார்த்தப் பெண்ணியத்தின் வீச்சை அதன் உள்ளடக்கத்தைப் பெறமுடியாதவகையில், பெண்ணின் நாட்டுப்புற ஒப்பாரிப் பாடல்கள் மற்றும் நாட்டுப்புற இலக்கியம் பொருள் நிறைந்தவை. இவை அரசியல் ரீதியாக ஒழுங்கமைப்பதைப் பாட்டாளி வர்க்கம் செய்யும் போது, இயற்கை சார்ந்த அந்தப் பெண்ணியமும், **இயற்கை சார்ந்த பாட்டாளி வர்க்கமும் ஒன்றிணைந்து மாபெரும் சக்தியாக மாறுவது தவிர்க்க முடியாது.** இந்த வகையில் நாம் போராடும் போது நாட்டுப்புறவியலில் உள்ள பெண்களின் பல்வேறு பாடல்களை இனம் கண்டு எடுத்து, அவைகளை அரசியல் மயமாக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.





## 14. கிழக்கு இலங்கை நாட்டுப்புறப் பாடல்களில் ஆணாதிக்கம்

சரிநிகர் இலக்கம் 149-இல், எஸ். சந்திரசேகரம் எழுதிய “கிராமியக் கவிகளும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும்” என்ற கட்டுரையில் இருந்து பாடல் வரிகளை எடுத்து இந்தக் கட்டுரையை எழுத முனைகின்றேன்.

நாட்டுப்புறப் பாடல்கள் ஒருபுறத்தில் பெண்ணின் அவலத்தைப் பிரதிபலிக்கும் போது, மறுதளத்தில் ஆணாதிக்க வக்கிரம் வெளிப்படுவது ஆணாதிக்கச் சமூக எதார்த்தமாக இருக்கின்றது. கிழக்கிலங்கையில் நடைமுறையில் இருக்கும் பல்வேறு நாட்டுப்புறப் பாடல் வகைகளில், கிராமியக் கவிகள் பெண் பற்றிய பலவிதமான தகவல்களைத் தருகின்றது. அதில் இருந்து பெண்ணை ஆராய்வோம்.

“குத்துமுலக் காறியெண்டு
கொடுத்துவச்சேன்நாலுபணம்
சாஞ்சமுலக்காறியெண்டா
தந்திடுகா என்பணத்தை”[11]

இங்கு பெண் குழந்தைக்குப் பால் கொடுக்கும் இயற்கை உறுப்பு ஆணாதிக்கப் பாலியல் கண்ணோட்டத்தில் கொச்சைப்படுத்தியே ஆணினால் வெளிப்படுத்தப்படுகின்றது. ஆணின் கனவு பாலியல் பண்பாட்டில் பெண்ணை நம்பவைக்கும் போக்கில், அவளின் இளமை மீது, கன்னியின் முலை மீது கொடுத்த பணத்தை மீளப் பெறும் கண்ணோட்டத்தில், ஆணின் வக்கிரமான பாலியல் நோக்கம் முலையின் சோர்வினூடாக முடிந்தவுடன் கேலிசெய்து வெளிப்படுகின்றது. கன்னியின் மார்பின் மீதான பாலியல் தேவை முடிந்ததைப் பறைசாற்றி, சாஞ்ச மார்பின் மீது அவதூறு பொழியப்படுகின்றது. இதனூடாக அவளை வேசியாக, கற்பிழந்தவளாக, பாலியல் ரீதியில் அதற்குத் தகுதியற்றவள் என்பதையே, ஆணாதிக்கப் பாலியல் உறுப்பு கண்ணோட்டத்தில் இருந்து இது வெளிப்படுகின்றது. இதற்குப் பெண் பதிலளிக்கத் தவறவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நீயொரு வல்லக்காரனெண்டு
வாங்கிவச்சேன்
உன்பணத்தை!
கோழித் தத்துவக்காரா
கொண்டுபோடா உன்பணத்தை"[11]

— என்ற பாடல் வரிகள் ஊடாக ஆணின் ஆணாதிக்க வீறாப்பைப் பெண் கேலி செய்கின்றாள். ஆணின் ஆண்மையைச் சிறுமைபடுத்தி அலட்சியப்படுத்துகின்றாள். ஆணாதிக்கப் பொருட்களைத் தூக்கியெறிந்து தனது சுதந்திரமான நேர்மையைப் பறைசாற்றுகின்றாள். பெண் மார்பின் மீதான கண்ணோட்டத்தில் இருந்து மாறுகின்ற ஆணாதிக்க உணர்வைச் சார்ந்து, பெண் அவன் உணர்வின் ஆண்மையைக் கிண்டல் செய்து சவால்விடுகின்றாள்.

ஆண்கள் பெண்கள் பற்றிய ஆணாதிக்கக் கண்ணோட்ட வருணிப்புகள் வக்கிரத்தில் ஊற்று எடுப்பதை நாட்டுப்புறப் பாடல்கள் காட்டுகின்றன. அதைப் பார்ப்போம்.

"தேமல் முலையும் தேனினிக்கும்
வெவ்வுதடும்
வாழை உடலும் என்னை
வாட்டுதடி நித்திரையில்"[11]

"இஞ்சி மணங்கா புள்ள
இலுமிச்சம் வேர் மணங்கா
மஞ்சள் மணங்காபுள்ள
பால்மணங்கா உன் சோடிமுல"[11]

"கொச்சில் பழத்தைக்
குறுக்காலை வெட்டினாற் போல
பச்சவடச் சேலை உண்டபால்
முலைக்க ஏற்றதுதான்."[11]

"கண்டு வம்பில் பூநிறத்தாள்
கவரிபுள்ள மாங்குயிலாள்
அரும்பு முகைப்பூ முலையாள்
மச்சி ஆசனத்தில் நித்திரையோ"[11]

— என்ற பாடல் வரிகள், பெண்ணின் மார்பை ஆணாதிக்கச் சமுதாயக் கண்ணோட்டத்தில் ஏற்படுகின்ற உணர்வில் வருணிக்கப்படுகின்றது. சாதாரணமாகப் பல்வேறு நடைமுறை சார்ந்த வாழ்க்கையில் பெண்களை இதுபோன்ற அடைமொழி மூலம் அடையாளப்படுத்துவதின் ஊடாக, பெண்ணைச் சிறுமைப்படுத்தி உறுப்பின் ஊடாகவே தமது உணர்ச்சிகளை ஆண் வெளிப்படுத்துகின்றான். இங்கு ஆண் பெண்ணைக் காதலித்தாலும் சரி, தனது





அன்பை வெளிப்படுத்தினாலும் சரி, பெண்ணின் உறுப்பு சார்ந்தே முதன்மைப்படுகின்றது. இது பாலியல் வக்கிரத்தின் உச்சமாகும். இங்கு ஆணின் உணர்ச்சிகள் பெண்ணின் உறுப்பு சார்ந்து பிரதிபலிக்கும் போது, அதன் இயற்கைச் சிதைவுகளை ஆண் தாங்கி கொள்ள முடியாது போகின்றான். இதனால் பெண் மிகவும் கீழான நிலைக்கு இயற்கையின் மாற்றம் சார்ந்து உதைக்கப்படுவது எதார்த்தமாக உள்ளது. இதில் இருந்தே பெண்ணின் மார்பை முதன்மைபடுத்திய விளம்பரங்கள், அழகுபடுத்தல்கள், கவர்ச்சி காட்டல்கள், ஆணாதிக்கப் பண்பாட்டுக் கலாச்சாரம் சார்ந்து ஆண் பெண்ணின் வெளிப்பாடாகின்றது. இது போல் பெண்ணின் தொடை சார்ந்து வெளிப்படும் ஆணாதிக்க உணர்ச்சிகளை கீழே வரும் பாடலில் இருந்து பார்ப்போம்.

"ஆடு துடையிலே அன்பான
மேனியிலே, கட்டு
வருத்தமொன்று என்ர
கண்மணிக்குச் சொல்லிடுங்க"[11]

"அரிஞ்சரிஞ்சி நிலவெறிக்க
அவளிருந்து பாயிழைக்க
துண்டுடுத்துத் துடைதெரிய
துடரமனம் தூண்டுதல்லா"[11]

"இடுப்பு சிறுத்தபொட்ட இரு
துடையும் நொந்து போட்ட
கொக்கிச்சான் பொட்ட உனக்கு
கோபமென்ன என்னோட"[11]

— என்று பெண்களின் உறுப்பு சார்ந்து வெளிப்படுத்தும் பாலியல் வேட்கையை அடிப்படையாகக் கொண்டே, பெண்ணின் ஒழுக்கம் கூட மறுதளத்தில் வரையறுக்கப்படுகின்றது. ஒரு பெண்ணைக் கற்பழிக்கின்ற போது பெண்ணின் நடத்தை, போட்டிருக்கும் உடுப்பு, இருந்து பழகியமுறை, உறுப்புகளின் நிலை என்ற வழியில் தான் ஆணாதிக்க நீதிமன்றங்கள் பெண், ஆணாதிக்க ஒழுக்கத்தை மீறியதாகக் காட்டிக் குற்றவாளியாக்குகின்றது. பெண் பாலியலைத் தூண்டுவதாகவும், அதற்கான நிலையைப் பெண்ணின் உறுப்புகள், நடத்தைகள் ஊக்குவித்ததாகப் புகழ்பெற்ற ஆணாதிக்கத் தீர்ப்புகள் எதார்த்தமாக எம்முன் கிடக்கின்றது.

இங்கு பெண்ணைச் சொந்தப் புருஷன் அணுகினாலும், காதலன் அணுகினாலும், இந்த இடைநீக்கல் ஊடாகவே அணுகுவதன் உள்ளடக்கம்தான், ஆணாதிக்கப் பாலியல் வக்கிரமாகும். இதில் இருந்துதான் இன்றைய சினிமா உலகில், பெண் குறித்த பாடல்கள் பகிடிகள் எல்லாம் வக்கரித்தே பிறப்பதைக் காண்கின்றோம். இந்துமதம் முதல் இஸ்லாம் மதம் வரை பெண்ணை மூடி வளர்க்கும் முறையும் சரி, மூடிப் போடும் உடுப்பும் சரி, வீட்டில் அடைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வைத்திருக்கும் முறையும் சரி இவையெல்லாம் இந்த ஆணாதிக்க வக்கிரத்தின் மறுபிரதிபலிப்புதான். இன்றைய திரைப்பட உலகம் வெளிப்படுத்தும் பாடல்கள், பகிடிகள், காட்சிகள் எல்லாம், இந்த ஆணாதிக்க வக்கிரத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆணாதிக்கச் சமூகத்துக்குத் தீனியிடுகின்றது. இந்த ஆணாதிக்க வக்கிரத்தில் இருந்து பெண் தனது பாலியல் தேவையை வெளிப்படுத்தும் முறையைப் பார்ப்போம்.

"வாழைக் குலையிருக்க வாள்
மயிலாள் நானிருக்க, சேனையிலே
நெய்யிருக்கா நாம் சேர்வது
எக்காலம்"[11]

— என்று பெண் பாடும்போது ஆணாதிக்க வக்கிரத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதில் இருந்து இந்தப் பாலியல் தேவை வெளிப்படுத்தப்படுகின்றது. பெண் தன்னை அழகுபடுத்தும் போது, ஆணாதிக்க உலகியல் கண்ணோட்டத்தில், அதன் தேவையின் அடிப்படையில் தன்னை வெளிப்படுத்துவதைக் காணமுடியும். பெண் இந்த ஆணாதிக்கச் சமூகத்தில் வாழும் போது, அதன் வெளிப்பாடுகளும், உணர்ச்சிகளும் அடிப்படையான ஆணாதிக்க உள்ளடக்கமாகும். பெண் ஆணாதிக்கச் சமூகத்தின் ஒரு பிரதிநிதியே. சமூக இயங்கியலின் தேவைகளை, உணர்ச்சிகளை ஆணாதிக்கச் சமூகப் பண்பாட்டுக் கலாச்சார எல்லைக்குள் பூர்த்தி செய்தபடிதான், பெண்ணினால் வாழமுடிகின்றது, தீர்க்கமுடியும் என்பதையே இந்தப் பாடல் காட்டுகின்றது. விருப்பம் எங்கிருந்து வெளிப்படுகின்றது எனப் பார்ப்போம்.

"ஒண்டுக்கும் இல்ல கண்டே
உன்னை விரும்புவது
தங்கம் பதிச்ச தாள்விளக்கக்
காணவெண்டு"[11]

ஏன் விரும்புவது? என்ற கேள்விக்கு உடல் உறுப்பு சார்ந்து பிரதிபலிப்பதையே இது காட்டுகின்றது. உறுப்பு சார்ந்த விருப்பம் ஆணாதிக்கச் சமூகத்தின் ஓர் ஊடகமாகவே உள்ளது. ஆதி சமுதாயத்தில் உறுப்பு சார்ந்த விருப்பம் நிகழ்ந்ததில்லை. உறுப்பு சார்ந்த விருப்பம் ஆணாதிக்க அமைப்பின் தனிச்சொத்துரிமை வடிவில் திணிக்கப்பட்டது. பெண் மீதான திருப்தியுறாத ஆண், வக்கிரமான மொழியில் திருப்தியடைகின்றான். அதைப் பார்ப்போம்.

"ஒப்பாரக் கள்ளி உனக்களித்து
காசிபணம் - தோப்பாரு வெட்டயில
ஒரு தோப்பு வேண்டிப்
போட்டுடுவன்"

— என்று பெண் மீதான பாலியல் வக்கிரமொழியூடாக, ஆண் தனது உடல் ரீதியான பாலியல் திருப்தியின்மையை மொழியியல் ஊடாக





அடைகின்றான். இங்கு பெண் கொச்சைப்படுத்தப்படுகின்றாள். இதற்குப் பெண் எதிர்த்து பதிலளிப்பதைப் பார்ப்போம்.

"மச்சானே பிச்சைக்கண்ணா
மதிரோட பூத்த கண்ணா-
சுள்ளி பொறுக்கி வாடா உன் சூத்தில
குத்துறன்"

— என்று பெண் கூறும் போது ஆணின் வக்கிரத்தைப் பெண் கேலிசெய்கின்றாள். பொதுவாகக் கள்ள உறவுகளில் மிகச் சுதந்திரமாக வெளிப்படுத்தும் இந்தப் பாடல் வரிகள் அதிகமான பாலியல் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றது. அவற்றை அப்பட்டமாக வக்கரித்து பேசவும், கேலி செய்யவும் கூடிய சுதந்திரம், ஆணாதிக்க அமைப்பின் சொந்த முகத்தைத் தோலுரிக்கின்றது. ஆணாதிக்க அமைப்பில் கிடைக்கும் இடைநீக்கல்களிலான பாலியல் சுதந்திரம், கள்ள உறவுகளில் திருப்தியுறும் போது, அங்கு ஆணாதிக்க அமைப்பின் உச்சக்கட்ட வக்கிரமான பாலியல் அப்பட்டமான மொழியாகின்றது. இதைத்தான் மேலுள்ள பாடல் வரிகள் எமக்குக் காட்டுகின்றன. பெண் மீதான பாலியல் நடத்தையில் ஆணின் உறவுமுறை மிக மோசமான மிருகத்தன்மை கொண்டவை. அதைப் பெண் தனது பாடல் மூலம் வெளிப்படுத்தத் தயங்கவில்லை.

"கல்லாத்து ஓடையிலேயே கறுவல்
என்னும் ஒருமுதள
மல்லாத்திப்போட்டு உண்ட
மணிக்குடலத் தின்னுதுகா"[11]

— என்று ஆணின் உறவு முதலைக்கு ஒப்பாகக் கூறிப் பெண் புலம்புகின்றாள். இங்கு விரும்பிய உறவிலும் கூட பெண் மீதான உடல் வலிமையை மீறிய பலாத்காரம் நிகழ்வதையே காட்டுகின்றது. பெண் விரும்புவதைத் தாண்டி ஆணின் மிருகப் பசி பெண்ணைச் சூறையாடும் வன்முறையைக் காட்டுகின்றது. ஆணாதிக்க வக்கிரமான உணர்வுகள், உணர்ச்சிகள் நடைமுறை ரீதியான, பயன்பாட்டில் பெண்ணைப் பிழிந்து எடுப்பதை நிபந்தனையாக்கின்றது. **அதுதான் ஆணின் திருப்தியாகும். இதுதான் பெண்ணின் வேதனையாகும்.** இந்த வேதனையும், திருப்தியும் பெண் மீதான வன்முறையாகின்றது. இது பாலியல் ரீதியாகவும், உடல்ரீதியாகவும் அமைகின்றது. ஒரு முதலையின் கொடூரமான கொல்லுதலை ஒத்த, ஆணின் நடத்தையையே பெண் சொல்லிப் புலம்புகின்றாள். இங்கு அவள் மீதான கற்பழிப்பாக இருந்தாலும் சரி, இல்லாது இருந்தாலும் சரி, இதன் விளைவு பொதுத் தன்மையானது. ஆண்கள் பெண்களை வீட்டில் அடக்கி ஆள்வதை எப்படி வெளிப்படுத்துகின்றனர்? எனப் பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"கடப்பைக் கடந்து காலெடுத்து
வச்சயெண்டால்
இடுப்பை ஒடிச்சு வேலி
இலுப்பையின் கீழ்
போட்டுடுவேன்"[11]

"வாசல் கண்டு வழிகண்டு
போனியெண்டால் வேசைமகளே
உன்னை வெட்டிடுவேன் இரண்டு
துண்டாய்"[11]

— என்று ஆணின் அதிகாரம் மனைவி, மகள், தாய் என்ற எல்லைகடந்த வன்முறையாக, மிரட்டலாக வெளிப்படும் வடிவமே இவை. ஆணாதிக்கக் கற்புக் கோட்பாட்டில் பெண்கள் உரிமையற்ற ஜடமாக, ஆணின் அடிமையாக வாழும் வாழ்க்கை ஆணின் அதிகாரத்துக்கு உட்பட்டதே. வீட்டுக்கு வெளியில் பெண் செல்வது பாலியல் ரீதியாகப் புணரத்தான் என்ற அர்த்தத்தில், பெண்ணின் கற்புரிமையை ஆணாதிக்கம் வேசைத்தனமாக்குகின்றது. ஆணாதிக்கப் பார்வை சார்ந்த மொழி வன்முறைகள், இந்தச் சமுதாயத்தின் ஜனநாயகமாக இருப்பதன் வெளிப்பாடுதான் இவை. இது மீறப்படமுடியாத, கேள்விக்குட்பட முடியாத, மறுப்புக் கூறமுடியாத ஆணாதிக்க ஒழுக்கமாகும். பெண்களைக் காணும் இடமெல்லாம் பெண்ணின் பெண் உறுப்புகள் சார்ந்து, ஆண்கள் மொழியியல் ரீதியாகக் கொச்சைப்படுத்துவதும், வக்கிரமாகக் கூறி இரசிப்பதும் என எல்லையற்ற மொழியியல் வன்முறையைக் கையாள்வது ஆணாதிக்க எதார்த்தமாக உள்ளது. இதை எப்படி ஆண்கள் காண்கின்றனர்? எனப் பார்ப்போம்.

"மார்பளவு தண்ணியிலே மன்னி
மன்னிப் போற பொண்ணே
மார்பில் இருக்கும் மாதுளங்காய்
என்னவிலை?"[11]

— என்று பெண் குழந்தைக்குப் பால் கொடுக்கின்ற இயற்கை உறுப்புகளை விலை பேசுகின்ற, கோருகின்ற பண்பாடு, எல்லாவற்றையும் மூலதனமாக்கிப் பார்க்கும் ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமையின் விளைவாகும். பெண்களின் உறுப்பினூடாகப் பெண்ணை அணுகுவதும், உறுப்பின் இயற்கை தேர்வை வக்கரித்து அணுகுவதும், அதில் இருந்து புதிய விளைவுகளை ஜனநாயகமாக்குவதும் என தனிச்சொத்துரிமை பண்பாடு வழிகாட்டுகின்றது. இந்த வக்கரித்த ஆணின் பார்வைக்கு, பெண் அவ்விடத்திலேயே பதிலளிப்பதைப் பார்ப்போம்.

"மாதுளங் காயுமில்லை மருக்காலம்
பிஞ்சுமில்லை
பாலன் பசியாறும் பால்
முலையடா சண்டாளா"[11]





— என்று பெண் எதிர்த்து, தனது உடல் சார்ந்த கற்புரிமையைக் கொச்சைப்படுத்துவதைக் கண்டு, சினம் கொண்டு ஆணாதிக்க வக்கிரத்தை எள்ளி நகையாடுகின்றாள். **ஆணாதிக்கக் கற்புக் கோட்பாட்டில் பெண் உறுப்புகள் ஆணின் பாதுகாப்பு பெற்ற பாலியல் பண்டமே.** அதை இரசிக்க, நுகர துடிக்கும் ஆணாதிக்கச் சமூகத் தன்மையில், பெண்ணின் ஆத்திரம் சார்ந்த எதிர்ப்பு இயல்பான இயற்கையானது.

கிராமப்புறத்தில் பெண்கள் இயல்பாகவே ஆண்கள் முன்னிலையிலேயே, தமது மார்பு மூலம் குழந்தைக்குப் பால் ஊட்டும் தன்மை, எந்த நாகரிகப் பண்பாட்டுத் தளத்திலும் சாத்தியமில்லை. கிராமப்புறத்தில் பெண்ணின் மார்பு ஆணாதிக்கத்தின் வக்கிரமான பாலியல் ஊடகமாக இருப்பதில்லை. நாகரிக உலகில் பெண்ணின் மார்பு பாலியல் ஊடகமாக இருப்பதன் காரணமாக, பெண் மார்பை மூடிப் பாதுகாக்கும் தன்மை ஏற்படுகின்றது. அதாவது பெண் தனது கற்புரிமையைப் பாதுகாக்க (இணைமணத்தில்) ஆணைத் தெரிவு செய்தது போல், பெண் தனது மார்பை மூடி பாதுகாக்க வேண்டிய அளவுக்கு, ஆணாதிக்க நாகரிகம் வக்கரித்துப் போய் உள்ளது.

இங்கு 'சண்டாளா' என்ற வார்த்தை சாதிய ரீதியாகக் கையாளப்படும் இழிவுச் சொல்லாகும். சாதாரண மக்கள் மொழியியலில் இதைச் சொல்லுகின்ற போது, சாதிப் பண்பாட்டில் வெளிப்படுகின்றது என்ற விமர்சனம் தெளிவானது. இது போன்று பெண்கள் குறித்து, தூற்றப் பயன்படும் ஆணாதிக்கத்தின் கோர முகத்தைச் சுட்டி நிற்கின்றது. மிகக் கேவலமான சொற்பிரயோகங்களால் எதிரியான ஆண்களைப் பெண்ணின் நிலைக்குத் தாழ்த்தி, பெண்ணுக்கு ஒப்ப ஆணை இழிவுபடுத்தும் போது, அதாவது பெண்ணையும் முரண்பட்ட ஆணையும் ஒரே நிலைக்குக் கொண்டுவந்து இழிவுபடுத்துவது, ஆணாதிக்கத்தின் உச்சக் கொப்பழிப்பாக இருக்கின்றது. பெண்களை ஆணாதிக்கம் கொண்டு தாக்கும் போதும், திட்டும் போதும், இந்த தூற்றல் தான் அதன் பொது மொழியாகின்றது. இந்த மொழிப் பிரயோகம் ஆணாதிக்கச் சமூக வடிவத்தில் இருந்தே பயன்படுத்துகின்றனர். மொழியியல் ரீதியாகப் பிற்போக்கு ஆணாதிக்கத்தைப் பிரதிபலிக்கின்றது. ஆனால் கிழக்கிலங்கை நாட்டுப்புறப் பாடலில் வரும் சாதியச் சொல் ஆணாதிக்கத்தை இழிவாட, பெண் பயன்படுத்தும் போது, சாதிய அடிப்படையில் பிற்போக்காகவும், ஆணாதிக்க அடிப்படையில் முற்போக்காகவும் உள்ளது.

"போட்டா வரம்பாலே புறாமேஞ்சி
போறதுபோல்
நாட்டாருக்கெல்லாம்
நடைவரம்போ என்சடலம்"[11]

— என்று பெண் மீதான ஆண்களின் காமப் பயன்பாட்டை, பலாத்காரத்தைச் சொல்லி அதைத் தனது ஆற்றாமையில் எதிர்த்துத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தூற்றுகின்றாள். மக்கள் உற்பத்தியில் ஈடுபடும் போது புறாக்கள், அதைத் தன் விருப்பப்படி திண்டு தீர்ப்பதை எப்படி உழைப்பாளியால் சகித்துக் கொள்ள முடியாதோ அதையொத்து, தனது உடலை மேயும் ஆணாதிக்க அற்ப ஆண்களின் கொடூரத்தை, வெளிப்படுத்தி எதிர்ப்பதன் மூலம் ஆறுதல் அடைகின்றாள். தனது உடலை இறந்த உடலுக்குச் சமமாக உவமைப்படுத்தும் பெண், ஆணாதிக்கம் எப்படி பெண்களை உணர்ச்சியற்ற சதைப் பிண்டங்களாகப் பாலியலில் பயன்படுத்துகின்றது என்பதைத் தோலுரித்துக் காட்டுகின்றாள். பொருளாதார ரீதியாகவோ அல்லது வேறு காரணத்தாலோ, பெண்கள் ஊரில் உள்ள ஆண்களின் வைப்பாட்டியாகச் சீரழிக்கப்படுகின்ற ஆணாதிக்கச் சமூக அந்தஸ்த்தில், பெண்ணின் உடல் உயிரற்ற உணர்ச்சியற்ற சடலமாகிவிடுவதை, தனது உள்ளக் குமுறல் ஊடாக வெளிப்படுத்தும் பாடல் ஆணாதிக்கச் சமூகத்தை வேருடன் தோலுரிக்கின்றது. இதை மேலும் பெண்கள் எப்படி கவிபாடுகின்றனர்? என ஆராய்வோம்.

"வண்ணார கல்லோ வடகத்திய
காளைமாடோ
சாராயக் குத்தகையோ மச்சான்
தவறணையோ என் ஊடு"[11]

— என்று பெண் கேட்கின்ற போது, ஆணாதிக்க ஆண்கள் தனது உடல் மீது குத்தகையாக அணுகும் போது அந்தச் சுதந்திரத்தின் மீது தனது எதிர்ப்பை எழுப்புகின்றாள். வண்ணான் தோய்க்கும் கல் பொதுவானது. வடகத்தைக் காளை மாட்டை யாரும் வண்டியில் பூட்டலாம். சாராயத் தவறணையில் யாரும் குடிக்கலாம். அது போல் என் உடலுமா? என்ற அடிப்படையான கேள்வியை, நடைமுறை வாழ்க்கை சார்ந்து எதார்த்தமாகப் பெண் எழுப்பும் போது, அங்கு பெண் தனது கற்புரிமை மீது தனது உரிமையை மீளக் கோருகின்றாள் தன்னைப் பொது விபச்சாரத் தளத்தில் போவோர் வருவோர் சதையாக அணுகிச் சுவைத்துச் செல்லும் போது, பெண் தனது உரிமையை உடல் சார்ந்த சொந்த உணர்ச்சியைத் தக்கவைத்து மீளக் கோருகின்றாள். இந்த நிலைக்கு ஆணாதிக்கச் சமூகம் இட்டுச் சென்ற சமூகக் காரணியை மறைமுகமாகக் கேள்விகேட்டு, தனது உரிமையை முன்வைத்து, ஆணாதிக்கத்தை அதன் ஜனநாயக விரோதத்தைக் கேள்விகேட்டு அதை எதிர்த்து நிற்கின்றாள்.





## 15. உலக ஆணாதிக்கக் கொடூரங்கள், விளைவுகள் - புள்ளிவிபரங்களுடன்

இன்று உலகின் தனிச் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகம் மீதான நம்பிக்கைகள் இந்த அமைப்பின் அச்சாணியாக உள்ளது. இந்த ஜனநாயகம் மிக்க சிலருக்கு, பலர் உழைக்கும் சுரண்டலில் தன்னை நியாயப்படுத்துகின்றது. பெண்கள் இந்த அமைப்பில் போட்டி போடுவதன் மூலம், சலுகை பெறுவதன் மூலம், போராடி வெல்வதன் மூலம், ஆணுக்கு நிகராக விடுதலை பெற முடியும் என்ற கோட்பாடுகள் மீது உலகமயமாதல் முகத்தைப் பொத்தி அடிப்பதைப் பார்ப்போம். 1990-இல், 120 கோடி வறிய மக்கள் 130 கோடி டொலரை மட்டுமே வருவாயாகக் கொண்டுள்ளனர். 1998-இல், 120 கோடி டொலராக குறைந்து வறுமை சமூகமயமாகி அதிகரித்துள்ளது. இந்த வறுமையில் சிக்கியுள்ளோரில் பெரும் பகுதி பெண்கள் ஆவர். இவர்கள் நாள் ஒன்றுக்கு 70 டொலரை உற்பத்தி செய்வதுடன், உலக உற்பத்தியில் 78 சதவீதத்தைப் பூர்த்தி செய்கின்றனர். ஆனால் உலக வருமானத்தில் 6 சதவீதத்தையே பெறுகின்றனர். இதிலும் நேரடியாகப் பெறுவது 3 சதவீதத்தையே. அதாவது ஒரு டொலரைவிட குறைவாகும். (4.2000)[42]

வறுமை உலகமயமாகிச் செல்வம் குவிகின்ற ஜனநாயகத்தில், பெண்கள் தமது செல்வத்தை இழந்து செல்லுகின்ற போது, எப்படி பெண்ணின் விடுதலையை, தனிச்சொத்துரிமையை அழிக்காமல், அதைக் கைப்பற்றாமல் பெறமுடியும்? இங்கு பெண் சொத்தை இழந்துவருவதால், ஆணாதிக்க அடிமைத்தனம் சுரண்டல் வடிவில் மேலும் தீவிரமாகி அதிகரிக்கின்றது.

செல்வத்தைச் சமூகம் கைப்பற்றாதவரை, செல்வம் தனிமனிதர்களை நோக்கி குவியும் போது, ஆணாதிக்கம் மேலும் விகாரமாகப் பெண்கள் மீது பாய்கின்றது. உலகமயமாதல் ஜனநாயகத்தில் 1970-களில், உலகில் செல்வந்தருக்கும், பரம ஏழைக்கும் இடையிலான வித்தியாசம் 30 பேருக்கு ஒன்று என்ற விகிதாசாரத்தில் இருந்தது. 1990-இல், 60 பேருக்கு ஒன்றாகவும், 2000-இல் 74 பேருக்கு ஒன்றாக அதிகரித்துள்ளது என்று பிரிட்டிஸ் பத்திரிக்கையான **த கார்டியன்** பத்திரிக்கைச் செய்தி வெளியிட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்ணின் சொத்திழப்பு அதிகரிக்க, ஆணாதிக்கம் கோரமாவதை மூடி மறைக்க, பெண்ணை நிர்வாணப்படுத்தி அதை விடுதலையாகக் காட்டுவதன் ஊடாக, பெண்ணை விபச்சாரியாக்கும் தன்மையைத்தான் மார்க்சியமல்லாத பெண்ணியங்கள் விடுதலையாகக் காட்டி, தம்மை ஆணாதிக்கத்துக்கு நிர்வாணப்படுத்துகின்றனர். இதையே ஆணாதிக்க ஒழிப்பாகப் பிரகடனம் செய்யவும், எச்சில் ஒழுக விளக்கவும் செய்கின்றனர்.

உலகச் சுகாதார அமைப்பின் அறிக்கைப்படி இன்று வருடம் 76 இலட்சம் குழந்தைகள் பிறந்த முதல் மாதத்திற்குள் இறக்கின்றனர். இதில் 40 சதவீதம் உணவு இன்மையால் இறக்கின்றனர். அதாவது பிறக்கும் 1,000 குழந்தையில் 57 குழந்தைகள் இறக்கின்றன. பிறக்கும் போதும், பிறந்த பின்புமாக ஒரு கோடி குழந்தைகள் இறக்கின்றனர். 50 இலட்சம் குழந்தைகள் வயது குறைந்து வாழத் தொடங்குகின்றனர்[43] 15 இலட்சம் குழந்தைகள் தாய்ப்பால் இன்மையால் வருடா வருடம் இறக்கின்றனர்.[44]

உலகில் சரிபாதியான பெண்கள் நேரடியாக ஆண்களின் அடிமையாக விளங்கிய போதும் உண்மையில் சுரண்டும் அமைப்பின் அடிமைத்தனத்தின் விளைவாகவே இது உள்ளது. இன்று மறைமுக வரிகளைப் பொருட்களின் ஊடாக மூன்றாம் உலக அடிமைகள் செலுத்தும் அதே நேரம் இதன் நேரடி எதிரியாகக் காண்பது சொந்தநாட்டு முதலாளியே. ஆனால் உண்மையான விலையைத் தீர்மானிப்பவன் பின்னால் இருப்பது தெரியாதது போல், **இன்று பெண்களின் பின்னும் ஆணாதிக்கம் உள்ளது.** ஆண்களின் வடிவில் ஆணாதிக்கம் வெளிப்பட்டாலும் இதன் வேர் இந்தச் சுரண்டல் அமைப்பு என்பதை நாம் புரியாத வரை ஆணாதிக்கத்தை ஒழிக்க முடியாது. உலக மொத்த உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கைப் பெண்கள் உற்பத்தி செய்தபோது அவர்கள் உலகச் செல்வத்தில் பெறுவது பத்து சதவீதம் மட்டுமேயாகும்.[45] உலகச் சொத்தில் பெண்கள் வைத்து இருப்பது ஒரு சதவீதம் மட்டுமேயாகும். (இதழ்-1998: 4.4)[46] 1993-இல், ஒரு நாளைக்கு ஒரு டொலர் வீதம் பெற்று வறுமையில் வாடியோர் 130 கோடியாக இருந்தது. 1998-இல் 150 கோடியாக அதிகரித்துள்ளது.[47]

இந்தப் பொருளாதார ஆணாதிக்க அமைப்பில் பெண் சொத்துரிமை பெறுவது எப்படி சாத்தியம்? ஏழைக்குப் பங்கிடவே மறுக்கும் ஆணாதிக்கம், இருப்பதைப் புடுங்கும் ஆணாதிக்கம், பெண்ணின் சொத்துரிமையைப் பறித்து பட்டினியில் தள்ளத்தான் செய்யும். எல்லாப் பூர்சுவா பெண்ணியல்வாதிகளும், அராஜகப் பெண்ணியல்வாதிகளும் நாய் வாலை நிமிர்த்த காட்டுக்கூச்சல் எழுப்பும் இன்றைய உலகில், புரட்சிகர வாய்வீச்சை மீறியது உலகமயமாதல். வர்க்கப் போராட்டத்தை அதன் உட்கூறில் இருந்தே அரித்து தின்னும் சொத்துரிமை ஆணாதிக்க ஜனநாயகம் பெண்ணின் தனிச் சொத்துரிமையை இந்த உலகமயமாதலில் எப்படி அனுமதிக்கும்?





பெண் பெற்று இருந்த சொத்துக்களையும் விழுங்கி ஏப்பமிட்டதற்கு அப்பால் உலகமயமாதல் எதையும் விட்டுச் சென்றதில்லை. உலகில் மூன்றில் இரண்டு பங்கை உற்பத்தி செய்யும் பெண், பாட்டாளியைப் போல் சொத்தற்ற வர்க்கமே. இதை மறுக்கும் பூர்சுவா பெண்ணியம் ஏகாதிபத்திய ஆணாதிக்க அமைப்பில் முன்னேறிவிட முடியும் என்று கனவு காண்கின்றனர். ஆனால் எதார்த்தம் சொத்துரிமையை ஒரு சதவீதத்தில் இருந்து அதைப் பூச்சியமாக்குவதில் உலக வர்த்தக நிறுவனம், உலக வங்கி தலைகால் புரியாது கொட்டமடிக்கின்றது. இந்தப் போக்கில் பெண்ணின் வறுமை அதிகரிக்கின்றது. வறுமையில் உள்ளோர்களில் 70 சதவீதத்துக்கு அதிகமான அதாவது, 91 கோடி பெண்கள் நாள் ஒன்றுக்கு ஒரு டொலர் வீதம் பெற்று வறுமையில் வாடியவர்கள், கடந்த ஐந்து வருட உலகமயமாதல் வேகத்தில் 105 கோடியாக அதிகரித்துள்ளனர்.

சொத்துரிமை ஆணாதிக்க ஆண்வழியில் குவிவதும், பெண்வழியில் ஏழையாவதும் நேர்எதிர் திசையில் செல்லுகின்றது. 1960-இல், இந்த அடிமட்டப் பிரிவைச் சேர்ந்த 20 சதவீத மக்கள் உலக வருமானத்தில் பெற்றது 2.3 சதவீதம் மட்டுமே. இது 1996-இல், 1.1 சதவீதமாகக் குறைந்து போனது. இந்த வகையில் பெண்ணின் சொத்துப் பறிப்பை வர்க்கப் போராட்டம் அற்ற எந்த வழியிலும் போராடிச் சொத்துரிமையை மீட்கமுடியாது. பாட்டாளிக்கும், பெண்ணுக்கும் உள்ள ஒரே பாதை வர்க்கப் போராட்டமேயாகும். இவை போன்ற உலகளாவிய ரீதியில் பெண்களுக்கு எதிரான புள்ளிவிபரங்கள் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கக் கூடியவை. அதை கீழ்வரும் அட்டவணை: 9-இல் ஆராய்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அட்டவணை:9

| | 1993-இல், பெண் அங்கத்துவம் சதவீதம் | முதல் பெண் அங்கத்துவம் | பெண்ணுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு | பெண்ணின் சராசரி ஆயுள் | திருமணம் செய்தோரில் கருத்தடை பாவிப்போர் சதவீதத்தில் | பெண்ணுக்கான சராசரி பிறப்பு எண்ணிக்கை | பெண்களின் கல்வி சதவீதத்தில் | பிரசவத்தின் போது தாயின் இறப்பு இலட்சம் பேரில் | | விவாகரத்துகள் | கற்பழிப்புகள் இலட்சம் பேரில் | பாலியல் வன்முறைகள் இலட்சம் பேரில் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | * | * | * | 44.72 | 2 | 6,21 | 14 | 640 | * | * | * | * |
| தென்னாப்பிரிக்கா | 2.8 | 1933 | 1950/84 | 68.25 | 50 | 4,31 | 75 | 84 | * | * | * | * |
| அல்பேனியா | 5.7 | 1945 | 1945 | 77.02 | * | 2,71 | 63 | * | 75,08 | 2628 | 3,5 | 7,9 |
| அல்ஜீரியா | 10 | 1962 | 1962 | 69.13 | 51 | 3,7 | 46 | 140 | * | * | 0,9 | 12 |
| ஜெர்மனி | 20.5 | 1919 | 1918 | 79.92 | 75 | 1,5 | * | 5 | * | * | 7,8 | 55 |
| அன்டோரா | * | * | * | 81.66 | * | 1,71 | * | * | * | * | 4 | 32 |
| நோர்மன்டிதீவு | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |
| அங்கோலா | 9.5 | 1980 | 1975 | 48.49 | 1 | 6,42 | 28 | * | * | * | 2,5 | 4,9 |
| அங்குயிலா | * | * | * | 76.91 | * | 3,05 | 95 | * | 66 | 6 | * | * |
| அன்ரிக்குவா | 0 | 1980 | 1951 | 75.57 | * | 1,68 | 88 | * | 36 | 22 | 39 | 84 |
| அன்ரில்-நெதர்லான்ட் | * | * | * | 79.3 | * | 1,9 | 99 | * | 204,5 | 409 | * | * |
| சவுதி அரேபியா | இ | இல்லை | இல்லை | 70.3 | * | 6,48 | 48 | 41 | * | * | 0,4 | 20 |
| ஆர்ஜென்டீனா | 5 | 1952 | 1947 | 74.97 | 74 | 2,65 | 95 | 140 | * | * | 0,1 | 0,1 |
| ஆர்மேனியா | * | * | * | 75.95 | * | 3,06 | 98 | * | * | * | 0,9 | 0,9 |
| அருபா | * | * | * | 80.42 | * | 1,82 | | * | 272,22 | 196 | 7,7 | 18 |
| அஸ்ரல் தீவுகள் | * | * | * | * | * | * | | * | * | * | * | * |
| ஆஸ்திரேலியா | 8.2 | 1943 | 1901/67 | 81.04 | 76 | 1,82 | 100 | 3 | 236,86 | 42635 | * | * |
| ஆஸ்திரியா | 21.3 | 1919 | 1918 | 80.27 | 71 | 1,48 | | 8 | 201,01 | 16282 | 7,1 | 47 |
| அஜர்பெய்சான் | * | * | * | 74.97 | * | 2,64 | 96 | * | * | * | 1,1 | 2,2 |
| பகாமாஸ் | * | 1977 | 1962/64 | * | * | * | 89 | * | 100,73 | 275 | * | * |
| பாரெய்ன் | * | * | * | 76.49 | * | 3,12 | 77 | | 103,5 | 590 | 1,6 | 80 |
| பங்களாதேஷ் | 10.3 | 1975 | 1947 | 55.22 | 40 | 4,39 | 22 | 600 | * | * | 0,5 | 0,7 |
| பாரியா் தீவுகள் | * | * | * | 77.06 | * | 1,18 | 99 | * | 196,53 | 511 | 32 | 63 |
| பெரிய ருசியா | * | * | * | 75.93 | * | 1,87 | 96 | * | * | * | * | * |
| பெல்ஜியம் | 9.4 | 1921 | 1919/48 | 80.67 | 79 | 1,62 | | 3 | 179,56 | 18316 | 7,8 | 34 |
| பெலிஸ் | * | 1984 | 1945 | 70.36 | * | 4,25 | 91 | * | 45,23 | 95 | * | * |
| பெனின் | 6.3 | 1979 | 1956 | 54.2 | * | * | 16 | 160 | * | * | 0,6 | 1,1 |
| பெமுட்டாஸ் | 3.6 | 1951 | 1951 | 76.97 | * | 1,81 | 99 | | 245,71 | 172 | 27 | 136 |
| பூட்டான் | 0 | 1975 | 1953 | 50.48 | 2 | 5,39 | | 1310 | * | * | * | * |
| B.I.O.T. | * | * | * | * | * | * | | * | * | * | * | * |
| பர்மா | * | | * | * | * | 3,58 | 72 | 460 | | * | 1,8 | * |



ஆணாதிக்கமும் சக ஒடுக்குமுறைகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொலிவியா | * | * | * | * | 600 | 72 | 4,1 | 30 | 66.43 | 1938/52 | 1966 | * |
| பொஸ்னி | * | * | * | * | * | | 1,65 | * | 78.37 | * | * | * |
| பொற்ஸ்வானா | 80 | 69 | * | * | 250 | 16 | 3,86 | 33 | 66.67 | 1965 | 1979 | 5 |
| பிரேசில் | * | * | 66070 | 41,86 | 200 | 80 | 2,39 | 66 | 67.32 | 1934 | 1934 | 6 |
| புறாணை | 8,1 | 5,8 | 190 | 65,51 | * | 82 | 3,41 | * | 72.91 | * | * | * |
| பல்கேரியா | 15 | 11 | 11341 | 133,42 | 9 | 97 | 1,71 | 76 | 77.1 | 1944 | 1945 | 12.9 |
| பூர்கினாபாசோ | * | * | * | * | 810 | 9 | 6,88 | 8 | 47.51 | * | * | * |
| புறூண்டி | * | * | * | * | * | 40 | 6,63 | 9 | 41.95 | * | * | * |
| கைகோஸ்தீவு | 61 | 3,4 | 91 | 293,54 | | 98 | 6,72 | * | * | * | * | * |
| கம்போடியா | * | * | * | * | 500 | 22 | 5,81 | * | 51 | * | * | * |
| கமரூன் | 1,7 | 0,5 | * | * | 430 | 45 | 5,8 | 16 | 59.6 | 1946 | 1962 | 12.2 |
| கனடா | 148 | 132 | 80716 | 272,68 | 5 | | 1,83 | 73 | 81.81 | 1917-18/50 | 1921 | 13.2 |
| காப்வேர்ட்தீவு | * | * | * | * | * | 53 | 6,23 | * | 65.01 | 1975 | 1975 | 7.6 |
| மத்திய ஆப்பிரிக்கா | * | * | * | * | 600 | 25 | 5,37 | * | 43.67 | * | * | * |
| சிலி | 28 | * | 6048 | 42,29 | 35 | 94 | 2,49 | 43 | 78.01 | 1931/49 | 1951 | 5.8 |
| சீனா | * | * | * | * | 95 | 68 | 1,84 | 83 | 69.16 | 1949 | 1954 | 21 |
| சைப்ரஸ் | 2,7 | 1,5 | 300 | 39,63 | | 91 | 2,3 | * | 78.85 | 1960 | 1963 | 5.4 |
| கொலம்பியா | 3,7 | 2,3 | * | * | 200 | 88 | 2,4 | 66 | 75.38 | 1947 | 1948 | 4.3 |
| கமரூஸ் | * | * | * | * | * | 40 | 6,73 | * | 60.57 | * | * | * |
| காங்கோ | ** | * | * | * | 900 | 49 | 5,23 | * | 49 | 1963 | 1970 | * |





| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குக்தீவுகள் | * | * | * | * | * | | * | * | * | * | * | * |
| வடகொரியா | * | * | * | * | 41 | 99 | 2,34 | * | 73.29 | 1946 | 1948 | 20.1 |
| தென்கொரியா | 8,9 | 4,9 | 32474 | 72,97 | 26 | 94 | 1,66 | 79 | 74.29 | 1948 | 1948 | 1 |
| கோஸ்ரோரிக்கா | 4 | 2,7 | 3282 | 100,36 | 36 | 93 | 3,01 | 75 | 80.1 | 1949 | 1953 | 12.3 |
| கோட்சுவார் | * | * | * | * | * | 23 | 6,61 | 3 | 51.29 | 1952 | 1965 | 4.6 |
| குறொற்றியா | * | * | * | * | * | 95 | 1,62 | * | 77.65 | * | * | * |
| கியூபா | * | * | 43488 | 395,34 | 39 | | 1,63 | 70 | 79.37 | 1934 | 1940 | 22.3 |
| டென்மார்க் | 54 | 11 | 15152 | * | 3 | | 1,69 | 78 | 79.16 | 1915 | 1918 | 33.3 |
| டிஜிபோர்டி | 6,2 | 6 | * | * | * | 34 | 6,15 | * | 51.62 | * | * | * |
| டொமினிக்கன்குடியரசு | * | * | 7808 | 100,61 | * | 82 | 2,72 | * | 70.99 | 1981 | 1980 | 12.9 |
| டொமினிக் | 88 | 39 | * | * | * | 94 | 1,95 | * | 80.2 | 1942 | 1946 | 11.7 |
| எகிப்து | 0,4 | 0 | 68735 | 112,68 | 270 | 34 | 3,67 | 47 | 63.16 | 1956 | * | 2.2 |
| ஐக்கிய அரபுகுடியரசு | 30 | 2,5 | * | * | * | 69 | 4,53 | * | 74.71 | 1918/28 | 1919 | 9.2 |
| ஈக்குவடோர் | 4,8 | 2,6 | 5663 | 47,19 | 170 | 84 | 2,97 | 53 | 72.99 | 1946 | 1957 | 5.2 |
| எரித்திரியா | * | * | * | * | * | * | 6,53 | * | 51.78 | * | * | * |
| ஸ்பெயின் | 14 | 4 | 23063 | 58,83 | 5 | 94 | 1,41 | 59 | 81.39 | 1931 | 1931 | 16 |
| எஸ்தோனியா | 6,9 | 4,8 | * | * | * | 100 | 1,98 | * | 75.39 | * | * | * |
| அமெரிக்கா | * | 43 | 1187000 | 451,33 | 8 | 97 | 2,08 | 74 | 79.7 | 1920 | 1924 | 10.8 |
| எதியோப்பியா | | | | | 560 | 16 | 7,07 | 2 | 51.78 | * | * | * |
| போக்லன்ட்தீவுகள் | * | * | 7 | 350 | * | | * | * | * | * | * | * |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெரோயிதீவுகள் | * | * | * | * | * | | * | * | * | * | * | * |
| பிஜி | 35 | 10 | * | * | * | 84 | 2,87 | * | 67.82 | * | * | * |
| பின்லாந்து | 19 | 7,3 | 14365 | 281,11 | 11 | | 1,79 | 80 | 80.11 | 1906 | 1906 | 39 |
| பிரான்சு | 44 | 9,3 | 105813 | 182,12 | 9 | | 1,8 | 80 | 82.44 | 1944 | 1945 | 6.1 |
| காபோன் | 0,8 | 0,1 | * | * | 190 | 48 | 3,93 | * | 58.06 | 1956 | 1961 | 5.8 |
| காம்பி | * | * | * | * | * | 16 | 6,23 | * | 52.82 | 1960 | * | 7.8 |
| ஜோர்ஜியா | * | * | * | * | * | 98 | 2,16 | * | 76.95 | * | * | * |
| கானா | * | * | * | * | 1000 | 51 | 6,09 | 13 | 57.88 | * | * | * |
| ஜிப்ரோல்ரர் | * | * | 93 | 290,62 | | 98 | 2,29 | * | 79.48 | * | * | * |
| கிரீஸ் | 11 | 2,6 | 8650 | 82,53 | 5 | 93 | 1,46 | * | 73.17 | 1952 | 1952 | 5.3 |
| கிரனாட்தீவு | * | | * | * | * | * | 2,25 | * | 71.98 | 1951 | 1976 | * |
| கிரீன்லாந்து | * | * | 132 | 240 | * | * | 3,85 | * | 80.59 | * | * | * |
| குவாட்டலூப் | * | * | 511 | 124,63 | | 90 | 1,95 | * | 80.38 | * | * | * |
| குயாம் | * | * | 1279 | 913,57 | | 99 | 2,32 | * | 76.13 | * | * | * |
| குவாட்டாமாலா | * | * | 1614 | 15,22 | 200 | 47 | 4,63 | 23 | 67.56 | 1945 | 1954 | 5.2 |
| கினியா | 0,7 | 0,3 | * | * | 800 | 13 | 5,79 | 1 | 46.95 | * | * | * |
| கினிபிசு | 0,8 | 0,5 | * | * | 700 | 24 | 5,43 | 1 | 49.57 | 1977 | * | 12.7 |
| கினிசுக்குவற்றோறியல் | | * | * | * | 48 | 5,23 | * | 54.79 | * | * | * | * |
| குயானா | * | * | * | * | * | 95 | 2,23 | * | 68.5 | 1953 | 1953 | * |
| பிரெஞ்குயானா | * | * | 34 | 24,28 | | 82 | 3,46 | * | 78.94 | * | * | * |





| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தாயிட்டி | * | * | * | * | 600 | 32 | 5,82 | 10 | 46.59 | 1950 | * | 3.6 |
| கொண்டூராஸ் | * | * | 1520 | 27,14 | 220 | 71 | 4,55 | 47 | 70.55 | 1957 | 1967 | 11.7 |
| ஹாங்காங் | 35 | 2 | 5551 | 92,51 | 6 | 64 | 1,39 | 81 | 83.79 | * | * | * |
| கங்கேரி | 18 | 4,2 | 24863 | 243,75 | 15 | 98 | 1,82 | 73 | 76.06 | 1945 | 1945 | 7.3 |
| இந்தியா | 1,2 | 1,2 | * | * | 460 | 39 | 3,4 | 43 | 59.61 | 1950 | 1952 | 7.3 |
| இந்தோனேசியா | 1,2 | * | 131886 | 66,6 | 450 | 75 | 2,74 | 50 | 63.42 | 1945 | 1945 | 12.2 |
| ஈராக் | 2,4 | * | 1476 | 7,2 | 120 | 88 | 6,56 | 18 | 67.56 | 1980 | 1980 | 10.8 |
| ஈரான் | * | * | 33943 | 55,37 | 120 | 56 | 4,93 | 49 | 68.22 | 1963 | 1963 | 3.4 |
| அயர்லாந்து | 13 | 3,6 | * | * | 2 | * | 1,95 | * | 79 | 1918 | * | 12.1 |
| ஐஸ்லாந்து | * | * | 580 | 223,07 | * | * | 2,06 | * | 81.39 | 1915 | * | 21.8 |
| இஸ்ரேல் | 49 | 7,9 | 6000 | 109,09 | 3 | 93 | 2,81 | * | 80.33 | 1948 | 1948 | 9.2 |
| இத்தாலி | 1,4 | * | 27836 | 48,24 | 4 | 96 | 1,41 | 78 | 81.23 | 1945 | 1946 | 8.1 |
| ஜமைக்கா | 45 | 23 | 672 | 27,76 | 120 | 86 | 2,42 | 66 | 77.01 | 1944 | * | 11.7 |
| ஜப்பான் | 4 | 1,2 | 157608 | 125,88 | 11 | * | 1,56 | 64 | 82.42 | 1945/47 | 1947 | 2.3 |
| ஜோர்தேனியா | 26 | 0,9 | * | * | 48 | 75 | 5,25 | 35 | 74.21 | * | * | * |
| கஜகஸ்தான் | * | * | * | * | | 96 | 2,43 | * | 73.13 | * | * | * |
| கென்யா | 6,9 | 2,5 | * | | 170 | 62 | 5,76 | 33 | 54.16 | 1963 | 1969 | 3 |
| கிர்ஷியா | * | * | * | * | * | 96 | 3,31 | * | 72.56 | * | * | * |
| கிரிபாட்டி | * | * | * | * | * | | 3,37 | * | 55.78 | * | * | * |
| குவைத் | * | * | 2987 | 157,21 | 6 | 69 | 2,93 | 35 | 78.06 | இல்லை | இல்லை | இ |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| லாவோஸ் | * | * | * | * | 300 | 35 | 5,98 | * | 53.81 | 1958 | * | 9.4 |
| லிசோதியா | 58 | 43 | * | * | * | 68 | 4,41 | 23 | 64.63 | * | * | 17 |
| லெதோனி | * | * | * | * | * | 99 | 1,97 | * | 74.95 | * | * | * |
| லெபனான் | * | * | * | * | * | 73 | 3,31 | 55 | 72.28 | 1926 | * | 2.3 |
| லைபீரியா | * | * | * | * | * | 29 | 6,3 | 6 | 60.75 | 1946 | 1964 | 6.1 |
| லிபியா | 16 | * | 2264 | 43,53 | 70 | 42 | 6,32 | * | 66.57 | 1969 | * | * |
| லிசென்ஸ்தியன் | 11 | 7,1 | 29 | 96,66 | * | 100 | 1,47 | * | 81.17 | * | * | * |
| லிதுவேனியா | 6,1 | 5 | * | * | * | 98 | 2 | * | 76.3 | 1984 | 1986 | 4 |
| லக்ஸம்பேர்க் | 35 | 5,3 | 436 | 111,79 | * | 100 | 1,65 | * | 80.75 | 1919 | 1919 | 13.3 |
| மக்காஓ | 6,3 | * | 70 | 17,5 | * | 86 | 1,49 | * | 82.43 | * | * | * |
| மசதோனி | * | ** | * | * | * | * | * | * | * | * | * | * |
| மடகாஸ்கர் | 1,1 | 0,7 | * | * | 570 | 73 | 6,62 | 17 | 56.48 | 1959 | 1965 | * |
| மலேசியா | 7 | 3,7 | * | * | 59 | 70 | 3,47 | 48 | 72.56 | 1957 | 1959 | 5 |
| மாலாவி | 21 | 1,2 | * | * | 400 | 34 | 7,36 | 13 | 39.76 | 1964 | 1964 | 11.6 |
| மாலைத்தீவு | * | * | 4010 | 1542,3 | * | 92 | 6,17 | * | 67.07 | 1932 | * | 4.2 |
| மாலி | * | * | * | * | 2000 | 12 | 7,33 | 5 | 48.09 | * | * | * |
| மோல்ற் | 34 | 6,2 | * | * | * | 82 | 1,92 | * | 79.48 | 1947 | 1947 | 1.5 |
| மான்தீவுகள் | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |
| மாறியன் | * | * | 62 | 137,77 | * | 96 | 2,69 | * | 69.8 | * | * | * |
| மொரோக்கோ | 23 | 3,2 | * | * | 330 | 38 | 3,69 | 42 | 70.02 | 1963 | * | 0.7 |





| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மார்ஷல்தீவுகள் | * | * | * | * | * | 88 | 6,89 | * | 65.11 | * | * | * |
| மாற்றினிக் | * | * | 264 | 67,69 | * | 93 | 1,81 | * | 51.54 | * | * | * |
| மொரிஷியஸ் | 14 | 4,4 | 692 | 62,9 | 99 | 75 | 6,92 | 75 | 74.95 | 1956 | * | 3 |
| மொறிற்தானியா | 1 | 1 | * | * | * | 25 | 2,02 | 4 | 51.54 | * | * | * |
| மயோட்டி | * | * | * | * | * | * | * | * | * | * | * | * |
| மெக்ஸிக்கோ | * | * | 54012 | 57,64 | 110 | 85 | 3,09 | 53 | 77.11 | 1947 | 1952 | 7.6 |
| மெக்ரோனிசியா தீவுகள் | * | * | * | * | 88 | * | * | * | * | * | * | |
| மோல்தாவியா | | * | * | * | * | 94 | 2,16 | * | 71.8 | * | * | * |
| மொனாக்கோ | 20 | 3,3 | * | * | * | * | 1,7 | * | 81.8 | 1962 | 1963 | 5.6 |
| மங்கோலியா | * | 19 | 1000 | 42,01 | 200 | * | 4,26 | * | 68.92 | 1923/24 | 1924 | 3.9 |
| மன்சொராற் | * | * | * | * | * | 97 | 1,99 | * | 77.49 | * | * | * |
| மொசாம்பிக் | 5,2 | * | * | * | 300 | 21 | 6,19 | 4 | 50.9 | 1975 | 1977 | 15.7 |
| நமீபியா | * | * | * | * | 370 | 31 | 6,43 | 29 | 64.9 | 1989 | 1989 | 6.9 |
| நாறூ | * | * | * | * | * | * | 2,08 | * | 69.18 | 1968 | 1986 | 5.6 |
| நேபாளம் | 0,7 | 0,7 | * | * | 830 | 13 | 5,15 | 23 | 53.34 | 1961 | * | 3.4 |
| நிக்கராகுவா | * | * | 866 | 19,68 | * | 57 | 4,17 | 49 | 57.3 | 1955 | 1958 | 16.3 |
| நைகர் | * | * | * | * | 700 | 5 | 7,35 | 4 | 46.67 | 1948 | 1989 | 6 |
| நைஜீரியா | * | * | * | * | 800 | 40 | 6,31 | 6 | 57.3 | * | * | * |
| நியூதீவுகள் | * | * | * | * | * | | * | * | * | * | * | * |
| நார்வே | 49 | 10 | 10170 | 234,87 | 3 | | 1,76 | 76 | 81.15 | 1907/17 | 1911/21 | 35.8 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நியூகலிடோனியா | * | * | * | * | * | 90 | 2,57 | * | 77.48 | * | * | * |
| நியூசிலாந்து | 132 | 30 | 9188 | 262,51 | 13 | | 1,99 | 70 | 80.42 | 1893 | 1933 | 16.5 |
| ஓமான் | * | * | * | * | * | | 6,16 | 9 | 72.29 | * | * | * |
| உகான்டா | 7 | * | * | * | 550 | 45 | 6,7 | 5 | 36.91 | 1962 | 1962 | 12.6 |
| உஸ்பெக்கிஸ்தான் | * | * | * | * | | 96 | 3,67 | * | 72.24 | * | * | * |
| பாகிஸ்தான் | * | * | * | * | 500 | 21 | 6,35 | 12 | 58.56 | * | 1947 | 0.9 |
| பலாஊ | * | * | * | * | * | 90 | 2,85 | * | 73.02 | * | * | * |
| பாலஸ்தீனம் | * | * | * | * | * | * | 7,74 | * | 72.69 | * | * | * |
| பனாமா | * | * | 1872 | 71,72 | 60 | 88 | 2,8 | 58 | 77.97 | 1941/46 | 1946 | 7.5 |
| பாப்புவா நியூகினி | 81 | 70 | * | * | 900 | 38 | 4,55 | 4 | 54.74 | 1975 | 1977 | 0 |
| பராகுவா | 3,2 | * | * | * | 300 | 88 | 4,22 | 48 | 75.18 | 1961 | 1963 | 2.5 |
| நெதர்லாந்து | 73 | 11 | 28300 | 182,58 | 10 | | 1,56 | 76 | 81.17 | 1919 | 1918 | 23.3 |
| பெரு | 42 | * | * | * | 300 | 74 | 3 | 59 | 68.38 | 1950 | 1956 | 6.3 |
| பிலிப்பைன்ஸ் | * | * | * | * | 100 | 93 | 3,81 | 40 | 68.25 | 1937 | 1941 | 10.6 |
| பித்கைன் | * | * | * | * | | | * | * | * | * | * | * |
| போலந்து | 8,3 | 5,2 | 35000 | 90,43 | 11 | 98 | 1,92 | 75 | 77.33 | 1918 | 1919 | 9.6 |
| பொலினீசியா பிரான்ஸ் | * | * | * | * | 98 | 3,3 | * | 73.29 | * | * | * | |
| போட்டோறிக்கா | | * | 13695 | 370,13 | * | 88 | 1,98 | * | 79.66 | * | * | * |
| போர்ச்சுக்கல் | 2 | 1,5 | 10170 | 102,72 | 10 | 82 | 1,47 | 66 | 79.16 | 1931/76 | 1934 | 8.7 |
| குவாட்டார் | 67 | 3,4 | 358 | 89,5 | * | 72 | 4,63 | * | 75.5 | * | * | * |





| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நியூனியன் | * | * | 753 | 114,09 | * | 80 | * | * | * | * | * | * |
| ருமேனியா | 6,6 | 4,7 | 32966 | 145,22 | 72 | 95 | 1,82 | 58 | 75.35 | 1929/46 | 1946 | 3.5 |
| இங்கிலாந்து | 173 | 18 | 165658 | 282,96 | 8 | | 1,82 | 72 | 79.95 | 1899 | * | * |
| ரஷ்யா | 11 | 9,2 | * | * | * | 97 | 1,82 | * | 74.35 | 1898 | * | * |
| ருவாண்டா | 10 | * | * | * | 210 | 37 | 8,12 | 21 | 40.19 | 1961 | 1965 | 17.1 |
| சென்றகெலன் | * | | * | * | | | * | * | * | * | * | * |
| சென்ற்கிற்அன்ட்நெவிஸ | . | * | * | * | * | | * | * | * | 1951 | 1984 | 6.7 |
| செயின்ட்லூசி | * | * | 44 | 29,33 | | 69 | 2,37 | * | 73.67 | 1951 | 1979 | 0 |
| செயின்ட் மாற்றன் | * | * | 22 | 88 | * | 95 | 1,52 | * | 85.29 | 1960 | 1974 | 11.7 |
| செயின்ட்பியர்ஏமிக்குலன் | * | * | * | * | | * | * | * | * | * | * | |
| செயின்ட் வின்சன் | * | * | 19 | 17,43 | * | 96 | 2,08 | * | 74.21 | 1951 | 1979 | 9.5 |
| சாலமன் தீவுகள் | * | * | * | * | * | | 1,43 | * | 78.81 | 1945 | * | * |
| சல்வடோர் | * | * | 2239 | 40,7 | * | 70 | 3,69 | 53 | 7.23 | 1961 | * | 8.3 |
| அமெரிக்கன் சாமோஆ | * | * | * | * | * | | * | | * | 1990 | * | 4.3 |
| கீழைத்தேய சாமோஆ | * | * | 49 | 23,52 | * | 97 | 4,04 | * | 70.88 | * | * | * |
| சாதோமா பிரின்சிப் | * | * | * | * | | 18 | 4,44 | * | 65.59 | 1975 | 1975 | 10.9 |
| செனகல் | 8 | 5,1 | * | | 600 | * | 6,03 | 7 | 58.71 | 1945 | 1963 | 11.7 |
| சேர்பி மொந்தேநிக்ரோ | | * | * | * | * | * | 1,89 | * | 77.05 | 1949 | 1943 | 3 |
| சீசெல்ஸ் தீவுகள் | 52 | 7,1 | 86 | 113,51 | | 60 | 2,16 | * | 73.73 | 1948 | 1976 | 45.8 |
| சீராலியோன் | * | * | * | * | 450 | 11 | 5,9 | * | 49.69 | * | * | * |



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிங்கப்பூர் | 32 | 2,8 | 4419 | 147,3 | 10 | 83 | 1,87 | 74 | 73.25 | 1948 | 1984 | 3.7 |
| சிலோவாக்கியா | 12 | * | * | * | * | * | 1,98 | 74 | 77.57 | * | * | * |
| சிலோவானி | * | 5 | * | * | * | * | 1,64 | * | 78.76 | * | * | * |
| சோமாலியா | * | * | * | * | 1100 | 14 | 7,13 | 1 | 56 | * | * | * |
| சூடான் | * | * | * | * | 550 | 21 | 6 | 9 | 55.65 | * | * | * |
| சிறிலங்கா | 2,2 | 2,1 | 2732 | 15,01 | 80 | 84 | 2,08 | 62 | 74.82 | 1931 | 1931 | 4.9 |
| சுவிஸ் | 43 | 4,6 | 13183 | 188,32 | 5 | | 1,6 | 71 | 81.88 | 1971 | * | * |
| சுவீடன் | 81 | 19 | 19000 | 213,48 | 5 | | 1,97 | 78 | 81.39 | 1918/21 | 1921 | 33.5 |
| சுவிட்ஸர்லாந்து | 110 | 89 | * | * | * | 65 | 6,1 | * | 60.96 | 1996 | 1971 | 17.5 |
| சூரினாம் | * | * | 375 | 89,28 | * | 95 | 2,73 | * | 72.41 | 1953 | * | 5.9 |
| சிரியா | 7 | 0,8 | 8335 | 59,53 | 140 | 51 | 6,55 | 52 | 58.71 | 1949 | 1958 | 8.4 |
| தாஷ்கிஸ்தான் | * | * | * | * | * | 97 | 4,55 | * | 72.1 | * | * | * |
| தைவான் | * | * | * | * | * | 79 | 1,81 | * | 78.93 | * | * | * |
| தான்சானியா | * | * | * | * | 340 | 48 | 6,15 | 10 | 44.22 | 1959 | * | 11.2 |
| தாட்ஷ் | * | ** | * | * | 960 | 18 | 5,33 | 1 | 42.38 | * | * | * |
| செக் குடியரசு | 16 | 6,9 | * | | | | 1,84 | 1 | 77.41 | 1920 | 1920 | 10 |
| தாய்லாந்து | 10 | 4,8 | 36602 | 61,2 | 50 | 91 | 2,04 | 66 | 72.08 | 1932 | 1949 | 4.2 |
| தாகோ | * | * | * | * | 420 | 31 | 6,83 | 12 | 59.6 | 1956 | * | 6.3 |
| தொங்கோ | * | * | 63 | 3150 | | 100 | 3,56 | * | 70.62 | 1960 | * | 3.3 |
| ரினிடாட் | 30 | 22 | * | * | 110 | 96 | 2,01 | 53 | 72.6 | 1945 | 1971 | 13.5 |





| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ரியூனிசியா | * | * | 12695 | 142,64 | 70 | 45 | 2,73 | 50 | 75.44 | 1959 | 1959 | 4.3 |
| டாக்மென்ஸ்தான் | * | * | * | * | * | 97 | 3,72 | * | 69.02 | * | * | * |
| தேர்க் ஏ கெய்க் | 36 | 7,1 | 1085 | 8346,2 | | 98 | * | * | * | * | * | * |
| துருக்கி | 0,5 | * | 25376 | 41,19 | 150 | 68 | 3,12 | 63 | 73.96 | 1930/34 | 1935 | 1.8 |
| துவாலு | | | | | | | 3,11 | * | 64.34 | * | 1989 | 7.7 |
| உக்ரெய்ன் | 5,2 | 4,5 | 192800 | 368,64 | | 97 | 1,81 | * | 74.87 | * | * | * |
| உருகுவே | * | * | 6376 | 201,13 | 36 | 96 | 2,41 | * | 77.83 | 1932 | 1942 | 6.1 |
| வெனிதூ | * | * | * | * | * | 48 | 4,14 | * | 61.61 | 1980 | 1977 | * |
| வத்திக்கான் | * | * | * | * | * | | * | * | * | * | * | * |
| வெனிசுலா | 44 | 18 | 21876 | 100,34 | | 89 | 297 | 49 | 76.29 | 1947 | 1948 | 10 |
| அமெ.கன்னித் தீவுகள் | | | | | | | * | * | * | * | * | * |
| பிரிட்டன் கன்னித் தீவு | * | * | 332 | 1844,4 | * | 98 | * | * | * | * | * | * |
| வியட்நாம் | * | * | * | * | 120 | 83 | 3,21 | 53 | 67.91 | 1946 | 1946 | 18.5 |
| வால்ஸ் அன்ட் பூட்டுனா | * | * | * | * | * | | * | * | * | * | * | * |
| ஜேமன் | * | * | * | * | * | 26 | 7,15 | 7 | 63.5 | 1967/70 | 1970 | 0.7 |
| செயர் | * | * | * | * | 800 | 61 | 6,7 | 1 | 49.46 | 1967 | 1970 | * |
| சாம்பி | 3,5 | 3 | * | | 150 | 65 | 6,62 | 15 | 43.03 | 1962 | 1964 | 6.7 |
| சிம்பாவே | 39 | 26 | * | * | * | 72 | 4,93 | 43 | 43.01 | 1967 | 1924/80 | 12 |
| * புள்ளிவிபரம் அற்றவை | | | | | | | | | | | | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உலகில் பல்வேறு நாடுகள் சார்ந்து பல்வேறு பெண்கள் பிரச்சினை சார்ந்த புள்ளி விபரம் அட்டவணை:9-இல் உள்ளது. இந்தப் புள்ளி விபரம் தொடர்பான விடயங்கள் கீழே தனித் தனியாக ஆராய உள்ளதால், பொதுவாக இது பற்றிய சிறு குறிப்புடன் கீழே விபரமாக ஆராய்வோம்.

பெண்கள் மீதான பாலியல் வன்முறை, கற்பழிப்பு புள்ளிவிபரங்கள் எமக்கு மனித வாழ்வியல் பற்றி புரிய வைக்கின்றது. மேலும் பாலியல் வன்முறை நாகரிகத்துடன் அதிகரிப்பதையும் காட்டுகின்றது. ஏகாதிபத்திய ஜனநாயகம் எந்தளவுக்கு ஒரு நாட்டில் காணப்படுகின்றதோ அந்தளவுக்குப் பாலியல் வன்முறையும் அதிகரிக்கின்றது. இது பாலியல் அல்லாத துறையிலும் அதிகளவில் களவு, வன்முறை என்று பல்கிப் பெருகி வருகின்றது. மேற்கில் இவை வேகமாக அனைத்தையும் சிதைத்துச் செல்கின்றது.

மூன்றாம் உலக நாடுகளில் இயல்பாக உள்ள ஆணாதிக்க வடிவம், ஜனநாயகமற்ற நீதிமன்றங்கள் காரணமாகப் பெண்கள் மீதான குற்றங்கள் கணிசமாக வெளிவருவதில்லை என்பது ஒருபக்க உண்மை. இது மேற்கிலும் அங்கிருப்பது போல் அல்லாது காணப்படுகின்றது. இருந்த போதும் மேற்கில் பாலியல் மற்றும் குற்றங்கள் மூன்றாம் உலகத்தை விட பல மடங்கு அதிகமாகும். மூன்றாம் உலகில் சமூகத்தன்மை வாய்ந்த மனித உறவுகள் இதற்கு எதிரானதாக இருக்கின்றது. மேற்கில் இது தனிமனிதத் தனிச்சொத்துரிமை ஜனநாயக வாதத்தால் சிதைகின்ற போது சமூக அவலங்கள் வன்முறையின் வடிகாலாகின்றது. இதில் இருந்தே அராஜகவாதக் கோட்பாடுகள் உதித்தெழுகின்றன. மாற்றம் என்பதை விட மறுப்பு பிரதானமாகின்றது. இது பாலியலில் மாற்றம் என்பதைவிட பாலியலில் மறுப்பு வன்முறையாகின்றது. இது பெண்ணைப் பாலியல் நுகர்வாகக் காண்பதும், அனுபவிக்க துடித்தெழுவதும் தீர்வாகின்றது.

**இந்தச் சமூகத்தின் அவலம் என்பது கட்டற்ற தனிமனிதச் சுதந்திரம் சமூகச் சுதந்திரத்தை மறுப்பதில் தோற்றம் கொள்கின்றது.** சமூகச் சுதந்திரத்துக்கு எதிரான தனிமனிதச் சுதந்திரம் ஆணாதிக்க வன்முறையைக் கட்டுக்கடங்காத எல்லைக்கு நகர்த்துகின்றது. இந்தச் சமூகத்தில் தனிமனிதனின் தனிப்பட்ட விவகாரங்கள் சமூகக் கண்ணோட்டத்துக்கு எதிராக வளர்ச்சி பெறுகின்றது. உலகமயமாதல் அனைத்தையும் மறுப்பதன் ஊடாக தன்னைப் புனரமைத்து வருகின்ற வரலாற்றுப் போக்கில் தனிமனிதர்கள் அதன் வடிவமாகின்றனர். இது குடும்பத்தில் சேர்ந்து வாழ்வதா? அல்லது பிரிந்து வாழ்வதா? என்ற விவாகரத்துரிமையை எப்போதும் கூட்டு மனிதச் செயலுக்கு எதிராகக் கையாள்வதில் உலகமயமாதல் தன்னை அதற்கு இசைவாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இயற்கையைச் சிதைத்து முன்னேறும் பணம் படைத்தோர் கூட்டம் அனைத்தையும் சிதைப்பது போல் குடும்பத்தையும் சிதைக்கின்றனர். இந்தச்





சிதைவு ஆணாதிக்கத்துக்கு எதிராக அல்லாமல் உலகமயமாதலில் மனிதனின் அனைத்தையும் மறுதலித்தக் கோட்பாட்டில் சிதைக்கப்படுகின்றது. குடும்பச் சிதைவு என்பது ஆண் பெண் இருபாலரினதும் பாலியல் உணர்வை முடமாக்கியுள்ளது. இந்த முடமாக்கல் ஊடாகக் கட்டியமைக்கப்படும் வக்கிரமான பாலியல் மனிதனின் இயல்பான உணர்வைப் போதைக்குள்ளாக்குகின்றது. இது பாலியல் வன்முறையைக் கோருகின்றது. ஆண் பெண்ணினது இணைந்த வாழ்க்கை எந்தளவுக்குச் சிதைகின்றதோ அந்தளவுக்கு மனிதனின் தேவை மறுதலிக்கப்படுகின்றது. இது பாலியலில் இருந்து அனைத்துத் துறைகளுக்கும் பொருந்தும். தேவை என்பதை மறுக்கும் இந்த உலகமயமாதல் ஆண் பெண்ணின் தேவையைப் பாலியல் வக்கிரத்தில் இட்டு நிரப்புகின்றது. இது பாலியல் வன்முறையையும், விவாகரத்தையும் தீர்வாக முன்வைக்கின்றது.

உலகில் உலகமயமாதல் வேகம் பெற்று செல்லும் இன்றைய நிலையில் ஒரு பெண்ணின் குழந்தைப் பிரசவிப்பு என்பது மரணத் தண்டனையாகவே உள்ளது. உலகை எப்படிக் கட்டுப்படுத்துவது? எப்படி இருந்த இடத்தில் இருந்தபடி உலகின் மூலைமுடுக்கெல்லாம் குண்டு வீசுவது என்று நவீன உபகரணங்கள், ஒவ்வொரு அடி நிலத்தையும் கண்காணிக்க, நவீன கண்டுபிடிப்புகள் மனிதனைக் கண்காணிக்கின்றது. ஆனால் மனிதனின் துயரத்தை மட்டும் இவை கண்டுகொள்வதில்லை. மாறாக அதை மேலும் அதாவது துயரத்தை அதிகரிக்கவே வைக்கின்றனர். இயற்கையுடன் வாழ்ந்த பெண்ணின் பிரசவிப்பில் இவ்வளவு மரணங்கள் நேர்ந்ததில்லை. அந்தளவுக்கு இயற்கையின் பாதுகாப்பை மனிதன் அனுசரித்து வாழ்ந்தான். செயற்கையாக வாழத் தொடங்கிய மனிதன் இயற்கையை அழித்ததுடன் ஒருபகுதி மக்களுடைய வாழ்வின் ஆதாரத்தை அழித்ததன் மூலம் பெண்ணின் பிரசவம் மரணத்தைத் தீர்வாக்குகின்றது.

மேற்கிற்கும், மூன்றாம் உலகுக்கும் இடையில் ஒரு இலட்சம் பெண்களின் பிரசவத்தின் போதான இறப்பு 1,000 மடங்கு வேறுபடுகின்றது. உலகமயமாதல் சந்தையில் உலகளாவிய ரீதியில் ஒரே விலையையும், பண்பாட்டையும் என நுகர்வுச் சந்தைக்கு ஏற்ப சூறையாடும் சுரண்டல் வர்க்கம் கொழுக்க சமுதாயம் சிதைக்கப்படுகின்றது. ஆனால் ஒரு பெண்ணின் பிரசவம் சில மூன்றாம் உலக நாடுகளில் 50 பேருக்கு ஒரு பெண்ணின் இறப்பைப் பிரகடனம் செய்து நிச்சயப்படுத்துகின்றது. இதைத் தடுக்க ஏன் முடியவில்லை? ஒருபுறம் இவர்கள் பெண்கள் என்பதும், கறுப்பு நிறத்தவர் என்பதும் மறுபுறம் அடிமட்ட உழைக்கும் வர்க்கப் பெண்கள் என்பதாலும் இந்த ஜனநாயகம் கண்டுகொள்வதில்லை. நடைமுறையில் இருக்கும் ஜனநாயகம் இந்த மக்களைக் கட்டுப்படுத்த நவீன அடக்குமுறை ஊடகங்களை விரிவாக்கவே அனுமதிக்கின்றது.

மேற்கில் பெண் பிறந்து வாழவும், மூன்றாம் உலகில் பெண் பிறந்து மரணமடையவும் கடவுளின் புண்ணியப் பாவமா காரணம்? இப்படியும் கடவுள்கள் நாட்டுக்கு நாடு புண்ணியப் பாவங்களைப் பிரிக்கின்றாரோ? அல்லது அந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டுக் கடவுள்கள் அதிகாரம் படைத்தவர்களோ? எல்லாச் சுரண்டும் வர்க்கமும் தனது நலன் சார்ந்து மட்டுமே பெண்களின் இறப்பைக் குறைப்பதையும், (பிறப்பையும்) கொல்வதையும் தீர்மானிக்கின்றது. இங்கு பெண்களின் உயிரைப் பாதுகாக்கக் கூட முடிவதில்லை. ஆனால் அராஜகத் தீவிரப் பெண்ணியல்வாதிகள் என்போர் பெண்ணின் உடல் கட்டுப்பாட்டைப் பூர்சுவா கண்ணோட்டத்தில் கோரும் போது உயிரைப் பாதுகாக்கும் உரிமைக்கு எதிராக, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடக் கோருவதில்லை. உடல் கட்டுப்பாட்டை ஆணுக்கு எதிராக நிறுத்துவதன் மூலம் ஏகாதிபத்திய அமைப்பைக் குலைவின்றி பாதுகாக்கமுடியும் என்பதால் அதை உயர்த்துகின்றனர்.

1988-இல், அமெரிக்காவில் மகப்பேறு மருத்துவர் 1,00,000 பேருக்கு 61.4 பேர் நகர்ப்புறத்தில் இருந்தனர். இது கிராமப் புறத்திற்கு 24.5 ஆக இருந்தது. இந்த வகையில் கிராமப்புறப் பெண்கள் மிக மோசமாக ஒடுக்கப்பட்ட அதே நேரம், நகர்ப்புறப் பெண்கள் போதிய மருந்தின்றி அவதிப்பட்டனர். அமெரிக்காவில் உள்ள முதியோரில் 58 சதவீதம் பெண்களாவர். 65 வயதிற்கு மேற்பட்ட முதியோரில் 71 சதவீதப் பெண்கள் ஏழைகளாவர். வீடின்றி அவதிப்படும் மக்கள் 30 முதல் 40 இலட்சமாக உள்ள அதே நேரம் அதில் பெரும்பாலானோர் பெண்களாவர். வீடு வசதியற்ற பெண்கள் 30 வீதமானோருக்கு மகப்பேறு காலக் கவனிப்பு ஏதுமின்றி உள்ளனர். 1000 குழந்தைகளுக்கு 17 குழந்தை இறப்பு உள்ள அமெரிக்காவில் வீடற்ற குழந்தைகளின் இறப்பு 25 ஆக உள்ளது. 1987-இல், அமெரிக்காவில் குழந்தை இறப்பு 1000 குழந்தைகளுக்கு 17 என்ற நிலையில், வெள்ளைக் குழந்தை இறப்பு 8.6 ஆகவும், கறுப்புக் குழந்தை இறப்பு 17.9 ஆகவும் காணப்பட்டது. இதைவிட அமெரிக்காவில் எந்த நேரமும் 1 இலட்சம் குழந்தைகள் வீதியில் வசித்த வண்ணம் உள்ளனர்.[48]

யுனிசேவ் அறிக்கையின் படி ஒவ்வொரு நாளும் 1,600 பெண்கள் குழந்தையைப் பெறும் போது இறக்கின்றனர். இது வருடம் 10 இலட்சம் பேராக உள்ளது. ஆப்பிரிக்காவில் பதின்மூன்று பெண்ணுக்கு ஒருவர் இறக்க இது கனடாவில் 7,300 பேருக்கு ஒன்றாக உள்ளது. அதாவது உலகில் பிரசவத்தின் போது மரணமடையும் பெண்களில் 98 சதவீத மரணம் வளரும் நாடுகளில் நிகழ்கின்றது.[43]

இன்று உலகில் 10 இலட்சம் பெண்கள் பிரசவத்தின் போது இறக்கின்றனர். இதனால் குழந்தைகள் அநாதைகள் ஆகின்றனர். 1,40,000 பெண்கள் இரத்தப் பெருக்கால் இறக்கின்றனர். 40,000 பெண்கள் குழந்தை பிறக்கும் போது இறக்கின்றனர். கருச் சிதைவால் 75,000 பெண்கள் இறக்கின்றனர். (இலக்கம்-20)[49] இன்று குழந்தை பிறக்கும் போது 10 இலட்சம் பெண்கள் இந்த ஏகாதிபத்திய அமைப்பால் வருடாவருடம் கொல்லப்படுகின்றனர். உலக வங்கியின் ஆய்வு ஒன்றின் படி பெண்ணுக்கு ஒருவருடம் தாய் சேய் கல்வி புகட்டுவதன் மூலம் குழந்தைகளின் மரண விகிதத்தை “1,000 பேருக்கு எட்டாகக்”[50] குறைக்க முடியும் என்பதை நிறுவியுள்ளது. சுரண்டும் வர்க்கத்தின்





சூறையாடும் நலனால் சுற்றுச் சூழல் மாசுபட்டு வருடம் 22 இலட்சம் பெண்கள் கொல்லப்படுகின்றனர். இப்படி பல புள்ளிவிபரங்கள் உள்ளது.

கம்யூனிச நாடுகளில் மக்கள் (குலாக்குகள்) பெரு விவசாயிகள் கொல்லப்பட்டனர் என சி.ஐ.ஏ. (C.I.A.) அறிக்கைகளை முன் வைத்து வாதிட முற்படும் இன்றைய பாட்டாளிவர்க்க எதிர்க் கோட்பாட்டாளர்கள் இவைகளை ஏன் கண்டு கொள்வதில்லை? இதற்கு எதிராகப் போராட ஏன் அழைப்பதில்லை? மாறாக உடல் கட்டுப்பாட்டைப் பற்றியும், தனிமனிதச் சுதந்திரம் பற்றியும் ஊளையிடுகின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டு விடயத்தில் கொல்லப்படும் 28 இலட்சம் பெண்களின் நிலைபற்றி எதிர்க் கோட்பாட்டாளர்கள் கவலைப்படுவதில்லை. 40 கோடி பெண்கள் மூடிய சிறிய இறுக்கமான அடைந்து போன குசினி (குடிசை) அமைப்பில் விறகு புகையால் நோய்க்குள்ளாகி நசிந்து கிடப்பதையிட்டு எந்த மனித உரிமை அமைப்பும் அலட்டிக் கொள்வதில்லை. எந்தப் பெண்ணியமும் கண்டுகொள்வதில்லை.

இதைப் பாட்டாளிவர்க்கம் மட்டுமே கவனத்தில் எடுக்கின்றது. இதைத் தடுக்க சுரண்டும் வர்க்கத்தை எதிர்த்து வன்முறையைக் கோருகின்றது. இது புரட்சிக்கு முந்தியப் பிந்திய சமூகத்தில் நடைமுறைப்படுத்தும் போது இதையே மனித உரிமை மீறலாகக் காட்டி ஒப்பாரி வைக்கின்றனர். இந்தமாதிரி பெண்களின் கொலைகள் தடுக்கப் போராடும் போது, இதைக்கோரும் வர்க்கம் மீது வன்முறை நிபந்தனையானது. உடல் கட்டுப்பாடு என்பது பூர்சுவா அற்பத்தனங்களே. அப்படி உள்ளதாகக் கருதும் எந்தப் பெண்ணிலைவாதியும் சரி, மனிதனும் சரி சமூக இயக்கத்தில் இருந்து அன்னியப்பட்ட பூர்சுவா கனவுகளில் திளைப்பவர்களே. இது இலக்கியத்தில் கலை கலைக்காக என்று வாதாடியது போல் பெண் உடல் பற்றிய பிரமைகளை விதைக்கின்றனர். ஆனால் பெண்ணின் உடல் இந்த ஆணாதிக்கச் சமூகப் பண்பாட்டு, கலாச்சாரத்துக்கு வெளியில் சுதந்திரமாக இருப்பதில்லை. அதுபோல் பெண்ணின் அகாலக் (திடிர்) கொலைகள் இதன் ஊற்று மூலமாக உள்ளது.

இன்று இந்த ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தைத் தகர்த்ததால்தான் இந்தப் பெண்களின் இயற்கை கொலைகளை நிறுத்தமுடியும். அதுவரை இது சூறையாடும் சுரண்டும் வர்க்கத்துக்குரிய நிலையில் இருந்து அணுகி மகாநாடுகளை நடத்தும். வர்க்கப் போராட்டம் தீவிரமடைய சலுகை, சீர்திருத்தத்தை முன்வைக்கும். வர்க்கப் போராட்டத்தைத் தடுக்க தன்னார்வக் குழுக்களைக் களத்தில் இறக்கி, சில சீர்திருத்தத்தைத் தனது விலங்கின் எல்லையில் பாதுகாக்கும். இதை இனம் காண்பதும், எதிர்த்து வர்க்க அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் இன்று ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டமாகும்.

உலகில் இன்று, மூன்றில் ஒரு பெண் மட்டுமே கல்வியறிவு பெற்றவராக உள்ளனர். இது ஆசியா, ஆப்பிரிக்காவில் பத்தில் ஒரு பெண் மட்டுமே கல்வியறிவு பெற்றவளாக உள்ளாள். (இதழ்-1998.4.4)[46] இன்று உலகில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்ணின் கல்வி என்பது பெண்ணின் கடமையுடன் தொடர்புடையதாக உள்ளது. ஆணுக்கான கல்வி ஏகாதிபத்தியச் சூறையாடலை ஒழுங்கமைப்பதற்குப் பயன்படுவது போல் பெண்ணின் கல்வி ஆணாதிக்கக் கடமைகளைச் செய்வதில் எல்லைப்படுத்தப்படுகின்றது. ஏகாதிபத்திய உலகமயமாதல் தனது சூறையாடும் தொழில் நுட்பத்தை ஒட்டி ஆணின் கல்வி எது? என்பதைத் தீர்மானிக்கின்றது. இது போல் பெண்ணை எந்தளவுக்குக் கல்வியில் ஈடுபடுத்துவது என்பதையும் எல்லைப்படுத்துகின்றது. பெண்களின் கல்வி தொடர்பாகக் கடந்து வந்த சமூகம் மத ஆதிக்கக் கருத்துகளை ஒட்டி அது விதிந்துரைத்த பெண்ணின் கடமைக்குள் பெண்ணின் கல்வியை எல்லைப்படுத்தியது.

ஏகாதிபத்தியமும், மதச் சிந்தனையும் தன்னை ஒருமுகப்படுத்திய இன்றைய வரலாற்றில் பெண்ணின் கல்வியை எல்லைப்படுத்தி விளக்கம் கொடுக்கின்றது. ஏகாதிபத்திய உற்பத்திச் சந்தைக்குப் பெண்ணின் கல்வி தேவைப்பட்ட போது எல்லாம் பெண்ணின் கல்வி மறுசீரமைப்பதும், பின் மீண்டும் வேதாளம் மரமேறிய கதையாகவும் மாறுகின்றது.

முதலாளித்துவப் புரட்சி அந்த நாடுகளின் விரிவான உழைப்பைக் கோரியது. இது பெண்ணைக் கட்டாயமாக உழைப்பில் இறக்கியது. ஆனால் கல்வியை மறுத்தது. நவீனக் கண்டுபிடிப்புகள் பெண்ணின் கல்வியை நிபந்தனையாக்கியது. ஏனெனின் பெண்ணின் உழைப்பு நவீன உபகரணத்தைக் கையாள்வதில் நிபந்தனையாக்கியது.

**பெண்ணின் மலிவு கூலியைச் சுரண்ட பெண் நவீன உபகரணத்தைப் புரிந்து கொள்ள நிபந்தனையாக்கியது.** பெண்ணின் கல்வியைக் கோரிய பூர்சுவா ஜனநாயகக் கோரிக்கைகள் எல்லாம் நவீனக் கண்டுபிடிப்புக்குச் சமாந்தரமாக வந்த போது பூர்த்தியாகி விடுகின்றது. இது அந்த வர்க்கத்தின் கோரிக்கைக்கும், ஏகாதிபத்தியச் சுரண்டலுக்குமிடையிலான மையப்புள்ளியாக உள்ளது. இது பெண் கல்வி வெற்றியல்ல. மாறாக ஆணாதிக்க சுரண்டல் கல்வியின் வெற்றியாகும். இங்கு பெண் ஆணாதிக்க ஆண் கல்வியை ஆணுக்கு நிகராகப் பெற்றுவிடுகின்றாள் அவ்வளவே. என்ன கல்வி? யாருக்காக இக்கல்வி போன்றவற்றை உள்ளடக்கப்படாத பெண்ணின் கோரிக்கைகள் ஆணாதிக்கக் கல்வியைக் கோருவதாகவே எஞ்சியது. இது ஒரு ஜனநாயகக் கோரிக்கையாக இருந்ததற்கு அப்பால் பெண்ணையும் கல்வியில் ஆணாதிக்க மயப்படுத்தியதே இதன் விளைவாகும்.

இந்த நிலையில் மூன்றாம் உலகில் பெண்களின் கல்வியைப் பெரும்பான்மையாக ஏகாதிபத்தியம் மறுக்கின்றது. இதற்குப் பெண்ணின் மீதான கடமைகளை மதம் சார்ந்து நிலைநிறுத்துகின்றது. அத்துடன் வறுமை இதைத் தீவிரமாக்குகின்றது. ஆணின் உழைப்பு சார்ந்து வாழ்ந்த பெண் தனது வீட்டுக் கடமைகளுடன் நிறைவான சுயப் பொருளாதார வாழ்க்கையை ஒழுங்கமைத்து





இருந்த சமூகம் தகர்ந்து முதலாளித்துவச் சொத்துரிமை மயப்பட்டதைத் தொடர்ந்து அடிமட்ட ஆண்களின் சொத்துரிமை, கூலி படிப்படியாக வேகமாகக் குறையத் தொடங்கியது. இதனால் குடும்பத்தில் ஆணின் உழைப்பு போதாமையால் பெண்ணின் உழைப்பு நிபந்தனையானது.

அவளை வீட்டுக்கு வெளியில் கொண்டுவந்தது இந்த முதலாளித்துவச் சுரண்டல் அமைப்பேயாகும். அதற்கு முன் வீட்டிலும், விவசாயத்திலும் அதிகமாகச் சுயப்பொருளாதாரப் போக்கில் வாழ்ந்த பெண் கூலி ஆக்கப்பட்டாள். பெண்ணின் கல்வியைப் பின் நவீனத் தொழில்நுட்பம் தீவிரமாக்கியது. சந்தைக்குரிய நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்ய உலகில் எத்தனை பேர்; என்ன நிலையில் தேவை? என்பதைப் பொறுத்து உலகமயமாதல்

பெண்ணின் கல்வியைத் தீர்மானம் செய்கின்றது. பெண்ணின் ஆணாதிக்கக் கல்வி இதன் எல்லைக்குள் ஊசலாடுகின்றது. அத்துடன் பாடசாலைகளைத் தனியார்மயமாக்கக் கோரும் உலக வங்கியின் நிபந்தனைகள் கல்வியை மேலும் நெருக்கடியின் எல்லைக்கு நகர்த்துகின்றது. இது தற்போது கிடைக்கும் ஆணாதிக்கத் தன்மையுடைய கல்வியைப் பெண்களுக்கு மறுக்கும். இதைத் தகர்க்க ஏகாதிபத்திய உலகமயமாதல் தரும் ஆணாதிக்கக் கல்வியை மறுத்தும், அதன் இசைவாக்க அனைத்து முறைகளையும் மறுத்து, மக்கள் கல்விக் கூடங்களைத் தமது சொந்த நலனுக்குப் பயன்படுத்தாத வரை கல்வியைப் பெண்ணுக்கு மறுப்பதைத் தீவிரமாக்கும். தேவைப்படும் போது இலவசக் கல்வி மூலம் ஆண் பெண்ணை உருவாக்குவதும், தேவையில்லாத போது தனியார் கல்வி மூலம் கட்டுப்படுத்தவும் என ஏகாதிபத்தியம் தனது சொந்த நரிப் புத்தியூடாக மக்களை அறிவற்ற சூனியங்கள் ஆக்குவர்.

பெண்ணின் பிள்ளைப் பேறு கடவுளின் ஆசியால் கிடைப்பது என்ற நம்பிக்கைகள் தகர்ந்து போயினும், இன்றைய வரலாற்றில் பெண்ணின் நிலை இதில் இருந்து மாறி விடவில்லை. முன்பு ஆண் இன்றி பெண் குழந்தையைப் பெறமுடியாது என்ற நம்பிக்கையால் ஆணின் பங்கு அவசியமாகியது. தற்போது அனுபவத்தாலும், நவீனக் கண்டுபிடிப்புகளாலும் இந்தக் கண்டுபிடிப்பு பெண்ணின் ஒழுக்கத்தைக் கண்டறியும் ஊடகமாக மாறியது. பின்னால் இந்தக் கண்டுபிடிப்பே பெண்ணின் கர்ப்பத்தைத் தடுக்க முடியும் என்ற அறிவியலுக்கு மேலும் வலுச்சேர்த்தது. ஆணும் பெண்ணும் சேர்ந்து சமூக இயக்கமாக வாழமுடியாத ஆணாதிக்கப் போக்கில் கருத்தடை பெண்ணுக்குச் சற்று ஆறுதல்களை வழங்குவதாக இருந்தது. அது போல் ஒழுக்கத்தைச் சோதிக்கும் ஆணாதிக்க வடிவத்தைக் கேள்விக்குள்ளாக்கியது.

பெண்ணின் இந்த ஆறுதல்கள் ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்ணின் பூர்சுவா இருத்தலுக்கு ஆறுதல் வழங்கிய போதும் இது தீர்வை வழங்கிவிடவில்லை. பெண் புதிய நெருக்கடிகளை இதனால் எதிர் கொள்வது எதார்த்தமாகியது. சமூகத்தின் குடும்பக் கட்டுப்பாடு என்பது பூர்சுவா தனத்திலும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டின் பல்வேறு நெருக்கடிக்குள்ளும் தீர்மானமாகியது. குடும்ப எல்லைக்குள் குழந்தை வளர்ப்பு, தனிமனிதப் பூர்சுவா சுதந்திரக் கற்பனைகள், குழந்தை பற்றிய எதிர்மனப்பான்மை ஆகியவை குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாக்கியது. மேற்கில் ஒரு குழந்தைக்குப் பதில் ஒரு நாய் அல்லது பூனை அந்த இடத்தை நிரப்பிக் கொண்டது. இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டில் சமூக அக்கறையைவிட இந்தப் பூர்சுவா அமைப்புக்குள் போலித்தனமான சுதந்திரத்தையும், நுகர்வையும் கோரும் பாதையில் வளர்ச்சி பெறுகின்றது. மறுபுறம் வெள்ளை இன நாடுகளில் குழந்தை பிறப்புக்கு ஊக்குவிப்பும், கறுப்பு இன நாடுகளில் குடும்பக் கட்டுப்பாடும் தீவிரமாக வெள்ளை இனவெறி கொண்ட ஏகாதித்தியங்கள் அமுல்படுத்தி வருகின்றன. உலக மக்கள் தொகையில் வெள்ளை இனம் மேலும் மேலும் சிறுபான்மையாகிச் செல்வதால் பீதியடைவது அதிகரிக்கின்றது.

மறுபுறம் வறுமையும், பூர்சுவா கண்ணோட்டமும் அற்ற மக்கள் அதிக குழந்தைகளைப் பெறுவதைப் புள்ளிவிபரம் காட்டுகின்றது. இதற்கு ஆணாதிக்கக் கல்வி அவர்களிடம் செல்லாததும் ஒரு காரணம். இந்தப் பெண்கள் நாகரிகமடைந்த ஆணாதிக்கக் கொடூரத்தைவிட குறைவான ஒடுக்குமுறையைச் சந்திப்பதும், கடின உழைப்பாளிகளாகவும் இருக்கின்றனர். கடின உழைப்பு வறுமைக்கு மேலும் அக்கம் பக்கம் சேருகின்றது.

குழந்தை இந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கொடுக்கும் ஒரே செல்வமாக இருக்கின்றது. அத்துடன் இதுவே அவர்களின் வாழ்க்கையின் பெரும் பாகத்தை எடுத்தும் விடுகின்றது. பிள்ளைகளின் வறுமை, அன்றாடத் தேவை என பெண் அவைகளையிட்டே போராடுவதும், வாழ்க்கையின் துயரத்தால் துன்புறுவதும் மிகக் கடினமான வாழ்வை வாழக் கோருகின்றது. பெண்ணின் அன்றாடப் பொழுதுபோக்கு என்பது சுமையாக மாறும் அளவுக்கு வறுமை உள்ளது. குழந்தைகள் இந்த வறுமையில் தத்தளிக்கின்ற போது. பெண் கண்ணீரில் புலம்புவது சகிக்கமுடியாத வேதனையாகின்றது.

கடினமான ஆணின் உழைப்பும், வீட்டில் எதிர்மனப்பான்மையும், பெண்ணின் இயலாமையிலான குடும்பச் சுமையும் பெண்ணினதும், ஆணினதும் வாழ்க்கையைச் சகிக்க முடியாத நெருக்கடியில் சிக்க வைத்து விடுகின்றது. குழந்தைகள் தம்மை வயதுவந்த பின் பராமரிப்பர் என்ற எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் அதிகமான குழந்தைகளைப் பெறக் கோருகின்றது.

ஆனால் இது எதிர்காலம் மீதான நம்பிக்கைகளின் மேல் நிகழ்கால வாழ்க்கையைத் தியாகம் செய்ய குழந்தைகளைப் பெறுவது அவசியமாகின்றது.

இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? சுரண்டும் வர்க்கம் வறுமையை நிபந்தனையாக்குகின்றது. வறுமை செல்வத்துக்கு எதிரான நிபந்தனையாகும். வறுமையுள்ள வரையில் குழந்தை பிறப்பில் ஏற்றத்தாழ்வு நிபந்தனையானது. ஏழை முதியோருக்கான எந்தவிதமான கொடுப்பனவும் அற்ற சமூகத்தில் அதிக குழந்தைகள் முதியோரைப் பராமரிக்கின்றனர். வறுமை ஏகாதிபத்திய





ஆணாதிக்கக் கல்வியைப் பெறுவதற்குத் தடையாகின்றது. கர்ப்பத்தடை முறையைத் தெரிந்து கொள்ள அறிவற்ற தன்மையும், சமூக வாழ்வின் மீதான நீதியற்ற தன்மையும் அதிகமான குழந்தைகளைப் பெறுவதை நிபந்தனையாக்குகின்றது.

**காட் ஒப்பந்தம்** கல்வி மற்றும் மருத்துவத்தைத் தனியார்மயமாக்க கோரும் நிபந்தனைகள் பெண்களின் கல்வி, கர்ப்பத்தடை போன்றவற்றை மறுக்கவும், மகப்பேறு இறப்பை அதிகமாக்கவும் எதிர்கால உலகமயமாதல் வழிகாட்டும். மொத்த மக்களையும் குறிப்பாக ஏழைகளையும், குறிப்பாகப் பெண்களையும் குழந்தைகளையும் மிக மோசமாகச் சிதைக்க அறைகூவுகின்றது காட் ஒப்பந்தம். இதற்கு எதிராகப் போராடாத பெண்கள் அமைப்பு பெண்களுக்கு எதிரான ஆணாதிக்கக் கோட்பாடுகளால் உருவாக்கப்பட்டவைதான். **காட் ஒப்பந்தத்திற்கு எதிரான போராட்டம் என்பது சீர்திருத்தத்தை முன்வைப்பதில்லை. மாறாகப் பொருளாதாரத்தை மக்கள் நலன் சார்ந்து மாற்றியமைப்பதே. அனைத்துச் செல்வத்தையும் மக்கள் சொத்தாகப் பிரகடனம் செய்வதாகும். அனைத்துச் செல்வத்தையும் மக்கள் மயப்படுத்துவதாகும். இது வர்க்கப் போராட்டத்தால் மட்டுமே சாத்தியமானது. தனிநபர் சொத்துக் குவிப்புக்கு எதிராக அதை மக்கள் தமதாக்குவதற்கு உள்ள ஒரே பாதை வர்க்கப் போராட்டமாகும்.** இது மட்டுமே இருக்கும் பெண்களின் கல்வியை, மருத்துவத்தை, தேவையைக் கூடப் பாதுகாக்கமுடியும். அத்துடன் இல்லாத ஏழை மக்களுக்குப் பெற்றும் கொடுக்கும். இதை மறுத்த எந்தப் பாதையும் ஆணாதிக்க வழியில் ஏகாதிபத்திய உலகமயமாதலைத் தீவிரமாக்கும்.

அதிகார அமைப்புகளில் பெண்களின் பங்கு குறித்து மேல் உள்ள புள்ளிவிபரம் அதிர்ச்சியளிக்கின்றது. நடைமுறையில் இருக்கும் இன்றைய ஆணாதிக்க ஜனநாயக அமைப்புகளில் பெண்ணின் பங்கு மிகக் குறைவாகவே உள்ளது. பெண் தன் வாக்குரிமை, பிரதிநிதித்துவம், அதில் எண்ணிக்கை உள்ளடக்கிய கோரிக்கை ஆணாதிக்க எல்லைக்குள் பெற்றுக் கொள்வதற்குக் கூட உலக நெருக்கடிகள் அவசியமாக இருந்தன.

முதலாம் உலக யுத்தமும் பின்னால் சோவியத் ரஷ்யாவின் அக்டோபர் புரட்சியின் வீச்சும், இரண்டாம் உலக யுத்தமும் பின்னால் சீனா உள்ளடங்கிய பல நாடுகளுடைய புரட்சிகளின் வீச்சுகளும், மற்ற நாடுகளில் நடந்த தேசிய மற்றும் வர்க்கப் புரட்சியின் வீச்சுகளும்தான் பெரும்பாலான நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமையைக் கொடுக்க நிர்ப்பந்தித்ததை மேல் உள்ள தரவுகள் காட்டுகின்றன. சமுதாயப் போராட்டங்களின் வரலாற்றில் பெண்ணின் பங்கு பெற்றல் தவிர்க்க முடியாத நிலையில் அவர்களுக்கு வாக்களிக்கும் ஆணாதிக்கச் சலுகைகளை வழங்க நிர்ப்பந்தித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாக்களித்த பெண்ணால் சமுதாய ஆணாதிக்கத்தையோ, பெண் மீதான கொடுமையையோ ஒழித்துக் கட்டமுடியவில்லை. வாக்களிக்கும் உரிமை பெண்ணை விடுவிக்கும் என்பது பொய்த்துப் போனதால் பின்னால் அதிகாரத்தில் பெண்கள் பங்கு கொண்டால்தான் பெண்ணின் பிரச்சினையைத் தீர்க்கமுடியும், என்று தமது கோஷத்தைப் பூர்சுவா பெண்ணியம் மாற்றிக் கொண்டது. இதன் போது ஆணாதிக்க அதிகாரத்தில் பங்கு கொண்ட பெண்கள் பெண்ணுக்கு எதிராகச் செயற்படுவதில் தம்மைச் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிறுவினர். இதுவும் பொய்த்துப் போனதால் இன்று பெரும்பான்மை இருந்தால் அல்லது சரிபாதியிருந்தால் தீர்க்கமுடியும் என்று வசதியாகத் தமது கோஷத்தை மீளவும் அதைச் சட்ட மூலம் உறுதி செய்ய பிரகடனம் செய்கின்றனர். ஆணாதிக்க அமைப்பில் ஆணாதிக்கப் பெண்ணின் அதிகாரப் பங்கீட்டை ஆணாதிக்க எல்லைக்குள் கோருவது சர்வதேச நிகழ்வாக உள்ளது. இந்த அதிகார ஜனநாயக வடிவங்கள் சுரண்டும் வர்க்கம் சார்ந்ததால் அது தீவிரமாக ஆணாதிக்க அமைப்பைப் பாதுகாக்கும். இதில் பெண்ணின் பங்கு நூறு சதவீதமாக மாறினாலும் ஆணாதிக்க அமைப்பில் மாற்றத்தை வைக்கும் அருகதையைச் சுரண்டல் வடிவம் அனுமதிக்காது. அதுவாகவே இருப்பது நிதர்சனமாக இருக்கின்றது.

உலக ஜனத்தொகையில் 52 சதவீதமாக உள்ள பெண்கள் அரசியலிலும் அதிகாரத்திலும் அதாவது முடிவு எடுக்கும் பதவிகளில் பதினொரு சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ளனர். (1.5.1993)[6] இது ஒருபுறம் பெண்ணின் ஜனநாயகக் கோரிக்கையாக உள்ளது. ஆனால் ஆணாதிக்க அமைப்பில் பெண்ணின் பங்கு பெற்றல் பெண்ணுக்கு எதையும் பெற்றுத்தராது என்பது எதார்த்தமாகும். இதைபோல் இப்பெண்கள் ஆணாதிக்கச் சுரண்டல் வர்க்க அதிகாரத்தைப் பெண்கள் மீது திருப்புவர் என்பதும் எதார்த்தம் ஆகும். இருந்தபோதும் கூட பெண் ஆணுக்கு நிகராக அதைப் பெற்றுக் கொள்ளும் உரிமையை மறுக்கும் அனைத்து ஆணாதிக்கக் கண்ணோட்டத்திற்கும் பாட்டாளி வர்க்கம் எதிரானது. இதற்கு எதிராகப் போராடும் அதே நேரம் இந்தப் பாராளுமன்றத்தில் பெண்ணின் எண்ணிக்கை பெண்ணை விடுவிக்காது என்பதையும் அம்பலப்படுத்தும். ஆணுக்குச் சமமாகக் கிடைக்கும் பெண்ணின் அதிகாரம் பெண்ணை ஒடுக்கவே மீளவும் பயன்படுத்தப்படும் என்பதைப் பாட்டாளி வர்க்கம் அம்பலப்படுத்தும்.

ஆணாதிக்கம் விட்டுக்கொடுக்க மறுக்கும், ஆணாதிக்கப் பெண்ணின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை கோரிக்கையை ஆதரிக்கும் அதேநேரம் அதில் பங்கு கொள்வது ஆணாதிக்கத்தை அமுல்படுத்தி மக்களைச் சுரண்டவே பயன்படும் என்பதைப் பாட்டாளிவர்க்கம் அம்பலப்படுத்தும். பாட்டாளிவர்க்கம் ஆணாதிக்க அமைப்பில் பங்கு கொள்வது என்பதற்குப் பதில் தனது சொந்த அதிகாரத்தைக் கைப்பற்ற இந்த ஆணாதிக்கப் பாகுபாட்டைப் பயன்படுத்தும். இந்தப் போராட்டம் வீட்டுக்கு வெளியில் பெண்ணைக் கொண்டு வரவும், அரசியலில் பங்கு கொள்வதையும், புரட்சியில் பங்கு கொள்வதையும் ஊக்குவிக்கும். இதன் மூலம் பெண்ணின் பங்கைக் கட்சியின் தலைமை முதல் அணிகள் ஈறாக உள் இழுத்துக் கொள்ள இது பயன்படுத்துகின்றது.





இதன் மூலம் உண்மையான பெண்ணின் பிரதிநிதித்துவத்தை அதிகார அமைப்புகளில் உறுதி செய்கின்றது. பரந்துபட்ட பெண் பிரதிநிதித்துவக் கோஷத்தைப் பாட்டாளி வர்க்கம் தனது சொந்த வர்க்கப் போராட்டத்தின் ஊடாக அரசியல் மயப்படுத்தி ஆணாதிக்கத்தைத் தனது சொந்த அதிகாரத்தின் ஊடாகக் களைந்தெறிய போராடும். பெண்களின் அரசியல் மட்டத்தில் பின்தங்கிய போக்கை மாற்றியமைப்பதன் மூலம் முன்னேறி வழிகாட்ட இக்கோஷத்தைப் பாட்டாளி வர்க்கம் அரசியல் மயப்படுத்தும். இது பெண்ணின் விடுதலைக்குத் தீர்க்கமான வழிகாட்டுதலைச் சொந்த வர்க்கத் தலைமையில் ஆணாதிக்கச் சுரண்டல் சமுதாயத்திற்கு எதிராக முன்நிறுத்தி போராடுவதைத் தீவிரமாக்கும்.

உலகில் பெரும்பான்மையான நாடுகளில் இன்றும் ஆண்களை விட பெண்கள் 80 சதவீதம் அதிகமாக வீட்டில் வேலை செய்கின்றனர். உலகில் 70 சதவீதமான பெண்கள் வறுமையில் வாடுகின்றனர். உலகில் பெண்களின் கூலி ஆணைவிட 50 முதல் 80 சதவீதம் குறைவானதாகும். உலகில் 20 முதல் 50 சதவீதமான பெண்கள் பாலியல் வதைக்கு உட்படுத்தப்படுகின்றனர். உலகில் 22 இலட்சம் பெண்கள் சுற்றுச் சூழல் மாசடைவதால், அசுத்தப்படுவதால் வருடாவருடம் இறக்கின்றனர். ஆரம்பக் கல்வியை உலகில் ஆண்கள் 90 சதவீதம் பெற பெண்கள் 75 சதவீதமே பெறுகின்றனர்.[2]

இப்புள்ளி விபரங்கள் எமக்கு எதை விளக்குகின்றது? வீட்டில் பெண் உழைப்பதைக் காட்டுகின்றது. அதுவும் ஆணைவிட அதிகமாக 80 சதவீதத்தைச் சம்பளமின்றி அழுந்திக் கிடப்பதைக் காட்டுகின்றது. வீட்டுக்கு வெளியில் உழைக்கப் புறப்பட்டால் உலகளவில் 50 முதல் 80 சதவீதமான சம்பளத்தை ஆணைவிடக் குறைவாக வழங்கி புறக்கணிப்பதும் வெளிப்படுகின்றது. பின்னால் இப்பெண்கள் உலகளவில் வறுமையில் சிக்கியிருப்பதையும் காட்டுகின்றது. **கடின உழைப்பு மதிப்பற்று பட்டினியில் உழலும் உலகத்தில் ஜனநாயகம் பூத்து குலுங்குகின்றது?!** கடின உழைப்பைச் செய்யும் மனிதனைச் சுரண்டி சொகுசாக விதம்விதமாக உழையாதவன் வாழ, உழைத்தவன் பட்டினியில் பரிதவித்து கிடக்கின்றான். இது போல் பெண்களின் கடின உழைப்பு சந்தைப் பெறுமானம் இழந்து பட்டினியில் சிக்கித் தவிக்கின்றது.

பெண்ணின் உழைப்பு மதிப்பிழந்து இருக்க காரணம் என்ன? இந்த சந்தையமைப்பு முறையே ஒழிய வேறு ஒன்றுமல்ல. இந்தச் சூறையாடும் சந்தையமைப்பு முறை மாறாமல் பெண்ணின் உழைப்பு மதிக்கப்படமாட்டாது. மாற்றப்பட வேண்டுமாயின் அது **உழைப்பை உழைப்பாக மதிக்கும் சமூகத்தின் தேவையை ஏற்றுக் கொள்ளும் புரட்சி அவசியமாகின்றது.** வேறு சீர்திருத்தங்கள் கோரிக்கைகள் இதில் இருந்து பளுவைக் குறைக்கவும் அல்லது மீள அதிகரிக்கவும் காலத்துக்குக் காலம் முடிகின்றதே ஒழிய மாற்றம் ஏற்படுவதில்லை. இம்மாற்றம் கூட நவீனக் கண்டுபிடிப்புகளை ஒட்டி நிகழ்கின்றதே ஒழிய ஆணாதிக்கத்தைக் கடக்கும் பாதையில் நிகழ்வதில்லை. இப்படி முன்னேறுவதாகக் காணும் போக்கு கானல்நீர்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் 20 முதல் 50 சதவீதமாக உள்ளது. பெண் என்பவள் பாலியல் பண்டமே. இதை அனுபவிப்பது ஆணின் கடமை என்ற உலகமயமாதலின் நுகர்வுச் சந்தைக் கண்ணோட்டம் என்றுமில்லாத அளவில் பெண்ணை வன்முறைக்கு உள்ளாக்குகின்றது. கடின உழைப்புடன், சந்தைப் பெறுமானம் இழந்து, பட்டினியுடன் இருப்பவள் மீது குதறும் பாலியல் வக்கிரம் இந்த ஜனநாயகத்தின் சிறந்த கொடையாகும்?! இந்தப் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டு வீட்டில் வேலைக்காரியாகவும், எதிர்த்துக் கேளாத முதலாளியின் நாயாகவும் வாழ அவளின் கல்வி சூனியம் நிபந்தனையாக உள்ளது.

ஐக்கிய நாட்டுச்சபை அறிக்கை ஒன்றில், ஆப்பிரிக்காவில் 1,000 குழந்தைகள் பிறக்கும் போது 175 குழந்தை இறக்க, இந்தியா போன்ற வளரும் நாடுகளில் 100 ஆக இருக்க, முன்னேறிய நாடுகளில் 15 ஆக உள்ளது. அதாவது வறுமையில் உள்ள 100 கோடி மக்களில் 55 கோடி மக்கள் இரவுப் பட்டினியுடன் படுக்கச் செல்கின்றனர். 100 கோடி முதியோர்கள் கல்வி அறிவு அற்றவராக இருக்க 50 கோடி சிறுவர்கள் பாடசாலை செல்வதில்லை. உலக மொத்த வருமானத்தில் 83 சதவீதத்தை உலகில் உள்ள மேல்மட்டத்தைச் சேர்ந்த 20 சதவீதம் பேர் அனுபவிக்க, இன்னுமொரு அடிநிலை மக்களான 20 சதவீதத்தினர் உலக வருமானத்தில் 1.5 சதவீதத்தையே பெறுகின்றனர். இதையும் கொள்ளையடிக்க பின்நவீனத்துவப் பொருளாதார ஏகாதிபத்தியம் தீவிரமாகக் களத்தில் இறங்கி களமாடுகின்றது. மிகுதி 15.5 சதவீதத்தையே 60 சதவீதமான பிரிவு, தனது மத்தியதர வர்க்கக் கனவுடன் வறுமையில் ஊசலாடுகின்றது. உலகில் எழுத்தறிவின்மை 60 சதவீதமாக இருக்க, பெண்ணின் வறுமை 70 சதவீதமாக உள்ளது. இந்த பெண்களில் 37.4 கோடி பெண்கள் இந்தியாவில் உள்ளனர்.

உலக ஜனத்தொகையில் இருந்து ஆண்டுக்கு ஒரு இலட்சம் பெண்கள் காணாமல் போகின்றனர். அமெரிக்கா அல்லாத உலகில் ஒரு சதவீதப் பெண்களே ஆண்களுக்குச் சமமான உயர் பதவிகளில் உள்ளனர். இதைக் கடந்து ஆண்கள் நிலையை அடைய 475 ஆண்டுகள் செல்லும்.[6]

உலகளாவிய ரீதியில் பட்டினி வாழ்க்கை என்பது விதியாக உள்ளது. 55 கோடி மக்கள் இரவுப் பட்டினியுடன் படுக்கின்றனர் எனின் அவர்களில் பெரும்பான்மையோர் பெண்கள் என்பதும் அதிசயமற்றது. ஒருபுறம் உலகச் செல்வத்தில் 20 சதவீதத்தினர் 83 சதவீதமான செல்வத்தை அனுபவிக்க, இன்னுமொரு இருபது வீதம் பேருக்கு உலகச் செல்வத்தில் கிடைப்பது 1.5 சதவீதம் மட்டுமே. இந்த நிலையைத்தான் நாம் ஜனநாயகத்தின் வடிவமாக நியாயப்படுத்துகின்றோம். மிகுதி 15.5 சதவீதச் செல்வத்தை அனுபவிக்கும் 60 வீதமான மத்தியதர வர்க்கம் மேல் வர்க்கத்திற்கு முண்டு கொடுக்கின்றது.

வறுமையில் பெண்களின் சோகமும், கண்ணீரும் இந்த ஜனநாயக அமைப்பில் வளர்த்தெடுக்கப்படுகின்றது. **ஆணாதிக்கச் சுரண்டல் அமைப்பில்**





**பெண்கள் இரண்டாம் தர பிரஜையாக வாழும் வரை பட்டினியும், கண்ணீரும் அவர்களின் உடன்பிறப்பாகின்றது.**

முதலாளித்துவ அமைப்பில் சிறுவர் உழைப்பு அதன் அஸ்திவாரமாகியதால் இன்று 100 கோடி மக்கள் கல்வி அறிவற்ற இயந்திரமாக்கப்பட்டனர். இதில் பெண்கள் தொகையே அதிகமானது. ஆணாதிக்கக் கல்வி சுரண்டும் வர்க்கத் தேவையுடன் அமைவதால் அது ஏற்றத் தாழ்வான அலை வீச்சுக்குள்ளாகின்றது. ஏகாதிபத்தியப் பொருளாதார நெருக்கடி கல்வியை மறுப்பதைத் தீவிரமாகவும், சந்தை விரிவு அடையும் போது கல்வி வேகமாகவும் வளர்ச்சி காண்கின்றது. மக்களின் தேவைக்கு உரிய கல்வி என்பதற்குப் பதில் சுரண்டும் சந்தைக்கு ஏற்ற சுரண்டும் கல்வி மனிதனை முடமாக்குகின்றது. அத்துடன் நுகர்வுச் சந்தையை விரிவாக்கும் கல்வி கட்டமைக்கப்படுகின்றது. **இன்றைய கல்வி என்ன என்பதைக் காட் ஒப்பந்தமும், உலக வங்கியும் தீர்மானித்து அமுல் செய்யக் கோருவது அப்பட்டமான நிர்வாணமாக உள்ளது.**

இன்றைய நிலையில் பெண் சமுதாயத்தில் உயிர் வாழ்தல் என்பது அர்த்தமற்றதாக மாற்றப்படுகின்றது. இது வருடாவருடம் ஆணாதிக்கக் கொடூரத்தில் இருந்து தப்ப, பெண்ணாகப் பிறப்பதைச் சமூகம் அங்கீகரிப்பதில்லை. இதனால் வருடாவருடம் ஒரு இலட்சம் பெண்கள் உலக ஜனத்தொகையில் இருந்து காணாமல் போகின்றனர். இது பூர்சுவா பெண்ணின் உடல் சுதந்திரமான கரு அழிப்பிலும், பின் ஆணின் ஆணாதிக்கக் கருஅழிப்பிலும், (சிசுக்கொலை) குழந்தைக் கொலையிலும், வரதட்சணைக் கொலையிலும் அரங்கேறுகின்றது.

பெண் இன்றைய நிலையில் இருந்து இந்தச் சுரண்டல் அமைப்பில் ஆணின் நிலையை வந்தடைய 475 வருடங்கள் தேவை என்பதைப் புள்ளிவிபரக் கணிப்பு தெரிவிக்கின்றது. இன்றைய பூர்சுவா பெண்ணியல்வாதிகளும், அராஜகப் பெண்ணியல்வாதிகளும் (தீவிரப் பெண்ணியல் என்று கோஷம் போடுபவர்கள்) பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு எதிராக வெட்டிப் பிடுங்கும் இந்தச் சமுதாய அமைப்பில் ஆணுக்குச் சமமான வகையில் அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்ள தேவையான காலம் சில நூறு வருடங்கள்.

**ஆனால் பாட்டாளி வர்க்கப் புரட்சி இதைவிட வேகமான பாய்ச்சலைக் கொண்டது.** இந்த நீண்ட காலத்தில் (475 வருடம் கழித்து) அதிகாரத்தைப் பெறுபவர்கள் ஆண் அதிகாரத்தை ஒழிக்க முடியாது என்பது இதில் உள்ள அடுத்த உண்மையாகும். ஆனால் பூர்சுவா வர்க்கப் பெண்கள் இதைப் புரிந்துக் கொள்ள மறுக்கின்றார்கள். அவர்கள் ஆணாதிக்கச் சொத்துரிமையைத் தகர்ப்பதை எதிர்ப்பதால் பாட்டாளி வர்க்க எதிர்ப்பைக் கட்டமைக்கின்றனர் அல்லது பாட்டாளி வர்க்க உயிரோட்டமான வர்க்கப் புரட்சியைச் சிதைத்து அதைப் பூர்சுவா கண்ணோட்டத்துக்கு இசைவாக்குகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 16. ஆணாதிக்க ஜனநாயகத்தில் கற்பழிப்புகள்

கற்பழிப்பு என்பது வரலாற்று வழியாகக் காலாகாலமாக ஆணாதிக்கச் சமுதாயத்தின் விளைவாக உள்ளது. ஆண் சமுதாயத்தின் சுதந்திரமான ஆணாதிக்கப் பிறவியாக இருந்தபடி, அதன் அதிகாரப்படி நிலையில் பெண் மீதான வன்முறையைக் கையாளுகின்றனர். இதன் போது சமுதாயம் எதிர்த்து நிற்கின்றது. இது வரலாற்றின் படி நிலையில் எங்குமே நீடித்துக் கிடக்கின்றது. இந்த வன்முறையின் போது எதிர்த்துப் போராடியவர்கள் கடவுளாக்கப்பட்டு வழிபாட்டுக்கு உரியவரானார்கள். இந்த வகையில் பணங்குடியில் வசித்த இஸ்லாமிய தையற்காரன் போராடி மடிந்த சம்பவத்தைப் பார்ப்போம்.

அந்த ஊரில் அழகான தயிர்க்காரி தினசரி காலையில் தயிரை ஊரிலிருந்து எடுத்துச் செல்வது வழக்கம். இந்தத் தயிர்க்காரியைக் கற்பழிக்க ஒருவன் முயன்ற போது, அவள் அந்தத் தையற்காரன் கடையில் அடைக்கலம் புகுகின்றாள். அந்த நிலையில் தையற்காரன் அப்பெண்ணைப் பாதுகாக்க முயல அவனைக் கொன்று விடுகின்றான் கற்பழிக்க வந்தவன். இதைத் தொடர்ந்து அந்தத் தையற்காரன் அந்த மக்களின் "வழிபாட்டுக்குரிய மாடனாக (இறைவனாக)"[51] இன்றும் இருக்கின்றான். இந்தச் சம்பவம் ஆணாதிக்கத்துக்கு எதிரான மக்களின் பொதுத்தன்மையைக் காட்டுகின்றது. ஆனால் இந்தக் கொடுமை முன்பைவிட அதிகரித்துச் செல்வது மட்டும் உண்மையாகும். அதை நாம் ஆராய்வோம்.

கனடா, நார்வே, நியூசிலாந்து, நெதர்லாந்து, பார்ப்படாஸ் ஆகிய நாடுகளில் மூன்றில் ஒரு பெண் பிள்ளைப்பருவத்தில் பாலியல் வன்முறைக்கு உள்ளாகின்றனர். ஆசியா மற்றும் பல இடங்களில் வருடம் 10 இலட்சம் பெண்கள் புதிதாக விபச்சாரத்தில் தள்ளப்படுகின்றனர். உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான பெண்களின் பெண் உறுப்புகள் வெட்டப்படுகின்றன. கொரியா, சிலி, பாப்புவா நியூ கினி, மெக்ஸிகோ ஆகிய இடங்களில் திருமணமான பெண்களில் மூன்றில் இருவர், வீட்டு வன்முறைக்கு உள்ளாகின்றனர்.





அமெரிக்கா, நியூசிலாந்து, கனடா, பிரிட்டீஸ் ஆகிய நாடுகளில் ஒவ்வொரு ஆறு பெண்களுக்கு ஒரு பெண் வீதம் கற்பழிக்கப்படுகின்றாள். கென்யா, தாய்லாந்து, பாப்புவா நியூ கினி, பிரேசில், வங்காளத் தேசம் ஆகிய நாடுகளில் கொல்லப்பட்ட பெண்களில் பாதிப் பேர், கடந்த கால அல்லது தற்காலக் கணவனால் கொல்லப்படுகின்றனர்.[31] உலகமயமாதலின் கொடூரமான சொந்த ஆணாதிக்க ஜனநாயகத்தையே மேலே நாம் காண்கின்றோம்.

இந்தப் பெண்களின் துயரத்தை இந்த அமைப்பும், இந்த ஆணாதிக்கச் சட்டமும், இந்தப் பண்பாட்டுப் பொருளாதாரமும் தீர்க்கும் தகுதியை இழந்த, இழிந்து போன மனித வரலாற்றில் நாம் நிற்பதை நிர்வாணமாக்குகின்றது. **இந்த அமைப்பில் எமக்கு முன்னால் அமைதியான, சுதந்திரமான, ஜனநாயகமான வாழ்க்கை என்பது அப்பட்டமான ஏமாற்று என்பதைப் புள்ளிவிபரங்கள் தெளிவாக நிரூபிக்கின்றன.** வாழ்க்கையின் மாயை கண்ணீரின் பின்னால் கானல்நீராகின்றது. நாகரிகமான பகட்டுத்தனமான ஆடம்பரத்தில் சொக்க வைத்து, சூறையாடி ஆணாதிக்க அடக்குமுறையை நிறுவும் இந்த உலகத்தில், எமது மௌனங்கள் அதன் அங்கீகாரமாகி விடுகின்றன. இது சமூக நடைமுறையாகி விடுகின்றது. இது அனைத்துத் தளத்திலும் தனது வரைமுறைக்குட்பட்டுத் தன்னை வெளிப்படுத்துகின்றது.

அமெரிக்காவின் ஆணாதிக்கத் தந்தை அமைப்பில் தொழில்புரியும் பெண்கள் மீது, மூலதனத்தின் காவலர்கள் தமது ஜனநாயகத்தில் நடத்திய பாலியல் தொல்லைகள் எல்லையற்று விரிந்து செல்லுகின்றது. 1990-இல், தொழில் சம்பந்தமான கமிசனுக்குப் பாலியல் தொல்லை சார்ந்து வந்த புகார்கள் 6,127 ஆகும். இது 1993-இல், 11,903 என அதிகரித்தது. பாலியல் வன்முறை, தொல்லைப் புகார்கள் பொதுவாக வந்துவிடுவதில்லை. அற்பக்கூலியை இழந்து நடுவீதியில் விபச்சாரியாக வாழ்வதைவிட, மூலதனத்தின் சொந்தக்காரர்களின் ஆசைக்கு இணங்கிப்போவது அல்லது மௌனமாகச் சகித்துப் போவதே இந்த ஜனநாயக உலகத்தில் குறைந்த பட்சம் உயிர்வாழத் தகுதியாகி விடுகின்றது.

கனடாவில் தொழில் சார்ந்த மூலதன ஆணாதிக்க அதிகாரத்தில், கையாளப்படும் ஜனநாயகப் பாலியல் வன்முறைக்கு 10 உழைக்கும் பெண்களுக்கு 4 பேர் சந்திக்கின்றனர். ஜப்பனில் 1991-இல், நடந்த ஆய்வில் 70 சதவீதமான பெண்கள் இக்கொடுமைகளைச் சந்தித்தனர். அதேநேரம் வேலைக்குப் போகும் போதும், வரும் போது 90 சதவீதமான பெண்கள் பாலியல் தொல்லையைச் சந்தித்தனர். ஆஸ்திரேலியாவில் 31 சதவீதமான பெண்கள் வேலை செய்யும் இடத்தில் பாலியல் தொல்லையைச் சந்தித்ததுடன், அதைப் புகார் மனுவும் செய்தனர். பிரான்சில் 1991-இல், செய்த ஆய்வில் 21 சதவீதமான பெண்கள் இந்தத் தொல்லையை அனுபவிப்பதாகக் கூறினர். இதுவே நெதர்லாந்தில் 58 சதவீதமாக இருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலியல் தொல்லை, வன்முறை என்பது சுதந்திரமான மூலதன ஜனநாயக அமைப்பின் பொது வடிவமாகும். பெண்கள் வேலைக்குச் சேர்க்கின்ற போது நடத்தப்படும் அணிவகுப்புத் தேர்வுகளில் (நேர்முகத் தேர்வு) பெண்ணின் பாலியல் இணக்கத் தன்மை வேலைக்கான நியமனமாகின்றது. இந்த இணக்கத் தன்மையை வெளிப்படுத்தும் மறைமுகக் கல்வி மேற்கில் ஊக்குவிக்கப்படுகின்றது. எப்படி ஒரு அதிகாரி முன் நடக்க வேண்டும்? எப்படி கவர வேண்டும? என்ற எண்ணற்ற வழிமுறைகள், அதாவது மற்ற போட்டியாளனிடம் இருந்து எந்த வகையில் தகுதியுண்டு? என்பதை நிறுவுவது அவசியமாக உள்ளதைக் கல்வி அமைப்புகள் கூறத் தயங்கவில்லை. மேல் அதிகாரிகளினதும், மூலதனத்தின் தந்தையினதும் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்வது ஒரு ஜனநாயக வடிவமாகி விடுகின்றது. கிளிண்டன் (மோனிகா லெவின்ஸ்கி) கதையும் இந்த வகைப்பட்டதே. எதிர்த்து வரும் புகார்கள் விதிவிலக்கானவை மட்டுமே.

அடுத்து கற்பழிப்புகளைப் பற்றி ஆராய்வோம். அண்மையில் ருவான்டாவில் 10 இலட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது, பெண்கள் பாரிய கற்பழிப்புக்கு உள்ளானார்கள். பெண்களைப் பிடித்து கற்பழித்ததன் தொடர்ச்சியில் பலர் கொல்லப்பட, தப்பியவர்களில் 3.5 சதவீதப் பெண்கள் கர்ப்பமானார்கள். பல ஆயிரம் பெண்கள் கருச்சிதைவைச் செய்ய, பிறந்த குழந்தைகளைச் சிலர் அனாதை இல்லத்தில் சேர்க்க, சிலர் வீதியோரத்தில் விட்டுச் சென்றனர். வீதியோரத்தில் விடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 2,000 முதல் 5,000 வரை என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கற்பழிப்பில் ஆணாதிக்க இனவாதத்தையும், அதன் பிரமாண்டமான பாலியல் வன்முறையையும் மீண்டும் ஒருமுறை உலகுக்கு நிர்வாணமாக்கியுள்ளது.

1990-இல், அமெரிக்காவில் கற்பழிப்பு 4 மடங்கு அதிகரித்ததுடன் 5 பெண்களுக்கு ஒரு பெண் கற்பழிக்கப்படுகின்றாள். வருடம் 30 முதல் 40 இலட்சம் பெண்கள் அடித்துத் துன்புறுத்தப்படுவதுடன் இதனால் 10 இலட்சம் பெண்கள் மருத்துவத் தேவைக்கு மருத்துவமனைக்குச் செல்கின்றனர். இந்த வகையில் 1,000 பெண்களுக்கு 23.5 சதவீதமாக வெள்ளை இனப் பெண் அனுபவித்த இந்த சித்திரவதையைக் கறுப்பு இனப்பெண் 35.3 சதவீதமாக அனுபவிக்கின்றாள்.[48] அமெரிக்காவில் 12 வினாடிக்கு ஒரு பெண் தாக்கப்படுகின்றாள். ஒவ்வொரு வினாடிக்கும் ஒரு பெண் கற்பழிக்கப்படுகின்றாள்.[42] உலகில் உன்னதமான ஜனநாயகம் பூத்துக் குலுங்கும் நாடாகவும், உலக பொலிஸ்காரனாகவும் உலவும் சொர்க்கப் பூமியில் ஒவ்வொரு நிமிடமும் பெண் தாக்கப்பட்டுக் கற்பழிக்கப்படுகின்றாள். எதையும் சொல்ல, செய்ய உரிமையின் பிறப்பிடமாக உதித்த பன்னாட்டு நிறுவனங்களின் நுகர்வுப்பண்ட விற்பனையைப் பெருக்க பெண்கள் பாலியல் நுகர்வுப் பண்டமாகக் காட்டியும், ஏமாற்றியும் பாலியல் உச்சத்தில் பணம் திரளும் போது பெண்களை அநாதைகளாக்கி வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதையே இது காட்டுகின்றது. இதை மற்ற நாடுகளில் பார்ப்போம்.





பிரெஞ்சு சிறைகளில் தண்டனை அனுபவிப்பவர்களின் பாலியல் குற்றம் முதன்மையானதாக உள்ளது. (12.4.2000)[44]

அட்டவணை - 10

| | |
|---|---|
| கற்பழிப்பு மற்றும் பாலியல் குற்றம் | 22 சதவீதம் (6,763 பேர்) |
| களவு | 17 சதவீதம் |
| போதை வஸ்து கடத்தல், விற்பனை | 15 சதவீதம். |

பாலியல் சார்ந்த குற்றங்கள் சமூகமயமாகி வருவதை இது காட்டுகின்றது. சுதந்திரம், ஜனநாயகம் எந்தளவுக்குத் தனிமனித வாதத்தால் வக்கிரப்படுகின்றதோ, அந்தளவுக்குப் பாலியல் வன்முறை வளர்ச்சி காண்கின்றது. 1984-இல், இருந்து 1997 வரை கால இடைவெளியில் 15 வயதிற்கு உட்பட்ட பெண்களின் கற்பழிப்பு 700 சதவீதம் அதிகரித்துள்ளது. 1998-இல், 7,828 பொலிசில் பதிவான பாலியல் வன்முறை கடந்த 25 வருடத்தில் ஐந்து மடங்காக அதிகரித்துள்ளது. பாலியல் குற்றத்திற்காக வருடாவருடம் தண்டனை வழங்கப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்படுவது அதிகரித்துச் செல்வதைப் புள்ளிவிபர ரீதியாகப் பார்ப்போம்.

அட்டவணை - 11

| ஆண்டுகள் | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தப் பாலியல் வன்முறைகள் | 574 | 644 | 677 | 731 | 913 | 892 | 1045 | 1061 | 088 | 1278 | 1469 | 1636 |
| 15 வயதுக்குட்பட்ட வன்முறைகள் | 94 | 155 | 159 | 234 | 329 | 359 | 295 | 271 | 303 | 335 | 399 | 475 |

பாலியல் வன்முறை அதிகரித்துச் செல்ல உலகமயமாதலின் பண்பாட்டு வீக்கம் காரணமாகும். காதலை வக்கிரமாக்கி, பெண்ணின் உறுப்பைப் பண்டமாக்குகின்ற போது, அதை நுகர **வன்முறை ஓர் ஊடகமாகின்றது.**

பிரான்சில் 70 சதவீதமான கற்பழிப்பு குடும்பத்துக்குள் நடக்கின்றது. வியட்நாமில் 70 சதவீதமான விவாகரத்து கணவனின் கற்பழிப்பால் நடக்கின்றது. குவாத்தமாலாவில் 49 சதவீதமான கற்பழிப்பு வீட்டுக்குள் நடக்கின்றது. வீட்டில் நடக்கும் கற்பழிப்பு கோஸ்ரோரிக்காவில் 54 சதவீதமும், ஜப்பானில் 59 சதவீதமும், தான்செனியாவில் 60 சதவீதமும், பாகிஸ்தானில் 80 சதவீதமாகவும் உள்ளது. இந்தியாவில் வருடம் 5,000 பெண்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். 30 ஆப்பிரிக்க நாடுகளில் 13 கோடி பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த நாடுகளில் ஒவ்வொரு நாளும் 2,000 பெண்கள் பல்வேறு பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.[2] அமெரிக்காவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1993-இல், அறிவிக்கப்பட்ட கற்பழிப்பு 1,50,000 ஆகும். வளரும் நாடுகளில் மூன்றில் ஒரு பெண் ஆண்களால் துன்புறுத்தப்படுகின்றாள். அதே நேரம் உலகில் ஒவ்வொரு 2,000 பெண்ணுக்கும் ஒரு பெண் கற்பழிக்கப்படுகின்றாள். (15.4.1995)[6]

அட்டவணை - 12




1987 முதல் 1993 வரை இந்தியாவில் ஒரிசா மாநிலத்தில் வழக்கு விசாரணைக்கு வந்த 1,688 கற்பழிப்பு வழக்குகளில் 27 பேர் மட்டுமே தண்டிக்கப்பட்டுள்ளனர். இது போன்று மராட்டிய மாநிலத்தில் விசாரணைக்கு வந்த 68 வழக்குகளில் 14 பேர் மட்டுமே தண்டிக்கப்பட்டுள்ளனர். இந்தவகையில் கற்பழிப்பு வழக்குகளில் பெண்களை விபச்சாரிகள் என நிறுவுவதும், அவர்களை அவமானப்படுத்துவதன் மூலமும் நீதிமன்றம் ஆணாதிக்க நீதிமன்றமாகவே செயற்பட்டு வருகின்றது.. இது போன்று பல கற்பழிப்புகள் வெளியில் வராமல் இருப்பதுடன், பொலீஸ் வழக்கைப் பதிவு செய்ய மறுப்பதும், மருத்துவர்கள் கற்பழிப்பை உறுதி செய்ய மறுப்பதும், பொலீசே கற்பழிப்பதும் சர்வ சாதாரணமான ஓர் இயல்பான விடயமாக மாறிவிடுகின்றது. இந்தியாவில் வருடம் 20,000 கற்பழிப்பு வழக்குகள் வருவதுடன் அதில் 100 பேர் தண்டிக்கப் படுவதே அபூர்வம் என்ற நிலைக்கு இன்று ஆணாதிக்க ஆட்சி நடக்கிறது.[48]

பெண் மீதான வன்முறை வீட்டில் இருந்து தொடங்குவது பொது நிகழ்வாக உள்ளது. மேல் உள்ள புள்ளிவிபரம் அதைத் துல்லியமாக்குகின்றது. குடும்பத்தில் ஏற்பட்டு வரும் அன்னியப்படல் பாலியல் மீது அதிருப்தியைத் தோற்றுவிக்கின்றது. உலகளாவிய நுகர்வுக் கலாச்சாரம்





வீட்டுக்குள் புகுந்த நிலையில் குடும்பத்தில் அதன் தாக்கம் குடும்ப அமைப்பை நொறுக்குகின்றது. இது எல்லாத் துறையிலும் தனிமனித வாதத்தை முதன்மைப்படுத்துகின்றது. இந்த முதன்மைப்படுத்தல் பாலியலில் புதிய நெருக்கடியைத் தோற்றுவித்து ஆண் பெண் விலகலைப் பறைசாற்றுகின்றது. பரஸ்பரம் இருவரும் நிம்மதியை இழந்த வாழ்க்கை பாலியலால் மேலும் நெருடலுக்குள்ளாகின்றது. இதனால் பெண் மீதான வன்முறை நிகழ்வது குடும்பத்தில் அதிகமாக உள்ளது. அது சொந்தக் கணவன், சொந்த உறவினர், சொந்தத் தந்தை, சொந்தச் சகோதரன் என்ற இடத்தில் இருந்தே தொடங்குகின்றது. இது அடுத்தக் கட்டமாக பெண்ணால் ஆண்களுக்கு நிகழ்வது அண்மைக்காலமாகப் பதிவாகுவது அதிகரித்துள்ளது.

பாலியல் வன்முறை ஆண்களால் நிகழ்த்தப்படுவது என்ற பொதுப்பார்வை இன்று மாறியுள்ளது. ஆண்கள் மீது, குறிப்பாகச் சிறுவர் மீது தாய், சகோதரி, உறவினர் என்ற வகையில் வீட்டுக்குள்ளான பாலியல் வன்முறை அதிகரித்துள்ளது. இதைச் சிறுவர் பகுதியில் மேலும் பார்ப்போம். முதலில் ஆண் பெண்ணுக்கிடையில் தொடர்புள்ள குடும்பம் இன்று வன்முறைக்கான பொதுவிடயமாக மாறியுள்ளது. பெண்களின் விழிப்புணர்ச்சி மற்றும் பெண் ஆணாதிக்க மயமாதல் போன்ற விளைவால் குடும்பத்தில் பாலியல் நெருக்கடி வன்முறை மூலம் தீர்க்க இன்றைய ஏகாதிபத்தியக் கலாச்சாரம் உந்துதல் அளிக்கின்றது. இந்த நிலைமை மாற்றம் அடைய முடியாத வகையில் பெண்கள் மீதான பாலியல் வன்முறை அதிகரிப்பு நாலுகால் பாய்ச்சலில் எகிறிச் செல்லுகின்றது. இதை ஆராய பிரான்சின் பாலியல் வன்முறை பற்றிய புள்ளி விபரத்தைப் பார்ப்போம்.

பிரான்சில் பெண்கள் மீதான பதிவு செய்யப்பட்ட பாலியல் வன்முறைகளை அட்டவணை: 13-இல், காணலாம்.[52&33]

அட்டவணை - 13

| வகை ஆண்டு | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 |
|---|---|---|---|---|---|
| கற்பழிப்பு | 5,605 | 6,526 | 7,350 | 7,191 | 8,213 |
| மற்றவை (கடுமையானது) | 11,192 | 12,661 | 11,503 | 12,056 | 13,923 |
| இதில் சிறுமிகள் மீது (சதவீதத்தில்) | - | - | 61.58% | 60.76% | 61.67% |

ஜனநாயகம் இந்தச் சமூகத்துக்கே உரிய வகையில் நிலவும் பட்சத்தில் கற்பழிப்பு மற்றும் வன்முறை குறைந்து செல்ல வேண்டும். ஆனால் அதிகரித்து செல்லும் போது நமக்குக் காட்டுவது இந்த ஜனநாயகம் பெண்ணுக்கு எதிரானது என்பதையே. இது போல் அனைத்தும் இறுதியில் சுரண்டும் வர்க்கத்துக்கான ஜனநாயகமாகி விடுகின்றது. இது இந்த அடைப்புக்குள் தீர்வு காணமுடியாததை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேறு காட்டுகின்றது. இதற்கான தண்டனைகள், உளவியல் கல்விகள் என்று ஏகாதிபத்தியத்தின் (பின் நவீனத்துவத்தின்) அனைத்து வளர்ச்சியையும் பயன்படுத்தி பிறகும்கூட இது அதிகரிக்கின்றது. ஏனெனின் இதன் உட்கூறுகள் இந்த நுகர்வுப் பொருட்களின் சந்தைப்படுத்துதலில் மண்டிக் கிடக்கின்றது. நுகர்வு மீதான மனிதனின் கண்ணோட்டம் மாறாத வரை பெண் மீதான நுகர்வுப் பண்பாடும் மாறாது. ஒரு பெண்ணுக்குப் பதில் பல பெண்களை அனுபவிக்கத் தூண்டும் பொருட்கள் மீதான நுகர்வுக் கண்ணோட்டம், அந்த நுகர்வை நோக்கிய கவர்ச்சி பெண்ணின் போலியான கவர்ச்சி இன்பம் மாயையாக உள்ள போது நுகர்வு மீதான மோகமும் தீர்க்கமுடியாத உளவியல் சிக்கல் ஆகின்றது. இதை நோக்கி ஓடுவதும், அனுபவிக்கத் துடிப்பதும், பலாத்காரப் படுத்துவதும் எதார்த்தமாக உள்ளது. இன்று திரைப்படம் முதல் அனைத்திலும் பெண் காட்டப்படும் வடிவத்தில் இது புளுத்துப் போயுள்ளது. இது மேற்கில் மட்டுமல்ல மூன்றாம் உலகிலும் காணப்படும் எதார்த்தமாகும். இதைப் பார்ப்போம்.

1986 ஜனவரி முதல் ஜூன் வரை இந்தியா முழுக்க 936 பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். இதில் தாழ்த்தப்பட்ட பெண்கள் 492 பேர் ஆவர்.

1966 முதல் 1980 வரை 828 பெண்கள் பொலிஸ் நிலையங்களில் கற்பழிக்கப்பட்டனர். இதில் தாழ்த்தப்பட்ட பெண்கள் 210 பேர் ஆவர். இதில் ஒரே ஒரு பொலிஸ்காரன் மட்டும்தான் தண்டனை பெற்றான்.

1982 முதல் 1986 வரை 4,400 தாழ்த்தப்பட்ட பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்.

1987-இல், உத்திரப் பிரதேசத்தில் 229 தாழ்த்தப்பட்ட பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்.

1987-இல், மத்தியப் பிரதேசத்தில் 151 தாழ்த்தப்பட்ட பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்.

1987-இல், பீகாரில் 73 தாழ்த்தப்பட்ட பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்.[53]

இலங்கை பொலிஸ்சில் பதிவான கற்பழிப்புகளின் எண்ணிக்கையை அட்டவணை: 14-இல், காணலாம். (இலக்கம்-67)[11]

அட்டவணை - 14

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1990 | 369 |
| 1991 | 375 |
| 1992 | 410 |
| 1993 (முதல் ஆறு மாதம்) | 162 |

இராஜஸ்தான் மாநிலத்தில் நடந்த கற்பழிப்பு மற்றும் வன்முறையை அட்டவணை: 15-இல், பார்ப்போம். (இலக்கம்-136)[11]





அட்டவணை - 15

| ஆண்டு | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|
| கற்பழிப்பு | 1,002 | 1,036 | 1,162 |
| வரதட்சணைக் கொலை | 330 | 369 | 349 |
| வரதட்சணைத் தற்கொலை | 69 | 91 | 99 |
| வரதட்சணை சித்திரவதை | 2,608 | 3,203 | 3,920 |

1980-இல் இந்தியாவின் தலைநகரமான டெல்லியில் பதிவான கற்பழிப்பு குற்றங்கள் 5,023 இல் இருந்து 1990-இல், 10,068-ஆக மாறியுள்ளது. 1990-இல், பெண்கள் மீதான பாலியல் வன்முறை 362 இல் இருந்து

1991-இல் 391-ஆக அதிகரித்தது. (16.3.1992)[6]

இந்தியாவில் 56 நிமிடத்துக்கு ஒரு கற்பழிப்பும், 26 நிமிடத்திற்கு ஒரு பலாத்காரமும், 102 நிமிடத்திற்கு ஒரு வரதட்சணைக் கொலையும் நடக்கின்றது. (ஜன-1995)[54]

பீகார் மாநிலத்தில் பாலியல் கற்பழிப்பு என்பது சமூக அங்கீகாரமாகவும், அதிகாரத்தை அடைய வீரத்தின் போக்காகவும் அரசு, பொலிஸ் ஆதரவுடன் கற்பழிப்பு அரங்கேறுகின்றது. இது பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட இளம் சிறுமிகள் முதல் அனைவர் மீது கையாளும் புதுப்பணக்காரக் கும்பல் முதல் ஆதிக்கச் சாதிகளின் எல்லை கடந்த பாலியல் வன்முறை 6 மணிக்கு ஒன்று என்ற விகிதத்தில் இன்று தலை விரித்தாடுகின்றது. அதைக் கீழ் உள்ள புள்ளிவிபரம் மேலும் நிறுவுகின்றது. (4.11.1998)[34]

பீகாரில் பாலியல் கற்பழிப்புகள்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலியல் ரீதியில் துன்புறுத்துவது, கற்பழிப்பது மேற்கில் மட்டுமல்ல மூன்றாம் உலகிலும் நடக்கும் ஒரு விடயமாகவே உள்ளது. இந்தியா தொடர்பான கற்பழிப்பில் பதிவானவைகளே இவ்வளவு எனின் பதிவாகாமல் போனவைகளைக் கற்பனை பண்ணி பார்க்கமுடியுமா?

ஆணாதிக்கக் கற்புக் கோட்பாட்டிற்குப் பயந்து மறைப்பதும், குடும்பத்தில் குடும்ப உறுப்பினரால் நடத்தப்படும் கற்பழிப்பில் மானத்தைப் பாதுகாக்க மறைப்பதும், தாழ்ந்த சாதிகள் மீது நடத்தும் கற்பழிப்புகள், அதிகார வர்க்கம் நடத்தும் கற்பழிப்புகள் எல்லாம் இந்தியாவில் இன்னும் பதிவாகி விடுவதில்லை. நீதிமன்றத்தில் ஆணாதிக்கத் திமிரும், பார்ப்பனியப் பண்பாடும் பெண்களை நரக வேதனையைத் தரும் வகையில் மீளக் கற்பழிப்பதில் தயங்கியதில்லை. பின் இந்த இரண்டாம் முறை கற்பழிப்பின் பின் நீதி கிடைத்ததாக வரலாறு இருப்பின் அது ஓர் அதிசயமாகவே இருக்கும்.

உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று போற்றும் ஏகாதிபத்தியங்களின் சிபாரிசு பெற்ற நாட்டில் பெண்கள் மீதான பாலியல் கற்பழிப்புகளுக்குக் கூட நீதி கிடைத்ததில்லை. கற்பழிப்பு எல்லை கடந்த வேகத்தில் அதிகரிக்கின்றது. அதே போல் நீதி கோரி வருவது அற்றுப் போகுமளவுக்குப் பார்ப்பனிய ஆணாதிக்கம் தனது மனுதர்மக் கோட்பாட்டில் பெண்ணை இழிவுபடுத்தித் தன்னை நிலைநிறுத்துகின்றது. தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் உயர்சாதி ஆண்களின் சாதி ஆணாதிக்கத்தால் சூறையாடப்படுகின்றனர். ஏகாதிபத்தியப் புதிய உலகமயமாதலில் பணத்தில் மிதப்பவர்கள் முதல் இரவுடித்தனமான மா∴பியாத் தனத்திலும் ஊழல் மூலம் புதுப்பணக்காரராவோர் கன்னிகழியப் பெண்ணைச் சுவைப்பது முதல் விளம்பரத்தில் நிர்வாணமாக்குவது வரை இந்தியக் கட்டுடைக்கப்பட்ட பாலியல் புரட்சியாக உள்ளது. இதை ஒட்டி எழுதும் எழுத்தாளர்கள் எல்லாத் தளத்திலும் புற்றீசல் போல் புறப்பட்டுள்ளனர்.

எதார்த்தம் இவைதான் என்றும், ஊர் உலகத்தில் இல்லாததா என்றும் எழுதுவது புரட்சியாகிப் போனது. இப்படி எழுதுவது தான் இன்றைய புரட்சி எழுத்து என்று புறப்பட்டோர் கற்பழிப்பு, வன்முறையில் ஈடுபடுபவனின் குருவாக உள்ளனர். இன்று கற்பழிப்பு அதிகரித்துள்ள நிலைமைக்கு இந்த மாதிரியான எழுத்துகள், காட்சிகள்.... பொதுவான காரணமாக உள்ளது. இது போலித்தனமான வாழ்க்கையை நோக்கிய கனவுகள் எதார்த்த உலகுக்கு எதிராக உள்ளது. திரையிலும், விளம்பரத்திலும் காண்பதைச் சொந்த மனைவியுடன் அனுபவிக்க முடியாத பரிதாபம் மனைவி மீதான வெறுப்பாக மாறுகின்றது. இதேபோல் பெண்ணுக்கும் ஆணைப் போல் ஏற்பட்டுக் கணவன் எதிர்ப்பாக மாறுகின்றது. **பாலியல் வாழ்க்கை போராட்டத்துடன் ஒன்று கலந்தது** என்பதைக் காட்டாத காட்சிகளும், எழுத்துகளும் எதார்த்தத்தில் வெறுப்பாக மாறுகின்றது. இந்தக் கற்பனையை நோக்கிய தேடுதலில் ஒருவருக்கு ஒருவர் தெரியாத உறவுகளையும், அது முடியாத அல்லது அதிலும் திருப்திப்படாத போது கற்பழிப்பு என்று இப்பாதை மனிதச் சமுதாயத்தில்





பல கிளை கொண்டு அகன்று செல்கின்றது. இது இந்தியப் பெண் முதல் அமெரிக்கப் பெண்வரை பொதுவான அம்சமாக உள்ளது. இதை அமெரிக்காவில் ஆராய்வோம்.

உலகின் முன்னணி ஜனநாயக நாடு எனக் கட்டமைக்கப்பட்ட உலக பொலிஸ் வல்லரசான அமெரிக்க இராணுவத்தில் இருபது சதவீதம் பெண்கள் உள்ளனர். இந்த இருபது சதவீதப் பெண்களில் 55 சதவீதமான பெண்கள் உயர் அதிகாரிகளின் பாலியல் வன்முறைக்குப் பலமுறை பயன்படுத்தப்பட்டு உள்ளனர்.[20] அமெரிக்காவில் 1,96,000 பெண்கள் இராணுவத்தில் உள்ளனர். 50,000 பெண்களை ஆய்வு செய்த போது 52 சதவீதமான பெண்கள் பாலியல் ரீதியில் உயர் அதிகாரிகள் துன்புறுத்தியது அம்பலமானது.[55]

அதிகாரம் பெண்ணின் மீதான ஆணாதிக்கப் பாலியல் அதிகாரமாகின்றது. ஆணாதிக்க அமெரிக்க ஜனநாயகம் பெண்களைக் கற்பழிக்கின்றது. உலகை ஆளப் பிறந்த, ஜனநாயகத்தைக் காப்பாற்றப் புறப்பட்ட இராணுவத்தில் பணியாற்றும் பெண்களின் கதிதான் மேல் உள்ளது. இப்படி சொந்த இராணுவத்தில் உள்ள பெண்களுக்கே இந்தக் கதி என்றால் ஜனநாயகத்தைப் பூத்துக்குலுங்க வைக்க துப்பாக்கி முனையில் ஆக்கிரமிக்கப்படும் நாட்டுப் பெண்களின் நிலையை எண்ணிப் பாருங்கள். அந்த நாட்டுப் பெண்களை அமெரிக்க இராணுவப் பெண்ணால் கூடப் பாதுகாக்க முடியாது. ஏனெனின் சொந்த இராணுவத்திடம் இருந்து தன்னைப் பாதுகாக்க முடியாதவள் எப்படி மற்ற நாட்டுப் பெண்ணைப் பாதுகாக்க முடியும்? தேவை எனின் கூட்டிக் கொடுக்க முடியும். அவைகளை எந்த சி.என்.என். (C.N.N.) என்ற செய்தி ஊடகமாயினும் சரி உலகின் வேறு செய்தி ஊடகமாயினும் சரி, பின்நவீனத்துவமும் சரி செய்தியாகத் தரப் போவதில்லை. இந்தச் செய்திகளையும் கூடத் தருவதற்குப் பாட்டாளி வர்க்கம் மட்டுமே இன்று எஞ்சியுள்ள ஒரே ஊடகமாகும்.

உலகைச் சூறையாடி ஜனநாயகத்தை நிலைநாட்ட எல்லாவற்றையும் பயன்படுத்தும் இந்தச் சுரண்டல் வர்க்கம் உள்ளவரை அமெரிக்க இராணுவமும் சரி, அனைத்துச் சுரண்டும் வர்க்க இராணுவங்களும் சரி, பெண்ணைக் கற்பழிப்பதைத் தடுத்து நிறுத்தி விடமுடியாது. இங்கு பெண்கள் இணைந்தால் அமெரிக்க இராணுவம் எதைச் செய்து பெண்ணின் ஜனநாயகத்தைக் கற்பழிப்பாக்கியதோ அதுவே நிகழும். இந்திய இராணுவமும் சரி, பொலிசும் சரி, அமெரிக்க இராணுவமும் சரி எந்த இராணுவமும் சரி மேல் உள்ள புள்ளி விபரம் போல் ஆணாதிக்க இராணுவக் குணத்தையே வெளிப்படுத்த முடியும். இதைத் தகர்க்காத எந்தக் கோட்பாடும் ஆணாதிக்க இராணுவ இருப்பைத் தற்காப்பதுதான். இந்த ஆணாதிக்க இராணுவத்தின் இருப்பு தனிச் சொத்தைப் பாதுகாக்க, சுரண்டலைத் தொடர தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக நிறுத்தியுள்ளது. இந்த ஆணாதிக்க இராணுவத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமாயின் சுரண்டலை ஒழித்துக் கட்ட போராடவேண்டும். இதைச் செய்யாத எந்தப் பெண்ணியமும் சுரண்டல் அமைப்பால் வாழும் கோட்பாட்டுத் தளத்தில் ஆணாதிக்கத்தைப் பறைசாற்றுபவைதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 17. பெண்கள் மீதான ஆணாதிக்க வன்முறைகள்

இந்தியாவில், வீட்டில் பெண்கள் மீதான துன்புறுத்தல் 13.2 சதவீதத்தால் அதிகரிக்கின்றது. இந்தியாவில் குடும்பப் பெண்கள் ஒவ்வொரு நாளும் 53 பேர் தற்கொலை செய்கின்றனர் என என்.சி.ஆர்.பி. அறிக்கை தெரிவிக்கின்றது. நீதிமன்றத்தில் பெண்கள் மீதான துன்புறுத்தல் வழக்கு இழுத்து அடித்தே (தாமதப்படுத்துதல்) தாக்கல் ஆகின்றது. இப்படி தாக்குதலுக்கு உள்ளாகும் போது 40 சதவீதமான பெண்கள் இறந்து விடுகின்றனர். (9.12.1998)[34]

அட்டவணை - 17

**துன்புறுத்தல் மற்றும் கொடுமைகள் சதவீதத்தில்**

| குற்ற வகைகள் | சதவீதத்தில் |
|---|---|
| கணவன் கொடுமைகள் | 30 % |
| வரதட்சணை சாவுகள் | 5 % |
| கற்பழிப்புகள் | 5 % |
| கடத்தல்கள் | 5 % |
| பாலியல் வன்முறை, துன்புறுத்தல் | 13 % |
| பிற குற்றங்கள் | 8 % |





அட்டவணை - 18

**பெண்களுக்கு எதிரான குற்ற அதிகரிப்பு**

| குற்ற வகைகள் | சதவீதத்தில் |
|---|---|
| கற்பழிப்புகள் | + 17.7 % |
| கணவன் கொடுமை | + 13.2 % |
| வரதட்சணை கொலைகள் | + 8.3 % |
| பாலியல் வன்முறைகள் | + 7.9 % |
| கடத்தல்கள் | + 5.8 % |
| பாலியல் துன்புறுத்தல்கள் | + 1.6 % |
| பிற | - 8.8 % |
| பெண்களுக்கு எதிரான மொத்தக் குற்றங்கள் | + 5.9 % |

இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் 1978-இல், பெண்களை வீதியில் துன்புறுத்தல் குற்றச்சாட்டின் பேரில் 10,800 பேரை பொலிஸ் கைது செய்துள்ளது. (6.11.1992)[34]

இந்தியப் பெண்கள் மீதான குற்றங்கள் அதிகரிக்கும் போக்கில் ஜனநாயகம் சந்தி சிரிக்கின்றது. பார்ப்பனிய இந்து வானரங்களின் அதிகரித்த இன்றைய செல்வாக்கும் இந்து தருமத்தின் வண்டவாளமும் பெண்ணை சூறையாடுகின்றது. முழுமையான இந்துதர்மப் பாசிசம் ஏற்படின் பெண்கள் நிலை மேலும் மோசமாகும் என்பதைப் புள்ளிவிபரம் காட்டுகின்றது. இன்று ஆப்கானிஸ்தானில் என்ன நிகழ்கின்றதோ அதுவே இந்தியப் பார்ப்பனர்களின் இந்துச் சட்டத் தொகுப்பும் பெண்களை அடக்கி அடிமையாக்கும்.

இன்று இந்தியாவில் பெண்கள் மீதான ஆண்களின் வன்முறையை பொலிசிலோ, நீதிமன்றத்திலோ பதிந்து வழக்கு தாக்குதல் செய்வது சாத்தியமற்றது. அப்படி சாத்தியமானால் தீர்ப்பு பெறுவது சாத்தியமில்லை. வழக்கு போட்ட பின் 40 சதவீதத்தினர் முடிவு இன்றி இறந்து போவதை மேலுள்ள புள்ளிவிபரம் நிறுவுகின்றது. அந்தளவுக்குப் பார்ப்பனிய இந்துதர்ம ஆணாதிக்க ஜனநாயகம் காவிக்கொடி கட்டிப் பறக்கின்றது. பெண்கள் இன்று வாழ வழியற்று பட்டினியிலும், ஆணாதிக்கக் கொடூரத்திலும், சாதி ஆதிக்கத்திலும், மதவெறியிலும் சிக்கித் திணறுகின்றனர். நாள் ஒன்றுக்குத் தம்மைத் தாம் மாய்த்துக் கொள்வது குடும்பப் பெண்ணின் விதியாகிப் போனது. வீட்டில் இந்து ஆணாதிக்கத்தால் சுரண்டல் சமூகத்தால் மாய்வதா? அல்லது உயிரை விட்டு மாய்வதா என்பதே பெண்ணின் தெரிவாகி விடுமளவுக்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்கொலைகள் விண்ணை முட்டுகின்றன. சட்டத்தின் முன் வரும் சில புள்ளி விபரங்களே எமக்கு அதிர்ச்சி அளிக்கும் போது இதன் உண்மையான விபரங்கள் வெளிவரின் எம் இதயமே நின்றுவிடுமளவுக்குப் பிரமாண்டமானதாக இருக்கும்.

பாகிஸ்தானில் மனித உரிமைக்கான பெண் உரிமை அமைப்பு ஒன்று, திரட்ட முடிந்த தகவல் ஒன்றின்படி, 'நேர்மைக்கான கொலைகள்' என்ற பெயரில், பெண்கள் மீதான ஆணின் சந்தேகமே கொலை செய்ய போதுமானதாகும். சகீதா பிரவீனை அவள் கணவன் 'இன்று இரவே உனது கடைசி இரவு' எனக் கூறி அங்கம் அங்கமாக வெட்டி எறிந்தான். காரணம் மைத்துனனுடன் தகாத உறவு கொண்டிருந்தாள் என்ற ஊகம். இதுவே 'நேர்மையான கொலை'க்கு அடிப்படையாகும்.

பெண்கள் அமைப்பு திரட்டிய தகவலின்படி, 1994 முதல் 1999 வரை 3,560 பெண்கள் சந்தேகத்துக்காக எரிக்கப்பட்ட நிலையில், உயிருக்குப் போராடிய படி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதைப் புள்ளிவிபர ரீதியாக, இஸ்லாமிய ஆணாதிக்க ஜனநாயகத்தை அம்பலப்படுத்தியுள்ளனர். அத்துடன் 1998 முதல் 1999 வரை இதற்காகக் கொல்லப்பட்ட பெண்கள் எண்ணிக்கை 850 ஆகும். இஸ்லாமிய ஆணாதிக்க ஒழுக்கம், இதை நிபந்தனையின்றி அங்கீகரிப்பதன் அடிப்படை இதன் விளைவாகும். (25.5.2000)[20]

இது போன்று பிரான்ஸ் நாட்டின் புள்ளி விபரம் ஒன்றில் 15 வயதிற்கு மேற்பட்ட பெண்களில் 16 சதவீதத்தினர் தாம் ஏதோ ஒரு வகையில் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டதை உறுதி செய்கின்றனர். பெண்ணின் மீதான ஆணாதிக்கப் பலாத்காரம் சுதந்திர ஜனநாயகச் சமுதாயத்தில் இயல்பான பண்பாடாக, கலாச்சாரமாக இருப்பதை நாட்டு எல்லைகள் கடந்து நிறுவுகின்றன.





## 18. வியாபாரமாக நடக்கும் திருமணங்களில் வரதட்சணைக் கொலைகள்

இந்தியாவில் ஆண்டுக்கு 5,000 முதல் 9,000 வரையிலான வரதட்சணைக் கொலைகள் நடக்கின்றன (15.4.1995)[6] இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் 1989-ஆம் ஆண்டு பதிவான வரதட்சணைப் படுகொலை 4,821 ஆகும். இரு மணி நேரத்துக்கு ஒன்றாக நாள் ஒன்றுக்கு 13 வரதட்சணைக் கொலைகள் நடக்கின்றன. இது 1983-இல், நாள் ஒன்றுக்கு மூன்று மட்டுமே. 1986-இல், ஆறாக இருந்தது. அதாவது 1983-இக்கும் 1989-இக்கும் இடையில் 400 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. (1.10.1990)[6]

டெல்லியில் 1985-இல், பதிவான வரதட்சணை படுகொலை 43-இல் இருந்து 1988-இல், 71ஆக அதிகரித்துள்ளது. இது 1989 ஜனவரி முதல் 1990 மார்ச் வரை 132 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (16.5.1990)[6]

1998-இல் இந்தியாவில் பதிவுக்கு வந்த வரதட்சணையைச் சார்ந்து படுகொலை செய்யப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 6,917 ஆகும். (16.6.2000)[6]. இந்தியாவை நாம் எடுப்பின் சராசரியாக ஒரு மணி நேரத்துக்கு ஒரு வரதட்சணைக் கொலை நிகழ்கிறது. இது வருடம் கிட்டத்தட்ட 9,000 கொலைகளாக உள்ளது. 1989 முதல் 1991 வரையில் 18,000 பெண்கள் வரதட்சணைக்காகத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளனர். மாமியார் மற்றும் கணவனின் சித்திரவதைக்குள்ளாகி 20,000 பேர் தற்கொலை செய்துள்ளனர். தீக்காயத்துடன் கூடிய 13 பிரேதங்கள் (உடல்கள்) நாளொன்றுக்குப் பிரேதப் பரிசோதனைக்கு அகமதாபாத்தின் பிரேதச் சாலைக்கு வருகின்றது. வரதட்சணைக் கொடுமையால் இறந்ததைச் சமாளிக்க பொலிசுக்கு 20,000 ரூபாயும், நீதிபதிக்கு 25,000 ரூபாயும் கொடுத்து தப்பித்து வருகின்றனர்.[48]

தில்லியில் வரதட்சணைப் படுகொலைகள் அதிகரித்து வருகின்றன. இது 1985-இல், 43ஆகவும் 1988-இல், 71 ஆகவும், 1989 ஜனவரி, பிப்ரவரியில் மட்டும் 132 ஆகவும் அதிகரித்து வந்துள்ளது. இது குஜராத் மாநிலத்தில் நாளுக்கு 13 ஆகவுள்ளது. பெங்களூரில் வரதட்சணைக் கொலை, விபத்து,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்கொலை என்ற பெயரில் பொலிசாரல் பதியப்பட்ட வரதட்சணைக் கொலைகள் 1997-இல், 1,133 ஆகவும், 1998-இல், 1,248 ஆகவும் 1999 ஜீலை வரை 618 ஆகவும் இருந்தது. பெரும்பாலும் இளம் பெண்கள் பலியாவதுடன் மாதம் 180 என்ற விகிதத்தில் இது உள்ளது. கா்நாடகத்தில் 1997-இல், பதிவு செய்யப்பட்ட விபத்து மரணங்களின் எண்ணிக்கை 3,826 ஆகும். இதில் 1,715 மரணங்கள். அதாவது 50 சதவீதமானவை 'ஸ்டவ்' வெடித்ததால் ஏற்பட்ட தீயினால் மருமகள்களுக்கு விபத்துகள் நிகழ்ந்துள்ளன. பண்டிகைக் காலத்தில் விக்டோரியா மருத்துவமனைக்கு ஒரு நாளைக்கு 10 பேர் தீ விபத்தால் கொண்டு வரப்படுகின்றனர். மற்ற நாட்களில் இது ஏழாக உள்ளது. பண்டிகைக் காலத்தில் பெண் மீதான வரதட்சணைக் கோரிக்கை அதிகரிப்பதே இவ்விபத்துகளுக்குக் காரணமாக உள்ளது. (செப் - டிசம்பர் 99)[56]

இந்தியாவிலுள்ள சில மாநிலங்களின் வரதட்சணைக் கொலைகளை நாம் மேலே காண்கின்றோம். வீட்டு வேலைக்காரி வேலை மட்டுமல்லாது ஆணுக்கு இன்பத்தைக் கொடுக்க வந்தவள் சொத்தையும் கொண்டுவர வேண்டிய துர்ப்பாக்கியம். ஆனாலும் பெண் புகுந்த வீட்டில் எதையும் பெறுவதில்லை. கொடுமை, சித்திரவதை, வேலைக்காரிப் பாத்திரம் இதையே தனது வாழ்க்கையாகப் பெற்று அனுபவிக்கும் இந்தியப் பெண்களின் நிலை கேவலகரமானது.

ஆணின் சுகத் துக்கத்திற்கு ஆடவேண்டி பெண் எரிக்கப்படுகின்றாள் அல்லது கொல்லப்படுகின்றாள். ஆணுக்காக வாழ வந்த இடத்தில் சொத்தைக் கோரிக் கொல்லப்படுகின்றாள். கையாலாகாத ஆணாதிக்கம் பெண்ணிடம் கோரும் போது அது தீயாகின்றது. இந்தியாவில் எண்ணிக்கை அற்ற பெண்கள் வரதட்சணைக்காகக் கொல்லப்படுகின்றார்கள். இவை கூடச் சட்டத்தின் பதிவுகளில் வந்து விடுவதில்லை. அப்படி ஆணாதிக்கத் தடைகளையும் மீறி வந்தவை எல்லாம் நீதி பெற்று விடுவதில்லை.

பெண்ணைப் பாலியலில் சூறையாடி, அவள் மூலமே சொகுசாக வாழ்ந்த படி, அவளின் சொத்திலே அவளைக் கொண்டே கொலைக் கருவியை வாங்கி, அவளையே கொல்லும் கொடூரம் காட்டுமிராண்டிச் சமூகத்தனமானவை.

சீதனம் அல்லது வரதட்சணை என்பது ஆணாதிக்கத்தின் பின்னால் உருவான ஒரு பண்பாடு. இது சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபட்டுக் காணப்படுவதுடன் இதன் அர்த்தங்கள் கூட மாறுபட்டுக் காணப்படுகின்றது. ஆண் பெண்ணுக்கு இடையில் வரைமுறையற்ற புணர்ச்சி நிலவிய போது குடும்பம் இருக்கவில்லை. பின்னால் வளர்ச்சி பெற்ற பல்வேறு சமூகப் போக்கிலும் குடும்பம் தோன்றி விடவில்லை. தனிச்சொத்துரிமை உருவாக்கிய குடும்பம் தான் சீதனத்தின் ஊற்று மூலமாக இருந்தது. இந்தக் குடும்பத்தில் ஆணாதிக்கம் தனது அதிகாரத்தைக் கொண்டு நிறுவிய போது பெண் வெளியில் வேறு குடும்பத்தில் வாழ்ந்தாள். அவளை விலைக்கு வாங்குதல் அல்லது அன்பளிப்பு





கொடுத்து பெண்ணைப் பெறுவது என்ற வழிகளில் தொடங்கிய ஆணாதிக்கத்தின் வளர்ச்சியுடன் சீதனமும் வளர்ச்சி பெற்றது.

இந்தச் சீதனத்தில் இரு போக்குகள் பிரதான பிளவைக் கொண்டு வளர்ச்சி பெற்றது. தாய் வழி முறையிலும், தந்தை வழி முறையிலும் பெண்ணின் நிலை தீர்மானிக்கப்பட்டு, அவள் வாழும் இடமும் தீர்மானிக்கப்பட்டது. தாய் வழி சென்று தாயின் வீட்டில் வாழ்ந்த பெண்களை நோக்கி வந்த ஆண்கள் சீதனத்தைக் கொடுப்பது நீடித்ததுடன், அச்சொத்தின் உரிமைகளைக் கூடப் பெண் பெற்று இருந்தாள். மறுதலையாகத் தந்தைவழி குடும்பத்தில் ஆண் வீட்டுக்குச் செல்லும் பெண் பெண்ணுக்குக் கொடுத்த சொத்தைப் படிப்படியாக இழந்து சொத்தற்றவள் ஆக்கப்பட்டாள்.

இதில் கூட பின்னால் இரு பிளவுகள் ஏற்பட்டது. பெண் வழியில் பெண் வீட்டுக்கு வரும் ஆண், கொண்டு வந்த சீதனத்துக்குப் பதில் பெண் கொடுப்பதும் என்ற இருவழிகள் இதற்குள் ஏற்பட்டது. இது போல் ஆண் வழி சமூகத்தில் ஆண் வீடு செல்லும் பெண், சீதனம் கொண்டு செல்லுதல் என்ற போக்குடன் அங்கும் இரு வழிகள் உருவானது. மொத்தத்தில் நான்கு வழிமுறைகளில் இச்சீதனப் போக்குகள் இன்று உள்ளது. அதே போல் பெண்ணின் சொத்துரிமை பற்றிய பொது விதிகள் நான்கு போக்காக உள்ளது. இதைவிட சீதனம் கொடாத முறையென ஐந்தாவது போக்கும் இன்று வரை உள்ளது.

தாய்வழியில் செல்லும் ஆண் பெண் சார்ந்த குடும்பத்தில் பெண் அதிகமான சுதந்திரத்தையும், ஆண்வழிச் செல்லும் பெண், ஆண் சார்ந்த குடும்பத்தில் அதிக அடிமையாகவும் வாழ்வது எதார்த்தமானது. இது இன்று இந்தியாவில், ஆண் வழியில் பெண் செல்லும் தமிழ் நாட்டுக்கும், பெண் வழி செல்லும் கேரளா மற்றும் இலங்கையிலுள்ள தமிழ்ப் பகுதிக்கும் இடையில் பெண்ணின் நிலைமை நன்கு வேறுபட்டு உள்ளது. இது கல்வி, சொத்துரிமை, வரதட்சணைக் கொடுமை..... போன்றவைகளில் துல்லியமாக வேறுபடுகின்றன. இன்று உருவாகியுள்ள தனிக் குடும்பங்களில் சில குறிப்பான வேறுபாடுகள் இருந்த போதும் மரபுரீதியான தன்மை பெண்கள் விடயத்தில் இரு பிரதேசத்திலும் பெண்ணின் நிலையில் மாறுபாட்டைக் காட்டுகின்றது.

சீதனம் தனிச் சொத்துரிமையின் சொத்துச் சேர்க்கும் வகையில் துளிர்விட்டது. ஆரம்பத்தில் ஆணாதிக்கச் சமூகத்தின் பிரதிநிதியாக இருந்த பெண்ணின் தந்தை பெண் வழிச் சமூகத்தின் எச்சச் சொச்சத்தின் ஆளுமையுடன் தன்னை நோக்கி வரும் ஆணிடம் பெண்ணை அடைவதற்குச் சீதனத்தைக் கோரியதன் மூலம் தந்தையின் குடும்பத் தனிச் சொத்துரிமையின் பலம் அதிகரித்தது. இவைகளை ஒட்டிப் பல தகவல்களை மேலே நான் விவாதித்துள்ளளேன். இதனால் உருவான சீதனம் வளர்ச்சி பெற்று மாறிவந்த காலத்தில் தனிக்குடித்தனம் சென்ற குடும்பங்களின் அஸ்திவாரமாகியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதாவது இரண்டு பேர் தங்கள் வாழ்க்கையை உருவாக்க சீதனம் மூலமாகியது. இதிலும் கூட சில திரிபுகள் நடந்தன. ஆரம்பக் காலத்தில் தனிக் குடித்தனம் செல்லும் குடும்பத்துக்கு அங்கு சுற்றியிருந்த சமூகம் வீடு அமைத்து அடிப்படைப் பொருட்களைக் கொடுத்துதவி வாழ்வதற்குச் சமூகம் வழிகாட்டியது. பின்னால் இது தனிச் சொத்துரிமையின் குணாம்ச ரீதியான மாற்றத்தால் அது படிப்படியாக நீங்கி சீதனம் அவ்விடத்தை நிரப்பத் தொடங்கியது. இதிலும் குடும்பம் அந்தஸ்துடன் இணைவது அல்லது இணைத்து வைப்பது தீவிரமாகி இதுவே காதலாகிய நிலையில் வாழ்க்கைக்குரிய சாதனங்களும் வேறுபடத் தொடங்கியது. இதிலும் சீதனத்தின் முக்கியத்துவம் அவசியமாகிச் சமுதாயம் வழங்கி வந்த அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யும் முறை காலாவதியாகியது.

இன்று சில சமூகத்தில் அதன் எச்சச்சொச்சங்கள் நீடித்த போதும் சீதனத்தின் முக்கியத்துவம் முதன்மை பெற்றதாக உள்ளது. வறுமையில் சிக்கியுள்ள குடும்பத்தில் சமூகத்தின் கூட்டான பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்த வாழ்வு ஆதாரங்களை வழங்குவதன் மூலம் இது இன்றும் அடிப்படைத் தேவையாக உள்ளது. இது இன்று சீதன வடிவில் பெண்ணிடம் மட்டும் கோருவதாக மாற்றம் கண்டுள்ளதுடன் தேவைக்கும், ஆடம்பரத் தனிச் சொத்துரிமைக்கும் ஆதாரமாக உள்ளது. சீதனம் இரண்டு தளத்திலும் உள்ளதுடன் இதில் தனிச்சொத்துரிமை அமைப்பின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் மற்றது தனிச்சொத்துரிமையின் ஆடம்பரத்திலும் உள்ளது. இதில் பெண்ணை மட்டும் கோருவது ஆணாதிக்க வடிவமாக வளர்ச்சிபெற்றது.

சீதனத்தை நாம் எதிர்க்கும் போது இவ்விரண்டு வேறுபட்ட தன்மையையும் புரிந்து கொள்வது அவசியமாகும். இதில் பெண்ணை நோக்கி மட்டும் கோருவது அடிமட்டக் குடும்பங்களிலும் அதிகரித்து வருகின்றது. சமூகத்தின் பங்களிப்பைச் சொத்துரிமையின் வடிவில் நோக்கி எதிர்பார்ப்பதும், பெண்ணிடம் சீதனம் கோருவதும் மேல்மட்ட ஆதிக்கச் சமூகத்தின் பாதிப்புக்குள்ளாகிக் கோருவது அதிகரிக்கின்றது. இருந்த போதும் இதை விமர்சனக் கண்கொண்டு அணுகுவதும் தேவையைப் புரிந்து கொண்டு விமர்சிப்பதும் அவசியமாகும். மேல்மட்டச் சீதன முறைகளை முற்றாக மறுத்து போராடவேண்டும். சீதனம் என்ற முறை மேல் மற்றும் கீழ் மட்ட ஏழைக் குடும்பங்களில் என எங்கு எழுப்பப்படினும் அதை மறுத்து எதிர்த்துப் போராடுவது அவசியம். ஏழைக் குடும்பத்தின் தேவையைக் கூட்டுச் சமூகச் செயல்பாட்டின் ஊடாகத் தீர்க்கக் கோருவதும், அதை மாற்றாக முன்வைப்பதும் அவசியமாகும். இதுவே சீதன ஒழிப்பின் தேவைக்கும், ஆடம்பரத்துக்குள்ளும் உள்ள சீதனத்தை ஒழிக்க நாம் கொள்ளும் பாதையாகும்.

கடந்த சமுதாயத்தில் பெண் சாமாத்தியப்பட்டால் திருமணம் என்ற முறையில் பெண்ணுக்குத் தேவையான பொருட்களை வாழ்க்கையை ஒட்டிக் கொடுப்பது வழக்காக இருந்தது. இன்று சாமத்தியப்பட்ட பெண் உடனடியாகத்





திருமணம் செய்வதில்லை. ஆனால் பரிசுப் பொருட்கள் கொடுப்பது பண்பாக உள்ளது. இதுவும் கூட ஏழைக்கும், பணக்காரனுக்கும் இடையில் தெளிவான வேறுபாடு உள்ளது. ஏழைப்பெண் மாற்று உடுப்புகூட இன்றி உள்ள போது கொடுப்பது அவளின் மாற்று உடுப்பாக உள்ளது. அதே நேரம் பணக்காரக் கூட்டம் ஆடம்பரத்தையும், விளம்பர விபச்சாரத்தையும் பெண்ணின் பண்பாக்கி அதில் பெண்ணைப் பயிற்றுவிக்கின்றது. இந்த இரண்டு போக்கிலும் பெண் விளம்பரப்படுத்தப்படுகின்றாள். ஆணாதிக்கம் கூர்மையாக அப்பெண் மீது தனது ஊடுருவலை நடத்துகின்றது என்ற உண்மையை இரு தரப்பும் பார்ப்பதில்லை. பெண்ணின் சாமத்தியப்படுதலை இருதளத்திலும் பகிரங்கப்படுத்துவதை நாம் எதிர்த்துப் போராட வேண்டும். அதே நேரம் இது வழக்கில் உள்ளபோது நடைமுறையில் இரண்டு வேறுபாட்டையும் புரிந்து கொண்டு அணுகவும் வேண்டும்.

நாம் கடவுளை எதிர்த்து போராடும் போது ஏழைக் குடும்பம் நிம்மதியைக் கோரி வணங்கும் போது அதன் ஆத்மார்த்த நிம்மதியைப் புரிந்து கொண்டே நாம் போராடுகின்றோம். மதத்தின் பிற்போக்கை அம்பலப்படுத்தும் போது ஏழையின் கண்ணீரைப் புரிந்து கொண்டு கடவுள் தீர்த்தாரில்லை என்பதையும், அதேநேரம் போராட்டத்தின் மூலமே கண்ணீர் சிந்துவதை ஒழிக்க முடியும் என்பதையும் புரிய வைக்கின்றோம் அல்லவா! அதேபோல் மத நிறுவனங்களையும், அதன் கோட்பாட்டுத் தளங்களையும், அதன் அனைத்து வடிவங்களையும் ஈவிரக்கமின்றி தகர்க்கும் போது மறுதளத்தில் சாதாரண மனிதன் கையைக் கூப்பி கும்பிடும் போது அதில் நாம் இரக்கம் கொள்ள வேண்டும்.

சமூகப் பொருளாதார ரீதியில் விடுவிக்காத வரை இது நீடிக்கும் என்பதைப் புரிந்து கொண்டு போராட்ட வழியைக் காட்ட வேண்டும். இது போல் தான் ஏழையின் சாமத்தியச் சடங்குகளை நாம் அணுகவேண்டும். பெண்ணின் சாமத்தியம் அக்குடும்பத்தின் கடன் சுமையை அல்லது அப்பெண்ணின் குடும்ப வாழ்க்கையின் ஆதாரத்தைக் கொடுப்பதாகப் பல ஏழைக் குடும்பத்தில் காணப்படுகின்றது. பணக்காரக் குடும்பத்தில் சாமத்தியச் சடங்கு முறையை நாம் அதன் கோட்பாடு மற்றும் அதன் விளம்பரத்தனத்தைத் திட்டவட்டமாக எதிர்த்துப் போராட வேண்டும். இதே நேரம் ஏழைக் குடும்பத்தில் இது நிகழும் போது இதன் பாதகத்தைச் சுட்டிக்காட்டவும் குடும்பங்களின் பரிதாப நிலைக்குப் போராடுவதும், சமூகக் கூட்டு மூலம் இவைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதை நடைமுறை ரீதியாகப் புரியவைத்து தீர்க்க வேண்டும். அதாவது ஏழைக் குடும்பப் பிரச்சினைகளைக் கூட்டுச் செயல் மூலம் தீர்ப்பது, அணுகுவது என்ற பொது வழி நடைமுறைக்குக் கொண்டு வரும் போது சீதனம் தானாகவே ஏழைக் குடும்பத்தில் ஒழிந்து போகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 19. நுகர்வுகளுக்காகத் தொடரும் சுதந்திரப் பாலியல் விற்பனைகள்

**உ**லகமயமாதல் வேகம் பெற வக்கரித்த பாலியல் சுதந்திரம் உச்சத்துக்குப் போகின்றது. பாலியல் நோய்கள் என்றுமில்லாத வகையில் உலகைப் பிடித்தாட்டுகின்றது. உலக நாகரிகத்தின் தலைமையிடமாகக் கொண்டு கொண்டாடப்படும் அமெரிக்காவில் பாலியல் நோய் சமூகமயமாகிச் சமூகத்தையே நாசமாக்குகின்றது.

**நியூயார்க் டைம்ஸ்** பத்திரிக்கை 16 பேர் கொண்ட குழு செய்த ஆய்வு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில் ஒவ்வொரு வருடமும் 1.2 கோடி அமெரிக்கர்கள் பாலியல் நோயில் சிக்கி விடுகின்றனர் என்பதை அம்பலப்படுத்தியுள்ளது.

மருத்துவத்துக்காகச் செலவு செய்யும் ஒவ்வொரு 43 டொலரிலும் இந்த நோயை நிவர்த்தி செய்ய ஒரேயொரு டொலரை மட்டுமே பயன்படுத்துகின்றனர். பாதிக்கப்படும் 1.2 கோடி மக்களில் கால்வாசி பேர் சிறுவர் சிறுமிகள் ஆவர். பால்வினை நோய், வெட்டை நோய், அக்கி, ஈரல் அழற்சி-பே, கிளாமைடியா போன்ற பாலியல் சார்ந்த நோய்களுக்குச் சிகிச்சை அழிக்காமல் மலட்டுத் தன்மை, பிறவிக் கோளாறு, கருச்சிதைவு, புற்றுநோய் மற்றும் மரணத்தை இவர்கள் சந்திக்கின்றனர். எயிட்சை உள்ளடக்காமல் பாலியல் சார்ந்த நோக்கங்களுக்கான செலவாக அமெரிக்கா வருடம் 1,000 கோடி டொலரைச் செலவு செய்கின்றது.

தனிமனிதச் சுதந்திர மூலதனக் குவிப்புக்குப் பண்பாட்டுச் சீரழிவு நிபந்தனையானது. இதனால் கட்டமைக்கப்படும் பாலியல் வக்கிரங்கள், அந்தச் சமூகத்தையே நோய்க்குள்ளாக்குகின்றது. இயற்கையான புணர்ச்சி வெம்பிவெதும்பி அழுகிப் போகின்றபோது, அதுவே புதிய மூலதனத்தைத் தனிமனிதனுக்கு வழங்குகின்றது. சமூகத்தைச் சூறையாடித் தனிமனிதன் குவிக்கும் சுதந்திர ஜனநாயக வாழ்க்கையில், சமூகத்தின் எல்லாவிதமான உழைப்பு ஆற்றலையும், அவன் சிந்தனையையும், நடத்தையையும்,





பண்பாட்டையும், உணர்ச்சியையும் மூலதனமாக்கி விடுவதன் மூலம் சூறையாடும் ஜனநாயகம் நிலைநாட்டப்படுகின்றது. தனிமனிதப் பாலியல் உறவும் மூலதனத்தை உருவாக்குகின்ற போது, அதன் விளைவும் மூலதனத்தைக் குவித்துக் கொடுக்கின்றது. உலகில் எல்லாவிதமான பொருட்களும், உறவுகளும், நடத்தைகளும் உலகமயமாதலின் தனிமனிதச் சுதந்திர ஜனநாயகத்தின் அடிமையாகவே செயற்படுகின்றன.

1990-இல், பிரிட்டனில் மட்டும் பாலின வக்கிரத்தினாலான செலவு 2,000 கோடி டொலராக இருக்கின்றது என டாக்டர் **பேட்ரிக் டிக்ஸன்** தெரிவித்தார். அமெரிக்காவில் வருடந்தோறும் பருவ வயதுடைய 30 இலட்சம் பேர் பாலியல் வக்கிரத்தால் ஏற்பட்ட நோய்களால் துன்புறுகின்றனர்.[31] இவை நோய் விளைவுகளின் அவலத்தையும், அதனால் குவியும் மூலதனத்தின் மையத்தையும் காட்டுகின்றது. பாலியல் இயல்பான இயற்கையின் புணர்ச்சியைத் தாண்டி வக்கரிக்கின்ற போது, அதன் பின்னால் நேரடியான மூலதனம் குவிவதையே இது காட்டுகின்றது. இங்கு சந்தை நேரடியாகப் பாலியலில் உருவாக்கப்படுகின்றது. இதைத் தாண்டி பாலியல் வக்கிரத்தினூடாகக் கட்டமைக்கும் சந்தை உலகமயமாதலின் மையப்புள்ளியாகின்றது.

அடுத்த பகுதியில் இதை மேலும் பார்ப்போம். "ஆபாச அலைக்கு ஆட்சேபம்'' என்ற கட்டுரையில் "பாலுணர்வு (Sex) விற்பனை உத்தி ஆனது" என தொடர்ந்து பல பத்திரிக்கைகள், விளம்பரங்கள், கட்டுரைகள் என முடிவற்றுத் தொடர்கின்றது. (6.1.1995)[34] மேலும் "நிர்வாணத்தை விற்கின்றார்கள்" என்ற கட்டுரையில் கலை உலகில் பணக்கார பண்பாளர்கள் வீடுகளை அலங்கரிக்கக் கலைக் கல்லூரி கலை வளர்ப்போர் முன் நிர்வாணமாக நிற்க, வயிற்றுக்குக் கையேந்தும் பெண்களை 10 முதல் 20 ரூபாய்க்கு நிர்வாணமாக நிற்க வைத்து கலை சுரண்டுகின்றது. (6.3.1992)[34] ஜப்பானில் 70,000 தாய்லாந்துப் பெண்கள் விபச்சாரத்துக்காக விற்கப்பட்டுள்ளனர்.[57] "காசு பண்ணும் கனவு வியாபாரிகள்'' என்ற கட்டுரையில் செக்ஸ் கடைகள் செக்ஸ் வீரியத்தை உயர்த்த விளம்பரம் செய்கின்றன. (21.3.1991)[34]

உலகில் விற்பனையாகும் பண்டங்கள் பெண்ணின் உடல் அங்கத்தில் சந்தைப்படுத்தப்படுகின்றது. பொருட்கள் மீதான கவர்ச்சி பெண்ணின் பாலியல் அங்கங்கள் மீது கட்டமைக்கப்படுகின்றது. ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக நின்று படைப்பின் கருவை ஆராய முடியாத இலக்கியவாதிகள் அழகியலைப் பயன்படுத்துவது போல், சந்தைப்படுத்துவோர் பெண்ணைப் பயன்படுத்துகின்றனர். பெண்ணின் ஒவ்வொரு அங்கமும் மக்களின் மனதில் எதைப் பிரதிபலிக்கின்றதோ அதையே கற்பனையுடன் சுரண்டும் வர்க்கம் பயன்படுத்திப் பொருட்களை மக்கள் மயமாக்குகின்றது. அதைக் கனவுகளில் உருவாக்க, நினைவுகளில் பிரதிபலிக்க சில கவர்ச்சிக் கன்னிகளைத் திட்டமிட்டே நாட்டுக்கும், உலகுக்கும் உருவாக்கி அவர்களின் அங்கங்களில் (உதட்டில்) முத்தம் இட்டு பொருட்கள் வரும் போது மக்கள் அதன் மீதான (முத்தம்) மயக்கத்தில் பொருட்களை வாங்குகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மறுதளத்தில் கலைஞன் என்ற தகுதி பெண்ணை நிர்வாணமாக்க விபச்சாரம் செய்ய ஜனநாயகம் இடமளிக்கின்றது. பெண்களின் வயித்துப் பிழைப்புக்குக் கையேந்தி, ஒரு நேர உணவுக்காக 10, 20 ரூபாய்க்காக நிர்வாணமாக நிற்க வைத்து இரசித்து ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் ஓவியனாகி விட, அது பணக்கார அரண்மனைகளில் ஓவியமாகி ஜனநாயகப்படுகின்றது. பெண்களின் ஒரு வாய் சோற்றுக்கான அவலம் ஒருவனைக் கலைஞனாகப் புகழ் பெறச் செய்கின்றது. இவை பணக்காரச் செல்வாக்கைப் பறைசாற்றும் ஓவியமாகப் பணக்காரனின் மறு இரசனை (வாசிப்பு போல்) ஆகின்றது. ஏழையின் துயரம், அதில் கொட்டிக் கிடக்கும் மனித அவலங்கள், அந்த அவலத்தில் நிர்வாணமாகும் பாலியல் வக்கிரத்தை எல்லாம் எதிர்த்துப் படைப்பாக்க முடியாத கலைஞன் பெண்ணின் பாலியல் உறுப்புகளை எல்லாம் பணக்காரக் கும்பலுக்கு கலை இரசனை என்ற பெயரில் வியாபாரம் செய்கின்றான். ஆனால் ஏழைப் பெண் பெறுவதோ எச்சில் சோறுதான் என்பது எதார்த்தமாகும். இது ஒருபுறம் நடக்க மறுபுறம் பணக்காரப் பெண்கள் நிர்வாணமாகி இலட்சம் இலட்சமாகச் சம்பாதிப்பதும் இந்தக் கலையில்தான். ஒருபுறம் வாழ்க்கையின் ஆதாரத்துக்கு நிர்வாணமாவதும், மறுபுறம் ஆடம்பரத்துக்கு நிர்வாணமாவதும் என்பது பொதுவாக ஆணாதிக்க இரசனையை நோக்கித்தான்.

இது சிலவேளை பொருள் விற்பனைக்கும், பணக்கார வீட்டை அலங்கரிக்கவும், வக்கிரமான பாலியல் நடத்தைக்கும் இவை பயன்பாட்டுச் சந்தைப் பெறுமானத்தைக் கொண்டவைதான். இந்த வக்கிரக் கலைகளை இந்தப் பூர்சுவா பிழைப்புக் கலைஞனையும் நாம் பாதுகாக்க வேண்டுமா? அல்லது ஒழித்துக்கட்ட போராடவேண்டுமா? இது வர்க்கப் போராட்டத்தின் துல்லியமான வர்க்கக் கேள்விகள். இதற்குப் பதிலளிக்காதவன் இந்த ஏகாதிபத்திய அமைப்பினைப் பாதுகாக்கும் ஒருவனாக நாம் இனம் காணவேண்டும். பாலுறவுச் சந்தையை ஒட்டி அனைத்து வடிவத்தையும் பலாத்காரம் கொண்டு புரட்சிக்கு முன் பின் சமூகத்தில் ஒழித்துக்கட்ட பாட்டாளிவர்க்கம் தயங்காது. பாட்டாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடமுனையும் பிரிவுகளையும் இதன் போக்கில் வேரறுக்கவேண்டும்.





# 20. விபச்சாரங்களாகும் அழகு கள்

**சு**ஸ்மிதாசென் உலக அழகு ராணியாக தெரிவானதை ஒட்டி மொடல் உலகம் பற்றி பணம், புகழ்... பற்றி பெருமையாக விவரிக்கப்படுகின்றது இந்தியா டுடே. (21.10.1994)[34] மேலும் "அலிகள் அழகுப் போட்டி" "மூன்றாம் அழகு" என்ற தலைப்புகளில் தன்னார்வ அமைப்புகள் எயிட்ஸ் விழிப்புணர்வை முன்வைத்து நடத்திய அழகுப் போட்டியைப் பற்றிய செய்திகளும் வெளியாகியுள்ளது. (6.5.1997)[34]

அழகு என்பது வரையறைக்குள் உள்ளாக்க முடியாது என்பதை உலகமயமாதல் தலைகீழாக்கியுள்ளது. மனிதனுக்கு மனிதன் அவனின் வேறுபட்ட வாழ்க்கை சூழலை ஒட்டியும் பலவிதமான காரணத்தாலும் அழகு பற்றி வெவ்வேறு விதமான பார்வையை மனிதன் கொண்டிருந்தான். ஆனால் சந்தைத் தளம் இதைத் தலைகீழாக்கியுள்ளது.

அழகு என்பதற்கு உலக அழகுராணிப் போட்டி வழங்கும் தகுதி அழகின் வரையறையாகிப் போனது. உலகமயமாகிப் போன அழகியின் தகுதி **"நீலக் கண்கள், கூர்மூக்கு, மெல்லிய உதடுகள், வெளுத்த உடல், 5.8 அல்லது 5.9 அங்குல உயரம்..."[58]** இதையொட்டி உயரம், உடுப்பு, காலணி (சப்பாத்து)... என எல்லாம் அதற்கு இசைவாக மாறி வருகின்றது. அழகியாக இருக்க மெல்லிய இடை உடையவளாக இருப்பது பண்பாடாகின்றது. முன்பு ஒரு பெண்ணுக்கும் மொடலுக்கு இடையில் 8 சதவீத வேறுபாடு இருந்தது. இன்று அது 23 சதவீதம் வேறுபாடாக அதிகரித்துள்ளது. இது இருதளத்திலும் போட்டிபோட்டு, முன்னும் பின்னுமாக மெலிந்து ஆணாதிக்கக் கவர்ச்சிக்காகச் சீரழிகின்றனர். இதனால் பொதுவாகப் பெண்கள் உடல் வளர்ச்சி குன்றிய பலமற்ற நிலைக்குத் தரம் தாழ்ந்து செல்கின்றனர். இது ஆணாதிக்கச் சமூகக் கண்ணோட்டத்தில் ஆணின் தேவை மற்றும் பண்பாட்டை நியாயப்படுத்துவதுடன், ஆண் பலசாலியாக இருப்பது மேலும் கூர்மையடைகின்றது.

சென்னை மாணவர் - மாணவிகள் மீது செய்யப்பட்ட ஓர் ஆய்வில் 60 சதவீதம் பேர்[59] தாம் அழகாகவே இல்லை என்ற தாழ்வு மனப்பான்மையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிக்கியிருந்தனர். அந்தளவுக்கு உயரம், நிறம், கண், வாய் மூக்கு, மார்பு... என பெண்ணின் அங்கம் அங்கமாகச் சித்தரித்தே உலகின் அழகியல் தீர்மானிப்பது போக்காக மாறியுள்ளது.

பெண்கள் ஐரோப்பா முதல் இந்தியா வரை குதிக்கால் போட்ட (ஹைஹில்ஸ் காலணி) சப்பாத்து போட்டே உயரத்தைக் கூட்டி அழகியாகத் துடிக்கும் காட்சிகள் நிர்வாணமாக உள்ளது. இது போல் பெண்ணின் ஒவ்வொரு அங்கமும் இந்தப் படாதபாட்டைப் படுத்தும் அளவுக்கு அழகு வியாபாரமாகியுள்ளது. அழகியாகத் துடிக்கும் மனப்பான்மை, அதில் தோற்றவர்கள், அதை எட்டிப்பிடிக்க முடியாதவர்கள் அழகியல் குறிப்புகள் உடன் எட்டி நிமிர்ந்து செய்யும் கோமாளித்தனங்கள் பெண்களையே மனநோயாளியாக ஆக்கியுள்ளது.

உதட்டு மை, கண் மை, வாசனைத் திரவியம் (சென்ட்), பவுடர், வாசனை எண்ணை, நிறத்துக்கு ஏற்ற உடுப்பு, செருப்பு (சப்பாத்து), அதற்கு ஏற்ற குடை, அதற்கு ஏற்ற கைப்பை, உயரத்தைக் கூட்ட குதிக்கால் சப்பாத்து, மார்பை நிமிர்த்த அல்லது பெரிதாக்க அதற்கு ஏற்ற செருகல்கள் (சிலிகான் மார்புகள்) என்று பெண்ணின் இயக்கமே இதுவாகி விடுகின்றது. பொழுது போக்கு இதற்குள் அமுந்திப் போகின்றது. பெண்ணின் அறிவு இதுவாக மாறி விடுகின்றது. இவை எல்லாம் ஆண்களின் கண்ணைக் குளுமைப்படுத்த, கவர, வீம்புபண்ண, ஆடம்பரத்தை வெளிக்காட்ட என எல்லாத் தளத்திலும் சீழ்ப்பிடித்துப் போயுள்ளது. இதை மிகக் கடுமையாக ஏற்றுக் கொள்வோரில் பெரும்பான்மையான பெண்கள் ஒருதாரமணத்தின் தீவிர ஆதரவாளராக இருப்பதும் முரண்நிலைதான்.

தன்னார்வக் குழுக்கள் ஏகாதிபத்திய நிதி ஆதாரத்துடன் அவர்களின் கோட்பாட்டு வழிகாட்டலில் செயல்படும் இவர்கள் எயிட்ஸ் விழிப்புணர்ச்சி என்று காரணம் கூறிய படி அலிகளுக்குள் நடத்தும் நாடகங்கள் எல்லாம் ஆணாதிக்க வழிப்பட்டவைதான். பெண் பற்றிய ஆணின் கற்பனை, அதை ஒட்டிய அலி பற்றிய ஆணின் வக்கிரம் இவைகள் எல்லாம் ஆணின் இரசனைகள். இவை எல்லாம் ஆணின் கலைத்தென்றல் ஆகும். பெண்பற்றிய ஆணின் கலைத் தனத்தை விமர்சிப்பது சிலருக்குக் (பின்நவீனத்துவ முதல் தன்னார்வக் குழுக்கள் வரை) கெட்ட கோபம் வரலாம். ஆனால் இந்த இரசனையும், கலைப் பார்வையும் நொறுக்கப்பட வேண்டும். ஈவிரக்கமின்றி ஒடுக்கப்பட வேண்டும்.

பெண்ணைப் பெண்ணாக, அதாவது மனிதனாக வாழ அங்கீகரிப்பது என்பது இந்த ஆணாதிக்கக் கலை ஒடுக்கு முறையில் சாத்தியமற்றது. எல்லா ஆணாதிக்க அழகியல் கலை இரசனையும், இலக்கிய இரசனையும், பொருள் இரசனையும் என அனைத்தையும் மீட்க ஒடுக்கப்பட்ட பெண்ணை அவளின் சிறையில் இருந்து மீட்கப் போராடும் வர்க்கப் போராட்டத்தில் மட்டுமே சார்ந்துள்ளது. இதைப் பாட்டாளி வர்க்கம் மட்டுமே சாதிக்க முடியும்.





## 21. சந்தைப் பொருள்களாகும் விந்துக்களும்- குழந்தைகளும்

“வாடகைத் தாய்” “அவன் - அவள் - அது” என்ற தலைப்புகளில் குழந்தையைப் பணத்துக்குப் பெற்றுக் கொடுத்தலைப் பற்றி எழுதுகின்றன பல பத்திரிக்கைகள். இதில் ஆணின் விந்தை வாடகைத் தாயின் கருவுடன் சேர்த்தல் அல்லது இருவரும் உடலுறவு கொள்ளல் மூலம் நடக்கின்றது. சிலவேளை வாடகைத் தாய் குழந்தையைக் கொடுக்க மறுத்து நீதி மன்றம் வரை செல்வதும் நிகழ்கின்றது. (21.7.1997)[34]

மனிதன் எதையெல்லாம் சந்தைப்படுத்த முடியுமோ அதை எல்லாம் சந்தைப்படுத்தத் தயங்கியதில்லை. இதில் சொந்தக் குழந்தையை விற்றலில் தொடங்கி விந்துக்களை விற்றல், வாடகைத் தாயாக இருத்தல் என்று பல வடிவத்தில் இன்று பணம் திரட்டுகின்றனர். ஏழைக் குழந்தைகளைக் குறிவைத்து வாங்குவதும், விற்பதும் என்பது தத்தெடுப்பின் பின்னாலும், சில வேளைகளில் கடத்தல் மூலமும் நடப்பதைக் காண்கின்றோம். ஏழைக் குடும்பத்தின் வறுமை குழந்தையை விற்கத் தூண்டுகின்றது. இதற்கு என உருவாகியுள்ள பொறுக்கித் தின்னும் தரகுக் கூட்டங்கள் ஆசை காட்டியே குழந்தைகளை அபகரித்தும், கடத்தியும் பணக்காரர்களுக்கும், வெள்ளை இனத்தவர்களுக்கும் விற்றுப் பணம் சம்பாதிக்கின்றனர். வெள்ளை இன மற்றும் பணக்காரக் கும்பல், சிலர் இவர்களைத் தன் சொந்தக் குழந்தையாகப் பயன்படுத்த, பலர் தமது பாலியல் தேவைக்கு இக்குழந்தைகளைப் பயன்படுத்துவது அதிகரித்துச் செல்கின்றது. மேற்கில் இதற்கு எதிரான போராட்டம் அதிகரித்து வருவதால் தத்தெடுப்புச் சட்டம் மிகக் கடுமையாகி வருகின்றது.

மறுபுறம் குழந்தை இல்லாதவர்கள் விந்து மாற்றுவது என்பது புதிய வியாபாரமாகியுள்ளது. இது சொந்த மனைவியெனின் வேறு ஆணின் விந்தைப் மனைவியின் கருப்பையில் வைப்பதும், சொந்தக் கணவனின் விந்து எனின், விந்தை இரவல் தாயில் வைத்து பெறுவதும் அல்லது உடலுறவு நேரடியாகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்வதும் என்ற நிலைகளில் இது வியாபாரமாகியுள்ளது. பெண் வேறு ஆணுடன் உடலுறவு விலக்கப்பட்ட நிலையில் விந்து வைப்பதும், ஆண் வேறு பெண்ணுடன் நேரடி உடலுறவு மூலம் குழந்தையைப் பெறுவதும் என்ற இரட்டை வேறுபாட்டை ஆணாதிக்கம் சுவீகரித்துள்ளது.

உலகத்தில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பட்டினியிலும், தடுப்பூசி இன்றியும் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட காரணமான இப்பணக்காரக் கூட்டம்தான் தத்தெடுப்பு என்ற கூத்தையும் நடத்துகின்றது. சமூகத்தின் குழந்தையைச் சொந்தக் குழந்தையாகப் பார்க்கமுடியாத தனிச் சொத்துரிமைக் கண்ணோட்டம் அவர்களைக் கொல்வதையிட்டு அலட்டிக் கொள்ளாது நியாயப்படுத்துவதாக உள்ளது இவர்களின் ஜனநாயகம். இவர்கள் ஏற்படுத்திய ஏழ்மையிலும், வறுமையிலும் சொந்த உடலை விற்றுப் பிழைப்போரைச் சார்ந்து குழந்தையைப் பெறுவது என்பது நிச்சயம் பணத்திமிர்தான்.

இரவல் தாய்க்கும், விந்தைக் கொடுத்தவருக்கும் இடையில் சிலவேளைகளில் நடக்கும் பணப்பேரம் சகிக்கமுடியாத அளவுக்கு நாற்றம் கண்டவை. இதைச் செவ்வன செய்து முடிக்க கௌரவமான நிறுவனங்கள் சட்டப் பாதுகாப்புடன் காப்புறுதி நிறுவனங்களாகவும், வேறு வடிவிலும் உதித்தெழுந்து பணத்தில் கொழுக்கின்றன.





# 22. கடத்திச் செல்லப்படும் பெண்கள்

**சீ**னா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசம், தென்கொரியா உட்பட்ட ஐந்து நாடுகளிலும் 10 கோடி பெண்கள் பாலுறவுக்காகக் கடத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளனர். இப்படி வருடா வருடம் பெண்களில் 5 கோடி பெண்கள் அடிமைகளாக மாற்றப்படுகின்றனர். இதனால் ஒவ்வொரு வருடமும் இரண்டு இலட்சம் பெண்கள் இறக்கின்றனர்.[2] மேலும் "எல்லை தாண்டும் மிரட்டல்" என்ற தலைப்பில் வருடம் 7,000 நேபாளியப் பெண்கள் வறுமை காரணமாகப் பெற்றோரால் விற்கப்பட்டு, இந்தியாவின் விபச்சாரப் பகுதிகளுக்குக் கடத்தி வரப்படுகின்றனர். எயிட்ஸ் நோய்க்கு உள்ளாகிய பெண்கள் மீள நேபாளத்துக்கு அனுப்பப்படுகின்றனர். இந்தியாவில் 1,000 பேருக்கு ஒரு எயிட்ஸ் நோயாளியாக இருக்க, நேபாளத்தில் 200 பேருக்கு ஒருவராக உள்ளது. (21.3.1994)[34]. கிழக்கு ஐரோப்பாவில் இருந்து பெண்களைக் கடத்தி வரும் மா∴பியாக் குழுக்கள் 1,500 முதல் 5,000 மார்க்குக்கு விபச்சார முதலாளிக்கு விற்கின்றனர். நாள் ஒன்றுக்கு 12 மணிநேரம் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படும் பெண்களால் கிடைக்கும் வருமானத்தில், 30 சதவீதத்தைப் பெண் பெற 70 சதவீதத்தை அப்பெண்களை வாங்கிய முதலாளி சுருட்டுகின்றார். ரஷ்யாவில் போலிக் கம்யூனிசம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து பெண்களை வேலையை விட்டு இந்த முதலாளித்துவ ஜனநாயகம் துரத்தியது. உதாரணமாக உக்ரேனை எடுத்தால் 75 சதவீதப் பெண்கள் வேலையை இழந்து வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பெண்கள் விபச்சாரத்தைத் தேர்ந்தெடுப்பதும், அதற்காக ஜனநாயக ஐரோப்பாவை நோக்கி வருவதும் அதிகரித்துள்ளது. ஜெர்மனியை எடுத்தால் விபச்சாரத்தில் ஈடுபடுவோரில் 75 சதவீதம் வெளிநாட்டவர் ஆகும். ஆஸ்திரேலியாவில் இது 80 சதவீதமாகும். ஐரோப்பாவில் விபச்சாரத்தால் ஒருவர் சம்பாதிப்பது வருடத்துக்கு 7,20,000 பிராங்காகும். இது அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் தொழிலாளியை விட 10 மடங்கு அதிகமாகும். ஐரோப்பாவில் விபச்சாரத்தைக் குற்றமாகக் கருதி பெண்ணுக்குத் தண்டனை அளிக்க, அதில் ஈடுபடும் ஆணுக்குச் சட்டம் விதிவிலக்கு அளிக்கின்றது.[2]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேபாளத்தில் இருந்து ஒரு இலட்சம் பெண்கள் விபச்சாரத்துக்காக இந்தியாவிற்குக் கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் தில்லியில் 12,000-மும், மும்பாயில் 18,000-மும், கொல்கத்தாவில் 15,000-முமாக உள்ளனர். தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இயங்கும் அடிமைச் சந்தையில் இந்திய ரூபாய் 1,500-இக்கு 6 வயது சிறுவர் - சிறுமியை வாங்கமுடியும். இப்படி வருடா வருடம் 6,000 பேர் விற்கப்படுகின்றனர். அத்துடன் கருவில் இருக்கும் குழந்தையைக் கொன்றும் பிறந்த பின் கொன்றும் அதை மூலப்பொருளாகக் கொண்டு வாசனைத் திரவியம் தயாரிக்கவும், பாலியல் மற்றும் உழைப்புத் தேவைக்காகவும் தாய்லாந்தில் இருந்து மலேசியாவுக்கு 10,000 பேர் கடத்திச் செல்லப்படுகின்றனர். (1.4.1989)[6] தாய்லாந்தில் இருந்து 12 வயதுக்கு மேற்பட்ட பெண்களைச் சூட்கேஸ்சில் வைத்துக் கடத்திய நபரை விமான நிலையத்தில் கைது செய்தனர். 1994-1996-க்கும் இடையில் இதுபோல் 40-இக்கும் மேற்பட்டோரைக் கடத்தியது ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்தது. (24.4.1999)[55]

“விற்கப்படும் பெண்கள்” என்ற கட்டுரையில் இந்துமத ஆச்சாரத்துக்கும், பழமையையும் இறுகப் பிடித்துக் கொண்டு இருக்கும் இராஜஸ்தானில், பெண்கள் ஆண்களால் விற்கப்படுகின்றனர். இதையொட்டி பொலிசோ, உள்ளூர் பஞ்சாயத்துக்களோ கண்டு கொள்வதில்லை. (24.3.1999)[34] 1,25,000 பெண்கள் ஒவ்வொரு மாதமும் விபச்சாரத்துக்காக உலகளவில் கடத்தப்பட்டு விற்கப்படுகின்றனர். (11.3.1999)[44]

பெண் இந்த உலகில் தனிச்சிறப்பான தகுதியுடன் வாழ்ந்த வாழ்க்கையின் அனைத்து ஆதாரங்களும் அழிக்கப்பட்ட இன்றைய மனித வரலாற்றில் பெண் சந்தைப்படுத்தப்படுகின்றாள். இன்று பெண் சந்தைப் பெறுமானம் உள்ள ஒரு பண்டமாக இருப்பதே மனித வரலாறாக உள்ளது. பெண்ணின் உழைப்பில் பண்டமாகும் பொருள் சந்தைப் பெறுமானத்தைப் பெறும் அதே நேரம், **பெண்ணின் சதையுள்ள பாலியல் பண்டம் சந்தை பெறுமானத்தைப் பெற்றுக் கொள்ளும் அதே நேரம் பெண்ணின் உழைப்பு சந்தைப் பெறுமானத்தை இழந்து போயுள்ளது**. இது அனைத்து மூலதனத்தினதும் அடிப்படை விதியாகும். பெண்ணின் மூலம் கிடைக்கும் அனைத்தும் பெறுமானம் உள்ளதாக உள்ள அதே நேரம் பெண்ணுக்குக் கிடைப்பது எல்லாம் பெறுமானம் அற்ற இழிவுகளே.

பெண் பாலியல் பண்டம் என்ற ஆணாதிக்கச் சுரண்டல் மதிப்பீட்டில் பெண்ணின் அனைத்துப் பாலியல் உறுப்புகளும் விலை பேசப்படுகின்றது. இது அப்பெண்ணின் சமூகத் தகுதியைப் பொறுத்து பெறுமதி நிர்ணயமாகின்றது. பெண்ணின் வயது, அழகு, கன்னித் தன்மை என்ற அனைத்துத் தளத்திலும் பெண்ணின் விலை தீர்மானமாகின்றது. இப்பெண்களை விற்க உலகளாவிய ரீதியில் மா∴பியாக் குழுக்கள் இயங்குகின்றன. பெண் பாலியல் விபச்சாரத்துக்காக கடத்தப்படுவதும், விற்கப்படுவதும் பொதுவான நிகழ்வாக





உலகில் எல்லாத் தளத்திலும் காணப்படுகின்றது. வருடம் 15 இலட்சம் பெண்கள் விற்கப்படும் நிலையில் ஒரு பெண்ணின் ஆயுள் 60 எனின் அண்ணளவாக அவளின் ஆயுளில் ஒன்பது கோடி பெண்கள் விற்கப்பட்டு விடுகின்றனர். பெண்ணின் நிலை இப்படி உள்ள போது இதை எப்படி நாம் ஒழிக்கமுடியும். சந்தை பற்றிய கண்ணோட்டம், இலாபம் பற்றிய குறிக்கோள், மனிதன் பற்றிய சமூக நோக்கு, பெண்கள் பற்றி மனித நோக்கு வந்தடையாத எல்லா நிலையிலும் இது தொடரும். இதை வேறு வழியில் தடுத்து விட முடியாது. இதை எல்லாம் ஒட்டுமொத்தமாகத் தகர்க்க போராட வேண்டியுள்ளது.

ஆசியாவிலுள்ள ஐந்து நாடுகளில் கடத்தப்பட்ட 10 கோடி பெண்களில் 5 கோடி பெண்கள் அடிமையாகவே வாழ்வதுடன் இதனால் வருடம் இரண்டு இலட்சம் பெண்கள் இறக்கின்றனர். இதை எந்த ஜனநாயகமும், புதிய உலக ஒழுங்கும் தடுத்துவிடவில்லை. சீனாவுக்கு இரும்புத் திரையை இட்ட ஏகாதிபத்தியங்கள் பின் தாங்களாகவே தகர்த்தவர்கள் பெண்ணைப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கு எதிரான ஜனநாயகச் சந்தைக்கு விற்பனைக்காகக் கொண்டு வருவதை ஜனநாயகப்படுத்தினர். இது கிழக்கு ஐரோப்பாவிலும் ஜனநாயகமயமானது.

கிழக்கு ஐரோப்பாவில் இருந்து கொண்டு வந்து விற்கப்படும் பெண்கள், ஐரோப்பிய மூலதன ஜனநாயக விபச்சார விடுதியில் அடிமையாக்கப்பட்டுள்ளனர். அடிமை வியாபாரத்தை ஒழித்ததாக நூற்றாண்டுகளைக் கொண்டாடும் இந்த ஐரோப்பாவில், மார்க்குகளுக்கும், பிராங்குகளுக்கும் பெண்கள் விற்கப்படுகின்றனர். கம்யூனிசம் மக்களின் சிறையாக இருந்தது என்று மார்தட்டி பிதற்றியவர்களின் நம்பிக்கையில் இருந்து ஓடிவந்தவர்கள் உண்மையான சிறையில் அடைக்கப்பட்டதை உணர்வதும், மீண்டும் பழையதைக் கோருவதும் அம்மக்களின் எதார்த்தமாக உள்ளது. அங்கு இருந்து மேற்கு ஜனநாயகம் பற்றிய கனவுடன் வந்தவர்கள் கட்டியிருந்த கோவணத்தையும் இழந்த கதையாகப் பட்டினியிலும், புதிய பாலியல் சிறைகளிலும் சிக்கிக் கொண்டனர். சொந்த நாட்டில் பெண்கள் வேலையை விட்டுத் தூக்கியெறியப்படுகின்றனர். இது மேற்கில் மட்டுமல்ல சீனாவுக்கும் பொதுவான பண்பாகிப் போனது. கம்யூனிசச் சர்வாதிகாரம் பற்றிய மேற்கின் பிரச்சாரத்தாலும், சதிகளாலும் உள்ளூர் ஆட்சிப் பீடத்தில் இருந்த முதலாளித்துவப் பிரிவால் சிதைக்கப்பட்ட போது எல்லாக் கற்பனைப் புனைவுகளும் பத்தாண்டு கூட நீடிக்க முடியவில்லை.

பெண்ணின் உரிமை, பெண்ணின் ஓய்வு.... என அனைத்தும் காற்றோடு காற்றாகப் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகார ஒழிப்புடன் பறந்து ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை சர்வாதிகாரத்தினுள் மீளவும் சிக்கிக் கொண்டாள். இது மேற்கு ஜனநாயகத்தின் ஆணாதிக்க வடிவம்தான். இதைத்தான் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை எதிர்த்தவர்கள் முதல் வர்க்கப் போராட்டத்தை எதிர்ப்பவர்கள் வரையுள்ள ஜனநாயக எல்லையாகும். இதற்காகவே மார்க்சியத்துக்கு எதிரான கோட்பாட்டு மற்றும் நடைமுறைப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலியல் சந்தையில் இன்று உலகளவில் சிறுமிகள் - சிறுவர்கள் என அனைத்து வகை மாதிரியும் மாட்டுச் சந்தையில் விற்கப்படுவது போல் கிழக்கில் இருந்து இலங்கைவரை வாங்கமுடியும். அதுவும் மேற்கின் பணத்தில் சிறு தொகையில் சாதிக்கமுடியும். கன்னிகழியாத பெண்ணைக்கூடக் கோரி, புதுசு புதுசாகப் பெற்று நுகரமுடியும். கம்பூச்சியாவில் (கம்போடியா) அமைதியைக் காக்க, ஜனநாயகத்தை மீட்க சென்ற ஐக்கியநாட்டுப் படையின் கட்டற்ற சுதந்திர ஜனநாயகப் பாலியலைப் பூர்த்தி செய்யவும், போல்பாட் தலைமையிலான கம்யூனிஸ்டுகளைக் கட்டற்று சுதந்திரமாக வேட்டையாடவும் 6,000 ஆக இருந்த விபச்சாரிகளை 20,000-ஆக அதிகரிக்க வைத்தனர் ஜனநாயகவாதிகள். இதனால் எயிட்ஸ் நோய் முன்பை விட பத்து மடங்கு அதிகரித்துள்ளது. போல்பாட்டை ஒழிக்கச் சென்ற அமெரிக்க ஜனநாயக இராணுவம் கன்னி கழியாத இளம் பெண்களைப் பரிசோதித்து 21,000 ரூபாய்க்கு விலைபேசி வாங்கி, கட்டற்றச் சுதந்திரத்தில் வைத்துக் கம்யூனிச சர்வாதிகாரத்தை ஒழித்துக் கட்டவும், பின்நவீனத்துவக் கால ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்கவும் வீரப் போரில் ஈடுபட்டனர். (15.4.1995)[6]

இதை எதிர்த்து கேட்பது, இதை அம்பலப்படுத்துவது சர்வாதிகாரத்தின் கூறு என்று, ஜனநாயகவாதிகளின் பிதற்றலுக்குப் பின்னால் அங்கீகாரம் பெறுகின்றது. கம்யூனிசம் விபச்சாரத்தையும், பெண்ணின் இழி நிலையையும் தனது சர்வாதிகாரப் போராட்டத்தில் ஒழிக்கின்றது. இதற்கு எதிரான ஜனநாயகப் போராட்டத்தில் இவை மீள உருவாக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றது. இதுவே சீனாவானாலும் சரி, கம்போடியா ஆனாலும் சரி, கிழக்கானாலும் சரி, எமக்கு எதார்த்தமான நிர்வாணமாக எம்முன் அம்பலமாகின்றது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்ப்பவன் விபச்சாரச் சுதந்திரத்தையும், பெண்கள் விற்கப்படுவதையும், பெண்கள் வேலையை விட்டுத் துரத்தப்படுவதையும், வீட்டில் அடைந்து கிடப்பதையும் கோருவதுக்கு அப்பால் எதையும் அவர்களின் கோரிக்கை சாதித்ததில்லை. நாம் இதை இந்த முதலாளித்துவ ஜனநாயகச் சமூகத்தில் கம்யூனிசத்திற்கு எதிராக நடந்ததைக் கொண்டு காணமுடியும். **இவர்கள் இன்று இப்பெண்கள் பற்றி எதாவது புலம்பினால் அது மீண்டும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் வந்து விடக் கூடாது என்ற ஆதங்கத்தில் தானே ஒழிய பெண்கள் மீதான அக்கறையில் அல்ல.** அக்கறையிருப்பின் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் பெண் அனுபவித்த உரிமைகளை ஏற்றுக் கொண்டு திரும்பவும் அதை அடைய வர்க்கப் போராட்டத்தைக் கோரவும், போராடவும் வேண்டும். ஆனால் இந்த ஜனநாயகம் பற்றி எந்த பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார எதிர்ப்பாளனும் கோருவதில்லை.

இப்படி விற்கப்பட்ட பெண்கள் சந்தையில் விலைபோன பின்பு விபச்சாரச் சந்தையில் உழல விடப்படுகின்றனர். வாழ்க்கை பூராகவும் விபச்சாரத்தைச் செய்வதும், மாறி மாறி விற்கப்பட்டு வறுமையிலும், பட்டினியிலும், வயதாகின்ற போது வீதியிலும் வாழ்ந்து மடிகின்றனர். இதை இந்த ஜனநாயக உலகம் பாதுகாத்து விபச்சாரம் புரிகின்றது.





# 23. பெண்களின் கற்புரிமைகளை ஏமாற்றி நுகர்வது

ஜப்பானில் பெரும் பணக்காரர்கள் ஆசிய நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்வதாகக் கூறி, பாலியல் வக்கிரத்தைத் தீர்த்த பின் கைவிடப்படுவது சாதாரணமாக உள்ளது. இந்தப் பாலியல் தரகில் ஈடுபடும் இரகசிய நிறுவனங்கள் மட்டும் 700 உள்ளன. இப்படி ஏமாற்றப்பட்ட இலங்கையைச் சேர்ந்த பிரியா என்ற பெண் வழக்கு தொடர்ந்து போராடியதால் இது அம்பலமானது. (1.5.1991)[6] பெண்ணை ஏமாற்றி, பாலியலை அனுபவிப்பது என்பது உலகம் தழுவிய போக்காக உள்ளது. இங்கு எப்போதும் பெண் தற்காப்பு நிலையிலும், ஆண் எப்போதும் தாக்குதல் நிலையிலுமே அணுகுகின்றனர். இது சில விதிவிலக்காக ஏகாதிபத்திய ஆணாதிக்கப் பண்பாட்டை வாழ்க்கையாகக் கொண்டவர்களிடையே பெண்ணும் தாக்குதல் கட்டத்துக்கு மாறிவிடுவது உண்டு.

ஆணாதிக்கம் பெண்ணுக்கு மட்டுமான ஒருதாரமணத்தில் உருவான திருமணங்கள், காதல்கள்.... பெண்ணின் பண்பாடாக, கலாச்சாரமாக நீடிக்கின்றது. இந்தத் திருமணங்கள், காதல் மேலான பெண்ணின் அளவு கடந்த நேர்மையைப் பலதாரமணத்தில் வாழும் ஆண் தனது சொந்த மனைவிக்கு, காதலிக்கு முன் வைத்தபடி, தான் மீறத் துடிப்பது எதார்த்தமாக உள்ளது. ஆண் அனுபவிக்க முடிகின்ற பலதார மணத்தைப் பெண் விரும்பினாலும் சமுதாயத்தை மீறி விடமுடியாது. இந்த மீறல் சமுதாய ரீதியாக அல்லாத அனைத்துத் தளத்திலும் ஒருதார மணத்தை மீறுகின்ற போது, அது விபச்சாரமாக மாறிவிடுகின்றது. இந்த விபச்சாரம் ஏகாதிபத்திய நுகர்வுக் கலாச்சாரப் பண்பாட்டுப் போக்கில் வழிகாட்டுகின்றது.

பெண் தனது திருமணத்தில் அல்லது கூட்டு வாழ்க்கையில் ஏற்படும் நெருக்கடிகளை விட்டுப் புதிய வாழ்க்கையைத் தொடங்கும் எல்லா நிலையிலும் அது பகிரங்கத் தளத்தில் நிகழ்வது போராட்டத்தின் பகுதியாகின்றது. இரகசியமான உறவுகள் அல்லது மீறல்கள் பலவீனமானப் போராட முடியாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்களின் சில பொதுத் தன்மையாக இருந்தாலும், இதில் எதிர் கால வாழ்க்கை மீதான பயமும் காணப்படுகின்றது. இதை அணுகும் போது இது முரண்பாடற்ற எல்லா நிலையிலும் நுகர்வை அடிப்படையாகக் கொண்ட இரகசியப் பகிரங்க உறவுகளின் விபச்சாரத்தனத்தை எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது.

பெண் தனது ஜனநாயகத்தை அல்லது உணர்ச்சியைத் தீர்த்துக் கொள்ளும் வழியில் பகிரங்கமான போராட்டத்துக்குப் பதில் இரகசியமான அன்றாடத் தீர்வுகளில் இரண்டு போக்குகள் இருப்பதை நாம் அவதானமாகப் (கவனமாகப்) புரிந்து கொள்ள வேண்டும். நுகர்வுத் தளத்தில் விபச்சாரத்தைக் கொண்ட போக்கும், மறு தளத்தில் குறைந்தபட்ச உணர்ச்சியைத் தீர்த்துக் கொள்ளும் போக்கும் காணப்படும்.

இந்த முக்கிய விடயம் கிராமப் புறங்களில் அரசியல் ரீதியில் மக்களை அணிதிரட்டப் போகின்றவர்கள் கிராமத்தில் இது போன்று நிகழும் போது அல்லது சொந்த இயக்கத் தோழரின் குடும்பத்தில் மனைவி அல்லது மகளின் அல்லது சகோதரியின் பிரச்சினைகளில் மிகவும் பொறுப்புடன் கையாள வேண்டியுள்ளது. இதில் ஒரு பெண் அணுகுவதற்கும், ஆண் அணுகுவதற்கும் இடையில் பக்குவத் தன்மையில் வேறுபாடு காணப்படுகின்றது. இதில் பொதுவாக ஆணின் வளர்ச்சியின்மை சுயவிமர்சனத்தைத் தடுக்கும் போக்கு அதிகரித்து காணப்படுகின்றது. இது பற்றிய எனது சில அனுபவங்கள், அவதானிப்புகள், சிலரின் விமர்சனங்களின் ஊடாகவே ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் அணுகவேண்டியதைப் பகிர்ந்து கொள்ள முயல்கின்றேன்.

குடும்பத்தின் ஓர் உறுப்பினர் புரட்சியில் பங்கு பெறும் நிலையில், குடும்பம் பங்கு பெறாத நிலையில் அல்லது அவரை மீறிய வகையில் குடும்ப நிகழ்வுகள் இருந்தால் அல்லது இவைகள் மீது கவனமின்றி இருத்தல் போன்றவற்றில் தோழர்களைக் கையாள்வது அல்லது சமூகத்தைக் கையாள்வதில் பொறுப்பு மிக முக்கியமானது. இதில் குடும்ப இரகசியம் பெண் சார்ந்து வெளியில் தெரியக் கூடாது என்ற ஆணாதிக்க வரையறைகள் அப்பெண்ணையே சிதைத்துவிடும் என்ற நிலையில் அதை மிக இரகசியமாகப் பொறுப்புடன் கையாள வேண்டும். இதைப் பரந்த அமைப்பு தளத்தில் கொண்டு சென்று விவாதிப்பது அவசியமற்ற ஒன்றாகும். ஏனெனின் ஆணாதிக்கத்துக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும் அமைப்பு, ஏற்றத் தாழ்வான அரசியல் வளர்ச்சி சமூகத்தில் இருந்து கொண்டிருப்பதால் ஆணாதிக்கத்தின் எச்சச் சொச்சத்துடனும் அல்லது ஆணாதிக்கப் பண்பாட்டுக் கலாச்சார எல்லையில் நீடிப்பதாலும் ஒரு பெண்ணைப் பற்றிய ஆணாதிக்கக் கண்ணோட்டம் அப்பெண்ணைப் பாதிக்கும். அக்குடும்பத்தைச் சிதைக்கும். ஏன் அமைப்பை நோக்கி வளர்ந்துவரும் ஒருவரின் இடைவெளியை அதிகரிக்கும்.





தனிப்பட்ட ஒரு பெண்ணின் விடயத்தைக் கட்சி மட்டத்தில் விவாதத்திற்கு எடுப்பது அபத்தமாகும். மாறாகப் பொதுவான அரசியல் விவாதங்கள், அறிவுரைகள் ஆரோக்கியமானவை. இது தோழமையை உயர்த்திக் கொள்ளவும், குடும்பத்தின் வேறு உறுப்பினர் பற்றிய விவகாரங்களைத் தோழமையுடன் பகிர்ந்து கொள்ளக் கூடிய உறவும் வளர்ச்சி பெறும்.

இனி விட்ட விடயத்தைப் பார்ப்போம். காதல் இன்றைய இளைஞனின் பலதாரமணத்தை நிறைவேற்றவுள்ள ஊடகங்களில் ஒரு வழி ஊடகம் ஆகும். பெண்ணைக் காதலிப்பதாக நம்பவைத்து உடலை அனுபவித்துக் கைவிடுவது பெரும்பாலான காதல்களில் நிகழ்கின்றது. பாடசாலை இறுதிக் காலத்தில் ஏற்படும் ஆண் - பெண் கவர்ச்சி மற்றும் உடல் உணர்ச்சிகள் விழிக்கின்ற போது அதை ஆண் எப்போதும் பெண்ணின் நேர்மையான காதல் உணர்வைப் பாலியல் தேவையில் ஏமாற்றுவது காணப்படுகின்றது. இதை ஒட்டி சிறுவர் - சிறுமிகள் பகுதியில் புள்ளி விபரத்துடன் ஆராய்வோம்.

இன்று உலகளவில் வறுமை மற்றும் பணத்தின் ஆதிக்கம் பெண்ணை விலைக்கு வாங்குவது போல, திருமணத்தின் பின் அல்லது முன் பாலியல் பண்டமாக்கி வீதியில் விடுவது அல்லது விபச்சார விடுதியில் தள்ளிவிடுவது பொதுப் போக்காக உள்ளது. குடும்பத்தின் வறுமையைத் தரகர்கள் சாதகமாக்கிப் பெற்றோருக்கு ஆசை காட்டி விபச்சாரத்துக்கு அல்லது திருமணம் என்ற பெயரில் பாலியல் நுகர்வுக்குள் தள்ளி பெண்களின் வாழ்க்கையை நாசமாக்குகின்றனர். காதல் என்ற நம்பிக்கையில் குடும்பத்திலிருந்து விலகி கள்ள உறவு, திருமணம் என்ற இணைப்பில் ஏற்படும் அனைத்துப் பாலியல் நுகர்வும், கைவிடலும் அப்பெண்ணை இச்சமூகம் இறுதியில் விபச்சார விடுதிக்குள் தள்ளி விடுகின்றது அல்லது அப்பெண் கடந்த நிகழ்வை மறைத்து வாழும் இரட்டைத் தளத்தில் தள்ளுகின்றது.

இதனால் பெண் எப்போதும், காதலின் போது அல்லது திருமணத்தின் போதுக் கதைப்பதைத் (பேசுவதைத்) தவிர்த்தல் அல்லது உடலுறவில் ஈடுபடுவதை மறுத்தல் ஆகியவை தற்காப்பாக உள்ளன. நம்பிக்கை என்பது அநேகமாக நகர்ப்புறங்களில் நம்பிக்கை மோசடியாகின்றது. அது அப்பெண்ணின் வாழ்க்கையை நரகத்தில் தள்ளிவிடுவதாக மாறுகின்றது. பெண் எப்போதும் பதிவுத் திருமணத்தை அல்லது அச்சமூக அங்கீகாரம் பெற்ற திருமணமுறையை முன் நிபந்தனையாக உடலைத் தொடுவதற்கு நிபந்தனையாக்குகின்றாள். திருமணங்கள், காதல்கள் எந்தளவுக்கு அபத்தங்களாக உள்ளது என்பதையும், போலித்தனமாக உள்ளது என்பதையும் இது காட்டுகின்றது. அதாவது திருமணத்தைச் சட்டங்கள் தான் பாதுகாக்கும் ஊடகமாகவும், பெண்ணின் ஒருதார மணத்தின் காவலனாகவும் இருப்பது எதார்த்தமாக உள்ளது. தூயகாதல், சுதந்திரக் காதல்.... என்பது எல்லாம் பெண்ணின் தற்காப்புக்குள் தட்டுத் தடுமாறுகின்றது. காதல் விபச்சாரமாக மாறுவதா? அல்லது சொந்தத் துணையா? என்பதைப் பெண் தனது தற்காப்பில் மிரண்டு போய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கையாள்கின்றாள். சின்ன விலகல் காதலை விபச்சாரமாக்கி விடுகின்றது. இங்கு பெண்ணின் தற்காப்பு தனது உடலைப் பாதுகாக்கும் விபச்சாரத்திற்கு எதிரான போக்கில் உள்ளது. இது மேற்கில் உள்ள பெண்ணின் காதல் இந்தத் தற்காப்பைக் கைவிட்டுள்ளது. சமூகப் பொருளாதாரம் விபச்சாரத் தளத்தில் உள்ளதால் பெண் தன் உடலைக் காதலின் பின் ஆண் அனுபவித்து, கைவிட்டுச் செல்ல, அவ்விபச்சாரத்தையிட்டுக் கவலையற்ற போக்கு வெளிப்படுகின்றது.

இதற்கு மாற்றாக இணைந்து வாழ்தல் விபச்சாரத்துக்குப் பதிலிடையாக உள்ளது. இது திருமணத்திலும், வெளியிலும் சட்டப்பாதுகாப்பு இன்றி ஆண் பெண்ணின் சொந்தத் தேர்வுகளின் மேன்மையால் நீடிக்கின்றது.

இங்கு காதல் விலகல் விபச்சாரத்தையும், உண்மையான தேர்வுகளையும் அதன் எல்லைக்குள் நிகழ்த்துகின்றது. ஆனால் இங்கு தற்காப்பு கிடையாது. இது இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்தாலும் அங்கு பெண்ணின் தற்காப்பு விபச்சாரத்துக்கு எதிராக உள்ளது.

இந்த வேறுபாட்டைச் சந்தைப் பொருளாதார நுகர்வுத்தளம் தீர்மானிக்கின்றது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் மேற்தட்டு நுகர்வுப் பிரிவுகள் தற்காப்பைக் கைவிட்டு நுகர்வு விபச்சாரத்தைக் கையாள்கின்றனர்.

ஆணாதிக்க நிலப்பிரபுத்துவ வடிவத்திற்கும், ஏகாதிபத்திய முதலாளித்துவ வடிவத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைப் பொருளாதாரத் தளத்தில் உள்ள வேறுபட்ட இதன் உட்கூற்று தளத்தில்தான் காணமுடியும். இதில் தற்காப்பும், சரணடைவும் பெண்ணுக்குரிய பண்பாடாகின்றது, கலாச்சாரமாகின்றது. ஆண் இதில் அப்பொருளாதாரத்தின் பலதாரமணத்தில் நின்று தாக்குதல் கட்டத்தில் குறித்த பண்பாட்டு வேறுபாட்டுடன் பெண்ணை அனுபவிக்கத் துடிக்கின்றான். இத்தாக்குதலில் மேற்கு பெண்கள் சரணடைந்தும், மூன்றாம் உலகக் கிராமத்துப் பெண்கள் தற்காப்பிலும் நீடிக்கின்றனர்.





# 24. ஆண்களின் பலதாரமணத்தைப் பூர்த்தி செய்ய உருவான விபச்சாரங்கள்

**தே**வதாசி முறையை விபச்சார நிலைக்கு இட்டுச் சென்ற பார்ப்பனியம் தமது ஆணாதிக்க வக்கிரத்தைத் தீர்த்துக் கொள்ள இதை ஊக்குவித்தனர். உடல் சேர்க்கை மூலம் மோட்சத்தை அடையமுடியும் என்ற மதக்கோட்பாட்டை முதன்மைப்படுத்தி, பெண்ணைப் பக்தியின் பின்னால் விபச்சாரத்தில் ஈடுபடுத்தினர். தமிழில் 'தேவரடியாள்' (தேவ அடியாள்) என்ற சொல்லின் மொழி பெயர்ப்பே தேவதாசியானது. தேவதாசி முறை கி.பி. 19-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னால் இந்து மத ஆதிக்க வெற்றியின் விளைவாகியது. பார்ப்பன இரத்தத்தில் பிறப்பவர்கள் மட்டுமே அறிவையும், செல்வத்தையும் பெறுகின்ற இறைவன் அருள் கிடைக்கும் என்று கூறினர். அதைத் தாண்டி உருவான அறிவாளிகளைத் தமது உறவின் விளைவாகப் பிறந்தவர்கள் எனக் காட்டி, பெண்களைப் பாலியல் ரீதியில் சுரண்டினர். இன்று பாலியல் விடுதலையைச் சுதந்திரத்தின் அடிப்படை என்று எப்படிக் கூறுகின்றனரோ அப்படித்தான், பக்தியின் பின்னால் பார்ப்பனருடனான உடலுறவு பெண்ணின் மோட்சத்துக்கும், நிகழ் உலகச் செல்வத்துக்கும் திறவு கோள் என்று கூறி ஆணாதிக்கம் கொழுசாக வாழ்ந்தது. தஞ்சாவூரில் இருக்கும் பெரிய கோயிலில் "400 தேவதாசிகள்"[7] இருந்தனர்.

விபச்சாரம் என்பது ஆணாதிக்கத்தின் பலதார மணத்தின் ஒரு வடிவமாகும். இதை அடைவதில் ஆணாதிக்கம் பெண்ணைப் பலியிடவும் தயாராக இருந்தது. இந்த விபச்சாரம் பலவழியில் சமூக அங்கீகாரத்துக்கு உட்பட்டது. இந்த வகையில் இந்து மதம் ஊடாக விபச்சாரத்தை ஏற்படுத்தினர். இதை இறைவனின் கன்னிகை என்ற பெயரில் பார்ப்பனர்களும், அதிகார வர்க்கமும் அப்பெண்கள் மீது பாலியல் வக்கிரத்தைப் கோயிலில் வைத்தே புரிந்தனர், புரிகின்றனர். ஊரில் அழகான பெண்கள் மீது இந்த ஆணாதிக்கக் கூட்டத்தின் கண்பட்டால் அப்பெண் கடவுளின் கன்னிகையாக வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை.

இதையொட்டி, கடவுளின் பெயரில் விபச்சாரம் என்ற கட்டுரையில் பெண்கள் விபச்சாரத்துக்கும், சிறுவர்கள் ஓரினச் சேர்க்கைக்கும் பயன்படுத்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுகின்றனர். (1.3.1990)[6] கலாச்சாரம் என்ற பெயரில் ஐந்து தேவதாசிகளை 1997-இல், நேர்கண்டு கடவுளின் பெயரில் அமர்த்தியது. மீளவும் 1995-இல், ஐந்து பேரை அமர்த்த ஒரிசாவில் உள்ள பூரி ஜெகந்நாதர் ஆலயம் முயற்சி செய்தது. (15.10.1995)[6] தேவதாசி முறையை ஆந்திராவில் நடைமுறைப்படுத்தி அமுலில் உள்ளது அண்மையில் அம்பலமானது. 2 முதல் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இதற்குப் பலியிடப்பட்டது தெரிய வந்துள்ளது. இவர்கள் பார்ப்பனருக்கும், முக்கிய புள்ளிகளுக்கும் விபச்சாரத்துக்கு விடப்படுபவர்கள். அத்துடன் பரதம் என்ற நடனமும் இவர்களால் அவர்களுக்கு ஆடிக் காண்பிக்கப்படுகின்றது.[20] (1.7.1999). இவை அண்மைக்கால இந்து ஆணாதிக்க ஆதாரச் செய்திகள் ஆகும்.

பெண்களின் விழிப்புணர்ச்சி, மதத்துக்கு எதிரான போராட்டம், பார்ப்பனியத்தின் அம்பலமாகி வரும் நிர்வாணம் போன்றன தேவதாசி ஒழிப்பை வேகப்படுத்தியது. ஆனால் ஆணாதிக்கம் அனுபவித்த சுகத்தை என்றுமே விட்டுக் கொடுக்க தயாராயில்லை என்பதை மேல் உள்ள ஆதாரம் காட்டுகின்றது. இப்பெண்கள் தமது உடலால் மட்டுமல்ல... ஆடல் - பாடல் ஊடாகவும் ஆணாதிக்கப் பிரிவை மகிழ்ச்சியூட்ட வேண்டியிருந்தது. இந்த வகையில் பரதம் என்ற நடனம் இவர்களின் கலையாக வளர்ந்தது. தேவதாசியின் ஒழிப்பு சட்டப்படி வந்து அமுல்படுத்தப்பட்ட பின் பார்ப்பனியம் தமது மனைவிகளை ஆட வைத்து இன்பம் காண அதைச் சுவீகரித்துக் கொண்டது.

ஆரம்பத்தில் கோயிலில் இறைவனை நோக்கியும், பார்ப்பனியத்தின் பாலியல் வக்கிரத்தை நோக்கியும் ஆடிய ஆட்டம் பின்னால் பாப்பாத்திகள் மட்டும் ஆடுவது மரபாகியது. இன்று இவை மெல்ல மெல்ல மேல்தட்டு வர்க்கத்தின் நடனமாக மாறியுள்ளது.

கோயிலுக்கு விடப்பட்ட பெண்களின் கண்ணீர் என்பது இந்து மதத்தின் வக்கிரமான ஆணாதிக்கமாகும். இதை இன்றும் கடைப்பிடிப்பதுடன், அதைக் கோரி நடைமுறைப்படுத்துவதையும் காணமுடிகின்றது. இந்து இராஜ்ஜியம் கோரும் இன்றைய இராமன் வானரங்களின் ஆட்சி பாசிசத்தில் அரங்கேறின் வேதாளம் மீள ஏறிய கதையாகவே மாறும். பெண்களின் விபச்சாரம் கோயிலின் மையத்தில் முழுமையாக நிறைவேற்றப்படும். இது இந்து இராஜ்ஜியத்தின் கனவும் கூட.

உலகமயமாதலை விரிவாக்கி ரஷ்யாவில் சுரண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்திய போது விபச்சாரம் சமூக அந்தஸ்து பெற்றுள்ளது. அங்கு மேல்நிலை கல்வி கற்கும் மாணவிகளிடையே செய்த ஆய்வில், 25 சதவீதமானோர் விபச்சாரத்தை ரஷ்ய வாழ்க்கையின் முக்கியமான அம்சமாகக் கருதுகின்றனர். 1990-இல், 17 வயதுக்குட்பட்ட சிறுமிகளின் கருச்சிதைவு ஐந்து வருடத்தில் இரட்டிப்பாகியுள்ளதை ஐக்கிய நாட்டுப் பத்திரிக்கை வெளியிட்டுள்ளது. ஜனநாயகம் என்பது தனிச்சொத்துரிமை அமைப்பில், ஆணாதிக்கப் பலதார





மணத்துக்குத் தேவையான இளமை கொண்ட விபச்சாரிகளை உருவாக்குவதே ஆகும். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் இதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. ஆனால் இந்த முதலாளித்துவ ஜனநாயகத்தில் இதுவே அடிப்படை மனித உரிமையும், சுதந்திரமுமாகும்.

1991-இல், பாகிஸ்தான் மனித உரிமைக் கழகம் வெளியிட்ட அறிக்கையில் 2 இலட்சம் வங்கதேசப் பெண்கள் பாகிஸ்தானில் கட்டாய விபச்சாரத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என குற்றம் சாட்டியுள்ளனர். தாய்லாந்தில் 15 முதல் 35 வயதுக்கு இடையில் உள்ளோரில் 8.2 சதவீதம் பேர் விபச்சாரத்தில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இங்கு அதைவிட எட்டு இலட்சம் சிறுமிகள் - சிறுவர்கள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பிரேசிலில் 25,000 சிறுமிகள் அமேசன் தங்கச் சுரங்கத்தில் அரசாங்கத்தின் உறுதுணையுடன் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.[57]

முஸ்லிம் தேசமும், முஸ்லிம் மதமும், முஸ்லிம் ஆணும் ஒழுக்கத்தின் வழிகாட்டி என்ற மதப் பிரமைகளைத் தகர்க்கும் வகையில், பாகிஸ்தான் மனித உரிமைக் கழகம் வெளியிட்ட அறிக்கை அமைந்துள்ளது. ஒரு பெண் விபச்சாரத்துக்குத் தள்ளப்பட்டுச் செல்வது ஒரு வழி. ஆனால் கட்டாயமாக விபச்சாரத்தை நடத்தக் கடத்தி வருவது மற்றொரு வழி. இந்த வகையில் முன்னாள் வங்கத்தேசத்தில் இருந்து பெண்களைக் கடத்தி வந்து கட்டாயமாக நடத்தப்படும் விபச்சாரத்தை எந்தப் புனித நபர்களும் எதிர்த்துப் போராடவில்லை. மாறாக அதே ஆணாதிக்கத்தின் பிரதிநிதியாக இருந்து அங்கீகாரம் வழங்கி பாதுகாக்கின்றனர்.

இன்று வறுமை, சுதந்திர வர்த்தக வலையம், உல்லாசப் பிரயாணிகளின் வரவேற்பு இடங்கள், அமைதி காக்க செல்லும் இராணுவ முகாம்கள், தேசம் கடந்த நிறுவனங்களின் சுற்று வட்டாரங்கள்..... எங்கும் விபச்சாரம் வேர் விட்டு வளருகின்றது. இதற்கே உரிய வறுமையை உருவாக்கி, விபச்சாரத்துக்கு அழைத்துச் செல்கிறது. விபச்சாரத்தில் அனைத்துச் சலுகைகளும் கிடைக்கின்றது. சட்டம் இடம் விட்டு நகர்கின்றது. இதற்குத் தேவையான சிறுவர் - சிறுமிகள் தாராளமாக மூலதனச் சந்தையால் வழங்கப்படுகின்றது. அங்கு தொழில் புரியும் பெற்றோரை வறுமைக்குள் திட்டமிட்டே நகர்த்தும் ஏகாதிபத்தியம் குழந்தைகளைத் திட்டமிட்டே விபச்சாரத் தொழிலில் இறக்குகின்றது. சிறுவர் உழைப்பு பற்றி (இது ஏகாதிபத்தியச் சந்தை விரிவாக்கத்திற்குத் தடையாக உள்ளதால்) புலம்பும் ஏகாதிபத்தியம் சிறுவர் விபச்சாரம் பற்றி புலம்புவதை மட்டுப்படுத்துகின்றனர். தாய்லாந்திலும், வியட்நாமிலும் ஜனநாயகத்தை நிலைநாட்ட சென்ற அமெரிக்க இராணுவத்தின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யும் ஜனநாயகமாக அந்த நாட்டுச் சிறுமிகள் இருந்தனர். இது போல் கம்போடியா நாட்டில் போல்பாட் ஏற்படுத்திய பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநாட்ட அமெரிக்க இராணுவத்துக்குத் தாய்லாந்து, கம்போடியா சிறுவர் - சிறுமிகள் பாலியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜனநாயக ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டனர். இவை எல்லாம் மேற்கின் ஜனநாயகம் பூத்துக்குலுங்க மற்ற நாட்டுக் குழந்தைகள் பலியிடப்பட்டனர்.

பிரான்சில் விபச்சாரம் மூலம் ஆண், பெண் விதிவிலக்கின்றி பாலியலை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வகையில் அனுபவித்தீர்களா? என்ற கேள்வி கேட்ட போது அளித்த பதில்களை அட்டவணை: 19-இல், காணலாம் (15.5.2000)[33]

அட்டவணை - 19

| | |
|---|---|
| ஆம் | 16 சதவீதம் |
| இல்லை | 74 சதவீதம் |
| பதில் அளிக்காமை | 10 சதவீதம் |

இந்தச் சுதந்திரமான ஜனநாயக வளர்ச்சியில் நெதர்லாந்து அரசு 1992-இல், விபச்சாரத்தைச் சட்டப்பூர்வமாக அங்கீகரித்ததன் மூலம் வருடம் 83.8 கோடி டொலர் பணத்தைத் திரட்ட திட்டம் தீட்டியுள்ளது. (1.7.1992)[54] சட்டப்பூர்வமாக அங்கீகரிப்பதன் மூலம் விபச்சாரத்தைத் தொழிற்சாலையாக்கி, அதில் பெண்ணை இயந்திரமாக்கிப் பணம் சம்பாதிக்கச் சுதந்திர அரசு சுதந்திர ஆணாதிக்கத்தைச் சட்டப்பூர்வமாக்கியது. இவை மேற்கில் பல கோடி பணத்தைத் திரட்டித் தருவதாக மாறியது. இந்தப் பணம் சிறு நாடுகளின் தேசிய வருமானத்தையும் விஞ்சி நிற்கின்றது. இதன் போக்கில் உல்லாசத் துறையை ஊக்குவிக்க மூன்றாம் உலக நாடுகளில் விபச்சார விடுதிகளை ஊக்குவிக்கின்றது. இதன் மூலம் உல்லாசத்துறை கொழுக்கின்றது. இதைப் பாதுகாக்கும் ஜனநாயக வடிவத்தை உலகமயமாதல் ஊடாகவும், ஆக்கிரமிப்பு இராணுவத்தின் ஊடாகவும் **உல்லாசமாக வாழக் கவலைப்படும் பணமுதலைகள்** கோருகின்றனர்.

மேற்கில் உல்லாசத்துறை மூன்றாம் உலகப் பெண்ணின் நிர்வாணத்தை முன்னிறுத்தி விளம்பரம் செய்வதன் மூலம் ஆணாதிக்க உல்லாசம் கொடிகட்டிப் பறக்கின்றது. வெள்ளை சீமான், பச்சிளம் குழந்தைகளின் சட்டையைத் திறந்து படுப்பது பின்நவீனத்துவ ஜனநாயகமாகும். ஆணாதிக்கம் தன்னை மறுவாசிப்பு செய்து அதை நிலைநிறுத்துகின்றது. சிறுபான்மையான வெள்ளைப் பன்றிகளின் ஜனநாயகம் முக்கியத்துவம் வாய்ந்தது அல்லவா? அதனால்தான் பின்நவீனத்துவ (ஏகாதிபத்திய) உலகைப் பாதுகாக்க முதலாளிகளும், பின்நவீனத்துவக் கோட்பாட்டாளர்களும் தலைகீழாகக் கவட்டைக் கிழித்து நிற்கின்றனர்.

இந்தச் சட்டப்பூர்வமான விபச்சார அங்கீகாரத்தின் பின், நெதர்லாந்து அரசு 24 மணி நேர விபச்சாரத்தை 1999-இல், நேரக் கட்டுபாட்டுக்கு





உள்ளாக்கியது. இதை எதிர்த்து விபச்சாரிகள், விபச்சாரர்கள் தொழில் நஷ்டம் கோரி, போராட்டத்தை நடத்தினர். இதை அடுத்து நஷ்டஈடு தொடர்பாக அரசு ஆலோசிக்கின்றது. இந்த வகையில் பாலியலைத் தொழிற்துறையாக அங்கீகரிப்பதும், உடலை இயந்திரமயமாக்குவதும் சட்ட வடிவமாகி தொழிற்துறை போன்று வடிவம் பெறுகின்றது. மனித உணர்வுகள், பண்புகள் எல்லாம் சிதைந்து போவதையே பாலியல் தொழிற்துறை துல்லியமாக்குகின்றது.

இந்தப் பின்நவீனத்துவ (ஏகாதிபத்திய) மேற்கு நாடுகளில் இரண்டு பேருக்கு ஓர் ஆண் பாலுறவுக்காகச் சொந்த நாட்டிலேயே பணம் செலுத்தியிருக்கின்றார். 15 முதல் 20 சதவீதமான ஆண்கள் தொடர்ச்சியாகப் பாலுறவுக்குப் பணம் செலுத்துகின்றனர். இந்தப் பிரிவில் உள்ளோரில் 5 முதல் 10 சதவீதம் பேர் தொடர்ச்சியான பாலியல் வன்முறையில் ஈடுபடுபவர்கள்.[2] ஐரோப்பாவில் ஐந்து இலட்சம் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். இதில் அறுபது சதவீதம் பேர் 19 வயதிற்கும் 24 வயதிற்கும் உட்பட்டவர்கள். பெரும்பாலான பெண்கள் கம்யூனிசச் சர்வாதிகாரிகளிடம் இருந்து கிடைத்த ஜனநாயகத்தில் உற்பத்தியான கிழக்கு ஐரோப்பியராவர்.[1]

மேற்கில் ஆணின் நடத்தையை இது காட்டுகின்றது அல்லவா. அரைக்கு அரைவாசி பேர் பாலுறவுக்குப் பணம் செலுத்தியது மட்டுமின்றி, 20 சதவீதமானோர் பாலுறவுக்காகப் பணம் கொடுக்கின்றனர் என்பதன் அர்த்தம்தான் என்ன? இது இந்த ஜனநாயகத்தின் விபச்சாரத்தைத் தானே காட்டுகின்றது. இது இந்த ஜனநாயகத்தில் மனிதத்தன்மை அற்றுப் போனதைத் தானே காட்டுகின்றது. இது இந்த ஜனநாயகம் பாலியல் வன்முறைக்கு வித்திடுவதைத் தானே காட்டுகின்றது. நிலைமை இப்படி இருக்க இந்த ஜனநாயகம் பெண்ணை எப்படி, எந்த வழியில் தேற்றுகின்றது? ஆண் - பெண் உறவுக்குப் பதில் இந்த ஜனநாயகம் ஓரினச் சேர்க்கையைக் கோருகின்றது. இந்த ஜனநாயகம் சிறுவர் சிறுமி மீதான பாலியல் வன்முறையைக் கோருகின்றது.

ஒருபுறம் விபச்சாரத்துக்குச் சட்டப்பூர்வமான ஜனநாயக அங்கீகாரம் கிடைத்து உள்ளது. இதற்கு உதவ, ஜனநாயகத்தைத் தொடர பெண்ணை வழங்குவது முன்னாள் கம்யூனிச நாடுகளும், இன்றைய ஜனநாயக நாடுகளும் தான். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஒழித்து மீட்கப்பட்ட ஜனநாயகம் ஆணாதிக்கத்துக்குப் பெண்களைத் தீனியாகப் போடுகின்றது. மேற்கு நாடுகள் சுரண்டுவதற்கு பொருளாதாரச் சுதந்திர ஜனநாயகம் கிழக்கிலும் அவசியமாகின்றது. ஜனநாயகம் நிலவ முதலாளியின் பணமூட்டை பெருக்கின்றது. அங்கு பெண்களின் ஆணாதிக்க ஜனநாயகம் கிடைக்க இங்கு ஆண்களின் பாலியல் ஜனநாயகம் தீர்க்கப்படுகின்றது. விபச்சாரம், பெண் உடலை மட்டும் விற்றுக் கிழக்கு நாடுகள் வாழவில்லை, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை இழந்தபோது எல்லாவற்றையும் விபச்சாரமாகியது எதார்த்தமாகியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**"விபச்சாரத்திற்கு எதிரான ஐந்தாவது சர்வதேச காங்கிரஸ்"** பற்றி **லெனின்** "ஒரு ஜெர்மானியப் பாதிரியார் இன்றைய பொருள் முதல் வாதத்தை அபவாதம் செய்தார், அது மக்களை ஈர்த்த சுதந்திரமான காதலை வளர்க்கிறது என்றார்... விபச்சாரத்தின் சமூகக் காரணங்கள், தொழிலாளி வர்க்கக் குடும்பங்களின் தேவை, அனுபவிக்கும் வறுமை, குழந்தை உழைப்பு சுரண்டப்படுவது, சகிக்க முடியாத வீட்டு வசதிநிலை முதலியன பற்றிய பிரச்சனையை ஆஸ்திரியா நாட்டுப் பிரதிநிதியான கார்ட்னர் எழுப்ப முயற்சித்த பொழுது, எதிர்ப்புக் குரல்களால் அவர் வாய் அடைக்கப்பட்டது... ஜெர்மன் சக்ரவர்த்தினி பெர்லினிலுள்ள பிரசவ மருத்துவமனைக்கு வருகை தந்தபொழுது தவறான முறையில் பிறந்த குழந்தைகளினுடைய தாய்மார்களின் விரல்களில் மோதிரங்கள் அணிவிக்கப்பட்டிருந்தன. ஏனெனின் இந்த மேன்மை தங்கிய சக்ரவர்த்தினி திருமணமாகாத தாய்மார்களைப் பார்த்து அதிர்ச்சியடையாதிருப்பதற்காக!"[60]

விபச்சாரத்துக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ச்சியாக வரலாற்றில் நடத்தப்பட்டன. இவை ஆணாதிக்கத்தின் பலதாரமணத்தால் ஒழிக்கப்பட முடியாத விடயமாக வரலாற்றில் நீடிக்கின்றது. விபச்சாரத்தில் எப்போதும் ஆண் செல்வது என்பது ஆணாதிக்கச் சமூகத்தால் மறைக்கப்பட்டு, பெண் குற்றவாளி ஆக்கப்பட்டாள். பெண்ணின் மீதான ஆணாதிக்கம் திருமணத்தைச் சிறையாக்குகின்றது. அங்கும் பாலியலைப் பெண்ணுக்கு மறுக்கின்றது.

பெண்ணுக்கு மறுக்கப்பட்ட பாலியல், பொருளாதாரம், மறுமணம்... போன்றவை விபச்சாரத்தை ஊக்குவிக்கின்றது. ஒழுக்கம் என்பது இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இந்த ஒழுக்கம் இருந்த அதிகார வர்க்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பட்டது.

நிலப்பிரபுத்துவ ஒழுக்கம் பூர்சுவா ஒழுக்கத்தைக் கொச்சைப்படுத்தியது. பூர்சுவா வர்க்கம் கோரிய சுதந்திரக் காதலை நிலப்பிரபுத்துவ மதவாதம் மறுத்து எதிர்வாதம் புரிந்தது. இதை **லெனின்** கிண்டல் செய்து அம்பலப்படுத்தினார். ஆனால் பூர்சுவா காதல் பூர்சுவா பொருளாதார ஆதிக்கத்தால் வெற்றி பெற தொடர்ந்து போராட வேண்டி ஏற்பட்டது. 1968-ஆம் ஆண்டில் மாணவர் கிளர்ச்சிகள் பூர்சுவா சுதந்திரக் காதலை மேலும் வளர்த்தெடுத்தது. இந்தக் காதல் வாழ்க என்ற கோஷங்கள் சுதந்திரமற்ற மனிதர்களுக்குள் விபச்சாரமாகியது. பூர்சுவா சுதந்திரம் ஆணாதிக்கம் சார்பானது, சுரண்டல் வர்க்கம் சார்பானது. பரந்துபட்ட மக்களின் சுதந்திரமான காதல் என்பது ஆணாதிக்க மயமாகி விபச்சார நிலையை அடைந்தது.

இது சாதாரணக் காதல் திருமணத்தைக் குறித்து சொல்லவில்லை. மாறாக வரைமுறையற்ற காதல் பற்றிய சுதந்திரத்தின் மீது விபச்சாரத்தை அம்பலப்படுத்துகின்றது. அத்துடன் சாதாரணக் காதல் திருமணத்தில் காணப்படும்





வர்க்கம், நிறம், இனம், சாதி... போன்ற வரையறைக்குள் செய்யும் பூர்சுவா காதல் விபச்சாரத்தையும் அம்பலப்படுத்துகின்றது.

**நிலப்பிரபுத்துவம் மறுக்கும் காதல் சுதந்திரத்தை எதிர்த்து பாட்டாளிவர்க்கம் போராடும் அதே நேரம், சுதந்திரத்தின் பின் வரைமுறையற்ற காதல் சுதந்திர விபச்சாரத்தையும் பாட்டாளிவர்க்கம் மறுக்கின்றது.** இந்தச் சுதந்திரம் தன்னளவில், தனக்குள், காதலை இந்தச் சமூகத்தின் ஆணாதிக்கத்துக்குள்ளும், ஏகாதிபத்திய எல்லைக்குள்ளும் கோருவதாகும். இதை விமர்சிக்க மறுத்து அதன் பிரதிநிதியாகச் சுதந்திரக் காதல் மாறுகின்றது. பூர்சுவா சுதந்திரக் காதல் தனது பூர்சுவா ஜனநாயகத்தை மற்ற பிரிவுக்கு மறுப்பதால் மேலும் வளர்ச்சியுற்று ஏகாதிபத்திய மயமாகியுள்ள போக்கில் மேலும் சிலருக்கான வகையில் மையப்படுகின்றது. இது இன்று தேசப் பொருளாதாரச் சுதந்திரத்தை மறுத்து, ஏகாதிபத்தியச் சுதந்திரத்தை வரைமுறையற்று கோருவது போல், பாலியலில் ஏகாதிபத்தியக் காதல் சுதந்திரம் வரைமுறையற்ற புணர்ச்சியை முன்வைக்கின்றது. இதைப் பலர் காதல் சுதந்திரத்தின் பின் ஜனநாயகமாகக் காட்டி விபச்சாரத்தைக் கோருகின்றனர். இதையொட்டி எழுத்தாளர்கள் இன்று புற்றீசல்போல் புறப்பட்டுள்ளனர். தேசியப் பொருளாதாரத்தை ஜனநாயக விரோதமாக்கி மறுக்க, நாட்டில் ஏகாதிபத்தியப் பிரிவு எப்படி வளர்ச்சி பெற்றதோ, அதுபோல் வரைமுறையற்ற பாலியலை நியாயப்படுத்த மிகவேகமான வளர்ச்சியில் படைப்புகள் வெளிவருகின்றன.

சுதந்திரம் என்பது எல்லைப்படுத்த முடியாதது, வரைமுறையற்றது என்ற கோரிக்கைகள், அனைத்தையும் சூறையாடக் கோருகின்றது. சுதந்திரம் என்பது வர்க்கச் சமூகத்துக்கே உரிய ஒன்றாகும். ஏதோ ஒன்றை மறுக்கும் போது மட்டும் சுதந்திரம் என்ற கோரிக்கையும், அதைப் பெறுவதும் அதன் நிபந்தனையாகும். இந்தச் சுதந்திரத்தை வரைமுறையற்று கோரும்போது மறுக்கப்படும் சுதந்திரம், வரைமுறையற்று இன்னுமொரு பகுதிக்கு மறுக்கப்படுகின்றது. இது பொருளாதாரத்தில் சிலருக்கு வரைமுறையற்ற சூறையாடலை ஏற்படுத்த, மக்களுக்கு வரைமுறையற்ற வறுமையை விளைவாக்குகின்றது. அதாவது வரைமுறையற்ற சுதந்திரச் சூறையாடல் வரைமுறையற்ற பணக் குவிப்பை ஏற்படுத்துகின்றது. அதேநேரம் வரைமுறையற்ற வறுமைக்குள் மக்கள் சொத்தைப் பறித்து வரைமுறையற்ற அடக்குமுறையைப் பலதளத்தில் விரிவாக்குகின்றது. இது பாலியலில் வரைமுறையற்ற ஆணாதிக்கத்தை ஏற்படுத்துகின்றது. மறுதளத்தில் வரைமுறையற்ற விபச்சாரத்தை நிபந்தனையாக்குகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 25. சாமத்தியச் சடங்கு ஊடான கலாச்சாரங்களும் விபச்சாரங்களும்

**நே**பாளத்தில், "நேற்றைய குமாரிகள்" "வாழ்வைத் தேடும் முன்னாள் தெய்வங்கள்" என்ற தலைப்புகளில் முதல் மாதவிடாய்க்குப் பின் அரண்மனைக்கு வெளியில் தூக்கி வீசப்படும் இவர்கள் பெருமளவில் விபச்சாரிகளாக அல்லது திருமணம் இன்றி வாழ்கின்றனர். (21.1.1997)[34] நேபாளத்தில் குழந்தையிலேயே தெய்வத்துக்குக் காணிக்கையாக்கப்பட்ட பெண்கள் சிறுமியிலேயே அழகுமயப்படுத்தப்படுகின்றனர். இது இந்தியாவில் இந்துப் பண்பாட்டில் தேவதாசிகளை உருவாக்குவது போல் இங்கு அதற்காகவே பருவமடையும் முன் சிறுமி பயன்படுத்தப்படுகின்றாள். இப்பெண்கள் பருவமடைந்த பின் தூக்கி வீசப்படும் அதேநேரம் பகிரங்கமான விபச்சாரியாக வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றாள். பருவம் அடையும் வரையிலான வசதியான வாழ்க்கை. அதற்குப் பின்னால் பகிரங்கமான விபச்சாரி. இதுவே சாதாரண சாமத்தியச் (பூப்பெய்தும்) சடங்கிலும் பொதுப்பண்பாக உள்ளது.

சாமத்தியச் சடங்கின் பெயரால் ஆணாதிக்கம் பெண்களுக்குப் போடும் பொன் விலங்கு பலவிதத்தில் நியாயப்படுத்தப்படுகின்றது. இந்தச் சடங்கு பணம் வசூலிப்பதிலும், ஆணாதிக்கத்தை உறுதிப்படுத்துவதிலும் கவனமாக உள்ளது. ஒரு தனிநபர் திருமணத்திலோ, சாமத்தியச் சடங்கிலோ, பிறந்ததின கொண்டாட்டத்திலோ அல்லது இது போன்றவற்றிலோ பணம் வாங்குவதும், செய்வதும் சமூக நோக்கமல்ல. இதில் சுயநலன் மட்டுமே அரங்கேறுகின்றது. குறிப்பாகச் சாமத்தியச் சடங்கில் வாங்கும் போதும், செய்யும்போதும் அதன் அர்த்தம் பல உண்டு.

சாமத்தியச் சடங்கை நியாயப்படுத்தும் போது அது இல்லையென்றால் பெண்ணின் திருமணத்தைப் பார்க்க முடியாது போய்விடும் அல்லது ஒரு மகிழ்வான நிகழ்வை ஏன் செய்யக் கூடாது என்ற கேள்வி எழும்? எமது கலாச்சாரக் கட்டுப்பாடுகளைப் பிள்ளைக்கு உணர்த்துவதற்கும், சீரழிவில் இருந்து பாதுகாப்பதற்கும் என பலவற்றைக் கூறி சாமத்தியச் சடங்கை நியாயப்படுத்துகின்றனர்.





ஏன் இதைப் பெண் குழந்தைக்கு மட்டும் செய்கின்றனர்? இதை ஏன் ஆண் குழந்தைக்குச் செய்வதில்லை?. அங்கு இந்தக் காரணங்கள் இல்லையோ? இதில் இருந்து புரிகின்றது தமது ஆணாதிக்கத்தைத் தக்கவைக்கவும், ஆணாதிக்கத் தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரம் தகர்கின்ற போது கட்டி எழுப்பவும்தான் ஆணாதிக்கச் சாமத்தியச் சடங்கைச் செய்கின்றனர்.

ஒரு பெண் குழந்தை சாமத்தியம் அடைகின்றாள் என்றால் என்ன? அக்குழந்தை இனவிருத்திக்குரிய கருமுட்டைகளை உற்பத்தி செய்து, அது இறக்கும் போது வெளியேற்றும் முதல் கழிவுக்குரிய நிகழ்வுதான் சாமத்தியமாகின்றது. இதைத் தான் கொண்டாட வேண்டும் என்கின்றனர், தமிழ்க் கலாச்சார ஆணாதிக்கவாதிகள். இந்தக் கழிவு வெளியேறுவதால் என்ன தமிழ்ப் பண்பாடு மற்றப் பெண்களிடம் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. இதை எப்படி பார்ப்பனியத் தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரம் உதித்தெழுந்து பாதுகாக்கின்றது. இதில் ஆணாதிக்கத்தைத் தவிர எதுவுமே அல்ல.

மாறாகப் பெண் புதிய அடக்குமுறைக்கு உள்ளாகின்றாள். பெண் விளம்பரப்படுத்தப்படுகின்றாள். ஓர் அழகு பொம்மையாக (மாடலிங் ஆக) நிறுத்தப்படுகின்றாள். பெண்ணை விளம்பரம் செய்வதன் மூலம் பெற்றோர் தமது பணத்திமிரைக் காட்டுகின்றனர். மறு பக்கம் பணம் வாங்குவதும், வசூலிப்பதும், வாங்கியதைக் கொடுப்பதும் ஒரு வியாபாரம் தொடர்கின்றது. பணத்தைக் கேட்டோமா என்றபடி வாங்குவதை விமர்சிக்காது, நாசுக்காகப் பணம் வாங்கும் முறையைப் பாதுகாக்கின்றனர்.

இது ஏன் விபச்சாரமாக, சீரழிவாக உள்ளது. ஒரு விபச்சாரி தன் உடலைக் காட்ட, தொட, உறவு கொள்ள ஆணாதிக்கத்தால் உருவாக்கப்பட்ட விபச்சாரத் தொழிலால் பணம் சேகரிக்கின்றாள். இங்கு கூட இவ்விபச்சாரம் கூட பல ஆணாதிக்கச் சமூகக் காரணங்களால் ஏற்படுகின்றது. ஒரு பெண் குழந்தையைப் பெற்றோர், விபச்சாரி போல் இந்தப் பெண் உறவு கொள்ளவும், குழந்தை பெறவும் முடியும் என்ற விடயத்தை முன்நிறுத்தி, பகிரங்கமாக விளம்பரம் போட்டு, அதைப் பறைசாற்றி, அப்பெண்ணைப் பலர் முன் நிறுத்தி இலவசமாகவோ, பணத்துக்காகவோ முன் நிறுத்தும் போதே அது விபச்சாரத்தின் பகுதியாகி விடுகின்றது. இதன்பின் ஓர் ஆண் அப்பெண்ணைப் பார்க்கும் விதமே முற்றிலும் வேறுபட்டது. அதாவது அப்பெண்ணை ஆண்கள் பார்க்கும் பார்வை, பெண்ணின் உறுப்பில் ஏற்பட்ட மாற்றம் ஊடாக மட்டுமே (சாமத்தியச் சடங்கு) புதிதாக அடையாளம் காண்கின்றனர்.

நியாயப்படுத்தும் வாதங்கள் கேவலமானது. ஏன் இதை ஆண் பிள்ளைக்குச் செய்து மகிழலாமே! அவனுக்கு ஆண்மை விழிக்கிற நாளாகப் (விந்து வெளிவரும் நாளாகப்) பார்த்து கொண்டாடலாமே! ஏன் பெண்ணின் சட்டைக்குள் புகுந்துப் பெண் உறுப்புக்குள் புகுந்து ஏதாவது புதிய கழிவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வருகிறதா? எனத் தேடி அலைந்து கொண்டாடுகின்றார்கள். அந்தக் குழந்தையின் சுய அபிப்பிராயத்தை எத்தனை பெற்றோர் கேட்டு இருப்பர்? அந்தப் பிஞ்சுகள் எப்படி இதை எதிர் கொள்கின்றன? அக்குழந்தையின் உளவியல் பாதிப்பு என்ன? அக்குழந்தை தன்னோடு பழகிய ஆண் - பெண் குழந்தைகளிடம் மற்றும் பெரியோரிடத்தில் இதைப் எப்படி எதிர் கொள்வாள்? எப்படி சக ஆண் குழந்தைகள் இதைப் பார்க்கும்? என எத்தனை பெற்றோர் சிந்திக்கின்றனர். பெற்றோர் இது பற்றி அறிவியலாக எதைத் தெரிந்து வைத்துள்ளனர்? எதுவுமில்லை. அறியாமையும், பிற்போக்கு சிந்தனையின் வெளிப்பாட்டால் பிறக்கும் ஆணாதிக்கமும், சுயகௌரவமும் மட்டுமே அறிந்து வைத்து உள்ளனர். சுயநலனுக்கு வெளியில் எந்த மண்ணாங்கட்டியும் கிடையாது. இதை மூடிமறைக்க கலாச்சாரம் தேவையாகின்றது.

பெண்ணின் திருமணத்தைப் பார்த்தல் என்ற வாதத்திற்குப் பின், ஆண் குழந்தையின் திருமணத்தைப் பற்றி பேசவில்லை. பெண்ணின் திருமணம் என்றால் உங்கள் திருமணமா? பெண்ணும் சுயஅறிவுள்ள மனிதன்தானே? அல்லது மிருகமா? மாட்டுக்கு நாணம் (லாடம்) போட்டு இழுத்துச் சென்று தேவையானவற்றுடன் உறவு கொள்ள வைப்பது போல், பெண்ணையும் செய்ய தமிழ்க் கலாச்சாரத்தைக் கூப்பிடுகிறீர்கள். தமிழ்க் கலாச்சாரம் என்றால் ஆணாதிக்கம் மட்டும்தானோ? ஒரு பெண் சுயமாக முடிவெடுக்க, சுதந்திரமாக வாழவிட தமிழ்க் கலாச்சாரம் அனுமதிக்காதோ? அதன் வேலிகள் உங்கள் பிற்போக்கு மூடத்தனத்துடன் கூடிய ஆணாதிக்க அறிவிலித்தனம்தானோ?

கலாச்சாரத்தின் சீரழிவைத் தடுக்க இது இந்தப் பிற்போக்குப் பண்பாடு தேவையாம். எப்படி என்று புரியவில்லை? கலாச்சாரச் சீரழிவு என எதைச் சொல்லுகின்றார்கள்? ஒரு பெண் சுயமாகத் தன் வாழ்க்கையை முடிவெடுப்பதைத்தானே சீரழிவு என்கின்றார்கள். அதாவது தமிழ்ப் பெண்ணின் முடியிலே பிடித்து இழுத்து வந்து செம்மறி ஆடுபோல கழுத்தை நீட்டுவதற்கும், தலையாட்டுவதுக்கும், காட்டியவன் உடன் படுக்கவும், பிள்ளை பெறவும் தான் சீரழிவற்ற கலாச்சாரம் பற்றி பிதற்றுகின்றனர். இதைப் பாதுகாக்க பெண்ணின் சட்டைக்குள்ளே கழிவு வருகிறதா? என விழிப்போடு இருந்து தேடுவது போல் தேடிப் பார்த்து கொண்டாடினால் சரியாகிவிடும் என்று சமூகத்திற்குச் சீரழிவைத் தடுக்க அறிவு விளக்கம் கொடுக்கின்றனர்.

தமிழ்க் கலாச்சார விளக்கம் போல் ஐரோப்பியப் பெண்கள் விபச்சாரிகளா? இல்லை அவர்களும் மனிதர்களே. அவர்களுக்கும் பண்பாடு, கலாச்சாரம் என்று உண்டு. உயர்ந்த பண்பாட்டை, கலாச்சாரத்தைக் கொச்சையாகக் கூறி எம் பெண்களையும், குழந்தைகளையும் வதைக்கும் ஆணாதிக்கத்தை நிறுத்துவது அவசியம் ஆகும். எம் கலாச்சாரத்திலும், அவர்கள் கலாச்சாரத்திலும் நல்லது, கெட்டது என பல உண்டு. நாம் நல்லவைகளை அடையாளம் கண்டு அவற்றைப் பாதுகாக்க வேண்டும். ஆண், பெண்ணைச் சமமாக மதிக்கப் பழக வேண்டும். இது எம் ஆணாதிக்கக் கலாச்சாரத்தில்





கிடையவே கிடையாது. **ஆண், பெண் குழந்தைக்கு இடையில் உள்ள வேறுபாடு இன விருத்திக்கான உறுப்பு மட்டுமே. இது பெண்ணை அடிமைப்படுத்தும் விலங்கு அல்ல.** அடிமை விலங்கை ஏந்திய ஆணாதிக்கம் பெண்ணைச் சிறை வைக்க வைக்கும் வாதங்கள் கேவலமானது. சொந்தக் குழந்தைகளே தம் பெற்றோருக்கு எதிராகச் சீரழிவு மற்றும் வக்கிரக் கலாச்சாரத்தை மறுப்பதும், போராடுவதும் அவர்கள் உரிமையாகும். இதை இந்த ஆணாதிக்கக் கலாச்சாரக் காவலர்களால் தடுத்து நிறுத்தமுடியாது.

சாமத்தியச் சடங்கை இன்றைய திரைப்படம் பாதுகாக்கும் வடிவமாகின்றது. **ஆபாச கவிப்பேரரசு வைரமுத்துவின்** கவிதையும், சாமத்தியச் சடங்கும் ஆபாசமாக இருப்பதால் ஒத்தும் போகின்றது. அதைச் "சீவலப்பேரி பாண்டி" என்ற திரைப்படப் பாடலில் இருந்து பார்ப்போம்

ஆ: "ஏய்.. மசாலா அரைக்கிற மைனா-
ஓம் மத்தளம் என்ன விலை
மாராப்பு வழுக்கிற மயிலே- ஓம்
மல்லியப்பூ என்ன விலை
நீ பொறந்த தேதியில் அடியே எனக்குப்
புத்தி மாறிப்போச்சு!
நீ சமைஞ்ச தேதியில் அடியே எனக்கு பாதித்
தூக்கம் தொலஞ்சி போச்சு!
ஆமா தூக்கம் தொலஞ்சி போச்சு!"

— என்று ஆபாசக் கவிப்பேரரசு வைரமுத்துவின் வரிகள் "சமைஞ்ச" தேதி என்பதன் ஊடாகச் சாமத்தியப்பட்ட நாளையும், அதை ஒட்டி எழும் ஆணாதிக்க உணர்வுகளையும் தனது வக்கிர வரிகளில் வெளிப்படுத்தியுள்ளார். இங்கு சாமத்தியத்தைப் பறைசாற்றித் தமிழ்ப் பிற்போக்குக் கலாச்சார மானம் காக்க கொண்டாடுவதன் மூலம் எத்தனை இளைஞர்களின் புத்தியையும், தூக்கத்தையும் ஆபாசக் கவிப்பேரரசு வைரமுத்து போல் இழந்து, பெண்ணின் மாராப்பு வழுக்கி விழ ஆபாசக் கவிப்பேரரசு வைரமுத்து போல் கனவு கண்டு பெண்களை ஊடறுத்து கற்பழிக்கின்றனர் என்பதற்குச் சாட்சிகள் தேவையில்லை.

ஆபாசக் கவிப்பேரரசு வைரமுத்துவின் ஆபாச எழுத்துக்களை மாதிரிக்கு இன்னும் கொஞ்சம் பார்ப்போம். "கிழக்குச் சீமையிலே" என்ற படத்தில்,

ஆ: "எதுக்கு பொண்டாட்டி என்ன சுத்தி வைப்பாட்டி
எக்கச்சக்கம் ஆகிப்போச்சு கணக்கு
பள்ளிக்கூடம் போகையிலே பள்ளப்பட்டி ஓடையிலே
கோக்குமாக்கு ஆகிப்போச்சி எனக்கு
இத குத்துமுன்னு சொன்னா அவன் கிறுக்கு"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



— என்கிறானே வைப்பாட்டி கவிஞர் வைரமுத்து. மூத்தத் தமிழ்க்குடியின் கலாச்சாரத்துக்கு வழிகாட்டுகிறது. ஆண்களே வைப்பாட்டிகளை உருவாக்குங்கள். பெண்களே வைப்பாட்டியாக இருங்கள் என்று வழிகாட்டுகின்றது.

அடுத்து "ஜெய்ஹிந்த்" என்ற தேே(க)சப் பக்தி படத்திலுள்ள பாடல் வரிகளைப் பார்ப்போம்.

ஆண்: "பார்வைக்கு ஏத்த இடம்
பாவையே எந்த இடம்?

பெண்: எந்த இடம் சூரியன் பார்க்கலையோ
அன்பரே அந்த இடம்"

— இங்கு தான் சாமத்தியச் சடங்கை ஆபாசக் கவிப்பேரரசு வைரமுத்து வழியில் புகுந்து தேடி நியாயப்படுத்துகின்றனர். வாழ்க தமிழ்ப் பண்பாட்டு ஆபாசக் கவிப்பேரரசு வைரமுத்து. அடுத்து பல படங்களின் பாடல்களிலுள்ள ஆபாசக் கவிப்பேரரசு வைரமுத்துவின் வரிகளைக் கீழே காணலாம்.

"இடுப்பு அடிக்கடி துடிக்குது
றவுக்க எதுக்கடி வெடிக்குது"

— கேப்டன்

"மாங்கா மாங்கா ரெண்டு மாங்கா
மார்க்கெட்டு போகாத குண்டு மாங்கா"

— பிரதாப்

"சோளிக்குள் என்ன இருக்கு?
மாராப்பில் என்ன?"

— இந்தி மூலம்: கல்நாயக்
தமிழில்: மனசு ரெண்டும் புதுசு

"பாவாடை காற்றில் பறந்தால் நீ
என்ன செய்வாய்?
பல பேரின் கண்கள் முறைக்கும்
வேறேன்ன செய்வாய்?
பாவாடை காற்றில் பறந்தால்
பல பேரின் கண்கள் விழுந்தால்
பாவாடை கொண்டு
முகத்தை மூடுவேன்"

— என்ற வரிகள் சாமத்தியச் சடங்கு மூலம் பெண் மீது வக்கிரப் பார்வை விழுந்தால், தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரத்தால் முகத்தை மூடுங்கள்





ஆபாசக் கவிப்பேரரசு வைரமுத்து பொன் மொழிப்படி. இதைத்தான் மூத்தத் தமிழ்க் கலாச்சாரப் பண்பாட்டாளர்கள் செய்யமுடிகின்றது. ஆபாசம் என்பதற்கு இந்த எழுத்துக்கள் தான் சாட்சி.

சாமத்தியச் சடங்கை ஆணாதிக்கம் எனச் சொல்லும் போது, இல்லை அய்யோ இல்லை அது ஆணாதிக்கம் இல்லை என்று சொல்லியபடி ஆணாதிக்கத்துக்கு வக்காளத்து வாங்குவதும் ஆபாசம்தான்.

இந்த ஆணாதிக்கத்தை எப்படி, எங்கே, எதற்குள் தேடிச் செய்கின்றனர் என கொஞ்சம் விலாவாரியாகப் பேசி, எழுதி வெளிக் கொண்டு வந்தாலே அதையும் ஆபாசம் என கூறி, மூடிவிட முயல்கின்றனர்.

ஐயா! உங்கள் பெண் குழந்தைகள் அல்லது அக்காவிற்கு அல்லது தங்கச்சிக்கு என்ன நடந்தது எனக் கேட்டால் தமிழ்க் கலாச்சாரச் செம்மல்களே என்ன கூறுவீர்கள்? நீங்கள் வாயை மூடிக் கொண்டிரு என்று கூறுவீர்களா? அல்லது உனக்குத் தெரியத் தேவை இல்லை என்று கூறி அதட்டுவீர்களா? பாடசாலையில் அல்லது புலம்பெயர் நாடுகளில் வாழும் மற்ற இனத்தவர் கேட்டால் என்ன சொல்வீர்கள்? விளக்குங்கள் கொஞ்சம் விலாவாரியாக.

தரக்குறைவு பற்றி ஒப்பாரி வைத்தபடி ஆபாசத்திலே உழலுபவர்கள் யார் என்றால் எழுதுபவர்கள்தான். இவர்கள் வீடியோவிலும் தொலைக்காட்சியிலும், திரைப்படத்திலும் பார்க்கும் ஆபாசக் (தமிழ் உட்பட) காட்சிகள் வீட்டிலும் போகும் இடம் எல்லாம் கேட்கும் திரைப்படப் பாடல்கள், பார்க்கும் வண்ணப்பட செய்திப் பத்திரிக்கைகள் என எங்கும் ஆபாசமும், தரக்குறைவு தான் இந்த மாதிரி எழுதும் தமிழனின் ஆதாரப் பண்பாடு. மாதிரிக்கு வாலியின் பாடல் வரிகளைச் சாமுண்டி என்ற படத்திலிருந்துப் பார்ப்போம்.

பெண்: "கதவச் சாத்து கதவச் சாத்து மாமா
நான் கன்னி கழிய வேணுமையா ஆமா
கன்னி நான் கழிஞ்சிதான் தாலிய
நீ கட்ட வேணும்"

இது போன்ற பாட்டுகள், பாடல் வரிகள், காட்சிகள், செய்திப் படங்கள் தான் தமிழனின் பண்பாடாகி, வெற்றி பெற்ற நிலையில் தான், சந்தையில் இதன் மவுசு அதிகமாகின்றது. இதன் பண்பாட்டால்தான் சாமத்தியச் சடங்கும் நியாயப்படுத்தப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 26. பாலியல் தெரிவுகளும் வாழ்க்கையும்

பிரான்சில் ஒருவரின் ஒரு வருடக் கலவியை (புணர்ச்சியை) அட்டவணை - 20 மூலமாகப் பார்ப்போம்.[61]

அட்டவணை - 20

| வகை | கலவியில் ஈடுபடும் நாட்கள் |
|---|---|
| சேர்ந்து வாழ்தல் | 146 |
| திருமணம் செய்தோர் | 118 |
| திருமணம் செய்யவில்லை. ஆனால் காதலன், காதலி உண்டு. | 114 |
| திருமணமும் செய்யவில்லை. காதலன், காதலியும் இல்லை. | 69 |

இறுக்கமான ஆணாதிக்கக் குடும்பம் (118) மற்றும் கட்டற்ற பாலியல் நடத்தைகள் (69) என இரண்டிலும் கலவியின் இணைவு இயல்பாகச் சேர்ந்து வாழ்பவர்களைக் (114) காட்டிலும் குறைவானதாக உள்ளது. தாமாகவே சேர்ந்து வாழ்பவர்களிடையே கலவிகள் அதிகரித்து காணப்படுவது மற்ற வடிவங்களைவிட கலவி மட்டுமே சுதந்திரத்தைத் தீர்மானிக்குமா? அதிகமாக உள்ளதைக் காட்டுகின்றது.

பாரம்பரியமான திருமண உறவில் இருக்கும் ஆணாதிக்க ஜனநாயக நெருக்கடி, சேர்ந்து வாழும் குடும்பத்தில் குறைவானதாக இருப்பதால் அதிகக் கலவியை ஆரோக்கியமாக்குகின்றது. காதலன், காதலி உள்ளோர் இடையில் கூட்டுச் சமூகக் கண்ணோட்டம் இல்லாததால் கலவி குறைந்து இருப்பதுடன் பாலியல் நெருக்கடி இயல்பானதாகின்றது. ஓர் ஆணுடன் அல்லது ஒரு





பெண்ணுடன் தொடர்பற்ற கட்டற்றவர்கள் பாலியல் கலவியில் ஈடுபடமுடியாத பாலியல் நோயாளியாகின்றனர். இவர்களின் கட்டற்ற பாலியல் சுதந்திரம் கலவியின் எண்ணிக்கையைக் குறைத்து விபச்சார நிலையில் குறைந்த கலவியையே ஏற்படுத்துகின்றது. இவர்களின் இயல்பான பாலியல் தேவைகள் நலமடிக்கப்பட்ட நிலையில் விபச்சாரத் தளத்தில், கட்டற்ற சுதந்திரத்தில் இந்தப் பொருளாதார அமைப்பின் சாக்கடைக்குள் தள்ளப்பட்ட இழிநிலையில் கேவலகரமாக வாழ்கின்றனர்.

இந்தக் கலவி பற்றிய புள்ளிவிபரம் மனித நடத்தையில் பல விதங்களை எமக்கு எதார்த்தத்தில் காட்டுகின்றது. ஆண் - பெண் உறவில், வேறுபட்ட உதாரணத்தில் கூட்டுவாழ்க்கையின் ஜனநாயகத்தன்மையை எமக்குப் புரிய வைக்கின்றது. இயல்பான, கட்டுப்பாடற்ற இணைந்த வாழ்க்கை கலவியை அதிகரிக்க வைக்கும். இது மனிதச் சமுதாயத்தில் உயர்ந்த ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

இன்று நிலவிவரும் ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பில் இணைந்து வாழும் வாழ்க்கையின் உன்னதப் பண்புகள் இதற்குள் மாசுபடுத்தப்பட்டுள்ளது. இருந்த போதும் இவை வாழ்க்கையின் எதிர்கால இயல்பான வாழ்க்கையின் எடுத்துக் காட்டுகளாகும். ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பு தகரும்போது இயல்பாக இணைந்த குடும்பத்தின் உயர்ந்த தரம் கொண்ட வாழ்க்கை ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்பதற்கு இக்கலவியின் எதார்த்தம் எம்முன் வழிகாட்டுகின்றது.

இந்தியாவில் மத்தியதர வர்க்கத்துக்கு மேற்பட்ட 3,000 ரூபாய்க்கும் அதிகமாக வருமானம் உடைய 20 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டோரிடம் 1990-இல், இந்தியா டுடே நடத்திய ஆய்வில் பாலுறவு (Sex) உங்கள் வாழ்க்கையில் முக்கியமா? என்ற கேள்வியைக் கேட்டபோது, அவர்கள் அளித்த பதில்களை அட்டவணை: 21-இல் காணலாம். (21.12.1996)[34]

அட்டவணை - 21

| வகை | சதவீதம் |
|---|---|
| ரொம்ப முக்கியம் | 34 % |
| முக்கியம் | 30 % |
| ஏதோ கொஞ்சம் | 15 % |
| இல்லை | 5 % |
| எப்போதும் இல்லை | 4 % |

நீங்கள் கடந்த மாதத்தில் பாலுறவில் (Sex) ஈடுபட்டீர்களா? என்ற கேள்விக்கு அவர்கள் அளித்த பதில்களை அட்டவணை: 22-இல், காணலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அட்டவணை - 22

| வகை | எத்தனை சதவீதம் |
|---|---|
| உடலுறவு | 60 % |
| சுய மைதுனம் | 5 % |
| வாய் வழி உறவு | 5 % |
| புளு பிலிம் | 5 % |
| பாலுறவுச் சாதனங்கள் | 5 % |
| பாலுறவுத் தூண்டும் பொருட்கள் | 5 % |
| சொல்லாதவர்கள் | 20 % |

இந்தியாவில் மத்தியதர வர்க்கத்தின் பிரிவும், அதற்கு மேற்பட்ட பிரிவுகளையும் உள்ளடக்கிய இவ்வாய்வு நமக்குச் சில புரிதல்களைத் தருகின்றது. ஆண் பெண் வேறுபாடின்றி பாலுறவுத் தேவையை உணர்த்தினர். அதே நேரம் கணிசமான பகுதியினர் பாலுறவைப் புறக்கணிக்கின்றனர். சமுதாயத்தின் உயர்குடிகள் சமுதாயத்தை விட்டுவிலகிச் சீரழிவது அவ்வர்க்கத்துக்கே உரிய குணாம்சமாகும். பாலுறவுக் கலவியில் ஈடுபாடு பற்றிய கேள்விக்கான பதிலில் ஆண் - பெண் உடலுறவுக்குப் புறம்பான உறவுகள் ஆணாதிக்கத்தின் விளைவைக் காட்டுகின்றது.

இயற்கையான பாலியல் உறவு மறுக்கப்படும் போது, மறுக்கும் வர்க்கமே அதன் சீரழிவில் முதலில் சிக்கிக் கொள்வதைத் தடுக்க முடிவதில்லை. பாலியலில் இயற்கை உணர்வுகளின் தேவையை உணர்பவர்கள், அதை இயற்கைக்குப் புறம்பான வழியில் தீர்த்துக் கொள்வது மேட்டுக்குடியின் பண்பாகின்றது. மறுபுறம் இந்த உணர்வுகளை மரத்துப்போகும் சமுதாய இழிமைக்குள் பழகிக் கொள்வதன் மூலம் உணர்ச்சியை நலன் அடித்து மனநோயாளியாகி விடுகின்றனர். இவை சமுதாயத்தில் இருந்து அன்னியமான கேளிக்கைகளில் தன்னை மாற்றிக் கொள்கின்றது.

இந்த வகையில் "டேக் இட் ஈஸி பாலிசி" என்ற தலைப்பில் (கட்டுரை) இந்தியா டிஸ்கோ டான்சுகளின் (Disco Dance) வக்கிரத்தை, உலகமயமாதலை நியாயப்படுத்த எடுத்துக் காட்டி எழுதுகின்றது. (19.8.1998)[34] மேலும் "வலையில் லீலைகள்" என்ற தலைப்பில் இணையக் (Internet) காமக் களியாட்ட வக்கிரத்தை இந்தியா டுடே எழுதுகின்றது. (1.7.1998)[34] இதைத் தொடர்ந்து "அரட்டை அரங்கில்" "மனக்கதவே தாழ் திறவாய்" என்ற தலைப்புகளில் தொலைக்காட்சி வக்கிரத்தை நியாயப்படுத்தி எழுதியுள்ளது. அமெரிக்காவின் "ஒப்ராலின்ஃ. பீரே" என்ற நிகழ்ச்சியைப் பின்பற்றி ஆண் - பெண் தமது வக்கிரத்தைக் கொட்டுகின்றனர். (6.3.1995)[34] "சொர்க்கம் அருகிலே" என்ற கட்டுரையில் ஆண்மை நோக்கி ஓடும் மனிதர்களை இந்தியா டுடே எழுதுகின்றது. (1.7.1998)[34] "நெருங்கி,





விலகி, நெருங்கி" என்ற கட்டுரையில் பாலுணர்வு தன்மையை இந்தியா டுடே எழுதுகின்றது. (21.12.1996)[34] "ஆசியரகம்" என்ற தலைப்பில் ஆசிய இனப் பெண்கள் துறக்காதது இல்லை என்று இந்தியா டுடே எழுதுகின்றது. (21.6.1993)[34] "துறப்பது ஆடையை மட்டுமல்ல - நிர்வாண நங்கைகள்" என்ற தலைப்பில், "தயக்கத்தைத் துறந்த பல பெண்களுக்கு நிர்வாண மாடலிங் கீழ்த்தரமான காரியமல்ல, உயர்வுக்கான ஏணிப்படி" என்று எழுதும் இந்தியா டுடே தொடர்ந்து பெண்களின் பாலியல் வக்கிரத்தை வெளியிடும் "டெபோனர்" இருபது வருடத்திற்கு முன் 30,000 பிரதிகள் விற்றது என்றும் இன்று அது ஒரு இலட்சத்தை எட்டியுள்ளது என்றும் எழுதுகிறது. "பிளேவே" (பாலியல் இதழ்) என்ற இதழ் 30,000 என்ற விற்பனையில் இருந்தது என்றும் ஆறு மாதத்திற்குப் பின் 50,000 பிரதியை விற்றது என்றும் எழுதுகிறது. (6.11.1994)[34]

இணையத்தில் (Internet) "சைபர் செக்ஸ்" என்ற புதிய பாலியல் வக்கிரம் அரங்கேறுகின்றது. இணையத்தில் எதை அதிகம் ஆராய்கின்றனர்? என யாகூ (YAHOO.COM) என்ற அமைப்பு ஆராய்ந்தபோது அதிகமாகப் பாலியலையே (sex) ஆராய்கின்றனர் என்ற அதிர்ச்சியே எஞ்சியது. இணையத்தில் அதிகம் இறக்குமதி (DOWNLOAD) செய்யப்பட்டது சின்டி மார்கோலிஸ் (CINDY MARGOLIS) என்ற நீச்சல் உடைகள் தான். சின்டியின் நூறு பிரசித்திப் பெற்ற போட்டோக்கள் 7,50,000 பேர் பிரிண்ட் எடுத்துள்ளதை அமெரிக்க ஆன் லைன் அறிக்கை தெரிவிக்கின்றது. சிண்டி தனக்கு வந்த ஈ-மெயில்களில் நாற்பது சதவீதம் எப்படி உடல் அழகைப் பேணுகின்றீர்கள்? எனக் கேட்டு வருகின்றது என்கின்றார். (23.8.1998)[28]

சுதந்திரமான ஜனநாயக ஊடகமாகச் சித்தரிக்கப்படும் இணையத்தின் வக்கிரத்தைப் பார்ப்போம். இணையம் தொடர்பான ஆய்வு ஒன்றைச் செய்த அமெரிக்காவிலுள்ள 'கார்னெகி மெல்லோன் பல்கலைக்கழகம்' 'தகவல் மாநெடுஞ்சாலையில் நடக்கும் பாலுறவு வக்கிர இலக்கியங்களின் வியாபாரம்' என்றொரு தலைப்பில் ஆய்வு செய்தது. அதன்படி 18 மாதத்தில் 9,17,410 பாலுறவு வக்கிரப் படங்கள், சிறுகதைகள், சித்தரிப்புகள், ஆண்டுத் திரைப்படங்கள் இணையத்தில் புகுத்தப்பட்டதைக் குறிப்பிட்டதுடன், 83.5 சதவீதம் பேர் இதைக் கண்டு களிப்பதையும் அம்பலமாக்கியது. பல்கலைக்கழக இணைய பயன்பாட்டில் 40-க்கு 13 பாலியல் வக்கிரத்துக்குள் நீடிப்பதை வேறு அம்பலமாக்கியுள்ளது. இந்தச் சேவையை வழங்கும் அமெரிக்காவின் 5 பெரிய ஜனநாயக நிறுவனங்கள் 10 இலட்சம் டாலருக்கு மேல் இதன் மூலம் சம்பாதிக்கின்றனர். (மார்ச் 1998)[54]

பெண்ணின் சுதந்திரத்தில், ஆணின் ஜனநாயகத்தில் இவைகள் நியாயப்படுத்தப்படுகின்றது. இன்று பாலியல் உணர்வுகளைத் தீர்த்துக் கொள்வது என்பது தனிமனிதக் கட்டற்ற சுதந்திரத்தின் பின் வக்கிரமடைவதையே மேல் உள்ளது காட்டுகின்றது. இந்தியா டுடே போன்ற பார்ப்பனிய ஏகாதிபத்தியப் பத்திரிக்கைகள் இவைகளை எந்தக் கட்டத்திலும் விமர்சிக்கவில்லை. மாறாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதரிக்கின்றது. இதைச் செய்தியாக மத்தியதரப் பிரிவுகளுக்குக் கடத்திச் செல்லுகின்றது.

இந்தியாவின் மதவாத, நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க வக்கிரத்தை மாற்றி ஏகாதிபத்திய ஆணாதிக்க வக்கிரத்தை ஏற்படுத்த செய்யும் முயற்சியில் பழையதை மறுப்பது (பின்நவீனத்துவவாதிகள் போல்) அரங்கேறுகின்றது. இந்த மறுப்பையே மார்க்சியப் போராட்டத்திற்கு எதிரான மாற்றாக இன்று பலர் முன் வைக்கின்றனர். இந்த வகையில் இன்று பலவிதமான பாலியல் நடத்தைகள் உருவாக்கப்படுகின்றன, நியாயப்படுத்தப்படுகின்றன. இது பாலியல் வக்கிரத்தில் பூத்துக் குலுங்குகின்றது.

இணையம் பாலியல் வக்கிரத்திலும், கேவலமான நடத்தைகளிலும் அரங்கேறுகின்றது. டிஸ்கோ கலாச்சாரம் பாலியலை விபச்சாரமாக்குகின்றது. இது முகம் பார்த்து, உடல் பார்த்து பாலியலை இரசிக்கவும், நுகரவும் பழக்கப்படுத்தப்படுகின்றது. இதைச் செய்ய பெண்களின் ஆடை அவிழ்ப்புகள் எல்லாத் தளத்திலும் கையாளப்படுகின்றது. இது மொடலாக தொடங்கி அங்கத்தை விற்பனைச் சந்தையில் பொருட்களின் சந்தையாகப் பரிணாமிக்கின்றது. இங்கு சந்தையானது அனைத்தையும் தீர்மானிக்கின்றது. அதற்கு இசைவாகப் பாலியல் போக்குகள் எதார்த்தமாகின்றது. இது வக்கிரத்தைத் தனது ஜனநாயகத் தனிமனிதச் சுதந்திரமாக எல்லைப்படுத்துகின்றது. இதைத் தான் மேலுள்ளது எமக்குத் தோலுரித்துக் காட்டுகின்றது.

பாலியல் நடத்தைகள் மோசமானப் பாலியல் மனநோயாளிகளை உற்பத்தியாக்குகின்றது. இந்தியாவில் பத்து பேருக்கு ஒருவர் ஆண்மைக் குறைவால் மன உழைச்சலுக்கு உள்ளாகின்றார். நகர்ப்புறத்தில் ஐந்து முதல் எட்டு பேருக்கு ஒருவர் ஆண்மைக் குறைவுக்கு மருந்து வாங்குகின்றனர். சண்டிகாரில் உள்ள தாம்பத்திய மனவியல்-செக்சுவல் கிளினிக் ஆய்வுகளில் தன்னிடம் மருத்துவத்திற்கு வந்தோரில் 77 சதவீதம் பேருக்கு விந்து முன் கூட்டியே வெளியேறி விடுவதாகக் கண்டறிந்துள்ளார். மும்பாய் கே.இ.எம். மருத்துவமனை ஆய்வில் ஆண்மைக் குறைவு நோய் வருடம் 15 சதவீதம் அதிகரிக்கின்றது. சென்னை தேகா இன்ஸ்டிடியூட் மருத்துவ ஆலோசகர் பத்து வருடத்தில், ஆண்மைக் குறைவுக்காக மருந்து தயாரிப்பது முன்பை விட நான்கு மடங்கு அதிகரித்துள்ளது என்கிறார். கிட்டத்தட்ட மூன்று கோடி பேர் ஆண்மைக் குறைவால் அமெரிக்காவில் அவதிப்படுவதாக நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆ.்.ப் ஹெல்த் தெரிவித்துள்ளது. சலரோக நோயால் பாதிக்கப் பட்டோரில் 28 சதவீதம் பேர் ஆண்மைக் கோளாறால் பாதிக்கப்படுகின்றனர். (29.4.1998)[34]

ஆணாதிக்கச் சமுதாயத்தில் ஆணாதிக்க வக்கிரம் அதிகரிக்க ஆண்மைக் குறைபாடும் அதிகரிப்பது எதார்த்தமாகின்றது. இந்நோய்





உண்மையில் மனிதச் சலனத்திலும், மன உளவியலிலும் ஏற்படுகின்றது. பெண் பற்றிய ஆணின் கண்ணோட்டம், பாலியல் பற்றிய சமுதாயக் கண்ணோட்டம் விகாரமாகின்ற போது ஆணின் ஆண்மைப் போட்டியில் ஈடுகொடுக்க முடியாத நுகர்வுச் சிக்கலுக்குள் சிக்குகின்றது. இது நகரத்துக்கும், கிராமத்துக்கும் இடையில் வேறுபாட்டைப் புள்ளி விபரம் காட்டுகின்றது. இதன் மூலம் ஏகாதிபத்திய ஆணாதிக்க வக்கிரம் நகரத்தைச் சிதைக்கின்ற வேகம் கிராமத்தில் குறைவாக இருப்பது சமகால நிகழ்வாக உள்ளது. இது ஆண்மைக் குறைவை வெளிப்படுத்தும் நோய் கிராமத்துக்கும், நகரத்துக்கும் இடையில் வேறுபாட்டைத் தீர்மானிக்கின்றது. ஆணின் நிலை இந்த வகையில் உள்ள போது பெண்ணின் நிலை கணக்கிட முடியாதது. ஏனெனின் இதனால் பாதிக்கப்படும் பெண்கள் மற்றும் ஆண் சார்ந்த பாலியல் முன்னுரிமை பெண்களின் அவலத்தைச் சொல்லில் அடக்க முடியாது. “மேற்கின் புள்ளிவிபரம் ஒன்றின்படி உடலுறவில் ஆண்கள் 100 சதவீதம் திருப்தி அடைந்தால் பெண் 30 சதவீதமே திருப்தி அடைகின்றாள் என்கிறது.”[62] ஆனால் அவர்கள் தமது நெருக்கடியை வெளிக் கொண்டுவர முடியாத ஆணாதிக்கச் சமுதாயத்தின் கைதிகளாக உள்ளனர். இதைக் கோருவது, கேட்பது பெண்ணின் அடக்க, ஒடுக்கத்திற்கு எதிரானது ஆகும். மீறிக் கோரினால் இந்த ஆணாதிக்கச் சமூகத்தில் வாழ தகுதியற்றவளாகக் கருதப்படுவாள்.

இன்று இந்தப் பாலியல் சிக்கலில் சிக்கிக் கொள்ளும் ஆண்களின் எண்ணிக்கை உலகமயமாதல் வேகத்துக்கு நேர்விகிதத்தில் வளர்ச்சி பெறுகின்றது. பண்பாடு, கலாச்சார ரீதியில் ஏகாதிபத்தியமயமாதல் என்பது ஆண்மைக் கோளாறின் நோய்க்குறியாகும். இந்த நோயில் பெரும்பான்மையானோரின் நோயானது விந்து முன் கூட்டியே வெளியேறுவதாகும். இது பெண் உறுப்புகள் பற்றிய சமுதாயப் புறச்சூழல் சார்ந்த பிம்பங்கள் ஆணின் விந்து முன்கூட்டியே வெளியேறுவதற்கான நிபந்தனையாகின்றது.

உறுப்பு பற்றிய ஆணாதிக்கச் சுரண்டும் வர்க்கத்தின் வக்கிரப் பார்வைகள் ஆணின் இயற்கையான செயலுக்கு முன்பே இன்பத்தைத் தூண்டுகின்றது. அதாவது பெண் சந்தையில் விற்பனைக்காக உருவகப்படுத்தப்படும் அனைத்துத் துறைசார்ந்த பிம்பத்திலும் ஆணாதிக்கத் துணைகொண்டு எப்படி உலகமயமாதலும் தீவிரம் பெற்று வளரத் தூண்டுதலாக உள்ளதோ, அதைப் போன்று பெண்ணின் உறுப்புகள் ஆணின் ஆண்மைத் தூண்டுதலை வேகப்படுத்தி அதை இழக்கப் பண்ணுகின்றது.

பெண் எவ்வளவுக்கு எவ்வளவு ஆணாதிக்க உலகமயமாதலில் கட்டற்ற சுதந்திரம் பெற்று நிர்வாணமாகின்றாளோ அவ்வளவுக்கு அவ்வளவு ஆண்மைக் கோளாறு அதிகரிக்கின்றது. இது எதிர் நிலையில் பெண்ணின் பாலியல் அவலத்திற்கு மேலும் தீர்க்கமுடியாத தூண்டுதலாகின்றது. இதன் மாற்றுத் தீர்வாக ஓரினப் புணர்ச்சி வளர்ச்சி பெறுகின்றது. பாலியலில் எதிர்பால் மீதான வெறுப்பு ஆண்மைக் கோளாறால் ஒருபுறம் தீவிரமாகின்றது. ஆணாதிக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விதைத்த ஆண் - பெண் விளைவைக் காட்டிலும் எதிர் பால் வெறுப்பு ஓரினப் புணர்ச்சியில் வளர்ச்சி பெறுவது என்பது கூட்டுச் சமுதாயப் பிளவை, அதாவது ஆண் - பெண் பிளவை மேலும் ஆழமாக்குகின்றது.

இன்று ஆண்மைக் கோளாறை நிவர்த்தி செய்ய புதிய மருந்துகளைத் தேடி கண்டுபிடிப்பாளர்கள் மண்டையைப் பிளந்து கொள்கின்றனர். அந்தளவுக்குக் கண்டுபிடிப்பு ஆணாதிக்கப் பணத்தை விளையப் பண்ணும் ஆணாதிக்க வக்கிரம் கொப்பளித்தபடியுள்ளது. ஆண்மைக் கோளாறைத் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் பெண் பற்றிய வக்கிரமான பார்வை நிறுத்தப்பட வேண்டும். இன்றைய சந்தை உலகம், அது சார்ந்த விளம்பரங்கள் தடை செய்யப்பட வேண்டும். இந்தச் சந்தைப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க உருவாக்கப்படும், எழுத்துகள், திரைப்படங்கள்.... என அனைத்தும் ஒழித்துக் கட்டப்படவேண்டும். அதாவது மொத்தத்தில் ஆணாதிக்கச் சமூகம் தகர்க்கப்பட வேண்டும். இது இன்றைய சுரண்டல் அமைப்பைத் தகர்ப்பதில் தங்கியுள்ளது. பெண் பற்றிய ஆணாதிக்கப் பார்வையே ஆண்மைக் குறைவின் காரணம் என்பதைப் புரியாத வரை, அதை மாற்றவும் முடியாது, தடுத்து நிறுத்தவும் முடியாது.

இது இந்தியாவில் இருந்து அமெரிக்கா வரை பொது கோளாறாகின்றது. இது சமுதாயப் பிணியாகின்றது. ஆண் - பெண் பிளவைத் தீவிரமாக்குகின்றது. இயற்கைக்குப் புறம்பான பாலியல் வக்கிரத்துக்கு வித்திடுகின்றது. இதைப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின்றி தடுத்து நிறுத்த முடியாது.

ஜப்பானில் செய்த ஆய்வில் ஒருதார மணத்துக்கு வெளியில் ஆண்கள் 20 சதவீதமும், பெண்கள் 8 சதவீதமும் பாலியல் உறவுகளைக் கொண்டிருப்பதை ஒப்புக்கொண்டனர். பாலியல் நெருக்கடிகள், சீரழிவு விளைவுகளின் தோற்றம் ஆணாதிக்க அமைப்பின் சீழ் ஆகின்றது. நாற்றம் கண்ட இந்த ஆணாதிக்க அமைப்பும், அதன் விளைவும் இயற்கை உணர்வுகளைப் பந்தாடிச் சிதைப்பதையே இப்புள்ளிவிபரம் காட்டுகின்றது. இந்த நாற்றம் கண்ட அழுகல் வாழ்க்கை முறை ஆணாதிக்கத்திற்கு எதிரான ஆயுதத்தை உருவாக்கின்றது. இதை, இந்த ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை உலகமயமாதல் தனக்கு எதிராகத் தன்னையே உருவாக்குகின்றது. இந்த வர்க்கப் போராட்டம் அனைத்துத் துறையிலும் வெடித்துக் கிளம்புவதை எந்தச் சக்தியாலும் தடுக்கமுடியாது.

பாலுறவு பற்றிய சமுதாய வக்கிரம் சிறுவர்-சிறுமிகளைகளையும் கூட விட்டுவிடவில்லை. பிரான்சில் முதல் முத்தமிடுதல் 14 வயதிலும், அணைத்தல் 15 வயதிலும் (ஆண் 15.7-வயதிலும் பெண் 11-15 வயதிலும்), உடலுறவு கொள்ளல் 17 வயதிலும் (ஆண் 17.3-வயதிலும் பெண் 17.6-வயதிலும்) நடக்கின்றது.

சுற்றுலாப் பயணத்தின் போதே 63 சதவீதமான உடலுறவு நிகழ்கின்றது. இதில் 60 சதவீதம் பெண்கள் தமது காதலனுடன் விரும்பி ஈடுபடுகின்றனர்.





ஆனால் ஆண் 38 சதவீதம் மட்டுமே விரும்பியவருடன் ஈடுபடுகின்றான். 5 சதவீதம் பெண்கள் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். 87 சதவீதம் பெண்களும், 70 சதவீதம் ஆண்களும் தாம் காதலிப்பவர்களுடன் உறவு கொள்கின்றனர். 93 சதவீதம் ஆண்களும் 65 சதவீதம் பெண்களும் சந்தோசத்திற்காக மட்டும் உறவு கொள்கின்றனர். 15-16 வயதுடைய ஆண்களில் 35 சதவீத ஆண்களும் 18 வயதுடைய ஆண்களில் 50 சதவீத ஆண்களும் பல காதலிகளை வைத்துள்ளனர். இது பெண்களில் முறையே 24 சதவீதமாகவும் 40 சதவீதமாகவும் உள்ளது. 15.4 சதவீதமான பெண்கள், 2.3 சதவீதமான ஆண்கள் அவர்களின் சிறு வயதில் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.[63] 15 வயதுக்குக் குறைந்த 81 சதவீதம் பேருக்கு ஒரு காதலன் அல்லது காதலி உள்ளனர். இதில் முத்தத்தில் ஈடுபடுவோர் 82 சதவீதம் பேர் ஆவர். ஆகக் குறைந்த உடலுறவு 13 வயதில் நடக்கிறது.[64] பதினைந்து மும்பாய் பாடசாலைகளில் மார்க்கெட்டிங் அமைப்பு எடுத்த ஆய்வில் 12 வயது முதல் 15 வயதுடையோரில் 13 சதவீதம் பேருக்குப் பாலியல் அனுபவம் உள்ளது. இதில் 75 சதவீதம் பேருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காதலர் அல்லது காதலிகள் உள்ளனர். (23.9.1998)[34] "பிஞ்சில் பழுத்தவை" கட்டுரையில் இந்தியாவில் எட்டு தனித்தனியான ஆய்வுகளின் பின் ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதி அறிக்கையில் பத்து ஆண் சிறுவர்களுக்கு ஒருவர் 16 வயதுக்குள் பாலியல் அனுபவம் உள்ளது எனக் குறிப்பிட்ட அறிக்கை, பெண்களைப் பற்றி குறிப்பிடவில்லை.

இது பிரான்ஸ் மற்றும் இந்தியாவில் பாலியல் நாட்டம் சிறுவயதிலேயே வீங்கி வெம்பத் தொடங்குவதைக் காட்டுகின்றது. சிலர் இதை ஏகாதிபத்தியக் கோட்பாட்டுக் கொள்கையின் அடிப்படையில் சிறுவர்களின் பாலியல் உளவியலாக நியாயப்படுத்துகின்றனர். இந்த வயதுள்ள மாணவ - மாணவிகளை ஆராயின் அவர்களிடம் பொது அறிவு என்பது கிடையவே கிடையாது. போதை வஸ்துகள், சிகரெட், மது, பாலியல், பிரபலமான நடிகர் - நடிகைகள் பற்றியதில் உள்ள அறிவும், அனுபவமும் மற்ற எந்தத் துறையிலும் இந்த இளைய தலைமுறை கொண்டிருப்பதில்லை.

சமுதாயத்தின் நுகர்வுச் சந்தை, தனது சந்தையை விரிவாக்கக் கையாளும் ஆணாதிக்கப் பாலியல் கண்ணோட்டத்தால் குழந்தைகள் பிஞ்சிலே வெதும்புகின்றன. இது ஆண் - பெண் என எந்த வேறுபாடும் இன்றி ஆணைத் தொடர்ந்து பெண்ணின் புள்ளி விபரங்கள் போட்டி போடுகின்றன. சமுதாயம் ஆணாதிக்கப் பாலியல், குடி, புகைத்தல், போதை.... போன்றவற்றில் நல்ல ஆரோக்கியமான கண்ணோட்டம் கொள்ளும் போது இவை தொடர்பான ஆரோக்கியமான மாற்றம் பெறுவது தவிர்க்கமுடியாதது. பாலியல் பற்றி அறிவார்ந்த கல்விகள் மற்றும் எதார்த்த வாழ்க்கையில் ஆண் - பெண் உறவுகள் போன்றனவற்றைச் சமுதாயம் ஆரோக்கியமாகக் காணாதவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலியல் சந்தைப் பொருளாதாரத்தில் சிக்கி, சிறுவர் - சிறுமிகள் வெம்பி வெதும்பிப் போவார்கள். இதனால் சமுதாயத்தின் தலைமுறைக்குத் தலைமுறை பாலியல் பற்றிய வக்கிரக் கண்ணோட்டம் விகாரமாகி வருகின்றது.

சிறுவர் - சிறுமிகளின் சுற்றுலா என்பது கலவிக்கானப் (புணர்ச்சிக்கான) சந்தர்ப்பத்தை பெரும்பாலும் ஏற்படுத்துகின்றது. இதில் பலாத்காரமாகவும், இயல்பானதாகவும், மறைமுகமான கட்டாயத்தின் பேரிலும் நடக்கின்றது. இங்கு சொந்தக் காதலி அல்லது காதலன் அல்லாத உறவுகளும் அரங்கேறுகின்றன. அத்துடன் விரும்பிய உறவுகளும், சந்தோசத்துக்கான உறவுகளும் நிகழுகின்றன. இந்த உறவுகள் என்பது சந்தர்ப்ப வசத்தால் அநேகமாக நிகழ்வது துரதிருஷ்டமானது. மனிதனின் அன்றாட நிகழ்ச்சிகள் அனைத்துமே தற்செயலானவைகள் தான். யாரும் முன்கூட்டியே இப்படித்தான் என்று வரையறுத்து விடுவதில்லை. இந்த தற்செயலான நிகழ்வுகளைத் திட்டமிடுவதே மனிதனின் குறிப்பான உழைப்பாகும்.

இச்சிறுவர் - சிறுமிகளின் புறநிலையான நுகர்வை, வர்த்தக உலகம் வளர்த்து எடுக்கும் பாலியல் பற்றிய கண்ணோட்டத்தைச் செயல்படுத்த இந்தச் சுற்றுலாக்கள் வசதியாக மாறிவிடுகின்றது. சாதாரண வாழ்க்கையில் சாத்தியமான கலவிக்கான சூழல் இருந்தும், ஈடுபடாது விலகிய வாழ்க்கை சுற்றுலா போன்றவற்றில், சூழலால் ஈடுபடுவதை ஊக்குவிக்கின்றது. இந்த வயது என்பது கல்வியின் முக்கியமான காலக்கட்டமாகும். அறிவியல் ரீதியில் சிறுபிள்ளைத் தனத்தைக் கைவிட்டுச் சமுதாய நலனைப் புரிந்து கொண்டு கல்வியை உள்வாங்கும் காலக்கட்டமாகும். இந்தவயதில் விகாரமான ஆணாதிக்கப் பாலியலைப் பூர்த்தி செய்கின்ற போது அதன் தோல்வி அல்லது அதன் வெற்றி அக்குழந்தையின் சமூக அறிவியல் வளர்ச்சியைப் பாதிக்கின்றது. இது மேலும் புதிய உளவியல் சிக்கல்களைக் கொடுக்கின்றது.

இந்த வயதில் விழித்துக் கொள்ளும் ஆண் - பெண் பாலியல் விரிவாக்கம் அதைப் புரிந்து கொள்வதற்கு முன்பே உடலுறவை நாட வைக்கின்றது வெம்பிய நுகர்வுப் பண்பாடு. தமிழ்த் திரைப்படத்தை எடுப்பின் கதாநாயகன் அல்லது கதாநாயகியின் காதல் காட்சிகள், பாலியல் உணர்வுகள், அவர்களின் உடை, உணவு, நடத்தைகள் எல்லாவற்றையும் இவ்வயது அப்படியே அறிவியல் பூர்வமாகச் சிந்திக்காது நடைமுறைப்படுத்த நினைக்கின்றது. இது மாதிரி வாழ பின் நிற்பதில்லை. இந்தக் கற்பனையில் இருந்து அதை அடுத்த கற்பனைத் தளத்தில் தம்மை ஈடுபடுத்துகின்றனர். இது நாடு கடந்து எல்லா நாட்டிலும் பொதுவான நுகர்வுப் பண்பாடாகி பாலியல் பண்பாடாகின்றது.

இன்று உலகில் சிறுவயது வன்முறை அமெரிக்கா, பிரான்ஸ்.... என அனைத்து நாட்டிலும் கட்டுப்படுத்த முடியாத சமூக மறுப்பு கோட்பாட்டுக்கு உட்பட்டு அனைத்தையும் மறுதலித்து சமுதாயம் வன்முறையின் புகலிடமாகின்றது. இது எப்படி சிறுவர்களின் தன்மையாகியது? வன்முறை





பற்றிய ஏகாதிபத்தியக் கண்ணோட்டம் அதைப் பாதுகாக்க திரைப்படம், வீடியோ, கணினி விளையாட்டுகள், நுகர்வை அதிக அளவில் கோருதல், சமுதாயத்தின் கட்டுப்பாடற்ற கட்டற்ற சிறுவர் - சிறுமிகளின் சுதந்திரம் பற்றிய கற்பனைகள், பெற்றோரின் தனிமனிதச் சுதந்திரம் பற்றிய சமுதாய மறுப்புக் கண்ணோட்டம் ஆகியவை குழந்தைகளின் வன்முறைகளுக்கு மூலமாகின்றது.

இது அடுத்த நூற்றாண்டில் மிகப்பெரிய மனித அவலமாக இருக்கும் என்பதை ஒத்துக் கொண்டு அதைப்பற்றிய விவாதத்தை இந்த நுகர்வுச் சந்தைப் பொருளாதாரத்திற்குள் ஆய்வுகளையும், விளக்கத்தையும் நடத்துகின்றனர், சட்டத்தை இறுக்குகின்றனர். ஆனால் வன்முறையைச் சமுதாயம் எப்படிப் பார்க்கின்றதோ, அதற்கு உட்பட்டே குழந்தையும் வன்முறையில் ஈடுபடுகின்றது. பிரான்சில் 1998-இல், 9,000 பொலிசார் காயங்களுக்கு உள்ளானார்கள் எனின், அது சிறுவர்களின் வன்முறையால் பெரும்பாலானவை நிகழ்ந்தன. பிரெஞ்சு சிறுவர் - சிறுமிகளுக்கும் பொலிசாருக்கும் இடையில் மோதல் நிகழ்வதையும், எதிரியாகப் பரஸ்பரம் நீடிப்பதையும் சுவர் எழுத்துகளிலும், நடைமுறையிலும் பார்க்கக்கூடியதாக உள்ளது. இதை ஒட்டிய விவாதங்களையும் பிரெஞ்சுச் சமூகம் நடத்துகின்றது.

இந்த வன்முறை எப்படித் தோற்றுவிக்கப்பட்டதோ அந்தளவுக்குப் பாலியல் பற்றிய கண்ணோட்டமும், நடத்தைகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இந்த நுகர்வுக் கலாச்சாரம் ஒன்றுக்கு மேற்பட்ட காதலன், காதலிகளை வைத்திருப்பதில் காதல் சீரழிகின்றது. காதல், அன்பு என்ற ஜனநாயகத்தின் நியாயமான பண்புகள் ஏகாதிபத்தியமயமாதலில் வெறும் நுகர்வாக மாறிவிடுவதன் விளைவே ஒன்றுக்கு மேற்பட்ட கோரிக்கைகளைக் கோருகின்றது.

கட்டற்ற காதல் காதலின் ஜனநாயகப் பண்பை மறுக்கின்றது. கட்டற்ற காதல் என்பது நுகர்வாக வடிவமெடுக்கின்றது. இது ஆணாதிக்கம் பெண்ணை முன்பு பயன்படுத்தியதை விட மோசமாகப் பயன்படுகிறது. ஆண்-பெண் என இருவரும் மனித உறவுகளை மேலும் பயன்படுத்தப்படும் நுகர்வு இயந்திரமாகக் காண்பதும், செயல்படுவதும் புதிய வடிவமாகின்றது. இது சிறுவர் - சிறுமிகளின் உளவியலில் வக்கிரமாக வெளிப்படுவதையும், இதில் வெம்பி அழுகிப் போவதையும் தவிர இந்தச் சமுதாயம் வேறு எதையும் மனித நலன் சார்ந்து படைத்து விடவில்லை.

சிறுவர் - சிறுமிகள் பாலியல் கல்வியைத் தமது எதார்த்த வாழ்க்கையை ஒட்டித் தெரிந்து கொள்வதும், கற்றுக் கொள்வதும் அவசியமானது, ஆரோக்கியமானது. இது சமுதாய நலன்களில் இருந்து பாலியலைப் புரிந்து கொள்ளும் போக்கில் கற்றுக் கொள்வதும், பாலியலை அணுகுவதும் அவசியமானவை. இது விலக்கானதோ அல்லது அவசியமற்றதோ அல்ல. மாறாக இது கற்றுக் கொள்வதைச் சமுதாய நோக்கில் கோரும் அதே நேரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆணாதிக்க வக்கிரப் பாலியலை விமர்சித்துக் கல்வி வளர்ச்சி பெறவேண்டும். அது இல்லாதவரை கல்வி இந்த ஏகாதிபத்திய ஆணாதிக்க எல்லைக்குள் வெம்பிப் போகப் பாலியல் கல்வி எல்லைப்படுத்தப்படும். இதற்கு எதிரான போராட்டமின்றி பாலியல் கல்வி என்பது ஆணாதிக்க வக்கிரத்தை உள்ளடக்கியதாகவே எஞ்சும். இங்கு காதல் என்பதற்குப் பதில் நுகர்வு, விபச்சாரம் என்று ஆணாதிக்கத்தால் கறைப்பட்டு ஆணும் பெண்ணும் இணைந்து அனுபவிக்கப்படும் நிகழ்வாக மாறும்.

அட்டவணை - 23

கலவியில் ஈடுபடுவோரின் நிலை.[65]

| வகை | ஆண் (சதவீதம்) | பெண் (சதவீதம்) |
|---|---|---|
| முதலாவது உடல் உறவின் போது மிகவும் நேசித்தல் | 33 % | 91 % |
| சேர்ந்த கலவியில் ஈடுபடுதல் | 64 % | 90 % |

ஆண் - பெண் முதல் உறவின் போது நேசித்தல் எப்படி ஆணாதிக்க நுகர்வாக இருக்கின்றது என்பதைப் புள்ளிவிபரம் அட்டவணை - 23 காட்டுகின்றது. இதில் ஆணாதிக்க நுகர்வுப் பயன்பாட்டுத் தன்மை அதிகமாக வெளிப்படுகின்றது. ஆண் தனது முதல் உறவில் ஈடுபடும் போது 33 சதவீதம் பெண்ணை நேசித்தபடியே ஈடுபட, 67 சதவீதம் பேர் நுகர்வு மற்றும் பயன்பாட்டுக் கண்ணோட்டத்தில் பெண்ணைப் பொருளாக அனுபவிக்கின்றனர். இதில் 36 சதவீதம் பேர் சேர்ந்த கலவியை விட ஒருதாரக் கண்ணோட்டத்தில் பெண்ணை ஆணாதிக்க நிலையில் இருந்து அனுபவிக்கின்றனர். இதில் பெண் தன்னை நேசித்த ஆணுடன் 91 சதவீதம் முழு ஈடுபாட்டுடனும், 90 சதவீதம் பரஸ்பர உறவுக் கண்ணோட்டத்திலும் ஈடுபடுகின்றனர். 9 சதவீதப் பெண்கள் நேசமின்றியும், 10 சதவீதப் பெண்கள் ஒருதலைப் பட்சமாகவும் ஆணாதிக்கக் கண்ணோட்டத்திலும் பாலியலை அனுபவிக்கின்றனர். முதல் கலவியே ஆண்களில் அதிகமாகவும், பெண்களில் சற்று குறைவாகவும் நுகர்வுக் கலாச்சாரம், ஆணாதிக்கச் சுயநலக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியே அணுகுகின்றனர். அன்பு, காதல், தேவை போன்றன எந்தளவுக்கு மேற்குப் பண்பாட்டுக் கலாச்சாரத்தில் சிதைக்கப்பட்டுள்ளது என்பதை இப்புள்ளி விபரம் காட்டுகின்றது.

முதல் கலவிக்குப் பிந்திய இந்த அவலம் மேலும் அகலமாகப் பிளந்தே செல்லும் என்பதை எதார்த்தம் காட்டுகின்றது. இது விவாகரத்துக்களையும், ஓரினச் சேர்க்கைகளையும், மனநோயாளிகளையும், பாலியல் வக்கிரங்களையும் விரிவாக்கி வளர்ச்சி பெறச் செய்கின்றது. இளமைக் காலம் என்பது இந்தப்





பாதாளப் பண்பாட்டுப் பாலியல் நுகர்வில் இருந்தே தோற்றம் பெறுகின்றது. உலகமயமாதலில் உள்ள ஏகாதிபத்தியக் கண்ணோட்டம் நாடுகளைச் சிதைத்து நுகர்வது போல் மனித உறவுகளைச் சிதைத்து நுகர்வதை இந்தப் பாலியல் முதல் நுகர்விலேயே தொடங்கிவிடுகின்றது. இது மூன்றாம் உலக நாடுகளில் வேகமாக வளர்ச்சி பெறுகின்றது. "ஒரு புதிய காதல் கதை" எனத் தலைப்பிட்டுக் காதல் ஒரு கண நேரத்தின் பின் வீசும் ஒரு பொருளாகி விட்டது என இந்தியா டுடே என்ற பார்ப்பனிய ஏகாதிபத்திய ஆதரவு பத்திரிக்கையே எழுதுகின்றது. (17.2.1999)[34]

காதல், அன்பு, தேவை என்பன எல்லாம் நுகர்வு ஆடம்பரம் போன்ற எல்லைக்குள் கலவியை அணுகுவது இந்திய மேட்டுக்குடியின் பண்பாடாகி வருவதையே இது காட்டுகின்றது. கற்பழிப்பவனின் கணநேரத் தேவையும், நுகர்பவனின் கணநேரத் தேவையும் பண்பியல் வேறுபாட்டை மட்டும் வேறுபடுத்துகின்றது. கற்பழிப்பவன் பலாத்காரமாகவும், நுகர்பவன் பணத்தாலும் அல்லது ஏகாதிபத்திய ஆணாதிக்க நுகர்வுக் கலாச்சாரத்தாலும் அடைவதைத் தவிர வேறு வேறுபாடு இல்லை. அந்தளவுக்கு ஆண் - பெண் உறவுகள் பண்பாட்டுக் கலாச்சார நுகர்வால் சிதைந்து செல்கின்றது. பெண்ணை வெறும் பண்டமாகப் பார்த்தல் இதன் முதல் வெளிப்பாடாகும். இது பரஸ்பரம் மனித உறவில் ஆண் - பெண் வேறுபாடு இன்றி இன்று வெளிப்படுகின்றது.

இதைச் சந்தைப் பொருளாகக் காண்பதன் மூலம் இதை ஒட்டிய சந்தை வடிவங்கள் தோற்றம் பெறுகின்றன. ரஷ்யாவில் COSMOPOLITAN என்ற பாலுணர்வுப் பத்திரிக்கை 60,000 பிரதிகள் விற்றன. இது ஒரு வருடத்தின் பின் 3,50,000 ஆக அதிகரித்துள்ளது. இப்புத்தகத்தின் விலை 4.50 டொலராகும்.[28] அமெரிக்காவில் ஒரு நிமிடத்துக்கு ஒரு டொலர் செலுத்தினால் பாலியல் வக்கிரத்தைப் பெண் தொலைபேசி மூலம் சொல்லக் கேட்கலாம். இதன் வருட வருமானம் இந்திய ரூபாயில் 12,000 கோடியாகும். இது ஐரோப்பா எங்கும் உள்ளதுடன், இதற்கான விளம்பரங்களை அனைத்து மக்கள் தொடர்பு சாதனங்களும் செய்கின்றன. இது போல் ஜப்பானில் பாடசாலைக்கு அருகில் இளம் ஆண் - பெண் பயன்படுத்திய உள்ளாடைகள் வயது ரீதியாகப் போட்டுக் கடை விரித்து விற்கும் அளவுக்கு ஜனநாயகம் கொடிகட்டிப் பறக்கின்றது. (1.10.1993).[6]

இது நவீனப் பாலியல் சந்தை வடிவமாகும். ரஷ்யாவில் முதலாளித்துவம் ஜனநாயகத்தை மீட்டபோது மக்கள் வறுமையில் நசுங்கத் தொடங்கினர். ஆனால் ஐந்து டொலர் கொடுத்து பாலியல் வக்கிரத்தை இரசிக்கும் கூட்டம் ஜனநாயகத்தைப் பெற்றுக் கொண்டது. வசதியான இந்த மேட்டுக்குடி இது போன்ற பத்திரிக்கைகளை வாங்கிப் பாலியல் வக்கிரத்தைப் போற்றுவதும், நடைமுறைப்படுத்துவதும் அதிகரித்த அதே நேரம், மக்களின் வறுமை பலமடங்காக அதிகரித்துச் செல்லுகின்றது. வறுமைப்பட்ட மக்களின் உழைப்பைச் சுரண்டும் இந்த மேட்டுக்குடி தமது ஆணாதிக்க வக்கிரத்துக்குச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செலவு செய்யும் பணம் ரஷ்யாவைப் பொறுத்த வரை மிகப்பெரிய தொகையாகும். அது ஏனோ தெரியாது எல்லா மார்க்சிய எதிரிகளும் இதற்காகக் குரல் கொடுத்து இந்த வக்கிரத்தை, ஜனநாயகத்தைக் கோருவது என்பது இந்த ஆணாதிக்க உலக வக்கிரங்களை ஆதரித்துதான் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

இன்று ஜனநாயகம் சந்தையில் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தைத் தனிமனிதப் பாலியல் சுதந்திரத்தின் பின்னால் வக்கிரத்தைச் சந்தைப்படுத்துகின்றது. இது கோடி கோடியாகப் பணத்தைத் திரட்டுவதும், இவர்கள் கம்யூனிச ஆட்சிக்கு எதிராக ஜனநாயகத்தை மீட்க போராட நிதி கொடுப்பதும், கோட்பாடு கொடுப்பதும் இன்றைய வரலாறாக உள்ளது. இவைகள் பெண்ணின் சுதந்திரமான தொழிலாகின்றது. இதை பாதுகாக்கச் சட்டங்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

எதிர்காலத்தில் பெரிய நடிகைகள், நடிகர்கள், மொடலிஸ்டுகள் கண் முன்னே போட்டுவிட்டுக் கொடுக்கும் உடுப்புகள் பல கோடி விலைக்கு ஏலம் போடுவார்கள். இதன் ஊடாகப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் கூவி விற்பார்கள். இன்று டயானா, மர்லின் மன்றோ, மடோனா, கென்னடி, மைக்கேல் ஜாக்சன் போன்றவர்கள் போட்ட உடுப்புகள் சந்தையில் கோடிகளை உருவாக்கின்றது. இதைப் போல் பாடசாலை மாணவிகளின் உடுப்புக்குச் சற்றுக் குறைவாகக் கிடைக்கின்றது. அவர்களின் குரலைத் தொலைபேசியில் கேட்டால் பணம். இதை எதிர்காலத்தில் கலை அம்சம் என்று நியாயப்படுத்த இன்றையக் கம்யூனிச எதிர்ப்புக் கோட்பாட்டாளர்கள், எலும்பை நக்கும் நாய்கள் போல் பின் நிற்கப் போவதில்லை. இதைக் கட்டுப்படுத்துவது, தடை செய்வது, தண்டனை வழங்குவது எல்லாம், ஜனநாயகத்துக்கு எதிரானதாக ஒப்பாரி வைக்க ஒரு நாய்க் கூட்டமும் இருக்கத்தான் செய்கிறது, செய்யும். இந்த வக்கிர ஆணாதிக்கச் சுரண்டல் அமைப்பை ஒழித்துக்கட்ட போராடாத வரை பெண்ணின் நிலையில் என்ன மாற்றங்கள் நிகழ்ந்தாலும் ஆணாதிக்க வடிவம் மாறாது. அது பாலியலில் புதிய உத்திகளை, சுரண்டலை நோக்கிப் பரிணாமிக்கும். பெண் தனது சுதந்திரத்தின் பின்னால் இதில் பயன்படும் பொருளாகி, நுகர்வுப் பண்டமாக மேலும் மேலும் சிதைந்து சீரழிவாள்.





## 27. இயல்பான புணர்ச்சித் தெரிவுகள்

"புத்துயிர் பெறும் சடங்கு" என்ற தலைப்பில் இந்தியாவிலுள்ள மத்தியப் பிரதேசத்தில் பஸ்தார் மாவட்டத்தில் தேவீகாவீன் என்ற கிராமத்தில் நடக்கும் சடங்கில் இளைஞர்கள், இளைஞீகள் கூடி, ஆடி விரும்பிய தனது ஜோடியைத் தெரிவு செய்து ஏழு நாள் ஒன்றாக இருப்பதும், பின் ஜோடி மாறி இருப்பதும் என ஒரு சடங்கில் ஈடுபடுகின்றனர். அங்கு ஆய்வு செய்த **நிரஞ்சன் மஹான்** அச்சமூகம் மற்ற சமூகத்தை விட அதிக ஒற்றுமையாக வாழ்கின்றனர் என்பதைக் கண்டுபிடித்தார். அத்துடன் பாலுறவு பற்றி மற்ற சமூகம் பார்ப்பதில் இருந்து வேறு விதமாகப் பார்க்கின்றனர் என்றும் தெரிவித்தார். (30.7.1997)[34]

இந்த நிகழ்வுகள் ஆதிகால வரைமுறையற்ற புணர்ச்சியின் எச்சங்களாக உள்ளது. இது இன்று மிதமாக ஆழ் கிராமங்களில் வாழ்வோரிடையேயும், காடுகளிலும், அதை அண்டி வாழும் பழங்குடிகளிடையேயும், மலையில் வாழும் ஆதிகுடிகளிடையேயும், அதாவது நாகரிகம் தொற்றிக் கொள்ளாத இடங்களில் வரைமுறையற்ற புணர்ச்சியின் எச்சச் சொச்சங்கள் நீடிக்கின்றன. இந்தோசீனா தீவுகளில் வாழும் நாகரிகம் எட்டாத பிரதேசங்கள், ஆப்பிரிக்காவில் நாகரிகத்தின் சுவடு படாத இடங்கள், தென் அமெரிக்காவின் சிவப்பிந்திய பழங்குடி மக்கள் வாழும் இடங்கள் என எங்கும் இன்று அதன் எச்சங்கள் அல்லது அதன் தொடர்ச்சியான வாழ்க்கை நீடிக்கின்றது.

அநேகமாக உடுப்பின்றி அல்லது அரைகுறை உடுப்புடன் அல்லது உடுப்புகளுடன் வாழும் இந்தச் சமூகம் கற்பு பற்றிய கோட்பாட்டை மறுக்கின்றனர் அல்லது அதை எல்லைப்படுத்துகின்றனர். இந்தக் கற்பு அறம் அற்ற அல்லது திருமணத்தின் பின் கற்பும் அல்லது ஓர் ஆணுடன் வாழும் காலம் மட்டுமான கற்பும் என்று பலதளத்தில் வாழுகின்றனர்.

இந்தச் சமூகத்தில் ஆண் பெண் முரண்பாடுகள் குறைவானதாகவும், அதிக ஒற்றுமையாகவும் இருப்பது அறியப்படுகின்றது. வேலைகளில் ஏற்பட்டுள்ள பிரிவினை ஆணாதிக்க ஒடுக்குமுறை வடிவமின்றி காணப்படுகின்றது. ஏனெனின் சந்தைப் பெறுமானத்தில் நாகரிக உலகம் தீர்மானமாகின்ற போது அந்தக் காட்டுவாசிகளின் உழைப்பைப் பெறுமானம் அற்றதாக்குவதால் ஆண் பெண் உறவில் தனிச்சொத்துரிமைக் கண்ணோட்டம் சார்ந்து தோன்றும் ஆணாதிக்கம் அற்றுப் போயுள்ளது. ஆண் பெண் இடையிலான வேலைப் பிரிவினை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயற்கையின் மீதான மனித உழைப்பின் வளர்ச்சியுடன் இயற்கையாக ஏற்பட்ட போது அது ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமையால் சீரழிந்து விடவில்லை. மாறாக அதன் கூறுகளின் தொடக்கங்களே நீடிக்கின்றது. உலகமயமாதல் சந்தைப் பெறுமானத்தை இவர்களின் உற்பத்தி பெறுமதி அற்றதாக்குவதால் ஆணாதிக்கம் ஊடுருவுவது மிகக் கடினமானதாக உள்ளது. இந்தச் சமூகத்தில் பாலியல் நடத்தைகளை அணுகும் போது நாகரித்தின் கேவலங்களை ஒப்பிட்டுக் காணக்கூடாது. நாகரிகச் சமூகத்தில் வரைமுறையற்ற விபச்சாரப் புணர்ச்சியையும், இந்த மக்களின் புராதானக் கம்யூனிச எச்சச் சொச்ச வரைமுறையற்ற புணர்ச்சியையும் வேறுபடுத்தி அணுகுவது அவசியமாகும். இதைப் பலர் காணத் தவறுவதும், பின்னால் அவர்களை அணுகுவதும், சிதைப்பதும் தவறான மதிப்பீடாகும். அந்த மக்களின் இயல்பான காதல், இயல்பான வாழ்க்கை மிகவும் முன்னேறியது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த மக்களிடையே இன்று கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களும், ஏகாதிபத்தியப் பல்வேறு பிரிவுகளும் தமது அக்கறையைக் காட்டுகின்றனர். மனித இன ஆய்வாளர்கள் ஆய்வு என்ற பணிக்கு அப்பால் இந்தச் சமூகத்தைச் சிதைப்பதைப் பெரும்பாலானோர் எதிர்க்கின்றனர். மருத்துவ உதவி செய்யும் தனிப்பட்ட மனிதர்கள் சிலரும் இதே கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர்.

ஏகாதிபத்திய அமைப்பின் பிரதிநிதிகளும் அவர்களின் தொண்டர் அமைப்புகளும் இந்தச் சமூகத்தைப் பூர்சுவா கண்ணோட்ட எல்லைக்குள் கொண்டு வருவதன் மூலம் அற்ப ஆசைகளைக் காட்டி ஒட்டச் சுரண்டவும், அம்மக்கள் புரட்சியில் பங்கு பெறுவதைத் தடுக்கவும் அம்மக்களுக்குள் காலைப் பதிக்கின்றனர். இந்த மக்களிடையே இருக்கும் இயல்பான பாலியல் வடிவங்களை ஏகாதிபத்தியக் கண்ணோட்டத்தில் மாற்ற பூர்சுவா கண்ணோட்டத்தைப் புகுத்துகின்றனர். அவர்களின் இயற்கை வாழ்க்கையை, கண்டுபிடிப்புகளை அபகரித்துச் செல்வதன் மூலம் அதை ஆய்வுக்கூடங்களில் பரிசோதித்து, கோடிகள் சம்பாதிக்க அவர்களின் வாழ்வுமுறையைச் சிதைக்கின்றனர். மறுபுறம் அம்பலப்பட்டு வரும் மதநிறுவனங்கள் இங்கு தமது மத நடவடிக்கையை விரிவாக்கி அவர்களின் ஜனநாயகப்பூர்வமான வாழ்க்கையைச் சிதைத்து வருகின்றனர்.

சில கம்யூனிஸ்ட் புரட்சிகரக் குழுக்கள், இந்த மக்களிடையே தலையிடுகின்றபோது சில அடிப்படைத் தவறுகளை இழைக்கின்றனர். வெளியில் இருந்து இந்த மக்களிடம் செல்லும்போது நாகரிகச் சமூகத்தின் வடிவங்களை முன்னேறியதாகக் காண்பதும், புகுத்துவதும் நிகழ்கின்றது. உடுப்பு அணியாத வாழ்க்கையை நாகரிகத்துக்குப் புறம்பானதாகக் காண்கின்றனர். அவர்களின் பாலியல் வடிவத்தை ஏகாதிபத்தியப் பாலுறவு வடிவமாகத் தவறாக அடையாளம் காண்பதும் நிகழ்ந்து விடுகின்றது. இதில் இருந்து அவர்கள் மத்தியில் சில சீர்திருத்தத்தைச் செய்யும் போது அவர்களின் சரியான பக்கத்தை அழித்துவிடுவதும் நிகழ்ந்து விடுகின்றது.

வறுமைக் கோடு பற்றிய ஏகாதிபத்திய வரையறையை எடுப்பின் ஏகாதிபத்திய நுகர்வு எல்லையில் வைத்து மதிப்பிடுவது ஏழைக்கான எல்லையாகின்றது. ஆனால் அடிமட்டக் கிராமத்தில் அவர்களின் சுயத்





தேவையை உள்ளடக்கிய வாழ்க்கை வறுமைக் கோட்டைத் தகர்க்கின்றது. முன்னாள் கம்யூனிச நாடுகளில் மேற்கத்திய நாகரிகத்தைக் காட்டியே கிளர்ச்சியைத் தூண்டக் கூடியதாகப் பிரச்சாரம் கட்டமைக்கப்பட்டது. நுகர்வின் எல்லை எல்லாவற்றையும் தீர்மானிப்பதில்லை. வறுமைக் கோட்டை எடுக்கும் போது சுயப் பொருளாதாரச் சமூகத்தின் முழுநிறைவான வாழ்க்கையைப் புரிந்து கொள்ள கம்யூனிஸ்ட்டுகள் கற்றுக் கொள்ளவேண்டும். ஒரு சமூகத்தின் அத்தியாவசியத் தேவையைக் கோருவதும், ஆடம்பரத்தை எதிர்ப்பதும் என்ற இரண்டு பண்புகளை அடையாளம் காண வேண்டியுள்ளது.

தாய்வழிபாடு கொண்ட நரிக்குறவர்கள் அதாவது தோடர், கோத்தர், இருளர், பணியர், படகர் பற்றிய குறிப்பில், “வயது வந்த ஆணோ பெண்ணோ தனித்து வாழக் கூடாது. இதற்கு வயது வரம்பு தடுப்பதில்லை. ஒருவரின் உதவியுடன் மற்றவர் வாழும் சமூகத் தன்மை காணப்படுகின்றது. குழந்தை மணம், விதவை மணம், விவாகரத்தும், மறுமணமும் என பல தன்மைகள் காணப்படுகின்றன.”[66]

ஆப்பிரிக்காவில் இருந்து இந்தியாவில் வந்து குடியேறிய தமிழ்ப் பழங்குடியான இருளப்பள்ளர் என்ற வெட்டக்காடு இருளர் பற்றிய ஆய்வில், “இங்கு திருமணம் இருவரின் சம்மதத்துடன் நடக்கும் காதல் திருமணமாகவே உள்ளது. பெற்றோர் தீர்மானிப்பது இல்லை. இங்கு திருமணம் செய்யும் ஆண், பெண் வீட்டில் ஆறு நாள் தங்கி, பெண்ணின் தாய் - தந்தையின் மனம் உவக்கும் வகையில் நடந்து காட்ட வேண்டும். பெற்றோரின் விருப்பம் இல்லாவிட்டாலும் அல்லது வேறு வழியிலும் ஆணும் பெண்ணும் கூடி வாழ்ந்து பிள்ளை குட்டியுடன் வாழும் காலத்தில் பெரியவர்களின் ஆசி கிடைத்தால்தான் திருமணம் நடக்கும். இங்கு பெரியவர் ஆசி இல்லை எனினும் கூடிவாழ முடியும், ஆனால் குடும்பமாக அழைக்கப்படமாட்டாது. கணவன் இறந்தால், கணவனின் சகோதரன் அல்லாத வேறு ஆண்களைத் திருமணம் செய்யமுடியும். அது போல் விவாகரத்து பெற்று வேறு திருமணம் செய்து கொள்ளவும் முடியும்”[66]

நீலகிரியில் வாழும் 33 சிற்றூர்களில் உள்ள இருளர் வாழ்வில், “ஓர் ஆணுடன் சேர்ந்து வாழ்வதா? அல்லது பிரிந்து செல்வதா? என்பது பெண்ணின் விருப்பத்திற்குட்பட்டது. திருமணம் எந்த ஆடம்பரமுமின்றி நடக்கும். இங்கு விதவைகள் திருமணம் தடையேதுமின்றி சாதாரணமாக நடக்கின்றது. இங்கு பூப்பெய்திய பெண் திருமணத்துக்கு முன் ஆண் வீடு சென்று ஓராண்டு வாழ்வதுடன் அக்காலத்தில் சேகரிக்கும் பணத்தைக் கொண்டு திருமணத்தை அவர்கள் செய்கின்றனர். இங்கு திருமணத்தின் முன்பே பிடிக்காவிட்டால் பிரிந்து செல்வது எல்லாம் சாதாரணமானது.”[66] இது போன்று தமிழ் நாட்டுக்குள் மட்டும் பல்வேறு இனப் பிரிவுகளின் திருமணம் மற்றும் பெண்களின் வாழ்வுகளை ஒட்டிய பல தரவுகளை இந்நூல் கொண்டுள்ளது.

இதேபோல் நாம் பழமையான இயற்கையுடன் ஒன்றி வாழும் சமூகத்தில் உள்ள ஜனநாயகப் பூர்வமான எல்லா இயற்கையான மனித நாகரிகத்துக்குட்பட்ட அனைத்தையும் பாதுகாப்பதுடன் அதைத் தத்துவ மயப்படுத்தவேண்டும். அதை அவர்களுடைய வாழ்வின் இலட்சியங்களாக்கவேண்டும். இதை அறிவியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பூர்வமானதாக வளர்த்தெடுக்கவேண்டும். நாகரிகத்தின் அவமானத்தை அம்பலப்படுத்த வேண்டும். நாகரிகத்தின் அறிவியல் பூர்வமான மனித முன்னேற்றத்துக்குத் தேவையானவற்றை அவர்களுக்குப் புகட்டவேண்டும். அதே நேரம் அவர்களின் ஜனநாயகப் பண்பாட்டை நாகரிகச் சமூகத்துக்கு மாற்றாக முன் வைக்க வேண்டும். இதுதான் மக்களிடம் இருந்து கற்று மக்களுக்கே மீள அரசியல் மயப்படுத்தும் அரசியலாகும்.

வெளியில் இருந்து அந்த மக்களுக்குள் செல்லும் ஒருவன் அந்தப் பெண்களின் அரை நிர்வாணத்தை எப்படிப் புரிந்துகொள்வது? இது ஏகாதிபத்திய நாகரிகத்தில் அதற்கேயுரிய ஆணாதிக்கப் பார்வையில் வக்கிர எல்லைக்குள் பெண்ணை நுகரக் கோருவதே. ஆனால் அந்தச் சமூகத்தில் அப்படியல்ல. அது இயற்கையாகக் குழந்தைக்குப் பால் கொடுக்கும் தாய்மையின் ஓர் அங்கம்தான். இது பழமையான சமூகத்துக்கும், நாகரிகச் சமூகத்துக்கும் இடையே உள்ள துல்லியமான வேறுபாடு. வெளியில் இருந்து செல்லும் ஒரு மனிதன் நாகரிகத்தில் இருந்து அதை நோக்குவது எதார்த்தமாக இருப்பது சகஜம். ஆனால் இதை அந்த மக்களின் கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ளவும், அதைத் தன்னுள் வளர்த்தெடுப்பதும் அவசியம். இதை அம்மக்களின் கண்ணோட்டத்தில் சமூகமயப்படுத்த உழைப்பது அவசியம். மாறாக ஏகாதிபத்தியக் கண்ணோட்டத்தில் புரிந்து கொண்டால் தவறான வழியில் அம்மக்களைச் சிதைத்து ஏகாதிபத்திய ஆணாதிக்கக் கண்ணோட்டத்தைப் புகுத்தவே வழி அமைக்கும்.

மேலே குறிப்பிட்ட சம்பவத்தில் அப்பெண்கள், அவ்வாண்கள், அச்சமூகம் இதை ஒரு பெரிய விடயமாக எடுப்பதில்லை. இயல்பான, இயற்கையான நிகழ்வாகக் காண்கின்றனர். ஆனால் இந்தியா டுடே இதைப் பாலியல் நுகர்வாக, அனுபவிப்பாக, வக்கிரமாக இதை வாசகர்களுக்கு இரசிக்கக் கற்றுக் கொடுக்கின்றது. அந்த ஆண் பெண்ணுக்கிடையில் கற்பு பற்றிய வரைவிலக்கணத்தையோ, ஆணாதிக்கச் சமூகக் கண்ணோட்டத்தையோ ஏற்பதில்லை. ஏகாதிபத்திய நாகரிகக் கலாச்சாரச் சீரழிவுகள் இச்சமூகத்தில் ஊடுருவிய போதும் ஒரு தரப்பாரின் நாகரிக எதிர்ப்பை மீறி இது இயற்கையாக, இயல்பாக நிகழ்கின்றது. இது இந்தியாவில் பல பாகங்களில் நாகரிகம் எட்டாத இடங்களில் இருப்பதை நான் விவாதங்கள் மூலம் தெரிந்து கொள்ளமுடிந்தது.

வரைமுறையற்ற புணர்ச்சி பற்றி ஏகாதிபத்தியக் கண்ணோட்டத்தையும், இந்த இயற்கையான வரைமுறையற்ற புணர்ச்சியையும் வேறுபடுத்தி இனம் காணவேண்டும். இதில் இயற்கையானதைப் பாட்டாளிவர்க்கம் பாதுகாக்க முன்னெடுக்க முனையும் போது அது ஒருதாரமணத்துக்குப் பதில் (பெண் மட்டும் காதலிக்கும் திருமணங்கள்) வளர்ச்சி பெற்று ஆண் பெண்ணின் சுயமான, இயல்பான நீடித்த இருதார மணத்தை ஆண் - பெண் இணைவை வலுப்படுத்தும். இது சுயநிர்ணயத்தைக் கொண்ட பரஸ்பரம் காதலிக்கவும், வாழவும், விலகவும் மனிதச் சமூகம் தன்னை ஜனநாயகப்படுத்தி அடுத்தக் கட்டத்திற்கு நகர்ச்சி பெறும்.





# 28. பாலியல் நெருக்கடிகள்

மாட்டுடன் உடல் உறவு கொண்ட பொலிஸ் பற்றியும், அவன் கைது பற்றியும் செய்தி இந்தியா டுடேயில் வெளியாகி உள்ளது. (30.12.1998)[34]

இந்தியாவில் தென்காசியைச் சேர்ந்த அச்சம் புதூர் கிராமத்தில் "சீற்றம் மாற்றம் தரும்" என்ற தலைப்பில், பெண்ணைத் திருமணம் செய்து கணவன் சவுதி சென்ற நிலையில், வேறு ஓர் ஆணுடன் தொடர்பு எனக் கூறி, ஜமாத்தை சேர்ந்த முஸ்லிம் அரசியல் சமயப் பிரமுகர்கள் அந்தப் பெண்ணை இழுத்துச் சென்று மொட்டையடித்து, மரத்தில் கட்டி வைத்து கற்பழித்துள்ளனர் என்று எழுதப்பட்டுள்ளது.

இது போல் திருமணம் செய்த கணவன் வேறு பெண்ணுடன் தொடர்பு என அறிந்த மற்றொரு பெண் கணவனை விட்டுப் பிரிந்து வந்தாள். இதை எதிர்த்து கணவன், கணவனின் தந்தை (மாமனார்) வசைச் சொற்களால் அவளை விபசாரி எனக் கூறி, ஜமாத் உதவியுடன் பகிரங்கமாகத் தாக்கி, ஏசி, உதைத்து ஒன்றாக வாழக் கோரினர். இரண்டு பெண்களும் பல எதிர்ப்புக்கு மத்தியில் வழக்கைப் பதிவாக்கிப் போராடுகின்றனர். (21.4.1997)[34]

இந்திய ஆண்களின் "நெருக்கடி மிகுந்த நடுப்பகல்" என்ற கட்டுரையில் ஆண்களுக்கு மத்தியத் தர வயதில் ஆயுள் முடிவது குறித்து எழுதுகின்றது. சைலேஷ் கோத்தாரி என்ற மன இயல் நிபுணர், "உடலுறவைப் பெற ஆண் அன்பைத் தருகின்றான். பெண் அன்பைப் பெற உடலுறவைத் தருகின்றாள்" என்ற ஆணாதிக்கக் கண்ணோட்டத்துடன் அக்கட்டுரை தொடர்கின்றது. (6.6.1990)[34]

பாலியல் நெருக்கடி இந்த ஆணாதிக்கச் சமூகத்தின் கொடையாகும். இது வேறுபட்ட சமூகங்களின் ஆதிக்கத்தில் இருந்த மதப்பிரிவுகளினுடைய வக்கிரத்தின் குறியீடாகிப் போனது. ஆண் பெண்ணின் பாலியல் உறவுகளை நலமடித்தபோது அது சமுதாய நெருக்கடியானது. மிருகங்களை வீட்டில் பழக்கி வளர்க்கத் தொடங்கிய மனிதன் மிருகத்தின் பாலியல் நாட்டத்தைக் கட்டுப்படுத்தி மிருகங்களின் பாலியல் உறுப்புகளைச் சேதப்படுத்தினான். இந்தச் சேதத்தைச் செய்கின்ற போது காட்டுமிராண்டித்தனமாக மிருக உறுப்புகளை நசுக்கிச் (ஆட்டுக்கிடாய்க்குக் காயடித்தல்) சேதப்படுத்துவது என்ற அவனின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அறிவியல் எல்லையில் இருந்து இன்று நவீனப்பட்டுள்ளது. இந்தச் சேதாரம் மட்டுமே உபரியைப் பெற்று தரும் மிருக வளர்ப்பு ஆதாரத்தை வழங்கியது.

இதில் இருந்து ஆணாதிக்கச் சமூகம் தனது சொத்துக்குரிய ஆண் தலைமுறையை உருவாக்க ஆண் - பெண் பாலியல் புணர்ச்சியில் நலமடிக்கத் தொடங்கினான். இது பெண் மீதான பாலியல் தடையை ஒழுங்குபடுத்தியது. இதை மீறும் போது கடும் தண்டனைகள் ஈவு இரக்கமின்றி மதத்தின் துணையுடன் பெண் மீது பாய்ந்தது. பெண்களை எரித்தல், சமுதாயத்தில் இருந்து ஒதுக்குதல், தாக்குவது, பெண் உறுப்பைத் தைப்பது, சேதமாக்குவது என பல வடிவங்கள் பெண் மீது ஏவப்பட்டது. பெண் வீட்டில் அடைத்து வைக்கப்பட்டாள். மிருக வளர்ப்பில் அனுபவம் பெற்ற மனிதன் ஆண் - பெண்ணை வேறுபடுத்தி, அடைத்து அனுபவப்பட்ட போக்கில் பெண்ணை வீட்டில் அடைத்து வைக்க பழகிக் கொண்டான். இந்தப் போக்கில் உருவான கட்டுப்பாடுகள், பழக்க வழக்கங்கள் ஆணுக்கும் பாலியல் பூர்த்தியைக் கட்டுப்படுத்தியது. விபச்சாரம் தீர்வாக ஆணுக்கு விட்டுச் சென்ற ஆணாதிக்கம் அதைச் சந்தைப்படுத்திய போது அதுவும் நெருக்கடிக்குள்ளானது.

பாலியல் நெருக்கடி என்பது இயற்கையின் தெரிவை அனுசரிக்க மறுத்தது. இது இயற்கைக்குப் புறம்பான பாலியல் வடிவங்களைத் தேர்வு செய்வதை ஊக்குவித்தது. ஆணும், பெண்ணும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. மிருகத்துடன் உறவு, பெண்ணும் - பெண்ணும் உறவு, ஆணும் - ஆணும் உறவு, சிறுவர் - சிறுமி மீதான ஓரின மற்றும் எதிர்பால் உறவு, பொம்மைகள் மீதான உறவு, நினைவுகளில் உறவு..... என பல வடிவங்களைக் கிடைக்கக்கூடிய இடைவெளிகளில் எல்லாம் நீக்கல் இன்றி கடைப்பிடிக்கப் பின் நிற்கவில்லை. மனித உருவத்தின் ஏதாவது ஒரு பகுதியுடன் மிருகத்திற்குப் பிறக்கும் குட்டிகளின் நிலைமைக்கு ஆணின் பாலியல் நெருக்கடிகள் தான் காரணம் என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

இந்தப் போக்கில் இவை, சட்டவிரோதமான பாலியல் உறவாகச் சமூகம் காணத் தொடங்கியது. ஆணாதிக்கம் உருவாக்கிய பாலியல் நெருக்கடியினால் இருட்டில் உருவான, இயற்கைக்குப் புறம்பான பல பாலியல் தீர்வுகள் மாறுபட்ட பொருளாதார மாற்றத்துடன் தன்னை அங்கீகரிக்கக் கோரிப் போராடுவது மாற்று வழியாகியது. இதனால் ஆணாதிக்கத்தைப் பாதுகாக்க இவைகளை அங்கீகரிப்பதன் மூலம் இயற்கையான பாலியல் கட்டுப்பாட்டைப் பேணிக் கொள்வதன் மூலம் சமுதாயத்தின் ஆணாதிக்க வடிவத்தைப் பேணிக் கொள்ள சுரண்டும் வர்க்கம் தன்னைத் தனது சுரண்டும் ஜனநாயக வழியில் ஒழுங்குபடுத்தி வருகின்றது.

மனித வரலாறே பூமியின் வரலாறாகக் கற்பனை செய்வோர் இயற்கையின் வரலாற்றை மறுப்பதில் தம்மையும், இந்த ஆணாதிக்கச் சுரண்டல் அமைப்பையும் பாதுகாக்க முயலுகின்றனர். இயற்கையின் பாலியல் தேர்வை ஆணாதிக்கப் பாலியல் ஒழுங்கில் பேணிக் கொண்டு வாழும் உலகில் செயற்கையான பாலியல் ஒழுங்கைப் பாதுகாக்கவும், கோரவும் கோஷம் போடுகின்றனர்.





# 29. கர்ப்பத்தடைகள்

“நன்மை பிறக்குமா?” என்ற தலைப்பில் நார்ப்ளாண்ட்-1 என்ற கருத்தடை மருந்தை எதிர்த்துப் பெண்கள் போராடியதைச் சுட்டிக்காட்டியும், இதனால் புற்றுநோய், மனஅழுத்தம் போன்றன ஏற்படும் என்பதைப் போராடும் பெண்கள் எடுத்துக் கூறியதையும், உலகு எங்கும் மிக வறிய மக்களுக்குள் இவை பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்படுவதையும் சுட்டிக் காட்டினர். (6.10.1994)[34] பாரத இந்தியாவில் 1977-இல், அவசரக்காலச் சட்டத்தை இந்திராகாந்தி அமுல் செய்த போது, துப்பாக்கி முனையில் 65 இலட்சம் ஆண்கள் மலடு ஆக்கப்பட்டனர். இதே போன்று 1985-1990-இக்குள் 310 இலட்சம் பேரை மலடாக்கியும், 250 இலட்சம் பேரைக் கர்ப்பத்தடை செய்தும், 145 இலட்சம் பேரை வேறு வழியில் கருத்தடையும் செய்யப்பட்டனர். இதழ் 1994-3.2[46]

கருத்தடை உரிமையைப் பெண்ணிலைவாதிகள் தமது சுயாதீனமான உடற்கட்டுப்பாட்டுச் சாதனம் என பிரகடனம் செய்யக்கூடும். ஆனால் வரலாற்றில் கருத்தடை சாதனம் என்பது பொருளாதார வாழ்வியலுக்கு உட்பட்டே இயங்குகின்றது. சமுதாயப் பொருளாதார இயங்கியல் கண்ணோட்டத்தை மீறி கரு அழிப்பு இயங்கி விடவில்லை. ஒரு பெண் இந்தச் சமூகத்தில் இருந்து எவ்வளவுதான் ஆணாதிக்கத்தால் ஒதுக்கப்பட்டபோதும் பெண் சமூகப் பொருளாதாரச் சுதந்திரத்திற்குள்ளேயே இயங்குகின்றாள், முடிவுகளையும் எடுக்கின்றாள். இதையே **மார்க்ஸ்** அழகாகக் கூறுவதைப் பார்ப்போம்.

**‘‘இது முதலாளித்துவப் பொருள் உற்பத்தி முறைக்கே உரித்தான மக்கள் தொகை விதியாகும். உள்ளபடியே, வரலாற்று வழியில் வந்த தனித்தனி பொருள் உற்பத்தி முறைகள் ஒவ்வொன்றும் அதற்கே உரிய மக்கள்தொகை விதியைப் பெற்றிருக்கிறது. இவ்விதி வரலாற்று வழியில் அந்தப் பொருள் உற்பத்தி முறைக்கு அமைத்த வரம்புகளுக்குள் மட்டும் செல்லத்தக்கது. வரம்பேதுமில்லாத சூக்குமத் தொகை விதி ஒன்று மரஞ்செடிகொடிகளுக்கும், விலங்குகளுக்கும் மட்டும் இருக்க முடியும். - அதுவும் கூட மனிதன் அவற்றின் பாதையில்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**குறுக்கிடாத வரைதான்.. ... .. இருக்கும் உபரியான உழைக்கும் மக்கள்தொகை, மறுபுறத்தில் முதலாளித்துவத் திரட்டலின் நெம்புகோலாகிறது. அது மட்டுமன்று, முதலாளித்துவப் பொருள் உற்பத்தி முறை நிலவிடத் தேவையான நிலைமையும் ஆகிறது.''**[35] பாகம் 1.2 பக்கம் 849

என்னதான் சுதந்திரமாகக் கருஅழிப்பு உபகரணத்தைக் கையாள்வதாக எண்ணிப் பெருமைப்பட்டபடி இயங்கியபோதும் உண்மையில் சமூகப் பொருளாதாரச் சிந்தனை எல்லைக்குள்தான் ஒருமனிதனின் பயன்பாட்டுவிதி செயல்படமுடிகின்றது. இதை மேலும் **மார்க்ஸ் "..உண்மையில், பிறப்பு இறப்பு எண்ணிக்கை மட்டுமல்லாமல் குடும்பங்களின் அறுதி அளவும் கூட கூலி மட்டத்தோடு எதிர் விகித உறவு கொண்டுள்ளது. எனவே தொழிலாளர்களின் வெவ்வேறு வகையினர் பயன்படுத்தும் வாழ்வுச் சாதனங்களின் அளவோடும் எதிர்விகித உறவு கொண்டுள்ளது. முதலாளித்துவச் சமுதாயத்தின் இந்த விதி காட்டுமிராண்டிகளுக்கு, ஏன் நாகரிகக் குடியேற்றக்காரர்களுக்கே கூட அபத்தமானதாகவே தோன்றும். தனிநிலையில் பலமற்றதாகவும் ஓயாமல் வேட்டையாடி ஒழிக்கப்படுவதாகவும் இருக்கும் மிருகங்கள் தமது இனத்தை வரம்பின்றிப் பெருக்கிக் கொள்கின்றன அல்லவா, அதைத்தான் இந்த விதி நமக்கு நினைவு படுத்துகின்றன."** என தொடர்ந்து எழுதிய மார்க்ஸ் "நாட்டின் துயரங்கள்" என லயிங் எழுதியதை எடுத்து வைக்கின்றார். **"மக்கள் எல்லோரும் வசதியான நிலைமையில் இருப்பார்களேயானால் சீக்கிரமே உலகம் மனித இனமற்றதாகி விடும்."**[35] பாகம் 1.2 பக்கம் 865

ஒருபுறம் பாட்டாளி வர்க்கமும், மறுபுறம் பூர்சுவா வர்க்கமும் வெவ்வேறு எல்லைக்குள் கருத்தடை பயன்பாட்டைப் புரிந்து கொள்கின்றனர். இயற்கையில் மனித உயிரியலின் விதி என்பது அழிவுக்கும், பற்றாக்குறைக்கும் எதிராக நேர்விகிதத்தில் உயிரின் தோற்றத்தை அதிகரிக்கும். இதனால் மட்டுமே அந்த உயிரினம் தப்பிப் பிழைக்க முடிகின்றது. இதில் தோற்றுப் போகும் போது அந்த உயிரினம் மண்ணில் இருந்து அழிந்து போகின்றது. இது மரம் செடி கொடி என அனைத்து எல்லைக்கும் பொருந்தும். இதுவே இயற்கையின் வரலாறு. **மனிதனின் குழந்தை என்பது மனித உயிர் வாழ்தலின் அடிப்படையாகும்.** குழந்தையை வாரிசாகவோ அல்லது எந்தவிதமான அபிப்பிராயத்தைக் கொண்டாலும் இது இயற்கையின் செயற்பாட்டை மறுத்து மனித வரலாற்றை இயற்கை வரலாறாகப் புனைவதன் வெளிப்பாடாகும்.

இன்று கருத்தடை என்பது இயற்கையின் கண்ணோட்டத்தில் இருந்து புரிந்து கொள்ளப்படவில்லை. மாறாக மனித வரலாற்றை இயற்கை வரலாறாகக் காட்டியே கருத்தடை விளக்கங்கள் நியாயப்படுத்தப்பட்டன. பெண்ணின்





உடல் சுதந்திரம், பூர்சுவா வர்க்கத்தின் உல்லாசமான கூத்து வாழ்க்கைக்கு இடைஞ்சல், சில நாடுகளில் உணவுப் பற்றாக்குறை, சில நாடுகளின் ஜனத்தொகை எண்ணிக்கை போன்ற பல்வேறு கூறுகள் கருத்தடையை ஏற்படுத்த மூலமாகின்றது. இவை அனைத்துமே அபத்தமானவை. இயற்கையைப் பாதுகாக்க சுற்றுச்சூழல் பற்றிய எந்தவிதமான அக்கறையுமற்ற மனிதன் எப்படி இயற்கையைச் சிதைக்கின்றானோ அது போல் கருஅழிப்பைப் பிழையான வகையில் புரிந்து இயற்கையின் உயிரியல் கண்ணோட்டத்தைச் சிதைக்கின்றான்.

மனித அறிவியல், குழந்தை பிறப்பில் உடல் ஆரோக்கியம், சமூகத் தேவைக்குட்பட்ட குழந்தை, குழந்தை மீதான வாரிசுரிமை பற்றிய ஆணாதிக்கக் கண்ணோட்டத்தை மறுத்து, அனைத்துக் குழந்தையையும் தனது குழந்தையாகக் காணும் சமூகக் கண்ணோட்டம் போன்ற மனிதனின் சமூகக் கண்ணோட்டத்தைக் கொண்டு கருத்தடை பயன்படுத்தப்படாவிட்டால் ஆணாதிக்க அமைப்பில் இயற்கையின் உயிரியல் விதியை மீறுவதாகும்.

உணவுப் பற்றாக்குறையில் சிக்கியுள்ள அனைத்து நாடுகளிலும் குழந்தை பிறப்பு அதிகமாக உள்ளது என்பது இயற்கையின் விதிக்குட்பட்டதே. இந்த இயற்கையின் கண்ணோட்டத்தை ஒட்டிப் பெருகும் மக்களையிட்டுத் தேவைக்கு மிஞ்சி தின்று கொழுப்பவன்தான் கருத்தடையைப் பிரச்சாரம் செய்கின்றான். இதற்காக இந்த நாடுகளில் தன்னார்வக் குழுக்கள், உலகச் சுகாதார அமைப்பு, யுனிசேவ், செஞ்சிலுவைச் சங்கம்..... என அனைத்தும் குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து சலுகைகளை வழங்கி கரு வளத்தை அழிக்கின்றனர். இதில் பெண்ணியல்வாதிகளும் பெண்ணின் சுதந்திரம் என்ற கோரிக்கையின் கீழ் இதைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து அமுல்படுத்துகின்றனர்.

வறியநிலையில் பட்டினியில் செத்துக் கொண்டிருக்கும் நாடுகளில் ஏன் இந்த நிலை ஏற்பட்டது? இந்த மக்களின் உணவை அவர்களின் பற்றாக்குறையில் இருந்தல்ல, அவர்களிடம் இருந்து கொள்ளையடிப்பதனால் வறுமை சமூகமயமாகின்றது. வசதியான பிரிவு மேலதிக ஆடம்பர நுகர்வுக்காகவும், சந்தையின் பெறுமானத்தைக் கட்டிக்காக்கவும், அழித்தும், சேதமாக்கியும் உருவாக்கிய ஏகாதிபத்தியமயமாதலினுடைய ஜனநாயகத்தின் விளைவுதான் பட்டினியாகும். உலகில் பணக்கார நாடுகளை நோக்கி கையேந்தும் காலத்துக்கு முன்பு, இந்த மக்கள் இவ்வளவு மோசமான வறுமையை அடைந்ததில்லை. சுயமான பொருளாதாரத்தில் தன்னிறைவுடன் வாழ்ந்தவர்கள் இன்று பட்டினியில் சாவது இன்றைய நவீனப் பொருளாதாரத்தின் கொடையாகும். கடலில் கொட்டியும், மண்ணில் புதைத்தும், எரித்தும், மிருகத்துக்குக் கொட்டியும் அழிக்கும் உணவு கையேந்தும் அந்த மக்களின் உழைப்பைச் சுரண்டியும், அபகரித்தும் பெறப்பட்டதாகும். உலக சந்தையைச் சூறையாடும் சுரண்டும் வர்க்கம் தமது ஆதிக்கத்தை மேலும் அதிகரிக்க ஏற்படுத்திய நிலைதான் இந்த அவலம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்னால் இந்த மக்களின் ஜனத்தொகைப் பெருக்கத்தைக் காரணம் கூறி, கருஅழிப்பு பிரச்சாரத்தைத் தீவிரமாக்குகின்றனர். அதற்கு சலுகைகள், உதவிகள், மனிதவளப் பரிவு கொண்ட செயல்கள், ஆணாதிக்கத்துக்கு எதிரான அரண் எனப் பலவாகத் தீவிரமான வடிவங்கள் இந்த மக்களுக்குள் சிந்தனையிலும், செயலிலும் அமுல் செய்து வருகின்றனர். கருத்தடைக்கு உள்ளாகும் இந்த மக்களின் பொருளாதாரப் பலமோ, ஆணாதிக்கத்தின் தீவிரமோ குறைந்ததா? என்றால் இல்லை. மாறாக அதிகரித்துச் செல்லுகின்றது.

இன்றைய பட்டினிக்கும், அவலத்துக்கும் ஒவ்வொரு வெள்ளை இனத்தவரின் நுகர்வே காரணமாகும். இங்கு அந்த மக்களின் மீதான குற்றம் (மக்கள் தொகைப் பெருக்கக் குற்றம்) என்பதல்ல. மாறாக வெள்ளை இன ஏகாதிபத்திய நுகர்வுச் சிந்தனைக்குட்பட்ட அனைத்து மக்களின் நுகர்வுதான் பட்டினியாலும், நோயாலும் இறக்கின்ற ஒவ்வொரு மனிதனின் இறப்புக்கும் மறைமுகமான பங்காளிகள் ஆவர். ஆனால் இங்கு இருந்துதான் எதிர்க் குற்றச்சாட்டும், அதற்குத் தீர்வாகக் கருத்தடையும் பின்னால் வெளிப்படுகின்றது.

கருத்தடை உபகரணம் என்பது இன்னொரு புறத்தில் மேற்கு ஏகாதிபத்தியப் பன்னாட்டு நிறுவனங்களின் பாரிய சந்தையையும், மூலதனத்தையும் திரட்டிக் கொடுக்கின்றது. இதனால் இலவச விளம்பரத்தைத் தீவிரமாக்குகின்றது. இது மேற்கில் பூர்சுவா குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாக்குகின்றது. மேற்கில் பூர்சுவா சொகுசுத்தனத்தில் குழந்தையை இடைஞ்சலானதாகப் பார்ப்பதும், சமூகக் கண்ணோட்டச் சிதைவும், கருத்தடை உபகரணங்கள் இலவசமாகக் கிடைக்க, கருத்தடை விளம்பரத்துக்கு இலகுவாகப் பலியிடப்படுகின்றனர். அத்துடன் பெண்ணியலின் கொச்சை புரிதலும், விளக்கமும் கருத்தடையால் மேற்கில் ஜனத்தொகை படிப்படியாகக் குறையத் தொடங்கியுள்ளது. இது அந்த நாடுகளில் பல குழந்தைகளைப் பெற ஊக்குவித்த சலுகைகள், பணக் கொடுப்புகளை மீறியும் ஜனத்தொகை குறைப்பை ஏற்படுத்த தொடங்கியுள்ளது. இந்த ஏகாதிபத்தியம் மேற்கில் குழந்தை பெற்றால் குழந்தைக்கும், பெற்றோருக்கும் பணம் முதல் பல சலுகைகளையும், மற்ற நாடுகளில் குழந்தையைப் பெறாது நிரந்தர தடைசெய்தலில் தற்காலிகச் சலுகையுடனான விளம்பரம் என இரட்டைப் போக்கை நயவஞ்சகத்துடன் கையாளுகின்றது. இந்த இரண்டு போக்கில் இரண்டையும் அல்லது எதாவது ஒன்றையும் பல்வேறு ஏற்றத் தாழ்வுடன் புரிந்து கொண்டே கருத்தடை இன்று உள்ளது. இதை முன்னெடுக்கும் பெண்ணியல் அமைப்புகள் கூட இதில் இருந்து தப்பிவிடவில்லை. ஒற்றைப் பரிணாமத்தில் பெண்ணின் உடல் உரிமைக்கு அப்பால் அந்த உரிமை எப்படிச் சமூகத்தில் இருந்து சுதந்திரமாக இயங்குகின்றது என்ற அறிவின்றியே கூக்குரல் போடுகின்றனர்.

கருத்தடை என்பது ஏகாதிபத்தியக் கோட்பாட்டுக்குக் கட்டுப்பட்டவைதான். இதை அரசுகள் இன்று ஏகாதிபத்தியக் கட்டளைக்கு ஏற்ப நடைமுறைப்





படுத்துவதில் தீவிரமாக இயங்குகின்றது. இந்தியாவில் அவசரகாலச் சட்டம் நிலவிய பாசிச சூழலில் இந்திராவும், அவரின் புதல்வர் சஞ்சய் காந்தியும் இணைந்து 65 இலட்சம் ஆண்களைத் துப்பாக்கி முனையில் மலடாக்கினர். இதுபோல் எண்ணிக்கை தெரியாத அளவுக்குப் பெண்களையும் மலடாக்கினர். இவை எதற்காக செய்யப்பட்டன? இது நாட்டின் தேவையில் இருந்த சமூகத்தை மாற்ற கையாண்டவையல்ல. மாறாக ஏகாதிபத்திய நலனுக்காகத் தேச மக்களைச் சிதைத்ததன் விளைவு. இது போல் பல இலக்குகளை ஆசை காட்டியும், ஏழ்மையை விலை பேசி பணம் கொடுத்தும், ஏமாற்றியும், துப்பாக்கி முனையிலும் நிகழ்த்தப்பட்டது. இது பல நாடுகளின் பொதுத்தன்மையாகும்.

இந்தக் கருத்தடைகளுக்கு ஏகாதிபத்தியப் பன்னாட்டுக் கண்டுபிடிப்புகளைப் பரிசோதிக்கும் உயிர் உள்ள ஜடங்களாக ஏழைப் பெண்கள் சிதைக்கப்படுகின்றனர். அதேநேரம் பாவனைக்குக் கெடுதல் என்று மேற்கில் தடைசெய்யப்பட்ட மருந்துகளை மூன்றாம் உலக நாடுகளில் கட்டாயப்படுத்திச் சந்தைப்படுத்தியும், வலுக்கட்டாயமாக விற்கவும் செய்யப்படுகின்றது. இவைகள் மூலம் இவைகளை உற்பத்தி செய்யும் பன்னாட்டு நிறுவனங்கள் கோடிகோடியாகப் பணம் திரட்டுவதுடன் மக்களின் ஜனநாயகம் பற்றியும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பது பற்றியும் கண்காணிப்பில் ஈடுபடுகின்றனர். பெண்கள் தமது பூர்சுவா பெண்ணியல் புரிதலில் உடல் சுதந்திரம் பற்றி பன்னாட்டு விளம்பரத்துக்குட்பட்டே செயல்படுவதைத் தவிர்க்கமுடியாத அரசியல் எல்லைப்படுத்துகின்றது. இந்த ஜனநாயகம் சூறையாடும் சுரண்டல் ஜனநாயகம் என்பது மக்களுக்குப் புரிகின்ற போது இந்தக் கர்ப்பத்தடை பிதற்றல்களை மக்கள் வேரறுப்பது தவிர்க்க முடியாதது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 30. கருஅழிப்புகள்

ஐக்கிய நாட்டு அறிக்கை ஒன்றின்படி வருடந்தோறும் 4.5 கோடி கருஅழிப்புகள் உலகளவில் நடத்தப்படுகின்றது. இவை எல்லாம் பெண் தனது உடல் சுதந்திரத்தைப் பேணும் பெண்ணியப் பிதற்றல்களில் இருந்தோ, ஆணாதிக்கத்தை ஒழிக்கும் வழியாகக் கூறும் பெண்ணியச் சீரழிவில் இருந்தோ பெண்ணை விடுவித்து விடவில்லை. மாறாக ஏகாதிபத்தியச் சீரழிவில் இருந்தும், ஆணாதிக்கக் காமத்தைப் பெண் பூர்த்தி செய்யும் அழகான உடல் தேவையில் இருந்தும், ஆணாதிக்க அமைப்பின் தேவைகளூடாகவும், சிதைவினூடாகவும் நடந்தவைதான்.

அட்டவணை - 24

1997-இல், கரு அழிப்புகளைப் பார்ப்போம்.[59]

| நாடுகள் | கரு அழிப்புகள் | பிறந்த குழந்தைகள் |
|---|---|---|
| பிரான்ஸ் | 52,580 | 1,80,000 |
| சுவீடன் | 9,460 | 32,000 |
| பிரிட்டன் | 12,850 | 1,90,000 |

கருஅழிப்புகள் நாட்டுக்கு நாடு அதன் பண்பாட்டு - பொருளாதார எல்லைக்குட்பட்டு வேறுபடுகின்றது. மேற்கில் பிரான்சுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் புள்ளிவிபரத்தில் உள்ள வேறுபாட்டைத் தீர்மானிப்பது, இங்கிலாந்தில் மதமும், மன்னர் பரம்பரையின் ஆதிக்கத் தொடர்ச்சியுமேயாகும்.

பொதுவாக பூர்சுவா கண்ணோட்டத்தை ஏகாதிபத்தியக் கண்ணோட்டத்தில் ஏற்றுக்கொண்ட நாடுகளில் குழந்தை பிறப்புக்கும், அழிப்புக்கும் உள்ள இடைவெளி மூன்றுக்கு ஒன்றாக உள்ளது. அதே நேரம் பூர்சுவா கண்ணோட்டத்தை நிலப்பிரபுத்துவ வழியில் புரிந்து ஏகாதிபத்தியப் பண்பாட்டைக் கொண்ட இங்கிலாந்தில் ஒன்றுக்குப் பதினைந்தாக கருஅழிப்பு உள்ளது.

கருஅழிப்பு என்பது இருக்கும் ஆணாதிக்கப் பண்பாட்டின் பொருளாதார அமைப்புக்கும் உள்ள பண்பாட்டு உறவால் தீர்மானமாகின்றது. இதை மேலும் கீழே ஆராய்வோம். ஆணாதிக்கத்துக்கு உட்படும் பெண்ணின் உடல் சார்ந்தது என்பதால் இது பெண்ணின் உரிமை மற்றும் சுதந்திரம் என்ற கோரிக்கைகள், கோஷங்கள் முன் தள்ளப்படுகின்றது. பெண்ணின் பிரச்சினைகளை ஆணாதிக்கச்





சிந்தனையின் சமூக வடிவமாகப் புரிந்து கொள்ளாத பிரிவுகள் ஆணை முன்நிறுத்தி எதிரியாகக் காட்டும் போது இவை பெண்ணின் சுதந்திரம், உரிமையாகக் காட்டப்படுவது நிகழுகின்றது. ஒரு பெண் கூட ஆணாதிக்கச் சிந்தனையில் வாழ்கின்றாள் என்ற சமூகத் தன்மையைப் புரிந்து கொள்ள முடியாத அல்லது மறுக்கின்ற பிரிவு ஆணை எதிரியாகக் காட்டும் போது கரு அழிப்பு பெண்ணின் சுதந்திரமாக, உரிமையாகக் காண்பது நிகழ்கின்றது.

இந்த ஆணாதிக்கச் சுரண்டும் சூறையாடும் சமூகத்தைப் புரிந்து கொள்ளாத அல்லது மாற்ற விரும்பாத பிரிவுகள் ஆணாதிக்கச் சமூகத்தை மாற்றுவதற்குப் பதில் ஆணை எதிரியாகப் பெண்கள் முன் நிறுத்துகின்றது. இதன் மூலம் பெண் சார்ந்த அனைத்தையும் பெண்ணின் சுதந்திரம் சார்ந்ததாக, சமூகத்துக்குப் புறம்பாக இட்டுக் கட்டுகின்றனர். இன்று சமூகத்தில் அடுத்த நேரத்துக்கு என்ன உணவு எனத் தெரியாது வாழும் 100 கோடி பெண்கள் பட்டினியில் பிறரின் எச்சில் சோத்தை எதிர்பார்த்து நிற்பதையும், வருடம் சில பத்து இலட்சம் பெண்ணைக் கொன்றொழிக்கும் ஆணாதிக்கச் சுரண்டல் சமூகத்தையும் பற்றி கவலைப்படாத பிரிவுகள்தான் ஆணுக்கு எதிரான பெண்ணின் சுதந்திரம் பற்றி கூச்சல் போடுகின்றனர். இந்த வகையில் அராஜகவாதப் பெண்ணியல் (இதையே தீவிரப் பெண்ணியல் என்று அடையாளப்படுத்துவோர்), பூர்சுவா பெண்ணியல்வாதிகள் போன்று ஆணைப் பெண்ணுக்கு எதிராக நிறுத்துகின்றனர். அதாவது பார்ப்பனியச் சிந்தனைக்குப் பதில் பார்ப்பாணை எதிரியாகக் காட்டும் இந்தியப் பூர்சுவா குழுக்கள் போல் இது உள்ளது.

பாட்டாளி வர்க்கம் ஆணைப் பெண்ணுக்கு எதிரான எதிரியாக நிறுத்துவதைத் திட்டவட்டமாக மறுக்கின்றது. மாறாக ஆணாதிக்கச் சிந்தனையை ஆண் - பெண் என இருவருக்கும் முன் எதிரியாகப் பிரகடனம் செய்கின்றது. இந்த ஆணாதிக்கச் சிந்தனையில் தனித்து ஆண் மட்டுமல்ல பெண்ணும் இருக்கின்றாள் என்பதை அம்பலப்படுத்துகின்றது. இதில் யாருக்கும் சலுகை வழங்குவதில்லை. 'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்ற ஆணாதிக்கக் கோட்பாட்டின் எல்லா விளக்கத்தையும், ஆணாதிக்கச் சலுகைகளையும் பாட்டாளி வர்க்கம் மறுக்கின்றது.

பெண்ணின் பின் தங்கிய சமூக நிலையைக் கவனத்தில் எடுத்து விசேட அக்கறையுடன் முன்னுக்குக் கொண்டுவர அனைத்து முயற்சியையும் பாட்டாளி வர்க்கம் கையாளுகின்றது. ஆணாதிக்க ஆணின் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகப் பெண்ணின் சார்பாக நின்று, பெண்ணை ஆணாதிக்கச் சிந்தனைக்கு வெளியில் கொண்டுவரப் போராடுகின்றது. அதேநேரம் சமூக இருத்தலில் முன்னேறிய ஆணின், ஆணாதிக்க விழிப்புணர்ச்சியைப் பாதுகாத்து அதற்கு எதிராக வரக்கூடிய ஆணாதிக்க வடிவ எதிர்ப்புகளின் போது முன்னேறிய ஆணின் பக்கம் சார்ந்து நிற்கின்றது. பாட்டாளி வர்க்கம் ஆண் - பெண் என்ற இடத்தில் ஆணாதிக்கத்துக்கு எதிராக யார் முன்னேறி நிற்கின்றனரோ, அவர்கள் பக்கம் சார்ந்து பிரச்சினையைக் கையாளவும், பொதுவான ஆணாதிக்கச் சமூகத்தில் ஆணாதிக்க நெருக்கடியில் பெண் பக்கம் சார்ந்தும் ஆணாதிக்கத்துக்கு எதிராகப் போராடுகின்றது. இது மற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அனைத்துப் பெண்ணியல் கோஷத்துக்கும் மாற்றான ஆண் - பெண் பற்றிய நிலைப்பாட்டில் இதுதான் பாட்டாளி வர்க்க நிலையாகும்.

**பாட்டாளி வர்க்கம் இந்தச் சமூகத்தில் இருந்தபடி, சுதந்திரமாக எந்தத் தனிமனிதனும் செயல்பட முடியாது என்பதையும், தீர்மானத்தைச் செய்யவும் முடியாது என்பதையும் தெளிவாகப் பிரகடனம் செய்கின்றது.** சுதந்திரமும் பிரகடனமும் இந்தச் சமூகத்தின் போக்கில் அல்லது இதற்கு எதிரான மறுப்பில் மாற்றுச் சமூக அமைப்பைக் கோருவதில் மட்டுமே செய்யமுடியும். இந்த இரண்டு போக்கும் சமூகத்தின் முரண்பட்ட விதிக்கு உட்பட்டவை. அதாவது குறுக்கு - நேர், மேடு - பள்ளம், நட்பு - பகை, இன்பம் - துன்பம், நீளம் - கட்டை.. போன்ற எதிர் முரண்பாட்டு விதிக்கு வெளியில் யாரும் சுதந்திரமாகச் சிந்திக்கவோ, செயல்படவோ, முடிவு எடுக்கவோ முடியாது. இந்த நேர் எதிரான சமூகப் பார்வையில் இடையில் இருப்பதாகக் கற்பனை செய்வதும், சுதந்திரமாகப் பிரகடனம் செய்வதும் இதில் ஒன்றை ஒட்டியோ, அண்டியோ மட்டுமே இயங்குகின்றது. ஆணாதிக்கத்தை எதிர்த்த போராட்டம் என்பது ஆணாதிக்கச் சமூகத்தை மறுக்கின்ற போராட்டமாகவே இருக்கின்றது. இதில் இருந்து இரண்டுமற்ற நிலை தோன்ற முடியுமே ஒழிய **பெண்ணாதிக்கம்** உருவாக முடியாது. **பெண்ணாதிக்கம் என்பது இன்னொரு ஆணாதிக்கமாகவே இருக்கும்.** இதனால் மேடும் பள்ளமுமற்ற சமநிலை உருவாக முடியாது.

முரண்பாடு பற்றிய இயங்கியல் விதியையும் அதை ஒட்டிய இயக்கம், செயல் பற்றி **மாவோ** கூறுவதைப் பார்ப்போம். **"வாழ்வு இன்றேல் - மரணமில்லை. மரணமின்றேல் - வாழ்வு இல்லை. மேல் இன்றேல் - கீழ் இல்லை. கீழ் இன்றேல் - மேல் இல்லை. நன்மை இன்றேல் - தீமை இல்லை. தீமை இன்றேல் - நன்மை இல்லை. வசதி இன்றேல் - கஷ்டமில்லை, கஷ்டம் இன்றேல் - வசதி இல்லை. பெருநில உடைமையாளர்கள் இன்றேல் - குத்தகை விவசாயிகள் இல்லை. குத்தகை விவசாயிகள் இன்றேல் - பெரு நில உடைமையாளர்கள் இல்லை.**

அதே போன்று முதலாளிய வர்க்கம் இன்றேல் - பாட்டாளி வர்க்கம் இல்லை. பாட்டாளி வர்க்கம் இன்றேல் - முதலாளிய வர்க்கம் இல்லை. நாடுகள் மீது ஏகாதிபத்திய அடக்குமுறை இன்றேல் - குடியேற்ற நாடுகளோ, அரைக் குடியேற்ற நாடுகளோ இல்லை. குடியேற்ற நாடுகளோ, அரைக் குடியேற்ற நாடுகளோ இன்றேல் - நாடுகள் மீதான ஏகாதிபத்திய அடக்குமுறை இல்லை.

அனைத்து எதிரானவைகளின் நிலைமைக்கும் இத்தகையது தான். குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் ஒருபுறம் அவை ஒன்றை ஒன்று எதிர்க்கின்றன. மறுபுறம், அவை ஒன்றுக்கொன்று உறவோடும், ஒன்றில் ஒன்று ஊடுருவியும், ஒன்றோடொன்று ஊடுருவிப் பரந்தும், ஒன்றையொன்று சார்ந்தும் இருக்கின்றன. இத்தகையதொரு பண்பு நிலையைத்தான் **ஒத்த இயல்பு** எனக் கூறுவர்.

குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் முரண்பட்ட கூறுகள் அனைத்தும் ஒத்த இயல்பற்ற பண்பு நிலையைக் கொண்டிருக்கின்றன. அந்நேரத்தில், அவை





ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகவும் இருக்கின்றன. எதிரானவை எப்படி ஒத்த இயல்புடையவையாக இருக்கமுடியும்? என இயங்கியல் ஆராய்கிறது. இது பற்றி கூறும் போது **லெனின் 'எதிரானவைகள் எப்படி ஒத்தவையாக இருக்க முடியும்? அவை எப்படி ஒத்தவையாக இருக்க முடிகிறது? (அவை எப்படி ஆகின்றன?) எத்தகைய நிலைமைகளில் அவை ஒத்த இயல்புடையதாயிருக்கின்றன? ஒன்று மற்றதாகத் தாமாகவே உருமாறுகின்றன? ஏன் மனிதரின் உள்ளம் எதிரானவைகளை, இறந்தவையாகவும் விறைத்து போனவையாகவும் கொள்ளாது, உயிருள்ளதாகவும், தாமாகவே ஒன்று மற்றொன்றாக மாறக்கூடியதாகவும் பார்க்க வேண்டும் என்பதையே இயங்கியல் சுட்டிக் காட்டுகிறது.'**

அப்படி இருக்கையில் அவை எப்படி ஒத்த இயல்புடையவையாய் இருக்கமுடியும்? அதற்கான காரணம், **ஒன்று மற்றொன்றின் வாழ்வுக்கான நிபந்தனையாக ஆகிறது. இதுதான் ஒத்த இயல்பு என்று கூறுவதின் முதல் கருத்தாகிறது.**

அதனால் முரண்பட்ட கூறுகளில் ஒன்று மற்றொன்றின் வாழ்விற்கான முன் நிபந்தனையாகிறது. அதனால் அவற்றிற்கிடையே ஒத்த இயல்புண்டு. அதனால் அவை ஒரே பொருளுக்குள்ளேயே சக வாழ்வு நடத்த முடியும். ஆக இவைகளை மட்டும் நாம் கூறினால் போதுமா? இல்லை இவைகளை மட்டும் நாம் கூறினால் போதாது. ஒவ்வொன்றும் தன் வாழ்விற்காக மற்றொன்றுடன் சார்ந்திருப்பதாக மட்டும் கூறினால் இவ்விஷயம் முடிந்து விடுகிறதா? இல்லை இதைவிட மிக முக்கியமானதொரு கருத்தும் உண்டு. அது என்னவெனில், அவை ஒன்று மற்றொன்றாக மாறுவது என்பதாகும். அதாவது, குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில், ஒரு பொருளில் உள்ள முரண்பட்ட கூறுகளில் ஒவ்வொன்றும் தன்னைத் தன்னுடைய எதிரானதாக மாற்றிக் கொள்கிறது. தனது நிலையைத் தன்னுடைய எதிரானதின் நிலைக்கு மாற்றுகின்றது. **தனது பண்பைத் தன் எதிரானதின் பண்பாக மாற்றிக் கொள்கிறது. இது முரண்பாட்டின் ஒத்த இயல்பின் இரண்டாவது கருத்தாகும்."[67]**

முரண்பாட்டு விதியின் அடிப்படையைப் புரிந்து கொள்ளாத வரை ஆணைப் பெண்ணுக்கு எதிராக நிறுத்துவது பண்பாகின்றது. ஆண் பெண்ணுக்கு இடையில் இருக்கக் கூடிய ஒத்த இயல்புகளும், முரண்பட்ட இயல்புகளையும் கவனத்தில் கொள்ளாத, அவை மாறிக் கொண்டும், செயல்பட்டுக் கொண்டும் இருப்பதைக் கண்டு கொள்ளாத கோஷங்கள் இயங்கியல் மறுப்பை நிலை நிறுத்துகின்றது. **ஆண் பெண்ணின் எதிரியல்ல. அது போல் பெண் ஆணின் எதிரியல்ல.** மாறாக ஆணாதிக்கச் சிந்தனையே பெண்ணின் எதிரியாக உள்ளது. இது பெண்ணிலும் உள்ள ஆணாதிக்கம் பெண்களுக்கு எதிராக உள்ளது. பண்பாட்டு கலாச்சாரப் பொருளியல் தளத்தில் அநேகப் போராட்டக்களத்தில் பெண்ணுக்கு எதிரான ஆணாதிக்கக் கண்ணோட்டத்தைத் தனிப்பட்ட ஆண் அல்லது பெண் எதிர்த்து போராடும் போது ஆண் அதை எதிர்ப்பது நிகழ்கின்றது. இங்கு தனிமனிதன் என்ற வகையிலோ அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பால் ரீதியிலான பிளவிலோ ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் தனித்துவமான பண்புகளைக் கொண்டிருப்பதில்லை. மாறாக ஆண் அல்லது பெண் ஆணாதிக்கத்துக்கு எதிரான சிந்தனை மட்டுமே பால் வேறுபாட்டைக் கடந்து ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தை நடத்துகின்றது.

ஆண் பெண் என்ற முரண்பாடும், வேற்றுமையும் பாலியல் உறுப்பிலும், அதன் மீதான நடத்தையிலும், அதன் மீதான விளைவிலும் மட்டும் இருக்க முடியுமே ஒழிய மனிதப் பண்பாடுகள், சிந்தனைகள், உழைப்புகள், கலாச்சாரங்கள், செயல்களில் பிளவு இருக்கமுடியாது. இன்று பிளவுபட்டுள்ள இவைகளை அகற்றும் போராட்டத்தில் ஆண் பெண்ணின் குறிக்கோள் ஒன்றை நோக்கி நகரவேண்டும். இதை மறுத்து ஆணாதிக்கத்துக்குப் பதில் பெண்ணாதிக்கத்தைக் கோரின் அது உண்மையிலேயே ஆணாதிக்கம் நீடித்திருக்க கோருவதாகும்.

இன்று பல பூர்சுவா மற்றும் அராஜகப் பெண்ணியல்வாதிகள் மற்றும் ஏகாதிபத்தியப் (பின்நவீனத்துவக்) கோட்பாட்டாளர்களும், ஆணாதிக்கத்துக்கு எதிரான ஆண் பெண் இணைந்த சமூகத்தைக் கோருவதற்குப் பதில் பெண்ணாதிக்கத்தை முன் வைக்கின்றனர். இவர்களே பெண்ணின் சுதந்திரமான உடல் கட்டுப்பாடு என்ற கோஷத்தின் கீழ் ஆண் எதிர்ப்பின் ஊடாகக் கரு அழிப்பை நியாயப்படுத்துகின்றனர். இயற்கையின் தெரிவான பாலியல் வேறுபாட்டைக் கொண்ட பாலியல் நடத்தைக்குப் பதில் ஆண் - ஆண் அல்லது பெண் - பெண் என்ற ஆண் எதிர்ப்பு அல்லது பெண் எதிர்ப்பு கோஷத்தை முன்நிறுத்தி ஓரினச்சேர்க்கைக்குக் கோட்பாட்டு விளக்கம் கொடுத்து ஆணாதிக்கத்தைத் தக்க வைக்கின்றனர்.

கரு அழிப்பு இந்த ஆணாதிக்கச் சுரண்டல் சமூகத்தில் ஏற்பட்ட புண்ணிலிருந்து எழும் நாற்றத்தின் விளைவு தான் என்பதை அடையாளம் காட்டாத, அதற்கு எதிராகப் போராடாத அனைத்துக் கோட்பாட்டு விளக்கமும் ஆணாதிக்கத்தைப் பாதுகாப்பவைதான். இவை தொடர்பாக நான் முன்பு பல சந்தர்ப்பங்களில் **சமர்** என்ற மார்க்சியப் பத்திரிக்கையிலும், வேறு பல பத்திரிக்கையிலும் விவாதித்திருந்தேன். அதில் ஒரு தவறைச் செய்தது தொடர்பான ஒரு சுயவிமர்சனத்தையும் செய்திருந்தேன். அதாவது சாதாரண மக்கள் அன்றாட வாழ்வில் இந்த ஏகாதிபத்திய ஆணாதிக்கத்தால் பாதிக்கப்படும் போது கரு அழிப்புச் செய்வதைக் கோட்பாட்டாளர்களின் கரு அழிப்புடன் குழப்பி இரண்டையும் வேறுபடுத்தி பார்க்க தவறிய போதுதான் அத்தவறு ஏற்பட்டது. என்னுடன் விவாதித்த அனைவரும் இந்த வேறுபாட்டைச் சுட்டி காட்டியதில்லை. அதே நேரம் அவர்கள் கரு அழிப்பூடாகத் தமது ஆணாதிக்கக் கோட்பாட்டிற்கே விளக்கம் கொடுத்தனர்.

உலகளவில் 50 சதவீதமான கருத்தரிப்புகள் முன் கூட்டியே திட்டமிடப்படாதவை என உலகச் சுகாதார அமைப்பு கூறுகின்றது. பிரேசிலில் வருடம் ஒன்றுக்கு 1 கோடியே 30 இலட்சம் கருத்தரிப்பு நிகழ, 50 இலட்சம் கருத்தரிப்புகள் இரகசியமாக அழிக்கப்படுவதை உலகச் சுகாதார அமைப்பின் அறிக்கை கூறுகின்றது. குடும்பமாகக் குழந்தை பெறக் கூடிய நிலையில் வாழும் 71 சதவீதம் பிரேசிலியர் கருத்தடையைப் பயன்படுத்துகின்றனர். இதில்





41 சதவீதத்தினர் கருத்தடையையும், 44 சதவீதத்தினர் மலடாக்கப்பட்ட நிலையில், இந்தக் கருஅழிப்பு உயர்ந்த பட்ச எல்லையில் காணப்படுகின்றது.

**லெனின்** 1914-இல் எழுதிய கட்டுரையில், "நியூயார்க்கில் ஒரு வருடத்தில் 80,000 கருச்சிதைவுகள் செய்யப்பட்டன. பிரான்சில் மாதம் ஒன்றுக்கு 36,000 கருச்சிதைவுகள் செய்யப்பட்டன. செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் ஐந்து ஆண்டுகளில் கருச்சிதைவு இரண்டு மடங்காகியுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நமது தலைமுறையினரை முடமாக்கி நாசப்படுத்திவரும் வாழ்க்கையின் இன்றைய நிலையை எதிர்த்து நாம் போராடுவதைவிட, மேலும் சிறப்பாக மேலும் ஐக்கியத்துடனும், உணர்வுப்பூர்வமாகவும், உறுதியுடனும் அவர்கள் ஏன் போராடக் கூடாது?

விவசாயி, சிறு கைத்தொழில் செய்பவர், அறிவாளி, ஆகியோருடைய குட்டிப் பூர்சுவாக்களின் உளப்பாங்கிற்கும், பாட்டாளியின் உளப்பாங்கிற்கும் இடையேயுள்ள தீவிரமான வித்தியாசமாகும் இது. குட்டி பூர்சுவா தான் அழிவை நோக்கி போய்க் கொண்டிருப்பதையும்...... கதியில்லாமல் அழிந்து வரும் அதன் எதிர்காலம் பற்றி நம்பிக்கையற்ற சோர்வும், கோழைத்தனமும் கொண்ட ஒரு வர்க்கத்தின் பிரதிநிதியாக அவன் இருக்கின்றான். செய்வதற்கு ஒன்றும் இல்லை.... நமது மனவேதனையை, கடுமையான உழைப்பை, நமது வறுமையை, நமது கேவலத்தை அனுபவிக்க குறைந்த எண்ணிக்கையில் குழந்தைகள் இருந்திருக்கக் கூடாதா? என்பதுதான் குட்டிப் பூர்சுவாவின் அழுகுரல்.

வர்க்கப் பேதம் பெற்ற தொழிலாளியின் கண்ணோட்டம் இதற்கு முற்றிலும் மாறுபட்டது. இவ்வழுகுரல்கள் எவ்வளவு மனப்பூர்வமாகவும், உளமார்ந்ததாகவும் இருந்த போதிலும் அவற்றால் தன் உணர்வு மழுங்கடிக்கப்படுவதை அவன் அனுமதிக்க மாட்டான்.... **நாம் நன்மைக்குரியவர்கள். போராடுவதற்காக நாம் கற்றுக் கொள்ள ஆரம்பித்து விட்டோம், வேகமாகக் கற்று வருகிறோம்....நமது குழந்தைகள் நம்மைவிட நன்றாகப் போராடுவர். அவர்கள் வெற்றியும் பெறுவர்....** 'நமக்குக் குழந்தைகள் இல்லையென்றால் அந்த அளவிற்கு நல்லதாகப் போயிற்று' என்று பீதிக்குரலில் அல்லது மெதுவான குரலில் வெளியிடும் உணர்ச்சியற்ற அகம்பாவம் பிடித்த குட்டிப் பூர்சுவா தம்பதிகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய நவீன-மால்தூஸ் விவாதத்திற்கு நிபந்தனையற்ற எதிரிகள்தான் நாம். இதுதான் பாட்டாளி வர்க்கத்தின் போர்க்குரல்.

கருச்சிதைவுக்கு எதிரான அல்லது கருத்தடை முறைகள் பற்றி பிரசுரங்கள் வினியோகிப்பதற்கு எதிரான சட்டங்களை நிபந்தனையின்றி தடை செய்யப்பட வேண்டுமென்று நாம் கோருவதிலிருந்து நமது மேற்சொன்ன நிலை நம்மை எந்த விதத்திலும் தடுக்கவில்லை. இத்தகைய சட்டங்களெல்லாம் ஆளும் வர்க்கங்களின் கபட நாடகமே. இந்தச் சட்டங்கள் முதலாளித்துவத்தின் புண்களை ஆற்றுவதில்லை. அவை அவற்றை ஆற்றமுடியாத புண்களாகவே மாற்றுகின்றன."[60]

கரு அழிப்புக்கான காரணங்கள் அனைத்தும் இந்த ஆணாதிக்கத்தின் கொடூரமான பண்பால் ஏற்படுபவை என்பதை மறுப்பவர்கள்தான், அந்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பண்புக்கு எதிராகப் போராட மறுப்பவர்கள்தான் கரு அழிப்பைப் பெண்ணியத்தின் கூறாக ஆண் எதிர்ப்பில் இருந்து பெண்ணை நோக்கி வைக்கின்றனர். கரு அழிப்பு ஆணாதிக்கத்தின் விளைவுகள் என்பதால் அதற்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் கோட்பாட்டு ரீதியாகக் கரு அழிப்புக்கு எதிரான பிரச்சாரத்தை ஆணாதிக்கத்துக்கு எதிரான பிரச்சாரமாக மாற்றுகின்றது. சாதாரண மக்கள் கரு அழிப்பு செய்யும் போது அந்த மக்களுக்கு இந்த ஆணாதிக்கச் சமூக அமைப்பின் துன்பத்தைப் புரியவைத்து கரு அழிப்பு தீர்வு அல்ல என்பதையும் விளக்குகின்றது. கோட்பாட்டு விளக்கம் கொடுக்கும் கருஅழிப்பு வாதிகள் கரு அழிப்புக்கான ஆணாதிக்கப் பண்பை எதிர்த்து கரு அழிப்பைத் தடுப்பதுக்குப் பதில் நியாயப்படுத்துவதன் மூலம் எப்படி கரு அழிப்புக்கான ஆணாதிக்கக் கூற்றைப் பாதுகாக்கின்றனர் என்பதை அம்பலப்படுத்துவதில் பாட்டாளி வர்க்கம் உறுதியாகப் போராடும்.

கரு அழிப்பைச் சட்டவிரோதமாகச் செய்யும் போது, அதற்குத் தண்டனையை கொடுக்கும் போது அதைப் பாட்டாளி வர்க்கம் எதிர்த்து இந்த ஆணாதிக்கக் கொடுமையால் ஏற்பட்ட இந்த அவலத்தை இந்தச் சட்ட அமைப்பு பாதுகாக்கின்றது என்பதை அம்பலப்படுத்தும். அதேபோல் கரு அழிப்புக்குச் சட்ட அங்கீகாரம் அரசு கொடுக்கும் போது இது எப்படி கரு அழிப்புக்கான ஆணாதிக்க காரணத்தைப் பாதுகாக்கின்றது என்பதையும் அம்பலப்படுத்தும்.

கரு என்பது ஆணுக்கு எதிரான பெண்ணின் உடல் சார்ந்த சுதந்திரமான விடயமல்ல. ஆண் பெண்ணின் சேர்க்கையில் உருவாகும் கரு ஆண் - பெண் இருவரின் பங்களிப்பில் உருவாகின்றது. இதைப் பெண்ணின் உடல் தாங்குகின்றது என்பது இயற்கையின் தேர்வு. இதை ஆண் பெண் மீது திணித்ததல்ல. ஆனால் ஆணாதிக்கச் சிந்தனை சார்ந்த உணர்வு அதைப் பெண் மீது சுமையாக மாற்றுகின்றது. இதை ஆணாதிக்கச் சிந்தனைக்கு எதிராகக் குழந்தையின் பிறப்புக்குப் பிந்திய வாழ்வு மீதாக மாற்றியமைக்கப்பட போராட வேண்டுமே ஒழிய ஆணுக்கு எதிராகப் பெண்ணை நிறுத்துவது சமூகச் செயல்பாட்டை மறுக்கும் புதிய உலகமயமாதல் ஆணாதிக்கக் கண்ணோட்டமாகும். இதில் ஆண் - பெண் உறவின் பின்னால் உருவாகும் கருவின் மீதான முடிவைப் பெண்ணும் சரி, ஆணும் சரி எடுக்கமுடியாது. ஏனெனில் அது மூன்றாவது உயிரொன்றின் விடயமாகி விடுகின்றது.

கடந்துவந்த சமூகங்கள் பலவற்றில் குழந்தைகள் இயற்கையின் சீற்றத்தைத் தடுக்கவும், மனிதர்களின் வாழ்வு தளைக்கவும் பலிகொடுக்கப்பட்டனர். இது பல வரலாறுகளில் பல ஆயிரம் பேரைப் பலி கொடுத்ததற்கு உறுதியான ஆதாரங்கள் இருக்கின்றன. அதாவது வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் தங்கள் வாழ்வைப் பாதுகாக்க இதை நியாயப்படுத்தினர். தமது வாழ்வில் ஏற்படும் பக்க விளைவுகள் பற்றி அறிவின்றி அல்லது அறியாமையில் அல்லது ஏமாற்று மோசடிக்காரர்களின் சொகுசு பிழைப்பிற்குக் குழந்தைகளைப் பலி கொடுத்தனர். இதை இன்று நாம் காட்டுமிராண்டித்தனம் என்று அறிவோம். அதே போல் கருவில் உள்ள குழந்தையைப் பெண் கொல்ல உரிமை உண்டு என்பது அதற்கு எந்த விதத்திலும் குறைவானதல்ல. ஆணாதிக்கத்தால் பெண்ணின் இருண்ட வாழ்க்கையைப் போக்க





குழந்தையைப் பலி கொடுத்து ஆணாதிக்கத்தை விட்டுப் பெண்கள் வெளியே வந்தார்களா? அல்லது வரலாறு முழுக்க கோடி கோடியாகக் கருவில் அழிக்கப்பட்ட போது அத்தாய்மார்கள் ஆணாதிக்கத்துக்கு வெளியில்தான் வாழமுடிந்ததா? இல்லை. ஒருக்காலும் இல்லை. அதே ஆணாதிக்க நுகத்தடியின் கீழ் துன்பம் தொடர்வதாகவே இருந்தது, இருக்கின்றது. இன்று குறைவாகக் குழந்தை பெற்றால் வறுமை ஒழியும். இதன் மூலம் குழந்தையின் அனைத்து ஆரோக்கியமும் கிடைக்கும் என்ற விளம்பரங்களை, கோட்பாட்டு விளக்கங்களை ஏற்று கருத்தடைச் செய்தவர்களுக்கு, வறுமை ஒழிந்ததா? இல்லை. மாறாக அதிகரித்து செல்லுகின்றது. இது போல் தான் கருவை அழித்தவர்களின் நிலையும் உள்ளது.

பெண்ணின் உரிமை என்பது பின் உரிமை என்பது கூட ஆணாதிக்கச் சமூகத்தில் ஆணாதிக்க எல்லைக்குள்தான் உயிர் வாழ்கின்றது. மேற்கிலும், மூன்றாம் உலகின் மேட்டுக்குடியிலும் பூர்சுவா ஆணாதிக்க ஏகாதிபத்தியப் பண்பாட்டுக் கலாச்சாரச் சிந்தனை வட்டத்துக்குள் தான் ஒவ்வொரு பெண்ணும் கரு அழிப்பைச் செய்கின்றாள். வறிய மக்கள் மீது கரு அழிப்பு ஆணாதிக்க வடிவில் மேட்டுக்குடியால் ஏகாதிபத்திய வடிவில் திணிக்கப்படுகின்றது. பெண் சுதந்திரமாக ஏகாதிபத்தியச் சிந்தனை தளத்துக்கு வெளியில் சிந்திக்க முடியாது.

அப்படி சிந்திக்க முடியுமெனின் அது ஏகாதிபத்தியத்துக்குச் சார்பான சிந்தனையிலும், பாட்டாளி வர்க்கத்திற்கு எதிரான சிந்தனையிலும் தான் சிந்திக்க முடியும். இவ்வுலகில் எதிரானது என்பது பாட்டாளி அல்லது முதலாளி என்ற எல்லையில் மட்டுமே சாத்தியம். மற்ற வர்க்கங்களில் முதலாளி அல்லது பாட்டாளியின் சார்பு அதிகமாக அல்லது குறைவாக இருக்கும். ஏகாதிபத்திய இலாபநோக்கிலான மருத்துவக் கொள்கை, ஜனத்தொகை கொள்கை, குடும்பக் கொள்கை... போன்றவற்றைத் தாண்டி பெண்ணின் கரு அழிப்பு நடப்பதில்லை. குறைந்த பட்சம் பெண்ணின் உரிமையாக இருந்தாலும், பெண்ணின் உடல் சார்ந்த விடயமாக இருந்தாலும், அது இந்த ஏகாதிபத்திய அமைப்புக்குட்பட்டது என்பது அல்லவா உண்மை. இங்கு சுதந்திரம் என்பது ஏகாதிபத்தியச் சமூக அமைப்பிற்கு வெளியில் பெண்ணிடம் தனித்து எப்படி இருக்கமுடியும்? இதை எந்தப் பெண்ணியல்வாதியும் கூறுவதில்லை. **சமூகத்துக்கு (ஆண் - பெண்) வெளியில் சுதந்திரம் என்பது கற்பனையானது.** இங்கு ஆணும் சரி, பெண்ணும் சரி சுதந்திரமாகத் தனித்துவமாக வாழமுடியாது. இங்கு சுதந்திரம் என்பது ஆணாதிக்கத்துக்கு உட்பட்டது. இது எதிராக அல்லது ஆதரவாக மட்டுமே இருக்க முடியும். இங்கு ஆணாதிக்கத்துக்கு எதிரானது என்பது ஆணாதிக்க விளைவுக்குக் காரணமான ஆணாதிக்கத்தை எதிர்த்து போராடுவதே ஒழிய, விளைவுகளைத் தலையில் வைத்து கூத்தடிப்பதுதல்ல.

கூரியர் பத்திரிக்கை செய்தியொன்றில் உலகில் 100 ஆண்களுக்குப் பெண்கள் 106 ஆக இருக்க, சீனா, இந்தியா, பாகிஸ்தான், கொரியா போன்ற நாடுகளில் இது 94 ஆக இருக்கின்றது. இது கொரியாவில் 1982-இல், 94 பெண்களாக இருந்தது 1989-இல் 88-ஆகக் குறைந்துள்ளது. அதாவது சிசுக் கொலை, கருஅழிப்பு காரணமாக ஆசியாவில் 10 கோடி பெண்கள் காணாமல் போயுள்ளனர். கட்டற்ற உலகமயமாதல் பெண்களை ஆணாதிக்கமயமாக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளதுடன், அதன் அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆணாதிக்கச் சமூகக் கண்ணோட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துகின்றது. இந்த நிலையில் கரு அழிப்பைப் பெண்ணின் உரிமையென்றும், கரு அழிப்பைப் பெண்ணின் சுதந்திரம் என்றும் கூறும் ஆணாதிக்கப் பூர்சுவா கோரிக்கையின் பின்னால், மௌனமாகப் பெண்கள் கோடி கோடியாகக் காணாமல் போய்விடுகின்றனர்.

இந்தக் கூத்தடிப்புகளின் சில பக்கங்களை மேலும் பார்ப்போம். அமெரிக்காவின் ஆய்வு நிறுவனம் ஒன்றின் அறிக்கையில், இந்தியாவில் 10 இலட்சம் பெண் குழந்தைகளை 1981 முதல் 1991 வரை கருவில் அழித்துள்ளனர். இதுபோல் சீனாவிலும் பத்து இலட்சம் பெண் குழந்தைகளைக் கருவில் வைத்து அழித்துள்ளனர். இந்தியாவில் 1981 முதல் 1991 வரையில் 4 முதல் 6 வயது வரையிலான 40 இலட்சம் குழந்தைகள் பல்வேறு காரணங்களால் காணாமல் போயுள்ளனர்.[55] சீனாவில் வருடம் ஐந்து இலட்சம் பெண் சிசுக்கள் கருவில் வைத்தே கொல்லப்படுகின்றனர். (16.7.1991)[6] யூனிசேவ் அறிக்கையின் படி நாலு கோடி பெண்கள் இந்தியாவில் காணாமல் போயுள்ளனர். இது கருவிலும், கருவிலிருந்து பிறந்த பின்னும் அழிக்கப்பட்டதால் நிகழ்ந்துள்ளது. உலகில் ஜனத்தொகை பிறப்பால் 100 ஆணுக்கு 106 பெண்ணாக இருக்க இந்தியாவில் 94 ஆக உள்ளது.[45] ஆப்பிரிக்காவில் 1980-இல், ஆண் பெண் விகிதம் 1,000 ஆண்களுக்கு 1,015 பெண்கள் இருக்க, இந்தியாவில் 931 ஆக இருக்கின்றது.[5]

இன்று பெண்களை இழிநிலையாகக் கருதுவதுடன் பெண் என்றால் கருவில் அழிப்பதும், பிறந்தபின் கொலை செய்துவிடுவதும் என்ற நிலை வேகமாகப் பரவிச் செல்கின்றது. உதாரணமாகச் சேலம் மாவட்டத்தில் 1,250 குடும்பத்தை எடுத்து ஆய்வு செய்த போது 750 குடும்பத்துக்கு ஒரு பெண் குழந்தை மட்டுமே உயிர்வாழ்கின்றது என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.[48] இலங்கையில் 1989 முதல் 1993 வரையான காலத்தில் பதிவான கருஅழிப்புகளில் பெண் குழந்தை எனத் தெரிந்து 4,000 பெண்கள் கருவிலேயே கொல்லப்பட்டனர். (28.8.1994)[27]

NAGO DE SARVEY என்ற ஜப்பானிய ஆய்வு நிறுவனம் 1969-இல், செய்த ஆய்வு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கருக்கலைப்பு செய்த பெண்களில் முப்பது சதவீதத்தினர் கருக்கலைப்புக்குப் பின் பல நோய்களைச் சந்தித்துள்ளனர் என்று தெரிவிக்கிறது. இது போன்று கனடா நாட்டு ஆய்வு ஒன்றில், மூன்றில் ஒரு பெண் கரு அழிப்பின் பின் குழந்தைப் பேறே இல்லாது போயுள்ளனர். 15.7.1970 ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழில், நடந்த ஐந்து கோடி கரு அழிப்பில் பாதி சட்டவிரோதமாக நடந்தது என எடுத்துக் காட்டுகின்றது. கருஅழிப்பில் வருடம் இரண்டு இலட்சம் பெண்கள் இறக்கின்றனர்.(6.9.1998)[27]

கனடாவில் 1990-களில் 1,05,000 கருஅழிப்புகள் வருடாவருடம் நடை பெற்றது. பிறக்கும் ஒவ்வொரு 100 குழந்தைகளுக்கு 9 குழந்தைகள் கருஅழிப்புக்கு உள்ளாகின்றது.[31] மும்பாய் பகுதியில் நடந்த ஆய்வில் 8,000 கரு அழிப்பில் ஒன்று மட்டுமே உடல் ஆபத்து எனக் கருதி செய்யப்பட்டதாகும். மீதி அனைத்தும் தமக்குப் பெண் குழந்தை வேண்டாம் என்ற காரணத்தால்





அழிக்கப்பட்டன. (16.3.2000)[20] ஆணாதிக்க விளைவால் ஏற்படும் கரு அழிப்புகளால் மீளவும் பெண் பாதிக்கப்படுவது பண்பாகின்றது. பொதுவாகக் கரு கண்டுபிடிக்கும் அறிவியல் கண்டுபிடிப்பு (ஸ்கேன் மிஷின்) கருவில் குழந்தையின் பால் வேறுபாட்டை அடையாளம் கண்டு கொள்ளவும், அது பெண் எனின் அழிக்கவுமே பயன்படுகின்றது. பெண் சந்திக்கும் கொடுமைகள், பெண்ணைப் பெற்ற தாய் - தந்தை அனுபவிக்கும் சமூக நெருக்கடிகள், ஆண் வாரிசுரிமையைக் கோரும் ஆண் வழிச் சமூகம் ஆகியவை கருவிலேயே பெண்ணைக் கொன்றுவிடுவதில் தீர்வாகின்றது. இந்த வசதியற்ற வறிய பிரிவு பிறந்த பெண் குழந்தையைத் திட்டமிட்டே பட்டினி போட்டு அல்லது வேறு வழியில் கொன்று போடுகின்றது.

தாய்க்கே இருக்கக் கூடிய தாய்மையின் குழந்தை பாதுகாப்புணர்வு ஆணாதிக்கத்தால் சிதைக்கப்பட்டுப் பெண்ணின் உன்னதமான இயற்கை உணர்வுகளைக் கூட நலமடிக்க வைக்கப்பட்டுள்ளது. பெண்ணின் பாலியல் உணர்வு, இயற்கையாகவே உள்ள குழந்தை மீதான தற்காப்பு மற்றும் தன் உயிரைவிடக் குழந்தையைப் பாதுகாக்கும் உயிராற்றலான பண்பை நவீன அறிவியலும், ஆணாதிக்கக் கொடூரங்களும் சிதைத்து அதை மழுங்கடிக்கின்றது.

உலகில் நடைபெறும் பெருமளவான கரு அழிப்புகளில் பெரும்பாலானவை கருவில் பெண்பால் அடையாளத்துக்கூடாக நடப்பதைப் புள்ளிவிவரம் காட்டுகின்றது. இதனால் இந்தியா மற்றும் சீனாவில் அதிகமான பெண்கள் ஜனத்தொகையில் காணாமல் போகின்றனர். இந்த வகையில் சில வருடத்தில் கோடிக்கணக்கான பெண்கள் திட்டமிட்டே கரு அழிப்பில் கொல்லப்பட்டனர். 2000-ஆம் ஆண்டு (ஏப்ரல்) சித்திரை மாதம் மட்டும் 10,000 பெண் குழந்தைகள் கடத்தப்பட்டு, விற்பனைக்காக வைத்திருந்த போது மீட்கப்பட்டனர். மீட்டதே இவ்வளவு எனின், மீட்காதது எவ்வளவு? என்ற நிலைமை கற்பனைக்கு எட்டாத நிலையை அடைந்துள்ளது. இதைப் பற்றி கம்யூனிச எதிர்ப்புக் கோட்பாட்டாளர்கள் கவலைப்படுவதில்லை. இதைத் தடுக்க கம்யூனிசம் வன்முறையைக் கையாளும் போது மட்டுமே, இந்த ஏகாதிபத்திய எடுப்பிடிகள் குரைக்கின்றனர்.

அத்துடன் கரு அழிப்பில் ஈடுபடும் பெண்களில் இரண்டு இலட்சம் பெண்கள் இறக்கின்றனர். கரு அழிப்பில் ஈடுபடும் பெண்கள் பலவித நோய்களுக்கு ஆளாகின்றனர். பலர் கரு அழிப்புக்குப் பின்னால் கரு வளத்தையே இழக்கின்றனர். இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன?

ஆணாதிக்கப் பண்பாட்டுக் கலாச்சார பொருளாதாரச் சுரண்டல் அமைப்பால் ஏற்படும் ஆணாதிக்க விளைவைக் கரு அழிப்பு ஊடாகத் தீர்க்க முனைந்து அதன் பக்கவிளைவுகள் சிலவற்றையே புள்ளிவிபர ரீதியாகக் காண்கின்றோம். பெண் கருஅழிப்பு ஊடாக விடுதலை பெறவில்லை. மாறாக மேலும் ஆணாதிக்கப் பிடியில் அழுந்துகின்றாள். பெண் நிரந்தரமாக விடுபடவேண்டுமாயின் ஆணாதிக்கச் சுரண்டல் சமுதாயத்தை வேரறுக்க போராட வேண்டும். அதுவே ஆணாதிக்க இடைத் தீர்வுகளையும் விட பெண்ணை வரலாற்று ஒடுக்குமுறையில் இருந்து நிரந்தரமாக விடுவிக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 31. சிறுமிகளின் கரு அழிப்புகள்

**ஐ**க்கிய நாட்டு நிதிப் பத்திரிக்கையான பாப்பூலை வெளியிட்டுள்ள செய்தியில் 15 வயது முதல் 20 வயதுக்குட்பட்ட ஒன்றரைக் கோடி பெண்கள், ஒவ்வொரு வருடமும் குழந்தையைப் பெற்று எடுக்கின்றனர். இதில் 15 வயதுக்குட்பட்ட பெண்களின் கருஅழிப்பு மற்றும் கருச்சிதைவு பற்றிய தரவுகள் உள்ளடங்கவில்லை.[31]

திருவனந்தபுர மருத்துவ மனையில் நடக்கும் கரு அழிப்பில் 12 சதவீதம் திருமணம் ஆகாத பெண்களுக்கு நடக்கின்றது. சுகாதார அமைச்சகத்தின் தகவல் படி, 1997-இல், நடந்த 41,000 கரு அழிப்பில் 21.7 சதவீதக் கரு அழிப்புகள் 15 வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கு நடந்துள்ளது. (23.9.1998)[34]

இந்தியாவில் **"டீன் ஏஜ் அபார்ஷன்கள்", "ஆபத்தின் பிடியில் இளமைப் பருவம்"** என்ற தலைப்புகளில் தில்லியில் 1994-இல், சிறுமிகளின் கரு அழிப்பு 676-ஆக அதிகரித்தது. இது 1991-இல், 278 மட்டுமேயாகும். சென்னை மருத்துவ மனையொன்றில் செய்த 16,000 கரு அழிப்பில் 20 சதவீதம் திருமணம் செய்யாத சிறுமிகளுக்கு நடந்துள்ளது. மும்பாய் பர்ல் சென்டர் மருத்துவமனையில் நடந்த 25,000 கரு அழிப்பில் 15 சதவீதம் சிறுமிகளுக்கு நடந்தது ஆகும். (6.4.1995)[34]

கருஅழிப்பில் கூட ஏகாதிபத்தியத் தலையீடுகள் எப்படி ஊக்கியாகச் செயல்படுகின்றது எனப் பார்ப்போம். இந்தியாவில் பஞ்சாப்பும், ஹரியானாவும் ஏகாதிபத்தியத்தால் திணித்த பசுமைப் புரட்சியை அதிகம் பின்பற்றிய மாநிலங்கள் ஆகும். இங்குதான கரு அழிப்பும் வேகமாக அதிகரித்துள்ளது. ஏகாதிபத்தியம் விவசாயத்தில் கருஅழித்து உற்பத்தியைச் சிதைத்தது போல், மனிதனின் இயற்கை வளத்தைச் சிதைப்பதிலும் ஆழமாக ஊடுருவியது. 1978 முதல் 1983 வரை பெண் சிசு என அடையாளம் கண்டு 78,000 கருக்கலைப்புகள் நடந்துள்ளன.

சிசுவில் ஆண், பெண் தெரிவைக் கண்டறியும், முதல் மருத்துவமனை இந்தியாவிலே பஞ்சாபில்தான் முதன்முதலில் தொடங்கப்பட்டது. பஞ்சாபிலுள்ள பெண் மருத்துவர்களில் 84 சதவீதத்தினர் கருக்கலைப்பு மருத்துவராகத் தொழில் செய்கின்றனர். இதைச் சமூகத் தொண்டு என விளக்கமும் கொடுக்கின்றனர்.

தமிழகத்தில் நிலமற்ற கள்ளர்கள் கடந்த 15 ஆண்டுகளாகத் தமது பெண் குழந்தைகளை ஒடுக்கி வருகின்றனர். கடந்த 25 வருடமாகத்தான்





இச்சமூகத்தில் சீதனமும் நுழைந்தது. பசுமைப் புரட்சியும், அதன் பண்பாடும் இதன் ஊக்கியாகியது. ஆணுக்கு 13 ரூபாய் கூலியையும், பெண்ணுக்கு 6 ரூபாய் கூலியையும் வழங்கியதால் ஆண் - பெண் பிளவு ஏற்பட்டது. ஏகாதிபத்திய ஆணாதிக்கப் பசுமைப் புரட்சியால் ஆண் - பெண் பிளவை நிரந்தரமாக்கியும், அதிக சீதனத்தைக் கோரியும், பெண்ணின் உழைப்பைச் சமூகப் பெறுமதி அற்றதாக்கியும் பெண்களைக் கொடுமைபடுத்தியது. இவையனைத்தும் ஏகாதிபத்திய ஆணாதிக்கப் பசுமைப் புரட்சியால் விளைந்தது ஆகும்[5]

ஏகாதிபத்தியப் பண்பாடும், உலகமயமாதல் நாகரிகமும் பொருளாதார ரீதியில் ஊடுருவுகின்ற போது அதுவே சமூகத்தைச் சிதைக்கத் தொடங்குகின்றது. சிறுவர், சிறுமிகளின் அறிவு என்பது மழுங்கடிக்கும் இன்றைய ஏகாதிபத்தியப் பண்பாடான சீரழிவுப் பாலியலும், விளம்பரத்தின் ஊடாக நுகர்வுப் பண்பாடும் போதைகளாகி வக்கிரமாக வீங்கிவிடுகின்றது. ஆரோக்கியமான பாலியல் கல்விக்குப் பதில், பாலியல் வக்கிரத்தை பெற்றுக் கொள்பவர்கள் வயதுக்கு மீறிய பாலியல் நடத்தையில் ஈடுபடுகின்றனர். திரைப்படம், விளம்பரம், செய்திப் படங்கள் என எங்கும் இந்த உறவைத் தூண்டும் ஊடகங்கள் எம்முன் சமூகமயமாகியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டு, அதன் சீரழிவுக்குள்ளாகும் சிறுமிகள் கரு அழிப்புக்கு உள்ளாவது அதிகரிக்கின்றது.

அண்மையில் பிரான்சில் கணிசமான சிறுமிகளின் கருத்தரிப்பதைத் தொடர்ந்து பாடசாலையில் இலவசமான கருத்தடை, கருஅழிப்பு மாத்திரை வழங்க அரசு முடிவு எடுத்துள்ளது. கரு தரிப்பதற்கான காரணத்தைப் புரிந்து இந்த ஏகாதிபத்தியப் பண்பாட்டுக் கலாச்சாரத்தை மாற்றி அமைப்பதற்குப் பதில் இதை வளர்த்தெடுக்கக் கருஅழிப்பு குளிசையை (மாத்திரையை) வழங்கி மேலும் சமூகத்தை இதே பாதையில் கழுத்தைப் பிடித்து தள்ளுகின்றனர். இதுவே உலகின் பல பாகங்களில் பொதுவான நிலைமையாக உள்ளது. சிறுமிகள் கருத்தரிப்பது என்பது எந்த நாட்டுக்கும் விதிவிலக்கற்ற விடயமாக உள்ளது. நாலு அல்லது ஐந்து வயதிலேயே மேற்கில் பாலியலை வக்கிரமாகக் குழந்தை புரிந்து கொண்டு அபிப்பிராயமும் அல்லது விளக்கமும் தருவதற்குக் கற்றுக் கொள்கின்றது.

பாடசாலை மாணவன் ஒருவன் நான் வேலை செய்யும் இடத்தில் பயிற்சி பெறும் மாணவனாக வந்த போது, அவன் எமது நாட்டு 'நீலப்படம்' (புளுபிலிம்) வேண்டும் என்றான். நான் எம் நாட்டில் அது இல்லை, அத்துடன் அது சட்டப்படி தடை செய்யப்பட்டது என்ற போது, அவன் **"இது சர்வாதிகாரத் தன்மையான சமூகம் என்றும் ஜனநாயகமற்ற தன்மை"** என்றும் கூறினான். இந்த வகையில்தான் பாலியலையும், ஜனநாயகத்தையும், சர்வாதிகாரத்தையும் அவனுடைய இளமைக்காலம் புரிந்து வைத்துள்ளது. ஆரோக்கியமான பாலியல் கல்விக்குப் பதில் ஏகாதிபத்திய நுகர்வுப் பொருளாதாரப் பண்பாட்டிற்கு இசைவாகப் பாலியல் வக்கரித்து போகின்ற போது அதனால் ஏற்படும் பண்பாடு, கலாச்சாரம் சிறுவர், சிறுமிகளின் பாலியல் வக்கிர நடத்தைகளுக்கும், சிறுமிகளின் கருத்தரிப்புகளுக்கும் வித்திடுகின்றது. இதை மேலும் புள்ளி விபரமாகச் சிறுவர் பகுதியில் ஆராய்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 32. சிசுக் கொலைகள்

இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டில் "மடிவது மானுடம்" என்ற தலைப்பில் சேலம் மாவட்டத்திலுள்ள சில பகுதிகள் ஆய்வுக்குள்ளானது. 1,250 குடும்பங்களை ஆராய்ந்த போது 641 குடும்பங்கள் (51 சதவீதம்) பெண் சிசுக் கொலையைச் செய்துள்ளது தெரிய வந்தது. (6.10.1992)[34] "தொடரும் தொட்டில் கொலைகள்" என்ற தலைப்பில் சேலம் மாவட்டத்தின் பெண் பிறப்பு வீதத்தை ஆய்வு செய்த **"மெட்ராஸ் ஸ்கூல் சோஷியல் வொர்க்"** அறிக்கையின் படி 1991-இல், 1,000 ஆண்களுக்குப் பெண்கள் எண்ணிக்கை 900 பேரில் இருந்து 952 பேர் வரை இருந்தது. அதே எண்ணிக்கை 1995-இல், 1,000 ஆண்களுக்குப் பெண்கள் எண்ணிக்கை 764 பேரில் இருந்து 575 ஆகப் பெண்கள் எண்ணிக்கை குறைந்து விட்டது. (6.8.1995)[34]

சிசுக்கொலைகள் பொதுவாக ஏழைப் பெண்களுடைய அவலத்தின் விளைவாகும். கருஅழிப்பு என்பது பூர்சுவா வர்க்கத்தின் வழிமுறையாக இருக்க, சிசுக்கொலை அதற்குக் கீழ்ப்பட்ட வர்க்கத்தின் வடிவமாக உள்ளது. அறிவியல் கண்டுபிடிப்புகள் பெண் உடலின் உள ரீதியான பாதுகாப்புக்கும், வளர்ச்சிக்கும் பயன்படுத்துவதற்குப் பதில் அதுவே ஆணாதிக்கத்தின் விளைவுகளை அதற்குள் தீர்த்து மேலும் ஆணாதிக்கமயமாதலில் இவைகள் தீர்வாகின்றன.

பெண் சமுதாயத்தில் சந்திக்கும் கொடூரமான, பாதகமான வாழ்க்கைமுறை, பெற்றெடுத்த பெற்றோர்களையே கண்ணீரில் சித்திரவதை செய்கின்றது. இந்தச் சித்திரவதையைத் தாமும், வளர்ந்த பின் அப்பெண்ணும் சந்திப்பதை விட கருவில் அல்லது பிறந்தபின் கொன்று விடுவது அவர்களின் தீர்வாக உள்ளது. இந்த நிலைமைக்கு இந்த ஆணாதிக்கச் சமூகமே காரணமாகும். இதைப் பெற்றோருக்குக் கல்வியைப் புகட்டுவதன் மூலம் தடுக்கமுடியாது. ஏனெனில் கல்வி அறிவு பெற்ற பெற்றோர்கள் கருவில் வைத்தே நாகரிகமாகக் கொல்லும் பூர்சுவா கண்ணோட்டத்தைக் கொண்டு இருப்பது வெள்ளிடைமலை. சமுதாயத்தின் ஆணாதிக்கத்தை ஒழித்துக் கட்டாதவரை பெண் குழந்தைகளின் அவலம் மாறிவரும் சமூகப் பொருளதார நிலைமைக்கு உட்பட்டே தன்னை இசைவாக்கத்துக்குள்ளாகி நீடிக்கும். இதை உலகின் பல பிரதேசங்களில் காணமுடியும். சிசுக்கொலைகள் இன்று போல்





அன்றும் பல வடிவில் பல்வேறு காரணத்துக்காக நடந்துள்ளது. திருகுர்ஆனில் இருந்து பார்ப்போம்.

அத் 6.137 இல், "இவ்வாறே இணைவைப்பாளர்களின் அநேகருக்குத் தங்கள் குழந்தைகளைக் (தாங்களே) கொலை செய்வதை அவர்களுடைய இணைத்தெய்வங்கள் அழகாக்கினார்கள். இந்தக் குழந்தைகள் எதற்காக பலியிடப்பட்டது? 1. எவரும் தம் மருமகனாகி விடக் கூடாது என்ற எண்ணத்தில் பெண்ணைக் கொல்வது அல்லது குலப்போர்களில் எதிரியின் கையில் சிக்கிவிடக் கூடாது என்பதற்காக அல்லது வேறு காரணத்தால் இழிவு ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக. 2. குழந்தையைக் கடவுளின் திருப்திக்காகப் பலியிடுவது. 3. பல்வேறு மார்க்கத்தின் பேரிலும், விளக்கத்தின் பெயரிலும் கொன்றனர்."[68]

அன்று மேலே கூறியுள்ளது போல் சமுதாயத்தினுடைய நன்மையின் பெயரிலும், பாதுகாப்பின் பெயரிலும் சிறுவர் சிறுமிகள் பல காரணங்களைக் கொண்டு கொல்வது நடைமுறையாக இருந்தது. இன்று பெண் உரிமையின் பெயரிலும், ஆணாதிக்கக் கொடுமைக்கான தீர்வின் பெயரிலும், ஆணாதிக்கத் தேவையின் பெயரிலும், கருவிலும், பிறந்த பின் குழந்தையிலும் கொல்லும் வழக்கம் இன்று அதே போன்ற காரணத்தைக் கொண்டே நிகழ்த்தப்பட்டது. நிகழ்த்தப்படுகின்றது.

தனக்கு ஒரு மருமகன் வந்து விடக்கூடாது என்பதற்காகக் கொல்வது என்பது சொத்துரிமையின் பாதுகாப்பு சார்ந்து நடத்தப்பட்டது. ஆணாதிக்கம் வளர்ச்சி பெற்று ஆண் சார்ந்து சொத்து செல்லத் தொடங்கிய போது பெண் குழந்தையின் பிறப்பும், ஆணின் வருகை (மருமகன்) அந்தக் குடும்பத்தின் சொத்து கைமாறுவதைக் கோடிட்டுக் காட்டியது. இதனால் அதைத் தடுக்க பெண் குழந்தை கொல்லப்பட்டது.

எதிரியிடம் பிடிபடும் பெண்ணால் குல அடையாளம் நாசப்படுத்தப்படும் என்ற காரணத்துக்காகப் பெண் குழந்தைகளைக் கொன்றனர். அண்மையில் செர்பிய, போஸ்னியப் பெண்களின் இனத்தூய்மையைச் சிதைக்கக் கற்பழித்து, கருவை வளரவிட்டு, பெற்றுப் போட செய்த பிறகே அப்பெண்களை விடுவித்தனர். இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லரின் இனத் தூய்மை வாதமும் இதன் பாற்பட்டதே. இது வரலாற்றில் பல போர்களில் நடந்த போதும் பெண்ணைக் கொல்வது அல்லது பிறந்த குழந்தையைக் கொல்வது என்ற பல வடிவங்களை இந்த ஆணாதிக்கச் சமூகம் கையாண்டு பெண்ணினத்தைக் கொன்றொழிக்கின்றது.

பெண் வீட்டை நோக்கி ஆண் வருவதன் மூலம் சொத்தைப் பெண்வழியில் (சொத்து பெண் வழியில் பெண் குலத்துக்குச் சேர்ந்து இருந்தது.) மருமகனுக்கு முழுமையாகக் கைமாற்றுவதில் இருந்து தப்பிக்க (ஆண்வழிச் சமூகம் உருவாகிக் கொண்டிருந்தது.) சொத்துரிமையைக் கைப்பற்றிக் கொண்டிருந்த பெண்ணின் தந்தை அல்லது ஆண் சகோதரர்கள் மூலம் கொல்லப்பட்ட பெண் குழந்தைகளைப் பின்னால் சமூக வளர்ச்சியால் நிறுத்தி, பெண்ணை ஆண் வீட்டுக்கு அனுப்பிவிடுவது சிறப்பானதாக இருந்தது. முன்பு ஆண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீதனத்துடன் (இங்கு பெண்ணின் தந்தை வரும் ஆணிடம் (மருமகனிடம்) பெண்ணைக் கொடுத்து சொத்துரிமையை வாங்குவது) பெண் வீட்டுக்குச் செல்லும் முறையை மாற்றி, பெண் ஆண்வீட்டை நோக்கி செல்வதன் ஊடாகப் பெண் சீதனம் கொடுப்பது என்ற புதிய முறை புகுத்தப்பட்டது. ஆனால் இன்று இதன் இருகூறுகளும் பலவிதமான மாற்றத்துடன் பல பிரிவுகளை உள்ளடக்கி இன்று காணப்படுகின்றது. இது நீண்ட பெண்ணாதிக்கச் சமூகத்தில் இருந்து ஆணாதிக்கச் சமூகம் தோன்றி வளர்ந்த காலத்தில் ஏற்பட்ட படிமுறையான வளர்ச்சியில் சிறுக சிறுக ஏற்பட்ட மாற்றங்களே.

குழந்தைப் பலியீட்டையொட்டி மேலும் பல தகவல்களை ஆதாரமாகச் சுருக்கமாகப் பார்ப்போம். பசுபிக் பிரதேசத்திலுள்ள மலேகியூலாவில், ஒரு பெண்ணுக்குப் பிறக்கும் ஆண் குழந்தை பலியிடப்பட்டது. குழந்தை பிறந்த பின் இன்று நடக்கும் பொய்ச் சண்டைகளுக்குப் பின் ஆண் குழந்தைக்குப் பதில் பன்றிகளைப் பலிகொடுக்கும் போது ‘ஆண்களை உருவாக்கவே’[83] இப்பலி நடத்தப்படுகின்றது என்று கூறப்பட்டது. இப்பலி பல கட்டமாகப் பல உரிமையின் பெயரில் நிகழ்த்தப்படுவதுடன், கணவன் கொடுக்கும் பலி மனைவியின் சகோதரனுக்காக இருக்கின்றது. இங்கு தந்தையின் பலிக்கான பெயர் ‘மூத்தமகன்’[83] என்றே அழைக்கப்படுகின்றது. தாய்மாமன் மகனுக்குச் செய்த வஞ்சகத்தால் தாய்மாமனை மூத்தமகனின் ஆவி பாதுகாக்க இது நிகழ்த்தப்பட்டது. இது தாய்வழிச் சமூகத்தில் இருந்து தந்தை வழிச் சமூகம் தோன்றிய போது ஏற்பட்ட துரோகத்தை ஈடுசெய்ய மூத்தமகனைப் பலியிடும் சடங்கு வழக்கில் இருந்துள்ளது. தாய்வழிச் சமூகத்தில் இருந்து தந்தைவழிச் சமூகம் தோன்றிய போது ஏற்பட்ட முரண்பாட்டில் தாய் மாமனுக்குக் கொடுத்த வம்ச உரிமையைச் சில பிரதேசத்தில் ‘பிள்ளையைப் பாகம் பிரித்தல்’[6] என்று அழைக்கப்படுகின்றது. தந்தைவழிச் சமூகம் தோற்றம் பெற்ற போது தாய்வழிச் சமூக முரண்பாடுகள் பலிகள் மூலம் இட்டு நிரப்பப்பட்டது. இதன் மூலம் பூதங்கள், தேவதைகள் தோற்றத்தை உருவாக்கியது. இதன் போது பரிசுகளைக் கொடுத்துப் பெண்ணை அடைவது, பெறுவது என்று தொடங்கி தேவதைக்கான பூசைகள் என பல வடிவங்கள் உருவானது. இது இன்று பன்றி, ஆடு, மாடு என மாற்றாகப் பலி கொடுக்கப்படுகின்றது. இன்று மிருகப்பலி கொடுப்பு நீடிக்கும் வடிவங்கள் பொதுவாகக் குழந்தை பலியிட்டதற்கு மாற்றாக வந்த வடிவங்களாக உள்ளது.

கார்த்தேஜ் நகர மக்களை அகதொகிஸ்ஸினி தோற்கடித்த போது பால்தேவதையின் கோபமே காரணம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் உயர்ந்த குடும்பத்தில் இருந்து இருநூறு குழந்தைகள் இடுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிள்ளையற்றவர்கள் ஏழைகளிடம் பணம் கொடுத்து வாங்கி பலி கொடுத்தனர். இக்குழந்தைகளைப் பலிகொடுக்கப் பெற்றோர்கள் சமுதாய நலன் என்ற பெயரில் 500 குழந்தைகளைப் பலிகொடுத்தனர். தேவதையின் கையில் குழந்தையை வைத்து ஒன்றன் பின் ஒன்றாக நெருப்புக்குள் உருட்டிவிட்டுப் பலியிடப்பட்டனர். அப்போது குழந்தையின் கதறலைக் கேட்பதைத் தடுக்க இசை முழக்கம் உறுமியது. அதாவது





சுரண்டலின் சூறையாடலால் ஏற்படும் மனித அவலத்தை மூடிமறைக்க இசையும், மற்ற கலைகளும் என்ன பாத்திரத்தை ஆற்றுகின்றதோ அதையே அன்று பலியீட்டின் கொடூரத்தை மறைக்க இசை முழக்கம் உதவியது. அப்போது பெண் ஒரு சொட்டுக் கண்ணீரையோ, துயரத்தையோ வெளிப்படுத்தினால் பலி வெற்றிபெறாது என்ற நம்பிக்கை புகுத்தப்பட்டது.

500 வருடத்திற்கு முன் மெக்ஸிகோவில் நடைபெற்ற யாகத்தில் பலி கொடுக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை ‘70,000’[83] ஆகும். இதற்காக இரண்டு மைல் நீளத்திற்குப் பலிகொடுக்கும் குழந்தைகள் நிறுத்தப்பட்டனர்.

இன்று கருஅழிப்பு, சிசுக்கொலை, மிருகப்பலி எப்படி நாகரிகச் சமுதாயத்தில் காட்டுமிராண்டித்தனமாக உள்ளதோ, அதுவே அன்று சமுதாயத்தின் நலனுக்காகக் கொடுக்கப்பட்டது. இதை இன்று பெண் உரிமையின் ஊடாக ஆணாதிக்கத்துக்கு எதிராக நியாயப்படுத்தும் அரசியல் கோட்பாட்டில் ஆணாதிக்கம் புளுத்துப்போயுள்ளது.

மனித வரலாற்றில் உலகின் பல பாகங்களில் உருவான தேவதைகளை நோக்கி குழந்தைகளைப் பலிகொடுத்த ஆணாதிக்கம், பெண்களின் பாலியல் உணர்ச்சியை நலமடித்தது போல் பெண்ணினுடைய தாய்மை பண்பையும் நலமடித்தது. **தாய்மையின் பண்பு மனிதத் தன்மையில் மிகவும் சிறப்பான உட்கூறாகும்.** உயிரியல் விதிகளில், **சமூக உணர்வுகளினுடைய விசேடமாக** மனித உணர்வுகளில் தாய்மை என்பது சமூகத் தன்மையை உயர்வாகக் கொண்ட நிலையாகும். தாய்மையும் அதன் பின்னான குழந்தை வளர்ப்பிலும் பெண் என்ற தாய் தன் உயிரைவிட குழந்தையின் உயிருக்காகப் போராடி மடிவது அதன் உயர்வான உணர்வாகும். பெரியோரின் வாழ்வைவிட குழந்தையின் வாழ்வுக்கு அர்ப்பணிக்கும் பண்பு சமூகத்தன்மையின் மிக உயர்ந்த பண்பாகும். இந்தக் குழந்தை - தாய்க்கிடையில் நீடிக்கும் உறவு தனிமனித வாதத்துக்கு எதிரான சமூகத்தன்மை வாய்ந்தவை. இதனால்தான் ஏகாதிபத்தியத் தனிச்சொத்துரிமையில் தனிவாதத்தைச் (பின்நவீனத்துவ வழியில் பெரும் கோட்பாட்டுக்கு எதிரான சிறுகோட்பாடு) சமூகக் கூட்டுக்கு எதிராக நிலைநாட்ட பெண் உடல் சார்ந்து குழந்தை மீதான ஆணாதிக்கச் சிந்தனையின் வடிவமான பெண்ணின் உடல் சார்ந்த கருஅழிப்பை வேகமாக ஏற்றுச் சட்டமூலத்தைக் கொடுக்கின்றது. தாய்க்கும், குழந்தைக்கும் இடையில் ஏற்படும் சமூகப் பிளவு எவ்வளவுக்கு எவ்வளவு அகலமாகின்றதோ அந்தளவுக்குப் பெண்ணிடம் நீடிக்கும் சமூகத்தன்மையைச் சிதைப்பது உலகமயமாதல் பாதுகாப்பின் அங்கமான ஓர் ஆயுதமாகும். இந்த ஆயுதத்தைக் கோட்பாட்டு மயமாக்கிவிட்டால் சமூகச் சிந்தனைத்தளம் வறண்டு வெடிப்புகளின் பாலைவனமாகி விடுமல்லவா? இதன் மூலம் ஆணாதிக்கத்தையும் சுரண்டல் அமைப்பையும் சிதைவின்றி நீடித்து பாதுகாத்து சூறையாட முடியுமல்லவா?

உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்ட போது எல்லாம் மனிதனும் தன் வேட்டை நாய்க்குத் தமது வயதுபோன பெற்றோரைக் கொன்று உணவளித்ததைச் சார்லஸ் டார்வின் தனது நேரடி ஆராய்ச்சிகளில் உறுதி செய்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நாய்க்கு மனிதனைத் தீனியாக்குகின்றீர்களே ஏன்?" என்று டார்வின் கேட்ட போது, "நாய்கள் வேட்டைக்குப் பயன்படும். கிழவிகள் பயன்பட மாட்டார்கள்" (15-1.4)[54] என்று பதிலளித்த போது பலியீட்டின் தன்மையும், விளக்கமும் சமுதாயத்தை முன்நிறுத்துகின்றது. அத்துடன் கிழவிகளைப் பலியிட்ட போது கிழவர்கள் பாதுகாப்பைப் பெறுவதில் இருந்து மனித நலன்கள் ஆதிக்கம் பெற்ற பிரிவின் சமூக நலனை ஈடு செய்வதைக் காட்டுகின்றது.

குழந்தை பலியீட்டின் போது இந்த ஆணாதிக்கச் சமூகப் பாதுகாப்புடன், அதன் நலன் சார்ந்து பெண்ணின் தாய்மை உணர்வைப் பலிகேட்டது. ஒருதார ஆணாதிக்க மணத்தில் பெண்ணின் பாலியல் உணர்வை எப்படி ஆணாதிக்கம் தனது சொத்துரிமை பாதுகாப்பில் பலி கேட்டு அழித்ததோ அது குழந்தை பலியெடுப்பிலும் நிகழ்ந்தது. இதைப் பெண்கள் மீது நிறுவ கடமை, பக்தி, தேவதைகளின் கோபம் போன்ற பல்வேறு காரணத்தைக் கூறி, பெண்ணின் கண்ணீரைக் கூட மறுதளித்தது. பெண் குழந்தைக்காகத் தன்னை மாய்த்துப் போராடும் உயிரியல் உணர்வை ஆணாதிக்கம் மறுத்தது. பெண்ணே குழந்தையைப் பலியிட கூட்டிவரும் பண்பாட்டுக் கலாச்சாரத்தை ஏற்படுத்தியது. பலியை நேரடியாகப் பார்வையிட நிர்ப்பந்தித்தது. அங்கு எந்தவித எதிர்ப்பும் எழுப்பாத வண்ணம் பெண்ணின் உணர்ச்சிக் கூறுகள் சிதைக்கப்பட்டது.

இதன் போது குழந்தைகளின் கதறல்கள், தாய்மையினுடைய ஆற்றாமையின் ஆணாதிக்க வெளிப்பாடாகவே பாவம் என்ற சொல் இந்தச் சமுதாயத்தில் தோற்றம் பெற்றது. இந்தப் பாவம் என்ற அனுதாபம் குழந்தை பலியிடலுக்கு எதிர்ப்பாக வளர்ச்சி பெற்றது. அதன்பின் குழந்தை பலியிடல் படிப்படியாக நின்று அதனிடத்தில் மிருகப்பலி மாற்றீடானது.

ஆனால் இன்று கருஅழிப்புகள், சிசுக்கொலைகள் போன்றவற்றைப் பெண் செய்வதன் மூலம் தாய்மையின் உட்கூறு தொடர்ந்து நலமடிப்பதைத் தடுத்து விடவில்லை. பெற்ற தாயே இன்று பெண் குழந்தையைக் கதறவிட்டு கொன்று போடும் மன உளைச்சலை இந்த ஆணாதிக்கம் சகித்துக் கொள்ளச் செய்கின்றது. கருவில் வைத்து கொல்வதும் (இதன் நலன் எதுவாக இருந்தாலும்) பிறந்தபின் கொல்வதும் பெண்ணின் தாய்மை மீதான ஆணாதிக்கத்தின் கொடூரமான வக்கிரமே. பாலியல் உணர்வை, தாய்மை உணர்வைப் பெண்ணுக்கு மறுக்கும் இந்தச் சமுதாயத்தில் அது எந்த வடிவில் வந்தாலும் பெண்ணுக்கு எதிரான தன்மை காணப்படுகின்றது. ஆணாதிக்கம் கட்டமைக்கும் இந்தச் சமுதாயத்தில் அதன் எல்லைக்குள் காணமுயல்கின்ற தீர்வுகள் ஆணாதிக்கச் சிந்தனைத் தளத்தால் ஊடுருவிப் போயுள்ளது. இதைப் பெண்களின் அமைப்புகள் பெண்ணின் நலன் என்று அழைத்து கோரும் போதுகூட முன்னாள் பலிகளுக்கு எந்த விதத்திலும் குறைந்தவையல்ல. ஆணாதிக்கம் அற்ற சமுதாயத்தில் இது நிலவமுடியாது என்பதைப் புரிந்து கொள்வதும், அதன் வழியில் மக்களை வென்றெடுப்பதும் அரசியல் பணியாகப் பெண்கள் அமைப்பு புரியாதவரை இந்தப் பெண்ணியம் ஆணாதிக்க எல்லைக்குள் தீர்வுகளை ஆணாதிக்க வழியில் கோருவதாகவே எஞ்சும்.





# 33. விவாகரத்துகள்

அமெரிக்காவில் **பால் அமாடோ** என்ற பல்கலைக் கழகப் பேராசிரியர் விவாகரத்து தொடர்பாகச் செய்த ஆய்வில் சேர்ந்து வாழும் குடும்ப விவாகரத்தை விட, திருமணம் செய்த குடும்ப விவாகரத்து 300 சதவிகிதம் அதிகமாகும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆஸ்திரேலிய பத்திரிக்கை **சிட்னி மார்னிங் ஹெரொஸ்டு** இது போன்ற ஒரு தகவலையும் வெளியிட்டுள்ளது. திருமணத்தில் உருவாகும் குடும்பத்தின் கடமை, உரிமை தொடர்பான கோரிக்கை அதிகமாக, தனிமனித வாதம் முதன்மை பெற்று சமூகக் கூட்டை மறுத்து பிரிவும், முரண்பாடுகளும் திருமணத்தின் பொதுப்பண்பாகின்றது. சேர்ந்து வாழும் குடும்பத்தில் கடமை, உரிமை பின்தள்ளப்பட்டுக் கூட்டுவாழ்வு முதன்மை பெறுவதால் நட்பும், சேர்ந்து வாழும் சமூகத்தன்மையும் அதிகரிக்கின்றது.

பாலியல் திருப்தி இன்மையால் விவாகரத்து செய்வோரைப் பார்ப்போம்.[69]

அட்டவணை - 25

| நாடுகள் | சதவீதம் |
|---|---|
| பிரான்ஸ் | 31% |
| கிரீஸ் | 22% |
| அயர்லாந்து | 21% |
| ஜெர்மனி | 20% |
| லுக்ஸ்சம்பேக் | 20% |
| ஸ்பெயின் | 18% |
| இத்தாலி | 18% |
| இங்கிலாந்து | 18% |
| போர்ச்சுக்கல் | 17% |
| டென்மார்க் | 17% |
| பெல்ஜியம் | 16% |
| நெதர்லாந்து | 13% |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலே உள்ள புள்ளி விபரம் பாலியல் திருப்தியின்மையால் நடக்கும் விவாகரத்துகளைச் சுட்டிக் காட்டுகின்றது. இது இன்று பாலியல் பற்றிய ஏகாதிபத்திய வியாபார உத்திக்குள் பாலியல் வக்கிரத்தை அடையும் பாய்ச்சலில் கூட, விவாகரத்தில் பாலியல் அம்சம் மிகத் தாழ்வாகவே உள்ளது. பாலியல் பற்றிய சிறந்த கல்வி, மனிதரை மனிதர் மதிக்கும் கம்யூனிசச் சமூகத்தில் சுயநிர்ணய உரிமையைக் கையாள்வதில் உள்ள சமூகம் பற்றிய பார்வையில் பாலியல் பிளவு என்பது இல்லாது அருகிவிடும்.

பெண்ணியல் அமைப்புகள் பொதுவாகப் பாலியலை முதன்மைப்படுத்தி விவாகரத்தை ஊதிப்பெருக்கிக் காட்டும் வாதங்களை இப்புள்ளிவிபரம் தகர்க்கின்றது. ஒருதார மணத்தில் பாலியல் அம்சம் ஆண்சார்ந்து இருப்பதால் பெண்ணின் பாலியல் உணர்வைச் சூறையாடியது. முதலாளித்துவத்திற்கு அடுத்த ஏகாதிபத்தியமயமாதலால் பெண் ஆனாதிக்கமயமாகின்றாள். இந்நிலையே பெண்ணை விபச்சாரத் தளத்திற்குள் தள்ளியது. இது பெண்ணின் பாலியல் அம்சத்தில் புதிய நிலையை அடைந்துள்ளது. பெண் ஆணைப் போல் நுகர்வது சாத்தியமான ஏகாதிபத்திய நாடுகளில், பெண் குடும்பத்தில் அல்லது வெளியில் பாலியல் என்பது நேரடியான ஆணாதிக்க விடயமாக ஆண் சார்ந்திருப்பது அற்றுச் செல்லுகின்றது. மாறாக ஆணாதிக்கம் நுகர்வாகப் பரிணாமித்தலில் இருந்து பெண் சந்தையின் ஒரு பண்டமாக இருக்கும் போது அவளின் ஆணாதிக்க நிலை அவளை நுகரக் கோருகின்றது. இது ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் செய்யமுடியாத போக்கில் பாலியல் நெருக்கடி புதிய வடிவமாக மாறுகின்றது. அதாவது ஆணை விபச்சார நிலைக்குக் கீழ்ச் சென்று அடையும் நுகர்வுப் பண்பாடு, பாலியலின் புதிய நெருக்கடியாகும்.

குடும்பத்தைப் பொறுத்த வரையில் ஏகாதிபத்திய நுகர்வுக் கலாச்சாரமும், பலதை நுகரக் கோரும் பாலியல் பண்பாடும் குடும்பத்தின் விவாகரத்தில் பாரிய விளைவை ஏற்படுத்தவில்லை. பாலியல் திருப்தியின்மையைக் காரணமாகக் கூறிய விவாகரத்துகள், மற்ற காரணத்தைவிட மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே நிகழ்கின்றது. பாலியலை முதன்மைப்படுத்தும் ஆணாதிக்கப் பெண்ணியக் கோட்பாடுகள் எதார்த்தத்தில் தவறானவை என்பதை நிறுவுகின்றது. ஏகாதிபத்திய நுகர்வுப் பாலியல் அல்லாத சமுதாயத்தில் பாலியல் விவாகரத்து என்பது வக்கிரமற்ற தன்மையில் அநேகமாக இவை விபத்தாகவே இருக்கும். இன்று விபத்திற்குப் பதில் நுகர்வு விவாகரத்தாகப் பாலியலில் நீடிக்கும் வரை, பாலியல் திருப்தி என்பது ஆண் பெண்ணுக்கு இந்த ஆணாதிக்கச் சமுதாயத்தில் தொடர்வது நீளும். நாம் விவாகரத்துத் தொடர்பாகத் தொடர்ந்து ஆராய்வோம்.

அட்டவணை - 26

| வகை / நாடு | பெல்ஜியம் | ஜெர்மனி | கிறீஸ் | பிரான்ஸ் | இத்தாலி | போர்ச்சுக்கல் | இங்கிலாந்து |
|---|---|---|---|---|---|---|---|
| 1970-1974 சராசரி | 0.8% | 1.5% | 0.4% | 0.9% | 0.4% | 0.1% | 1.6% |
| **1995** | 3.5% | 2.1% | 1.1% | 2% | 0.5% | 1.2% | 2.9% |





10,000 பேருக்கான விவாகரத்தைப் பார்ப்போம்.[70]

அட்டவணை - 27

| நாடுகள் | எண்ணிக்கை |
|---|---|
| ஸ்பெயின் | 8 |
| ஜெர்மனி | 18 |
| பிரான்ஸ் | 20 |
| ஆஸ்திரியா | 21 |
| பெல்ஜியம் | 21 |
| பின்லாந்து | 24 |
| டென்மார்க் | 24 |
| சுவீடன் | 25 |
| இங்கிலாந்து | 30 |

பிரான்சில் நடக்கும் விவாகரத்தைப் பார்ப்போம்.[52] பக்கம்-29

அட்டவணை - 28

| ஆண்டுகள் | மொத்த விவாகரத்துகள் | 1970-இல் விவாகரத்து குறியீடு 100 எனில் | 100 திருமணத்துக்கு விவாகரத்துகள் | 1970-இல் 100 எனில் சதவீத வளர்ச்சி |
|---|---|---|---|---|
| 1970 | 37,447 | 100 | 11.3 | 100 |
| 1975 | 54,306 | 145 | 16.0 | 141 |
| 1980 | 79,962 | 213 | 22.5 | 199 |
| 1985 | 1,05,962 | 283 | 30.0 | 265 |
| 1986 | 1,06,709 | 285 | 30.6 | 271 |
| 1987 | 104,997 | 280 | 30.5 | 270 |
| 1988 | 104,234 | 278 | 30.8 | 273 |

பிரான்சின் விவாகரத்து.[71]

அட்டவணை - 29

| ஆண்டு | மொத்த விவாகரத்துகள் |
|---|---|
| 1989 | 1,03,600 |
| 1993 | 1,09,200 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரான்சில் சட்ட அமைப்பை நாடுவது யார் எனப் பார்ப்போம்.[72]

அட்டவணை - 30

| எதற்காக? | சதவீதம் |
|---|---|
| விவாகரத்து | 28% |
| களவு | - |
| விபத்து | - |
| ஏமாற்று | 11% |
| சொத்துரிமை | 11% |
| வாங்குவது,விற்பது | 10% |
| பத்திரிகைக்கு எதிராக | 9% |
| வேலைப் பிரச்சனை | 8% |
| மற்றவை | 23% |

மேற்கில் விவாகரத்துகள் 1970-களின் பின்பு வேகமாக அதிகரிக்கின்றது. நேரடியாக ஆணாதிக்கத்துக்கு எதிரான விவாகரத்துரிமை ஆணாதிக்கம் அல்லாத துறைக்குள் ஆழமாகி விடுகின்றது. மனிதர்களுக்கு இடையிலான கூட்டுக் சமூகக் கண்ணோட்டம் எந்தளவுக்கு இழிநிலை பாத்திரத்தை அடைகின்றதோ அந்தளவுக்கு விவாகரத்து சீரழிவாகின்றது. நிலப்பிரபுத்துவக் குடும்பம் பின்னால் முதலாளித்துவக் குடும்பமாகச் சீர்திருந்திய போது, அதைப் பொருளாதார அமைப்பு ஒழுங்கமைத்தது. இது முதலாளித்துவத் தேசியம் என்ற எல்லைக்குள் குடும்பம் என்ற வடிவத்தை ஒழுங்கமைத்தது. ஆனால் ஏகாதிபத்தியம் தனது உலகமயமாதலை வேகப்படுத்தும் போது தேசம் சிதைய அதனுடன் சேர்ந்து முதலாளித்துவக் குடும்பமும் சிதையத் தொடங்கியது. இது தேசம் கடந்த ஆதிக்கப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்த, குடும்பம் சிதைந்து தனிநபர் ஆதிக்க எல்லைக்குள் தனிமனித வாதம் அதிகரித்தது.

இந்தத் தனிமனிதவாத ஜனநாயகம் கூட்டான குடும்பத்துக்கு எதிராகத் தன்னை முன்நிறுத்திக் கொண்டது. இதன் மேல் நுகர்வுப் பண்பாட்டுப் பொருளாதாரம், குடும்பங்கள் எதையும் விட்டுவிடாத நுகர்வை அடைய நிர்ப்பந்தித்தது. இதுவே குடும்பத்தைச் சிதைக்கும் புதிய வடிவமாகியது. ஆணும் பெண்ணும் தாம் புரிந்து கொண்ட உலகமயமாதல் எல்லைக்குள், நுகர்வுக் கண்ணோட்டத்துக்குள் புதிய முரண்பாட்டைச் சந்தித்தனர். இவை பேசி தீர்ப்பதுக்குப் பதில் முடிவான சில தீர்மானங்கள் மூலம், அதாவது தனிமனிதச் சுதந்திரம் பற்றிய பிரமைகளில் சிதைப்பது பண்பாகியது. இது புதிய பாலியல் நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றது. இதனால் விவாகரத்து விரிந்து செல்கின்றது.





இந்த விவாகரத்து வழங்கும் சலுகைகள், போலி விவாகரத்துகளை வேறு ஒரு கோணத்தில் வளர்ச்சி அடையச் செய்கின்றது. அதே நேரம் சலுகைகளைக் கொண்டு தனித்து சொகுசாக இருக்கமுடியும் என்ற கண்ணோட்டத்தில் திருமணம் செய்து விவாகரத்து எடுப்பது (செய்வது) அடையாளப்படுத்தப்படுகின்றது. அதாவது பொதுவாகப் பெண் விவாகரத்தின் பின் உழையாது சொகுசாக வாழ்ந்து கொள்ள அடிப்படையாகக் கொண்டு ஆணிடம் கோரும் விவாகரத்துப் பணம் சில இடங்களில் விவாகரத்தை ஆதாயமான விடயமாகக் கருதி விவாகரத்தை ஊக்குவிக்கின்றது. இவை மேற்கில் புதிய நெருக்கடிகளை உருவாக்குகின்றது. கடவுச்சீட்டு (Visa) அற்றோர் கடவுச்சீட்டுக்காகத் திருமணம் செய்து விவாகரத்தெடுப்பது என்று பல வடிவ விவாகரத்துகள் நீடிக்கின்றது. இங்கு தனிமனிதச் சுதந்திரம் என்பது ஆணாதிக்கக் கறையால் வக்கரித்துப் போகின்றது.

பிரான்சில் மூன்றில் ஒரு குடும்பம் விவாகரத்து செய்கின்றன. இது பாரிசில் மூன்றில் இரண்டாக உள்ளது. வருடம் 1,20,000 விவாகரத்துகள் நடக்கின்றன. இது 1970-இல், 40,000 மட்டுமேயாகும்.

ஐந்தில் ஒரு விவாகரத்து ஐந்து வருடக் குடும்ப வாழ்க்கைக்குள் நடக்கின்றன. 73 சதவீதமான விவாகரத்துகள் பெண் கேட்டவையாகும். விவாகரத்துகளின் போது பிரிந்த குழந்தைகளில் 15 சதவீதக் குழந்தைகளை ஆண்கள் வளர்க்கின்றனர். (12.11.1998)[1] விவாகரத்து நகரமயமாகும் போது நாகரிகத்தின் மையங்களான தலைநகரங்கள் விவாகரத்தின், சீரழிவின் வடிவங்களாகி விடுவது மேற்கில் விதிவிலக்கல்ல. இணைவும் பிரிவும் வேகமாக நடப்பதைப் புள்ளிவிபரம் துல்லியமாக்குகின்றது. இந்தளவுக்குப் பின்னும் பெண், ஆணாதிக்கத்திடம் விடுதலை பெற்றுவிட்டாளா? பாலியல் நெருக்கடி தீர்ந்துள்ளதா? எனின் இல்லை. மாறாக நெருக்கடி மேலும் தீவிரமடைந்துள்ளது. விவாகரத்து ஆணாதிக்கத்துக்கு எதிரானப் பொதுவாகப் பெண்ணின் உரிமை என்பது தலைகீழாகின்றது. ஆணும் விவாகரத்துக் கேட்குமளவுக்குப் பெண்ணின் ஆணாதிக்கமயமாதல் மற்றும் ஏகாதிபத்திய நுகர்வுமயமாதலுடன் கூடித் தனிமனிதச் சுதந்திரப் போலித்தனமான வாதங்கள் விசுவரூபமாகி வருகின்றது.

பொதுவாகக் குழந்தை மீதான உரிமையைப் பெண் கைவிட்டுச் செல்வது அதிகரிக்கின்றது. தாய்வழிச் சமூகத்தில் இருந்து தந்தைவழிச் சமூகம் வளர்ச்சி பெற்ற போதும், குழந்தையை ஆணின் வாரிசாக அடையாளம் கண்ட போதும் பெண்வழியில் குழந்தை உரிமை பாதுகாக்க பெண்ணின் போராட்டம் தீவிரமானதாக இருந்தது. இந்த உரிமையை அங்கீகரிக்காமல் எந்தமதமும், எந்த அரசும் தமது ஆணாதிக்க அமைப்பைப் பாதுகாத்துக் கொள்வது சாத்தியமற்றதாக இருந்தது. குழந்தை மீதான உரிமையைப் பெண் பெற்றிருந்த நிலையில் இதை ஏகாதிபத்திய உலகமயமாதல் ஆணாதிக்கம் பெண்ணைத் தீவிரமான தனிமனிதச் சிதைவுக்குள்ளாக்கிக் குழந்தையின் உரிமையைப் பெண் தானாகவே நிபந்தனையின்றி ஆணிடம் கைவிட்டுச் செல்வது தீவிரமாகியுள்ளது. தாய்மை மீதான பெண்ணின் எதிர்க் கண்ணோட்டம் பெண்ணுரிமைக்கு எதிரான போக்கில் பெண்ணியக் கோட்பாடுகள் தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனிமனிதக் குறுகிய எல்லைக்குள் உருவாக்கி ஆணாதிக்கமயமாகின்றனர். தாய்மை என்பது பெண்ணின் பாலியலைப் போல் ஆணுக்குச் சரணடையவைக்கும் அனைத்து ஆணாதிக்கச் செயல்களையும், கோட்பாடுகளையும் அம்பலப்படுத்திப் போராடாதவரை ஆணாதிக்கத்தை ஒழித்துக் கட்டமுடியாது.

அட்டவணை - 31

விவாகரத்துக்குப் பின் வாழும் நிலைமைகள் சதவீதத்தில்.[71]

| வயது | தனியாக வாழ்தல் | சேர்ந்து வாழ்தல் | மீள திருமணம் |
|---|---|---|---|
| 35 வயது வரை | 51% | 34% | 15% |
| 35 - 39 | 67% | 17% | 16% |
| 40 - 44 | 79% | 9% | 12% |
| 45 வயதிற்கு மேல் | 90% | 5% | 5% |

விவாகரத்துகளின் பின் பாலியல் நெருக்கடி சார்ந்து மீளத் திருமணம் செய்தல் அல்லது சேர்ந்து வாழ்தல் என்பது வயதுக்குட்பட்ட ஒருமுக்கிய விடயமாகின்றது. பாலியல் நாட்டம் வயதுடன் குறைந்து செல்ல விவாகரத்தின் பின் ஆண் - பெண்ணின் சேர்ந்த வாழ்க்கை முற்றுமுழுதாகச் சிதைந்து போகின்றது. ஆண் - பெண்ணின் திருமணம், சேர்ந்து வாழ்தல் என்பது பாலியல் நோக்கம் ஒன்றுக்காக மட்டுமே என்றளவுக்கு மனிதப் பண்பாடுகள் சிதைந்து போகின்றன என்பதைக் காட்டுகின்றது. அதாவது இது ஒரு விபச்சாரியை நாடிச் செல்லும் வடிவத்திற்கு மாற்றாக நிரந்தரமான (திருமணத்தை) விபச்சாரத்தைக் குறிப்பிட்டு நிற்கிறது.

இரண்டு மனிதர்களுக்கு, அதாவது ஆணுக்கும் பெண்ணுக்கும் சமுதாயத்தில் சேர்ந்து சிந்திக்க, வாழ இருக்கும் எல்லையற்ற சமூகக் கண்ணோட்டமானது தனிமனிதச் சுதந்திர ஜனநாயகக் கட்டற்ற தனது வக்கிரத்தால் சமூகத்துக்கு எதிரான கண்ணோட்டத்தை ஏற்படுத்தி சிதைக்கின்றது. இரண்டு மனிதர்களுக்கிடையில் இருக்கும் பல்வேறு விடயத்தில் பாலியலும் ஒன்றே ஒழிய, பாலியலே எல்லாம் அல்ல. அதாவது காதல் ஒன்றே இந்தச் சமுதாயத்தின் எல்லாம் என்று கூறும் திரைப்படம் மற்றும் பிற்போக்கு எழுத்துகள் மனிதச் சிந்தனையாகி பாலியலே ஆண் பெண்ணின் வாழ்க்கையை இணைக்கின்றது. இது மற்ற அனைத்தையும் மறுதலிக்கும் குணாம்சத்துடன் மனிதச் சிந்தனை வளர்கின்ற போது, இதற்காக இணைவதும் பிரிவதும் பொதுப்பண்பாகின்றது.

இன்று ஆணாதிக்கப் பெண்ணியலாகி உள்ள பெண்ணியம் பலவும் பாலியல் அம்சத்தை முன்நிலைப்படுத்தி, அதில் பெண்ணின் உடற்கூறு மீதான





கட்டுப்பாடுகள் பற்றிய பிரமைகளை விதைக்கும் போது, இது மேலும் பாலியல் அம்சமாகி ஆண் - பெண் உறவு சிதைகின்றது. ஆண் பெண் உறவு சமூகத்தில் உள்ள பல்வேறு மனிதக் கூட்டுச் செயல்பாடு போல் ஓர் அங்கமாகப் பார்க்க, அதில் விசேடமாக ஆண் - பெண் பாலியல் ஒரு நிகழ்வாக மட்டும் உள்ளதைப் பார்க்காதவரைப் பாலியலுக்காக இணையும் விபச்சாரக் கண்ணோட்டமானது ஆண் - பெண் உறவைத் தீர்மானிக்கவும், விவாகரத்து எடுப்பதை ஊக்குவிக்கவும் செய்யும். பின் இதற்காக இணைவதும் நிகழும். இந்தப் பாலியல் தேவையை அடைய வழியிருப்பின் (அது எந்த வகையான வக்கிரமாக இருந்தாலும்) இந்த இணைவு சமூகத்தன்மைக்கு எதிராக முன்நிறுத்தி பிளவுறுவது அதிகரிக்கும்.

மூன்றாம் உலக நாடுகளில் மேல்மட்ட வர்க்கப் பிரிவுகளில் பெண்ணின் பொருளாதார ஆதாரம், ஏகாதிபத்தியத் தரகுத்தனத்துடன் கூடிய நிலப்பிரபுத்துவக் குடும்ப எச்சமும் எப்படி பாதிக்கின்றன? எனப் பார்ப்போம். இந்தியாவில் 1990-இல், மத்தியதர வர்க்கத்துக்கு மேற்பட்ட பிரிவுகளிடம், அதாவது 3,000 ரூபாய்க்கும் அதிகமாக வருமானம் உடைய 20 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டோரிடம் திருமணத்தில் நெருக்கடி என்றால் என்ன செய்வீர்கள் என இந்தியா டுடே - மார்க் நடத்திய ஆய்வை பார்ப்போம். (21.12.1996)[34]

அட்டவணை - 32

| என்ன செய்வீர்கள்? | சதவீதம் |
|---|---|
| பதில் தந்தவர்கள் பேசிச் சமரசம் | 53 சதவீதம் |
| விதியை நொந்து பிரச்சினையை மறப்பது | 20 சதவீதம் |
| ஆலோசகரிடம் ஆலோசனை | 11 சதவீதம் |
| விவாகரத்து | 8 சதவீதம் |
| பிரிந்து வாழ்தல் | 8 சதவீதம் |

இந்த மேல்மட்டச் சமூகக் கண்ணோட்டம் என்பது சேர்ந்து வாழ்தலுக்கு எதிராக உள்ளது. புள்ளி விபர ரீதியாக விவாகரத்து எண்ணிக்கை குறைவாக இருந்த போதும் மேற்கின் சராசரி விவாகரத்து புள்ளிவிபரம் அதிகமானது. அதாவது விவாகரத்தைப் பெற நினைக்கும் இந்திய மேட்டுக்குடியின் இளையதலைமுறையின் மனநிலை தனிமனித வாதத்தின் சமூக எதிர்ப்புக் கண்ணோட்டம் கொண்டு காணப்படுகின்றது. மனிதர்களுக்கிடையிலான முரண்பாடுகள் இயல்பானது. அவை பரஸ்பரம் புரிந்துணர்வுக்கு உட்பட்டது. இந்தப் புரிந்துணர்வு சமுதாயப் பிளவால் தீர்க்க முடியாத போதே விவாகரத்து ஜனநாயகப் பண்பாகின்றது. இதை மறுத்து அனைத்துக்கும் பிளவு என்ற கண்ணோட்டம் மனிதனின் சமூகக் கண்ணோட்டத்துக்கு எதிரானது.

எப்போதும் தனிமனிதச் சுதந்திரத்தைச் சமூகச் சுதந்திரத்திற்கு எதிராக நிலைநாட்டும் கண்ணோட்டம் மேட்டுக்குடிகளில் தலைவிரித்தாடுவதை இந்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புள்ளிவிபரம் காட்டுகின்றது. மேற்கில் நிகழும் திருமணங்களில் விவாகரத்து என்பது மூன்று திருமணங்களுக்கு ஒரு திருமணம் விவாகரத்தைச் சந்திக்கும் அதே நேரம், இந்தியாவில் பத்து திருமணங்களுக்கு ஒரு திருமணத்தை விவாகரத்திற்கு உள்ளாக்க தயாரான பண்பு, நிலப்பிரபுத்துவ இந்து ஆதிக்கப் பண்பாட்டால் கடிவாளம் இடப்படுகின்றது. தொடர்ந்து இந்த மேட்டுக்குடி பெண்கள் இந்து மேலாதிக்க நிலப்பிரபுத்துவப் பண்பாட்டின் சின்னங்களாகத் தொடரும் ஆணாதிக்க வாழ்க்கை திருமணத்தின் பின்னான விவாகரத்தை மட்டுப்படுத்துகின்றது. அதே நேரம் இந்த மேட்டுக்குடியின் ஒருபகுதி தரகுப் பண்பாட்டில் விவாகரத்தை விளையாட்டாகவும் பயன்படுத்துகின்றது. இந்தியா போன்ற நாடுகளில் விவாகரத்துரிமை என்பது மேட்டுக்குடியின் உரிமையாக அதுவும் மேட்டுக்குடி பெண்ணினது உரிமையாக உள்ளதே ஒழிய, அடிமட்டப் பெண்ணின் உரிமையாக இருந்ததில்லை. இதேபோல் மேட்டுக்குடியின் விவாகரத்து என்பது ஆணாதிக்கத்துக்கு எதிரான உரிமையாக அல்லது ஏகாதிபத்தியச் சீரழிவுப் பண்பாடாக இவ்விவாகரத்துரிமை தவறாகச் சீரழிக்கப்படுகின்றது.

அதேநேரம் விவாகரத்து அடிமட்டக் குடும்பத்தில் ஆணின் பலதாரத் திருமணத்தைச் சட்டப்படி செய்யும் ஆணின் உரிமையாகச் சீரழிந்துள்ளது. “ஊரெல்லாம் விவாகரத்து” என்ற தலைப்பில், உத்திரப்பிரதேசத்தில் பரத்கஞ்ச் கிராமத்தில் மூன்றில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 500 முஸ்லிம் பெண்கள் விவாகரத்துக்கு உள்ளாகியுள்ளனர். பெண்கள் கைவினையர் துணி நெய்யும் தொழிலாளராக இருந்த போது விவாகரத்து நடக்கவில்லை. இயந்திரம் புகுத்தப்பட்ட பின் பெண்கள் வேலையை இழக்க, வேலையற்ற பெண்களைக் கணவன் வைத்திருக்கத் தயாராக இல்லாததால் இவ்விவாகரத்துகள் நடந்துள்ளன. இந்த விவாகரத்து உச்சத்தில் செல்ல, அப்பெண்கள் அதே ஆண்களிடம் பொது விபச்சாரத்துக்கு உள்ளாகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது. (19.11.1997)[34]

விவாகரத்துரிமை என்பது ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழமுடியாத ஒரே ஒரு நிலையில் மட்டும் கையாளப்பட வேண்டியது. ஆனால் இது பெரும்பான்மையாகத் தவறாகக் குறுகிய நோக்கில் கையாளப்படுவதைக் காணமுடியும். மேலுள்ள நிலைமையில் ஆணின் வேலையின்மை அல்லது பெண்ணின் வேலையின்மை எப்படி விவாகரத்தைத் தவறாகப் பயன்படுத்தவும், பெண்ணைப் பொது விபச்சாரத்துக்குள் தள்ளவும் இட்டுச் செல்லுகின்றது. பொருளாதார ரீதியாக நடக்கும் மாற்றம் விவாகரத்தை ஊக்குவிக்கின்றது. சமூகப் பொருளாதார மாற்றங்கள் திருமண உறவுகளில் நடக்கும் திடீர் மாற்றங்கள் பெண் உரிமையின் பெயரில் சுயேட்சையாக நிகழ்வதில்லை.

1800-களில் பெண்களை முதலாளித்துவம் வேலைக்கு அழைத்து வந்த போது ஆண் தொழிலாளர்கள் இதை எதிர்த்துப் போராடியபோது பல காரணங்களை முன்வைத்தனர். பெண் ஆணையும், குழந்தையையும் கவனிக்க முடியாத அதேநேரம் ஆணின் வேலையை, பெண் கவர்கின்றாள் என்று ஆண் தொழிலாளி குற்றம் சாட்டினான். அதேநேரம் ஆணின் சம்பளம் பெண்ணால்





குறைந்து, பெண் வேலைக்கு வருமுன் இருந்த வாழ்க்கையை இழக்கவும் காரணமாகின்றது. இந்த வாதத்தில் எவ்வளவோ நியாயங்கள் இருந்த போதும் பெண்ணின் உரிமையை மறுக்கும் கண்ணோட்டம் இருந்தது. இதனால் கம்யூனிசத்தின் முதலாம் அகிலம் இதை விமர்சித்தது. அதே நேரம் தொழிலாளர் வர்க்கத்தின் நியாயமான வாதத்தை ஏற்றுக் கொண்டது.

பெண்ணை வெளியில், உழைப்பில் ஈடுபடுத்தியதன் மூலம் பெண் விடுதலை பெற்றுவிடவில்லை. மாறாக மேலும் நசிவுக்குள்ளானாள். முன்பு ஆணின் உழைப்பில் வாழ்ந்த பெண் ஆணின் கடமையை மட்டும் செய்ய வேண்டியிருந்தது. இன்றோ அதனுடன் சேர்த்து, முதலாளிக்காக உழைத்தும், முன்னாள் வாழ்க்கைத் தரத்தைப் பேணமுடியாது நசிந்து போனாள். இதனால் முதலாளித்துவம் தன்னை மேலும் ஏகாதிபத்தியமாக்கும் திசையில் வேகமாக முன்னேறியது. பெண் இரட்டைச் சுமையில் மேலும் ஆணாதிக்க வதையைச் சந்தித்தாள். முதலாளித்துவ அமைப்பு இன்று ஏகாதிபத்தியமாகத் தன்னை இன்றைய நிலைக்கு வந்துசேர பெண்ணைக் கடுமையாகச் சுரண்ட, பெண்ணை வீட்டுக்கு வெளியில் அழைத்து வந்து முதலாளித்துவம் அதற்குள் தன்னைத் தகவமைத்துக் கொண்டது.

எப்போதும் நன்மைக்கும் தீமைக்குமிடையில் வர்க்கங்களிடையிலான போராட்டமாக நிகழ்கின்றது. இதில் ஆதிக்க வர்க்கம் எப்போதும் இடைப்பட்ட தீர்வுகளைத் தனக்கு இசைவாகப் பயன்படுத்திக் கொள்கின்றது. விவாகரத்து போன்ற அனைத்துத் தீர்வுகளையும் ஆளும் வர்க்கம் சார்ந்த பிரிவுகளே தனது நலனுக்கு இசைவாக மாற்றிக் கொள்கின்றது. விவாகரத்துரிமை பெண்ணின் நலன் சார்ந்து நியாயமாகக் கோரி வெற்றிபெற்ற போதும் அதன் இன்றைய தன்மையில் ஆணாதிக்கத்துக்குச் சேவைசெய்வதாக மாறிவிடுகின்றது. இதை ஆண் பயன்படுத்தினாலும், பெண் பயன்படுத்தினாலும் ஆணாதிக்கப் பொருளாதார, பண்பாட்டு, கலாச்சார எல்லைக்குள்ளேயே விவாகரத்து சீரழிந்து, மலிந்து கிடக்கின்றது. உண்மையான விவாகரத்துரிமை பயன்படுத்தப்படுவது மிக அரிதாக அல்லது அது மறுப்பதாகவே இன்றைய விவாகரத்துரிமையும், விவாகரத்துகளும் உள்ளன.

விவாகரத்துச் சட்டத்தை மறுக்கும் ஆணாதிக்கம் எப்போதும் ஏகாதிபத்தியப் பண்பாட்டில் சட்டத்தைக் கீழ்த்தரமாகப் பயன்படுத்துகின்றது. “தட்டினால் திறக்கப்படும்” என்ற தலைப்பில் தீவிரமாகப் போராடி வென்ற விவாகரத்து வெற்றி பற்றி இந்தியா டுடே எழுதுகின்றது. (10.7.1997)[34] இந்தளவுக்கு மூன்றாம் உலக நாடுகளில் விவாகரத்து பெறுவது இலகுவான காரியமாக இருப்பதில்லை என்ற உண்மை ஒருபுறமும், அதேநேரம் இலகுவாகப் பெறும் வடிவம் மறுபுறமாகவும் விவாகரத்து விரிச்சல் கண்டுள்ளது. உண்மையில் விவாகரத்து தேவைப்படுவோருக்கு அது கிடைப்பதில்லை. விவாகரத்தை விளையாட்டாகப் பயன்படுத்துவோருக்கு இது ஏகாதிபத்திய ஆணாதிக்கச் சீரழிவாகச் சீரழிந்து போயுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 34. திருமணங்கள்

பிரான்சில் 1980 ஆண்டு கணக்கின்படி திருமண வயதைப் பார்ப்போம்.[73]

அட்டவணை - 33

| நிலைமை 1980-இல் | ஆண் | பெண் |
|---|---|---|
| முதல் திருமணம் | 28.7 | 26.6 |
| மீள் திருமணம் | 42.8 | 38.1 |

பிரான்சில் திருமணத்திற்குப் பின் குடும்பமாக ஐந்து வருட வாழ்க்கையில் எப்படி வாழ்கின்றனர்.[74]

அட்டவணை - 34

| எப்படி | சதவீதம் |
|---|---|
| ஒரே வீட்டில் | 74 % |
| தனித் தனியாக | 12 % |
| பிரிந்து வாழ்தல் | 14 % |

பிரான்சில் நடக்கும் திருமணத்தைப் பார்ப்போம்.[52] பக்கம்-27

அட்டவணை - 35

| | | முதலாவது திருமணம் | | மீள் திருமணம் | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | மொத்த திருமணம் | | | விதவை | விவாகரத்து செய்தோர் |
| | | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | எண்ணிக்கை |
| 1975 | 3,87,379 | 3,53,410 | 91.2 % | 8,017 | 25,952 |
| 1980 | 3,34,377 | 2,96,140 | 88.6 % | 5,878 | 32,359 |
| 1985 | 2,69,419 | 2,29,787 | 85.3 % | 4,655 | 34,977 |
| 1988 | 2,71,124 | 2,28,137 | 84.1 % | 4,194 | 38,793 |





பிரான்சில் திருமணம் தொடர்பான புள்ளிவிபரத்தை நாம் ஆராயின் திருமணம் செய்யும் எண்ணிக்கை குறைந்து செல்வதைக் காட்டுகின்றது. அத்துடன் சட்டப்படியான திருமண வயதைத் தாண்டிய நிலையில் திருமணங்கள் நிகழ்வதைக் காட்டுகின்றது. திருமணத்தின் பின்னான வாழ்க்கையில் ஐந்து வருடங்களின் பின் திருமணங்களில் நாலில் ஒரு பங்கு நெருக்கடியில் சிக்கியுள்ளதைக் காட்டுகின்றது. திருமணம் என்பது வாழ்க்கையில் அவசியமற்ற விடயமாகக் கருதும் போக்கு அதிகரிக்கின்றது. இதற்கு மாற்றாகச் சேர்ந்து வாழ்தல் அதிகரிப்பதை நாம் கீழே ஆராய்வோம்.

விவாகரத்துக்குப் பிந்திய வாழ்க்கையில் மீளத் திருமணம் செய்வது அதிகரித்துச் செல்வதைப் புள்ளி விபரம் நிறுவுகின்றது. திருமணம் என்பது சிறை என்பதைவிட ஆரோக்கியமானது என்ற மனிதக் கண்ணோட்டம் வளர்ச்சி பெறுகின்றது. தவிர்க்க முடியாத ஏகாதிபத்திய நுகர்வுப் பாலியல் மற்றும் பண்பாட்டில் சிக்கிச் சிதைவோர் மீண்டும் தம்மை ஒழுங்கமைக்கும் போக்கு அதிகரிக்கின்றது. திருமண எண்ணிக்கை குறைந்து செல்ல, விவாகரத்து எண்ணிக்கை அதிகரித்து செல்ல, மீள் திருமணம் செய்வதும் அதிகரித்து செல்லும் இந்த நேர்எதிர் தன்மை வாய்ந்த போக்கு, இந்தச் சமூகச் சீரழிவின் போக்கையும், அனுபவவாத எதிர்த் தன்மையையும் காட்டுகின்றது.

திருமணம் என்பது அவசியமற்றது என்ற சமூகக் கூட்டுக்கு எதிரான தனிமனிதக் கண்ணோட்டமும், மீள் திருமணம் தனிமனிதவாதத்துக்கு எதிரானச் சமூகக் கண்ணோட்டத்தையும் வயது - வாழ்க்கை அனுபவம் ஏற்படுத்துவதையும் காட்டுகின்றது. ஆனால் இந்த எண்ணிக்கை என்பது விவாகரத்து செய்வோரில் கணிசமான பகுதி என்பது கவனத்துக்குரியது. இது அண்ணளவாக விவாகரத்து செய்யும் எண்ணிக்கையில் மூன்றில் ஒருபங்கு மீள் திருமணத்தைச் செய்கின்றனர். இதைவிட சேர்ந்து வாழும் வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பதும் அதிகரித்து செல்கின்றது.

ஐரோப்பாவில் திருமணத்துக்கு வெளியில் சேர்ந்து வாழ்தல் எப்படி உள்ளது என்பதைப் பார்ப்போம்.[75]

அட்டவணை - 36

| நாடுகள் | சதவீதம் |
|---|---|
| டென்மார்க் | 23 % |
| பிரான்ஸ் | 13 % |
| பெல்ஜியம் | 10 % |
| இங்கிலாந்து | 9.5 % |
| ஜெர்மனி | 8 % |
| இத்தாலி | 4 % |
| ஸ்பெயின் | 3 % |
| போர்ச்சுக்கல் | 2.5 % |
| அயர்லாந்து | 2 % |
| கிரீஸ் | 2 % |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்றைய திருமணம் என்பது ஒருதாரமணத்தின் ஆணாதிக்கத்தைச் சொத்துரிமை மீது தன்னை ஒழுங்கமைத்தது. இந்த ஒருதார மணவடிவத்தையும், சொத்துரிமையையும் உலகமயமாதல், மக்கள் கூட்டத்துக்கு மறுத்துச் செல்லும் இன்றைய வர்க்கப் போராட்டத்தில், திருமணம் அதன் தனித்துவமான பண்பை இழந்து போகின்றது. பாரம்பரிய சம்பிரதாயமான பழையதன் நீட்சி என்ற எல்லைக்குள் மட்டும் திருமணம் பழமையைப் பேணும் சம்பிரதாயமாக மாறிவிடுகின்றது. இது மேற்கில், ஒவ்வொரு நாட்டிலும் பழைய வடிவத்தை எவ்வளவு வேகமாக உலகமயமாதல் தகர்க்கின்றதோ அந்தளவுக்குத் திருமணம் என்ற வடிவம் தனது சட்ட வடிவத்தை அர்த்தமற்றதாக ஆக்குகின்றது. திருமணம் வழங்கிய சட்டஒழுங்கு தகர்கின்ற போது அத்திருமண வடிவமும் தகர்ந்துபோய் புதிய மனித உறவுகள் ஏற்படுகின்றன. இது ஆண் பெண் திருமணத்துக்கு வெளியில், சட்ட ஒழுங்குக்கு வெளியில் சுதந்திரமாக இணைந்து வாழும் தன்மை அதிகரித்துச் செல்கின்றது.

இந்த வாழ்க்கை மனிதச் சமுதாயத்தின் முன்நோக்கிய ஆரோக்கியமான பாதையை அமைக்க வழிகோலுகின்றது. அதாவது சொத்துரிமை, வாரிசு குடும்ப அமைப்பைத் தகர்த்ததன் மூலம் ஒருதார வடிவத்தின் நோக்கமும் தகர்ந்து போகின்றது. இந்த வடிவத்தை ஏகாதிபத்திய உலகமயமாதல் தனது சொத்துக் குவிப்பின் ஊடாகத் தீவிரமாக்கிச் செல்லுகின்றது. இந்த **இணைக் குடும்பங்கள்** இரண்டு போக்கில் தனக்குள் முரண்பட்ட இரு கூறுகளைக் கொண்டுள்ளது. அதிகளவு தனித்தன்மை வாய்ந்த தனிமனிதச் சுதந்திரக் கோட்பாடும், சமூகத்தன்மை வாய்ந்த சமூகச் சுதந்திரக் கோட்பாடும் இந்த இணைக் குடும்பங்களில் காணப்படுகின்றது. இந்த இணை மணத்தில் தனிச் சுதந்திரமான உலகமயமாதல் கோட்பாடு முதன்மையான முரண்பாடாக வராத நிலைகள் வரை இக்குடும்பம் நீடித்து வாழ்கின்றது. இந்த இணைக் குடும்பத்தில் ஒருதாரமணத்தில் இருக்கும் சமூகம் சார்ந்து, ஆணாதிக்கப் பண்பு புரையோடிப் போய் இருந்த போதும், அது முதன்மையான முரண்பாடாக வராதவரை இந்தக் குடும்பம் நீடித்து வாழ்கின்றது. மக்கள் கூடிவாழ்வதை அதன் இயற்கையின் தன்மையுடன் கொண்டுள்ளதை ஆராய்வோம்

பிரான்சில் திருமணம் செய்யும் வயதை உடைய மக்கள் எப்படி உள்ளனர்? எனப் பார்ப்போம்.[76]

அட்டவணை - 37

| மக்களின் நிலை | சதவீதத்தில் |
|---|---|
| குடும்பமாக | 68.3% |
| ஒருவரை இழத்தல் | |
| விவாகரத்து | 18.4% |
| பிரிந்து இருத்தல் | |
| திருமணம் செய்யாத மக்கள் பிரிவுகள் | 13.3% |





ஆண் - பெண் திருமணத்தை அல்லது சேர்ந்து வாழ்தலைத் தமது ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு எதிராக, அதாவது கட்டற்ற தனிமனிதச் சுதந்திரத்துக்கு எதிராக, சமூகச் சுதந்திரத்தைக் கொண்டு வாழ்வதை மேலுள்ள வாழ்க்கையின் கூட்டுத்தன்மை காட்டுகின்றது. தனித்து வாழ்வது என்பது கூட்டுவாழ்வுக்கு எதிரான தன்மையைக் கொண்டு முற்றுமுழுதாக உருவானவையல்ல. ஆனால் கணிசமான பிரிவு இதை அடிப்படையாகக் கொண்டவை. பெண்ணியலில் பூர்சுவா கோட்பாட்டாளர்கள், விவாகரத்தைத் தீர்வாக வைப்போர்கள் எல்லாம் கூட்டு வாழ்க்கைக்கு எதிரான கண்ணோட்டம் கொண்டவர்கள். இவர்கள் தனித்துவாழக் கோருகின்றவர்களும், விவாகரத்தைச் செய்யக் கோருகின்றவர்களும், ஆணை எதிரியாகப் பிரகடனம் செய்கின்றவர்களுமாகிய இவர்கள் உலகமயமாதலில் தனிச் சொத்துரிமை கோட்பாட்டின் அடிப்படையில் ஆணாதிக்கத்தைக் கொண்டவர்கள் ஆவர்.

இதேநேரம் மூன்றாம் உலகம் சார்ந்த இந்தியாவில் மத்தியத் தரத்துக்கு மேற்பட்ட வர்க்கத்திடம் 1990-இல், 3,000 ரூபாய்க்கும் அதிகமாக வருமானம் உடைய 20 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டோரிடம் இந்தியா டுடே-மார்க் நடத்திய ஆய்வைப் பார்ப்போம்.(21.12.1996)[34]

நிச்சயிக்கப்பட்ட திருமணமா? என்ற கேள்விக்கு 81 சதவீதம் பேர் ஆம் என்றும், 19 சதவீதம் பேர் காதல் திருமணம் என பதில் அளித்துள்ளனர்.

நிச்சயிக்கப்பட்ட திருமணத்துக்கு என்ன காரணம்? என்ற கேள்விக்கு பெரியோருக்குச் சிறந்தது தெரியும் என 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் பதில் அளித்துள்ளனர். அண்ணளவாக 20 சதவீதத்தினர் சம அந்தஸ்துக்காகவும், 15 சதவீதத்துக்கும் அதிகமானோர் பிரச்சனை என்றால் பெற்றோர் ஆதரவு தருவர் என்றும் தெரிவித்துள்ளனர்.

திருமணத்தில் அதிகம் எதை எதிர்பார்க்கின்றீர்கள்? என்ற கேள்விக்கு 65 சதவீதத்துக்கும் அதிகமானோர் தோழமை மற்றும் புரிந்துணர்வையும், 55 சதவீதத்துக்கும் அதிகமானோர் குழந்தைகள் மற்றும் வீட்டையும், 35 சதவீதத்துக்கும் அதிகமானோர் முழுமையான பாலுறவையும், 30 சதவீதத்துக்கும் அதிகமானோர் சமூக அந்தஸ்த்தையும், 25 சதவீதத்துக்கும் அதிகமானோர் ஆதாயத்தையும் எதிர்பார்க்கின்றனர்.

உங்கள் திருமண உறவில் சலசலப்பு வருவதற்குக் காரணமாயிருப்பது எது? என்ற கேள்விக்கு, பதினைந்து பேரில் சராசரியாக 7.5 பேர் தனித்தனியாகப் பணி அழுத்தம், பேச்சு வார்த்தை குறைவு, வீட்டுச் சண்டை என்கின்றனர். அண்ணளவாக 6.5 பேர் குடி காரணம் என்கின்றனர். அண்ணளவாக 3.5 பேர் பணப்பற்றாக்குறையைக் குடும்பப் பிரச்சினைக்குக் காரணம் என்கின்றனர்.

ஏகாதிபத்தியக் கலாச்சாரத்தின் நேரடி பிரதிநிதிகளான இந்த மேட்டுக்குடிகளின் குடும்பம் சார்ந்த பொருளாதார நலன் பெற்றோர் தீர்மானிக்கும் திருமணத்தையே சார்ந்திருப்பது நிபந்தனையாகின்றது. உலகமயமாதல் ஊடாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஊடுருவிப் பாயும் ஏகாதிபத்தியப் பண்பாட்டுக் குணாம்சங்கள் திருமணத்துக்கு முந்திய பிந்திய வாழ்வின் அம்சமாக இருக்க, பொருளாதார நலன் சார்ந்த திருமணம் பெற்றோரின் தீர்மானத்துக்குள் சிக்கித் திணறுகின்றது. அதாவது நிலப்பிரபுத்துவ அமைப்பின் சொத்துரிமை வடிவத்தினுடைய எச்சத்தின் பிரதிநிதிகளான, தரகுக் கைக்கூலித்தனத்தின் பொருளாதாரப் பிரிவுகளான இந்தக் கூட்டம் தனது சொத்துரிமையைப் பாதுகாத்துத் திருமணத்தை ஏகாதிபத்தியப் பண்பாட்டு ஆதிக்கத்தில் இருந்து பொருளாதாரக் காரணத்தால் வேறுபட்டுத் தீர்மானிக்கின்றது.

ஏகாதிபத்தியத்தில் பன்னாட்டு முதலாளிகளின் உலகமயமாதல் பிரதிநிதிக்கும், சொத்தற்ற வர்க்கத்துக்குமிடையில் உள்ள பிளவுகளில் திருமண வடிவங்கள் தீர்மானமாகின்றது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் பன்னாட்டுச் சொத்துரிமை பிரிவுக்கும், சொத்தற்ற வர்க்கத்துக்குமிடையில் தரகுப் பிரிவாக நிலப்பிரபுத்துவம் இருப்பதால் இந்தப் பிரிவின் திருமணம் பழைய வடிவில் நீடிக்கின்றது. பண்பாட்டு, கலாச்சார ரீதியில் தீவிர மாற்றத்தைத் திருமணத்திலும், திருமணத்துக்கு வெளியிலும் ஏற்படுத்திவரும் போக்கில் சொத்துரிமையின் ஆளுமையைப் பேசிச் செய்யும் திருமணத்தை உயிருடன் வைத்துள்ளது. திருமணத்தின் நெருக்கடி, அந்தஸ்து, மற்ற நிலைமைகளைச் சார்ந்து பெற்றோரின் ஆதரவான சொத்துரிமை பலத்தின் அவசியமே இந்தத் திருமணத்தைக் கட்டிக்காக்கின்றது.

இந்தத் திருமணத்தின் நலன் என்பது அந்த வர்க்கத்தின் நோக்கத்தை ஈடுசெய்வதைக் கோருகின்றது. இந்த நலன்களில் ஏற்படும் நெருக்கடி அந்த வர்க்கத்தின் எல்லைக்குள் அதற்கே உரிய ஆணாதிக்கப் பண்பால் தீர்மானமாகின்றது. பணமே இந்தக் குடும்பத்தின் அனைத்தையும் தீர்மானிக்கின்றது. இது அனைத்துவகை பாரம்பரிய ஆணாதிக்க ஒழுங்கையும் தகர்த்து புதிய வடிவில் ஆணாதிக்கத்தைப் புனரமைக்கின்றது. இது ஏகாதிபத்தியப் போக்கில் பழைய ஆணாதிக்கத்தைத் தகர்த்துப் புதிய ஒழுங்கில் ஆணாதிக்கம் தன்னைப் புனரமைக்கின்றது. இதற்கு உதாரணமாக "விளக்கேற்றி வைப்பார்" என்ற தலைப்பில், வயது வேறுபட்ட திருமணங்கள் பணத்தை அடிப்படையாகக் கொண்டு நடக்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (8.4.1998)[34] இந்தியாவில் நடைபெறும் அல்லது நடைபெற்று வரும் வாழ்க்கையில் ஏற்படும் நெருக்கடிகளுக்குத் தீர்வாக மீளவும் ஒருமுறை மறுமணம் புரிகின்றனர். (6.3.1997)[34] "புதியதோர் துவக்கம்" என்ற தலைப்பில், இந்தியாவில் இரண்டாம் திருமணத்தைப் பற்றி எழுதுகின்றது இந்தியா டுடே. (6.7.1991)[34] "குடும்பம் புதிய கதம்பம்" என்ற தலைப்பில் அந்தஸ்துடையோர் தமக்கு இடையில், பாரம்பரியக் குடும்ப உறவுகளை விலக்கி வாழ்கின்றனர் என்று குறிப்பிடுகின்றது. (24.3.1999)[34] வயது வேறுபாடுகள் மட்டுமல்ல, மறுமணம் போன்ற பல்வேறு பாரம்பரிய மத, நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க ஒழுங்கைத் தகர்த்து ஏகாதிபத்தியப் பெண்ணியல் நோக்கில் பெண்ணை விடுவித்து புதிய ஏகாதிபத்திய ஆணாதிக்கத்துக்கு உள்ளாக்குகின்றது.





## 35. திருமணங்களுக்கு வெளியில் வாழ்தலும்- குழந்தைகளின் பிறப்புகளும்

1970-இல், 2 கோடியே 14 இலட்சம் குடும்பங்கள் இருந்த அமெரிக்காவில் இன்று 4 கோடியே 58 இலட்சம் குடும்பங்கள் உள்ளன. அமெரிக்காவில் திருமணம் ஆகாத பெண்களின் எண்ணிக்கை 1970-ஐ விட இன்று எட்டு மடங்காக அதிகரித்துள்ளது. இன்று திருமணம் செய்யாது 50 இலட்சம் பெண்கள் வாழ்கின்றனர். அதாவது 25 சதவீதம் பெண்கள் திருமணம் செய்யாமல் உள்ளனர். இப்படி வாழ்வோரில் 36 சதவீதம் பேருக்கு 15 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் உள்ளது. 10 சதவீதம் பெண்கள் விவாகரத்துக்குப் பின் மீளத் திருமணம் செய்கின்றனர்.[55]

பிரான்சில் திருமணத்துக்கு வெளியில் குழந்தை பிறப்பை கீழ்க்கண்ட வரைபடத்தில் பார்ப்போம். (338-1996)[43]




**இனி பிற நாடுகளிலும் திருமணத்திற்கு வெளியில் பிறக்கும் குழந்தைகளை அட்டவணை: 39-இல் காணலாம்.**[74]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அட்டவணை - 39

| நாடு | சதவீதம் |
|---|---|
| ஐஸ்லாந்து | 58% |
| சுவீடன் | 50% |
| டென்மார்க் | 47% |
| நார்வே | 44% |
| எஸ்தோணியா | 38% |
| நியூசிலாந்து | 38% |
| கனடா | 35% |
| பிரான்ஸ் | 35% |
| இங்கிலாந்து | 32% |
| அமெரிக்கா | 31% |
| ஜப்பான் | 1% |

திருமணத்துக்கு வெளியில் குழந்தை பெறுவதைத் தவறாக நினைப்போர்.[77]

அட்டவணை - 40

| நாடு | சதவீதம் |
|---|---|
| ஐஸ்லாந்து | 3% |
| பிரான்ஸ் | 8% |
| ஜேர்மனி | 9% |
| ஸ்பெயின் | 21% |
| இங்கிலாந்து | 25% |
| கனடா | 25% |
| அமெரிக்கா | 47% |

கனடாவில் 1961-இல், குழந்தைகள் உள்ளடங்கிய குடும்பம் 65 சதவீதமாக இருந்தது. இது 1995-இல், 44.5 சதவீதமாக குறைந்துள்ளது. அதே நேரம் திருமணத்துக்கு வெளியில் சேர்ந்து வாழ்தல் 1981-இல், 3,55,000-ஆக இருந்தது 1995-இல், 9,97,000 மாக அதிகரித்துள்ளது.[31] திருமணத்துக்கு வெளியில் 1970-இல், பிரான்சில் 6.4 சதவீதம் குழந்தை பிறப்பு இன்று (1996) 39 வீதமாக உள்ளது. (1998)[1] பிரான்சில் 1990-இல், 1,35 கோடி குடும்பங்கள் இருந்தன. 77 இலட்சம் குழந்தைகள் இருந்தனர். 33 இலட்சம் பெண்கள் கணவரை இழந்து காணப்பட்டனர். 13 லட்சம் பெண்கள் விவாகரத்து செய்து இருந்தனர். 10 இலட்சம் குழந்தைகள் விவாகரத்துக் குடும்பத்தில் ஒரு பெற்றோரிடம் வாழ்ந்தனர். இதில் 90 சதவீதம் தாயுடன் வாழ்ந்தனர். 14





இலட்சம் குழந்தைகளின் பெற்றோர் விவாகரத்து செய்து மீள் திருமணம் செய்ததன் மூலம், இக்குழந்தைகளுக்கு அரை சகோதரர், சகோதரிகள் உள்ளனர். இதில் 85 சதவீதம் குழந்தைகள் புதிய பெற்றோருடன் வாழ்கின்றனர்.70 சதவீதமான விவாகரத்து பெண்களால் கேட்கப்பட்டவையாகும்.[52] (பக்கம் 11,12)

பிரான்சில் எப்படி 15 வயதுக்கு மேற்பட்ட மனிதர்கள் வாழ்கின்றனர் எனப் பார்ப்போம்.[6] பக்கம்-25

அட்டவணை - 41

| ஆயிரத்தில் | திருமணம் செய்யாதோர் | திருமணம் செய்தோர் | விதவை | விவாகரத்து பெற்றோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெண் | 6,138 | 12,550 | 3,254 | 1,260 | 23,201 |
| சதவீதம் | 26.5% | 54.1% | 14.0% | 5.4% | 100% |
| ஆண் | 7,189 | 12,703 | 647 | 938 | 21,477 |
| சதவீதம் | 33.5% | 59.1% | 3.0% | 4.4% | 100% |

பிரான்சில் மக்கள் எப்படி வாழ்கின்றனர்? எனப் பார்ப்போம்.[72]

அட்டவணை- 42

| வகைகள் | சதவீதம் |
|---|---|
| சேர்ந்து வாழ்தல் (குடும்பமாக) | 89% |
| தனித்தனியாக | 6% |
| பொதுவாகச் சாதாரணமாக வாழ்தல் | 3% |
| மற்றவை | 2% |

பிரான்சில் இருபது வயதுப் பிள்ளை யாருடன் வாழ்கிறது? என ஆராய்வோம்.[72]

அட்டவணை - 43

| எப்படி | சதவீதம் |
|---|---|
| குடும்பமாக | 58% |
| தனியாக | 22.2% |
| பெற்றோருடன் | 7.2% |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஐரோப்பாவில் மக்கள் எப்படி உள்ளனர் என ஆராய்வோம்.[75]

அட்டவணை - 44

| மக்களின் நிலை | சதவீதம் |
|---|---|
| தனியாக | 10% |
| குடும்பமாக (பிள்ளை இன்றி) | 21% |
| குடும்பம் பிள்ளைகள் 1,2 | 47% |
| குடும்பம் பிள்ளைகள் 3-இக்கு மேல் | 22% |

பிரான்சிலுள்ள குடும்பங்களில் பிள்ளைகளின் எண்ணிக்கை.[78]

அட்டவணை - 45

| பிள்ளைகள் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|
| 1 | 43.8% |
| 2 | 36.1% |
| 3 | 14.4% |
| 4 | 3.8% |
| 5-ஐ விட அதிகம் | 2.2% |

மேலே உள்ள புள்ளிவிபரங்கள் திருமணம், திருமணத்துக்கு வெளியில் வாழ்தல், குழந்தைகளைப் பெற்றெடுத்தல் போன்ற பல விபரத்தை உள்ளடக்கியுள்ளது. பாரம்பரிய மத, நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவத் திருமணங்கள் தகர்ந்து போகின்ற நிலையில் சேர்ந்து வாழ்தல் அதிகரிக்கின்றது. திருமணம் அல்லாத நிலையில் குழந்தைகளைப் பெற்று எடுத்தல் சமூகக் குற்றமாக இருப்பதில்லை. திருமணம் அல்லாத முறையில் பெண்கள் வாழ்தல் அதிகரித்து செல்லுகின்றது. இது குடும்பத்தைப் புதிய வடிவில் ஒழுங்கமைக்கின்றது. சேர்ந்து வாழ்தல் அல்லது ஒருவருடன் நட்பு என ஒன்றாக இல்லாமல் தொடருதல் என்ற வடிவங்கள் பொதுப்போக்காகின்றது.

இது ஆணாதிக்கத்தைத் தகர்க்கும் போராட்டத்தில் உருவான வடிவங்கள் அல்ல. மாறாக 1970-களின் பின் ஏற்பட்ட சுதந்திரம் தொடர்பான பார்வையுடன் உலகமயமாதல் ஏற்படுத்திய தாக்கம்தான் அவர்களின் சொத்துகளைத் தகர்த்தது, குடும்பத்தையும் தகர்த்தது.

மேற்கில் ஏற்பட்ட இந்த நிலைமை ஜப்பானில் ஏன் ஏற்படவில்லை? என்ற கேள்வி மிகமுக்கியமானதாகும். சொத்துரிமையைத் தகர்ப்பதில் மேற்குக்கும் ஜப்பானுக்கும் அதிக வேறுபாடு இருக்கவில்லை. ஆனால் மேற்கில் உலகமயமாதலின் ஏகாதிபத்தியத் தன்மை மக்களின் பண்பாடாக்கப்பட்டது. அதாவது உலகைச் சூறையாட உருவாக்கிய வடிவங்கள் மக்களின் நீண்ட விழிப்புணர்ச்சிக்கான போராட்டத்துடன் சமமாகவே மாற்றம் கண்டது. ஆனால்





ஜப்பானில் மக்களின் போராட்டம் பின்தங்கிய நிலையில், அதாவது நிலப்பிரபுத்துவ, மதவாத ஆதிக்கத்துக்குட்பட்ட நிலையில் இருக்க, அப்பண்பாட்டுக்குள் காலனிகளை உருவாக்கி மேற்கைவிட அதீதமான ஊக்குவிப்பின் ஊடாக அறிவியல் கண்டுபிடிப்புகளை நடத்தி ஏகாதிபத்தியமயமாதலைச் செய்ய முடிந்தது. ஜப்பானின் சொத்துரிமையற்ற வர்க்கம் தனது வர்க்கநிலையில் இருந்து விழிப்புற்று போராடாத வரலாற்றின் கீழ்நிலைப் பாத்திரம்தான் ஏகாதிபத்திய விளைவுகளைக் கூட வெல்லமுடியாத தன்மையைப் புலப்படுத்துகின்றது. உலகின் தீவிரமான வர்க்கப் போராட்டம் தான் இடைநிலை வர்க்கப் பிரிவுகளின் கோரிக்கைகளை நிறைவு செய்து, ஆளும் வர்க்கங்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றது. ஜப்பானில் பாட்டாளிவர்க்கப் போராட்டம் வளர்ச்சி பெறாத நிலையில் இடைப்பட்ட பிரிவுகளின் கோரிக்கை வெற்றி பெறமுடியாத நிலை என்பது, ஏகாதிபத்திய உலகமயமாதலின் விளைவைக் கூடப்பெற முடியாமல் சமூகம், விழிப்புறாத் தன்மைக்குள் தரம் தாழ்கின்றது.

முதலாளித்துவம், பாட்டாளிவர்க்கம் என்ற சொத்தற்ற வர்க்கத்தை உருவாக்கியபோது, முதலாளித்துவத்துக்கு எதிரான பாட்டாளிவர்க்கப் போராட்டம் முதலாளித்துவத்தின் விளைவுகளைத் தனதாக்கியது. இந்தக் கோரத்தில் பாட்டாளிவர்க்கம் பல இடைநிலை வர்க்கத்தின் விடுதலைக்குத் தனது போராட்டத்தின் ஊடாகச் சலுகைகளை வழங்க நிர்ப்பந்தித்தது. இது ஜப்பானில் நிகழ்வதற்குப் பாட்டாளி வர்க்கப் போராட்டம் பின்தங்கிய போது, ஏகாதிபத்திய விளைவுகள் அந்த மக்களின் விடுதலைக்கு வழிகாட்டுவதுக்குப் பதில், மேலும் இறுக்கமான சமூக ஒடுக்குமுறையைப் பரிசளிக்கின்றது. இது பாரம்பரியக் குடும்பத்தினைப் பேணுவதை நிபந்தனையாக்குகின்றது. பாட்டாளி வர்க்கம் விழிப்புறாத வரை ஏகாதிபத்தியம் மற்றும் இடைப்பிரிவுகள் கூட வீங்கிப்போன ஏகாதிபத்தியப் பொருளாதார மாற்றத்தை, பண்பாட்டுக் கலாச்சார ரீதியிலான மாற்றத்தைப் பின்தங்கிய ஆளும் வர்க்கத்துக்குச் சார்பாகவே மாற்றுகின்றது. வர்க்கப் போராட்டம் எவ்வளவு தீவிரமாகின்றதோ அந்தளவுக்கு, இடைநிலை மற்றும் ஏகாதிபத்தியச் சக்திகளின் இடைநிலைக் கோரிக்கைகள் வர்க்கப் போராட்டத்தை மழுங்கடிக்க உருவாவது மனித வரலாற்றில் பொதுப்போராட்ட வடிவமாகும்.

இதை அமெரிக்காவிலும் காணமுடியும்.. அமெரிக்காவில் திருமணத்துக்கு வெளியில் குழந்தை பெறுவது அதிகரித்த சதவீதத்தில் கொண்டிருந்த போதும், அதைத் தவறாக நினைப்போர்களும் அதிகமாக உள்ளனர். வர்க்கப்போராட்டத்தின் கூர்மையான தன்மைகள் இதன் ஏற்றத்தாழ்வை உறுதி செய்கின்றது. அத்துடன் இடைநிலை வர்க்கத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் ஆதிக்கம் போன்றன இதை மட்டுப்படுத்துவதையும், தீவிரமாக்குவதையும் துல்லியமாக்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரான்சில் மொத்தக் குழந்தைகளில் கணிசமானவை இரண்டு பெற்றோரும் இன்றி வாழ்கின்றனர். இதே போல் கணிசமான குழந்தைகள் புதிய தாய் தந்தையுடனும், புதிய அரைச் சகோதர - சகோதரிகளுடனும் வாழ்வதைக் காட்டுகின்றது புள்ளி விவரங்கள். குழந்தைகளை வளர்ப்பதையும், விவாகரத்தைக் கோருவதையும் பெரும்பான்மையாகப் பெண்கள் கொண்டுள்ளனர்.

ஐரோப்பாவில் தனியாக வாழ்வது என்பது மிகக் குறைவானதாகும்.. நவீனப் பொருளாதாரம் தனிமனித வாதத்தையும், நுகர்வையும் தீவிரமாக்கிய போதும் தனித்து வாழக் கோரும் கண்ணோட்டம் பொதுவாக மக்களின் மனநிலைக்கு எதிரானதாகும். ஆணாதிக்கத்துக்கு எதிராகப் பூர்சுவா பெண்ணியல் வாதிகள் எழுப்பும் தனித்துவாழும் கோட்பாடுகள் மக்களின் இயற்கையான உயிராற்றல் மீது விடப்படும் சவாலாக உள்ளது. கூட்டுப்பொருளாதாரம், கூட்டான செயல்பாடு, கூட்டுச் சிந்தனை, கூட்டுப்புரட்சி என்று அனைத்துக்கும் சார்பான மக்களின் சித்தம், இன்றைய உலகின் சுதந்திர அமைப்பு மீது தன்னைப் புரட்சிகரமாக்கிப் புரட்சிக்கு அறைகூவுகின்றது.

தனித்து வாழும் கணிசமானோர்களில் குழந்தைகளால் கைவிடப்பட்ட அல்லது விலகிச் சென்ற பெற்றோரும், பெற்றோரிடம் இருந்து விலகிச் சென்ற அல்லது விலக்கப்பட்ட குழந்தைகளும்தான் பெரும்பான்மையானது. தனித்த வாழ்க்கை என்பது இந்த உலகமயமாதல் சித்தாந்த ரீதியாகப் புரிந்து கொண்டு, சிதைந்து போனவர்கள் மிகக் குறைவானவர்களே. இந்த வகையில் பெண்ணியக் கோட்பாட்டைப் பெற்ற அராஜகவாதிகள், ஆண் எதிர்ப்புடன் கூடிய பெண் சேர்ந்து வாழ்வதற்கு எதிரான பிரிவுகள் அனைவரும் சமூகக் கூட்டுக்கு எதிரான கண்ணோட்டம் கொண்ட பிரிவினர்களே.

மாறிவரும் சமுதாயம் தனது முதலாளித்துவ அமைப்பின் தோற்றத்துடன் மாறியதை **லெனின்** குடும்பம் பற்றி கூறுகையில் **“ஒரு புதுக் குடும்ப உருவம், பெண்களின் அந்தஸ்த்தில் புதிய நிலைமைகள், இளம் தலைமுறையினரை வளர்ப்பதில் புதிய நிலைமைகள் - இவை முதலாளித்துவத்தின் இன்றைய மிக உயர்ந்த உருவங்களால் தயாரிக்கப்படுகின்றன. பெண்கள், குழந்தை உழைப்பு, முதலாளித்துவத்தால் தந்தை வழிக் குடும்பம் உடைக்கப்படுவது ஆகியவை தவிர்க்க முடியாமல் நவீனச் சமுதாயத்தில் மிகவும் கொடுமையான, நாசகரமான, அருவருப்பான உருவங்களில் வெளிவருகின்றன. இருந்த போதிலும் “வீடுகளுக்கு வெளியே சமூகமயமாக்கப்படும் பெண்களுக்கு, இளைஞர்களுக்கு, ஆண் - பெண் குழந்தைகளுக்கு ஒரு முக்கிய பாத்திரத்தை “நவீனத் தொழில்கள்” அளிப்பதால், அது ஆண் பெண்களிடையே உறவுக்கும், ஓர் உயர்ந்த உருவத்திற்கான ஒரு புதிய பொருளாதார**





**அடிப்படையையும் உண்டாக்குகிறது. டியூடோனிக் - கிறித்துவ வடிவக் குடும்பம் மாற்ற முடியாத இறுதி வடிவம் என்று கூறுவது, புராதன ரோமன், புராதனக் கிரேக்க அல்லது கீழ் நாடுகளின் வடிவங்கள் மாற்ற முடியாதவை என்று கூறுவதுபோல் அபத்தமானதாகும்.”**[60] என்று கூறுகின்றார். இது இன்று உலகமயமாகும் ஏகாதிபத்திய வடிவத்துடன் அதே நிலையை அடைகின்றது. இது தனக்கே உரிய வடிவில் பெண்ணினதும், ஆணினதும் உறவை வளர்த்தெடுப்பதை நாம் மேலே புள்ளிவிபர ஆதாரத்துடன் பார்த்தோம்.

பிரான்சில் குழந்தை பெறும் தாய்மார் எப்படி வாழ்கின்றனர்? எனப் பார்ப்போம்.[79]

அட்டவணை - 46

| எப்படி வாழ்கின்றனர்? | சதவீதம் |
|---|---|
| தனியாக வாழ்தல் | 7 % |
| சிகரெட் குடித்தல் (ஒரு பாக்கெட்டுக்கு மேல்) | 25 % |
| திருமணத்தின் ஊடாக வாழ்தல் | 60 % |
| திருமணம் செய்யவில்லை ஆனால் ஒன்றாக வாழ்தல் | 31 % |
| வேலை செய்தல் | 60 % |

இது பிரான்சில் தாய்மையடையும் பெண்களின் பொதுத்தன்மையாக உள்ளது. ஆணும் பெண்ணும் சேர்ந்த நிலையில் வாழும் வாழ்க்கையில் குழந்தையைப் பெறுவது 91 சதவீதமாக இருக்க, 7 சதவீதம் தனியாக இருந்தபடி குழந்தையைப் பெறுகின்றனர். இவை சேர்ந்து வாழாத, ஆனால் நட்பான அல்லது ஒப்பந்த உறவால் ஆணுடன் இக்கருத்தரிப்பு நிகழ்கின்றது. இச்சமூக அங்கீகாரம் இதற்கு எதிராக இருப்பதில்லை. அதேநேரம் 60 சதவீதமான பெண்கள் (வேலையில்) தொழிலில் ஈடுபடுகின்றனர். 25 சதவீதமான பெண்கள் மோசமாகப் புகைப்பவர்களாகவும் இருப்பது குழந்தையின் உடல் ஆரோக்கியத்துக்கு எதிராக உள்ளது. குழந்தை சட்டப்படியான திருமணத்துக்கு வெளியில் 38 சதவீதம் சுயேட்சையான தெரிவால் நிகழ்கின்றது. இங்கு மரபான குடும்பச் சுமையைச் சந்திப்பது மட்டுப்படுத்தப்படுகின்றது. அதேபோல் சட்டப்படியான திருமணக் குடும்பத்தில் குழந்தை பிறப்பு ஆணாதிக்க மரபான தளத்தில் நிகழ்வதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 36. அலிகள்

“அலிகளின் பதிலடி” என்ற தலைப்பில், கட்டாயக் காயடிப்பு பற்றிய கட்டுரையில் ஆணுறுப்பை வெட்டி, பின் அவர்களை ஏலத்துக்கு விடுகின்றனர். ஒருமுறை கையைத் தட்டினால் 1,000 ரூபாய் என்ற வகையில் ஏலம் போகும். உத்திரப்பிரதேசத்திலுள்ள ஈடா மாகாணத்தில் தான் இவை அரங்கேறுகின்றது. 15,000 அலிகள் உள்ள தில்லியில் இதற்கு எதிராகப் போராட்டம் நடத்தியுள்ளனர். இந்த நடவடிக்கைகளை எதிர்ப்போரை மா∴பியாக் கும்பல் பொலிஸ் கூட்டுடன் சேர்த்து கொன்று போட்டுவிடுகின்றனர். திருமணம் செய்தோர், செய்யாதோர் என வருடாவருடம் 1,000 பேரைக் கட்டாய அலிகளாக உருவாக்கி ஏலம் விடுகின்றனர். இவர்களைப் பாலியல் வக்கிரத்துக்கும், திருடவும் பலாத்காரமாக ஈடுபடுத்தப்படுகின்றனர். (6.5.1994)[34]

“புதிரான சங்கமம்” என்ற தலைப்பில் இந்தியா டுடே அலிகள் ஆணையும், பெண்ணையும் சிலவேளைகளில் இருவரையும் திருமணம் செய்கின்றனர் என்று எழுதியுள்ளது.[34] (3.12.1997)

ஆணாதிக்க வக்கிரம் எந்தளவுக்கு விவகாரமாகின்றதோ, அந்தளவுக்குப் பாலியல் ரீதியில் அலிகள் மிக மோசமாகக் கேவலப்படுத்தப்படுகின்றனர். அலிகளின் வாழ்க்கையைக் கீழ்த்தரமாகக் காணும் எமது சமூகத்தில் ஆணாதிக்க வக்கிரத்தைத் தீர்ப்பதற்கு மட்டும் பயன்படும் ஒரு மனித ஜென்மமாக வாழ்கின்றனர். இதற்கு வெளியில் அவர்களின் வாழ்க்கையை அணுகுவது என்பது இந்த ஆணாதிக்கத்தால் ஏற்றுக் கொள்ளமுடியாத பண்பாடாகும். ஆணாதிக்கப் பாலியல் வக்கிரத்தைப் பெண்களிடம் முழுமையாகத் தீர்க்க முடியாதவர்கள் அலிகள்மீது தமது வக்கிரத்தைத் தீர்க்கின்றனர். இந்த ஆணாதிக்கப் பாலியல் சந்தை மவுசு கட்டாயமான அலிகளை உருவாக்கின்றது. இந்தியாவில் முடமாக்கி கட்டாயப் பிச்சைக்காகக் கூலிக்கு மாரடிக்கும் குழந்தைகள் போல் அலிகள் மா∴பியா கும்பலினால் உற்பத்திச் செய்யப்படுகின்றனர். இந்தக் குறித்த நிகழ்விற்கு எதிராகப் போராடுவது என்பது ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தை உள்ளடக்கியது. அலிகள் பற்றிய ஆணாதிக்கப் பார்வை, ஆணாதிக்க வக்கிரம் தகர்க்கப்படாத போராட்டம் கட்டாயமான அலிமுறையை மட்டும் தடுக்கும். ஆனால் அலியை உற்பத்தி செய்யும் ஆணாதிக்கக் கண்ணோட்டமும், அலியைப் பாலியல் தேவைக்காக மட்டும் பயன்படுத்தும் ஆணாதிக்கக் கண்ணோட்டமும் மாறிவிடாது. மாறாகத் தன்னை வேறொன்றாகப் புனரமைக்கும்.





## 37. தத்தெடுப்புகள்

அமெரிக்காவில் 1995-இல், 50,000 குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் 8,000 குழந்தைகள் உள்நாட்டில் தத்தெடுக்கப்பட்டுள்ளனர். டைம் பத்திரிகை செய்தியின் படி 25 வருடங்களில் 1,40,000 குழந்தைகள் தத்து எடுக்கப்பட்டுள்ளனர். இது சுவீடனில் 32,000-ஆகவும், ஹாலந்தில் 18,000-ஆகவும், ஜெர்மனியில் 15,000-ஆகவும், டென்மார்க்கில் 11,000-ஆகவும் இருக்கின்றது.[31] தத்தெடுப்பு நாகரிகத்தின் பண்பாட்டில் அதிகரிப்பது பொதுப் பண்பாடாகின்றது.

பிரான்சில் பிள்ளையைத் தத்தெடுத்தல் வருடாவருடம் 5,000-ஆக உள்ளது. இதில் வெளிநாட்டுக் குழந்தை 3,500 ஆகும்.[80] “குழந்தை வேணுமா, குழந்தை?” என்ற கட்டுரையில், வறுமையின் கொடுமையால் 20 ரூபாய், 100 ரூபாய் என குழந்தையை பெற்ற தாயே விலை பேசி விற்பதை இந்தியா டுடே எழுதுகின்றது. (6.2.1993)[34]

1997-இல், 70 நாடுகளில் இருந்து பிரான்சுக்கு 3,528 குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் வியட்நாமில் இருந்து 1,328 குழந்தைகளும், கொலம்பியாவில் இருந்து 234 குழந்தைகளும், மடகஸ்காவில் இருந்து 174 குழந்தைகளும், ரஷ்யாவில் இருந்து 173 குழந்தைகளும், பிரேசிலில் இருந்து 167 குழந்தைகளும், குவாத்தா மாலாவில் இருந்து 161 குழந்தைகளும், ருமேனியாவில் இருந்து 132 குழந்தைகளும், பல்கேரியாவில் இருந்து 121 குழந்தைகளும், எதியோப்பியாவில் இருந்து 110 குழந்தைகளும், மாலியில் இருந்து 92 குழந்தைகளும் கொண்டு வரப்பட்டது. வருடாவருடம் 6,000 ஒப்பந்தங்கள் தத்தெடுப்பில் நடைபெறுகின்றது. 12,000-14,000 குடும்பங்கள் அல்லது தனிநபர்கள் குழந்தையை எதிர் பார்த்து வருடாவருடம் காத்துக் கிடக்கின்றனர். (14.4.1999)[1]

“அப்பா எதுக்கப்பா” என்ற தலைப்பில், திருமணம் செய்யாத பெண்கள் பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்க்கின்றனர் என்று குறிப்பிடுகிறது இந்தியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டுடே. (5.11.1997)[34] இந்தியாவில் "தத்து எடுத்தல் சமுதாய அங்கீகாரம் புதிது" என்ற தலைப்பில், 1988-இல், 398-உம், 1989-இல், 757-உம், 1990-இல் 2,300-உம் தத்து எடுக்கப்பட்டுள்ளது என்று இந்தியா டுடே சுட்டுகின்றது. (21.3.1991)[34]

தத்தெடுப்பு என்பது குழந்தையானது தாய் தந்தையை இழந்து பரிதவிக்கும் நிலையில் என்பதில் இருந்து மாறி, இதை ஏகாதிபத்திய ஆணாதிக்கம் புதிய வடிவத்துக்கு மாற்றியுள்ளது. ஏழ்மையைக் கொண்டு குழந்தையை விலைபேசும் பணக்காரக் கும்பல் தனது வக்கிரமான சீரழிவுக் கலாச்சாரத்துக்குக் கிடைத்த பரிசாகக் காண்கின்றது. பெண்ணின் தாய்மையையும், அதன் பாதுகாக்கும் உயிராற்றலையும், அதன் உணர்ச்சியையும் பாலியலில் நலமடித்த ஆணாதிக்கச் சொத்துரிமை, குழந்தை மீதான தாய்மையைப் பணத்தைக் கொண்டு சிதைக்கின்றது. இதை அருமையாக நாட்டுப்புறப் பாடல்கள் விளக்குவதைக் கீழே உள்ள பாடலிலிருந்து பார்ப்போம்.

"மரக்கால் உருண்ட பஞ்சம் மன்னவரைத் தோத்த பஞ்சம்
நாழியுருண்ட பஞ்சம் நாயகனைத் தோத்த பஞ்சம்
ஆழாக்குரண்ட பஞ்சம் ஆலினைத் தோத்த பஞ்சம்
தாலி பறிகொடுத்தும் தனிவழியே நிண்ண பஞ்சம்
கூறை பறி கொடுத்துக் கொழுந்தனைத் தோத்த பஞ்சம்
கணவனைப் பறிகொடுத்துக் கைக்குழந்தை வித்த பஞ்சம்"[38]

உலகத்தில் வறுமையும், நோயும் கோடிக்கணக்கில் குழந்தைகளைக் கொன்றுவிடுவதற்கு, இந்தப் பணக்காரக் கும்பல் எப்படி நேரடியாகவும், மறைமுகமாகவும் காரணமாக இருக்கின்றதோ, அந்தக் கும்பலே தாயிடம் இருந்து குழந்தைகளைப் பிரித்து தமது நலன்களை ஈடுசெய்கின்றனர். பத்து பதினைந்து ரூபாய்க்குச் சொந்தக் குழந்தையை விற்று வாழ நிர்ப்பந்திக்கும் இந்த நாகரிக ஜனநாயகம் அந்தத் தாயின் சோகத்தை என்றும் எடுத்துச் சொன்னதுமில்லை, எடுத்துக் காட்டியதில்லை. மாறாக அதைப் பறித்தெடுத்த கொடுமையை மனிதாபிமானமாகக் காட்டி அதைப் போற்றும் நாகரிகம்தான் ஆணாதிக்கத்தின் வக்கிரக் கொடூரமாகும். வறுமைப்பட்ட நாடுகளில், வறிய குடும்பங்களில் இருந்து பால் மணம் மாறும் முன்பே பிரித்தெடுக்கும் நாகரிகம், சந்தைத் தளத்தில் மிருகத்திடம் இருந்து குட்டியைப் பிரித்து பணம் சம்பாதித்த ஜனநாயகத்தில் மனிதக் குழந்தைகள் வாரிசுகளை உற்பத்திச் செய்கின்றனர். பெற்ற தாயின் சோகத்தை எந்த ஜனநாயகமும் கண்டு கொள்வதில்லை.

குழந்தைகள் சமூகத்தின் சொத்தென்பதை மறுக்கும் தனிச் சொத்துரிமைக் கும்பல்தான் குழந்தைகளை மாற்றான் மனப்பான்மையில் அணுகுகின்றது. ஒருபுறம் கோடிக்கணக்கில் குழந்தைகளை வருடாவருடம்





கொன்று போடும் இந்தச் சீமான்கள், மறுபுறம் தனிச்சொத்துரிமை வாரிசுகளை அபரிதமான வசதியில் சீரழிக்கின்றது. தத்தெடுப்பது ஊடாக இப்படி இயற்கைக்குப் புறம்பாக, சமுதாய நலனுக்குப் புறம்பாகப் பணக்காரக் கும்பல் செய்யும் கூத்துக்கள் ஆணாதிக்கத்தின் வக்கிரமான கொடூரப் பக்கங்களாகும். அநாதைக் குழந்தைகளைச் சமுதாயம் பொறுப்பேற்காத நிலையில் தனிமனிதர்கள் அதைப் பராமரிக்கும் போது, அது இந்தப் பணக்காரக் கூத்துகளில் இருந்து வேறுபட்டது. ஆனால் பெற்ற தாயிடம் அவளின் வயிற்றுச் சூடு ஆறும் முன்பே தொப்புள் கொடி வெட்டியவுடன் பிரித்து வரும், இந்த நாகரிகக் கட்டற்ற சுதந்திரம் ஆணாதிக்கத்தின் மற்றொரு கொடூரமான பக்கமாகும். இது அந்தத் தாய்மையின் பரிவுக்கூறுகளை நாசமாக்கிச் சிதைக்கின்றது. இந்தத் தாயின் சொந்த உடல் சார்ந்த குழந்தையின் உரிமை பற்றி எந்தப் பெண்ணியமும் மறந்தும் கூட புலம்புவதுமில்லை, புலம்பியதுமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 38. குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைகள்

உலகில் ஒவ்வொரு ஆண்டும் ஒன்று முதல் 1.2 கோடி ஆண்கள், இளம் குழந்தைகளைப் பாலியல் ரீதியாக அணுகுகின்றனர்.[31] யுனிசேவ் விடுத்த அறிக்கையில், ஒவ்வொரு வருடமும் 10 இலட்சம் ஆண் - பெண் குழந்தைகள் (16.5.2000)[42] பாலியல் சந்தையில் பாலியல் தேவைக்காக மூலதனமாக்கப் படுகின்றனர். 1970 முதல் 1990 வரையிலான காலத்தில் விபச்சாரச் சந்தையில் மூன்று கோடி பெண்கள் முதலீடாக்கப்பட்டுள்ளனர். 10 இலட்சம் பெண்கள் ஒவ்வொரு வருடமும் பாலியல் முதலீட்டில், புதிதாக மூலதனமாக்கப்படுகின்றனர். இது பல்வேறு துறை சார்ந்தும், குறிப்பாக உல்லாசப் பயணத்துறை சார்ந்து விரிவாகின்றது.

மேற்கு ஆணாதிக்கப் பாலியல் ஜனநாயகச் சுதந்திரத்தைப் பூர்த்தி செய்ய பலியிடப்படும், இந்த அற்ப மனிதர்களின் வாழ்க்கையையிட்டு எந்த இலக்கியமும் பேசுவதில்லையே ஏன்? எந்தப் பெண்ணியமும் புலம்புவதில்லையே ஏன்? சுதந்திரமான வாழ்வின் விளைவுகள் இப்படித்தான் பிரதிபலிக்கின்றது. இதை ஜனநாயகவாதிகள் மனித உரிமை மீறலாக எடுப்பதில்லை. இது முன் எப்போதும் இல்லாத அளவுக்கு விரிவாகி வருகின்றது. உடல் ரீதியாகத் தனிச் சுதந்திரம் பெற்றதாக நினைப்பவர்கள், ஆண் - பெண் வேறுபாடின்றி தமது வக்கிரமான பாலியல் தேவைக்குத் தமது சொந்தக் குழந்தையையே பயன்படுத்த பின் நிற்காதவர்களால் நாகரிக நாற்றம் உலகமயமாகி திணற வைக்கின்றது.

கென்யா நாட்டில் பெண் குழந்தைகள் பிறந்தவுடன் அக்குழந்தையின் உறுப்பைத் தைத்து விடுகின்றனர் ஆணாதிக்கவாதிகள். அவளின் திருமணத்தின்போதே தையல் அவிழ்க்கப்படுகின்றது. (1.4.1993)[6]

ஆணாதிக்கக் கற்பைப் பாதுகாக்கும் அடிப்படையில் உலகில் 11.5 கோடி பெண்களின் பாலுணர்வு உறுப்புகள் அறுக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டுள்ளது. ஆணாதிக்க ஒருதாரமணத்தைப் பெண்ணுக்குக்





கட்டாயப்படுத்திய வழியில் இவை சமூக நடைமுறையாக நிகழ்கின்றன. கட்டாயத் திருமணங்களிலும், சடங்குகளிலும் பெண்களின் உறுப்பை வெட்டுவது நிகழ்கின்றது. சிறு குழந்தையில் தொடங்கும் வேறுபட்ட பலவடிவச் சடங்குகளில் வெட்டும் வடிவமும் ஒன்றாகும். பெண் குழந்தைகளில் இருந்தே பெண்ணின் கற்பைப் பாதுகாக்கும் ஆணாதிக்க வழிமுறைகளே இவை. இது அநாகரிகமான காட்டுமிராண்டித்தனமாக நமக்குத் தெரியலாம். ஆனால் தமிழ்ப் பண்பாட்டிலும் சரி, மற்ற பண்பாட்டிலும் சரி, பெண்கள் மீதான கற்பைப் பாதுகாக்கக் கோரும் பண்பாடுகள், ஒழுக்க விதிகள், பரிசோதனைகள் எல்லாம் ஒரே அடிப்படை நோக்கத்தைக் கொண்டவைதான். ஆனால் இதை அமுல்படுத்திப் பாதுகாக்கும் வழிமுறைமட்டுமே நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது.

கற்பு பற்றிய ஆணாதிக்கப் புனைவு என்பது ஓர் ஆணின் வாரிசைப் பெற்றெடுக்க ஓர் ஆணுடன் மட்டும் பெண் உடல் உறவைக் கோரும் எல்லைக்கு உட்பட்டது. ஒருதாரமணத்தில் பெண் மீதான ஆணின் பாலியலைப் பூர்த்தி செய்யும் வடிவத்தை (கணவனை) மீறும் அனைத்தும், கற்பை மீறும் செயலாக ஆணாதிக்கச் சமூகச் சட்டக் கோவை கூறுகின்றது. நடைமுறையில் இருக்கும் சமூகத்தில் உள்ள சட்ட அமைப்பு எப்படியோ அதன் வடிவில் இருக்கும் சமூகச் சட்டமே கற்புக் கோட்பாடாகும். இதைப் பாதுகாக்க அப்பெண் மட்டுமல்ல, அவளின் பெற்றோரும் அரும்பாடுபட வேண்டியுள்ளது. அதைச் சமூகம் துல்லியமாகக் கண்காணிக்கின்றது. இதில் இருந்து மீறும் பெண்ணின் வாழ்க்கை கண்ணீரில் பெருகி துன்ப ஆறாகின்றது. பெண் பொருளாதார ரீதியாகப் பலமற்று ஆணின் தயவில் வாழ்க்கைப்பட்டு வாழ்பவள் என்ற நிலையில், குறித்த ஆணுக்குத் தனது கற்பை உறுதி செய்வது மட்டுமே அவள் வாழ்க்கையின் ஆதாரமாகின்றது. பெண்ணும் பொருளாதாரப் பலம் பெறும் போது கற்புக் கோட்பாடுகள் நொறுங்குகின்றன. பெண் தனது சொந்தக் காலில் நிற்கமுடியும் என்பதால் ஆணின் தயவை எதிர்பார்த்து, காத்துக் கிடக்க வேண்டியிருப்பதில்லை. கற்பு பற்றிய ஆணாதிக்கக் கண்ணோட்டத்தை அதன் தனிச் சொத்துரிமை வாரிசுக் கண்ணோட்டத்தில் இருந்து தகர்க்க, பெண் பொருளாதார ரீதியில் தன்னை விடுவிப்பதுடன், அதன் பண்பாட்டுத் தளம் மீதான தாக்குதலைப் பெண்ணின் பொருளாதாரப் பண்பாட்டால் தாக்க வேண்டும். இன்று உலகமயமாதலால், உலகம் தலைகால் புரியாத வேகத்தில் ஓடும்போது, சொத்துரிமை குவிப்பால் ஆணின் சொத்துரிமைகள் கூட விரல்விட்டு எண்ணக்கூடிய சில பிரிவினரால் பறித்தெடுக்கப்படுகின்றது. இது ஆணின் சொத்துரிமை சார்ந்த வாரிசு கண்ணோட்டத்தை உள்ளடக்கி இரண்டையும் தகர்க்கின்றது. பெண் சொத்துரிமையை இந்தத் தனிச் சொத்துரிமை சமூகத்திற்குள் பெறமுடியாது என நிலைமை வேகம் அடைகின்றது. இது ஆணின் சொத்தையும் வேட்டு வைத்து தகர்க்கின்றது. பெண் இன்று இந்த உலகமயமாதலுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடும் போது, சொத்துரிமை இழந்து வரும் ஆண் தனது சொத்துரிமை மற்றும் வாரிசுரிமைக் கண்ணோட்டத்தைக் கைவிட்டுப் பெண்ணுடன் இணைந்து போராட முன்வருவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூகப் போராட்ட வடிவமாகின்றது. இது கற்பு பற்றிய கோட்பாட்டையும், பிரமைகளையும், பண்பாடுகளையும் சிதைத்துப் பெண்ணை விடுவிக்கின்றது.

பிரான்சில் ஓரினச் சேர்க்கைக்குச் சிறுவர்கள் உள்ளாக்கப்படுவதைச் சதவீதத்தில் பார்ப்போம். (26.2.1998)[44]

அட்டவணை - 47

| ஆண்டு | தந்தை | தாய் | சகோதரர் சகோதரி | பாடசாலை நண்பர்கள் | கதாநாயகர்கள் |
|---|---|---|---|---|---|
| 1985 | 15% | 27% | 32% | 35% | 41% |
| 1991 | 23% | 37% | 44% | 43% | 56% |
| 1995 | 27% | 43% | 49% | 45% | 62% |

1987-க்கும் 1997-க்கும் இடையில் பிரான்சில் நீதிமன்றத்தில் எந்த விடயம் அதிகரித்துள்ளது எனப் பார்ப்போம்.[81]

அட்டவணை - 48

| விடயம் | அதிகரிப்பு சதவீதம் |
|---|---|
| தவறான பயன்பாடு | 42% |
| போதையில் வாகனம் ஓட்டுதல் | 110% |
| போதை வஸ்து | 144% |
| பாலியல் வன்முறை சிறுவர்கள் மீது | 467% |
| வெளிநாட்டவர் களவாக வேலை செய்தல் | 1,986% |

இந்தியாவில், "பதுங்கியுள்ள பேராபத்து" என்ற கட்டுரையிலும் "பாலுறசு (Sex) வக்கிரங்களுக்குள்ளாகும் சிறுவர்கள்" என்ற கட்டுரையிலும் பல்வேறு ஆய்வுகளை தொகுத்துள்ளது. இந்தியாவில் சிறுவர் மீது பாலியல் வன்முறை ஒன்று பகிரங்கமாக வெளி வரும் போது 100 சம்பவங்கள் மறைக்கப்பட்டு விடுகின்றது. புதுதில்லியில் பதிவான 143 கற்பழிப்புகளை ஆய்வு செய்த போது 54 சதவீதம் 15 வயதிற்கு உட்பட்ட சிறுமிகள் ஆவர். இதில் 80 சதவீதமானவைத் தமக்குத் தெரிந்த மிக நெருங்கியவர்களால் நடத்தப்பட்டுள்ளது.

இந்தியச் சிறைகளில் உள்ள பெண் குற்றவாளிகளை ஆராய்ந்த போது 67 சதவீதம் பேர் சிறு பெண்ணாக இருந்த போது பாலியல் கொடுமைகளை அனுபவித்தவராக உள்ளனர். ஒரு குழந்தையுடன் உறவு கொண்டால் ஆண்மை அதிகரிக்கும், பால் நோய்கள் தீரும் என்ற இந்தியாவின் காட்டுமிராண்டித்தனமான மூட நம்பிக்கைகள் ஆணாதிக்கத்தை வக்கிரமாகத் தீர்த்துக் கொள்ளும்





இந்துப் பண்பாடாகின்றது. கொல்கத்தா புகையிரத நிலையத்தில் (Railway Station) வாழும் 700 அநாதைக் குழந்தைகளில் 90 சதவீதமான சிறுமிகளும், 25 சதவீத சிறுவர்களும் பாலுறவு வன்முறைக்கு உள்ளாகியுள்ளது தெரியவந்துள்ளது. மோசமான வாழ்க்கையைக் கொண்ட மூன்றில் ஒருபகுதி பிரிவினர் சிறு வயதில் பாலியல் வன்முறைக்கு உள்ளாகியதை ஆய்வுகள் நிறுவுகின்றன. (21.10.1992)[34]

அண்மையில் பிரான்சில் பாடசாலைக்குள் நடக்கும் வன்முறையை முதன்முதலாக பிரான்சு அரசு ஒத்துக்கொண்டு விசாரணைக் கமிட்டி ஒன்றை அமைத்துள்ளது. சிறுமிகளில் முதல் 18 வயதிற்கு இடையில் 10 சதவீதமானோர் பாலியல் வன்முறையைப் பாடசாலையில் அனுபவிப்பதுடன், இது இரகசியமாக மாறிவிட்டதையும் பிரான்சு அரசு ஒப்புக்கொண்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு நாளும் இரண்டு பாலியல் வன்முறைகளைப் பாடசாலை மாணவர் எதிர் கொள்வதுடன், ஒவ்வொரு ஒன்பது நாளுக்கும் ஒரு கற்பழிப்பு சக மாணவனால் நடத்தப்படுகின்றது. இந்த வகையில் முதல் தவணையில் 242 சம்பவம் நடைபெற்றதை கல்வி அமைச்சகம் ஒத்துக் கொண்டதுடன் இதைவிட மேலும் பிரான்சு அதிகமாகவே இருக்கும் என்பதையும் ஏற்றுக் கொண்டனர். இந்த 242 சம்பவத்திலும் 7 சதவீதம் கற்பழிப்பு, 12 சதவீதம் கற்பழிக்கும் முயற்சிக்கு வன்முறையைக் கையாண்டவை. 29 சதவீதம் பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கியவை. மிகுதி மற்ற பாலியல் வன்முறைகள் ஆகும். இதில் பாதிக்கப்பட்டோர் 30 சதவீதம் 12 வயதிற்கும் குறைவு. 13 சதவீதத்தினர் 11 வயது உடையோர். 35 சதவீதத்தினர் 13 வயதிற்கும் குறைவு. 18 சதவீதம் பேர் 11 வயதிற்கும் குறைவு. இதில் 8 முதல் 9 வயது குழந்தைகளும் பாதிக்கப்படுவதாக ஒப்புக் கொண்டதுடன், 5 முதல் 11 வயது குழந்தைகள் பல்வேறு பாலியல் வதைக்கு உட்படுவதை கல்வி அமைச்சகம் ஒப்புக் கொண்டு ஒரு விசாரணைக் கமிட்டியை அமைத்துள்ளது. (18.2.1999)[33]

பிரேசில் செய்திப் பத்திரிக்கையான **'ஆ எஸ்டாடா டா சாவ்ன் பாவ்லூ'** குழந்தைகளுக்கு எதிரான வன்முறை தொடர்பான தகவல் ஒன்றை வெளியிட்டு இருந்தது. பாலியல் சம்பந்தப்படாத தாக்குதலில் ஆண் - பெண் எண்ணிக்கை சமமாக இருக்க, பாலியல் சம்பந்தப்பட்ட தாக்குதலில் 23 சதவீதம் ஆண் குழந்தையாகவும், 77 சதவீதம் பெண் குழந்தையாகவும் இருக்கின்றது. மனிதக் கொலைக்குப் பலியாவோரில் 10 வயதுக்கு உட்பட்டோரில் 30 சதவீதம் குடும்ப அங்கத்தவர்களால் நடத்தப்படுகின்றது. 29 சதவீதமான பெண் குழந்தைகள், தகப்பன், சித்தப்பா, சகோதரன், மாற்றாந்தகப்பன் மூலம் கற்பழிக்கப்பட்ட பின்பே கொல்லப்படுகின்றனர். 90 சதவீதமான வன்முறை வெளியில் தெரியவருவதில்லை என்ற தகவலையும் அறிவித்துள்ளனர்.[31] குடும்பங்கள், உறவுகள் ஆணாதிக்கச் சந்தைத் தளத்தில் வக்கரித்து இயந்திரமாக, குழந்தைகள் பண்பாட்டு வன்முறைக்கு உள்ளாகி, மூலதனமாகி சிதைந்து மடிவதைக் காட்டுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"கருகிப் போன குழந்தைப் பருவம்" என்ற தலைப்பில் வெளியான செய்தியில் **சர்வோதயா** என்ற அமைப்பு பெங்களூரில் இருக்கும் 12 பாடசாலைகளிலுள்ள 348 மாணவிகளிடம் ஆய்வு செய்தனர். ஒவ்வொரு 20 பெண் குழந்தைகளில் மூவர் கற்பழிக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவருக்கு 10 வயதிற்குள்ளேயே நடந்துள்ளது. 10 பேரில் ஐந்து பேர் குழந்தையாக இருந்த போது பலாத்காரப்படுத்தலுக்கு முயற்சிக்கப்பட்டுள்ளது. 10 பேரில் எட்டுப் பேர் சிறுவயதில் மார்பகங்களைக் கசக்குவது, பின்பக்கத்தைக் கிள்ளுவது போன்ற வதைகளைச் சந்தித்துள்ளனர். இதில் ஈடுபடுவோரில் 50 சதவீதம் பேர் அப்பா, சகோதரன் மற்றும் நெருங்கியோரே என்பது குறிப்பிடத்தக்கது. (21.8.1994)[34]

இந்தியாவில் "தளிர்களின் மீது தாக்குதல்" என்ற தலைப்பில் பதிவான குடும்பத்திற்குள்ளான கற்பழிப்புகளை வயது ரீதியாக காணலாம். (2.5.1995)[34]

அட்டவணை - 49

வயது ரீதியாக

| ஆண்டு | 7க்குள் | 8 முதல் 10 | 11 முதல் 16 | 17 முதல் 25 | 26 முதல் 35 | 35க்குமேல் |
|---|---|---|---|---|---|---|
| 1994 | 23 | 18 | 50 | 37 | 12 | 5 |

அட்டவணை - 50

| ஆண்டு (கற்பழிப்புகள்) | தந்தை | சகோதரன் | மாமா | பிறர் |
|---|---|---|---|---|
| **1990** | **2** | **-** | **1** | **-** |
| **1991** | **3** | **-** | **2** | **1** |
| **1992** | **1** | **-** | **2** | **2** |
| **1993** | **4** | **-** | **2** | **1** |
| **1994** | **7** | **1** | **4** | **4** |
| **1995** | **4** | **-** | **2** | **1** |

பாங்காங்கில் 93 சதவீதமான சிறுமிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி உள்ளதைப் புள்ளி விபரம் காட்டுகின்றது. இவை ஆசிரியர் மற்றும் சமயக் குருமார்களால் நடத்தப்படுகின்றன. 200 சிறுமிகளை எடுத்து ஆய்வு செய்த போது 110 பேர் 150 தடவை கற்பழிக்கப்பட்டுள்ளனர். 64 சதவீதம் சிறுமிகளுக்குப் பெற்றோர் அல்லது உறவினர் மூலம் இவை நிகழ்ந்துள்ளது. 90 சதவீதமானோர் சட்டத்தில் இருந்து தப்பிவிடுகின்றனர்.[55]

1990-இல், இந்தியா முழுக்க பதிவான 10,000 கற்பழிப்பில் 25 சதவீதம் 16 வயதிற்கு உட்பட்டோர் ஆவர். மொத்தத்தில் ஐந்தில் ஒன்று பத்து வயதுக்கு





உட்பட்டோர் ஆவர். தலைநகர் தில்லியில் நான்கு நாட்களுக்கு ஒரு பெண் குழந்தை கற்பழிக்கப்படுகின்றாள். (1.2.1993)[6]

மேலுள்ள பல்வேறு பதிவான புள்ளிவிபரங்கள் நமக்கு அதிர்ச்சியளிப்பனவாக இருக்கலாம். ஆனால் இதுதான் இந்த ஜனநாயக அமைப்பின் ஆணாதிக்கத்தின் கொடை ஆகும். பாசிசம் எப்படி ஜனநாயகத்தின் கொடையோ அது போல பாலியலில் சிறுமிகளுக்கும் - சிறுவர்களுக்கும் ஆணாதிக்கம் கொடுக்கும் கொடையாகும். பதிவாகாத எண்ணிக்கை மேலும் அதிர்ச்சியளிக்கக் கூடியவையாக இருக்கும்.

ஜனநாயகம் பற்றிய விளக்கங்கள் எவ்வளவுக்குக் கட்டற்ற சுதந்திரமாகின்றதோ, அந்தளவுக்கு அந்தந்த துறைசார்ந்து அவை விகாரமாகின்றது. பொருளாதாரத்தில் கட்டற்ற தன்மை ஏழைகளைப் பெருக்கி அவர்களைக் கொன்றொழிக்கின்றது. பாலியலில் கட்டற்ற தன்மை குழந்தைகளையும், பெண்களையும் வன்முறைக்கு உள்ளாக்குகின்றது. இது மேற்கில் இருந்து மூன்றாம் உலகம் ஈறாகச் சர்வதேசமயமாகி உள்ளது. இது சொந்தக் குடும்பம் சார்ந்த தொடர்புகளில் வக்கிரமடைந்து செல்லுகின்றது. ஜனநாயகம் பற்றிய பிரமைகள் அதிகரிக்க, மற்றவர்கள் மீதான வன்முறை மறுதளத்தில் விரிவாகி அதிகரித்துச் செல்லுகின்றது. பெற்றோர் தமக்கிடையில் உள்ள பாலியல் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ள பலவீனமான குழந்தைகள் மீது ஆண் - பெண் வேறுபாடின்றியே இலகுவாகவே பாலியல் வன்முறையை ஏவுகின்றனர்.

சமுதாயத்தில் குழந்தைகள் பற்றிய எதிர்க் கண்ணோட்டம் அதிகரிக்க, அதாவது குழந்தை வாழ்க்கைக்கு இடைஞ்சல், தொந்தரவு போன்ற சிந்தனைகள் குழந்தை நுகர்வதை இலகுவாக்குகின்றது. நிலப்பிரபுத்துவக் கலாச்சாரத்தில் வாரிசாகக் குழந்தையை இனம்கண்ட சமூகம், ஏகாதிபத்தியப் பண்பாட்டில் எல்லாம் நுகர்வுக்குரியதாகக் காணும் போது குழந்தைகளை இலகுவாகப் பாலியல் நுகர்வுக்குப் பயன்படுத்துகின்றனர்.

இங்கு குழந்தைகளை ஆண் - பெண் வேறுபாடின்றி ஓரினச் சேர்க்கைக்கும், எதிர் பால் உறவுக்கும் பயன்படுத்துகின்றனர். இதனால் பாதிக்கப்படும் குழந்தைகள் சமுதாயத்தில் முடமாக்கப்பட்டு அல்லது எதிர்வக்கிரத்துடன் சமூக வெறுப்பை வெளிப்படுத்தி, குற்றவாளிகளாக அல்லது அதை அவர்களே செய்பவர்களாக உருவாகின்றனர்.

முன்பு ஆண் வன்முறை பற்றி மட்டும் சமூகம் எதிர் கொண்டது போய் இன்று பெண் வன்முறையும் புதிய சமூக விளைவாகியுள்ளது. பெண் இந்த முதலாளித்துவ ஜனநாயகத்தில் பெற்ற சுதந்திரம் ஆணிடம் இருந்து ஆணாதிக்கமயமாதல் ஊடான பெண்ணியல் எதிர்க் கண்ணோட்டமாகும். ஆணாதிக்கத்திற்கு மாற்றான பெண்ணாதிக்கம் சமுதாயத்தில் பலம்குன்றிய பிரிவுகளைச் சிதைக்கின்றது. ஆணாதிக்கம் பெண்களையும், குழந்தைகளையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிதைக்க, பெண்ணாதிக்கம் குழந்தைகளைச் சிதைக்கின்றது. சாதி அமைப்பில் பலமான சாதிகள் பலமற்ற சாதிகளை அடக்க, பலமற்ற சாதிகள் பலவீனமான உட்சாதிகளை நசுக்குகின்றது. இதுவே பாலியலில் பெண் பெற்ற சுதந்திரம் என்ற ஆணாதிக்கம் பெண்ணை வழிநடத்துகின்றது.

இந்த ஆணாதிக்க ஜனநாயகம் நொறுக்கப்படாத வரை குழந்தைகள் நுகர்வுப் பண்பாட்டில் சிதைக்கப்படுவது அதிகரித்துக் கொண்டே இருக்கும். தனிப்பட்ட ஆணிடம் இருந்து பெறுவதே சுதந்திரம் எனக் கருதும் பெண், ஆணுடன் போட்டி போட்டுக் குழந்தையைச் சிதைப்பது அதிகரித்துச் செல்லுகின்றது. ஆணாதிக்கத்துக்கு எதிரான விடுதலை என்பது இந்தச் சூறையாடும் சுரண்டல் சமூகத்தில் பெண்ணாதிக்கமும் கொண்ட ஆணாதிக்க மயமாதலே எஞ்சும். ஆணாதிக்கம் என்பது சுரண்டல் அமைப்பின் வடிவில் நீடிப்பதால் அதைத் தகர்க்க போராடாதவரை இந்த அமைப்பில் போராடும் வடிவங்கள் பெண்ணையும் உள்ளடக்கி ஆணாதிக்கத்தை விரிவுபடுத்துகின்றது. ஆணாதிக்கத்தை ஒழிப்பதற்குப் பதில் விரிவாக்கம் இந்த அமைப்பின் பொருளாதார வடிவில் சூல் கொள்கின்றது. இதை எதிர்த்துப் பெண்ணியம் போராடாத நிலையை விமர்சித்தபடிதான், பாட்டாளிவர்க்கம் இந்த ஆணாதிக்கக் கூறுகளை எதிர்த்து தலைமை தாங்கி, போராடுவது நிகழ்கின்றது.

சிறுவர் விபச்சாரம் வெவ்வேறு நாடுகளில் எப்படி உள்ளதென்று காணலாம்..[(55), (79)]

அட்டவணை - 51

| நாடுகள் | எண்ணிக்கை |
|---|---|
| பிலிப்பைன்ஸ் | 6.5 இலட்சம் |
| இந்தியா | 4 இலட்சம் |
| அமெரிக்கா | 3 இலட்சம் |
| சீனா | 5 இலட்சம் |
| தாய்லாந்து | 3 இலட்சம் |
| கிழக்கு ஐரோப்பா | 1 இலட்சம் |
| பிரேசில் | 2.5 இலட்சம் |
| தைவான் | 60 ஆயிரம் |
| பாகிஸ்தான் | 40 ஆயிரம் |
| நேபாளம் | 30 ஆயிரம் |
| இலங்கை | 30 ஆயிரம் |
| டொமினிக்கன் | 25 ஆயிரம் |
| பங்களாதேசம் | 15 ஆயிரம் |

சிறுவர் மீதான பாலியல் வக்கிரத்தையொட்டி, "சுவீடன் பொலிசார் 1992 ஜூன் மாதம் தனியார் வீடொன்றில் 300 மணிநேரம் ஓடக்கூடிய பாலியல்





வக்கிர வீடியோக்களைக் கைப்பற்றினர். இதில் பெரும்பாலானவை இலங்கையைச் சேர்ந்தவை." இதழ்-3.2[46] அமெரிக்காவில் 40 வினாடிக்கு ஒரு குழந்தை காணாமல் போகின்றது. (16.12.1998)[82]

இலங்கையில் ஓரினச் சேர்க்கைக்குப் பயன்படுத்தப்படும் சிறுவர் - சிறுமிகளின் எண்ணிக்கை 40,000 பேர் ஆவர். இந்தியாவில் நான்கு இலட்சம் சிறுவர் - சிறுமிகளும், பிரேசிலில் 2.5 இலட்சம் சிறுவர் - சிறுமிகளும், பிலிப்பைன்சில் 60,000 சிறுவர் - சிறுமிகளும் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தாய்லாந்தில் 12 வயதுக்கு உட்பட்ட ஆறு இலட்சம் சிறுமிகள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதேநேரம் 18 வயதிற்கு உட்பட்ட 18 இலட்சம் பேரை ஆணாதிக்க அதிகார அமைப்பு விபச்சாரத்தில் ஈடுபட வைத்துள்ளது. தாய்லாந்தில் 6,000 டாலர் வீதம் ஒரு சிறுமியை வாங்கி ஜப்பானில் 14,000 டாலருக்கு விற்கப்படுகின்றனர். அச்சிறுமி 30,000 டாலர் கட்டியே தன்னைத்தானே மீட்க முடியும். (3.4.1995)[54] பிலிப்பைன்ஸ் நாட்டில் வீதியில் வசிக்கும் 50 ஆயிரம் வீதிச் சிறுவர்கள் - சிறுமிகள் பாலியல் துன்புறுத்தலுக்குப் பயந்து இரவில் சுடுகாடுகளில் வாழ்கின்றனர். (12.12.1998)[47] வளர்ச்சியடைந்த 25 நாடுகளை எடுத்து **'த டாலாஸ் மார்னிங் நியூஸ்'** பத்திரிக்கை செய்த ஆய்வில், அமெரிக்கச் சிறுவர்களின் நிலைமை மோசமாக இருப்பதை வெளிக் கொண்டு வந்துள்ளது. வெடிகளால் இறக்கும் சந்தர்ப்பம் 12 ஆகவும், கொலை செய்யப்படும் சாத்தியம் ஐந்தாகவும், தற்கொலை சாத்தியம் இரண்டு மடங்காகவும் இருக்கின்றது.[31]

இந்தியாவிலுள்ள மாமல்லபுரத்தில் "கேளிக்கையின் கொடுமை" என்ற தலைப்பில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் சில்லறைக்குச் சிறுவர், சிறுமிகள் பாலியல் கேளிக்கைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்ற தகவலை இந்தியா டுடே வெளியிடுகின்றது. (21.3.1999)[34]

சுவீடனைச் சேர்ந்த சிறுவருக்கு எதிரான பாலியல் நிபுணர்கள், இணையத்தில் நான்கு வலையத்தில் சிறுவர் சம்பந்தமான பாலியல் காட்சிகளை எண்ணிய போது, வாரம் ஒன்றுக்கு 5,651 பாலியல் வக்கிரம் சார்ந்த புதிய நிகழ்ச்சிகள் புகுத்தப்படுவதை அம்பலப்படுத்தியுள்ளனர்.[31] இதைத் தடுக்க ஜனநாயகச் சட்டமும், இதை அழிக்க உலகமயமாதல் ஜனநாயகமும் மறுப்பதால், பாடசாலை இணையத்திலும் இவை ஜனநாயகமாகி, மாணவ - மாணவிகளை சிதைக்கின்றது.

1996-இல், ஆசியாவில் சிறுவர் மீதான பாலியல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டோரில் அமெரிக்கர் 24 சதவீதம், ஜெர்மனியர் 15 சதவீதம், பிரிட்டிஸ்சார் 13 சதவீதம், ஆஸ்திரேலியர் 11 சதவீதம், பிரான்சு தேசத்தவர் 7 சதவீதம், ஜப்பானியர் 7 சதவீதம் ஆகும். முக்கியமாக மேலே குறிப்பிட்ட முன்னணி மேற்கு நாட்டவர் 77 சதவீதத்தினர் ஆவர். இதில் மற்ற மேற்கு நாடுகளையும் சேர்த்தால், ஆசியாவின் சிறுவர் விபச்சாரம் மற்ற உற்பத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நுகர்வுகளைப் போல் இவை எல்லாம் மேற்கின் வெள்ளையருக்கே என்பது புரியும். சிறுவர் விபச்சாரம் ஆசியாவில் அதிகரிக்க, அதன் நுகர்வுக்கான விலை குறைந்துள்ளது. இதனால் ஜெர்மனியில் இருந்து இரண்டு இலட்சம் பேர் பாலுறவுக்காக உல்லாசப் பயணம் செய்கின்றனர். இதனால் பாதிக்கப்படும் சிறுவர் - சிறுமிகள் 10,000 பேராவர்.[2]

வெள்ளை இன ஆணாதிக்க வக்கிரத்துக்காக மூன்றாம் உலகச் சிறுவர் - சிறுமிகள் பாலியல் சந்தையின் நுகர்வுப் பண்டங்களாகின்றனர். சுற்றுலாத் துறையின் சர்வதேச ஏகாதிபத்தியப் பன்னாட்டு நிறுவனங்களும், விமானச் சேவை நிறுவனங்களும் மூலதனத்தைத் திரட்ட, மேற்கின் ஆணாதிக்க நுகர்வை உந்தித் தள்ளுவது அவசியமாகும். இது தேசம் கடந்த பாலியல் நுகர்வை ஊக்குவிக்கின்றது. விமானத்துறையை வளர்த்தெடுக்கவும். இந்தத் துறையினதும், சுற்றுலாத் துறையினதும் இலாப வேட்கை பூர்த்தி செய்ய மூன்றாம் உலகில் சிறுவர் - சிறுமிகளின் பாலியல் சந்தை விரிவாக்கப்படுகின்றது.

ஜனநாயகத்தையும், அமைதியையும் நிலைநாட்ட தேசம் கடந்து செல்லும் ஆக்கிரமிப்பு இராணுவங்களின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்ய உருவான விபச்சார மையங்கள், மூலதனத்தைத் திரட்டியதன் தொடர்ச்சியில் இத்துறை உல்லாசத் துறையாக வளர்ச்சி பெற்றது. உழைக்கும் மனிதனின் அற்பச் சேமிப்பையும் பிடுங்கும் உல்லாசத்துறை ஊக்குவிப்பு விளம்பரமாக, அதற்குத் தேவையான பாலியல் வக்கிரத்தையும் புகுத்தியது.

இதற்கு எதிரான போராட்டங்கள் ஒருபுறம் நடக்க, மூன்றாம் உலகத் தரகு அரசுகள் உல்லாசத் துறையைத் தேசிய வருமானத்திற்கான ஊக்குவிப்பாகப் பிரகடனங்களைச் செய்கின்றனர். சொந்த மனைவியை விபச்சாரத்திற்கு அனுப்பி சம்பாதிக்கும் கணவன் போல், சொந்த நாட்டுச் சிறுவர் - சிறுமிகளைப் பாலியல் சந்தையில் புணரவிட்டுச் சம்பாதிக்கக் கோருவதுதான் தரகுத்தனத்தின் ஜனநாயகத் தேசப்பற்றாகும். எதிர்ப்புகளை மூடிமறைக்க கைதாகும் நபர்கள் பெரும்பான்மையானோர் மேற்குப் பன்றிகளே என்பது இந்தப் பாலியல் சுற்றுலாவை எமக்குத் துல்லியமாகத் தோலுரிக்கின்றது.

குழந்தை உழைப்பு பற்றி மூக்கால் அழும் ஏகாதிபத்திய வேட்டை நாய்கள், இந்தப் பாலியல் விடயத்தில் மௌனம் சாதிப்பதன் மூலம் ஏகாதிபத்திய நலன்கள் துல்லியமாகின்றன. விளையாடியே சந்தோசமாக இருக்க வேண்டிய குழந்தைகளை, படுக்கையில் படுக்க வைக்கும் உலகமயமாகும் ஜனநாயகத்தின் நுகர்வுப் பண்பாட்டு நாற்றம்தான், இந்த விபச்சார வடிவத்தில் சீழ்ப்பிடிக்கின்றது.

சிறுவர்கள் மீதான தாக்குதல்கள் பலதுறை சார்ந்து விரிவாகின்றது. பெரியோர்கள் தமது குழந்தை பற்றிய எதிர்மனப்பான்மையை இந்த ஜனநாயகப் பண்பாட்டால் உள்வாங்கிய போது மனிதனின் இயற்கை மீதான உயிராற்றல் சிதைக்கப்படுகின்றது. குழந்தையின் பராமரிப்பு பெற்றோரின் இயற்கைக் கடமைகள் நுகர்வுத் தளத்தில் சிக்கிச் சிதைகின்றது. இதனால் குழந்தைகளைக் கைவிடுதல் அல்லது வறுமையின் கோரம் குழந்தைகளை வீதிக்குத்





துரத்துகின்றது. அத்துடன் ஏகாதிபத்திய நுகர்வைத் தேடி குழந்தைகள் வீதிக்கு வருகின்றனர்.

உலகில் 4 கோடி சிறுவர் - சிறுமிகள் வீதியில் வாழ்கின்றனர். வீதிக்கு வந்தவர்கள் எதையாவது பொறுக்கி வாழவும், சமூகத்தின் அவலத்தில் தத்தளித்தும் சிதைந்து போகின்றனர். இந்த நிலையை ஜனநாயகத்தால் அலங்கரித்து பாதுகாத்து நிற்கும் அரசுகள், மறுதளத்தில் ஜனநாயகவாதிகளின் அழகின் கலை இரசனைக்கு முன் இவை அழுகுவதால், இவற்றை அகற்றிச் சிறையில் இடப்படுகின்றனர். அல்லது தீர்வாக வீதிகளில் படுகொலை செய்யப்படுகின்றனர்.

பிரேசிலில் ஒவ்வொரு நாளும் நான்கு வீதிச் சிறுவர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். இது 1993-1994-இல், 40 சதவீதம் அதிகரித்துள்ளது. (15.4.1995)[6] இது உலகநாடுகள் பலவற்றின் பொதுவிதியாக உள்ளது. சூறையாடும் சுரண்டும் வர்க்கம் தனது மூலதனத்தைத் திரட்டிக் கொழுக்க, மக்களைப் பட்டினியில் ஆழ்த்திய படி கடலில் கொட்டியும், புதைத்தும், எரித்தும் அழிப்பது போல் நகரத்தை அழகுபடுத்த சிறுவர் - சிறுமிகளைக் கொன்று விடுகின்றனர். அதேநேரம் உலகச்சந்தையான விபச்சார விடுதிகளில் தள்ளி, படுப்பதற்காகப் புனர்வாழ்வு அளிக்கின்றனர். இதன் மூலம் உல்லாசப் பயணத்துறை மூலதனத்தைப் பெருக்குவதன் மூலம் தேசத்தின் தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பித் தேசாபிமானியாகின்றனர்.

பெற்றோர்களின் நுகர்வும், அதனடிப்படையிலான கண்ணோட்டமும் குழந்தைகளை நுகர்வுச் சந்தையில் மூலதனமாக்குகின்றனர். குழந்தையை மூலதனத்தின் இலாபகரமான வடிவமாகக் காணும் பெற்றோர், குழந்தைகளை இயந்திரத்தனத்துக்குள் அழுத்திப் பிழிகின்றனர். குழந்தைகளின் அழகுராணி போட்டிகள், மொடலாக வடிவமைத்தல் என்ற உயர் மட்டக் குடும்பத்தில் இருந்து மத்தியத்தர வர்க்கத்தின் கனவுகள் மாறுபட்டுச் செல்கின்றது.

இந்தியாவில் “பதினாறடி பாய வேண்டும்...” என “பேராசை பெற்றோர்கள்” தாம் விரும்புவதைக் குழந்தைகள் மீது திணிக்கின்றனர்.(21.1.1996)[34] குழந்தைகள் பெற்றோரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் இயந்திரமயமாகின்றனர். சோதனைக்கும், பழக்கத்துக்கும் உள்ளாக்கும் நல்ல இயந்திரம் போல், குழந்தை தனது சிறுவயதில் இயந்திரத்தனத்தில் சிக்கி மூச்சுத் திணறுகின்றது. இயல்பான, இயற்கையான வளர்ச்சிக்குப் பதில் திணிக்கப்படும் கல்வி, பழக்கவழக்கங்கள், நடத்தைகள் எல்லாம் இந்த நுகர்வுச் சந்தையில் அந்தக் குழந்தையின் இடத்தை முன்கூட்டியே பதிவு செய்வதை அடிப்படையாகக் கொண்டது. இதன் மூலம் பெற்றோர் இந்த நுகர்வுச் சந்தையில் இலாபகரமான இடத்திற்குப் போட்டி போட குழந்தைகளைப் பயன்படுத்தி போட்டிப் போடுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மேற்கோள் குறிப்புகள்


1. பரீசியன் - பிரான்சின் செய்திப் பத்திரிக்கை
2. Femmes, le mauvais gener?
3. le FIGARO - பிரான்சில் வெளிவரும் வலதுசாரி பத்திரிக்கை
4. சிறைபற்றிய ஆவணப்படம் (Documentary) - பிரான்ஸ் தொலைக்காட்சி: M6 - ஒலிபரப்பிய தேதி: 10.10.1999
5. உயிரோடு உலாவ இழுதியப் பெண்களின் வாழ்க்கைப் போராட்டமும் சுற்றுச் சூழலும் - வழுதனா சிவா
6. புதிய ஜனநாயகம் - இழுதிய புரட்சிகர மார்க்சிய ஆதரவு அரசியல் பத்திரிக்கை
7. பிராமணமதம் - ஜோசப் இடமருகு
8. குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் - ஏங்கெல்ஸ்
9. தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண் நிலை நோக்கு - செல்வி திருச்சழுதிரன்
10. அக்னி ஸ்வரங்கள் - டாக்டர். கே.ஏ. குணசேகரன்
11. சரிநிகர் - இலங்கை தன்னார்வ நிதி ஆதாரத்தில் தமிழில் வெளிவரும் குறிப்பிடத்தக்க ஒரேயொரு மாற்றுப் பத்திரிக்கை
12. தலித் அரங்கியல் - டாக்டர் கே.ஏ. குணசேகரன்
13. CONJONCTUURE, L "EXPANSION"
14. பெண்ணெனும் படைப்பு - க. பஞ்சாங்கம்
15. நான் ஏன் தழுதையைப் போல இருக்கிறேன் - என். லூச்னிக்
16. பழங்கதைகளும் பழமொழிகளும் - பேரா. நா. வானமாமலை
17. பகவத்கீதை ஓர் ஆய்வு - ஜோசப் இடமருகு
18. வேதங்கள் ஓர் ஆய்வு - சனல் இடமருகு
19. பெண் உடல் ஐதீகங்களிலிருழுது உண்மைக்கு - பெண்கள் அபிவிருத்தி நிலையம்
20. ஈழ முரசு - பிரான்சில் வெளிவரும் புலி ஆதரவு பத்திரிக்கை
21. இழுதிய மாதா - மேயோ
22. பெண்ணின் பெருமை - திரு.வி.க.
23. இயக்கவியல் பொருள் முதல்வாதம் - மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின்
24. அராஜகவாதமும் அராஜகவாதச் சிண்டிக்கலிசமும் - மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் - லெனின்
25. அரசும் புரட்சியும் - வி.இ. லெனின்
26. புதிய சமதர்மம் - இலங்கையில் இருழுது வெளிவரும் மார்க்சியப் பத்திரிக்கை
27. வீரகேசரி - இலங்கைத் தமிழ் நாளிதழ்
28. தினக்குரல் - இலங்கைத் தமிழ் நாளிதழ்
29. சுதழுதிரக் கீற்று: சிறப்பு மலர் - தமிழ்ப் பெண்கள் அமைப்பு: பிரான்ஸ்
30. மக்கள் கலாச்சாரத்தை மண்ணாக்கும் சக்திகள் - வல்லிக்கண்ணன்
31. விழித்தெழு, காவற்கோபுரம் - ஏகாதிபத்திய ஆதரவு மறுவாசிப்பு மதப்பிரிவுகளின் வெளியீடு
32. CSA et la lettre de 1"ecomie de sports
33. LE PARISAIN - AUJOURD'HUI - பிரான்சின் செய்திப் பத்திரிக்கைகள்
34. இழுதியா டுடே-இழுதிய ஏகாதிபத்திய ஆதரவு வெகுஜன பத்திரிக்கை
35. லதனம்: பாகம் 1-2: பக்கம்: 790 - கார்ல் மார்க்ஸ்
36. தமிழக நாட்டுப் புறவியலில் பெண்கள்-டாக்டர் ச. முத்துச் சிதம்பரம்
37. இலக்கணமும் சக உறவுகளும் - டாக்டர். கார்த்திகேசு சிவத்தம்பி
38. நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் - ச. முருகானழுதம்
39. பொழுதுபோக்கு அம்சமா? சகக் கண்ணோட்டமா? வீடியோ கேசட்: பாகம் - 1
40. பேயோட்டும் உடுக்கடிப் பாடல்கள் - சி. ருக்மணி
41. தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள் - டாக்டர் சு. சண்முகசுழுதரம்
42. LE FIGRO - பிரான்சில் வெளிவரும் வலதுசாரி பத்திரிக்கை
43. HUMANITE / parisain
44. LIBERATION - இடது தன்மை கொண்ட பிரான்சின் செய்திப் பத்திரிக்கை
45. யூனிசேவ் அறிக்கை
46. சக்தி-நார்வேயில் வெளிவரும் கோட்பாடற்ற தமிழ்ப் பெண்கள் பத்திரிக்கை
47. சுட்டுவிரல் - பிரான்சில் வெளிவழுத தமிழ்ச் செய்திப் பத்திரிக்கை
48. சுமைகள் - நார்வே முற்போக்குத் தமிழ்ப் பத்திரிக்கை (பி. இரயாகரன் கட்டுரையில் இருழுது)
49. சமர் - பிரான்சில் வெளிவரும் தமிழ் மார்க்சிய இதழ்
50. இழுதியாவில் குழழுதைத் தொழிலாளர்கள் - மிரான் வைனர்
51. பண்பாட்டு வேர்களைத் தேடி - தொகுப்பு ஞா. ஸ்டீபன்
52. LES FEMMES - 1991






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



53. கண்காணிப்பின் அரசியல் - இரவிக்குமார்
54. புதிய கலாச்சாரம் - இமூதியப் புரட்சிகர மார்க்சிய ஆதரவு கலாச்சாரப் பத்திரிக்கை
55. ஈழநாடு, சுட்டுவிரல் - பிரான்சில் வெளிவரும் தமிழ்ச் செய்தி பத்திரிக்கைகள்
56. பெண் உரிமை - இமூதிய பெண்களின் விடுதலைக்காகப் போராடும் பெண்கள் அமைப்பின் பத்திரிக்கை
57. உண்மை இதழ் - தமிழகத்தின் பெரியார் கொள்கை சார்பு இதழ்
58. அழகிப் போட்டியின் அழுகிய முகம் - பெண்ணுரிமைக் கழகம்
59. டாலருக்கு மானத்தை விற்கலாமா? - ம.க.இ.க. வெளியீடு
60. இளைஞர்களைப் பற்றி - வி.இ. லெனின்
61. durey - 1997
62. நான் ஒரு பெண் - சரிநிகர் பத்திரிக்கையின் கட்டுரைகள்
63. AFP - 1996
64. ACS/CNRS/LA SANTE DE L'HOMME
65. ACSF / MINSTERE DE LA RECHERCHE
66. மக்களும் மரபுகளும் - பேரா. நா. வானமாமலை
67. முரண்பாடு பற்றி... - மாசேதுங்
68. திருக் குர்ஆன் பாகம் 1,2
69. EURO BAROMETRE
70. EURO STAT / CDIA
71. MALIONALE DE LA SANTE PUBLIQUE DE RENNES
72. INSEE
73. ENJEUX
74. INED
75. PAEL COMMUNAULAIE DE MENAGES
76. A.N.L.
77. GALLUP
78. Inseecnaf - 1997
79. INSERM / SESI - 1998
80. LE PIERICK CAYEUL
81. MINISTERE DE LA JUSTICE / CASIER JUDICIARIE - 10.1.1997
82. TELE - Z, FRANCE - 3 — குழமூதைகள் மீதான பாலியல்





விவாதம் பற்றிய ஆவணப்படங்கள்
83. பெண்களின் சுவடுகளில்... - சாமூதி சச்சிதானமூதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

